# சித்தாந்தரத்நாகரம்

## ஆசார்யப்பிரபாவம்.

இஃது

"சைவசித்தாந்த சண்டமாருதம்"

ஸ்ரீ ல ஸ்ரீ

சோமசுந்தர நாயக்கரவர்களால்

இயற்றப்பட்டு

மெஷியார் மாணவகர்

ஸ்ரீமாந்-பல்லவாரம்

அப்பாவு செட்டியரவர்களால்

பரிசோதித்து

தமது

சென்னை:

வித்யாபாஸ்கர அச்சியந்திர சாலையிற் பதித்து

வெளியிடப்பட்டது.

*Second Edition.*

31 **January** 1907.

Copy-right Registered.

இதன் விலை ரூபா 2.

சிவமயம்

திருச்சிற்றம்பலம்

ஸ்ரீகைலாஸேசாநந்த அவாந்தசாந்த ஸிம்மாஸனா பீடாரூட ஸ்ரீமீனாக்ஷிசுந்தரேசுவராபிந்நஸ்வரூப பரசிவபுத்ரரத்ந குமாரஸுப்ரமணிய அம்சாவதார ஸ்ரீ பார்வதீஸ்தந்யபாநலப்த சிவஞாந செருக்க சகலநிகமாகமசாரபூத திராமிடவேதப்ரவர்த்தக ஸ்ரீமத்பரமசிவகருணாசமதிகத முக்தாமய சதுரந்தகாம்ர சத்ரசாமர ஸ்ரீசிந்நகாகளாதிசமஸ்த பிருதாவளியலங்க்ருத ஞாநவிஞ்ஞாந சகரவாதத்தி சர்வஜனசங்க சந்தோஷாரவாண தீக்ஷாவ்யயாபவர்க்கவ்ருக்ஷ விசிராணநஜீமூத பரமத்கள ப்ரகேசரி ஷண்மதப்ரதிஷ்டாபகாசாரிய ராஜாதிராஜபாண்டிய மஹாராஜகுரு க்ஷபணசாக்கியாதி மஹாந்தகார நிவாரணஞானபாநு வீக்ஷணாநுக்ருத த்வஜாசசேதந பூர்வக ஸ்ரீமத்விருஷபத்வஜஸ்தாபக ஸ்ரீசைவசமயகர்த்திரு சாவஞ்ஞபீடாரூட ஸ்ரீஜகத்குரு ஸ்ரீஞானசம்பந்த மூர்த்தி ஸ்வாமிகள் ஆதீன பரம்பரை மதுரை மடாலயத்தில் எழுந்தருளியிருக்கும் ஸ்ரீலஸ்ரீ மஹாசந்நிதானம் கருணைகூர்ந்து, "ஆசாரியப்பிரபாவம்" என்னும் சிவபுண்ணியம் நிறைந்த இந்நூல் உலகில் பரவிப் பெரிதும் விளங்க அச்சியற்றும் பொருட்டுப் புரிந்த பேருதவியினை என்னாலும் மற்றெவராலும் எக்காலத்தும் மறக்கற்பாலதன்று. அத்தேசிகோத்தமருடைய திவ்ய திருவடிக் கமலம் நீடூழி வாழ்க சுபம்!

ப - அ.

நெ 80 கோவிந்தப்ப நாயக்கன் வீதி, சென்னை

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

ஸ்ரீ சமபந்ததீர்த்தசரணுயநம

# சித்தாந்தரத்நாகரம்.

## கவுரை.

சித்தாந்தம் என்பது முடிபு என்று பொருள்படும். முடிபு எனவே, தனக்குமேலொரு கொள்கையு மில்லாதது என்று பெறப்படும். இம்முடிபு எங்கே பெறப்பட்டதெனின், சிவாகமத்திற் காண்க. இதனுல் சிவாகமத்திற் பெறபபட்ட முடிபே முடிபெனவும், அதுவே சித்தாநத மெனவும், அதற்குமேலிட்டதொரு சித்தாந்த மின்றெனவும் வெளிப்பட்டது. இந்தவுணர்ச்சியால், சித்தாந்தம் என்பது ஆகமமுடிபு என்று நிச்சயிக்கபபட்டது. ஆகமாநத மெனினும், சித்தாநத மெனினும் ஒக்கும். ஆகமாந்தமாகிய சித்தாந்தமே சைவமெனவும் படும். எனவே, சைவத்தின் மேலிட்ட தொரு சமயமு மின்றென்பது நாட்டப்பட்டது. "சைவசமயமே சமயம் சமயாதீதப் பழம்பொருளை" என்றுகூறிய தாயுமானசுவாமிகள் தெய்வத் திருவாக்கானுங் காண்க. "சமயாதீதப் பழம்பொருள்" என்றதனு ப. சைவ சமயத்தினும் அதிகரித்த வேதாந்த ஞாநமென்று சிலர் கூறுவர். அது, "யாஙகளே கடவுளென்றிடும் பாதகத்தவரும்" என்று கூறிய வாக்கியத்தால் மறுக்கபபடுதலின், அங்ஙனங்கொள்வது குற்றமாம். மற்றெவ்வாறு கருதப்படு மெனின், அதீத சமயமென வெளிப்பட்டு முன்னர்க்கூறிய சைவததையே வலியுறுத்துமென்க. "அயர்வறச் சென்னியில் வைத்து ராஜாஙகத்தி லமர்ந்தது வைதிகசைவமழகிதந்தோ" எனவும், "சந்தான கற்பகம்போலருளைக் காட்டத் தக்கநெறி யிந்நெறியே தான் சந்மார்க்கம" எனவும் போநத வாக்கிய விசிட்டத்தானுங் காண்க. இஃதால், "சமயாதீதப் பழம்பொருள்" என்றது அதீதமாகிய அச்சைவத்

தாற் பெ ப்பட்ட வுண்மைப்பொருள் என்று நாட்டப்பட்டது. ஆக மாந் ம், சைவம் என்னும் பரியாய நாமங்களையுடைய மார்க்க மொன்றே சித்தாந்தமாயின், இச் சித்தாந்தத்தின் கீழ்ப்போந்த பூர் வபட்சங் ள் யாவை? அவற்றிற்குரிய பிரமாணங்கள் யாவை? எ னின்; உ காயதம், புத்தம், சமணம், பாட்டம், பிரபாகரம், கிரீடா ப்பிரமவா தம், சத்தப்பிரமவாதம், மாயாவாதம், பாஞ்சராத்திர முத லியன ர்வபட்சங்களும், வேதமுதலியன பிரமாணங்களுமாம். வேதம் ப்பிரமாணமும், சுவதப்பிரமாணமுமாக, அதிற்பெறப்பட் ட மார்க் ங்கள் பூர்வபட்சமாத லெங்ஙன மெனின், விளக்குதும். வேதம் பொருள் பலபடத்தோன்றுஞ் சூத்திர ரூபமா யிருப்பதொ ன்று. ப பொருள் கொண்டியங்கலால் ஒன்றிலொன்று முரணியசித் தாந்தம் ாவும் அவ்வேதத்தி னுண்மைப்பொருளாத லிழுக்காம். பல பொ ருள்களில் ஒன்றே அவ்வேதத்தினுண்மையாதல் திண்ணம். இதனால், வேதம் சப்பிரமாண மாதலும், அதிற் பெறப்பட்ட மாத் திரத்தா ன யெல்லாமார்க்கங்களும் சித்தாந்த மாகாமையும் வெளி ப்பட்ட . யாவும் பூர்வபட்சமேயாகி ஒரு பொருளே அந்த வேதத் தின் சித் ாந்தமு மாதல் துணியப்பட்டது. பூர்வ பட்சங்களாய்ப் போந்த ர்க்கங்கள் பலவும், சித்தாந்தப்பட்ட மார்க்கமொன்றும் அவ்வே த்திற் பெறப்படுங்கால், அச்சித்தாந்தம் இதுவே யென வொன்ன ச்சுட்டுவது கஷ்டதரம். ஒவ்வொருவரும் தங்கள் தங்கள் கொள்ள யே அச்சித்தாந்தமென்று கூறுகையால்.

வேதத்திற் பெறப்பட்ட மார்க்கங்களுள் சைவமும் ஒன்றேயா க, அதற்கு மித்தோடம் வருமே யெனின், தத்தோஷத்தைப் பரிக ரிப்பாம். வேதம் சிவபெருமானால் சொல்லப்பட்டது. உலகாயதன் முதலிய சமயிகள் அவ்வேதத்தைத் தங்கள் கன்மம் வழிவிட்டபடி யே யுணர்ந்து பொருள் கூறித்தியங்கினர். வேதத்தைச் சொன்ன வர் பதிப்பொருளாயுள்ளவர். அவர் இயற்கையே பாசமில்லாதவர். அவர் திருவாக்கை யுணரப்போந்தவர்கள் பாசபத்தாளாயுள்ள பசு க்கள். பசுக்களெனவே, கன்மத்தாற் பிணிக்கப்பட்டுச் சங்மபந்தத் தைப் பெற்றியங்கு மவரென்பது வெளிப்பட்டது. இன்னலட்சண யுக்தாளாயுள்ள பசுக்கள் தாங்கள் தாங்களே பதிவாக்கை யுணரத் தொடங்குங்கால் கன்ம வேறுபாட்டால் பல்வேறு வகைப்பட்ட தி மையிற்செறிந் தழுங்குவரன்றித் தமக்குத் தாமேயுண்மையை அறி வரென்பது அசங்கதம். ஒவ்வொருவரும் வேதத்திலுள்ள வாக்கிய

ங்களைத் தூக்தங் கன்மத்துக் கிடாகப் பொருள்கொண்டெம்மசித்தா ந்தம் வேதத்திற் பெறப்படலால் யாமே வேதாந்தி! யாமே வேதாந்தி!! என்று முமாந்து கூறுவதொன்றே யொழிபவேதத்தி னுண்மைப் பொருளிதுதானென வொன்றைச் சுட்டியறிந்து நிச்சயிக்கும் வரையில் வேறு ஒருபயனுமெய்தாரென்க.

இவர்களுள், ஆன்மாவே பொருளென மயங்கும் ஏகான்மவாதி யொருவனே மற்றைச் சமயிகளை நோக்கத் தானே முழுவேதாந்தியென்று வெளிப்பட்டிருக்கின்றனன். இவன் வேதாந்தியாதல் சாலுமோ எனின், இவனும் பாசபத்தனுயுள்ள வோர் பசு. நினைப்பு மறப்புகளாகிய சகலகேவலங்களிற் றடுமாறி யுழல்கின்றவன். இவன் வேதத்தை யுணர்ந்தபோது இவனுணர்ந்தபொருளே யுண்மை யென்பதற்கு யாது பிரமாணம்? இப்படியே மற்றைச் சமயப் படுகுழிகளில் வீழ்ந்து தடுமாறும் பசுக்களும், அவரவர்கள் வேதத்தை யுணராமையில் அவற்றைத் தனித்தனி யுண்மையென்று அங்கிகரித்த பிரமாணங்கள் யாவை? தாங்கள் தாங்களுங் கூறும்பொருள்கள் நின்மலமாயுள்ள வேறு பிரமாணத்தால் அங்கிகரிக்கப்பட்டா லொழிய உண்மையாதலிழுக்காம். நின்மலமாயுள்ள வேறுபிரமாணமெனவே, நின்மலன் சிவனேயாதலால் அந்தப்பிரமாணமும் அப்பதிவாக்கேயாதலைமையும். பதிவாக்காகிய வேதத்துக்குப் பசுக்கள் கூறும் பொருள்கள் அப்பதிவாக்கானே யங்கீகரிக்கப்படவேண்டுமென்பது நாட்டப்பட்டது. பதிவாக்கைப் பசுக்களொருபோதுந் தாமேயறியாமையால் பசுக்கள் அதை அறிந்தா ரென்பதும, அறிவாரென்பதுஞ் சர்வாபத்தமாம். "அறிவித்தாலன்றி யறியாவுளங்கள்" என்னும் பிரமாணத்தால் வேதத்தின் பொருளும் அவனறிவித்தாலன்றி அறிவாரொருவருமிலர். வேதத்துக்குரியபொருள் இதுவே! இதுவே!! என்று பாஷ்யங்கள்செய்து வெளிப்படுத்திய சமயிகள் தாங்கள் தாங்களுங் கூறுஞ் சித்தாந்தங்களை நாட்டுவதற்கு உதாரித்துக் காட்டிய பிரமாணங்கள் பதிவாக்குக ளல்லாமையால், அவரவர் சித்தாந்தங்களோடு அவர்கள் காட்டப்போந்த பிரமாணங்களு மவலப்பட்டழியும். பிருகஸ்பதி, கபிலர், அக்ஷபாதர், சைமினி, வியாசர், விஷ்ணுமுதலியவர்கள் செய்த நூல்களே வேதார்த்தங்களாக வொவ்வொரு சமயிகளுங்கொண்டு வெளிப்பட்டனர். பிருகஸ்பதி முதலாயினோருமபாசபத்தாளாதல் திண்ணமாக, பசுக்களாகிய வன்னோர் வாககுகள் பதிவாக்குக்குப பொருளாவதெப்படி? ஒருக்காலும் பொருள்களா

காவாம். பிருகஸ்பதி முதலாயினோர் சிவானுக்கிரகம்பெற்ற மேலோர்களாக, அவர்கள் வாக்குகள் ஏன் பிரமாணமாகா வெனின், அதிகாராது குணமாய்ப் பிரமாணமாதல்பெறும். எனவே, ஒன்றிலொன்றேற்றமுடைய சாதகசாத்தியப் பிரமாணங்களாம். ஒன்றிலொன்றுமுரணிய சித்தாந்தங்களை அவர்கள் ஏன் கூறினரெனின், ஆன்மாக்களுடைய கன்மவேறுபாடு நோக்கியாம்.

எங்ஙனமெனின், தேகேந்திரியப் பிராணந்தக் கரணதர்மமான விசாரத்தில், நிர்விசாரகிரஸ்தனை வொருவனைப்பார்த்துத் தேகமே பொருளென்று சாதித்தும், தேகவிசாரங் கழிந்தபின்னர் அதனுண்மை அவனுக்குப் புலப்பட்டவழி அதற்குமேலிட்ட பொருளை யுணர்த்துவான் றொடங்கி முன்னையதைப் பூர்வபட்சமாக்கி இது வல்லபொருள் இந்திரியமே பொருளென்று சாதித்தும், இந்திரிய விசாரங்கழிந்த பின்னர் அதனுண்மை அவனுக்குப் புலப்பட்டவழி, அதற்குமேலிட்ட பொருளை யுணர்த்துவான் றொடங்கி முன்னையதைப் பூர்வபட்சமாக்கி இதுவல்ல பொருள் பிராணனே பொருளென்று சாதித்தும், பிராணவிசாரங் கழிந்த பின்னர் அதனுண்மை அவனுக்குப் புலப்பட்டவழி, அதற்குமேலிட்டபொருளை யுணர்த்துவான் றொடங்கி முன்னையதைப் பூர்வபட்சமாக்கி இதுவல்லபொருள் கரணமே பொருளென்று சாதித்தும், கரணவிசாரங் கழிந்த பின்னர் அதனுண்மை அவனுக்குப் புலப்பட்டவழி, அதற்குமேலிட்ட பொருளையுணர்த்துவான் றொடங்கி முன்னையதைப் பூர்வபட்சமாக்கி இதுவல்ல பொருள் ஆன்மாவே பொருளென்று சாதித்தும், ஆன்ம விசாரங் கழிந்தபின்னர் அதனுண்மை அவனுக்குப் புலப்பட்டவழி, அதற்கு மேலிட்டபொருளை யுணர்த்துவான் றொடங்கி முன்னையதைப் பூர்வபட்சமாக்கி இதுவல்ல பொருள் இந்திரனே பொருளென்று சாதித்தும், இவனல்ல சந்திரனேயெனவும், இவனல்ல பிரமனே யெனவும், இவனல்ல விட்டுணுவேயெனவும் முறையே யாவரையும் பொருள்களெனச் சாதித்தும் உணர்த்துவது முறையாதல் இழுக்கடையாமை காண்க. குழந்தைக்குப் பாலூட்டும் பருவத்திற் பாலூட்டியும், சோறூட்டும் பருவத்திற் சோறூட்டியும் வளர்த்தல் உபகாரமாதல் கண்டுதெளிக.

இந்த விசாரத்தால் ஆன்மாக்களுடைய கன்மத்துக் கீடான வுணர்ச்சியைப் பயப்பனவாகிய சித்தாந்தங்களைப் பிருகஸ்பதி முதலாயினோர் பிரகாசப்படுத்திய தந்திரம் வெளிப்பட்டது. பிருகஸ்

பதி முதலாயினோர் செய்த சித்தாந்தங்கள் வேதத்திற் பெறப்பட்ட பொருள்களேனும், அவை யுண்மைப் பொருளாகாமையால் வேதத்துக்குப் பாஹியசித்தாந்தங்களேயாயின. அச்சித்தாந்தங்களை வேதமே பலவிடங்களில் நிஷேதித்துக் கூறுகையால், அவற்றை முன்னரங்கீகரித்தது சாமாநியாதிகாரிகளுக்கு அநுக்கிரஹமாகவும், பின்னர் திரஸ்கரித்தது உத்தமாதிகாரிகளுக்கு அநுக்கிரஹ மாகவுமென்பது தெளிக. வேதத்திற் பெறப்பட்ட மாத்திரத்தானே யமையாது வேதத்தால் நிந்திக்கப்படாமையும் பெற்றமையு மார்க்கமொன்றே அவ்வேதத்தின் றுணிபொருளாதல் நிச்சயிக்கப்பட்டமையால், அவ்வுத்தம மார்க்கம்சைவமார்க்கமென்பது சொல்லாமே யமையும். சைவமொன்றையே பிரதிபாதிக்குஞ் சிவாகமங்களுக்கும் அவ்வேதத்தைச் சொல்லியருளிய சிவபெருமானே வக்தாவாகையால்.

வேத சிவாகமங்க ளிரண்டும் பதிவாக்குகளாகையால் ஒன்றிலொன்று முரணுமை வெளிப்பட்டது. கன்மவேறு பாட்டையுடைய வுயிர்கள்பொருட்டுப் பொருள்பலபட வேதத்தைக்கூறிய சிவபெருமான் அவ்வேதத்திற் பெறப்படும் பொருள்களில் தம்முடைய முடிபொருளு மொன்றே யாதனோக்கி, அது ஈதுவென மயங்காதவழி அப்பெருமை தோன்ற வேதத்துக்குச் சிவாகமங்களைப் பாஷிய மெனச்செய்தனர். ஆகவே, வேதம் சூத்திரமும், சிவாகமம் பாடியமு மெனக்கொள்ளப்பட்டன. சிவவாக்காகிய வேதத்துக்கு உலகாயதம், மாயாவாதம், பாஞ்சராத்திர முதலியன பாடியங்களாய்ப் பிருகஸ்பதி முதலாயினோரால் செய்யப்பட்டமை கொண்டே அவை வேதத்தினுண்மைப் பொருள்களாகாவாம். வேதத்தைச்செய்த சிவபெருமான் அதற்குப் பாடியம் தாமே செய்திருத்தலால். மூலக்காரரே யுரையுஞ் செய்துள்ளாராக, அவ்வுண்மையுரையைக் கைவிட்டு வேற்றுரைகளின் மொத்துண்டலைவதெற்றுக்கு? அவ்வேற்றுரைகள் பதிவாக்குக ளல்லாமையால். பிற பசுக்களுரையை நாம் பற்றுவதைக் காட்டிலும் பசுக்களாகிய நாமே நமக்கு விளங்கியவழியேன் பொருள் கொள்ளக்கூடாது? பசுக்களுக்குப்பசுக்களா வுண்மை யுணர்த்தற்பாலார்? குருடனுக்குக் குருடனு கோல் கொடுப்பவன்? ஆகவே, பசுமார்க்கங்களாகிய இக்குருட்டு ஞானங்களில், பதிமார்க்கமாகிய சிவஞானமுமொன்றுதல் நிகழாமைகண்டு தெளிக. உலகாயதமுதலிய ஞானங்கள் பதிவாக்கிற் பெறப்பட்டமை

யால் அவ்வாக்குக் கிழுக்குண்டா மெனின், இல்லாமையை விரிப்பாம். கண்ணாடியின் முற்பட்டபொருள்களை அவைதன்னிட முள்ளனபோல் அது காட்டியதுகொண்டே அப்பொருள்களை அக்கண்ணாடியிற் றாதான்மியப் பொருள்களெனக் கொள்பவர் யாவர்? கண்ணாடிக்கு அதனொளியே தாதான்மியமாதலமையும். அதிற்காணப்பட்ட பொருள்கள் அதிலில்லாத பொருள்களாதல்போல் வேதத்திற்பெறப்பட்ட பொருள்கள் அவ்வேதமாகிய கண்ணாடியிலில் பொருள்களேயாம். கண்ணாடிக்கு ஒளியே யுள்பொருளாதல்போல வேதத்துக்குச் சிவாகமமே யுள்பொருளாகிய தாதான்மிய சம்பந்த முடைத்தென்க. எதிர்ப்பட்ட பொருள்களைத் தன்னிடங் காட்டியதுகொண்டு கண்ணாடிக்கொருதாழ்வு மில்லாததுபோல் பலசித்தாந்தங்கள் பதிவாக்கிற் பட்டமைகொண்டு அவ்வாக்குக் கொரு தாழ்வு மின்றென்க.

வேதாந்த சூத்திரத்துக்குப் பாடியஞ்செய்தருளிய ஸ்ரீகண்டாசாரிய சுவாமிகள் "வயந்துவேதசிவாகமயோர்ப்பேதம்- நபஸ்யாம: வேதோபிசிவாகம:" என்னும் வாக்கியத்தால் வேதசிவாகமங்கட்குப்பேதங் காண்கின்றிலம். வேதமே சிவாகமம் என்று அவற்றின் அபேதத்தை விளக்கியிருத்தல் காண்க. ஸ்ரீ பாஷ்யத்தில் வேதசிவாகமங்கட்குப் பேதமின்மை பிரசங்கிக்கப் பட்டிருத்தலின், வேதாவிருத்தமாகிய சிவாகம பாஹ்ய சித்தாந்திகளாகிய மற்றைப் பாஷ்ய கர்த்தர்கள் வேதபாஹ்யரேயாயினர். சைவபாஷ்யகர்த்தா ஒருவரேயன்றி மற்றைப் பாஷ்யகாரர்கள் கன்மவேறுபாட்டையுடைய பசுக்கள் கூறிய நூல்களை யெல்லாம் பிரமாணமாகக் கொண்டமையால், ஸ்ரீகண்டாசாரியர் தமதுபாஷியத்தில் வேதசிவாகமங்களையன்றி வேறுநூல்களையுந் தழுவியதுண்டேயெனின், "அன்னியநூலின் விதியவிரோதமே, லுன்னேல்பழுதென்றுளத்து" என்னும் நியாயம் வெளிப்படலால் அவரங்ஙனந் தழுவியது தோடமன்றென்க. இந்த விசாரத்தால் சைவபாஷ்ய மொன்றே வியாசருண்மைக் கருத்தினதெனவும், மற்றைப்பாஷ்யங்கள் அவ்வவற்றைச்செய்தவர் கன்மவயத்தின வெனவும், முன்னையது சத்திநிபாதர்க் குரித்தெனவும், பின்னவை சாமானியர்க் குரித்தெனவும் நிச்சயிக்கப்பட்டது. சைவபாஷ்ய கர்த்தாவாகிய ஸ்ரீகண்டமூர்த்திகள் சிவபெருமானுடைய ஸ்ரீ கண்டத்தின் அமிசம்பெற்று அவதரித்த வுண்மை நோக்கியே அவர்க்கு அத்திவ்யத்திருநாமம் வந்தமைகாண்க. இவ்வுண்மையை ஸ்ரீக

ண்டவிஜயத்திலும், பவிஷ்யோத்தரத்திலுங்காண்க. இவ்வாசாரியர் கூற்று சர்வசம்பிரதிபன்னமென்பதை விளக்குவான் உலகன்னையாகிய ஔவை யென்பவர் அருளிச்செய்த உண்மைவாக்கியம் வருமாறு. "தேவர்குறளுந் திருநான்மறைமுடிவு, மூவர்தமிழு முனிமொழியுங், கோவை, திருவாசகமுந் திருமூலர்சொல்லு, மொருவாசகமென்றுணர்" என்னுந் திருவெண்பாவில் திருக்குறள், உபநிடதங்கள், தேவாரம், திருக்கோவையார், திருவாசகம், திருமந்திர முதலியசித்தாந்த நூல்களோடு வியாசசூத்திரமும் ஒன்றெனச் சேர்க்கப்பட்டிருத்தலின் முனிமொழியெனப் போந்தவச்சாரீரக சூத்திரம் சித்தாந்த பிரதிபாதிதமென்பது சொல்லாமே யமையும். ஆகவே, சைவபாஷ்யமொன்றே அதற்குரித்தென்பது நாட்டப்பட்டது. இன்னும் "வேதமொடாகம மெய்யாமிறைவனூ, லோதும் பொதுவுஞ் சிறப்பு மென்றுன்னுக, நாதனுரையிவைநாடி லிரண்டந்தம், பேதம தென்னிற் பெரியோர்க்கபேதமே" என்று திருமூலதேவர் திருமந்திரத்திற் கட்டளையிட்டுள்ள வாக்கியமுஞ் சான்றென்க. மேல்விசாரத்தால் வேதமே சிவாகமம், சிவாகமமே வேதம் என்னு முண்மை வெளிப்படலால் சிவாகம மொன்றேயன்றி வேறு விபாக்கியானங்களை வேதத்துக் குரிமையெனக் கோடல் அசங்கதமென்க.

வேதமுஞ் சிவாகமமு மொரு சித்தாந்தத்தை விளக்கவந்த மூலமும் உரையுமாக, ஆகமத்தைநோக்க வேதத்தைப் பூர்வபட்சமென்ற தென்னையெனின், சநகர்முதலிய முநீந்திரர் நால்வரும் வேதங்களையும் உபநிடதங்களையும்நெடுநாள்வரையும் ஓதி ஞானம் நிலைபெறாதவ ராயினரெனவும், பின்பு ஆகமாந்தமென்னும் பெயரையுடைய சித்தாந்தத்தை யோதி ஞானம் நிலைபெற்றன ரெனவும் சங்கரசங்கிதையிற் கூறியவாற்றால், வேதத்தினும் சிவாகமத்திற்குப் பிராமாண்யம் வெளிப்பட்டது. வேதம் தன்னை ஆச்சிரயிக்கும் எல்லாச் சித்தாந்தங்களும் தன்னிடத்தி லுள்ளனவாகவே காட்டுந்தன்மையுண்மையால். அப்படிக்காட்டுங்கால, காணப்படு மொவ்வொன்றினும் பிரமாணபுத்தி பண்ண வருந்தோஷமேற்கொண்டியங்கல் திண்ணம். ஆகவே, மயக்கவறிவை விளைப்பதொன்றாக நிச்சயிக்கப்பட்டது. அது சாமாநியராகிய உலகர்க்கே சிவனால்கொடுக்கப்பட்டதென்னு முண்மையால். இந்தவிசாரத்தால் அது சத்திநிபாதர்க்கு உபயுக்தமாகாதென்க. இந்த நியாயம்பற்றியே ஆகமத்தைநோக்க அது பூர்வபட்ச மாயிற்று. வேதத்தினந்தம் வேதாந்தம் ஆவதுபோல் ஆகமத்தினந்தம் ஆகமாந்தம் என்பது அமையும். அப்படிக்குக்கூறு

து சித்தாந்தம் என்று வழங்குமாற்றால், ஆகமாந்தமே சித்தாந்தமென்னும் பரியாயநாமத்தைப் பெற்றமை வெளிப்பட்டது. இதனால், ஆகமாந்தத்துக்குப் பரியாய நாமம் வந்ததுபோல் வேதாந்தத்துக்கும் பரியாயநாமம் வந்திருத்தலை நோக்கின், அது பூர்வபட்சம் என்னும் பெயர்த்தாழ். ஆகவே, வேதாந்தம் பூர்வபட்சமும், ஆகமாந்தம் சித்தாந்தமுமாதல் வெளிப்பட்டது. "ஓரும்வேதாந்தமென் றுச்சியிற்பழுத்த, வாராவின்ப வருநகனிபிழிந்து, சாரங்கொண்ட சைவசித்தாந்தத், தேனமுதருந்தினர்சிலரே" என்னும் வாக்கியத்தானும் பூர்வபட்ச சித்தாந்தங்களாகிய வேதாந்த ஆகமாந்தங்களினுண்மை பெறப்பட்டது. இச்சித்தாந்தமாகிய ரத்னங்களுண்டாகும் சமுத்திரம்போல் வதொன்றாக விந்நூல்கள் வெளிப்படு மாற்றால், பிறமுடிபுகளைக் கீழ்ப்படுத்திச் சைவமொன்றினையே நாட்டவெழுந்த விதற்குச் சித்தாந்தரத்நாகரம் என்னும் பெயர் சூட்டப்பட்டது.—இன்னும் விரிக்கிற்பெருகும்.

மெய்கண்ட தேசிகன் றிருவடிவாழ்க.

-:0:-

உ

சிவமயம்

திருச்சிற்றம்பலம்.

அருணந்திசிவன மமே

# சித்தாந்தரத்நாகரம்.

## ஆசார்யப்பிரபாவம்.

புகலியர்கோ னடிவணங்கிப் பூசுரரு மமண்ருடு
விகலகடிந் தொருவனடி யேநிறுவமை யாளுநாவ
மகிபனிசை ஞானமிகு மைந்தனடி மலரப்பவி
யகமருவு மருள்வாத வூரடிக ளடிமேத்துவாம்

சித்தாந்த மாநகர சாரணர்களாகிய ஆதிராதிபராயுள்ள அன்புபாராட்டி வழிபடற்குரிய ஆசாரியமூர்த்திகள் யாவரெனில் விசாரிக்கின், திருஞானசம்பந்தமூர்த்திசுவாமிகள், திருநாவுக்கரசுசுவாமிகள், சுந்தரமூர்த்திசுவாமிகள், மாணிக்கவாசகசுவாமிகள் என்னும் நால்வருமே யாம். இந்நால்வரும் சைவசமயாசாரியரெனவும், சமயகுரவரெனினுமாம். 'சொற்கோவுந் தோணிபுரத் தோன்றலுமெஞ் சுந்தரனுஞ், சிற்கோல வாதவூர்த் தேசிகனும், முற்கோலி வந்திலரே னீறெங்கே மாமறைநூலெங்கே, யெந்தைபிரா னஞ்செழுத்தெங் கே" என்னும் பிரமாணத்தால் இவ்வாசாரியமூர்த்திகள் பூமியின்கண் அவதரியாவிட்டால் சைவமென்னுஞ் சொல்லேனுங் காணுதல் கஷ்டமென்று பெறப்பட்டதால், அன்ன அரும்பெரும்லாபம் பெறுமபதத் திருவருள்சுரந்த தேசிகர்களாகிய அவ்வாசாரியர் வழிபாடு நமக்கு அவசியமாயிற்றெனக

இவர்களில், திருஞானசம்பந்தப்பிள்ளையார் குமாரசுவாமி அவதாரமும், அப்பர்சுவாமிகள் சிவகணத்தலைவராகிய வாகீசர் அவதாரமும், மணிவாசகப்பெருமான் திருநந்திதேவர் அவதாரமும், சுந்த

மூர்த்திகள் ஆலாலசுந்தரர் அவதாரமுமாவர் இவ்வுண்மை சிவரஹஸ்யம், சீர்காழிமான்மியம், பெரியபுராணம்,உபமன்யு பக்தவிலாசம் மணிவாசகதீபிகை என்னு நூல்களில் பெறப்பட்டமைகாண்க. இவ்வாசாரியர் மகிமைகளை யுணர்த்தப்போந்த நூல்கள் இன்னும் பல புள. இவர்கள் சிவாக்ஞா பரிபாலர்களாய்ப் பூமியின்கண் வந்து புறச்சமயங்களைக கடிந்து சைவத்தை நாட்டினவுண்மையால், இவர்களே சித்தாந்தத் தலைவராவர். சைவத்தை நாட்டினவரெனவே, பிரகாசப்படுத்தினவரென்பது அமையும். என்பது, முன்னுள்ளதொன்றையே உள்ள தன்மை யிதுவென விளக்கினமை காண்க.

உள்ளது உள்ளதேயாக, அதைநாட்டுவது யாண்டிசையுமெனின், இல்லது இல்லதேயாக அதைநாட்டுவது கூடாமையால், உள்ளதே நாட்ட வுரிமை யுடைத்தென்க. உள்ளதொன்றையே அதுபுலப்படாதவழி இருளாவரிக்கப் புகுங்கால், அவ்விருளைத்துரத்தி முன்னுள்ளதைக் காட்டுவது அவசியமாதல் பெறும். இல்லதையுளதென நாட்டுவதும், உள்ளதையிலதென நாட்டுவதுஞ் செல்லாமைகாண்க. ஆகவே, நம்மாசாரியர் புறச்சமயவிருண் மூடாதவழிச் சைவத்தைப பாதுகாத்தவரென்பது பெறப்பட்டது. அன்னோர் சமணம் புத்தமேயன்றி வேறுசமயங்களைக் கடிந்த தின்றேயெனின், அவர்கள்காலத்தில் அவைகளேயன்றி வேறுசமயங்க ளில்லாமை கொண்டென்க. பாஞ்சராத்திர மாயாவாத முதலியன வக்காலத்திலிருந்ததில்லையோவெனின், இருப்பினும், அவைசமணத்தால் விழுங்கப்பட்டுச் சொரூபநாசமாகிக்கிடந்த வுண்மையால், அவை தலைகாட்ட இடம்பெறுதொழிந்தன. நம்மாசாரியர் அவற்றை அன்று கடிந்ததுண்டெனின், அவையின்றுங் காணப்படுவ தென்னையெனின், அன்று நம்மனோர் கடிந்தாரென்பது அவற்றையில்லாமற்செய்து விட்டாரென்பது கருத்தன்றும். அவற்றின் பிரகாசத்தைத் தாழ்த்தினரென்பதேயாம். அவற்றை அறவேயொழித்திருந்தால் இப்போது அவற்றினுபத்திரவ முண்டாகாதிருக்குமேயெனின், அங்ஙனஞ்செய்வது வேதத்தின் சம்மதமன்றும். "விரிவிலாவறிவினார்கள் வேறொரு சமயஞ்செய்தே, யெரிவினாற் சொன்னாரேனு மெம்பிராற கேற்றதாகும், பரிவினாற்பெரியோரேத்தும் பெருவேளூர்பற்றினானை, மருவிநான் வாழ்த்தியுய்யும் வகையதுநினைக்கின்றேனே" என்னும் பிரமாணத்தாற் காண்க.

சீவர்கள்பலரும், கடவுளொருவரு முளராகு முண்மையால், அக்கடவுள் சிவனென்பது பெறப்பட்டு,அவர் வழிபாட்டின் சம்பந்

தமுடையார் பலருஞ் சைவரென்னப்படுவர். அவரைவழிபடற்குரிய பரிபாகிக ளல்லாதார் புண்ணியம் வழிவிடாதபோது என்செய்வார்? சிவனைவழிபடும் பெரும்புண்ணியமிலராயினும், அவரவர்க்குற்றபுண்ணியத்துக் கேற்பப் பல்வகைவழிபாடுகள் அவரவருமுளராதலுண்மை. அவ்வழிபாட்டிற்குச் சிவனையன்றி வேறுகடவுள் காணுமையால், சிவனைவழிபடும் மார்க்கத்திற் பெறப்பட்ட தத்துவபேதங்களிலொவ்வொன்றையே அம்முழுமுத லெனக்கொண்டு வழிபடாநிற்பர். பிருதிவி முதல் நாதமீருகச் சொல்லப்பட்ட கருவிகள் முப்பத்தாறனு ளடங்கு மொவ்வொரு தத்துவத்தையே யொவ்வொருவரும் பொருளெனக்கருதி வழிபடுங்கால், அவ்வவ்வழிபாட்டிற்பரிபாகமுதிர்ந்து ஒவ்வொன்ருகக் கடப்பரென்பது முண்மை யாதலால், யாவும் உபகாரத்தமைந்த சாதக சாத்திய வழிபாடுகளேயாம். ஆங்காங்கு அவரவர்போன்றிருந்து அருள்வது நம்மையுடையவன் கடனுது முண்மையால். "யாதொரு தெய்வங்கண்டீ ரத்தெய்வமாகி யெங்கள், மாதொரு பாகனர் தாம்வருவர்" என்பதனுலுங்காண்க. நஞ்சைவத்திற் பெறப்படுந் தத்துவங்களையே தெய்வமெனக்கொண்டு விவகரிக்குங்கால் அவரைமறுக்கத் தொடங்குநம்மவர் அவைதத்துவங்களேயன்றிக் கடவுளல்லவென்று மாத்திரம் நிரசித்த லமையுமன்றி, அவர்கடவுளர்களாகக் கொண்ட தத்துவங்களை யில்பொருள்களாக நாட்டுவதியாண்டிசையும்? அவை யில்பொருள்களாயின், அவற்றை அங்கமாகவுடைய நஞ்சைவமு மில்பொருளாய் முடியுமுண்மையால். ஆகவே, எல்லாமதங்களுஞ் சீவிக்கவேண்டு மென்பது அமையும். ஆயின், நம்மஆசாரிய மூர்த்திகள் அவைகளைக் கடிந்தாரென்பதென்னையெனின், அவ்வவற்றிற்குரிய தாழ்வுகளைக்காட்டினு ரென்பதேயாம். ஜடத்தன்மை யுடையனவும், சிற்றறிவுடையனவுமாகிய தத்துவசமூகங்களி லொவ்வொன்றையே முதற்பொருளாக மயங்கிக்கிடந்த சமயிகள் மருளைத்துரத்தி, அவைதத்துவங்களேயன்றிக் கேவலமசித்தாயுள்ள தத்துவாதீதப் பொருளல்லவென்று காட்டுங்கால், அவற்றைக் கடிந்தாரென்பதும், அங்ஙனங்கடிந்தது கொண்டு அவைபொழிந்திடக் கருதினரில்லை யென்பதும் வெளிப்படலால், அன்னேர் புறச்சமயங்களைக் கடிந்து சைவத்தை நாட்டினரென்னு முண்மைக் கருத்து இதுவென வெளிப்பட்டது.

யானையொன்றை அறியத்தொடங்கினேர் அதன்செவியே யானையெனவும், வாலேயானையெனவும், காலேயானையெனவும், பலவாறும்

ருண்டென்றுரையாடல்போல் தத்துவங்களி லொவ்வொன்றையே மெய்ப் பொருளெனக் கருதுவாரைக்கடியுங்கால், செவிமுதலியன யானையன்றெனக் கடிவதுபோல் தத்துவசமூகங்கள் பொருளாகாவென்று கடிவது மாத்திரமேயமையும். செவி முதலியவற்றை யில்பொருள்களாகக் கடிந்தால் அச்செவி முதலிய வுறுப்புக்களை யன்றி யானையென்றொரு முதல்காணப்படாததுபோல், தத்துவங்களைப் பொருளெனக் கொண்டியங்குஞ் சமயங்களை யில்பொருள்களெனக் கழிப்பின், அவற்றைவிட்டுச் சைவ மென்றொருமார்க்கம் தனித்து நில்லாதென் றுணர்க. இதனால், கடவுள் ஒருவரேயெனவும், அவர்சிவபெருமானேயெனவும், அச்சிவசம்பந்தமார்க்கம் சைவமொன்றேயெனவும், வேறுமார்க்கங் கிடையவே கிடையாதெனவும், உண்டென்பது சைவத்திற்போந்த தத்துவப்பகுதிமாத்திரமெனவும் நிச்சயிக்கப்பட்டது. அன்றியும், ஒருவன்தான் வசிப்பதற்குக் கட்டியவீட்டில், அவனுடைய பிரயோசனார்த்தமாக மலசலவிசர்ஜனஞ்செய்யுமிடம், ஸ்நானஞ்செய்யுமிடம், பூசைசெய்யுமிடம், போஜனஞ்செய்யுமிடம், சயனவிடம், கச்சேரியிடமுதலிய பலவிடங்கள் அமையுமிடத்து, அந்தந்த விடத்தையே தனித்தனி முழுவீடென்று ஆங்காங்குமயங்கிக் கூறுமமூடரைக்கடியுங்கால், அவற்றை யில்பொருள்களாகக் கூறுவதெங்ஙனமிசையும்? அவ்வவற்றின் உயர்வுதாழ்வுகளை மாத்திரமே காட்டுதலமையும். அத்தனையுங்கொண்டதொரு வீடு அவற்றிற்கு வேறாய், அவற்றைத் தன்னிடங் கொண்டிருப்பதொன்றாய் வெளிப்படுமுண்மையே நம்மாசாரியர் கடிந்த சமயங்கட்கும் நாட்டிய சைவத்துக்கும் போந்த நிதரிசனமாம். இந்தவிசாரத்தால் உலகிலுள்ள சமயங்கள் யாவுஞ் சைவமேயெனவும், இந்த வுண்மையுணர்ந்தார் எந்தச்சமயத்திலுந் துவேஷம்வகியாரெனவும், அவற்றை மறுப்பதாகவிவகரிப்பது மேலிட்ட பிரயோசனத்தை யடையச்செய்வது பொருட்டெனவும் உண்மைவெளிப்படலால், பரமதநிராகரணங்களும், ஸ்வமதசித்தாந்தமும் நம்மவர் செய்துவருமபிப்பிராயம் ஈதெனவெளிப்பட்டது. இன்னும் விரிக்கிற்பெருகும்.

இவ்வுண்மையால், நம்மாசாரிய மூர்த்திகளால கண்டிக்கப்பட்டொழியினும், சமணமுதலிய சமயங்களிப்போது மிருக்கலாமென்பது நிர்விவாதகிரஸ்தமென்க. அவ்வாசாரிய மூர்த்திகள் அவைகளைக் கடிந்தவுண்மை யெந்தவாதரவா லறிதற்பாலதெனின், அன்னோர் திருவாக்குகளாகிய தேவாரம், திருவாசக முதலிய தமிழ்வே

தங்களைக் கொண்டென்க. அவர் திருவாக்குகளில் சமணம், புத்த முதலிய சமயங்களின் சிறுமைகளையும், சைவ சமயத்தின் பெருமையினையும் நன்கு விளக்கியிருத்தல் காண்க. சமணமுதலிய சமயங்களைமாத்திரமேயன்றி யெல்லா மார்க்கங்களையும் அவற்றின் சிறுமைதோன்ற மறுத்து விவகரித் திருத்தலுங் காண்க. அவர்கள் காலத்தில் அவைகளில்லாவிடினும் பின்னர் முளைக்குமென்பது அறிந்தவராதலால். ஆன்மாக்களுடைய கன்மம் பல்வேறு வகைப்பட்டவுண்மையால், அவரவர் கன்மத்துக்கேற்பப் பல்வேறு வழிபாடுகள் அவசியமாதல்பெறும். ஆகவே, எல்லாமதங்களும் எந்தக்காலத்திலும் சீவிக்குமென்பது பெறப்பட்டது. அப்படிச் சீவிக்குங்கால் ஆன்மாக்களுடைய கன்மத்தின் பலிஷ்டம் எவைகளிற்சேர வழிவிடுமோ அவ்வச் சமயங்களே யொவ்வொரு காலங்களிலுந் தலையெடுத்து விளங்கும். யாவுந்தலையெடுத்து நிற்பதுகொண்டு எல்லாம் சமமரியாதையுடைய மார்க்கமெனவாவது, உண்மையைப்பயக்கும் பேரட்சமார்க்கமெனவாவது கருதுவது செல்லாமை காண்க. சமமுடைய இரண்டுபொருள்கள் கிடையவே கிடையா வாகையால். ஓரே சாதியான ரத்னக்குவையில், ஒவ்வொன்றாகப் பரீட்சிக்குங்கால் தேர்ந்த மணி யொன்றே அசமானமாய்க் காணப்படுமென்றி அதற்குச் சமானமாக மற்றொரு மணியுமுண்டாகக்காண்பது எங்ஙனங்கூடும்? இரத்ன பரீட்சை அறியாதார் குருட்டுக் கல்லொன்றையும், விலையுயர்ந்த மணியாக ஏன்மயங்கிக் கூறமாட்டார்கள்? அப்படிக்கூறுவது கொண்டே அக்குருட்டுக்கல் உயர்வொப்பில்லாத மணியோடு எப்படிச்சாமியம்பெறும்? முன்குருட்டுமணியை யுயர்வாக மதித்த அன்னபரீட்சகனே அப்பரீட்சையிற் றேர்ந்தபோது அது குருடென்று ஏன்கழிக்காமற் போவான்? உயர்ந்தமணியி னருமையறியாது அதுசாமானிய மெனக்கழித்த வொருவனே அதனுண்மை அவனுக்குப் புலப்பட்டவழி, அதுவேயுயர்மணியென்று ஏன் கொள்ளாமற்போவான்? இப்படியே பரிபாக வுயர்வுதாழ்வுகளால் உயர்ந்த சமயத்தை யுயர்ந்ததெனவும், தாழ்ந்த சமயத்தைத் தாழ்ந்ததெனவும், உயர்ந்த சமயத்தைத் தாழ்ந்ததெனவும், தாழ்ந்த சமயத்தை யுயர்ந்ததெனவும் பலவாறு உலகங் கொண்டியங்குந்தன்மையால். இவ்வுண்மையையறியாது எல்லாச்சமயங்களும் ஓரேமரியாதை யுடையன வெனவாவது எல்லாச்சமயங்களு மில்லாமற்போய் விடவேண்டுமெனவாவது கூறுவதுகேவலம் அசப்பியமெனவறிக.

மேல்விசாரம் கைவரப்பெற்றவர்கள் எத்தனை சமயங்கள் உல கில் தலையெடுத்துச் சீவிக்கினும் அவற்றாலொருமயக்கமுறு மெய்தா ரென்க. ஆகவே, எவ்வளவு சுவடிகளைப் பொதிப் பொதியாய்ப் படி த்துக்காலங்கழித்துத் திரிந்தாலும், பதிவாக்குகளிற் பயிலும் புண்ணி யங்கிட்டப் பெறாத அபண்டித சிரோமணிகளே மயங்கிக் கூறாநிற் பர். புத்தரை வாதில்வென்றருளிய ஸ்ரீமந்-மணிவாசகப் பிரபுவின்மா ஹிமியத்தை நோக்குழி அவரால் பௌத்தரடங்கலும் ஊமைகளாயி னரென்று பெறப்படுமாற்றால், அவர்கள் சத்தியைக்குன்றச் செய் தாரென்பதே வெளிப்பட்டமைகாண்க. இதனை யறியாது, அவர்க ள் சமயம் இக்காலத்திலு மிருக்குமாற்றால் அதனை நம்மாசாரியர் கள் வென்றாரென்பது எப்படியென மயங்குவது தவறென்க. இவ் வுண்மையை யறியாதார் தத்தமக்கிசைந்தவாறே கூறி மயங்காநிற் பர். அவ்வாபாசங்களை யீண்டு விதந்துரைப்பாம்.

(ஒன்றுக்கொன்று மாறுபடுதலையுடைய சமயங்களெல்லாம் ஒ ன்றி னொன்று கெடுதலை யில்லையாயின், அவற்றுள்யாது சத்திய நெ றியென்றும், மற்றியாது அசத்திய நெறியென்றும் நம்மாலே கூறப் படும் என்பர்.)

மேல் யாம்காட்டியயானை, வீடுமுதலிய வுவமானங்களால் சம யங்கள் ஒன்றினொன்று கெடாமைக்கு நியாயம் வெளிப்பட்டமை யால், யாவும் கெடுதலையடையாத சத்தியநெறிகளே யெனவும், அ வை யொன்றுக்கொன்று மாறுபடுதலும் பிழையன்றெனவும், அத னால் யாதொன்றையும் அசத்தியநெறியென லடாதெனவும், யாவும் சத்தியமென்பது சத்திய நெறியாகிய சைவத்தினங்கமாதல் பற்றி யெனவும், அதுகொண்டு சைவமுமொன்றாக ஏனைய சமயங்களோ டுவமிக்கப்படா தெனவும், சகல சமயாதீதாத்துவித நிலையினது அ ச்சைவமொன்றேயெனவும் பெறப்படலால், இவ்வுண்மையறியாது ஒன்றினால் மற்றொன்று அழியவேண்டுமெனவாவது, அழியாமை யால் யாவும் சமநிலையினவெனவாவது, அவற்றுள், சைவம் உசித மாகாதெனவாவது கூறப்போந்தது குருட்டுஞானமாய் முடிதல் கா ண்க.

இனி, (இக்காலத்தில் இதனால் அது தோல்வி யடைந்ததென் றும், அக்காலத்தில் அதனால் இது தோல்வியடைந்ததென்றும் சம யங்களாறும் காலபேதங்களின் ஒன்றுக்கொன்று வெற்றி தோல்வி

யடைதல் உண்டாதலின் அவற்றை நிறுவியவொருபரனது இச்சை யால் தெய்வத்தன்மை கொண்டு எக்காலத்தில் எதை உயர்த்தி எதைத்தாழ்த்தல் வேண்டுமோ அதை அங்ஙனஞ்செய்குவது ஒழிந்து மற்றோர் காலத்தினுள்ளே ஓர்மதத்தை ஒருவராலும் வாக்குவாதத்தினாலே செயித்தல்கூடாது எனவும், "இறைவிதன் முலைப்பால யின்ற சீகாழிக்கிறைவனுமிறைவனைப்பரிமே, னறைமலர்ப் பொழில்சூழ் மதுரையம்பதியினடத்திய வொருபெருந்தவனும், புறநிலைச் சமணமாதியைச் செயித்தார்பொருந்து தெய்விகத்தெனிலெவரே, மறைசொல்சட்சமயத் தொன்றுகொண்டொன்றை வாக்குவாதத்தில் வெல்பவரே" என்னும் வாக்கியமே இதற்குப் பிரமாண மெனவுங் கூறுநிற்பர்.)

இதனை விசாரித்துழிக் கேவலம் அசங்கத முண்டாகுந் தன்மையேயன்றி யுண்மை யொன்றும் பயவாமையை யீண்டு பிரவசனிப்பாம். சமயங்களாறும் ஒன்றை யொன்று அழித்தல்யாண்டமையும்? யாவும் பரிபாகத்தளவாய்ச் சீவர்களுக்குப் பெருமான் விதித்த வாணையாகையால். பௌதிகான்மவாதி யொருவனுக்கு அச்சித்தாந்தத்தில் அபிருசியுண்டாகி அவன் அதை யவலம்பிக்கையில் அதிலவனுக்குள்ள பற்றுக்கோடு அவனுடைய பரிபாகத்தளவாய் முடிதல் திண்ணமாகையில், அவன் அதற்கு மேலிட்ட உத்தமசித்தாந்தத்தை யெவ்வளவு பிரத்தியட்சமாக மேலோர் விளக்கிய காலத்தும் அவன் ஏன் அங்கீகரிப்பான்? அவன் உத்தம பரிபாகியல்லாமையால். அவனுடைய தாழ்ந்தபரிபாகம் அத்ததியில் அவனுடைய கோளுக்குமுன்னே யெத்திறத் துசிதமுடிபுகளும் அநுசிதமெனக் காட்டித் தன்வசத்தினிறுத்தும் வல்லபம் பூண்டியங்கு முண்மையால். அப்படியே, பரசிவசித்தாந்தி யொருவனுக்கு அச்சித்தாந்தத்தில் அபிருசியுண்டாகி அவன் அதை யவலம்பிக்கையில் அதில் அவனுக்குள்ள பற்றுக்கோடு அவனுடைய பரிபாகத்தளவாய் முடிதல் திண்ணமாகையில் அவன் அதற்குக்கீழிட்ட அதமசித்தாந்தங்களை ஆபாசமெனக்கண்டு கழித்த வுண்மையால் அவற்றை அவன் ஏன் அங்கீகரிப்பான்? அவன் உத்தமபரிபாகியாகையால். அவனுடைய உத்தமபரிபாகம் அத்ததியில் அவனுடைய கோளுக்குமுன்னே யெல்லாமத வாபாசங்களையு மினிது விளக்கிக் காட்டுந்தன்மை யுண்மையால். இதனால் அதமாதமமான அதிகாரியொருவனும், உத்தமோத்தமமான அதிகாரி யொருவனுமாக இருவர் ஏர்ப்பட்டனர். இருவர்க்குங் கன்மவேறுபாடுகள் வெளியானவுண்மையால். இவர்க்கிடையே அநந்தவிதமான அதமராசிகளும், உத்தமராசிகளுமாகிய

பரிபாகிகள் பலருளராக வெளிப்படுகின்றனர். இன்ன பரிபாகங்க ளொருவனுக்கே யென்பதுமுண்மை. நேற்றுத்தேகான்மவாதியா யிருந்தவன் இன்று ஏகான்மவாதியாகக் காணு மநுபவவுண்மையால். கேவலம் அதமாதமனுகவும், அதமராசிகளில் சேருபவனுகவும், உத்தமராசிகளில் சேருபவனுகவும், கேவலம் உத்தமோத்தமனுகவும், பல்வேறு தானவேறுபாடுகளை அடைகின்றவன் தேவதத்த னொருவனேயன்றி யெண்ணில் கோடியுயிர்களுளவென்னு முண்மையால் அன்னோர் பரிபாகதரளவாய் அவர்களுக் குபகாரமாகவே யெல்லா வதமங்களும், எல்லா வுத்தமங்களும் எக்காலத்திலு நிலைபெற்றிருத்தல் அத்தியாவசிகமாதல் பெறப்படுகின்றது. இந்தவிசாரத்தால் ஓர்காலத்தினும் ஓர்மதத்தால் மற்றொருமதம் அழிந்ததென்பது சர்வாபத்தமெனவறிக. எல்லாமதங்களும் நசித்துச் சைவமொன்றே யோர் காலத்தில் நிலைபெற்றிருந்தது எனின், அக்காலத்தில் உலகமடங்கலும் சிவனை வழிபடும் புண்ணிய மேலிட்டவர்களாகவே கொள்ளவரும். ஆகவே, கீழிட்ட பரிபாகத்தையுடைய வுயிர்களுக்கு அபாவஞ் சொல்லவரும். கீழிட்ட அதிகாரிகளுண்டாகப் பெறுமையுண்மையேல், இப்போது நானுவிதமான கீழிட்டபரிபாகிக ளுளராதலிழுக்காம். இப்படியே பாஞ்சராத்திரமுதலியன மற்றைமதங்களை யழித்துத் தனித்தனி யொவ்வோர்காலங்களில் நிலைபெற்றிருந்தனவெனின், அழிந்து முதலற்றுப்போன வம்மதங்கள்மீண்டும் எப்படி முளைத்துத் தழைக்கக்கூடும்? இதனுல் எர்தமதமும் ஒன்றுலொன் றழிந்த தென்பது சர்வாபத்தமாம். ஒருமதத்தான் மற்றொருமதம் கெடாமல் யாவும் நிலைப்பதனுல் எல்லாம் சமமரியாதையுடையனவுமன்றும். இந்த விசாரத்தால் சமயங்களொன்றையொன்று வென்றனவென்றும், ஒன்றுக்கொன்று தோற்றனவென்றுங் கூறுதல் கூடாமைகாண்க. விவகாரமெல்லாம் பரிபாகத்தளவில் நிற்பது வெளிப்பட்டமையால். பரிபாகம் ஏறியதும், குறைந்ததுமே சமயங்களுயர்ந்ததும், தாழ்ந்ததுமாகக் காணப்பட்டனவன்றி யோர்காலத்தும் சமயங்க ளுயரவுமாட்டா, அல்லது தாழவுமாட்டாவெனவறிக. எனவே, உயர்ந்தசமயம் உயர்ந்ததேயெனவும், தாழ்ந்தசமயம் தாழ்ந்ததே யெனவும், உயர்ந்த சமயம் தாழமாட்டாதெனவும் தாழ்ந்தசமயம் உயரமாட்டாதெனவும், உயர்ந்ததுபோலும், தாழ்ந்ததுபோலுங் காண்பதெல்லாம் கேவலம் பிரமைமாத்திரமாக வெளிப்பட்டவாறறிக. ஒருவனுக்குக் கண்ணிலுண்டாகிய தோஷத்தால

நல்லது கெட்டதாகவும், கெட்டது நல்லதாகவும் புலப்படுமாற்றால் அவற்றை அப்படியே தனித்தனிக் கெட்டதென்றுவது; நல்லதென்றுவது கண்ணுடையார் பலரும் சொல்லயாண்டிசையும்? கண்கெடாதவர்க்கு நல்லது நல்லதாகவும், கெட்டது கெட்டதாகவும் புலப்படுதல் கூடுமேயெனின், கண்கெட்டார்பலரும் தமக்குள்ள கேட்டைப் பிறர்மேலேற்றித் தமக்குள்ளவநுபவமே யுசிதமெனவும், பிறரநுபவம் அநுசிதமெனவுங் கூறத்துணிவதால் அவரவரநுபவம் அந்தந்தமட்டிலேதானே விவகரிக்கற்பாலன வென்றறிக. இந்தநுட்பங்களையறியாது ஒன்றையொன்று வென்றது என்று கூறுவது தவறாய் முடிந்தது.

இனிச் சமயங்கள்யாவும் சமமேயென்றும், அவற்றுள், பரனது இச்சையால் காலத்துக்கேற்ப எதையுயர்த்தி எதைத்தாழ்த்தக்கூடுமோ அது அவரால் செய்யக்கூடுமென்றுஞ் சொல்லு மாபாசத்தைவிசாரிப்பாம். சமமாயுள்ள சமயங்களோர்காலத்தில் எப்படியொன்றுக்கொன்று தாழக்கூடும்? சுரர், நரர், விலங்குமுதலியவற்றுள், சுரர்எப்போதும் சுரரே! நரர்எப்போதும்நரரே! விலங்கு எப்போதும் விலங்கே? இவற்றுக்குண்டாகிய வுயர்வுதாழ்வுகள் ஒன்றுக்குரியதொன்றை யெய்தாவாம். சுரர் நரரில்தாழுவாவது, விலங்கு நரரில் உயரவாவது அமைதல்யாண்டிசையும்? பரனது இச்சையெனின், காரணமின்றியமையாது. காலத்தாலெனின், கன்மத்தையன்றியமையாது. ஆகவே, கன்மங்காரணமாய் உயர்தலும்; தாழ்தலுமாந்தன்மை வெளிப்பட்டது. அஃதுந் தோற்றன்மாத்திரமாய் முடிதலுண்மையாம். கன்மத்தைவிட்டுக் கடவுள் ஒன்றுஞ்செய்யாராகையால் அவரிச்சையைக் காரணமாக்குதல் பிழையாம். அங்ஙனமாயின், அது பித்தர்செய்கையாய் முடிதலின். அது அப்படியேதானென வற்புறுத்திக்கூறின், பரனது இச்சையால் பரனே நாளைக்கு அபரனுதலுங்கூடும். அபரனைபிறகு மீண்டும்பரனுதல் தனதபரத்வத்தால் செல்லாமையின், தான்முதல்வனுந்தன்மையும், அமலனுந்தன்மையுங்கெடும். அன்றியும், பரனது இச்சையால் சைவம்ஓர் காலத்தில் தாழ்ந்ததெனின், அதிற்பெறப்பட்டபரஞ்சிய சிவன் அபகர்ஷனுதல் அங்கீகாரமாய்முடியும். இப்படியும்மையுமா? இது என்ன குழகுழப்புஞானம்? இந்த விசாரத்தால் பரனதிச்சையால் சைவத்தைத் தாழ்த்துவாரென்பதும்; வைணவத்தை யுயர்த்துவாரென்பதும், அல்லது வைணவத்தைத் தாழ்த்துவாரென்பதும், மற்

றை மதங்களையுயர்த்துவா ரென்பதும் கேவலம் அசங்கதமாய் மு டிதல்காண்க.

இனிச் சமயாசாரியர்கள் புறச்சமயங்களாகிய சமணாதிகளையே தெய்விகத்தாலழித்தாரெனின், மற்றைச்சமயங்களை வாக்குவாதத் தால் யாவர்வெல்லுதல் கூடுமென்றெழுந்த கேள்வியுந் தவறுடைத் தாம். எல்லாச்சமயங்களும் ஒப்பமுடிந்த நிலையுடையனவாகக் கொள்ளுங்கால் சமணாதிகளைப் புறச்சமயமென்றது பொருந்தாது. சைவம் சமயாதீதமெனக் கொண்டவர்மாத்திரமே அகச்சமயம், புறச்சமயம் என்று விவகரிக்கவிடமுண்டாமன்றி எல்லாம் சமஞானமாகக்கொள்பவர்க்கு எதுபுறச்சமயம்? எது அகச்சமயம்?

இன்னும் ஞானசம்பந்தாதிகள் தெய்விகத்தால் வென்றாரென்று அத்தெய்விகத்தை அவர்க்குவேறாயிருப்பதொரு சித்தியாகக்கூறியதுந் தவறாம். அன்னோர்தெய்வங்களாத லுண்மையாகையால். எனவே, சிவவிபூதியென்பதுவெளிப்படை. ஆகவே, ஸ்வசக்தியால் அவர் முடித்தாரென்பது ஒப்பமுடிந்தது. இவ்வவதாரமூர்த்திகள் புறக்சமயங்களை யழித்தாரென்னு நுட்பத்தை யாம்மேலே விளக்கியிருக்கின்றோமாகையால் மதங்களின் தோல்வி வெற்றிகளுடைய தன்மை யித்திறத்தனவென் றாகிப்பாராக.

இன்னும் மறைசொல் சட்சமயம் என்றதும் பிழையாம். வேதம் ஒன்றையொன்று விரோதிக்குஞ் சமயங்களைச் சமமரியாதையுடையனவாகக்கொண் டுணர்த்துவதின்றாகையால். ஒவ்வொருமதத்தையும் உடன்பாடுபோலக்கூறினும், பின்னர் மேலிட்ட சித்தாந்தங்களை நிரூபிக்குமவசரத்தில் முன்னவை பூர்வபட்சமாகும்பொருட்டு நிஷேதித்துக் கூறுந்தன்மையுண்மையால்.

ஆயின், உமாதேவியார் வளர்க்கும் முப்பத்திரண்டு அறத்தில் (அறுசமயத்தோர்க்குண்டி) என்பது மொன்றாக விழுக்காமெனின், அது சைவம், பாசுபதம், மஹாவிரதம், காளாமுகம், வாமம், பைரவம் என்னுஞ் சித்தாந்தாசரண சௌபானமார்க்க மென்கையா லமை வுடைத்தாதலறிக. இஃதறியாதார், சைவம் வைணவம், சாக்தேயம், காணபத்யம், சௌரவம், காபாலிகம் என்று ஷண்மதநிரூபணஞ் செய்யாநிற்பர். இவையொன்றிலொன்று பிராம்ஹணனுக்கும், பஞ்சமனுக்குமுள்ளதாரதம்யகிரஸ்தமாய்ப் புலப்படலால், இப்படிப்பட்ட வாமலசித்தாந்தங்களை வேதம் ஒப்பமுடிந்ததாய்க் கொண்டுணா

ர்த்தாதெனவறிக. மேற்போந்தசைவம், பாசுபத முதலியன அவை கநிஷ்டமாகுந் தன்மையுண்மையால், அறம் வளர்த்த அம்மையாரபிமதத்துக்கேற்ப, வேதபாஷ்யமாய் விளங்குஞ்சிவாகமத்திற் பிரதிபாதிக்கும் பெருநலங்கண்டு அறுவகைச்சமயம் என்று வேதாவிருத்தமாய், உடன்பாடாக நம்மவர்கூறி வருமரபுரிமையுங் கண்டுதெளிக. இப்படி விசாரித்தறியாது ஷண்மதம், ஷண்மதம்என்று கத்திக்கொண்டு, அச்சண்மதங்களையுஞ் சங்கராசாரியர் தாபித்தாரென்று புலம்பாநின்று குழறிவழியுங்குமதிகள் போதமுங் குணப்பாடின்மையாயொழிந்தது. சமயங்கள் அகச்சமயம் (சு) புறச்சமயம் (சு) அகப்புறச்சமயம் (சு) புறப்புறச்சமயம் (சு) என இருபத்துநான்கு பேதத்தை யடைநதிருத்தலாலும், இவ்விருபத்துநாலுக்கும், அதீதப்பட்ட சித்தாந்தமொன்று அதிக்கிரமித்துப் பிரகாசித்தலாலும் யாவும் ஓரேமரியாதையுடையனவாகக் கொண்டுரைப்பது குழறுபாடாகவே முடிந்தமைகாண்க. சங்கராசாரியர் புறச்சமயம் ஆறனுளொன்றாகிய ஏகான்மவாதத்துக்குமாத்திரமே ஆசிரியராவர். மற்றைப்புறச் சமயங்களுக்கும் அவருக்கும் யாதொரு சம்பந்தமுங் கிடையாதெனவறிக. புறச்சமயங்கள்தாமே அவருடைய தாபனத்தை யங்கீகரியாதனவாக, அவற்றின்மேலாய அகப்புறச்சமயம், அகச்சமயம், அதீதசமயம் என்பவற்றிற்கு அவர் தாபனகர்த்தாவாதல் யாண்டிசையும்? இது கோஹத்திசெய்பவன் பிராம்ஹணகுருக்களாதல்போல்வதொன்றும். இதனால், மறைசொல் சட்சமயம் என்று ஹேயமார்க்கங்களை மதித்துரைத்தது தவறாய்முடிந்தது. அவை வேதநிஷ்டமாகிய உட்சமயம் ஆறெனக்கொள்ளின், ஒன்றையொன்று மறுப்பதவசியமன்றாம். வேதவிருத்தமாகிய புறச்சமயம் ஆறெனக்கொள்ளின், ஒன்றிலொன்று முரணுந்தன்மை யுண்மையால் அநாதரணியமாதல்சித்தம். ஆகவே, "எவரே யொன்றுகொண்டொன்றை வாக்குவாதத்தில் வெல்பவர்" என்றதும் பிழைபட்டழிந்தமைகாண்க. இன்னும் விரிக்கிற்பெருகும்.

இனி, "முன்னைநாள் அச்சமயி இச்சமயியை வாதில்வென்று மனோரதம் அடைநதானாயின், பின்னைநாள் இச்சமயத்திலே பின்னும் ஒருவன் அவனை மனோதுக்கம் அடையும்படிவாதித்து வெல்லுதலின், அவனவன் கற்றகல்விவலியினாலும், யுத்திபுத்திவலியினாலும் வெற்றி தோல்வியடைந்தாரரகலின், வாததுர்ப்பலமொழிந்து மததுர்ப்பலம் இல்லையென்று கூறுவர் எல்லாக்கலைகளுமுணர்ந்த பெரி

MAHAMAHOPADHYAYA
DR. U.V. SWAMINATHA IYER LIBRARY
...NAGAR MADRAS-600 090.

யோர்" என்றுங்கூறுவர். இது கேவலம் அசங்கதமென்பதை நிரூபிப்பாம். வாதிகளுடைய துர்ப்பலத்தாலன்றி மதத்தினுடைய துர்ப்பலத்தால் ஓர்மதமும் ஓர்காலத்தினுந் தாழாதாயின் எல்லாமதங்களும் தாரதம்யமில்லாத வுயர்நலமுடையனவாம். அப்படிக்கொள்வதில் யாதுகுற்றமெனின், உலகாயதம், வாமம் இத்தியாதி மதங்களில் அவலம்பிக்கப்படுமாசாரங்களும், அன்னவற்றுள பிரதிபாதிக்கப்படும் வஸ்துநிச்சயங்களுமே கொள்ளற்பாலனவாக, அவ்வம்மதப்பிரவர்த்தகருள் யுத்திபுத்திகளிற் சிறந்தவர் வெளிப்படுங்கால் சைவமுதலிய புண்ணிய நெறிகளைக்கடிந்து ஏன் தாபிக்கவெழமாட்டார்கள்? அப்படியெழுங்கால், சைவர்முதலாயினருள் அற்பபரிஞானமுடையவரால் அப்பீடை மதங்களைத்தொலைக்க வலியற்றபோது கொலைகளவு கர்மாதிகளையே யாசாரமெனக்காட்டித் தலைநீட்டு மவ்வாபாசநெறிகளும், வாய்மை, தவம், இரக்கமுதலிய வாசாரங்களையுடைய சைவமுதலியனவும், ஏன் சமநிலையுடையனவாகா? இப்படியும் அநியாயமுண்டா? யாம்கூறியது வேதத்திற்போந்த மார்க்கங்களையன்றிப் புறச்சமயங்களன்றெனின், வைதிகமார்க்கத்தார்க்கே யுத்திபுத்திகளுண்டென்றும், லௌகிகர்க்கு யுத்திபுத்திகளுண்டாவதில்லையென்றும் ஏற்பட்டாலல்லது வைதிகம், அவைதிகம என்று பிரித்துரைப்பது பிழையாம. கேவலம் யுத்திபுத்திகளையே தழுவிப் பிரமாணங்களைக்கைவிட்டு இச்சைபோனவழியெல்லாம் விவகரிப்பவர் லௌகிகரேயாதலால் அன்னலௌகிகதுல்யரே புறச்சமயிகளுமாவர். ஆகையால் யாம்கூறியது வேதவழி நிற்பாரையேயென்று மலைந்துரைப்பதுந்தவறும். வேதவழி நிற்பார் ஒருவரையொருவர் விரோதியரானகையாலும் அது செல்லாமைகாண்க.

பொய்யனொருவனும், மெய்யனொருவனுஞ் சண்டையிட்டுக்கொண்டு அதிகாரியிடஞ்சென்று தத்தமக்குள்ள விவகாரங்களைச் சொல்லிக்கொள்ளுகையில் பொய்யன் அதிகமாய்ப் பேசும்வல்லமையால் மெய்யனை வென்றானாயினும், அல்லது இருவருஞ்சமமாய்ப் பேசுந்திறமையுடைமையால் ஒருவரையொருவர் வெல்லக்கூடாமல் சமநிலையி னிற்பாராயினும், அன்னஹேதுக்களையே மதித்து மெய்யன்பொய்யனில் தாழ்ந்தவனென்றாவது, அல்லது சமானமானவனென்றாவது கூறுதல் யாண்டிசையும்? "மெய்யுடையொருவன் சொலமாட்டாமையால், பொய்போலும்மே பொய்போலும்மே" எனவும், "பொய்யுடையொருவன் சொல்வன்மையினால், மெய்போலும்மே மெய்போ

லும்மே" எனவும் வரும்வாக்கியங்களைச் சிந்தித்துழி மேலாபாசிப் பரிகாரத்தைப் பெறுமென்க. மேல்யாம்விளக்கிய விவகாரத்தைவிற் புறத்திக்காட்டு மிவ்வாக்கியம் பொய்யுமெய்யுஞ் சமமாயிருத்துடையனவென்று நாட்டுங்கால் மததுர்ப்பல மாகாதென்னும மதிர் வாசகம் மணக்கும்! மணக்கும்!!

இனி (எச்சமயத்தின்கணின்றுள்ளயாவரும், வேதாகமமாகிய நூல்களும், மற்றைச்சமய நூல்களும் கசடறக் கற்றுணர்ந்தோரேயாயினும் இதுவேஞானசமயமென்று ஒருசமயத்தையே அடையாது தத்தஞ்சமயமே ஞானசமயமென்று தாபிததற்கு ஏது திட்டாநதங்கள் மிகவும் மனத்தின்கண் வலிதலின், வலியின்மைச்சமயம்யாது) என்று கூறுவர். இதைப்பரியாலோசிக்கில் ஒவ்வொருமதமும், ஞானமார்க்கமென்றுநாட்டுதற்குப் போதுமான ஏது திட்டாந்தங்கள் புலப்படுமென்னுங்கால் எல்லாமார்க்கங்களும் ஞானமார்க்கங்களாம். அதனால், உலகாயதத்தைப்பற்றிப் பெண்ணின்பமே முத்தியென்று கூறுவார்ஞானமும், சைவமார்க்கத்தைப்பற்றிச் சிவன்றிருவடியின்பமே முத்தியென்றுகூறுவார் ஞானமுமொன்றாய் முடிந்தது. இரண்டு சமயிகளுந் தத்தம்ஞானமே யுண்மைஞானமென்று நாட்டுதறகுப் போதுமான ஏதுதிட்டாந்தங்கொண்டு வெளிப்படுகையால், இங்ஙனமாக, (சகலசமயத்தினுண்மையும் உள்ளபடி அறிந்து அவற்றின் முடிவுகண்டஞானிகள் எச்சமயாபிமானமும் பற்றிநிற்பதேயில்லை நீங்கிவிடுவார். அங்ஙனநீங்கியது கொண்டு அவரடையும் தாழ்வுயாது) என்று கூறுவது என்னமதி? எல்லாச்சமயஞானமும் சமஞானமும், அவாதிதமுமாகையில் அவற்றின் முடிவுகண்ட ஞானிகள் அவற்றிலபிமானமவிடுப்பது யாதுக்கு? அவற்றிலபிமான மொழிபபாரென்கையில் ஞானிகளா லொழிக்கத்தக்க தோஷாரோபணமுடைய மார்க்கங்களவையென்றன்றே கொள்ளவரும்? அவற்றையெல்லாம்விட்டு வேறெதையோ ஞானிகள் பற்றிநிற்பது? முன்னேயெல்லாச்சமயத்திலு ஞானமுண்டென்றுகூறிப் பின்னர், அவற்றை ஞானிகள் பற்றமாட்டாரென்பது விந்தை! விந்தை!! இது வேதாகமத்தில்லா விநோதவிசித்திரமென மெய்ஞ்ஞானிகள் கண்டுபரிகசிப்பரென்க. ஆகவே, எல்லாச்சமயஞானமும் போலிஞானங்களெனவும், அதுவே பாசபசுஞானங்களைக் கடந்த பதிஞானமென்று சுத்துக்கணிரூபித்துள்ளாராகையால், மோக்ஷத்தைப்பபக்கு ஞானமெ

னவும் நாட்டப்பபட்டது. இதனையே திருவடி ஞானமென்றும், திருவருண் ஞானமென்றும், உண்மைநூ லனைத்துங்கூறும்.

இனி, (தன்சமயத்தின்கண் ணிழிவும், பிறிதொரு சமயத்தின் கண்ணுயர்வும் கன்மபாகத்தளவின் ஒருவனுக்குத்தோன்றுகையால் தான்முன்புநின்றநெறியை நீங்கி யுயர்வுதோன்றிய நெறியை யடையாநிற்பன். அதனால், அவனுக்குப் பின்புஅடைந்துளமதத்தி லுண்டாகிய நன்மையடைகுவதொழிந்து முன்புநின்றுளமதத்தில் கூறிய பதிதத்தன்மை அடையான்) எனறு கூறுவர். இதைச் சற்றேவிசாரிப்பாம். தன்சமயம் இழிவாகவும், பிறிதொருசமயம் உயர்வாகவும் ஒருவனுக்குத் தோன்றுகையில், அதுகன்மபாகத் தளவென்றும் ஏற்பட்டபடியால், அப்படித் தோன்றுவது உபகாரமுமாகலாம். அல்லது, அபகாரமுமாகலாம். எங்ஙனமெனின், தான்பற்றியிருந்த சமயம் உள்ளபடியே தாழ்ந்ததாயிருப்பின், அதைவிட்டுப் பின்னர்ப்பற்றிய உயர்ந்தசமயத்தின் பிரயோசனத்தை அவனடைதல் கூடும். அது தன்பரிபாகம்உயர்ந்திருக்குந் தன்மையால். அப்படிக்கன்றி தான்முன்னே பற்றியிருந்தசமயம் உயர்ந்ததாகவும், பின்பற்றியசமயக் தாழ்ந்ததாகவு மிருந்தால், அப்போது அவன்முன்பற்றியிருந்த உயர்ந்தசமயத்தின் பிரயோசனத்தையிழந்து தன்பரிபாகத்தாழ்வால் பின்பற்றியசமயத்தி னற்பிரயோசனத்தையே யடையக்கூடுமென்றிவேறில்லை. அன்றியும் உயர்ந்தசமயத்தை யிழந்தகொடுமையும் அவனைப்பற்றி வருத்துகையால், அவனுய்வது கஷ்டம! கஷ்டம்!! எல்லாஞ்சமமாகையால் எதிற்பிரவேசித்தாலும் தோஷமின்றென்பதே யெம்மபிப்பிராயமெனின், அப்போது கன்மபாகத்தளவாயென்று கூறியதுபொருந்தாது. அன்றியும், முன்புநின்றுளமதத்திற் கூறிய பதிதத்தன்மையடையானென்றதும் முரணிக்கெடும். இன்னும், சமமாயுள்ளமதங்களில் அதைக்காட்டிலும் இது உத்தமமென்றும், இதைக்காட்டிலும் அது உத்தமமென்றும் பிரமிப்பதாகிய தோஷமுடைமையும் பெற்றும். இந்தவிசாரத்தால் ஒரு மதத்தைவிட்டொருமதத்தி லொருவன் பிரவேசிக்கையில், தான் சென்றடைந்தமதம் முன்னிருந்தமதத்துக்கு ஏற்றமுடையதாயிருந்தான் மாத்திரமே அவனுக்குக் குணமுண்டாமன்றி, முன்னிருந்ததைக்காட்டிலுந் தாழ்ந்த சமயமாயிருப்பின், அவலத்தையே யடைந்து அவதிப்படுவனென்பதில் யாதொருதடையுமின்றும். ஆகையால், எதிற்போனலும் பேசகலைமென்றஞானம் இனிச் சவாய் ஞானமாய் முடிந்தது.

இது நிற்க, (யாவனொருவன் யாதொருமதத்தின்கண் நின்றானாயினும் அதனைநீங்கி எம்முடைய மதத்தின்கண் வந்தானாயினை அவனேபரமமுத்தனென்றும், எம்முடையமதத்தின்கண் நின்றவன் மற்றொருசமயியுடன் நட்புற்றுக் கூடியிருந்தானே யாயினும் அவனேபதிதன், அவனே அதிபாதகனென்றும், பகவானது வாக்கியமாகிய வேதங்களும், வியாசரால் கூறப்பட்டுள்ள புராணங்களும் எம்முடைய மதத்தின்கண் புராதனரது வாக்கியமுமுண்டென்பாருமுளர். அஃதெத்தாலெனில், மேலுத்தரம். மற்றொரு சமயத்திற்கும் ஒருவன் வந்து கூடினும், நீங்கினும், அங்ஙனம் முத்தத்துவமும், பதிதத்துவமும் உண்டென்று வேதபுராண வாக்கியங்களும், அச்சமயபுராதன வாக்கியமும் இருத்தலின் அதுகூடாது. ஆயின் அச்சமயங்கட்குக் கூறிய வாக்கியங்கள் அயதார்த்தமோவெனின், அயதார்த்தமுமன்று. எதார்த்தமேயென்றால், அவ்வாக்கியங்களுக்குத் தாற்பரியம் ஏதெனில், ஒருசமயத்தின்கணின்றோன் அச்சமயமே உயர்ச்சியென்றும், மற்றையவைதாழ்வென்றும் மனசினிச்சயார்த்தம் பிறந்திருக்கவும், புகழ்பொருளாகிய முன்னிலையினான் மற்றொருசமயத்தை யடைந்தானே யாயின் அச்சமயத்திற் கூறியமுத்தியை யடையாது முன்புநின்ற சமயத்திற் கூறிய பதிதத்தன்மை அடைந்து நரகில்தாழ்குவன். இஃதன்றி முன்புநின்றுள சமயந்தாழ்வென்றும், பின்புசெல்லவேண்டிய சமயம் உயர்வென்றும் நிச்சயார்த்தம் பிறந்து சென்றானேயாயின், அச்சமயத்திற் கூறிய நன்கு அடைகுவதன்றி முன்புநின்றுள சமயத்திற் கூறிய பதிதத்தன்மை அடையான்) என்றுஞ் சமாதானங் கூறிமகிழ்வர்.

ஒவ்வொரு மதத்திலும் அந்தந்தமதமே சிறந்ததென்றும், மற்றயவை தாழ்ந்தனவென்றும், அவற்றையசார்பு பாவஹேதுவென்றும், அதனால், நரகவினைவென்றுங் கூறுவது புகழை முன்னிலையாக் கொண்டு அநுசரிப்பாரையேயென்று கண்டசமாதானம் சாலவழகுடைத்து. புகழைமுன்னிலையாக்கொண்டு சென்றால் வருந்தாழ்வென்னை ? பிரத்யட்சத்தில் ஒருவனுக்குப் புகழ்வருமானால் அதையேன் அவன் இழக்கவேண்டும் ? இப்போதுவரும் புகழையிழந்து பின்னரிவனடையப்போவதாகிய ஊதியம்யாதோ அவ்வளவு பெரிசாயுள்ளது ? என்று போராடி வாதிக்கும் நாஸ்திகசிரோமணிகளுக்கவர் சொல்லும் சமாதானம்யாது ? ஒவ்வொன்றும் வாதமுகத்தில் வெல்லக்கூடாத சமானமார்க்கமெனக்கொண்டவன்னோர், புகழைவிரும்

பிப் போதலேனன்று என்று தாபிக்கவெழுவார் சித்தாந்தமும் அவா திதமரய்க்காண்கையில் அவரைமறுத்து அப்படிப்போவதால் நரகமு ண்டென்று கூறுதல் யாண்டிசையும்? ஆகவே, அது தக்கசமாதான மன்று. உலகிலுள்ள மதங்களில் எந்தமதம் உயர்ந்ததோ அந்தமதத் தைவிட்டு மற்றைத்தாழ்ந்தவைகளில் செல்லுங்கால், அவன்விட்டு வந்த உயர்ந்தமதத்தி லடையத்தக்க பெரும்பயனையிழந்து பின்னா டையும் அற்பசமயங்களாலடையத்தக்க அற்பபயனையே யெய்துவா ருயினும், உயர்ந்த மதத்தைப்பழித்தபாவவினையால் நிரயத்துன்ப த்துக்காளாவனென்பதும் நிச்சயம். அதனால், அவ்வுயர்மதமெது வோ, அதில்அவ்வாறு சொல்லியிருக்கக்கூடும். மற்றைமதங்களில், அ ந்தநியாயஞ்சொல்லிக் கொள்ளவிடமில்லையாயினும், அவ்வவற்றிற்கு நேர்ந்தவவமானங்களைப் பரிகரித்துக்கொள்ளவே அவைகளுமவ்வா று கற்பித்துக்கொண்டனவாய்க் கொள்ளவரும். ஆகவே,உண்மையி லொருமதத்துக்கே அது பொருந்துமென்றும், பிறவற்றிற்குக் கௌ ரவ கற்பனுமாத்திரமென்றுஞ் சிலர்கூறுவர். அல்லதூஉம், சமயங்க ளில்முதல் இரண்டாவதுஎன்று தாரதம்யங்கொண்டு விளங்குகையா ல்முதல் சமயந்தம்மில் கீழிட்டவைகளையும், இரண்டாவது சமயந்த ம்மில் கீழிட்டவைகளையும், மூன்றாவது சமயந்தம்மில் கீழிட்டவை களையும், முறையே சொல்லிமறுத்தலும் பொருந்துமென்பாருமு ளர். மேற்போந்த விஷயத்தில் தத்தமக்கிசைந்தவாறே அபிப்பிராய பேதங்கூறுவார் இன்னும்பலருளர். ஆகவே, புகழ்விஷயமாய்ப்போ ந்த நியாயமீண்டு அவ்வளவு பெருநலமுடையதன்றாம். அபிப்பிரா யங்க ளநந்தபிராகாரமென்று காட்டியது கொண்டு, அவற்றுள் எம் மபிப்பிராயம்யாதெனின், மேற்கூறியவற்று ளொன்றுமன்றாம், மற் றென்னெனின், எல்லாச்சமயங்களிலும் அவ்வாறு கூறுவது உப காரமென்பதேயாம்.

எங்ஙனமெனின், சமயம்என்பது காலம்என்று விளங்கும். கா லம்என்பது பருவம்என்று அமையும். இதனால் சமயங்கள் என்பது பருவங்கள் என்றுவெளிப்படும். பூஜாசமயம், போஜனசமயம் என வும், பூஜாகாலம், போஜனகாலம் எனவும்வருமவழக்குண்மையால். அப்படியே நிஷ்டாசமயம், அநுஷ்டானசமயம், நிஷ்டாகாலம், அ நுஷ்டானகாலம் என்பனவுமமையும். இவைபொரே அர்த்தத்தை யன்றி வேறுபயவா. இவற்றுள், பூஜாசமயம்என்பது பூசைசெய்ய நேரிட்ட தடஸ்தம் என்றுபொருள்பட்டு அவனுடைய பருவத்தை

யே காட்டிற்று. மூன்றும்வயசு என்கையில் அது பருவத்தையேகா ட்டிக் காலத்தில் வேறுகாத காட்டிப்பட்டு விளங்கலால், பருவம், சம யம், காலம் என வொருபொருளைக்குறித்த பலசொல்லாய்முடிந்த ன. இதனால், சமயம் என்பது காலத்தில் வேறுபடாமல் பருவத்தை யே காட்டுவதொன்றும். சைவசமயி என்கையில் சிவனைவழிபடுஞ் சமயத்தையுடையவன் என்று காலநிகழ்ச்சியைக்காட்டி அவனு டைய பருவத்தையே விளக்கியதாயிற்று. இப்படியே விஷ்ணுவை வணங்குஞ்சமயம், பிரமனை வணங்குஞ்சமயம் என்றுகாலங்களைக் காட்டிப் பருவத்தையே வெளிப்படுத்துமாயிற்று. இதனால், சமயம் என்பது பருவமென்றே தீர்மானிக்கப்பட்டது. உலகாயதம், புத்த ம, சமணம், சாங்கியம், பாட்டம், பிரபாகரம், மாயாவாதம், பாஞ்ச ராத்திரம், சைவம்என்று பரிபாகவேற்றத்தைப் பயப்பனவாகிய மார் க்கங்கள், சமயங்கள் என்னும் பெயர்களால் பிரகாசித்தலால், உல காயதன் என்கையில் பூதமிச்சிரமத்தாலாகிய உகைமே பொருளெ ன்றுமதிக்கும் பருவத்தையுடையவனென்றும், பின்னர் பௌத்த ன் என்கையில், மேற்பருவங்கடந்து புத்தியேபொருளென்றுமதிக் கும் பருவத்தையுடையவன் என்றும், இப்படியே பருவங்களைக்க டந்துகொண்டு முறையே மேற்கூறிய வொவ்வொன்றிலு நின்று அ வ்வவற்றைப் பொருளெனமதிகருங்கால் அவ்வப்பருவங்களை யுடை யவனென்றும் அமையப்பெறுதல் சத்தியம். இப்படிப்பருவபேதப் பட்டுவருந் தன்மையாற்றுனே சமயங்கள் அதிகரித்தனவாயின. ச மயங்களநந்தமாகி, அவ்வச்சமயங்களிற்போந்த போகநுகர்சசியைப் பெற்றுவாழ்வான் சேதனனொருவனேயாகையால், அவன் ஒவ்வொ ருசமயங்களிலும் பிரவேசித்தே தீரவேண்டுமென்பது மொப்பமுடி ந்த நியாயமாக ஏர்ப்பட்டது இந்தக்கொள்கை வேதத்தைக் கைக் கொள்ளுஞ் சமயிகள்பலர்க்கு மொப்பமுடிந்ததொன்றும். இந்தவு ண்மையால், ஒவ்வொருசேதனனும் எல்லாச்சமய நுகர்ச்சியும் பெ றவேண்டிய சந்தர்ப்பங்களில், அவ்வச்சமயங்களில் அவன்பிரவேசி த்திருக்கிறபோது அவனுக்கு அதினுள்ளபோகத்தை யூட்டித்தொ லைப்பிக்கு நிமித்தம் அதுவேயுயர்ந்ததென்றும், மற்றையவை அதிற் றாழ்ந்தன வென்றும் வற்புறுத்திக் கூறுமுண்மை யுபகாரமாதல்வெ ளிப்பட்டது. ஒருவன் ஒரு அற்பமதத்தில் அவனற்பபரிபாகத்துக் கேற்பச் சேர்ந்திருக்கையில்; அவனம்மதத்திற்போந்த போகத்தைக் காட்டினு முசிதபோகத்துக் கனதிகாரியாகுமுண்மையால், அவனை

நோக்கி அவனுடைய மதம்தானே யுயர்ந்த மதமென்றும், தன்னைக்காட்டிலு முயர்ந்தனவல்ல மற்றைமதங்களென்றும், தன்னினீங்கிப்போனால் நரகமுண்டென்றுங்கூறும். அவன் பரிபாகத்துக்கேற்பத் தான் பிரகாசிப்ப தொன்றுகையால். அவனைநோக்கித் தனக்குமேலிட்ட சமயங்களுண்டென்றுவது, தனக்குச்சமான மார்க்கங்களுண்டென்றுவது போதிக்குமேல் அவனுக்கு அத்ததியிற் பற்றுகோடாயுள்ள அதனிடத்தி லருசியுண்டாகி, அதையவனப்போது வெறுத்து மேலிட்டதை நாடமுயலுவானுகையால், அப்படிநாடுவதற்கு அவனுக்குப்புண்ணியம் போதாமையால், அவன்தன்னிடத்திருந்தே தன்னுலாய வற்பபிரயோசனத்தையே நுகருந்தன்மை யுடையனுகையால், தன்னைவிட்டுப் போகாதவழிக்கே கடிந்து வேண்டியயுத்தி யநுபவங்களைக்காட்டி அவனைத்தன்வசப்படுத்தி அவனுடையகாட்சியில் தானேயாவற்றினு மேலாயிருப்பதொரு மார்க்கமாப் புலப்படாநிற்கும்.

அப்படியே, ஒருவன் உயர்ந்தமதத்தில் அவனுடைய வுத்தமரிபாகத்துக்கேற்பச் சேர்ந்திருக்கையில் அவனம்மதத்திற்போந்த சிதபோகமேயன்றி அற்பபோகங்களை நுகரும் வினையின்மையால் அவனை நோக்கி அவனுடையமதம், தானேயுயர்ந்ததென்றும், தன்னைக்காட்டிலும் உயர்ந்தனவல்ல மற்றைமதங்களென்றும், தன்னைநீங்கிப போனால் நரகமுண்டென்றுங் கூறியதெல்லாம் அவன்பரிபாகத்துக்கேற்பத் தான்பிரகாசிப்ப தொன்றுகையால், அவனைநோக்கித் தனக்குமேலிட்ட சமயங்களுண்டென்று ஏன்சொல்லு? உண்மையில், அதுவே சர்வோத்தம மார்க்கமாகையால். சாமான்யமார்க்கங்களே தாந்தாமும் சமானமற்ற வுசிதமார்க்கங்களென் போதிக்குமேல் உத்கர்ஷமார்க்கம் தன்னுண்மையை யுறைப்பித்து அதிசயமன்றும். இந்த நியாயங்களால், மேலிட்ட மார்க்கங்களும, கீழிட்டமார்க்கங்களும் தனித்தனித்தாமே யாவற்றுள்ளுஞ் சிறந்தனவென்று போதிக்கும் புதுநலமீதென வெளிப்பட்டமையால், அப்படி அம்மதங்களோவ்வொன்றுங் கூறுவதுகொண்டே யாவும் சமமரியாதையினவென்றும், அதனுல் ஒன்றைவிட்டொன்றிற்போனால் குற்றமில்லையென்றுங் கூறுவது பெருங்குற்றமாய்முடிகது. ஒருமதத்தைவிட்டு ஒருமதத்திற்போகுங்கால் அவனுடைய கட்டவினையே காரணமாக வுயர்ந்தமதத்தைவிட்டுத் தாழ்ந்தமதத்திலும், நல்வினையே காரணமாகத் தாழ்ந்தமதத்தைவிட்டு உயர்ந்

தமதத்திலும் பிரவேசித்ததாகவே பதிஞான நூல்களில் வல்லவர்க
ளாகிய சத்துக்கள் துணிந்துரையாநிற்பர்.

இனி, (ஒருசமயத்தைவிட்டு ஒருசமயத்தை யடைந்தோனுக்
குந் துணிவுடைமையான் இங்ஙனமாதலின், எல்லாச்சமயத்திலுண்
மைகளும் அறிந்து அவற்றினுக்கெல்லாம் மேலாகிய ஒரு சந்மார்க்
கத்தை யடைந்துள்ளவராதலின் ஞானிகளாயினோர்க்கு உலகாசார
குலாசார சமயாசாரங்களுமில்லை, அன்னோர் சர்வசங்கற்பமுமொரு
ங்கே இறந்துடையாராதலின்) என்றுகூறி, அதனைவலியுறுத்துமாறு
(உலகுயரியவென் றோதிருமூன்று, ஐந்தையுநீங்கி யிந்தநன்னெறியூ, டேற்
றோர்பவ மற்றோரிஃதொரீஇப், பிறிதொருநெறிசார் பேதையெஞ்ஞான்று,
மூய்குவதிலையெனச் சைவமாதி, யறுவிதசமயத் தவருந்தனித்தனி, சுருதிபு
ராணந் தொல்லோர் நல்லுரை, காட்டிப்புவிப்பாலூட்டியவதனால், நின்றவோ
ர்நிலைவிட் டொன்றை யீண்டடைந்தோன், றன்னெஞ்சிடையே தான்முதனி
ன்ற, வந்நிலைபெரிதன் றறிந்துமஞ்சாது, குறுகின்மண்ணுதி குறித்தொருநெ
றியை, யடைகுவனிரையத் தஃதன்றிச், சென்னெறிபெரிதெனத் தேர்ந்து
கொடேகி, னஃநெறிக்குளபேறவனுமெய்துதலான், மூவிருசமயமுடிவை
யு முணர்ந்திட், டேறியஞானி சிலுகிவையெனக்கண், டச்சமயச்சார் பனைத்
தையு, மிச்சகத்திடை நீத்திடிலெவன்பழியே) என்னுமொருபாட்டையும்
பிரமாணமாக வுதகரியாநிற்பர். இதைப்பரியாலோசிப்பாம். மேலிட
ங்களில் எல்லாச்சமயங்களும் சமநிலையினிற்கும் பெருநலமுடைய
ஞானமார்க்கங்களென்று கூறியதற்குமாறாய், அவற்றினுண்மைகளை
யறிந்து அவற்றினுக்கெல்லாம் மேலாகிய ஒருசந்மார்க்கத்தை யடை
ந்துள்ள ஞானிகள் என்று ஈண்டு கூறியதுதவறும். அவற்றைக்கட
ந்தசந்மார்க்கமுடையவரே ஞானிகளென்னுங்கால், அவைகளுக்கு
வேறாக ஞானமார்க்கமென்றொன்று நிலைப்பதாய்வெளிப்பட்டு முன்
னவற்றை அஞ்ஞானமார்க்கங்களென்பதாகிய குற்றமும், நவீனஞா
னமார்க்கமென் றொன்றைக் கற்பிப்பதாகிய குற்றமும்பெறப்பட்டு
அஞ்ஞானக்குழப்ப மேலிட்ட போதமாகக் கொள்ளவரும். இல்லை
யேல், எல்லாச்சமயங்களும் ஞானமார்க்கங்களே யெனவும், அவ்வ
ச்சமயங்களிற்போந்த ஞானத்தையடைவது பூரணவிவேகிகட்கே சா
த்தியமாகையால், அப்படி யடைந்தபேர்களா யுள்ளவர்கள், அடை
ந்தபிறகு அவரவரு மவ்வச்சமயங்களில் சாதகதிசையில் அநுட்டி
த்துவந்த வவ்வவற்றின் சார்வாயவெல்லா வாசாரங்களையும் நழுவ
விடுவாரெனவும், அங்ஙனமாவதுகொண்டு, மேலாகிய சந்மார்க்கமெ
ன்பது அப்படி யாவரும் சேருமந்தநிலையேயெனவுங் கூறவேண்டி

வரும். அப்படியாயின் அச்சமயங்கள் ஒன்றையொன்று விரோதித்திருப்பது பிழையாம். வேதம், சிவாகமம் என்னுமிரண்டுமே துல்யப்பிரமாணமென்றதும் பிழையாம். பௌத்தசார்வாகாதிக ளிழிந்தனவாகக் கூறுவதும் பிழையாம். முடிவில் ஞானத்தைப் பயப்பனவாய், ஒன்றிலொன்று வேறுபட்டனவாய், அளவில் சமயங்களிருப்பனபோல், முடிவில் மோட்சத்தையளிப்பவராய், ஒருவரிலொருவர் வேறுபட்டவராய், அளவிறந்த கடவுளருண்டாதலும் அவசியமாம். ஒருகடவுளிருப்பதைக்காட்டிலும், பலரிருப்பரேல் அதிக வுபகாரமாகுமாகையால். அப்படியுண்டாமிடத்துத் தோஷமொன்றுங் காணக்கூடாமையால். இன்னவாபாசத்தை விரிக்கத்தானோ மேலபசித்தாந்தம் தலைநீட்டியது அதிசயம்! அதிசயம்!! இன்னும், எல்லாச்சமயங்களையுங்கடந்தபேர் ஞானிகளென்பதை யாவரங்கீகரிப்பவர்? பாஞ்சராத்திரி அங்கீகரிப்பனோ? சமணன் அங்கீகரிப்பனோ? அவனவனுந் தத்தம்மதமே ஞானமென்பதுபோல் அவற்றைவிடுப்பதே ஞானமென்பதுமொன்றாகி அவற்றோ டொருசேரக் கழியுமாகையால், அங்ஙனங் கூறியதுகொண்டோ ருசிதமுமின்றாம். உலகாசார குலாசார சமயாசாரங்களை விடுப்பது அந்தந்தமதத்திலுங் கூறும் பரமதருமங்களேயாம். அவற்றைவிட்டதனாலேயே அவர்களவற்றை யொழித்தவரென்று கூறுதல்யாண்டமையும்? ஒவ்வொருமதத்திலும் பொய்முதலியன வொழிக்கற்பாலனவென்று கூறுவது நிச்சயமாதல்கொண்டு அவ்வொழிவானேயாவுஞ் சமமாய்விடுமா? அப்படியே அவ்வம்மதத்திற்போந்த ஞானமுதிர்ச்சியில் முன்னிழுக்காசாரங்களொழியுமேயன்றி அங்ஙனமொவ்வொன்றினு முடிந்தபொருளாய்ப் பற்றுக்கோடாய ஞானமுமொன்றாதல் யாண்டிசையும்? காலத்திரயத்தும் பொருந்தாதெனவறிக.

இன்னதுல்ய விசாரத்தால் சகலசமயங்களினுடைய தன்மையும், அவற்றை யதிக்கிரமித்து விளங்குஞ் சித்தாந்த வுண்மையும் வெளிப்பட்டமையால், நம்மாசாரியமூர்த்திகளாகிய ஞானசம்பந்தாதி பிரபுருதிகள் சித்தாந்தமென்னும் ரூடிநாமத்தையுடைய சைவத்தை நாட்டினாரென்னு நலம் நன்கு கொள்ளப்பட்டது.

இனி, இவ்வாசாரியர்கள் ஷை சித்தாந்தத்தை நாட்டினமையைநோக்கின், காட்சியொன்றினானே மற்றையிரண்டுக்கு மொப்ப முடித்துக் காட்டினாரென்பது அமையும். இவ்வுண்மை, அன்னோர் திவ்ய சரித்திரவைபவங்களால் வெளிப்படுமாகையால், அவற்றை முறையே விதந்துரைப்பாம்.

## திருஞாநசம்பந்தசுவாமிகள

# பிரபாவம்.

பிரமபுரம், வேணுபுரம், புகலி, வெங்குரு என்பனவாதி பன்னிரண்டு திருநாமங்களையுடைய சீகாழிப்பதியின்கண் பிராமண குலதீபமா யெழுந்தருளியிருந்த சிவபாதவிருதயர் என்னும் முனிபுங்கவர் தோணியப்பராராகிய சிவபெருமானைநோக்கித் தவங்கிடந்து சமணவிருளைத்துரத்து ஞாநமணியாகிய வோர்புதல்வரைத் தமக்குத்தரும்படி வருந்தினர். அப்படியே, சிவபெருமான்மகிழ்ந்து தமது திருக்குமாரராகிய குமாரக்கடவுளை அவருக்குப்புத்திரராகத் தந்தருளினர். அங்ஙனம் அவதரித்தருளிய பிள்ளையார் தமது மூன்றாம்வயதில் பிதாவாகிய சிவபாதவிருதயர் ஸ்நாநார்த்தமாகத் தீர்த்தக்கரைக்குச் செல்லுகையில் அவருடன்சென்று அங்கிருந்தனர். குழந்தையைப் படிக்கரையிலிருத்திச் சிவபாதவிருதயர் தீர்த்தத்துக்குண்மூழ்கி அகமர்ஷணமந்திரம் செபித்துக்கொண்டிருக்கையில் எம்மையாளவெழுந்த புத்திரரத்நமாயுள்ளவர் தம் பிதாவைக்காணுமல் வருந்துவதொத்துச் சிவபெருமானை நினைந்து பிரிவாற்றாமையால் தோணியப்பாருடைய சிகரத்தைப்பார்த்து அம்மே! அப்பா! என்று கண்களில் நீர்ததும்ப அழத்தொடங்கினர். அவ்வழுகையைக்கேட்டு உள்ளம் பொறாதவர்களாகிய பெருமானும், பிராட்டியும் விரைந்து நந்திபிரான்மேற்கொண்டு அங்கெழுந்தருளினர். அப்போது உமாதேவியாரைப்பார்த்து நின்மகனை யழுகைதவிரும்படி யெடுத்து நின்றுணைமுலைகளில் சுரந்தொழுகும்பாலைப் பொன்வள்ளத்திற்கறந்தூட்டுகவென்று சுவாமி சொல்லுவதன்முன்னர் அம்மை விரைந்து சென்று நீண்டநாள்பிரிந்த வாராமைமேலிடத் தமது அருமைத்திருக்கரங்களால் நம்பெருவாழ்வை யெடுத்து மார்போடிறுகத் தழுவித் திருமேனியிற் படிந்திருந்த புழுதியைமாற்றிக் கண்களில்பெருகிய நீரைத்தமது முன்றானையாற்றுடைத்து மடிமீதிருத்தி, உச்சிமோந்து முத்தமிட்டு மகிழ்ந்து தமது திருமுலைப்பாலைப் பொற்கிண்ணத்திற்கறந்து, அத்துடன் ஞானமாகிய அமுதமுங்கலந்து உண்ணென்றுஊட்டுதலும், நம்பெருஞ்செல்வமாயுள்ளவர் உண்டருளி அழுகைதவிர்ந்து சிவஞானசம்பந்தராகி யெழுந்தருளினர். பின்னர், பிராட்டியாருடைய மடிமீதிருந்தவர் தாவிப் பெருமானுடைய மடித்

ஜலத்திலேறி அவருள்ளமகிழ விளையாடுகையில், அவ்விருவருங் ...டுகளித்து அளவில்லாத வாநந்தமெய்தினர்.

## சூசனை.

சிவபாதவிருதயர்தமக்கு ஓர்புத்திரரைமாத்திரமேயுடைய வேண்டினரேயன்றிக் குமாரக்கடவுளைத் தரும்படி விரும்பினாரில்லை. அங்ஙனமாக, சிவபெருமான் தமது இளையபிள்ளையாரை அவர்க்குத் தந்ததென்னை ? எனின், சிவபாதவிருதயர் கருத்தெல்லாம் சமணந்தொலைய வேண்டியதேயாக, அது தம்புதல்வரைக்கொண்டே செய்யவிரும்பியதென்னை ? தமக்காவது, அல்லது வேறு எந்தசிவஞானிக்காவது, அவ்வாற்றல் தரும்படி யேன்சிவபெருமானையிரந்து பெற்றுக்கொண்டிலர் ? தம்மாலாவது, பிறராலாவது அது செய்துமுடித்தல், தம்புதல்வரால் அது முடியுங்காலுண்டாகு மவ்வளவு இன்பத்தைப் பயவாமைகண்டெனவறிக. (மக்கண்மெய்திண்டலுடற்கின்பமற்றவர், சொற்கேட்டலின்பஞ்செவிக்கு) எனவும், (குழலினிதியாழினி தென்பர்தம்மக்கள், மழலைச்சொற்கேளாதவர்) எனவும், வரும் வாக்கியங்களாற்கண்டறிக. அப்படியே, சிவபெருமானுந்தமது புத்திரரால் அவ்வின்பத்தை நுகர்தற்பொருட்டே சிவபாதவிருதயர் வேண்டுகோளுக்கும் விரோதமின்றித் தமது புத்திரரைத் தந்தருளிய தெனவறிக. இளையபிள்ளையார் ஆநந்தவடிவராதலும், ஸ்ரீசிவபெருமான் அவ்வாநந்த முடையராதலும் உண்மைநூல்களிற் காண்க. இங்கேபெற்றநயும் பரிபாகமுடைய மெய்யன்பருக்கேயன்றி யேனையோர்க்கு எட்டாது ! எட்டாது !!

இனி, குமாரக்கடவுள் சிவபாதவிருதயர் புத்திரராகப் பகவதியார்மணிவயிற்றிற் பிறந்தமை யென்னை ? அவர் மலமில்லாதவராகவெனின். அவரங்ஙனம் பிறந்ததுகொண்டே மலமுடைமைசாராது. எங்ஙனமெனின், "இந்திரசாலவிச்சைகாட்டுவானென்னத்தன்பாற், செந்தழலுட்டமீன்ற செல்வனைக்கருப்பமெய்தா, தந்தமிலுயிருலமனைத்தையுமீன்றதாயாஞ், சுந்தரவல்லி தன்பாற்றோன்றுமாறுள்ளஞ் செய்தான்" என்னுந் திருவிளையாடற் பிரமாணத்தை நோக்குழி மேலுண்மை விளங்குமென்க. இது சோமசுந்தரபாண்டியன் சேயாகிய உக்கிரபாண்டியன் அவதாரத்தைக்காட்டுவதொன்றும். உக்கிரபாண்டியனாகவந்தவர் இளையபிள்ளையாராகிய சிவசுப்பிரமணியக் கடவுளென்பது மேற்றிருவிருத்தத்திற்போந்த (செந்தழலுட்டமீன்ற செல்வனைக்கருப்பமெய்தாது) என்பதனானே விளங்கும். இந்த வவதாரவர்ணனையில் நம்பெரு

வாழ்வாகிய இளையபிள்ளையார் மாதாவுதரத்திற்றங்கிப் [illegible] யோனி வாய்ப் பட்டுப்பிறந்தும் வெளிப்பட்டாரென்பது பெறப்படாமல், எல்லாந் தோற்றன்மாத்திரமாகவே நிர்ணயிக்கப்பட்டமையால்; அவருடைய அவதாரம் அயோநிஜமாகவே நிர்மலத்வம் பெற்றமைகாண்க. அவர் மாதாவுதரத்திற்றங்கிப் பிறவாதபோது அம்மையாருக்குக் கர்ப்பக்குறி முதலாயினவரக் காரணமென்னையெனின், அவரை வேண்டியிரந்தாருள்ளங் களிகூரற் பொருட்டே அவரங்ஙனந் தோற்றங் காட்டியதென்க, "அன்னவன் வரவுக்கேற்பவாயமும் பிறருந்தாழ்ந்து, மங்கையின் வடிவுக்கேற்பக்கருவுருவனப்புஞ்சீருந், திங்கடோறுற்றுமன்றற் செவ்வியுங்காணவாசை, பொங்கிய தெங்கட்கென்றூர் புனிதையப்படிபோலானுள்" என்னும் பிரமாணத்தால் மேலுண்மை விளங்குமென்க. இவ்வுண்மையறிந்தபேர் இளையபிள்ளையார் ஞானசம்பந்தராகப் பகவதியார மணிவயிற்றிற் பிறந்தாரென்பதில் மயங்கார்! மயங்கார்!! எனவே பகவதியார்க்குந் தடாதகைப்பிராட்டியாருக் குண்டாயிருந்தபடியே தோற்றன்மாத்திரமாகக் கர்ப்பக்குறியாவு முண்டாயிருந்ததெனவும், அவருதரத்திற் றங்கியிருந்து நங்குருநாதனாகிய ஞானசம்பந்தன் பிறந்திலனெனவும், அவனவதாரம் அயோநிஜமாகவே நிர்மலத்வம் பெற்றதுண்மையெனவும், பகவதியார்க்குண்டாகிய கர்ப்பக்குறிமுதலாயினயாவும் அவ்வம்மையார்க்கும், சிவபாதவிருதயர்க்கு முண்டாயிருந்த புத்திராபேக்ஷை நிவிர்த்தியர்த்தமெனவுங் கிரகிப்பாரென்பது வெளிப்படை. "பெருத்தெழுமன்பாற் புகலிநாச்சியாருடன்புகலித் திருத்தோணி வீற்றிருந்தார் சேவடிக்கீழ்வழிபட்டுக், கருத்து முடிந்திடப்பரவுங்காதலியார்மணிவயிற்றில், உருத்தெரிய வரும்பெரும்பேறுலகுய்யவுளதாக' என்னும் பெரியபுராணச் செய்யுளால் பகவதியார்க்குக்கர்ப்பக்குறி புண்டாயினமை பெறப்பட்டது. இதில் (கருத்து முடிந்திட) என்றமையால் அங்ஙனஞ்சூலுண்டானமை அவரிச்சைவழியென்று பெறப்பட்டது. அங்ஙனம் பெறப்பட்டபோது, அவர்மணிவயிற்றினின்றே நம்ஞானசம்பந்தர் பிறந்தனரோவெனின், "மணிவயிற்றிலுருத்தெரிபவரும்பெரும்பேறுலகுய்யவுளதாக" என்றுகூறிமுடித்து, அதன்றொடர்பாய்(ரு)பாடல்களால் அவரவதாரத்தாலுண்டாகும் விசேஷங்களை வர்ணித்து "அவம்பெருக்கும் புல்லறிவினமண்முதலாம்பரசமயப், பவம்பெருக்கும்புரைநெறிகள்பாழ்பட நல்லூழிதொறுந், தவம்பெருக்குஞ்சண்பையிலே தாவில்சராசரங்களெல்லாஞ், சிவம்பெருக்கும்பிள்ளையார் திருவவதாரஞ்செய்தார்" என்னுஞ்செய்யுளால் மேற்கருத்தரித்திருக்கும் அம்மையார் சம்பந்தங்காட்டாமலே "சண்பையிலேசிவம் பெருக்கும்பிள்ளையார் திருவ

வதாரஞ்செய்தார்" என்று உண்மையை விளக்கினமையால், அவரிடம் பிறவாமல் சண்பையின்கண் அயோநிஜராக நமதுபிரபுவாகிய ஞான சம்பந்தர் குமாரஸ்வாமி அவதாரமாகவே வெளிப்பட்டனரெனவறிக.—இதனால், அவர் மாதாவுதரத்திற் றங்கியிருந்தா ரென்றாவது, யோனிவாய்ப்பட்டுப் பிறந்தாரென்றாவது, அதனால் மலமுடைமை பெறப்பட்டதென்றாவது, அல்லது ஞானசம்பந்தர் குமாரக்கடவுளல்லவென்றாவது கற்றறிந்தமேலோர் கருதவுஞ் செய்யாரெனவறிக.

ஆயின், திருவிளையாடற்புராணத்தில் "செந்தழுனுட்டமீன்ற செல்வனே" என்றுவந்ததுபோல் பெரிய புராணத்தில் வராததென்னை? எனின், ஞானசம்பந்தசுவாமிகள் புராணமடங்கலும் இடம்பெற்றுழியெல்லாம் விதந்திருத்தல் காண்க. அங்ஙனம் விதந்தமை அவதார சந்தர்ப்பததில் காணாததென்னையெனின், உக்கிரபாண்டியர் குமாரஸ்வாமியின் பூர்ணாவதாரமும்,ஞானசம்பந்தர் குமாரஸ்வாமியின் அம்சாவதாரமுமாதல் கொண்டறிக. "மத்பக்த ஸ்தேத்ய ஸம்பந்தோ குஹாம்சோ பக்திமான் சுதீः" என்னும் சநற்குமாரசம்ஹிதா வசனத்தால் ஞானசம்பந்தர் அம்சாவதாரமாதல் வெளிப்படை. அம்சாவதாரமாகையால் ஞானசம்பந்தர் பகவதியார் மணிவயிற்றிலேதானே பிறந்தாராகக் கொள்வாமெனின், அமிசத்தினாலும் யோனிவாய்ப்படுதல் பெருங்குற்றமென்க:"ஏகாந்தவாப்ய ஸுகரந் ததுதாஹராமோ ஜாதோநபாவ்ய மமராந்தர வத்வயாபி, அப்யர்த்திதோபிஹி மஹேச மஹர்ஷிதாரை ரந்தர்ஹிதஸ்த்வமசி கர்ஹித கர்ப்பவாசः" என்றுபெறப்பட்டஹரதத்தாசாரியசுவாமிகள் திருவாக்கால், சர்வேசுவரராகிய தேவரீருக்கு மொருகாரியம் துஷ்கரமாம். அது இதரதேவதைகளைப்போல் ஜனித்தால் கர்ப்பத்திலிருந்து வெளிப்படும்படியாக வருமென்று அத்திரிபத்தினியாகிய அநுசூயையால் பிரார்த்திக்கப்பட்டவரா யிருந்தபோதினும், கர்ப்பவாசம் நிந்திதமென்று அந்தர்ஹிதரானீர் என்பதாம் என்று வெளிப்பட்டது. இந்தவாக்கியத்தாற் பெறப்பட்ட அவதாரம் துர்வாசமூர்த்தியினதாகையால், அதனை நன்குவிளக்கும் சநற்குமாரசம்ஹிதாவசனம் வருமாறு. "புராத்ரோபி யத்பத்ந்யா வராதேவா பவத்ஸுத:, ஸ்வல்பாம்சே நாபிகர்ப்பஸ்ய துர்வாஸத்வ முதாஹரந், அஸௌதேவ: க்ரமாத்புத்ர காரணாத் ஸ்நாதயாதயா, ஸபுஷ்பாஞ்சலிநாபூதோ விஸஸர்ஜாம்ஸகம் ஸ்வகம், அந்தராஞ்சலிபுஷ்பேஷு ப்ரவிஸ்யாந்த: பிநாகிநா, கர்ப்பாவாஸௌஹி துர்வாசாஸ் ஸர்வாவாஸேஷ்வ தீவயத், துர்வாஸாநாம புத்ரோபூத் தஸ்

பா:புஷ்பாஞ்சலேஸ்ஸிஸ-ய:, தஸ்மாத்பசுபதேரம்யுத் யத்கிம்சிஜ்ஜகதீரிதம், ஸர்வேதேபசவ:ப்ரோக்தா வசீபசுபதிஸ்ம்ருத:, மாயாபாஸேநபத்நாதி பசூநேதாந் ஸ்வலீலயா, தமேவமோசகம்ப்ராஹு-ய: பசூநாம் ப்ரஹ்மவாதிந:, மாயாபாஸேந பத்தாநாம் மோசகோந்யோநவித்யதே, தம்ருதேபரமாத்மாநம் பூதாதிபதிமீஸ்வரம்'' என்றுபெறப்பட்ட வாக்கியங்களால் அத்திரிபகவான் சிவபெருமானைத் தனக்குப்புத்திரராக அவதரிக்கும்படி வேண்டியும், அவருடைய பத்தினியாகிய அநசூயையிடத்தும் ஸ்வல்பாம்சமுங் கர்ப்பப்பிரவேசமாதல் நிந்திதமென்று சொல்லிக்கொண்டு புத்திரார்த்தமாக ஸ்நானஞ்செய்த அநசூயையினுடைய புஷ்பாஞ்சலியில் பரமேசுவரன் தன்னுடைய அமிசத்தைப் பிரவேசிக்கச்செய்தார். கர்ப்பத்தில் வசித்தல் சர்வவாசங்களினுந் துர்வாசமென்று சொல்லிக்கொண்டு புஷ்பங்களோடுகூடிய ஜலித்தகை யினின்றுஞ் சிசுவாக ஆவிர்ப்பவித்த காரணத்தாலேயே துர்வாஸரென்னு நாமத்தோடு விளங்கினர். ஆகையால், பசுபதியைக்காட்டிலும் இதரமான சகல பிராணிகளும் பசுக்களென்று சொல்லப்படுவர். அந்தப்பசுக்களைத் தனதுலீலையால் மாயாபாசத்தாற்கட்டவும், விடவும் ஸ்வதந்திரராகையால் பிரஹ்மவாதிகள் அவரைப் பசுபதியென்று பிரசித்தி பாராட்டாநின்றனர். பூதாதிபதியும், பரமாத்மாவுமாகிய சிவபெருமானைக் காட்டிலும் மாயாபாசத்தாற் கட்டுண்டு கிடக்கும்பசுக்களை விடுவித்தற்குச் சக்தா ளந்யத்ரா கிடையவேகிடையாது என்று வெளிப்பட்டமையால், சிவபெருமான் அம்சமாத்திரத்தானுங் கர்ப்பப்பிரவேசஞ்செய்யாரென்பது நாட்டப்பட்டது. இந்தவுண்மை விசாரத்தால் சுப்பிரமணியக்கடவுள் அமிசத்தினுற் கர்ப்பப்பிரவேசராதல் கூடுமென்னு மாசங்கை பரிஷ்கரிக்கப்பட்டமையால், குமாரஸ்வாமி அவதாரமாகிய ஞாநசம்பந்தமூர்த்திகள் அம்சாவதாரமாதல்கொண்டு கர்ப்பவாசமாகலாமென் றையுறுவார்கோ ளிரிந்தகன்றமைகாண்க. இக்கவிசாரத்தால் குமாரஸ்வாமியினுடைய அபராவதாரமாகிய ஞாநசம்பந்தப்பிரபுவினுடைய மாஹாத்மியம் பிரவசனஞ் செய்யப்பட்டது.

இனி, ஞாநசம்பந்தரவதாரம் குமாரஸ்வாமி லீலையென்பதைப் பெரியபுராணத்தானும் நிரூபிப்பாம். திருஞாநசம்பந்தசுவாமிகள் புராணம் (௩௪) வது பாட்டில் "சேவலாண்டகொடியர்வர்தஞ் சிரபுரத்துச்சிறுவர்க்கு, மூவாண்டிலுலகுய்யநிகழ்ந்ததனை மொழிகின்றேன்" என்று பெறப்பட்டமையால், ஞாநசம்பந்தப் பிரபுவைச் சிவகுமாரரெனக் கண்

டோக்தியாய்க் கூறினமைவெளிப்பட்டது. (௫௫) வது பாடலில்
"பண்டுதிருவடிமறவாப் பான்மையோர்தமைப்பரமர், மண்டுதவமறைக்குலத்
தோர் வழிபாட்டினளித்தருள" என்று பெறப்பட்டமையால், அச்சிவ
குமாரராகிய இளையபிள்ளையார் பூர்வசொரூபவுணர்ச்சி மாறாதவரா
கவே யிருந்தனரெனவும், அவரைச் சிவபாதவிருதயர் தவத்தின் ப
யனாகக் கொடுக்கப்பட்டதெனவும் வெளிப்பட்டது. ௬௰பாடலில்,
"தொடர்ந்தபிரிவுணர் வொருகாற்கொண்டெழலும்" என்றும், "அழுவர் கு
றிப்பயலாய்" என்றும் (௬௩)வது பாடலில் "தம்மேலைச்சார்புணர்ந்தோ
சாரும்பிள்ளைமைதானே" என்றும் "திருத்தோணிச்சிகரம்பார்த்தம்மேயப்
பாவென்றழைத்தருளி யழுதருள" என்றும் வந்தபிரயோகங்களால் தா
ம் இளையபிள்ளையாரென்னு முணர்வினராகி யெழுந்தருளியிருக்கை
யினும், தமது தந்தையாரைப்பிரிந்த வாராமையால், அப்பிரிவாற்று
மைகொண்டு அதுகுறிப்புத்தோன்ற அழுவரெனவும், அப்படி அ
ழத்தொடங்கியது மேலைச்சார்பாகிய தமதுண்மையைக் கண்டென
வும் அங்ஙனங் கண்டருளியது தாம் சிவனார்க்குப் பிள்ளையென்னு
முண்மையை யெனவும், அவ்வுண்மைநிலயத்தால் தமது பிதாவாகிய
சிவபெருமானை [illegible] திருத்தோணிச் சிகரத்தைப்பா
ர்த்து அம்மே! அப்பா! என்றழுதருளினரெனவும் இனிது வெளிப்
பட்டது. அவரழுததற்கேற்ப அம்மையும், அப்பனுமாயுள்ள பிராட்
டியும், பெருமானும் பொய்கையின்கண்வந்து அவரழுகை தவிரு
ம்படித் திருமுலைப்பாலை யூட்டினரென்னு முண்மைதோன்ற (௧௦௦)
வது பாடலில் "கழுமலத்துவீற்றிருந்ததங்க, டாதையாரையும் வெளியே
தாஙகரியமெய்ஞ்ஞானந்தம்பால்வந்து, போதமுலை சுரந்தளித்த புண்ணியத்
தாயாரையுமுன் வணங்கிப்போற்றி" என்று கூறப்பட்டது. இன்னும்,
(௧௫௪) வது பாடலில், "பொஙகுகொங்கையிற்கறந்த மெய்ஞ்ஞாநமாம்
போனகம்பொற்குன்ற, மஙகைசெஙகையாலூட்டவுண்டருளியமதலை" என்
று வந்ததில் உமாதேவியின் றிணைமுலைகளில் சுரக்கும் பாலமுதம்ப
யன்பெற வுண்டருளும் அத்தேவியின் சுதரென்பது வெளிப்பட்ட
து. இவ்வுண்மை யினிதுதோன்ற, (௧௮௭) வது பாடலில் "தாதையா
ரும் பரிவுறசசம்பந்தர், பாததாமரை நொந்தனைப்பய"எனவும், (௧௯௦)
வது பாடலில், "செஞ்சடைத்,தந்தையார்கழ ருழ்ந்தெழுந்தேகினர்" எனவு
ம், (௩௧௪) வது பாடலில், "வானநாயகர்மகனார்வருமுன்பு" எனவும்,
(௫௪௦)வது பாடலில் "இறைவர்திருமைந்தர்தமையெதிர்கொள்வரவேற்று
ர்" எனவும், (௬௧௭) வது, பாடலில், "பரமெரித்தார்திருமகனா ரப்பரிந்
தப்புனனூட்டிலெழுந்தருளி யிருப்பீரென்று, கரகமலங்குவித்திறைஞ்சித்தவிர்
ப்பவாக்கின்காவலருந்தொழுதரிதாங்கருத்தினேர்வார்" எனவும், (௧௦௭௫)

வதுபாடலில் "ஆறுசூடினர்திருமகனாரணைந்தாரென்று" எனவும் வருந் திருவாக்குகளை மேலோர் சிந்திப்பரென்க.

இப்படியே,௧௩௨,௧௩௪,௩௧௮,௧௪௧,௧௪௩,௧௫௨, ௨௩௪, ௨௪௪, ௩௧௫,௩௨௮,௩௩௩, ௩௩௪, ௩௬௨,௪௪௬,முதலியவநேகம் பாடல்களில் பிள்ளையார், பிள்ளையார் என்னும் பிரயோகம் வந்தமையாலும் மேலுண்மை வெளிப்படுமென்க. பிள்ளையாரென்னு முரிமைப்பெயர் சிவகுமாரருக்கன்றியேனையர்பால் சாராதெனவறிக. பிள்ளையார்கோயில் பிள்ளையார்சதுர்த்தி என்றற்றொடக்கத்துப்பிரயோகங்கள் சிவகுமாரராகிய விநாயகக்கடவுளை வெளிப்படுத்துகின்றது. அவர் மூத்தபிள்ளையாராக, இளையபிள்ளையார் குமாரக்கடவுளென்பது சொல்லாமேயமையும். இவ்விரண்டு பிள்ளைகளையன்றித்தந்தைதாளைத்தடிந்து தமது தாளைச்சேர்ந்த தண்டியடிகளுக்கும் பிள்ளையென்னுமுரிமையைச் சிவபிரான்றந்தமையால் அவரைச் சேய்ஞலூர்ப் பிள்ளையென்று உண்மைநூல்கள் விதந்துரைக்கும். சிவாலயங்களில் பஞ்சமூர்த்தங்களென்றது மிவர்சேர்ந்தெனவறிக. மூன்றுபிள்ளைகளும், அன்னோர்க்குத் தாயுந்தந்தையுமாகிய பேருமாக ஐவர்மூர்த்திகளாதல்காண்க. தண்டியடிகளைக் கூறுங்கால் பிள்ளையாரென்று தனித்துக் கூறுதலடாதாகிச் சேய்ஞலூர் என்னும் அடைமொழி புணர்த்துத லவசியமாம். ஏனையவிருவரும் ஸ்வபுத்திரராகுந் தன்மையால் அடைமொழி அவசியமன்றாம். பிள்ளையாரென்பதே யிருவர்க்கும் போதும். மூத்தபிள்ளையார், இளையபிள்ளையாரென்பது முன்பின்வந்தமுறைமை காட்டவெனவறிக. ஆகவே, ஷை புராணததில் பிள்ளையாரென்று அடையின்றிவரும் பிரயோகங்கள் செவ்வனே இளையபிள்ளையாரென் றினிது விளக்கிற்றென்பது வெளிப்படை. அன்றியும், ஆளுடையபிள்ளையார், மறைப்பிள்ளையார், ஞானப்பிள்ளையார் என்றுவருதலுமுண்டு. சிவனார்க்கு ஞானமுணர்த்தினமையாலும், அகத்தியமுனிவர்க் கோத்துரைத்தமையாலும், சைவகுரவராக வுலகத்தை யாண்டமையாலுமே அதுசாலும். இவ்வுண்மையைத் திருநாவுக்கரசுசுவாமிகள் புராணத்தாலும் பரியாலோசிப்பாம். பிள்ளையார், உடையபிள்ளையார், மறைப்பிள்ளையார் என்னும்பிரயோகங்கள் ௧௭௬, ௧௮௧, ௧௮௩, ௧௮௪, ௧௮௫, ௧௮௭, ௧௮௮, ௨௩௧, ௨௩௪, ௨௪௨, ௨௫௧, ௨௫௬, முதலியபாடல்களில் வந்திருத்தல்காண்க. ஒருபாடலிற்றானே ஆளுடைய பிள்ளையாரென்று ஞானசம்பந்தமூர்த்திகளையும், ஆண்டவரசு என்று திருநாவுக்கரசுசுவாமிகளையுங் கூறுமுகத்

தானே யிருவர்தன்மையும் வெளிப்பட்டது. இவருள் ஒருவர் சிவனுக்குப்பிள்ளையும், மற்றையவர் அடியவருமாத லுண்மையாகையால். இதனை, "ஈசர்மிழலையிறையவர்பாலிமயப்பாவை திருமுலைப்பால், தேசமுய்ய வுண்டவர்தந்திருமா மகனாராதலினால், காசுவாசியுடன்பெற்றார் கைத்தொண்டாகுமடிமையினால்,வாசியில்லாக்காசுபடி பெற்றுவந்தார்வாகீசர்" என்னும், (உ௬0)வது பாடலாற் கண்டுணர்க. இதனை வற்புறுத்திக்காட்டும் வேறொரு பாடலையுங்கவனிப்பாம்.(௪0க)வது பாடலில் "உரனுடையதிருநாவுக்கரசருரைசெய்தருளப்,புரமெரித்தார் திருமகனார் பூந்துருத்திதொழுதகன்றார்" என்று வந்தமையேசாலும். ஒருவரை"உரனுடையதிருநாவுக்கரசு"எனவும்,மற்றொருவரைப்"புரமெரிததார் திருமகனார்" எனவுங்கூறிப்போந்தவருமையே யீண்டமைவுடைத்தாதலறிக. இவ்வுண்மையையுணர்ந்த சிவாநுபூதிமான்களுந் தங்கள்பிரபந்தங்களி லாண்டாண்டுரைத்துள்ளாராகலி னவற்றையு மீண்டெடுத்துக்காட்டுவாம்.சித்தாந்தரத்நமாய்விளங்கும் அருணகிரிநாதர் வில்லிபுத்தூரானைவென்றகாலத்தில் அருளிச்செய்த (கந்தரந்தாதி) என்னும் பிரபந்தத்திற் போந்தபடி.

(உ௬-வது பாடல்.)

தேடிக்கொடும்படைகைக்கூற்றடாதுளஞ்சேவின்மைமீன்
தேடிக்கொடும்படைகோமான் சிறைப்படவேறுளபுத்
தேடிக்கொடும்படையாவெகுநாட்டன்சிறைகளையுந்
தேடிக்கொடும்படைமின்கேள்வனற்றுணைசிக்கெனவே.

இ-ள்- தேடிக்கொள்-இப்பொழுதேசம்பாதித்துக் கொள்வாயாக, தும்பு-பாசத்தை, அடை-பொருந்திய, கை-கையையுடைய, கூற்று-இயமன், அடாது-அழிக்காதபடி, உளம்-நெஞ்சமே, சே-இடபம்,வில்-தநுசு, மை-மேஷம், மீன்-மீனம், தேள்-விருச்சிகமென்னுமிராசிகளையும், திக்கொடும்-திக்குகளையும்,படை-சிருட்டித்த,கோமான்-பிரமதேவனை, சிறைபட-சிறைப்படுத்தி, வேறுளபுத்தேள்-மற்றைத்தேவரது, தி-புத்தியில், கொடும்பு-திருகுதலை, அடையா-சேராத, வெகுநாட்டன் ஆயிரங்கண்ணையுடைய விந்திரனது, சிறை-சிறையை,களை-ஒழித்து,உந்து-(நீரினும் நெருப்பினும்)சமணர்செலுத்திய, ஏடு-ஏடுகளையும், இக்கொடும்-அவர்கள்செய்த கொடுமைகளையும், படு-தாழ்த்திவிட்ட, ஐ-சுவாமியாகிய, மின்கேள்வன் - தெய்வயானை நாயகனது, நற்றுணை-நல்லநுக்கிரகத்தை, சிக்கெனவே-உறுதியாக எ-று நீ-தோன்றுவெழுவாய், தேடிக்கொள்-பயனிலை, ஏ-அசை

( கருத்து. )

நெஞ்சமே! பாசதரனாகிய வியமனுன்னை நலிவுசெய்யாதபடிப் பிரமதேவரைச் சிறைப்படுத்தி, இந்திரனைச் சிறைதவிர்த்துச் சம்ணரிட்ட வேட்டையும், வாதையுஞ் செயித்த குமாரக்கடவுளது துணையை உறுதியாகச் சம்பாதித்துக்கொள் என்பதாம்.

(உகூ-வது பாடல்.)

திகழுமலங்கற்கழல்பணிவார் சொற்படிசெய்யவோ
திகழுமலங்கற்பகவூர் செருத்தணிசெப்பிவெண்பூ
திகழுமலங்கற்பருளு மென்னுவமண்சேனையுபா
திகழுமலங்கற்குரைத்தோ னலதில்லை தெய்வங்களே.

இ-ள். திகழும்-விளங்காநின்ற, அலங்கல் - மாலையையணிந்த, கழல்- தனது திருவடியை, பணிவார்-வணங்குவோர், சொற்படிசெய்ய-திருவாக்கின்படிநடக்க, ஓதி-தமிழ்வேதமென்னுந் தேவாரத்தை மொழிந்தருளினவரும், கழுமலம்-தானவதாரஞ்செய்த சீகாழியையும், கற்பகவூர்-தான்காத்தருளிய கற்பகத்தருவையுடைய அமராவதியையும், செருத்தணி-தானுறையுந் திருத்தணியையும், செப்பி-துதிசெய்து, வெண்பூதி-திருவெண்ணீறனது, கழும்-போக்கடிக்கும், மலம்- மும்மலத்தையும், கற்பு-பரம்பொருளிதுவே யென்று நம்புங் கற்புடைமையை, அருளும்-கொடுத்தருளும், என்னு-என்றுநினையாத, அமண்-சமணர், சேனை-கூட்டங்களை, உபாதி-வருத்தமான, கழு-கழுவிலேற்றி, மலங்கற்கு-கலக்கமுற்றழியும்படிக்கு, உரைத்தோனலது-வாதுமொழிந்த சம்பந்தப்பிள்ளையுமாகிய குமாரக்கடவுளையன்றி, இல்லைதெய்வங்களே - வேறுதெய்வங்கள் கிடையாது எ-று. தெய்வங்கள்-எழுவாய், இல்லை-பயனிலை, ஏ, அசை.

( கருத்து. )

தம்முடைய தொண்டர்களுக்கு நன்னெறியாகத் தேவாரமென்னுந் தமிழ்வேதத்தை மொழிந்தருளினவரும், திவ்வியதலங்களைத் துதியாமலும், திருநீற்றுமகத்துவத்தைக் கைக்கொள்ளாமலுமிருந்த சமணர்கள் கழுவேறும்படி வாதினால் வென்றவருமாகிய ஞானசம்பந்த மூர்த்திகளென்னுங் குமாரக்கடவுளையன்றி வேறுதெய்வங் கிடையாது என்பதாம்.

(௫௪-வது பாடல்)

தென்னவனங்கனஞ் சூழ்காத்திரிநகசூலகரத்
தென்னவனங்கநந்தப்பத நீட்டினன்செல்வமுன்பின்
தென்னவனங்கனன்னீற்ருற்றிருத்திய தென்னவின்னம்
தென்னவனங்கனங்கைச்சிலைக்கூனையுந் தீர்த்தருளே.

இ-ள். தென்னவனம்-தென்னஞ்சோலைகளையும், கனம்-மேகங்கள், சூழ்-சுவிந்திராநின்ற, கா-பூஞ்சோலைகளையுமுடைய, திரிநக-திருத்தணிகை, பரங்குன்று, செங்கோடு) என்னு மலைகளையுமுடையோனே! சூலகர-கையிற்சூலாயுதத்தையுடைய, தென்னவன்-தென்றிசைத்தலைவனாகிய யமனது, அங்கநந்த-உருவழியும்படி, பதநீட்டினன்-திருப்பாதத்தை நீட்டியுதைத்த பரமசிவனது, செல்வ-மைந்தனே! முன்-முற்காலத்தில், பின்-பின்னேகூனையுடைய, தென்னவன்-பாண்டியனது, அங்கம்-உடலை, நன்னீற்ருல்-நன்மையைத்தரும்விபூதியினுல், திருத்தியதென்ன-நிமிர்த்தினதுபோல, இன்னம்-இப்போதும், தென்ன-வனப்புவாய்ந்த, அனங்கன்-மன்மதனது, அம்-அழகிய, கை-கையிற்பிடித்த, சிலை-கருப்புவில்லினது, கூனையும்-வளைவையும், தீர்த்து-நீக்கி, அருள்-மன்மதன் ஈன்மேற் பாணப்பிரயோகஞ்செய்யாதபடி உன்மாலையைத் தந்தருளவேண்டும் எ-று. நீ-தோன்றுவெழுவாய். தீர்த்தருள்-பயனிலை. ஏ-அசை.

( கருத்து. )

திருத்தணிகை, திருப்பரங்குன்று, திருச்செங்கோடு என்னும் மூன்றுமலைகளிலுமுறைபவனே ! கூற்றையுதைத்த பரமசிவனது மைந்தனே ! முன்பாண்டியனது கூனைநிமிர்த்தினதுபோல வென்னை வருத்தும்படி மன்மதன் கருப்புவில்லை வளைத்தலையுந் தீர்த்தருளல் வேண்டும் என்பதாம்.

(௪௫-வது பாடல்)

திகைப்படங்கப்புயந்தந்தருளானென்படிங்கணிய
திகைப்படங்கத்தமையார் செந்திலாரென்படென்னனுய
திகைப்படங்கப்புகல்சேயென்பள்கன்னிகண்ணீர்தரவி
திகைப்படங்கத்தமையா தெமையாட்கொளுஞ்சீகரமே.

இ-ள். திகைப்பள்-மயங்குகிருள், தங்க-தழுவி யுயிர்பெற்றிருக்கும்படி, புயம்-தனதுபுயத்தை, தந்தருளான்-தந்து கிருபை செய்கின்ருனில்லை, என்பள்-என்கிருள், திங்கள்-சந்திரன், நியதிகைப்ப

ள்-நித்தியமு முபாலம்பனஞ் செய்கிறாள், தம்-தனது, கந்து-இப்ப டிவருந்தி முறையிடுதலை, அமையரா்- க்ஷமித்திரக்ஷிக்கின்றாரில்லை, செந்திலார்-செந்திற்குமரர், என்பள்-என்கிறாள், தென்னன்-கூன்பா ண்டியனது, உயதி-(சுர) வருத்தத்தின்,கைப்பு-வெப்பம்,அடங்க-த, ணியும்படி, புகல்-(தமிழ் வேதமாகிய தேவாரத்தை) மொழிந்தருளி ய, சேயென்பள்-சம்பந்தப்பிள்ளையே யென்றுஞ் சொல்லுகிறாள் கன்னி - எனதுயிராகிய பெண்ணானவள், கண்ணீர்தர - கண்ணீர் சோரும்படியாக,(ஆதலால்)விதி-பிரமனது, கைப்படு-கையிற்சிருட் டிக்கப்படுகின்ற, அங்கத்து-உடற்பைக்குள், அமையாது-இவ்வான் மா வமைக்கப்பட்டுச் சநநமுறாதபடி,எம்-எம்முடைய, ஐ-குலதெய் வமே, ஆட்கொளும்-அடிமைகொண்டருளவேண்டும், சீகரமே-அழ கியகுமாரக்கடவுளே! எ-று. நீர்-தோன்றுவெழுவாய், ஆட்கொளும் பயனிலை, ஏ-அசை.

( கருத்து. )

எங்கள்குலதெய்வமான வழகனே! என்னுயிராகிய பெண்ணா னவள் செந்திற்பதியான் யான் முறையிடுங்குறையைத் தணிக்கின் றானில்லை, அவன் புயத்தைத் தழுவத் தரவுமில்லையென்றும், கூன்பா ண்டியன் சுரந்தணித்தவனே!என்றும் சொல்லுகிறாள், சந்திரனை யு ந்தினந்தோறும் வெறுத்துமயங்குகிறாள். இனியிப்படிப்பட்ட சநந முற்று வருந்தாத வண்ணம் ஆண்டுகொள்ளவேண்டும் என்பதாம்.

(௪௩-வது பாடல்.)

செய்தவத்தாலஞ்சுசீரெழுத்தோதிலந்தீதலருஞ்
செய்தவத்தாலஞ்சுகம்பெறச் சேயுரைக்கேற்றுருப்போய்ச
செய்தவத்தாலஞ்சுவைக்கனியீன்றதென்னேம்வினையே
செய்தவத்தாலஞ்சுகின்றன மும்மலசெம்மல்கொண்டே.

இ-ள். செய்தவத்தால்-அழகிய தவத்தினாலாவது, அஞ்சுசீரெ ழுத்து-சிறந்தபஞ்சாக்ஷரத்தை, ஓதிலம்-துதிக்கின்றோமில்லை,தீது-தீ மை, அலரும்-விளையும், செய்-நரகபூமி, தவ-அழிந்துபோகவும், தா லம்-உலகமெல்லாம், சுகம்-நன்மையை, பெற—அடையவும், சேயு ரைக்கு-சம்பந்தப்பிள்ளையாக வவதரித்துத் திருவாய்மலர்ந்தருளிய தேவாரத்தினால், ஏற்றுருப்போய்-ஆணுருமாறி, செய்த-சிவந்த, அத் தாலம்-அப்பெண்ணுருவாகிய பனை, சுவைக்கனி-இனியபழத்தை, ஈ ன்றது - தந்தது, என்னேம்- என்றுதுதிக்கின்றோமில்லை, வினையே செய்து-தீவினையேபுரிந்து, அவத்தால்-வந்ததுன்பத்தினால்,அஞ்சுகி

ன்றனம்-அச்சமுற்றிருக்கின்றனம், மும்மலச் செம்மல்கொண்டு-மு ம்மலமாகிய போர்வையைத் தரித்துக்கொண்டு எ-று. யாம் - தோன் ருவெழுவாய். அஞ்சுகின்றனம்-பயனிலை.

(கருத்து.)

நெஞ்சமே! உலகத்தார் நரகமெய்தாம லின்பத்தையடையவும், ஆண்பனை பெண்பனையாகிப் பழத்தைக்கொடுக்கவும், சம்பந்தராயவ தரித்துத் தேவாரத்தை யருளிச்செய்த குமாரக்கடவுளைத் துதியாம லும், அவரது ஸ்ரீபஞ்சாக்ஷரத்தை யநுட்டியாமலும், தவத்தில்முய லாமலும், தீவினைத்தொடர்பால் மும்மலப்பிணிப்புண்டு யாமவத்தி ன்முயன்று அஞ்சுகின்றனம் என்பதாம்.

(அக-வது பாடல்.)

சேலையிலாருந்தவன் சூலமேறச்சினத்தவன்கண்
சேலையிலாருந்திவளேற்பவையரசிந்திரியச
சேலையிலாருமபராபரிபக்குறசசிக்கெனுமிச
சேலையிலாருந்திறையிட்டனர் தங்கள்சித்தங்களே.

இ-ள். சேலை - அசோகமரத்தை. இலார் - இல்லிடமாகவுடைய விமணர்கள், உந்து-உயர்ந்து, அ-அந்த, வன்-வலிய, சூலம்-கழுவில், ஏற-ஏறியழியும்படிக்கு, சினத்தவன்-சம்பந்தப்பிள்ளையாய்த் தேவா ரம்பாடிச்செயித்தவன், கண்-விழியானது, சேல்-சேற்கெண்டைக்கு ம், ஐயில்-வேலுக்கும், ஆர்-ஒப்பாகிய, உந்தி-கான்யாற்றையுடைய, வஞேற்பவை-வனத்தி லுற்பவித்த வள்ளிநாயகிக்கு, அரசு-தலைவனா ன குமாரக்கடவுள், இந்திரியச்சேலை- பஞ்சேந்திரியச்செயல்களை, இலார்-நீக்கியதபோதனர்கட்கும், உம்பர்-தேவர்கட்கும், ஆப-துன் பத்தைவிளைத்த, ரிபு-சத்துருவாகியசூரனை, குற-குற்றம்படி, சிக் கெனும்-இறுக்கிக்கட்டிய, இச்சேலையில்- பீதாம்பரக்கச்சையில், ஆ ரும்-மாதர்களெல்லாம், திறையிட்டனர் - கப்பமாகச் சமர்ப்பித்தா ர்கள், தங்கள்-தங்கடங்கள், சித்தங்கள்-இருதயங்களை எ-று. ஆரு ம-எழுவாய், திறையிட்டனர்-பயனிலை.

( கருத்து. )

சம்பந்தப்பிள்ளையா யவதரித்துச் சமணரைக் கழுவேறும்படி ச்செய்தவனும், வள்ளிநாயகிக்குத் தலைவனுமாகிய குமாரக்கடவுள் தேவர்முதலியோரை வருத்திய சூரனை வெல்லும்படி அழகிய வுரை யிற் கட்டிய பீதாம்பரக்கச்சையினிடத்தில் மாதர்களெல்லாருந் தங் கடங்க ளிருதயங்களைக் கப்பமாகச் சமர்ப்பித்தார்கள் என்பதாம்.

(௯௯-வது பாடல்

திருக்கைபம்போதிகளோகஞ்சமோநஞ்சமோதிருமால்
திருக்கையம்போசெய்யவேலோவிலோசனந்தென்னனங்கத்
திருக்கையம்போருகக்கைந்நீற்றின்மாற்றித்தென்னூல்சிவபத்
திருக்கையம்போகவுரைத்தோன்சிலம்பிறசிறுமிதற்கே.

இ-ள். திருக்கை-திருக்கையென்னும் மீனையுடைய, அம்போதிகளோ-சமுத்திரங்களோ, கஞ்சமோ-தாமரையோ, நஞ்சமோ-விஷமோ, திருமால்-விஷ்ணுவினது, திருக்கை-திருக்கரத்திலிருக்கின்ற, அம்போ-பாணமோ, செய்ய-சிவந்த, வேலோ-வேலாயுதமோ, விலோசனம-கண், தென்னன் கூன்பாண்டியனது, அங்கத்திருக்கை முதுகின்கூனை, அம்போருகம-தாமரைமலர்போன்ற, கைந்நீற்றின்-கரத்திற்றரித்ததிருநீற்றினால், மாற்றி-நீக்கி, தென்னூல் - தமிழ்நூலாகிய, சிவபக்தி - சிவபக்தியை விளைவிக்கும், ருக்கு - ருக்குவேதமாகிய தேவாரத்தை, ஐயம்போக-பரசமய நூல்களினாலுண்டாகுஞ் சந்தேகநிவர்த்தியாக, உரைத்தோன்-சம்பந்தப்பிள்ளையாயவதரித்துத் திருவாய் மலர்ந்தருளிய குமாரக்கடவுளது, சிலம்பில்-மலையின் கண்ணிருக்கின்ற, சிறுமிதற்கு-சிறியாளாகிய கன்னிக்கு ள-று விலோசனம, எழுவாய் சமுத்திரமுதலியன, பயனிலை.

(கருத்து.)

முன் சம்பந்தமூர்த்தியா யவதரித்துத் திருநீற்றாற் சமணமதம் பூண்டிருந்த பண்டியனது கூனைமாற்றியும், எச்சமயம பெரிதோ வென்னுமையமற்றுச சைவமே பெரிதென்று நமபுமபடி ருக்வேதமாகிய தேவாரத்தை மொழிந்தருளிய குமாரக்கடவுளது மலையின்கணவாழும கன்னியினதுகண் சமுத்திரமோ, தாமரையோ, விடமோ, அமபோ, வேலோ, என்பதாம.

(௱-வது பாடல்)

செல்வந்திகழுமலநெஞ்சமேயவன்றெய்வமின்னார்
செலவந்திகழுநமதின்மைதீர்க்கும்வெங்கூற்றுவர்க்குச்
செலவந்திகழுந்திருக்கையில்வேறிவனைகாத்தசெல்வி
செலவந்திகழுமணவாளநல்குந்திருவடியே.

இ-ள். செல-அங்குசென்று, வந்தி-வணக்கஞ்செய், கழுமலம் குமாரக்கடவுளானவர் முன் சம்பந்தப்பிள்ளையா யவதரித்தருளிய சீகாழிப்பதியின்கண், நெஞ்சமே-இருதயமே; அவன்-அவரது, தெ

ய்வ-தெய்வீகமாகிய, மின்-தெய்வயானை, ஊர்-ஏறிவருகின்ற, செல்-மேகவாகனமானது, வந்து-வந்து, இகழும்-(பிறரால்) இகழப்படும், நமது-நம்முடைய, இன்மை-இல்லாமையாவும், தீர்க்கும்-நீக்கிவிடும், வெம்-கொடிய, கூற்றுவற்கு-யமனுக்கு, செல்-நம்மேல் நடப்பதாகிய, வந்தி-கொடுமையை, கழும் துடைத்துவிடும், திருக்கையில்-(முருகக்கடவுளது) திருக்கரத்தின், வேல்-வேலாயுதமானது, தினைகாத்த-தினைப்புனங்காவல் பூண்ட, செல்வி-வள்ளிநாயகியினது, செல்வம்-பெருஞ்சிறப்பாக, திகழும்-(நிறைந்து) பிரகாசிக்கின்ற, மணவாளன்-நாயகனாகிய கந்தசுவாமியானவர், நல்குந்திருவடி-தனது திருவடித் தாமரையை நமக்குத் தந்தருள்வார் எ-று. நீ, தோன்றுவெழுவாய். வநதி பயனிலை. ஏ, அசை

(கருத்து.)

நெஞ்சமே! தெய்வயானையினது வாகனமாகிய மேகம் நமதுவறுமையைத் தவிர்க்கும். குமாரக்கடவுளது வேலாயுதம் நமக்குவரும் யமதண்டனையை நீக்கிவிடும். வள்ளி நாயகிக்கு மணவாளராகிய கந்தசுவாமி தமது திருவடித் தாமரையை நமக்குத் தந்தருள்வராதலால், நீ அக்கடவுள் முன் சம்பந்தப் பிள்ளையா யவதரித்த சீகாழியிற் சென்று அவரை வணங்கு, என்பதாம்.

என்னுமித்திருவாக்குகளால் இளையபிள்ளையாரே ஞானசம்பந்தரென்னு முண்மையினிது வெளிப்பட்டது. படைவீடுகளாறனுளிருபபவ னெனவும் மஞ்ஞையூர்தி யெனவும், தேவர் சேனாபதி யெனவும், வள்ளிநாயகன் எனவும், தெய்வயானை தோழனெனவும், கவுணியர் காளையெனவும், சமணிருள் கிழிக்குஞ் சண்பையர் தலைவனெனவும், சைவசிந்தாமணியெனவும், பாண்டியன் வெப்பொழித்த பாலனெனவும், அபேதந்தோன்ற மூலவவதாரத்தும், அவதாரவவதாரத்தும் நம்பெருமான்மாட்டு நிகழ்ந்த மாந்மியங்களை விளக்கி யிருக்கின்றமை கொண்டே இளையபிள்ளையார்க்கும், ஞானசம்பந்தப் பிள்ளையார்க்கு முண்டாகிய சம்பந்தமினைத் தென்பது வெளியாமென்க.

இம்மட்டேயன்றி, "ஓமெனுந் தாரகவொண் பொருள் சிவனுக்காமென மொழிந்தேயருட் குருவானோன், பொற்புறு பொதியவெற்புறுமுனிக்கு, நற்பொருள் விளக்கு ஞானதேசிகன், பொய்வழிச் சமணப் புலையிருணீக்கிச் சைவம் வளர்க்குஞ் சம்பந்தமூர்த்தி, முருகன்குமரன் மூவிருமுகன்மா

ன், மருகன் சிவனருண்மைந்தன் கந்தன்'' என்று திருச்செந்தூர் அகவலின்கண் சிற்றம்பலநாடிகள் அருளிச்செய்தமை கொண்டும் மேல்மூலமூர்த்தி அவதாரமூர்த்திகளின் சம்பந்தம் வெளிப்பட்டமைகாண்க.

இவ்வுண்மையை "காழியிலேவந்து கணக்கிலாச்சிவனரநீ, டூழியின்பத்துய்த்தவொருவனே, ஆழியெனுந், துன்பத்திருத்தேனைத் தூக்கித்தென்போரூரா, வின்பத்தில் வைப்பாயினி" எனவும், "மாலோன் விருந்தையை யுண்டாக்கிக் கொண்டிலன் மாமலரோன், மேலானதன்சிர மொன்றையுண்டாக்கிலன் மீதுயர்ந்த, நாலாமறை புகழ்போரூரன் சம்பந்தநாமங்கொண்டே, நூலாமிடைமயிலாக்கின னென்பை நொடிதனிலே" எனவும் போந்தபிறவான்றோர் திருவாக்குகளானுங் கண்டறிக.

இன்னும், "பொற்றாளம் பொற்சின்னம் பொற்பார்சிவிகையொடு, நற்றாளப் பந்தரையு நம்பர்கையில் பெற்றானே" எனவும், "ஆச்சாபுரத்திலநந்தமுயிரை யெல்லாம், பேச்சோடுளங்கடந்த பேரின்பம் வைத்தானே" எனவும் "அரனேவந்தம்மை யளித்தவள்ளப் பாலைப், புரைதீரவுண்டவரைப் போதமுறக்கண்டானே" எனவும், மதுரைச் சமணமதகரிகளெல்லாஞ், சிதறத்துரத்துஞ் சிவசமய கோளரியோ" எனவும், "மயிலைநகர்தன்னில் வன்னியடு மென்பைக் - குயிலை நிகருமொழிக் கோதையாச் செய்தானே" எனவும் போந்த பாடல்களையுங் கண்டுணர்க. அன்றியும், "உலகமெலாமீன்றவொருத்திதனப்பாலுண், டிலகுகவிதைமழையீச, னிலவு, புயமலைப்பாற்பெய்த சுகப்போரியில் வாழ்வானம், புயமலர்த்தாளென்முடிக்குப்போது." எனவும், "தெய்வப்பிடிவந்து சேருந்துங்கிர்க்கிரி செந்தளிர்போன், மெய்வைத்தவள்ளிக்கொடிபடர்தாரு வியனுலகிற், சைவப்பயிரை வளர்க்குந்தண்மேகந்தகைமைசெறி, நெய்வைத்தவேல் கொண்டு போரூரிலென்றுநிகழ் தெய்வமே." எனவும், "மற்றவர்கிற்க மெஞ்ஞானிகள்வம்மின் வருத்துரைக்கே, னுற்றது கேண்மினெம் போரூர் முருகனுயர் கதியை, நற்றமிழ்க்காழி வந்தெண்ணிலிபேர்க்குநயந்தளித்தான், கொற்றமவனதலா லெவர்க்குண்டி னிக்கூறுமினே." எனவும், "திருநீலகண்டம் வெந்தீவினை தீண்டப்பெறுவெனவே, கருநீலகண்டனைப் பாடியடியரைக் காத்தவனெம், முருமேலிருந்த பிணியையு மாற்றுவனுண்மை நெஞ்சே, யிருநீலவாவிநம் போரூரனைப்பணிந் தேத்துவையே.' எனவும் "சகலமதங்களையெல்லா முணர்ந்த தவமுனிவோர், புகலுமிலக்க மெண்ணுயிரம் பேரைப் பொருகழுவி, லிகலுறவைத்தும் வருமேதமொன்றின்றியேயிருந்தான், றிகழுறும் போரியன் சம்பந்தநாமஞ் சிறந்துகொண்டே." எனவும், "எண்ணற்கரிய சமணக்களைகளிந்தேதமிலாத், தண்ணுற்றபேரருணீர்பாய்ச்சிச் சைவப்பயிர்வளர்த்து, நண்ணச்சிவாநந்தபோகம் விளைத்திடுநல்லுழவன், விண்ணுற்ற தேவருஞ் சூழ்போரி வாழ்கின்ற வேலவனே." எனவும் வரும் பிரமாணங்கள் பலவற்றானுங் கண்டுதெளிக இன்னும் விரிக்கிற் பெருகும்.

## இனிச்சீர்காழி மான்மியத்திற் போந்தபடி விசாரிப்பாம்.

"காண்மலிகடப்பந்தாரினற்குவந்துகாழிகாவலன்றிருவருள்செய்
மான்மியமுணர்ந்தேஞானசம்பந்தவள்ளலாய்முருகன்வந்துதித்த
பான்மையுண்டொன்றுமனையதுவிரித்துப்பகர்கெனமுனிவரர்கேட்ப
மேன்மைசால்சூதன்வினவரும்பொருளீதென்றுபின்விரிவுறவிளம்பும்.

ஆன்றதொல்கேள்வியறிஞரிற்போதாயனமுனிசூத்திரத்தொழுகி
யேன்றமாதவத்தாலுயர் சிவபாதவிருதயன்காழிமாநகர்வா
ழூன்றுமாமறையோனமருநல்விருப்பாலுள்களித்தவண்டடத்தொருசார்
மீதான்றலாமயில்வேன்முருகனைப்பெறுவான்றேய்தவம்புரிந்தனனெடுநாள்.

இத்தகைநெறிசால்கவுணியர்தலைவனிருந்தவம்புரியுநாளாதி
முத்தனுருணர்ந்துமைவிருகமலமுகத்தனைநோக்கிமண்ணிடைநம்
பத்தரைமறையைப்பனுவலையிகழும்படிறறையவல்லமண்குண்டப்
புத்தரைத்தடிந்துசைவவைதிகவெண்பூதிசாதனமுறைநாட்டி.

தலந்தொழப்பதினாறாயிரப்பதிகந்தண்டமிழ்மாலிகைசாற்றும்
பெலனுகொள்காரணமுண்டாதலினுலகிற்பிறந்தவணவருகெனமகிழ்கூர்ந்
திலகுநீர்வேணியண்ணலாங்கருளியெண்ணிரண்டாயிரங்கணத்தை
நலங்கிளரடியராகவென்றேயநாமவேன்முருகனுநயந்தே.

இன்னணமழைத்திங்கெய்துவனென்னுமிறைதிருவுளமகிழ்பூப்பக்
கன்னலங்கிளவிக்கௌரியுண்மகிழ்ந்துகளிவுறவுச்சிமோந்திறைவன்
சொன்னவாறுதித்ததலத்தியான்போந்துதுணைமுலையமுதருத்துவனென்
றன்னருங்களியால்விடுப்பவேலரசுமுயர்கணத்தலைவரைநோக்கா.

ஆதியங்கடவுளருள்வழிப்பதினாயிரவீருநீர்சூழ்ந்த
மேதினித்தலங்கடொறுமவதரித்துமேவுமென்றேவியாதிரையிற்
பூதலம்போற்றக்காழிமாநகரிற்புண்டரீகன்றடத்தொருசார்
மாதவம்புரிவோன்முன்னிளங்கதிர்போன்மதலையாய்வந்தனன்கந்தன்.

நீங்கருந்தவத்தோன்மகவுகண்டுவந்துநிரப்பினன்கடவுண்மாமணிபெற்
றோங்கினனென்னவியப்புமீதூரவுயர்வடமீனனகற்பின்
மாங்குயிற்கிளவிப்பகவதியெனும்பேர்மனைவிபாலெடுத்தினிதளிப்பப்
பூங்குழல்களிகூர்ந்துச்சிமோந்தன்பிற்புதல்வனைக்கொடுமனைபுகுந்தாள்.

பாணிமூவுலகும்புதையமேன்மிதந்துபல்லுயிர்ப்புரக்குமோர்குடிலைத்
தோணியாளுடையான்மேனியஞ்சுடராததுலங்கவந்துதித்தமாமகற்குப்
பேணியதிருநாளையிரண்டினுஞ்செய்பெருங்கடனாற்றிநீறணிந்து
மாணியல்பருவந்தொறுமழகதிர்போல்வளர்ந்துமூவாண்டெனவருநாள்.

குலப்பெருந்தாதைமலர்ப்பெருங்கிழவன் குளிர்த்தடம்படிகுவான்செலுங்காற
றலத்தகுமழலைக்கிண்கிணிசிழற்றநதாள்கொடுநடந்துறுமகவை

மலர்க்கணுல்வெகுண்டுமுடன்வரக்கொடுபோய்மணித்தடங்கரையினிலிறுவி
புலப்பகையெறிந்தோன்புனல்படிந்தாடப்புகுதலுங்குமுதவாய்ப்புதல்வன்.

இளம்பசிகூர்ந்தானெனவுளமுருகியிரங்கலும்வரம்பிலாமறைநூ-
லளந்தறியாதானணங்கொடும்விடைமேலாங்கெழுந்தருளிநின்மகற்கு
விளங்கிழாய்முலைப்பாலருளெனக்கனகவில்லுடைவள்ளன்மெய்ஞ்ஞான
வளங்கொள்பாலருத்திமலர்க்கணீர்துடைத்தாள்மலர்தலைபுலகெலாமீன்றாள்.

என்னும் வாக்கியங்களால் ஸ்கந்தரே ஞானசம்பந்தப் பிள்ளையாராக வவதரித்தாரெனவும், அவ்வவதாரம் மாதுருகர்ப்பவிஹீனமெனவும் பெறப்படுமுண்மையானும் சேக்கிழார் சுவாமிகள் கூறியவுண்மையினிது வெளிப்பட்டது.

இன்னு மிவ்வுண்மையை உபமன்யு பக்தவிலாசத்தானும் விசாரிப்பாம். "ஜகத்யத்யந்த துர்ப்பிக்ஷே ஜிஹ்வேச சிவநந்தநௌ, கருணங்கர்த்து காமஸ்ஸன் சம்புஸ்வப்நே ஜகாததௌ." என்னும்வசனத்தால் உலகமெல்லாம் அதிகமான க்ஷாமத்தையடைந்தபோது சிவபெருமான் கருணைசெய்யவிரும்பினவராகி ஜிஹ்வேசரென்னும் அப்பர்சுவாமிகளையும், சிவநந்தனரென்னும் ஞானசம்பந்தமூர்த்திகளையுஞ் சொப்பனத்திலடைந்து இவ்வாறு அருளிச்செய்தாரென்றுபெறப்பட்டது. இதில் சிவகுமாரரென்று ஞானசம்பந்தப்பிரபுவை அப்பர் சுவாமிகளில் பிரித்துக் கூறினமையானும்,(நிபீததேவி ஸ்தந்யாய சங்கரஸ் தத்ஸுதாயச, ததௌ ஸம்பந்தநாதாய டங்கம்ந்யூநார்க்கமந்யத: ஜிஹ்வேசாயஸ்ய ப்ருத்யாய மஹார்க்கம் ப்ரத்யஹந்ததௌ, ஸ்நேஹோதுல்யோ ப்யயந்த்ருஷ்ட: விசேஷ: புத்ரப்ருத்யயோ:) என்னும் வசனத்தால் மேல் (உகூ-வது) பக்கத்தில்காட்டிய பெரியபுராண வாக்கியப்படியே பொருள்பெறப் பட்டதன்றியும், ஞானசம்பந்தருக்கும் வாகீசருக்கும் தம்மிடத்திலுள்ள ஸ்நேஹத்தில் சமானமுண்டாயிருப்பினும், அவ்விருவரும புத்திரரும், ப்ருத்யருமென்னும் வேறுபாட்டாலுண்டாகிய விசேஷமே யாண்டுரைக்கப்பட்டதெனவறிக. இன்னபலவாக்கியங்க ளுளவற்றை விரிவஞ்சிவிடுத்தாம். இப்படிச் சமஸ்தபிரமாணங்களும் ஐககண்டமாயொதது விளங்குமுண்மையால் ஞானசம்பந்தப் பிரபுவினுடைய வவதாரம் அயோநிஜத்வம் பெற்றமை பசுமரத்தாணி யறைந்தாலென்ன நாட்டப்பட்டது.

மேல்விசாரத்தால் அநாதிமலமுத்தராகிய சிவபெருமான் தமது விபூதியாலும், அவற்றி னமிசத்தாலும் மாதா வுதரசையோகாதி

தோஷங்கவொய்துத லசப்பமென்று வெளிப்படுமாயின், சங்கரா சாரியென்பவர் சிவனுடைய வவதாரமெனவும், அவர்கேரளத்தில் ஓர்விதந்துவின் கர்ப்பசையோகத்தால் பிறந்தாரெனவுஞ் சிலர்கூறு வதென்னையெனின், அது அப்பிரமாண மென்பதனை நிரூபிப்பாம். (சிவேமதம்சஸம்பூதச் சங்கரச்சாங்கரோத்தமஃ, சதுர்ப்பிஸ்ஸஹசிஷ் யைச்ச கலாவவதரிஷ்யதி, தஸ்மைசோபவிஷத்வித்யா மயாதத்தா ம ஹேச்வரி,பூமௌ பாஷண்டஷண்டாநாம் கண்டனம் ஸகரிஷ்யதி.) என்னும் சிவரஹஸ்ய வசனத்தால் உமாதேவியாரைப் பார்த்தருளி எமது அமிசத்தையடைந்து சங்கரன் என்பவனொருவன் சிவனடியா ர்களுக்குள் சிரேஷ்டனுப் நான்குமாணுக்கரோடு கலியில் பிறக்கப் போகிறானெனவும், அவனுக்கு உபநிஷத்துக்களாகிய வேதாந்தவித் தை யெம்மாலுபதேசிக்கப் படுமெனவும், அவன் பூமியிலாவரித்து ள்ள பாஷண்டமதங்களை யெல்லாம் நிரசித்து எமதுண்மையை நா ட்டுவனெனவும் சிவபெருமான் கூறினதாக வெளிப்பட்டது. இந்த வாக்கியத்தையன்றிச் சங்கராசாரியர் சிவாவதாரமாகப் பிறந்தாரெ ன்று தாங்கள் குழறிவழிதலுக்கு வேறுபிரமாணம் சிவரகசியத்தி லாவது வேறு எந்தப் புராணத்திலாவது பெறப்பட்டதில்லை. சிவாம் சசம்பூதராகச் சங்காரவதாரத்தைக் கூறுமிந்தவாக்கியமே போது மெனின், ஈண்டு அமிசமென்பது விபூதியென்றதிழுக்காகிச் சங்க ராசாரியர் சிவாவதாரமென்பது நிரஸ்தமாம். எங்ஙனமெனின், சங் கராசாரியராகச் சிவபெருமானே அமிசத்தாலவதரித்த துண்மையா யி னச்சங்கராசாரியரைச் சிவபக்தாக்ரேசரராகச் (சாங்கரோத்தமஃ) என்னும் பிரயோகத்தால் மேல்வாக்கியத்தில் விதந்துகாட்டினமை பழுதாம். அன்றியும், அவன் பிறக்கப்போகிறானெனவும், அவனுக் கு உபநிஷத்வித்தைக மெம்மால் கொடுக்கப்படுமெனவும், அவனு லகிலுள்ள பாஷண்ட மதங்களையெல்லாங் கண்டிப்பானெனவும் சி வபெருமான் கூறியதும் பழுதாம். மற்றெப்படிக் கூறவேண்டுமெனி ன், நான் அமிசாவதாரமாகச் சங்கராசாரியாய்ப் பூமியிற்றோன்றி வேதாந்த வித்தைகளையெல்லாம் யதாவத்தாயுணர்ந்து பாஷண்டம தங்களையெல்லாங் கண்டித்து உண்மையை நாட்டப்போகிறேனென் று தன்மையிற்கூறுவதே யமைவுடைத்தாம். படர்க்கையிற் கூறுவது ஞ் சாத்திரவழக்கமே யெனின், அது மயக்கவுணர்ச்சியைத்தருமே லமைவுடைத்தாதல்செல்லாமையி னவ்வமைதியாண்டும் பயன்படா தெனவறிக. ஆகவே, யேகதேசமுகத்தானிடம் பெற்றுழி யமைவு

டைத்தாதல் சாலும். நான் அமிசத்தால் பிறக்கப்போகிறேன், பாஷண்டமதங்களைக் கண்டிக்கப்போகிறேன் என்று கூறுமையுமாலும், சாம்பவச் சிரேஷ்டனுகச் சங்கரன் பிறக்கப்போகிறான், அவனுக்குவே தாந்த வித்தைகளெம்மால் தரப்படும், அவனுலகிலுள்ள பாஷண்டமதங்களையெல்லாங் கண்டிக்கப்போகிறான் என்று கூறினமையாலும் சங்கரர் என்னும்பேரால் பிறக்கப்போகிறவர் ஓர் அடியவரென்றே யேர்ப்பட்டுச் சேதனகோடிகளி லொருவராகவே துணியப்பட்டமையால், மேல்வாக்கியத்தில் எமது அமிசத்தால் பிறக்கப்போகிறானென்று சுவாமி கூறியதை எமது அனுக்கிரகத்தால் பிறக்கப்போகிறானென்றே சத்துக்கள் துணிந்துரைப்பரென்க. எனவே, என்னுடைய பிரசாதத்தையடைந்து அத்துணைச்சார்புபற்றி யொருவன் பிறக்கப்போகின்றானென்பதே வெளிப்படை. இங்ஙனமன்றி, அமிசமென்பதை விபூதியென்றே கூறுவாரெனின், மேலாட் சேபங்களுக்குச் சமாதானங்கூறுவது அவசியமாவதோடு பின்வரும் ஸ்மிருதி வாக்யத்தையும பரிகரித்துக் கொள்ளவேண்டிவரும். என்னெனின், "நாருஷி꞉ குருதேகாவ்யம் நாவிஷ்ணு꞉ ப்ருதிவீபதி꞉, நாதேவாம்சோ ததாத்யந்நம் நாருத்ர꞉ க்ரமபாடக꞉" என்னும் வசனத்தால் ரிஷியமிச மில்லாதவனுக்குக் காவியஞ்செய்யுந் தன்மையும், விஷ்ணுவமிசமில்லாதவனுக்கு உலகாளுந்தன்மையும், தேவாமிசமில்லாதவனுக்கு அன்னதானஞ் செய்யுந்தன்மையும், ருத்ராமிசமில்லாதவனுக்குச் சாங்கமாய் வேதாத்யயனஞ் செய்யுந்தன்மையு முண்டாவதில்லையென்று பெறப்படுகின்றது இந்தச்சுலோகத்தில் அமிசம் என்பதை விபூதிசமபந்தமாகவே நாமகிரகிப்போமாயின, பூமியில் காவியஞ் செய்பவர்களெல்லாம் ரிஷிகளுடைய அவதாரங்களென்றும், உலகத்தையாளு மரசர்களெல்லாம விஷ்ணுவி னவதாரங்களென்றும, அன்னதானஞ் செய்பவர்களெல்லாம் தேவர்க்களவதாரமென்றும், வேதாத்யயனஞ் செய்பவர்களெல்லாம் ஸ்ரீருத்ரமூர்த்தியி னவதாரங்களென்றுஞ் சொல்லவரும். அங்ஙனமேல், யாவரும் அமிசபூதராகவே யவதரித்தவரென்று எண்ணப்படுகையால் சங்கராசாரியர் தான் அமிசத்தாற்பிறந்து லோகோத்தாரஞ் செய்யபோகிறானென்று சொல்லவந்தது அநுசிதமாம். இப்பெருநூலை வெளியிடத் தொடங்கிய யாமும் அமிசமேயாதல் திண்ணமாதலால். எம்மோடொருவரா யெண்ணப்படுஞ் சங்கரரைப்பற்றிச் சிவபெருமானுமாதேவியார்க்குக் கூறியதும் அசங்கதம். இந்தவிசாரத்தால் அமிசம்=அவதா

ரசம்பந்தம் என்று பொருள்கொண்டது அயோக்யமெனவறிக. ரிஷியமிசமுடையவன், விஷ்ணுவமிசமுடையவன், தேவாமிசமுடையவன், ஸ்ரீ ருத்ராமிசமுடையவன் என்பனவற்றை ரிஷியையொத்தவன், விஷ்ணுவையொத்தவன், தேவர்களை யொத்தவன், ஸ்ரீருத்ரமூர்த்தியையொத்தவன் என்றே மேலோர் கிரகிப்பர். எனவே, ரிஷிகளுக்குரியவாற்றல், விஷ்ணுவுக்குரியவாற்றல், தேவர்களுக்குரியவாற்றல், உருத்திரருக் குரியவாற்ற லுரியாரென்பது வெளிப்படை. கல்வி, செல்வம், அறிவு முதலியவற்றையுடைய வொருவனைப்பார்த்து இவன் அமிசவான் என்று உலகத்தவர் வழங்கிவரும் வழக்காலுமே அது விளங்கும்.

இன்னுமிதைவிரிக்கில் ரிஷிகள்காவியங்களைச் செய்யுமாற்றலைத் தம் புண்ணியவிசேஷத்தால் பெற்றுடையாராகலின், அவர்போலவே காவியஞ்செய்யத்தக்க புண்ணியமுடையா ரிவரெனவும், விஷ்ணுதேவர்களில் க்ஷத்திரியத்வம் பூண்டு உலகத்தைப் பரிபாலிக்கும் பொருட்டுச் சிக்ஷாரக்ஷைகள் செய்பவராகலின், அவர்போலவே லோகபரிபாலனஞ் செய்யத்தக்க புண்ணியமுடையாரிவரெனவும், தேவர்கள் யக்ஞங்களி லவிர்ப்பாகங்களைப் பெற்று மழையைப் பெருக்கிச் சஸ்யாதிகளை யுலகத்துக்குக் கொடுப்பவராகலின், அவர்போலவே அன்னவிரயஞ் செய்யத்தக்க புண்ணியமுடையாரிவரெனவும், ஸ்ரீருத்ரமூர்த்திதேவர்களில் பிராம்ஹணத்வம் வகித்து ஞாநுதிஷ்டான மூர்த்தியாகி வேதாந்தோபதேசங்களை யுலகர்க்குச்செய்பவராகலின், அவர்போலவே வேதாந்தவித்தையி லதிகாரம் வரத்தக்க மகிமை யுடையாரிவரெனவும் அவ்வவ்வதிகாரிகளைக் கூறிப்போந்ததாம். இந்த விசாரத்தால் புண்ணியாம்சம், மஹிமாம்ச முதலாகச் சொல்லப்படுமாற்றலே யாண்டமைதி பெற்றதன்றி வேறு எந்தஹேயாவலம்பனமும் நிலையாமை வெளிப்பட்டது. இவ்வுண்மை விசாரத்தால் தெளிந்தவர்கள் சங்கராசாரியரைச் சிவபெருமானுடைய அவதாரமென்று சொல்லுவதற்கு எங்ஙனமிசைவர்? அச்சங்கராசாரியருடைய கதைகளோவெனின், நானாவிதமாகக் கேட்கப்படுகின்றன. எங்ஙனமெனின், இரண்டு பிராம்ஹணஸ்திரீகள் ஜலந்திரட்டும்பொருட்டுத் தீர்த்தக்கரைக்குச் செல்லுங்கால் அவ்விருவரில் ஒருத்தி சுமங்கலியாயிருந்தவள் மார்க்கத்திலிருந்த பிள்ளையார் கோயிலையடைந்து எனக்குப் புத்திரசந்தான முண்டானால் என்னுடைய சக்திக்கிசைய இரண்டுதேங்காயுடைத்து உன்னையாராதிச்

கிறேனென்றனள். மற்றொருத்தி விதந்துவாயிருந்தவள் முன்னவளைப் பரிகசிப்பதுபோல் எனக்குமொரு புத்திரனுண்டானால் அவளிலிரட்டிப்பாய் உன்னையாராதிக்கிறே னென்று பிரார்த்தித்துக் கொண்டனள். இரண்டுபேருக்கும் விநாயகருடைய பிரசாதத்தால் பிள்ளைகளுண்டாயின. அந்தப் பிள்ளைகளில் விதந்துவுக்குப் பிறந்த பிள்ளையே சங்கராசாரியர் என்று கூறுவதொன்றும். மற்றொன்றோவெனின், சிவகுரு என்னுந் தந்தைக்கும், ஆரியாம்பாள் என்னுந் தாய்க்குங் கேரளதேசத்தில் சங்கராசாரியர் சிவாமிசத்தால் பிள்ளையாகப் பிறந்தாரென் றுரைப்பதேயாம். எந்த ரூபத்தில் பார்த்தாலும் மாதாவினது கர்ப்பசையோகாதி தோஷங்களுக்கு நிவிர்த்தி யுண்டானதில்லை. இன்ன சாமானிய ஜந்துவைச் சிவாவதாரமென்பது எங்ஙனமடுக்கும்? "எல்லார் பிறப்பு மிறப்புமியற் பாவலர்தஞ், சொல்லாற்றெளிந்தேம் நம்சோணேச—ரில்லிற், பிறந்தகதை யுங்கேளேம் பேருலகில் வாழ்துண், டிறந்தகதை யுங்கேட் டிலேம்" என்னு மான்றோருரையை யுணர்ந்தபேர் சிவன் சங்கராசாரியராகப் பிறந்திருந்தொழிந்தாரென்றுரைத்தல் யாண்டிசையும்? இன்னும், மேல் சிவரஹஸ்ய வசனத்தில் அவனுக்கு வேதாந்தவித்தைக ளெம்மா லுபதேசிக்கப்படும் என்று சிவபெருமான் கூறினதும் சங்கராசாரியர் சிவனல்லவென்பதைக் காட்டும். சிவனே சங்கராசாரியராகப் பிறந்ததுண்டாயின், சிவன் சர்வஞ்ஞானபடிச் சங்கராசாரியரும் சர்வஞ்ஞராதல் சாலும். ஆகவே, சங்கராசாரியர்க்குச் சிவனுபதேசித்தல் சாலாது. ஒரு தீபத்தின் மற்றொரு தீபமுண்டாகுமே லிரண்டு மிருட்பகையு மொளிப் பிழம்புமாத லுண்மை யாகையால். ஆகவே, ஒன்று மற்றொன்றுக்கு ஒளியைக் காட்டுவ தவசியமன்றும். சிவன் உமாதேவியார்க்கும் இளைய பிள்ளையார்க்கு முபதேசித்தல்போலாமெனின், அவை லீலாமாத்திர மெனவறிக. அப்படியே யிதனையுங் கொள்வாமெனின், உமாதேவியாரும், இளையபிள்ளையாரும் சங்கராசாரியரைப் போல் யோனித்தழும்புண்டு பிறந்தவரானாகலானும், சங்கராசாரியரைப்போல் விஷ்ணு முதலியோரைத் துதித்து வணங்காதவராகலானும் உமாதேவியார் முதலினர்போல் சங்கராசாரியர் செயல்களையுங்கொள்வது அசங்கத மெனவறிக. விஷ்ணுமுதலினோர் பிறந்திறந்துழலும் பசுக்களாதல் திண்ணமாக, அன்னோரை யுமாதேவியார் முதலினோ ரெங்ஙனம் வணங்குவர்? சங்கராசாரியர் பரகாயப் பிரவேசஞ் செய்திருந்த வோர்காலத்தில் அவருடைய ஸ்வசரீரம் தகிக்கட

படுங்கால் மீண்டு மதனுட்புகுந்து அந்தக்காலத்தில் தம்மைரக்ஷிக்கும்பொருட்டு நரசிங்கமூர்த்தியைத் துதித்து அவரால் பாதுகாக்கப்பெற்ற புதுமை முதலிய பல வாபாசங்களுடையா ரென்பதுண்மையாயினெந்த மதியா லின்ன தோஷங்களை லீலையென யாங்கொள்ளுதலமையும்? இது மாத்திரமேன்றி விஷ்ணுபுஜங்க முதலிய பசுபாரம்ய துதிகளுங்கூறினு ராகலி னித்துணைச் செயல்களை லீலையெனக் கூறுதலடாது! அடாது!! இந்தவுண்மையால், அவர் பாசபந்தியாகிய வோர்பசு வென்பதேயமையும். பசுவான காலத்தும் பாகப்பட்ட பசுவாகாது சாமானிய பசுவேயாகு முண்மையால் தன்னை யொத்த பசுக்களை யெல்லாமும் வணங்கி மகிழ்ந்தனர். "மாலயனு யிந்திரனுய்வாழுவதாய் மாளுவதாஞ், சாலமயல் பார்த்துத் தலையசைப்பர்" என்னுந் திருவாக்கால் சிவஞானிகள் விஷ்ணுமுதலினோர் பதவிகளை மதியார் என்று பெறப்பட்டமையானுங்காண்க. விஷ்ணுமுதலினோர்பா லுபதேசத்தைப் பெற்றுச் சகல கேவலத் தாக்குண்டுழலுமோர் பசுவாகிய சங்கராசாரியர்க்குச் சிவபெருமான் பிரம்ஹவித்தைகளை யுபதேசிக்கின்றார் என்பதை லீலையென்றல் யாண்டிசையும்? அவர் பசுவாதல் பற்றியே அவரறியாமைதொலையச் சிவபெருமான் வேதாந்தவித்தைகளை யுபதேசித்தல் கூடும்! கூடும்!!

இதுநிற்க, மேல்வாக்கியத்தாற் பெறப்பட்ட சங்கரர் வேறு எனவும், மாயாவாத பாஷ்யகர்த்தாவாகிய சங்கராசாரியர் வேறு எனவும் வியவஸ்தை முகத்தாற்கூறுநிற்பாம். அந்த வசனத்தில் என்னுடைய வநுக்கிரகத்தா லொருவன் பிறக்கப்போகிறு னெனவும் அவன் சாங்கரர்களுக்குள்ளே யுத்தமனெனவும், அவனுக்கு வேதாந்த வித்தைகளை யாமுபதேசிப்போமெனவும், அவன் பாஷண்டர்களை யெல்லாங் கடிந்துண்மையை நாட்டுவனெனவும் லோகமாதாவாகிய வுமாதேவியாரைப் பார்த்துச் சிவபெருமான் சொல்லியருளினுராக வெளிப்பட்டது. இதனைப் பரியாலோசிக்கில், சிவாநுக்ரகத்தாற் பிறந்தவொருவர் சிவனுக்கு அபராதங்களைச் செய்யாரன்றோ? (சாங்கரோத்தமஃ) சாம்பவச்சிரேஷ்டரா யிருப்பாரொருவர் சிவனுக்கு அபராதங்களைச் செய்யாரன்றோ? சிவபெருமானுல் வேதாந்தோபதேசஞ் செய்து கொண்டவொருவர் சிவனுக்கு அபராதங்களைச் செய்யாரன்றோ? பாஷண்டமதங்களைக் கண்டிக்கவந்த வொருவர் சிவசம்பந்தமாகிய மார்க்கத்தைக் கடிந்து சிவனுக்கு அபராதங்களைச் செய்யாரன்றோ? இங்ஙனமாக, சங்கராசாரியர் ஏகான்ம

வாதத்தைச் சாதித்து (அஹம்பிரம்ஹாஸ்மி) என்னுஞ் சித்தாந்தத்தைநாட்டிச் சீவன், ஈசன், ஜகத்து இம்மூன்றும் மித்தையெனவும், நான்மாத்திரமே சத்தியமெனவுங் கூறித்திரிந்து, அறியாமைதுக்கங்களோடுங் கூடியதன்னைச் சத்துச்சித்தாநந்த வடிவமாகிய சிவனுகப் புலம்பி யிழைத்த வபராதத்துக்குள்ளாவரெனின், எப்படியோ வச்சிவாபராத சிசுவைச் சிவாநுக்ரகத்தால் வந்தவராகக் கூறுதலமையும்? "நாஹம்தேஹோ ணேந்த்ரியாண் யந்தரங்கே, நாஹம்காரஃ ப்ராணவர்க்கோ நபுத்திஃ, தாராபத்ய க்ஷேத்ரவித்தாதிதூரஃ, ஸாக்ஷீநித்யஃப்ரத்யகாத்மாச் சிவோஹம்" என்று புலம்பி அஹம்சிவம் என்று அறியாமைமேற்கொண்டு பிதற்றிச் சிவாபராதமிழைத்தசேயை யெப்படியோ சாம்பவச் சிரேஷ்டரென்று கூறுதலமையும்? "ஆணவத்தோடத்துவிதமானபடி மெய்ஞ்ஞானத், தாணுவினேடத்துவிதஞ் சாருநாளெந்நாளோ" என்று மகிழும் பெரியோர் சிவனடியவரா? யானேசிவம் என்று மகிழுஞ்சிறுர் சிவனடியவரா? சிவனடியா ரிலக்கணந்தா னென்னை? திருநாவுக்கரசு சுவாமிகள் முதலிய சிவஞானச் செல்வர் மாந்தியவாயிலாய்க் கண்டுணர்க. சிவனில்லை, நானே சிவம் என்றுகூறி யுலகத்தை வஞ்சித்தொழுகிய வவ்வந்தகக்குழவிக்கு எப்படியோ சிவபெருமான் வேதாந்த வித்தைகளுபதேசித்தா ரென்றலமையும்? "நசைவம் நசாக்தோ நவிஷ்ணுர்க் கணேசோ, நசௌரஞ்ச காபாலிகந்தர்சநம்வா, மதம்சர்வமேகம் ஜிதம்கர்மக்ருத்யம், சிதாநந்தரூபச் சிவோஹம் சிவோஹம்" எனக்குழறிச் சைவத்தை மற்றைப் பாஷண்ட மார்க்கங்களோடுதூஷித்த பரமபாஷண்டியை யெப்படியோ பாஷண்ட மதங்களைக்கண்டிக்கப்போகிறுன் என்று சிவபெருமான் கூறுதலமையும்? சங்கராசாரியர் பாஷண்ட மதங்களைக் கண்டித்தவர் என்னுங்கால் சைவமும் அவரால் நிந்திக்கப்பட்டமையால், அசசைவமும் பாஷண்டமதங்களோ டொருசேரக்கழியும். நல்லழகிது. சைவத்தைப் பாஷண்டமாக்கத்தானே சிவன் அமிசாவதாரங்கொண்டு சங்கராசாரியாகவுலகிற்பிறந்தது? ஆச்சரியம்! ஆச்சரியம்! !சிவசம்பந்தத்தைப் பாஷண்டமென்று கடியவந்த சங்கராசாரிியைக் காட்டிலும் பாஷண்டச்சிரேஷ்டாள் கிடையாமையி னச்சங்கராசாரியே முதலான பாஷண்டர் மதங்களைக் கடிந்து சிவனுண்மையை நாட்டிச் சித்தாந்தஞானத்தை யளிக்கவல்ல சைவாசாரிய ரொருவரையே யாண்டுச் "சாங்கரோத்தமஃ" எனவியந்து சங்கரர் என்னும் பெயரால் சிவபெருமான் உரைத்தருளினுரெனவறிக. "சிவனடியேசிந்திக்குந் திருப்பெருகு சிவஞானம், பவமதனையறமாற்றும் பாங்கினிலோங்கியஞான, முவமையிலா

க்கலைஞான முணர்வரியமெய்ஞ்ஞானம், தவமுதல்வர்சம்பந்தர்தாமுணர்ந்தா
ரந்நிலையில்" என்னுமநுபூதியுடைய பெருஞ்செல்வரன்றோ சிவானு
க்ரகத்தால் பூமியில் வரத்தக்கவரும், சாம்பவச்சிரேஷ்டராவாரும்,
சிவபெருமானால் வேதாந்தவித்தைக ளுபதேசிக்கப்பெறும் பாக்கிய
த்தை யுடையாரும், பாஷண்ட மதங்களை யெல்லாங்கண்டித்துச்
சிவஞானத்தை யுலகம்பெற்றுய்ய வருள்வாரும், சிவபெருமானு மு
மாதேவியாருக் கெடுத்திசைக்கும் பெருநலனுடையாருமாவர்?

இதுகாறும் விவகரித்த நியாயங்களால் சங்கரர் கலியில் பிறக்
கப் போகிறார்என்று சிவபெருமான் கூறிய சிவரஹஸ்யவசனம் சங்
கராசாரியரை யுணர்த்தாமையின், அச்சங்கரர் வேறுயாவரென வி
சாரிக்க வருஞ்சங்கையைச் சற்றே யோசிப்பாம். மேல்வாக்கியத்தில்
சங்கரர் கலியிற் பிறக்கப்போகிறு ரென்று பெறப்பட்டமையானும்,
அக்கலியின்னும் பூர்த்தியாகாமையானும் சங்கரர் பிறந்தாய்விட்ட
தென்று யோசிப்பது பிழையாம். கலிக்கு வருடம் நாலுலட்சத்து
முப்பத்திராயிரமென் றேர்ப்பட்ட கணக்கில், இதுவரையில் நாலாயி
ரத்துச் சில்லரையே நடந்தமையால் இன்னும் நாலுலட்சத்து இரு
பத்தெண்ணாயிரம் வருடங்கள் நடக்கவேண்டி யிருக்கின்றன. இந்
தக் கணக்கின்படிக் கலியில் நூற்றெட்டி லொருபாகம் நடந்து இ
ன்னும் நூற்றேழுபாகம் நடக்க வேண்டியிருப்பதாக வேர்ப்பட்ட
து. இவ்வளவு பெருங்காலத்தை யபேக்ஷித்ததுடைய நாம் சங்கரர்
அவதரிப்பதற்குக் காலம் போய்விட்டதே யென்று அஞ்சுவதென
னை? கலிமுதிர முதிரவே பாஷண்ட விர்த்திக்கிடமாகையால் சங்க
ரர் கலியந்தத்திற் பிறப்பாரென்பதே மேலோர் துணிபாம். ஆகவே,
அவரின்னு மவதரிக்கவில்லை யென்பதே நிச்சயமெனவறிக. சங்கரா
சாரி யென்பவர் பிறந்து அநேகமாயுள்ள பாஷண்ட மதங்களை யெ
ல்லாங் கண்டித்து, அத்வைத ஸ்தாபனஞ் செய்தாரென்று சிலர்கூ
றுவதால், அவரே பாஷண்டமத வித்வம்சகரென்ற லமையாதோ
வெனின், அதுபோலியத்துவிதமேயன்றி யதார்த்தாத்வைதமன்று
ம். அவர் மாத்திரமேயன்றிப் பௌத்தசார்வாக பாஞ்சராத்திர மத
ங்களுள்ளு மொவ்வொரு குருட்டுக் குருக்கள் பிறந்து பாஷண்டம
தங்களை யெல்லாங்கடிந்து, அவரவர் மதங்களைத் தாபித்தன ரென்
று அவ்வவ்வபிமானிகள் சொல்லித்திரியும் வழக்கால், சங்கராசாரி
யர் விஷயமாத்திரமே சால்புடைத்தாதலெங்ஙனம்? சங்கராசாரி

யால் தாபிக்கப்பட்டமதம் போலியத்துவிதமாகிய ஏகான்மவாதமே யாகையாலும், அதுவே, மாயாவாதம், அஹம்பிரம்ஹவாதம், பிரச்சின்ன பௌத்தவாதம் என்றுசொல்லப்பட்டுச் சங்கரசங்கிதை முதலிய நூல்களில் நிந்திக்கப் படுகையாலும், அன்ன ஹேயலட்சண மதமாகிய துர்மத சித்தாந்தியைச் சிவரஹஸ்யாதிகள் பூஜ்யமாய்ச் சொல்லு மென்பது நிரஸ்தம். அச்சிவரஹஸ்யம், ஹரதத்தாசாரிய சுவாமிகள், பட்டினத்தடிகள் முதலிய சிவாநுபூதிமான்களையும், அறுபத்து மூன்று நாயன்மார்களையும், இன்னுஞ் சிவோத்கர்ஷ மஹிமா வர்நனங்களையுமே சொல்ல வந்ததாக, அத்துடன் சிவன் சங்கராசாரியாகப் பிறந்தார், செத்தாரென்று சிவாபகர்ஷங்களையும், சைவநிந்தகராகிய சங்கராசாரியையுங் கூறுமென்பது சர்வாபத்தமெனவறிக. ஹரதத்தாசாரிய சுவாமிகள் முதலிய சிமான்கள் ஜகதுத்தாரணார்த்தம் அவதரிக்கப் போகின்றார்க ளென்று சொல்லிய சிவரஹஸ்யம், தமெதிரேக சித்தாந்தியாகிய சங்கராசாரியையு மவருடன் சேர்த்துக்கூறுமென்பது என்னவிந்தை? காடாந்தமமாகிய அஞ்ஞானத்தை யழிக்கும் ஞானமெய்தாதவர்க்குப் பிறவி யொழியாதென்று கூறும் வேதமானது அதைப்பிரகடநமாய்க் காடாந்தமமாகிய ஞானத்தை யழிக்கு மஞ்ஞான மெய்தாதவர்க்குப் பிறவியொழியாதென்று கூறுமென்பது விந்தையாமன்றோ? அங்ஙனமாக, சங்கராசாரியர்கோளை மாற்றவெழுந்த ஹரதத்தாசாரிய சுவாமிகளையும், ஹரதத்தாசாரிய சுவாமிகள் சித்தாந்தத்தை நிந்திக்கவெழுந்த சங்கராசாரியையும் ஒரு நூலிலே தானே பூஜ்யமாய்ச் சொல்லுமென்பது பொருந்தாதெனவறிக. அன்றியும், சிவரஹஸ்யத்தில், இனிஜகதுத்தாரணார்த்தம் பிறக்கப்போகின்றார்க ளென்று கூறியுள்ளவாசாரியர்களெல்லாம் பிறந்தாய் விட்டது என்று யாம்கொள்வாமெனின், இனிப்பிறக்கப்போகின்றவ ரொருவருமில்லையென்று முடியுமன்றோ? அப்படியாயின், இன்னும், நாலுலட்சத்திருபத் தெண்ணாயிரம்வருடங்கள் கழியவேண்டிய விக்கலி தோஷம் எப்படி நிவிர்த்திபெறும்? இக்கலியினற்பகாலமே யிப்போதாயிருக்க, இவ்வளவிலேதானே யெவ்வளவு விபரீதங்கள் விளைந்திருக்கின்றன? மற்றையதிகபாகங் கழிவதற்குள் ளெவ்வளவு அநர்த்த முண்டாகும்? அப்போதுவந்து அந்த விருட்டைச் சேதிப்பவர்யாவர்? இனியொருவரும் வரவேண்டியதில்லை யென்று கொள்வாமெனின், கலிக்குச் சமாப்தமன்றோ சொல்லவரும்? இப்போதுள்ள நிலையேயன்றி யின்னுங்

கெடாதெனின், இப்போதுள்ள நிலைதானென்னை சுத்தமா? அசுத்தமணமே கமழ்தலாலின்னும் அதிகரிக்குமென்பதே திண்ணம். இனித் தோஷநிர்த்தி யுண்டாகாதபோது அதுகலியன்றும். அப்போது கலிக்கு வரையறுத்துரைத்த காலமும் பிழையாம். இன்னபல தோஷங்களை விளைக்குங் கலிபுருஷனாகிய சங்கராசாரி கதையைச் சிவரஹஸ்யத்தில் நுழைப்பது அசங்கதம்! அசங்கதம்!!

இதுநிற்க, சங்கராசாரியைச் சிவாவதார மென்று கூறித்திரியும் விவேகிகள் தாம்பிரமாணமாகக்கொண்ட சிவரஹஸ்ய மினைத்தெனவறியாது, அது ஸ்காந்தம் சங்கர சங்கிதையிலுள்ளதாகக் கூறி மகிழ்கின்றனர். ஸ்காந்தம் ஆறுசங்கிதைகளாகப்பிரிந்து, அவற்றுளொன்றாகிய சங்கரசங்கிதை முப்பத்திரண்டு கண்டங்களாய் வெளிப்படும். அந்த முப்பத்திரண்டு கண்டங்களில் சிவரஹஸ்யகண்டமென்ப தொன்றும். இதுவே குமாரசம்பவ முதலியவற்றை யுடன்கொண்டு ஸ்காந்தம் என்னும்பேரால் வழங்கப்பட்டுவருகின்றது. இதில் சங்கராசாரி மாந்மியமுதலிய தப்புக்கதைகள் மருந்துக்குங் கிடையாது. ஆயின், மேலிடங்களில் சிவரஹஸ்யம் என்றெடுத்து விவகரித்தநூல் யாதெனின், அது இதிஹாசமெனவறிக. வேதம், ஆகமம், புராணம், இதிகாசம் என்பனவற்றுள் வேதம்நான்கும், ஆகமம் இருபத்தெட்டும், புராணம்பதினெட்டும் என்றபடி இதிகாசம் நூற்றிருபத்தாறு என வெளிப்படும். அவற்றுள் சிவரஹஸ்யமொன்றே பிரத்தியட்சமும், ஏனையன வப்பிரத்தியட்சமு மாயின. பிரத்தியட்ச கதமாகிய சிவரஹஸ்யந்தானே அமிசங்களைக்கொண்டு விளங்கும். சிவரஹஸ்யம் ஒன்பதாவது அமிசம் பதினாறுவது அத்தியாயத்தில் சங்கரர் அவதாரங் கூறப்பட்டதென்பது இதிகாசமாகிய சிவரஹஸ்யத்தாலன்றிப் புராணாந்தர்க் கதமாகிய சிவரஹஸ்ய கண்டத்தாலன்றும். இவ்வுண்மையை ஸ்காந்த மஹாபுராணத்தானும், சிவரஹஸ்யமென்னு மிதிகாசத்தானுங் கண்டறிந்தடங்குக. சிவரஹஸ்ய மினைத்தெனவறியாது குழறிவழியு மாபாசங்களைப் (* பேதவாத திமிரபாஸ்கரம்) என்னும்பேரா லொருகபோதிமகன்

* இக்கபோதித்திரட்டில் கேரளதேசத்தில் சகலவென்னுங்கிராமத்தில் சிவன் அம்சத்தால் சங்கராசாரியாகப் பிறந்திருந் தொழியப்போகிறாரென்று ஸ்காந்தமஹாபுராணத்திற் சொல்லப்பட்டதாகச் சிலசுலோகங்கள் கற்பித்தெழுதப்பட்டிருக்கின்றன. ஸ்காந்தம் ஜகத்பிரசித்தியான பிரத்தியட்சப் பிரமாணமாக வேனோ ஆன்றிவிசாரியாம லதிலுள்ளது மில்லாததுங் கண்டிகழ்ந்து காறியுமிழ்வார்களேயென்று யோசியாமல் வரைந்துவிடுத்தனர். ஆச்சரியம்! ஆச்சரியம்!!

வெளியிட்ட கசுமாலத் திரட்டொன்றினும், (சங்கரவிஜயம்) என்னும்பேரால் மொழிபெயர்த்து வெளியிடப்பட்ட சங்கராசாரி கதையாகிய தமிழ்ச்சுவடி யொன்றினுங் கண்டுதெளியலாம். மேலுண்மை நியாயங்களால், சிவரஹஸ்யத்திற் சிவன் சங்கராசாரியாகப் பிறக்கப்போகிறாரென்று கூறப்பட்டுள்ளதென்பது அபத்தமெனவும், ஏகாத்மவாத பாஷ்யகர்த்தாவாகிய வச்சங்கராசாரியரே சிவரஹஸ்யத்திற் கூறப்பட்டவரென்பது ஹேயகிராஹ்யமெனவும், அதனாற் பெறப்பட்ட சங்கரர் இன்னுமவதரிக்க வில்லையெனவும், இனிக் கலியந்தத்திலே தானே யவரவதாரஞ் செய்வரெனவும், அச்சிவரஹஸ்யமென்பது இதிகாசத்தி லொன்றெனவும், அதற்குவேறாகச் சிவரஹஸ்ய கண்டமென்பதொன்று ஸ்காந்தம் சங்கரசங்கிதையிற் கூறப்பட்டுள்ளதெனவும், அதில் சங்கராசாரிகதை முதலிய வாபாசங்கள் கிடையாவெனவும் நிச்சயிக்கப்பட்டது. மேல்விசாரத்தால் நின்மலராகிய சிவபெருமான் யோனிஜராய்ப் பிறந்துழலாரென்னு முண்மை வெளிப்பட்டமையால், இளைய பிள்ளையாருடைய வவதாரமாகிய ஞானசம்பந்தமூர்த்திகளுக்கு யோநிஜத்வங்கூறி யழிவார்கோள் குணமின்மையாய் முடிந்தது. இன்னும் விரிக்கிற் பெருகும்.

இனிப்பிள்ளையார்க்கு உமாதேவியார் திருமுலைப்பாலை யூட்டியபோது முலைகொடுத் துண்ணச்செய்யாது பொற்கிண்ணத்திற் கறந்தூட்டியதென்னையெனின், "அழுகின்றபிள்ளையார் தமைநோக்கி யருட்கருணை, யெழுகின்ற திருவுள்ளத்திறையவர்தா மெவ்வுலகுந், தொழுகின்றமலைக்கொடியைப் பார்த்தருளித் துணைமுலைகள், பொழிகின்றபாலடிசில் பொன்வள்ளத் தூட்டென்ன" என்னுந் திருவாக்குண்மையால் நம்பெருவாழ்வாகிய ஞானசம்பந்தர் மூன்றுவயசுடைய குழந்தையாய்க் குளப்படிக்கரையி லிருந்தழுதபோது பெருமானுடைவந்துகண்ட பிராட்டியாருள்ளங் குழைந்து தமதருமைத் திருக்கரங்களாலெடுத்து மார்பகத்தணைத்துக் கொண்டனர். அப்போது அவர் துணைமுலைகளினின்றும் பாலமுதம் பீரிட்டு வழிந்தொழுகலால், அது அவலமாகாதபடிப் பொற்கிண்ணத்திற் கறந்தூட்டினரெனவறிக. "துணைமுலைகள் பொழிகின்ற பாலடிசில்" லென்றமையானே மேலுண்மை விளங்குமென்க. பிராட்டியார் நீண்டநாள் பிரிந்தவாராமை மேலிடக்கண்ட விளங்காளையாகிய நங்குருராயனிடஞ் சேர்த்த வன்பின்மிகுதிப்பாடே யவர் திருமுலைகளில் பால்சுரந்தமையறிக. "இல்லாமுலைப்பாலுங் கண்ணீருமேந் திழைபா, னல்லாயுளவாமா னீர்நிழல்போ-லல்லா, வருவாங்

MAHAMAHOPADHYAYA
Dr. U. V. SWAMINATHA IYER LIBRARY

நின்றனை "யாரறிவார்தானே, யுருவாகித் தோன்றலேதுற்று" என்னுந் தி
ருவெண்பாவை யுய்த்துணருங்கால் இன்னதன்மையனென் றறிவ
ரியானாகிய சிவன் உயிர்கண்மாட்டிரங்கிக் கொண்டகோலங்களை யு
வமையால் விளக்கவேண்டிக் காட்டினமையே வெளிப்பட்டவாறறி
க. "எந்திய விழைகளை யுடையாட்குக் குழவிமாட்டுளதாகி வருவதாகிய வன்
பினைப் பிறரறியுமாறு வெளிப்படுத்து மவ்வன்பி னுருவாகிய முலைப்பாலுங் க
ண்ணீரு மவண்மாட்டுக் குழவியைக்காணுமுன் னில்லவாய்ப் பின்னுள்ளவாம்"
எனவிசுழும் பொருண்மையால் முலைப்பாலுங் கண்ணீரும் அன்பை
விளக்கு மடையாளங்களாயின. அன்பினுருவாய்த் தோன்றும் பால
வ்வன்பின் மிகுதிப்பாட்டாற்பொங்கி மேல்வழிதலி னம்மையார்க்கு
ஞானசம்பந்தரிட மதிகரித்த வன்பின்றன்மை நிகழ்ந்தமைவெளிப்
பட்டது. இவ்வுண்மை "சுரந்ததிருமுலைக்கேதுய்ய திருஞானஞ், சுரந்து
ண்டார் பிள்ளையெனச்சொல்லச்-சுரந்த, தனமுடையா டென்பாண்டிமாதே
விதாழ்ந்த, மனமுடையாளன்பிருந்தவாறு" எனவும், "இலைபடர்ந்த பொய்
கை யிடத்தழுதல்கண்டு, முலைசுரந்தவன்னையோ முன்னின்-னிலைவிளம்பக்,
கொங்கைசுரந்தவருட் கோமகளோசம்பந்தா, வியகுயர்ந்தாரார்சொல் லென
க்கு" எனவும் வருந்திருவாக்குகளானும் வெளிப்படுமென்க. மங்கல
நாண் பொலிவெய்தி நிலைபெறச் சமண்குண்டரிட்ட தீயைப "பைய
வேசென்று பாண்டியற்காகவே" என நங்குருநாதன லருளபெற்ற நி
ரதிசயப் பெருஞ்செல்வமுடையாராகு மங்கையர்க்கரசியாக்கும
பிராட்டியார்க் குற்றபடி யெய்தினமையே மேல்விளக்கியவாறறிக.
சம்பந்தப்பிள்ளையார் திருவாலவாய்த் திருக்கோயிற் கோபுரவாயிலி
லணையுங்காலெதிர்ப்பட்ட பாண்டிமாதேவியா ரோர்புறமொதுங்கி
யஞ்சலிகூப்பிநின்றனர். அப்போது குலச்சிறையாராகு மந்திரியார
வரைச் சுட்டியிவரே பாண்டிமாதேவியா ரென்றவளவில் சுவாமிவி
ரைந்து தமதுமெல்லிய சிறியபூம்பதங்கள் பூமியிற் பொருநதநடா
து நெற்றியிற் சுட்டியணிந்து கண்களின் மையீட்டிவிளங்கிய தமழ
ளங்குழவிப்பருவத் திருக்கோலமவர் கண்டு மகிழ்வெய்த வருகேசே
ரலுங் கண்களி னீர்ததும்பத் திருமுலைகளிற் பாலசுரநதிட வவளை
வணங்கி யெம்பெருஞ்செல்வமே யெனவாழ்த்தி யிருகரங்களாரவெ
டுத்தணைத்து உச்சிமோந்து முத்தமிட்டு மகிழ்வெய்தினர். இவ்வுண்
மையநுபூதியை "அன்பிற்குமுண்டோ வடைக்குந்தாழார்வலர் புன்கணீ
பூசறரும்" என்பதனானுமறிக. இதனால், உமா[illegible] பியார் ஞானச[illegible]
தருக்கு முலைகொடுத் துண்ணச்செய்யாது பொற்கிண்ணத்திற்
றூட்டின காரணமினிது வெளிப்பட்டது.

இதுகாறும் விவகரித்த வுண்மையால் அன்பின்மேலீட்டாற் சுரந்தொழுகிய பாலுக்கு வீண்போக் குண்டாகாதபடிப் பொற்கிண்ணத்திற் கறந்தூட்டினமையேயன்றி யத்திருமுலைப்பா லமுதத்தினருமைப்பாடும் வெளிப்பட்டமை காண்க. "சமந்தேவீ ஸ்கந்தத்விபவதந பீதம் ஸ்தநயுகம் தவேதம்நஃ கேதம் ஹரதுதத ஸம்ப்ரஸ்நுதமுகம், யதாலோக்யாசம் காகுலித ஹ்ருதயோஹாஸ ஜநகஃ ஸ்வகும்பௌ ஹேரம்பஃ ப்ரவிம்ருசதி ஹஸ்தேநஜடிதி" என்று சங்கராசாரியர் கூறியவாக்கியத்தின் பொருளைநோக்குங்கால் "கித்தரொருபக்கமயினிற்களிறுள் வட்டமுலைநிற்குமெழிலிற்றனதுசீர், மத்தகமெனத்தனிலயிர்த்தொருகரத்தைமுடி வைத்துறவுறத்தடவுமான், முத்தமுலைசெப்புவதெனக்களிறுபிற்குமரன்முற்புதல்வர்துய்த்தவமுதா, லத்தலைமைபெற்றனரதிற்றிவலைகிட்டினுமெனற்பவுயிர்முத்திபெறுமே" என்று பெறப்பட்டது. இதில்விநாயகக்கடவுளும், முருகக்கடவுளுமாகிய நின்மக்களிருவரும் நினது திருமுலை யமுதுண்டமையா லன்றோரக் கடவுட்டலைமை பெற்றனரெனவும், பாலமுதமத்தனையுமன்றி யதிலோர்திவலையெனக்குக் கிடைப்பினு மதுவேபோதுமாகியெனதற்பத்தன்மையுடைய வுயிர் முத்தியைப் பெறுமெனவும் விதந்தமைவெளிப்பட்டது. இதை யுய்த்துணருங்கால் அவ்விருவரு நின்புதல்வராகையால் அவர்க்குன் றிருமுலையமுதம் பகிர்ந்தனையெனவும், அவர்க்கவ்வளவு சாதாரணமாக வைது கொடுத்தது அவர் நின்னில்வேறாகாத விபூதிகளாகு முண்மையாலெனவும், அவரைப்போலன்றி விஜாதிப்பொருளாகி மலத்திரயத்தாக்குண்டுழலும் யான் பசுவாதலால் அப்பாலமுதம் யான் பெறக்கிடைப்பினு மதுபாசமாகிய குற்றத்தையே போக்குமன்றி நின்மக்களிருவரும்பெற்ற கடவுட்டலைமையைப் பயவாதெனவும், தாயினுடைய முலைப்பாலமுதம் பிள்ளைகளுக்கன்றி யேனையோர்க்கு வழங்க வுரிமையல்லாமையால் அன்னியனாகியயா னவாமிகுதியால் விரும்பினு மதுகிடைப்பது அருமையேயெனவும், அவர் பிள்ளைகளாதலாலவர்க்கு நீயேவலிந்து நின்றிருமுலையமுத மருத்தினையெனவும் அவரை யொத்தவுரிமை யெய்தாதவனாய்ப் பாசஜாலத்திற்கட்டுண்டுழலும் பாமரனாகியயான் வலிந்து வாய்திறந்துகேட்டு மிதுகாறும் வழங்காமையே யினிவழங்காயென்பதைக் காட்டுமெனவும், நீவழங்காயென்றறிந்த பின்னரு நின்பாலிரப்ப தென்னாசையிருந்தபடியெனவும் வெளியாகின்றது. இத்துணை யருமைப்பாட்டினதாகு மம்முலையமுதம் பிராட்டியார் திருமுலைகளிற் சுரந்தபோ ததிலோரற்பமு மலைப்படாதவழிப் பொற்கிண்ணத்திற் கறந்தூட்டினமை யங்கீகரி

க்கப்பட்டது. மூத்தபிள்ளையா ரிளையபிள்ளையா ரிருவருக்கேயன்றி யேனையோர்க்குப் பயன்படுத்தற் பாலதல்லாத முலைப்பாலைக் காழிப்பிள்ளையார்க்குக் கனிந்தூட்டியகருத்து மேலெடுக்காட்டிய காரணக்கருது முகத்தானே வெளிப்படுமென்க. "அமுதேவக்ஷோஜா வம் ருதரஸம்மாணிக்ய குதுபேனைஸந்தேஹ ஸ்பந்தோநக பதிபதாகே மநஸிநஃ, பிபம்தௌ தௌயஸ்மா தவிதிதவதூ ஸங்கரஸிகௌ குமாராவத்யாபித் விரதவதனக் ரௌஞ்சதளநௌ" என்னும் வாக்கியத்தை நோக்குங்கால் "முக்கணிறைவர்க்குமயன் முற்றுவெழின் முற்றுமுலை முட்டியசுரப்பொழுகுபான், மக்களிருவர்க்கருள வக்களிறுமிக்குகனு மட்டிளமை முற்றுகிலரா, லக்கடவுதித்தவமு தத்தினையெடுத்ததி லடைத்திருகண் முத்திரையின்வாழ், செக்கர்மணிமெய்க்கலச மத்தனையுன் வட்டமுலை செப்பவமலைப் புதல்வியே" என்று வெளிப்படுகின்றது. இந்தவாக்கிய வுண்மையால் பிராட்டியாருடைய முலைப்பமுதநுகர்ச்சியால் அவர் புதல்வர்க்கிளமை மாறுதாநின்றமை நைஜமெனவெளிப்பட்டது. இவ்வுண்மையன்றே யப்புதல்வர்க்கும் பிதாமாதாக்களைப்போலவே வயோதிகமுதலிய தேகவிகாரங்களும், ஜநநமரணவத்தைகளு முண்டாகாமற்போயின? எங்காவது வேதமுதலியகலைகளில் ஸ்கந்தகணேசர்களுக் குற்பத்திலயங்கள் கூறப்பட்டிருக்கின்றவா? என்கூறும்? அவர்நின்மலசொரூபிக ளாகையால். இப்படியேயன்றோ நம்பெருவாழ்வாகிய காழிவிரகனிடமுங் கருதற்பாலது? "தவஸ்தந்யம் மந்யேதரணிதரகந்யே ஹ்ருதயதஃ பயஃ பாராவாரம் பரிவஹதி ஸாரஸ்வதமிதி, தயாவத்யாதத்தம் த்ரவிடசிசு ராஸ்வாத்ய தவயத்கவீநாம் ப்ரௌடாநாமஜநிகமநீயஃ கவயிதா" என்னும் வாக்கியத்தால் "தருணமங்கலையுனது சிந்தைதழைந்த பாலமுதூறினு, லருணகொங்கையிலதுபெருங்கவி யலைநெடுங்கடலாகுமே, வருணநன்குறு கவுணியன்சிறுமதலையம்புயல்பருகியே, பொருணயம்பெறு கவிதையென்றொரு புனிதமாரிபொழிந்ததே" என்று பெறப்பட்டமையை நோக்கின் மேல்வாக்கியங்களில் விதந்துரைத்த வுண்மையை யுறைப்பித்தமையே வெளிப்பட்டது. எங்ஙனமெனின், இதில் பிராட்டியாருடைய பாலமுதூறிய திருமுலையைப் பயோததியெனவும், ஞானசம்பந்தரை மேகமெனவும், அவர்செய்தருளிய தேவாரத்திருப்பதிகங்களை மாரியெனவு மலங்கரிக்கப்பட்டது. எனவே, லோகமாதாவின்து திருமுலையாகிய பாற்கடலிற் கவுணியர்தலைவனாகிய ஞானசம்பந்தனென்னு மேகமான்து படிந்துண்டு மேலெழுந்து தேவாரமாகிய ஞானமழையைப் பொழிந்தது என்பதுவெளிப்படை. மேகம் கடலிற்படிந்து ஜலாகர்ஷணஞ்செய்து பின்னர்

மழை பொழிவது பயிர்கள் தழைத்தோங்கற் பொருட்டேயாகை யாலப்பயிர்த்தானத் தியானே முதலாகப் பல்சீவர்கள் பெற்றுள்ளவரெனப் பொருளுணர்வது தொக்கினின்றமை காண்க. பயிர்த்தானத்திற் போந்து மழையை யெதிர்பார்த்திருக்கு முயிர்வர்க்கத்துட் டானுமொருவரென்பதை "அதிற்றிவலைகிட்டினு மெனற்பவுயிர் முத்தி பெறுமே" என மேல் வாக்கியத்திற் கூறியிருத்தலே காட்டும்.

மேலுண்மை விளக்கத்தால் ஞானசம்பந்தர் மூப்புமரண முதலிய விகாரங்களெய்தாத மலமுத்தரென்பது சொல்லாமேயமையும். அவர் பிராட்டியாருடைய திருமுலையமுதுண்ட முருகக்கடவுளது திருவவதார மாவதோடு, அவ்வபராவதாரத்திலும் பிராட்டியார் திருமுலைப்பாலை யுண்டருளிய பெற்றியால் விநாயகர், ஸ்கந்தர், ஞானசம்பந்தரென்னு மூவரேயன்றிப் பிராட்டியாரிடம் பாலமுத முண்டாரொருவரு மின்மையா லன்னோர்க்கும் பிராட்டியார்க்கு முள்ள சம்பந்த மினைத்தென விவேகிகளறியாமற் போகார். இவ்வருமை யெல்லாங் கண்டே யன்பினெழுகிய சங்கராசாரியர் "அதிற்றிவலைகிட்டினும்" என அம்மையாரிடமிரந்தது அவர் புதல்வரைக் குறிப்பித்த தெனினும் அமையும்! அமையும!! விஜாதித தன்மையானின்றிருமுலைப்பாலை யெனக்குப் பகிர்ந்திலையேனு நின்சிறுவராவது அவர் பெற்றுக்கொண்ட வதிகபாகத்திலோரற்பமேனு மவர் குழந்தைத் தன்மையா லருமைநோக்கா தெனக்குக் கொடுப்பரேல யானுய்வனெனப் பிராட்டியாரிடம் விண்ணப்பித்தலே சாலும். ஈண்டு புதல்வரெனப் பொதுப்படக்கூறினுமது ஞானசம்பந்தரையே சிறப்பு வகையாற் பற்றுமென்க. விநாயகரும், ஸ்கந்தரும் ஞானம், கிரியையென்னு மிரண்டினம்சங்களைக் கொண்டுவந்தவரும, ஞானசம்பந்தர் கேவலம் ஞானமாத்திரமா யவதரித்தவருமாகையா லிந்த மூன்றவசரங்களிலுங் கிரியாசம்பந்த மொழிந்த சுத்தஞானமூர்த்தியாகிய நம்ஞானசம்பந்தப் பிள்ளையே ஞானிகளால் சேவ்யமானராதலு சாதிக்கப்பட்டது. இவ்வுண்மையானே சங்கராசாரியர் விரும்பிய முத்திக் கேதுவாகிய ஞானப்பிரதாதாவாயுள்ளவர் ஞானசம்பந்தமூர்த்திகளே யென்பனதப் புமேபோதகி, மேகம், மழை, பயிரென்னு முவமைகளாலவர் விதந்துகாட்டிய வற்புதவாக்கியங்களே சான்றுரைக்கும். இவ்வுண்மைக கருத்தே மேல், உ௪-வது பக்கத்தில் (ஞானா ம்சோ) வெனயாம் காட்டிய வாக்கியத்தினு மேலோர் கிரகிப்பரென்க. குகாமியனும் சுப்பிரமணியக்கடவுள் ஞானக்கிரியா சொரூபராயுள

லவராகவி னவருடைய கிரியாம்சநிற்க, ஞானம்சமே சம்பந்தப்பி ள்ளையாராக வவதரித்த வுண்மையே யங்ஙனம் பிரித்தோத விடஞ் செய்ததெனவறிக. சங்கராசாரியர் கொண்டபடியே "தலைப்பான்மை மிகப்பெரிய காழிஞானசம்பந்தர் தம்பிள்ளைத் தனத்தினுலே, முலைப்பாலைப் பகிராதேதாமே யுண்டு முத்தமிழும் பாடியறமுதியரானுர்" என்று தத்து வராய ரென்னும் பெரியவரொருவருங் கூறினமை காண்க. குழந் தைகள்கையி லேதாவதொன்றுகொடுத்தா லதை யார்க்குங்கொடா மல் தாமேயுண்ணும் வழக்கேபோல ஞானசம்பந்தருங் குழந்தை யாகையா லவரெமக் கொன்றுந்தராமல் முலைப்பாலமுதைத் தாமே யுண்டு ஞானப்பிரகாசராயின ரென்று துதித்தமையேசாலும். அ ல்லது சிறுபிள்ளையாகையால் தாமேயன்றிப் பிறரொருவருந் தம் மைப்போற் பிரகாசமானராதல் கூடாதாகப் பொறாமை வகித்து அ ம்முலையமுதத்தை யவரேயுண்டு விட்டனரெனக் கூறினும் பொரு ந்தும். (தாமேயுண்டு) என்றதனுல் அவரையன்றி அதுயார்க்கும் வழ ங்க வுரிமையல்லாத பெற்றிமைத்தாய சீர்ப்பாடு வெளிப்பட்டமை காண்க. இன்னவருமைகளி லன்புபாராட்டலொழிந்து மலவுறைப் பேறித் தேம்பித்திரியுஞ சோம்பர்சிலர் சங்கராசாரியர் சௌந்தரிய லகரியில் திரவிடசிசுவென் றெடுத்துப் புகழ்ந்தது கவுணியர் தலைவ ராகிய சம்பந்தமூர்த்திகளை யன்றெனவும், தான்ஜாதியில் திராவிட ராகையால் தன்னையே யப்படிப்புகழ்ந்து கொண்டாரெனவும், அந்த விருத்தாந்த மேதெனில், தான் எல்லாமதங்களையும் கண்டித்துக் கொண்டு வருகையில் சக்திபாரம்யங்களைக் கூறுஞ் சாக்தேயத்தை யுங் கண்டித்து விட்டாரெனவும், பின்னரோர்பகல் சங்கராசாரியர் பசியாவிளைத்து மிகவருத்தத்தோடு மார்க்கத்திற் போய்க்கொண்டி ருக்கையில் காலிடறி வீழ்ந்து மூர்ச்சித்தாரெனவும், அப்போது கூடையின் மோர்கொண் டெதிரிலோர் பெண்வரக்கண்டு அவளை நோக்கிக் கொஞ்சம் மோர்தரும்படிக் கேட்டனரெனவும், அதற்கவ ளிங்கெழுந்துவா தருகிறேனென்றபோது எனக்கெழுந்துவரச் க்தியில்லை யென்றனரெனவும், அப்போதவள் பரிகசித்துச் சக்தி யென்ப தொருபொருளில்லையென்ற நின்சித்தாந்த மெங்கே காட்டு திபார்ப்போ மென்றுரைத்தவளவில் வெட்கிநின்றன ரெனவும், பி ன்னரந்தப் பெண்வடிவமாறி யுமாதேவியாராகத் தரிசனங்கொடுத் து அவர்க்குத் திருமுலைப்பாலைக் கொடுத் தாபசரித்தனரெனவும், அதனு லுமைதருபாலுண்ட மைந்தராய் நின்ற தம்மையே புகழ்தல் சாலுமெனவும் ஞானசம்பந்தரைச் சங்கராசாரியர் துதித்தாரென்

பதைப் பரிபவமாய்க் கொண்டகொடுமையால் சமாதானஞ் சொல்லி மகிழ்வர். இந்தக் கபோதிக்கதையை யோசிக்குமிடத்து வேறே யாபாச மவர் தேடிக்கொள்ள வேண்டியதின்றாம். எங்ஙனமெனின், அவர் வெளியிட்ட குருட்டுக்கதைகளில் சங்கராசாரியர் சிவனுடைய வவதாரமென்று கூறியதை மறந்து அந்தோ சிவன் சங்கராசாரியாகப் பிறந்து அவர் தேவியாருடைய ஸ்தன்யபானஞ் செய்தாரென்று புலம்பவந்த புதுமையே புதுமை. பிள்ளை முலையுண்பதே யன்றிப் புருஷனுண்பது எங்குள்ள முறைமை? ஞானசம்பந்தர் பிள்ளையாகவே, அவருண்டாரென்பது சர்வசம்பிரதிபன்னமாதல்காண்க. இதை முறைதப்பி விவகரிக்க விடமுண்டேல் தமையன் தம்பியினுடைய தேவிமுலையையும், பிதாமகனுடைய தேவிமுலையையு முண்ணுதலுங்கூடும். இன்ன வசம்பிரதாயங்களும் அசப்பயங்களு முண்டாகும் பெற்றிமைத்தாய சங்கராசாரியர்செய்த தேவியினுடைய ஸ்தன்யபானம் சர்வாபத்த மெனவறிக. அன்றியும், சங்கராசாரியர் முலைப்பாலுண்டதாகக் கூறவந்தகாலம் அவருடைய குழந்தைப் பருவத்துமன்றி முதிர்ந்த பருவத்திலென்றும் பெறப்படுகையாலது கேவலம் மூடர்கூற்றெனவே முடிந்தது.

இன்னும் பரியாலோசிக்கில் சங்கராசாரியர் சாக்தேயத்தைக் கண்டித்தா ரென்பதும் பொய்யாம். தேவியாரால் பரிபவத்தை யெய்தினா ரென்னு முண்மையால். ஆகவே, காளன், கடம்பன், முத்தன் என்னு நடுவீதிராயர்களிடமே யவாதனது செங்கோல் செலுத்தினராக வெளிப்பட்டது. இன்னும், தேவியின் முலைப்பாலையுண்ட பின்னரன்றி யதற்குமுன்னரே மதங்களைக் கண்டித்து வந்தாரென்பதனாலவற்றைத் தனதஞ்ஞானதசையி னடத்தினராகக் கொள்ளவரும். அதனா லவர் பாலுண்பதன்முன் செய்தயாவும் பயனற்றன வென்றே நிச்சயிக்கப்பட்டன. பாலுண்டவனந்தர மெனக்கொள்வாமெனின், அங்ஙனமாயினோர் தோஷமு மவர்பா லெய்தாமைவேண்டும்? பாஷ்யகிருத முதலான யாவத்காரியமுஞ் செய்து முடித்த பின்னரோர்கால் கோவிந்த பகவத்பாதரென்னுந் 'தனது ஆசாரியரைக் 'காணும்படியான வுத்தேசத்தா லவரைத்தேடிச் சென்றவளவி லவ்வாசாரியர் சங்கராசாரியர் தம்மை நோக்கி வருகின்றாரென்று முன்னதாக வறிந்து வருகின்ற சீடர்தம்மைக் காணுதவழித் தமக்குமவர்க்கு மிடையே திரையொன்று போடுவித்தனர். உடனே சங்கராசாரியர் வந்து திரைக்கு வெளியிலேதானே யிருந்துகொண்டு தம்வர

வை யறிவித்தனர். அப்போதுள்ளிருந்தகோவிந்தயோகிகள் தரிசன ந்தரமாட்டோ மென்றனர். அதைக்கேட்ட சங்கராசாரியர் பயந்து தேவரீருடைய திருவடிகளுக்கு அடியேன் செய்தவபராதம்யாது? எனவினவினர். எம்மிட முபதேசத்தை யடைந்தநீ முற்றும் விபரீத மாய்க் கிரகித்து உலகமெல்லாம் அவதியிலாழ்ந்து சிவபக்தி கெட் டவலப்பட்டொழியச் செய்தனையாகையால் அவ்வபராத மென்னை ப் பற்றுதவழியே யுன்னையென் கண்ணாலும் பார்க்க விசைந்திலே னென்றறிவித்து, அவ்வுண்மையை நீயறியவேண்டி னிதோசற்று நே ரத்திற் காட்டுகிறோம் பாரென்று திரைக்குள்ளிருந்தபடியே தமது வலது காலைத் திரைக்குவெளியில் சங்கராசாரியர் பார்க்கும்படியாக நீட்டினர். அப்போது சங்கராசாரியர் மகிழ்ந்து ஆசாரியருடைய வொருபாதத்தையாவது காணநேரிட்டதேயென்று அந்தப் பாதத் தை வணங்கிப் பின்னர்த் தனதிருகரங்களாலு மெடுத்துக் கண்களி லொற்றிக்கொள்ளப் போயினர். அங்ஙனஞ் செய்கையி லந்தக்கால் திரைக்குவெளியி லெவ்வளவு பாகம் நீட்டப்பட்டுத் தனது கட்புல னுக்குத் தோன்ற நின்றதோ வதுவரையிலழுகிச் செந்நீர்தோய்ந்து புழுக்கணெளிந்து காணப்பட்டது. அதனா லயர்வெய்திநின்ற சங்க ராசாரியரைக்கூவி யென்காலில் நீட்டியவரையி லுன்கண் பட்டபா கத்துக்கு வந்தகதி யிதுவாகுமானா லென்னைமுற்றும் நீபார்க்கநேரி டுங்கா லெனக் கென்னகதி யுண்டாகலா மென்பதை நீயேயோசித்து ப்பாரென்று ஆசிரியர்கூறினர். அவ்வமல வாசகத்தைக்கேட்ட சங் கராசாரியர் நடுங்கி மஹாபாபியாய்விட்ட வெனக் குய்வகையாதெ னவவரைப்பலவாறு துதித்து வணங்கி நிற்கையில், சற்றேயிரங்கி யிம்மலவுறைப்பு இன்னுஞ் சிலதினத்தில் நீங்கும், அந்தக்காலத்தில் நல்லசைவாசாரியர் தரிசனங்கிடைக்கும், அப்போது யாமவருடனி ருப்போமாகையா லுனக்குத் தரிசனந்தருங் காலத்தைச் சொன் னோம் போதியென்றனர். அக்கட்டளையைபெற்று விடைகொண்டு திரும்பி யாதுசெய்தற் பாலதென வெண்ணிக்கொண்டிருக்கையிலே தானே பூர்வமலத் தாக்கினுறைப்பால் பழையபடியே சைவநிந்தை சிவாகமநிந்தை முதலிய தீமைகளிற் சேர்ந்து காலங்கழித்து வரு கையில், சிலதினத்தில் ஆசாரியருடைய வருளுப்பாட்டின்படி ஸ்ரீக ண்டாசாரிய மூர்த்திகளைத் தரிசிக்க நேரிட்ட பிரபாவ விசேஷத்தா ல் சமஸ்ததோஷங்களும் நிவிர்த்தியடைந்து (அபயாதகஷமை) என் னுங்கிரந்த மொன்றியற்றி ஸ்ரீகண்டமூர்த்திகளுக்குத் தானவராயு டனெழுந்தருளியிருந்த கோவிந்த பகவத்பாத மூர்த்திகளையுங்

கண்டு, அப்போது ஒருதோஷமுமாசாரியர்காலில் காணாமையால் மகிழ்வெய்தி நமதுபாபம் க்ஷயித்துப்போய்விட்ட நலத்தைக் காட்டவேண்டி நம்மாசாரியர் செய்த லீலையாகுமிதுவென வாசாரியரிடம் வைத்திருந்த அன்பினுறைப்புக்கேற்பச் சமாதானங் கொண்டு நலமெய்திவாழ்ந்தனரென்று ஸ்ரீகண்ட விஜயத்திற் கூறப்பட்டமையாலின்னதோஷங்களுமாதேவியார் பாலுண்டவரிடமுண்டாதல் செல்லாமையின், அவரம்மையார்பா லுண்டாரென்னுமசங்கதமாங்மியமவலப்பட்டமைகாண்க. இந்தக்கதை யெழுதிய நூலை யாமங்கீகரியோமெனின், அந்தக்கதை யெழுதிய நூலை யாமங்கீகரிப்போமா? ஒருவரங்கீகரிப்பதும், அங்கீகரியாததும் நியாயமுகத்தாலன்றி மூடமேற்கொண்டு முரணிப்புலம்புதல் செல்லாமையி னம்மையார் திருமுலைப்பாலைத் திருஞானசம்பந்தப் பிரபு வொருவரேயன்றி யிரண்டாவது பேருமுண்டாரென்று கூறவரு மவதிவாசகம் பாழ்பட்டதெனவறிக.

இதுநிற்க, சரஸ்வதியோடு காமகலையை வாதிக்க முயன்றகாலையில் அபசயப்பட்டு அவளிடம் காலவரை யேர்ப்படுத்திக்கொண்டு பின்னர் தனதுதேகத்தை யோரிடத்திற் பதனப்படுத்திவிட்டு இறந்துபோன வோரரசனது சரீரத்திற்புகுந்து அவ்வரசன் பன்னிகளைப் புணர்ந்து அந்தவித்தையின் மகாவித்வானாகிப் பின்னரவளைச் செயித்தாரெனவும், அப்படித்தான் பரகாயப்பிரவேசமாயிருந்தவமயத்தில் தனதுயதார்த்தசரீரம் தகிக்கப் பட்டதெனவும், அதையறிந்து அரசன்சரீரத்தைவிட்டு மீண்டுந் தனது சரீரத்தையேயடைந்து ஜ்வாலாநரசிம்ஹோபாஸ்தியா லுயிர்தாங்கினரெனவு மன்னோர் புதுமை காட்டித்திரியும் சங்கரவிஜமென்னுஞ் சுவடியிலேதானே யெழுதப்பட்டிருத்தலால் அந்தமூலத்தைக் கொண்டே யவர் சிறுமையைக் காட்டாநிற்பாம். உமாதேவியார் முலைப்பாலையுண்டவர் சர்வஞ்ஞராவரென்பது உண்மை. ஆகவே, யங்ஙனமுண்டவராக வெண்ணப்படுஞ் சங்கராசாரியர் வாணிக்குத் தோற்றது பழுதாம். எல்லாமுணர்ந்தவர் பின்னரவ் வித்தையைக் கற்கவேண்டி அரசபத்தினிகளை வஞ்சனையாற் கற்பழித்துத் தன்னது துறவையுந்துறந்து பழிபாவத்துக் கஞ்சாமல் அன்னோர் பகவலையிற் சிக்குண்டிருந்தது மசங்கதம். தனதுதேகம் நெருப்பாலெரிப்புண்டழியப்பெற்றதோடு சரபமூர்த்தியாற் சிட்சிக்கப்பட்டொழிந்த விஷ்ணு, இடையன், இளிச்சவாயனென்னு மூவர்களிலொருவனாகிய விளிச்சவாயனென்னு

சரசிங்கனை யுபாசித் துயிர்தாங்கியதும் பிழையாம். இன்னும்விரிக்கில், திருவாவடுதுறை யென்னும் புண்ணியப்பதியிற் பசுமேய்ப்பானாகிய மூலனென்னும் பேருடைய வோரிடையன் காட்டில் செத்துக்கிடந்தபோது பசுக்களெல்லாம் அவனைச்சுற்றிலுஞ் சூழ்ந்து கதறுதலைக்கண்ட சிவயோகியொருவர் இரக்கமுற்று இவ்விடையனெழுந்தாலல்ல திப்பசுக்கள் துன்பக்கடனின்று மெழாவென வுணர்ந்து பேருடாங்கித் தமது திருமேனியை யோர் மரப்பொந்தில்வைத்துவிட்டு அவ்விடையன் சரீரத்திற் புகுந்தமாத்திரத்தில் பசுக்களெல்லாம் சந்தோஷத்தோடு வாலைக்கிளப்பிக்கொண் டெழும்பிக் குதித்து விளையாடினவெனவும், அதிற்பெருமகிழ்ச்சிகொண்ட வப்பெரியவரன்று முழுதும் பசுக்களை மேய்த்துக் கொண்டிருந்து மாலைப்பொழுதுவந்தபோது பசுக்களையெல்லா மூருக்குளோட்டிக்கொண்டுபோயினரெனவும், அப்போது தன்வீட்டுக்கு வராமல் தியங்கி வெளியேநிற்பவராகிய வம்முனிவரைத் தனதுகணவனாகவெண்ணி மூலனுடைய மனைவி வந்து அழைத்தகாலையி லொன்றும் பேசாது நின்றனரெனவும், அவள் தன்கணவன் கோபமாயிருக்கின்றானென்றுன்னியவருடைய கரங்களைப் பற்றவருகையிலஞ்சி யன்னியஸ்திரீயைப் பரிசிக்கமாட்டாதவராகி யோடினரெனவும், அவைகளைப் பார்த்துக்கொண்டிருந்த வப்பதியா ருண்மையைக் குறிப்பாலறிந்து அந்தஸ்திரீக்குச் சமாதானங் கூறி யனுப்பிவிட்டபின்னரந்தமுனிவர் தமது சொந்ததேகம் வைத்திருந்த விடத்திற் போய்த்தேடியபோது அதுகாணாமற் போய்விட்டதெனவும், அப்போதிவ்வதிசயம் யாதென யோசிக்கையில் சிவபெருமான் அசரீரியாக வுன்னுடைய தேகத்தை யாமேமறைத்தோம், நீசிலகால மிந்தத்தேகத்திலேதானேயிருந்து லோகோபகாரமான சிலகாரியங்களைச் செய்துவரவேண்டிநமது ஆக்ஞையென்று கட்டளையிட்டதை யேற்று அந்தப்பதியிலேதானே மூவாயிரம்வருடம் ஓரரசடியில் யோகிருந்து ஒருவருடத்துக்கொருதரம் பகிர்முகப்பட்டு அவ்வநுபூதிப்பிரகாசமாக வொவ்வோர் திருமந்திரத்தைக் கட்டளையிட்டு மூவாயிரம் வருடத்தில் மூவாயிரமந்திரங்களை யருளிச்செய்தாரெனவும், அந்தமந்திரங்களே திருமந்திரமென்னும் பெயர்த்தாய்ச் சைவம்பன்னிரண்டுதிருமுறைகளில் சேர்க்கப்பட்டுள்ளதெனவும், அவரே திருமூலர் என்னும்பெயர் தாங்கி அறுபத்துமூன்றுநாயன்மார்களி லொருவராய்த் துதிக்கப் பெற்றிருக்கின்றனரெனவும் சிவரஹஸ்யம், பக்தவிலாசமுதலிய வுண்மைநூல்களிற் பயிலும் சிவஞானிகள் துணிந்துகூறுவரே

விவ்வருமைப்பாட்டி லெந்தவமிசத்தி லிவரைப்போலவே பரகாயப் பிரவேசஞ் செய்தவராகச் சொல்லப்படுஞ் சங்கராசாரியர் கதையைச் சமர்த்திக்கக்கூடும்? அன்னியனுடையஸ்திரீயை வலித்து வஞ்சத்தா லநுபவித்தவொருவரும், அவள் தன்னைத் தொடவே யிணங்காதவராகிய மற்றொருவரு மெப்படியோ சமானமாவர்? விஷமும், அமுதமுமெப்படி யொற்றுமை யடையும்? இரண்டும் விஜாதிகங்களாகையால். சங்கராசாரியரும், திருமூலதேவரும் பரகாயப்பிரவேசசித்தியுடையா ரெனக் கொண்டகாலத்து மிருவர் தாரதம் யங்களும் வெளிப்பட்டமையால், திருமூல தேவருக்குமுன் சங்கராசாரியர் கருடனுக்கு முன்னே மசகமொன் றுவமிக்கப்படுந் தன்மையே நிதரிசனமாம். இந்த விசாரத்தா னிர்மிதமான வாபாச குணக்ஞராகிய சங்கராசாரியை யெப்படியோ வம்மைதரும்பா லுண்ட வாதிக்யமுடையராய் மதிப்பது? இன்னுமச் சங்கராசாரியர் மாந்மியத்தை நோக்குழி அபிநவகுத்தனெனு மாந்திரிகனொருவன் சங்கராசாரியருக்கு ஏவல்வைத்தானெனவும், அது அவருக்கு மூலவியாதியாய்ச் சென்று தாக்கியதெனவும், ஓர்நாளவர்மாணக்கரு ளொருவர் அவருடைய காவியுடையைத் துவைக்கப்போகையி லவ்வுடையி லுதிரத்தைக் கண்டு மயங்கித்தனது குருவுந்தானுமாக வேண்டிய சிகிச்சைகளெல்லாஞ் செய்துபார்த்துந் தீராம லவதிப்பட்டுக்கொண்டிருக்கையி லதுவந்து தங்களைசசார்ந்த காரணத்தைப் பின்னர் தெரிந்துகொண்டார்களெனவும், அப்போது சங்கராசாரியருடைய மற்றொருமாணக்க ரந்தநோயைத் தனது மந்திரவலியாற் றிருப்பி முன்னதை யேவியவன்பக்கல் சேரும்படிச்செய்து தனதுகுருவுக்கு நோயினின்றுஞ் சொஸ்தமுண்டாக்கினரெனவு மச்சங்கரவிஜயத்தி லெழுதப்பட்டிருத்தலால், சங்கராசாரியர் மகிமை யதிகப்பிரகாசத்தை யடைந்தமை வெளிப்பட்டது. இப்படிப்பட்ட வாபாசங்கள் ஞானசம்பந்தர் மாந்மியத்திலுண்டா? எவனேனுமொரு நடுவீதியானிட்ட சூனியத்தின்மொத்துண்டு வருந்திய சேயின்றலையி லூர்க்குருவியின் றலையிற் பனங்காயைச் சுமத்தியதுபோல் உமாதேவியா முலைப்பாலுண்டு முதியரானாரென் றந்தோ அவர்க்குமுழுபங்கொடுப்பது மூடம்! மூடம்!! அவர் மலதேகியாகையா லவரைச் சூனியமும் பற்றும், பேயும்பிடிக்கும், வேண்டிய பீடைகளுஞ் சாரு தற்போகச் சீர்த்தியினராகு மவரை ஞானத்தலைவராகு மங்காழிப் பிராணேடு சமம் பாராட்டலாவது, ஞானசம்பந்தரைத் துதித்

தா ரென்றதனு லவர்க்கொரு 'தாழ்வுண்டாவதாகவெண்ணி அதைப் பரிகரித்துக் கொள்ளவாவது, உமாதேவியார் தந்த பாலையுண்டு அருள்பெற்றதன்னையே சௌந்தரியலஹரியில் சங்கராசாரியர் வியந்துகொண்டனரெனப் புகழவாவது வழிதேடுதல் செல்லாதென வறிக.

இது நிற்க, சங்கராசாரியர், தத்துவராயர் முதலினோர் ஞானசம்பந்த மூர்த்திகளைத் துதித்தா ரென்றது கொண்டே யன்னோர் ஞானசம்பந்தரை நோக்கத் தாழ்ந்தவராகா ரெனவும், தாழ்ந்தவ ரென்றே கொள்ளுங்கால் (அப்பாலுமடிச்சார்ந்தாரடியார்க்குமடியேன்) எனவும், (பத்தராய்ப் பணிவார்களெல்லார்க்குமடியேன்) எனவுந் துதித்த ஸ்ரீசுந்தர மூர்த்திகள் சைவசமயிகளை நோக்கத் தாழ்ந்தவராவ ரெனவுஞ் சமாதானங் கூறிச்சிலர் மயங்காநிற்பர். இவ்விபரீதத்தைக் களைந்தெறிவாம். ஞானசம்பந்தரைத் துதித்த சங்கராசாரியரும், தத்துவராயரும் அவரிற்றாழ்ந்தவ ராகாதபோது சங்கராசாரியையும், தத்துவராயரையும் பரிந்தழ வந்த வக்கபோதிமக்க ளவரிற் றாழ்ந்தவராவதெப்படி? சம்பந்தமூர்த்திகளோடு சங்கராசாரியும், தத்துவராயருஞ் சமானராய் நின்றபடிச் சங்கராசாரியர், தத்துவராய ரிவர்களோடு அப்பாலிசருஞ் சமானதுல்யரே யாயினர். எனவே, மூத்திறத்தவரு மேற்றந்தாழ்வில்லாதவ ராயினரென்பது வெளிப்படை. ஐயோகலிகாலப்பண்பே! இது என்ன புதுமை? சம்பந்தமூர்த்திகளைச் சங்கராசாரியேயன்றிப் பெரியவாளாய் வந்தவர்களிற் றுதித்து வணங்காதபே ரொருவருமில்லையே! அந்த மூர்த்திகளைச் சிவாலயங்கடோறு மெழுந்தருளப்பண்ணிப் பூசித்துவருவதும் அநுபவமாமே! அவர் மான்மியங்களை வேதசிவாகமங்களும் விதந்துரைக்கின்றனவே! இன்னவற்புதச் சீர்ப்பாட்டினராகுஞ் சமயத்தலைவரையா சாமான்யஜந்துக்களாகிய சங்கராசாரியர் தத்துவராயர் முதலினுரோடு சமத்வங் கூறற்பாலது? அவர் சைவத்தலைவரா யெழுந்தருளிய காலத்தும் அவர்கொடுத்த விபூதிப்பிச்சையையேற்று வாழும் அன்னிய சமயிகளுமன்றோ வவரைத்துதித்து வாழ்ந்தனர்? "நத்வா சுந்தர வாகீசஸ் ஸம்பந்தாதிபுராதநః" என்று சோமநாதபாஷ்யத்திற் கூறப்பட்டிருத்தலேசான்றும். இப்படிப் பல்வுளவற்றை விரிவஞ்சிவிடுதாம். திருநெல்வேலியென்னுந் தலத்திற் றவங்கிடந்திருந்த வகத்தியர்க்குத் தரிசனங்கொடுத்து அவரால் பூசிக்கப் பெற்றெழுந்தருளிய மூர்த்தமேயன்றோ இப்போதும் சம்பந்தமூர்த்திகள் கோயில்

என்று பிரசித்தமாய் வழங்கிவரு மாலயத்திலமர்ந்து காணப்படுவது? இன்னும், திட்டையென்னும் பேரையுடைய தலமான்மியத்தை விசாரிக்கினும் அவர் மான்மிய மினிதுவிளங்குமே! எங்ஙனமெனின், திட்டையென்னுந் தலத்துக்குத் திருஞானசம்பந்த சுவாமிகள் சுவாமி தரிசனத்தின்பொருட்டு ஓர்கா லெழுந்தருளியபோது அவ்வாலயஞ்சூழ வசுத்தங்க ளதிகமாய்க் காணப்பட்டன. அப்போது அந்தப்பதியில் திருநாவுக்கரசு சுவாமிகள் கைத்தொண்டு செய்துகொண்டிருந்தனர். அவரைக் கண்ட காழிவிரகர் தம்மை வந்து வணங்கிநின்ற வாகீசமுனிவரை யெதிர்வணங்கித் தேவரீருடைய திருப்பணியை யேற்கு மித்தலத்தி லசுத்தங்க ளுண்டாயிருக்குங் காரணம்யாதென வினவினர். அதற்கவ ரிவ்வாலயத்தை யடுத்த பெருமாள்கோயில் வைணவப்புல்லரே யிக்கெடுதியை விளைக்கின்றவ ரென்றிசைத்தனர். அதைக்கேட்ட நங்குருமணியாவா ருடனே யொருதிருப்பதிகங் கட்டளையிட்டனர். அப்பதிகவுண்மைபா லப்போதேயொரு பிரவாகம்வந்து அந்தப் பெருமாள்கோயிலை யடியோடே கெல்லித் தெப்பம்போல வடித்துக்கொண்டுபோய்த் தூரமான வோரிடத்தி லொதுக்கிவிட்டது. இவ்வற்புதவாயிலாய்ச் சிவாலயத்தில் நேரிட்டிருந்த வசுத்தத்தைப்போக்கி மகிழ்ந்து இச்சையின்வழி யெழுந்தருளிப் போயினரென்று ஷெ தலமான்மியத்திற் கூறப்பட்டிருத்தலுங்காண்க. இவைகளையன்றி, விஷ்ணுவுக்குச் சிவசாரூப்பியத்தைப் பிரசாதித்தவுண்மை சநற்குமாரசங்கிதை முதலியவற்றி லினிதுவிளங்கும். இப்படி யின்னுமநந்த முளவாகலி னந்தோ விவ்வுண்மையை யறியாதார் வீணேயிருந்தவா றென்னோவாச்சரியம்! ஆச்சரியம்!! இந்த மான்மியங்கள் பெரியபுராணத்திற் பெறப்பட்டனவோவெனின், பெறப்பட்டனவாகவே கொள்ளப்படும். எங்ஙனமெனின், பெரியபுராணத்தில் ஆசாரியர் மகிமைகளைக் கூறிவருஞ் சந்தர்ப்பங்களில் பதிகங்களை யுடன்கொண்ட மகிமைகள் பலவுளவாதலாலவற்றை விரிக்குங்கா லிறந்துபோன பதிகங்களை யுடன்கொண்ட மான்மியங்களை விடுத்து இப்போதிருக்கும் பதிகங்களை யுடன்கொண்டமான்மியங்களை மாத்திரமே தொண்டர் சீர்பரவுவா ரெடுத்தாண்டனர். சிலபதிகங்க ளிறந்துபோயின வெனவும், அவற்றால் விளங்கற் பாலனவாகிய மான்மியங்களுளவெனவு மவருடன்பாடாகையால் யாவும் அவர்நூலுக்கொப்ப முடிந்தனவாகவே மேலோர் கொண்டுரைப்பர். (பாலைநெய்தல்பாடியதும் பாம்பொழியப்பாடியதும்) எ

ன்னுஞ்சித்தாந்த சாத்திரத்தில் விரிக்கப்பட்டமாந்மியம் பெரியபு
ராணத்திற் பெறப்பட்டதின்றும். பெறப்படாமை கொண்டு எதை
த் தள்ளுவது? எதைக் கொள்ளுவது? இரண்டும் சப்பிரமாணமா
ய் முடிதலால் மேல்யாம் காட்டிய நியாயமே சமர்த்திக்கப் பட்ட
மைகாண்க. ஒன்றி லொன்று எப்போது முரண்பாடாகக் கொள்வா
மெனின், ஒரு விஷயத்தையே யிரண்டு நூல்க ளொன்றி லொன்று
விரோத முண்டாகக் கூறுமேல் அந்தநூல்களின் சாமானிய விசே
ஷ தருமங்களை நோக்கிச் சாமானியத்தைக் கழித்து விசேஷத்தை
யே மேலோர் கொள்வ ரென்க. ஒருநூலிற் சொல்லாத விஷயத்தை
மற்றொரு நூல்சொல்லுவதனு லொன்றுக் கொன்று விரோத முண்
டாகாமையால் பெரியபுராணத்திற் சொல்லப்படாதனவாகிய மேல்
காட்டிய மாந்மியங்கள்யாவு மங்கீகாரமாயிற்று. இன்ன விசாரத்தா
ற் புகழப்பட்ட பெருஞ்சீராளனுகிய நங்காழித் தலைவனோடு அநா
மத்துராயர்களாகிய சங்கராசாரியர், தத்துவராயர்களையுஞ் சமம்பா
ராட்டி விவகரிக்க வந்த சிறுவர் கூற்றுச் சிதைவுண்டதெனவறிக. ச
ங்கராசாரிய ரென்னை, விஷ்ணுவைக் காட்டிலும் பெரியவரா? அகஸ்
தியரைக்காட்டிலும் பெரியவரா? சங்கராசாரியர் பிழைப்பெல்லாம்
அவர் சங்கர விஜயத்தால் விளங்குமே! மந்திரவாதிகள், சூனியவா
திகள் கையிலெல்லாஞ் சிக்கிக்கொண்டு அவர்களைமீறி வருவதற் க
ஷ்டப்பட்டபாட்டுக் களவின்றே! தத்துவராயரோவெனின், "புத்தாபு
ஷேயேனைககா" எனவும், "அருகாவடியேனைக்கா" எனவுஞ் சந்தேகப்பி
ராணியாய்ப் பலவுமி தின்று லொருஅவிழ் தட்டாதாவென்றீ'வாயி
ல்வநதபடிக் கெல்லாங் கைகொண்டது, ஏடுகண்டது என்று தமது
ஞானத்தை விளக்கினவராகையா லவர்திறப்பாடும் வெட்டவெளி
யாயிற்று. இன்ன சாமானிய பசுக்களா வெம்பாலருவாயரோடு சம்
ம்பாராட்டத்தக்க பண்பினராவர்? இனி, "அப்பாலுமடிச்சார்ந்தாரடி
யார்க்குமடியேன்" எனவும் "பத்தராய்ப்பணிவார்களெல்லார்க்குமடியேன்"
என்வும், சுந்தர மூர்த்திகள் துதித்ததனு லவர் சைவசமயிகள் ப
லருக்குந் தாழ்ந்தவரா வென்னுஞ் சங்கையைப் பரிகரிப்பாம். "தா
வரசங்கமங்களென்றிரண்டுருவினின்று, மாபரன் பூசைகொண்டு மன்னுயிர்க்
கருளைவைப்பன்" என்னுந் திருவாக்கால் சிவலிங்கவடிவமாகிய தாவ
ரத்தினிடமாகவும், சிவனடியார் வேடமாகிய ஜங்கமத்தினிடமாக
வு மிருந்தே அடியாரியற்றும் பூசையையேற்றுச் சிவபெருமா னரு
ள்வரென்பது வெளிப்பட்டது. இவற்றுள், தாவரம் அசேதனமும்,
ஜங்கமம் சேதனமுமாதலால் சேதனுசேதனங்கள் வாயிலாய்த் தங்

து பூரணத்வ நிரூபகத்தால் பரன் அடியார்செய்யும் பூசை யங் கீகரித்தல் சாலும். அவ்விரண்டை யன்றி வேறுதனக்கென வோர் வடிவ மில்லாத தன்மையனுதலால். இனித்தாவர நிற்க, ஜங்கமஞ் சிவனடியாரைக் காட்டுதலா லச்சிவனடியார் தன்மையை விசாரிப் பாம். சிவனடியார் வேடமாத்திரத்தாற் சிவனடியாராதலும், வேட த்துடன் அநுபூதிப் பெருஞ்செல்வ சித்தியாற் சிவனடியாராதலு மாகவிரு திறத்தினராவர். இவ்விருபாலாரும் சிவனடியா ரென்னும் பொதுவியல் வகையால் வணங்கப் படுங்கா லாங்காங்கிருந்து பூசை யையேற்பான் பரசிவனென்பது மேலோர் துணிபாம். எங்ஙனமெ னின், சேரமான் பெருமானுயனுர் உழமண்ணுலுடல் வெளுத்திரு ந்த வண்ணுனையும், மெய்ப்பொருளுயனுர் வஞ்சவேடம் பூண்டு வந்த முத்தநாத னென்னும் புத்தனையும, ஏனுதி நாயனுர் நெற்றி மீது நீறுகாட்டிய அதிசூர னென்னுங் கிராதனையும், கலிக்கம்ப நா யனுர் தம்வளவிற் களவாடிச்சென்ற வடிமையாளையுஞ் சிவனடியா ராக வணங்கினு ரன்றே! அவர்நிற்க, ஜகதாசாரியராகிய ஞானசம் பந்தர் அப்பர் சுவாமிகளையும், அப்பர்சுவாமிகள் ஞானசம்பந்தப்பி ரபுவையும், சேரமான்பெருமா ணுயனுர், பெருமிழலைகுறும்ப ரிரு வரும் ஸ்ரீ சுந்தரமூர்த்திகளையும், அப்பூதியடிகள் வாகீசமூர்த்திக ளையும், வழிபட்டார்க ளன்றே! இவற்ருல் தெளிதற்பாலதுயாது? உ யர்ந்தபேர் தாழ்ந்தவரையும், உயர்ந்தபே ருயர்ந்தவரையும் வணங்கி னு ரென்னுங்கால் தேகமாத்திரத்தாற் சுத்தமெய்தினுர் தாழ்ந்தவரு ம், தேக பரிசுத்தத்துட னுன்ம சுத்தியும் பெற்றபே ருயர்ந்தவருமா கிய நலம் வெளிப்பட்டது. (இலங்குமுயிருடலனைத்துமீசன்கோயில்) எ ன்றபடி யவ்விருதானங்களிலுஞ் சிவசாந்நித்யங்கண்டே மேலோர் வ ணங்காநிற்பர். இவ்வுண்மையால் வணங்குவாரை நோக்க வணங்கப படுந் தானங்கள் கீழுமாகலாம், மேலுமாகலாம். இந்த விசாரத்தா ல் அப்பாலுமடிச்சார்ந்தா ரென்றதேதத்யாதிகளை யருளிய நம்மாரூ டையநம்பிகள் தம்மாற் றுதிக்கப்பட்டாரி னுயர்ந்தா ரென்பதே நா ட்டப்பட்டது. துதிப்பவர் துதிக்கப்படுபவரு ளுயர்ந்தவர் தாழ்ந்த வ ரென்னுமுண்மை யவரவர் யோக்கியதைகளைக் கண்டன்றி அன் யதா வாய்திறத்தல்கூடாது. இதனுல், சங்கராசாரியர், தத்துவராய ர்கள் ஞானசம்பந்தரைத் துதித்த சீர்ப்பாடு அவர் துதிக்கும் வாக் கியரீதியானே விளங்கும்! விளங்கும்!! சமயகுரவர்களைத் தம்மோடு சமானர்க ளெனவாவது, குறைந்தவர்க ளெனவாவது திருநீற்றுப் பெருஞ் செல்வத்துக்குரிய பூர்வீகர்தம்மு ளொருவருங் கனவிலே

னுஞ் சிந்தித்தவராகப் புலப்படாமையால், சங்கராசாரியர் முதலினோ ரவ்வெம்பெருமக்களை மேலோர்களெனக் கொண்டு பாடினதில்லை யென்று வெறிகொண்டு பிதற்றுவார்கோள் மேன்மை யடையாதொ ழிந்தது. அவ்வருளாளர்களை அன்னோர் சைவகுரவரென்று கொ ள்ளாவிடினுந் தத்தஞ் சமயகுரவராகக் கொண்டார்களெனவாவது ன்றோ கூறித்தொலைக்க வேண்டும்? இந்த வியவஸ்தையால் பெருங் கருணை சாலிகளாகிய வவ்வமல மூர்த்திகண்மாட்டு யாம் பிரவசனித் த கல்யாண குணங்க ளத்தனையும் நிர்விவாத கிரஸ்தமாயினமை ய றிக. இதுகாறும் விசாரித்து முடிவுசெய்த வுண்மையால், மேல் யா ம் ஸமர்த்தித்த ஞானஸசம்பந்த வள்ளலாரது வைபவம் பசுமரத் தாணி யறைந்தாற்போல நாட்டப்பட்டது,

இந்த வுண்மைகளால், அம்மையளித்த பாலமுதருந்திச் சிவ ஞான ஸம்பந்தராயினு ரென்னும் பாலருவாயர் தன்மை பிரகாசமா யிற்று. மேல் (சகூ) வது பக்கத்தில் (சிவனடியே சிந்திக்கும்) என்ற பா டலை யாமுதகரித்திருக்கின்றோமாகையால், அதனை வியாக்கியை முகத்து ஈண்டு விசாரித்தலே அப்பெருந்தகையினது ஞானத்தின் பிராசுரியத்தை யினிது பிரகாசப்படுத்தும். (சிவனடியே சிந்திக்குந் தி ருப்பெருகு சிவஞானம், பவமதனையறமாற்றும் பாங்கினி லோங்கிய ஞான, மூவமையிலாக்கலைஞான முணர்வரிய மெய்ஞ்ஞானந், தவமுதல்வர் சம்பந்த ர் தாமுணர்ந்தா ரந்நிலையில்) என்பதில் ஞானத்தினது அவஸர பேத ங்கள் வெளியாயின. அவை சிவனடியைச் சிந்திக்கு ஞானமும், ப வத்தை யொழிக்கு ஞானமும், கலைஞானமும், மெய்ஞ்ஞானமும் எனப் பிரித்தோதப் பட்டமையால், அவற்றுள் கலைஞான நிற்க, ஏ னையஞானங்களி னுண்மையை யோசிப்பாம். சிவனடியைச் சிந்திக் கு ஞானத்தைச் சிவஞான மென்றனர். பவத்தை மாற்று ஞானத் தைப் பாங்கினி லோங்கிய ஞானமென்றனர். உணர்தற்கரிய ஞானத் தை மெய்ஞ்ஞான மென்றனர். இந்த மூன்று ஞானங்களும் ஒன்றி லொன்று முரணுகின்றன. எங்ஙனமெனின், சிவஞானம் என வொ ன்றைக் கூறியபின்னர், பவத்தைமாற்று ஞானமென வேறொன்றை க் கூறுகையால், சிவஞானம் பவத்தை யொழிக்கு ஞானமும், பவத் தை யொழிக்கு ஞானம் சிவஞானமுமாகா. அநந்தரம், மெய்ஞ்ஞா னமென வொன்றைக் கூறுகையால், முற்கூறிய விரண்டு ஞானங்க ளும் அந்த மெய்ஞ்ஞானமாகா. அப்படியே, மெய்ஞ்ஞானமானது சிவஞானமும், பிறவியைமாற்று ஞானமுமாகமாட்டாது. ஆகையா

லி, இந்த மூன்றும் தம்முள் விரோதியாத நலம் இத்திறத்ததென அறிந்திடுவதே பிரகிருதோப யுக்தமாகும்.'

மேலிடத்திற் பெறப்பட்ட நாலுவித ஞானங்களில், மூன்றாவது சொன்ன (கலைஞானம்) சிரவண மெனவும், முதலிற் சொன்ன (சிவஞானம்) மநநமெனவும், இரண்டாவது சொன்ன (பாங்கினிலோங்கியஞானம்) நிதித்யாஸநமெனவும், நாலாவது சொன்ன (மெய்ஞ்ஞானம்) ஸமாதியெனவுங் கொண்டு, கேட்டல் - சிந்தித்தல் - தெளிதல்- நிட்டை என்னும் பரியாய நாமங்களாற் பெரியோர் பிரகாசப் படுத்தாநிற்பர்.

வேதமுதலிய கலைகளிலொருவன் பயின்றுவருங்கால், அவற்றாற் பெறப்படுமுண்மை அவனது பரிபாகத்துக்கேற்பத் தேகான்மவாதமுதல், சைவசித்தாந்த மீறாயுள்ள முடிவுகள் யாதானுமொன்றிற் பரிவஸானமுறலால், பொதுவானே கலைஞானமென்று முதன் ஞானத்தைக் கூறினர். அங்ஙனம் பயின்று வருகையில், அவற்றுட் டெளிய வடித்தெடுக்கும் பொருள் சிவமொன்றே யாகையாலும்,அதைச்சிந்திப்பதே அவற்றின் றுணிபொருளாகையாலும் இரண்டாவது சிந்தனநிலையைச் சிவஞானமென்று கூறினர். அங்ஙனஞ் சிந்திக்குங்கால் பாவனையாதிகளி லொழிந்து, சிவம்வேறு தான் வேறாகாமல் அத்துவிதப்பட்டு நிற்குநிலையைக் கடைப்பிடித் துணர்த்து மவசரத்தையே பாங்கினி லோங்கிய ஞானமென்று கூறினர். அங்ஙனமிரண்டறக்கலந்து சிவனோடு பிரிபடாது சிவபோகத்தி லிடையீடுபட்டுக்கிடத்தலின் மேலிட்டவநுபவம் வேறு கேட்கப்படாமையால் அந்தமுடிந்த வநுபூதியையே மெய்ஞ்ஞானமென்று கூறினர். வேதமுதலிய கலைகளில் சிவஞானமே கேட்கப் படுகையாலும், அதனையே சிவயோகிகள் கேட்டுஞ் சிந்தித்துந் தெளிந்தும் அநுபவித்தும் வருகின்றமையாலுங் கற்றுணர்ந்த மேலோர் சிவஞானம்-மெய்ஞ்ஞானம் இத்யாதி பிரயோகங்களிற் கலங்காரென்க. கேட்டல், சிந்தித்தல், தெளிதல், நிட்டை என யாம் காட்டிய அவஸரங்களை அத்திருவாக்கிற்போந்த சொல்லமைதிகளைக் கொண்டே அறிவிப்பாம். கேட்கப்படுந் தன்மையாலன்றோ (சுருதி) என்னும் பேரை வேதம்பெற்றது? அதுவே கலை ஞானமென்பது ஸர்வஸித்தம். இதனால், அங்கேபோந்த (கலைஞானம்) அமைவு பெற்றது. சிந்திக்கு ஞானம் இரண்டாவதென்பது (சிவனடியேசிந்திக்கும்) என்று சூசிப்பித்தலால் விளங்கும். தன்னில் வேறாகாமல் அநந்யமாய்ச் சிவம் பிரகா

MAHAMAHOPADHYAYA
Dr. U. V. SWAMINATHA IYER LIBRARY

சிக்கு நிலையையே (* பாசங்கினிலோங்கிய) என்னுஞ் சொற்கள் வெளி யாக்கின. நிட்டையை (மெய்ஞ்ஞானம்) என்றது நிராக்ஷேபம். இவ் வுண்மையால், அருண்மொழித்தேவர் கூறிய ஞானபேதங்க ளிவை யென வெளிப்பட்டன. ஆயின், அந்த ஞானங்களை முறையே வை த்துக் கூறாமல் மாற்றிக்கூறிய தென்னையெனின், அதனை விளக்கு வாம். இந்த ஞானங்களுக்கு விஷயமாகுஞ் சிவமாகிய ஞேயப்பொ ருள் மநநமாகிய இரண்டாவது ஞானத்திலேதானே வெளிப்படலா ல், அதனை முன்வைத்துக் கூறினார். ஞேயமாகியசிவம் அநந்யமாய் த தோன்றுமிடமாகிய ஞாதுருவை விளக்கலால் (பாசங்கினிலோங்கிய) என்று நிதித்யாஸநத்தை அதன் பின்னே வைத்தருளினார். ஞாதா வாகிய தன்பக்கனிகழு ஞேயமாகிய சிவத்தை ஞானத்தாலன்றி அ றியக்கூடாமையால், அந்த ஞானபீடமாகிய சிரவணத்தை அதன் பி ன்னே அமைத்தருளினார். இவை திரிபுடியாக விளங்கலால், திரிபுடி யதீதத்தைக காட்டுவதென ஸமாதியைமுடிவாகச் சாதித்தருளினார். இனனும், ஞேயமு ஞாதுருவு நீங்கலாக ஞானமானது அபரமும், பரமுமென விளங்கலால், சிரவணமாகிய அபரஞாநாநந்தரம் ஸமா தியாகிய பரஞானத்தை நிறுவினரெனினு மமையும். அன்றியும், ந ம்பேரருளாள ரநதஞானங்களை ஸாதனவழியி லொன்றன் பின் னொன்றாக வெய்தாம லோரவஸரத்திற்றானே யெய்தினரென்னுஞ் சுதந்தரததைக்காட்ட அவைகளை மாற்றிக்கூறினாரென்பது மொன் று. இந்தஞானங்களைத் தாயுமானசுவாமிகள் இரண்டிலடக்கிக் கூறி யிருக்கின்றனர். அது (வேதமுதலாகமபுராண விதிகாசமுதல் வேறுமுள கலைகளெல்லா-மிக்காகவத்துவித துவிதஞானத்தையே விரிவா யெடுத்துரை க்கு-மோதரியதுவிதமே யத்துவிதஞானத்தை யுண்டெனுஞானமாகு-மூகம நுபவ வசனமூன்றுக்கு மொவ்வுமீ துபயவாதிகள் சம்மதம்) என்றதேயாம். துவிதம், அத்துவிதமென்பவைகளில் கேட்டல் - சிந்தித்தலென்னு மிரண்டுந துவிதத்திலும், தெளிதல்-நிட்டையென்னு மிரண்டும் அ த்துவிதத்திலுமடங்கும். துவிதஞானத்தைப் பரோக்ஷ மென்றும், அத்துவிதஞானத்தை அபரோக்ஷமென்றும் விவேகிக்கவேண்டிய து. இவ்வுண்மை ஊகம்=அநுமாநம், அநுபவம்=காட்சி, வசனம்= ஆகமம் என்னுமளவைகளால் நிரூபிக்கப் படுதலுமாம். எங்ஙனமெ னின், (கலைஞானம்) ஆகமமும், (சிவஞானம்) அநுமானமும், (பாசங்கி னிலோங்கியஞானம்) அநுபவமும், (மெய்ஞ்ஞானம்) அநுபவாதீதமு மென வறிவதேயாம். இவற்றுள், கலைஞானம் வேதசிவாகமங்கள்.

* தன்பக்கலில்.

இவை ஒன்றிலடங்காமலும், இவற்றுள் யாவுமடங்கியு முள்ள தன்மைகண்டே (உவமையிலாக் கலைஞானம்) என்று விசேடிக்கப்பட்டது. (யாது சமயம் பொருணூல் யாதிங்கென்னி லிதுவாகுமதுவல்ல வெனும்பிணக்கதின்றி-நீதியினலிவை யெல்லாமோரிடத்தே காண நிற்பதுயா தொருசமயமதுசமயம் பொருணூ-லாதலினலிவை யெல்லா மருமறையாகமத்தேயடங்கியிடும்) என்ற பிரமாணத்தாலு மறிக. ஏனைய மூன்று ஞானங்களையும் (கூகூ) வது பக்கத்தில் விதந்திருப்பதே போதும். அல்லதூஉம், ஞானமானது பாசஞானம்-பசுஞானம்-ஈசஞானம் எனப் பதிநூல்களின் முழங்கப்படுவதும் ஷை ஞான சதுஷ்டயங்களி லந்தர்ப்பவமாம். எங்ஙனமெனின், கேட்டல் பாசஞானமும், சிந்தித்தலுந் தெளிதலும் பசுஞானமும், நிட்டை பதிஞானமு மெனவறிக. சிந்தித்தல் - தெளிதல் என்னு மிவைகளில் திரிபுடி நீக்கமின்று. அதனல், சிவத்திலதீதப்படும் அருட்கேவலமுண்டாகாது. ஆகையால், அவைகளைப் பசுஞானமென்றது அமையும். வாதவூரடிகள் புராணத்தில் (நின்ற சிவம் ஒன்று) எனவும், (அதனைத் தேர்தல் ஞானம்) எனவும், (தேர்ந்ததனைத் தெளிதல் போதம்) எனவும் வெளிப்பட்ட பகுதியும் அநதஞானங்களிலடங்கும். எங்ஙனமெனின், முதலாவது கலைஞானமாகும். இரண்டாவது சிவஞானமாகும். மூன்றுவது பாங்கினிலோங்கியஞானமாகும். இவை முடிந்த சொல்லிறந்தவிடம் மெய்ஞ்ஞானமாகும். (மோனமென்பது ஞானவரம்பு) என்றது ஒத்து. கேட்டல்-சிந்தித்தல் - தெளிதல் - நிட்டை என்னும் பாகுபாடுகளே யாண்டும் ஸித்தித்தன.

இப்படி யநந்தவிதமாகப் பிரவசனித்தற் கேதுவாகிய ஞானங்களை நங்காழிவிரக ரடைந்தது கொண்டே அவருக்குத் (திருஞானசம்பந்தர்) என்னுந் திருநாமமுண்டாகிய தென்னுங்கால், மந்தமதிகளாலுண்டாகும் மேலாசங்கைகளைக் கொஞ்சம் பேசியொழிப்பாம்.

அவ்வெம்பிரான்பா லவைநேர்தல் அவரது மூன்றும்பிராயத்தி லென்பது ஸித்தம். ஆகவே, அதன்முன்னர் ஞானமின்மையே அவர்பாலோதப்படும். அதனல், அவருக்கோர்காலத்தின் ஞானமின்மையும், மற்றோர்காலத்தின் ஞானமுண்மையுங் கூறப்படுமெனின், அற்றன்று. முன்னிருந்தஞானம் வெளிப்பட்ட அவசரமே அதுவென்றறிக. ஆன்மாக்கள் பலர்க்கும் பாசக்ஷயத்தின் முன்னிருந்த ஞானமேயன்றோ வெளிப்படுவதெனின், ஆன்மாக்கடன்மை யீண்டமையாது. ஆன்மாக்களிடம் ஸ்வப்பிரயோஜனார்த்தமும், நம்பேர

ருளாளரிடம் பரப்பிரயோஜனார்த்தமும் அமைந்திடும். அவ ரொருவருக்கே ஞானஸம்பந்தம் கூறப்பட்டமையால், ஏனையோரி டத்து அதற்கு ஸ்வாதந்திரியங் கூறுதல் கூடாது. அங்ஙனமேல், வாகீசவடிகள் - தம்பிரான்றோழர் - வாதவூர்வள்ளல் என்னும் பரமா சாரியர்களிடத்தும் அஸ்வதந்திரங் கூறப்படுமெனின், அதுகூடா து. அவர்களுங் காழிப்பிரானாரைப் போலவே சிவவிபூதிகளாகப் ப டிக்கப்பட்டமையால்.பரமாசாரியர்கள் நால்வருக்குமுள்ள ஸம்பந் தம் சிவபெருமான் - கணநாதர் - ஸ்கந்தர் - நந்திபகவான் என்னு நால்வருக்குமுள்ள ஸம்பந்தம்போல்வதொன்றாக அறியவேண்டிய து.இதை விரிக்கிற்பெருகும்.இதுகாறும் வியவஸ்தையுண்டாக யாம் பிரவசனித்த விசேடங்களால், நந்தமிழ்விரகர் திருமுலைப்பா லுண் டருளியபரிசும், அவரெய்திய ஞானவிசேடங்களும் அநுபாஷிக்க ப்பட்டன.

## பிள்ளையார் பிரபாவம்.

22-வது பக்கத்தொடர்ச்சி.

அப்போது சிவபாதஹ்ருதயர் தமது நித்தியகடனைமுடித்துக் கொண்டு திருக்குளத்தினின்றுங் கரையையடைந்து பாலொழுக்கா ற் சாரல்படிந்திருக்கும் அதிசயகோலத்தைக்கண்டு வெகுண்டு உ னக்கு இப்பாலூட்டினவர் யாரென்று ஸ்வாமியைவினவி, ஓர் சிறிய கோல்கொண் டோச்சப்போயினர். அதற்கு எம்பெருந்தகை அவ ரைப்பார்த்து ஆகாயத்தின்கண் இடபாரூடராய் உமாதேவியாருட னெழுந்தருளியிருந்த ஸ்ரீசிவபெருமானைச் சுட்டி (தோடுடைய செவி யன் விடையேறியோர்தூவெண்மதிசூடிக், காடுடைய சுடலைப்பொடி பூசி யென்னுள்ளங் கவர்கள்வ-னேடுடையமலரான் முனைநாட்பணிந்தேத்த வரு ள்செய்த - பீடுடையபிரமா புரமேவிய பெம்மானிவனன்றே) என்னுந் திரு ப்பதிகமோதி, தமக்குப் பாலளித்தாரிவரெனத் தெரிவித்தருளினர். அதுகண்டு வியப்பெய்திச் சிவனருளைவாழ்த்திநின்ற காலையில், சிவ பெருமான் திருத்தோணியின்கண் ணெழுந்தருளினார். ஞானஸம்ப ந்த வள்ளலாரும் உடன் சென்றனர். சிவபாதஹ்ருதயர் தம்முடை ய தவத்தைச் சிந்தித்துத் தாமுமங்குப்போயினர். அங்கு நங்குரு ராயர் திருப்பதிகம் பாடியருளித் திரும்புகையில் சீர்காழியி லுள் ளார்யாவரு மிவ்வற்புதத்தை யறிந்து மகிழ்ந்து கோபுரவாயிலின்

கண்வந்து ஆளுடைய பிள்ளையாரைத் தரிசித்து பிறவிக்கடலைக் கடந்தார்கள். அவர்களுக்குப் பேரருள் புரிந்து தமது சிறிய திருவடிகள் பூமியிற்பொருந்த எம்பெருவாழ்வாயுள்ளவர் நடந்தருளுகையில் சிவபாதஹ்ருதயர் கண்டு மனம்பொறாது அச்சிறியபெருந்தகையாரையெடுத்துத் தமது தோளின் மேல்வைத்துக்கொண்டு அந்தணர்கள் வேதமோதிப் பின்வரவும், அநேகவாச்சியங்கண் முழங்கவும், அடியார்கள் சூழ்ந்து ஹரஹரவென்று கடலொலிபோன் முழங்கித் துதித்துவரவுஞ் சீர்காழியை வலங்கொண்டு தம்முடைய திருமாளிகையை யடைந்தார்.

## ௬௪ னை.

பால்வடிந்திருக்கும் அற்புதத் திருமேனியுடையராந் தன்மை (பாலறுவாயர்) என்னுந திருநாமத்தாலும் விளங்கும். அத்திருமுலைப்பால் பிராட்டியிடத்ததாகலின், அதனை அருளொழுக்கென்பதேயமையும். அருளானது வழிந்திருப்பதைத் தரிசித்தகாரணந்தானே பிள்ளையார் காட்டச் சிவத்தை அச்செல்வத் தந்தையார் தரிசிக்குமாறு கூட்டியது. ஈண்டுப் பயனெய்துந் தன்மை சிவபாத ஹ்ருதயர்மாட்டே செறிந்தது. மேகமானது மழையை யோர் மலையினிடம் பெய்துழி அம்மழை மலையினுள்ளும் வெளியு நிரம்பியுந் ததும்பியுநிற்கும். அன்றியும், அருவிப்பெருக்காற் பன்முகங்களிலோடியுலகுக்குபகரிக்கும். அம்மலைக்கதனு லோர்பயனுமின்று. இதையிப்படியே பிள்ளையாரிட முவமித்தறிக. பாலொழுகியிருக்குஞ் சாரலைத் தரிசித்தவநந்தரம் சிவப்பேறு சிவபாதஹ்ருதயர்க்கே ஸித்தித்தது. பிள்ளையார் திருமுலைப்பா லருநதுவதன் முன்னரே சிவனைக் கண்டும், அம்மை யப்பர்களா லெடுத்தணைத்து உபசரிக்கப்பட்டும் விளங்கின ராகையால், அவர் பாலுண்ட பரிசும், அவர்ஞானமெய்திய பரிசும் ஸ்வப்பிரயோஜன மன்றென மேல் யாம் காட்டிய வுண்மை நிதரிசனமாயிற்று. அவருடைய செயல் யாவும் பரப்பிரயோஜனார்த்தமே யென்பது (வேதநெறிதழைத்தோங்க மிகுசைவத்துறைவிளங்கப் - பூதபரம்பரைபொலியப் புனிதவாய்மலர்ந்தழுத - சீதவளவயற்புகலித் திருஞானசம்பந்தர் - பாதமலர் தலைக்கொண்டு திருத்தொண்டுபரவுவாம்.) என்னும் ஸ்வாமியினது புராணத்தின் ஆரம்பவாக்கியத்திற்றனே விளங்கும். வேதமார்க்கந் தழைத்தோங்கவும், சைவத்துறை இனிது விளங்கவும் பூதபரம்பரை பொலிவெய்தவுமே பிள்ளையார் அழு

தாரென்கையால், ஸ்வப்ரயோஜனார்த்தம் அவர்பாலொன்று நிகழ்ந்த தில்லையென்பது சாதிக்கப்பட்டது.

வேதமார்க்கந் தழைத்தோங்குவதும், சைவத்துறை இனிது விளங்குவதும், பூதபரம்பரை பொலிவெய்தற் பொருட்டே யாகையால், அவர்பானிகழ்ந்த பரப்பிரயோஜனம் அடியார்கள் பொலிந்து வாழ்வதாகவே முடிந்தது. இவர்கள் பொலிந்து வாழவேண்டின், வேதமார்க்கந் தழைத்தோங்குதன் மாத்திரமே கூடாது. சைவத்துறை இனிது விளங்குவதும் வேண்டு மாகையால், தொண்டர் சீர்பரவுவார் இரண்டையுங் கடைப்பிடித் துரைத்தனர். (வேதமார்க்கம்) எனவும் (சைவத்துறை) எனவு முரைத்தமை கொண்டே அவற்றின் பிரயோஜனம் வெளிப்பட்டது. எங்ஙனமெனின், மார்க்கம்=ஓர் குறித்த விடத்திற்குப் போகும்வழி. துறை=அவ்வழியே நடந்து போய்ப் படியுங் குறித்தவிடம். வழி செம்மையா யிருந்தாலன்றிக் குறித்த விடத்திற்குப் போகமுடியா தாகையாலும், வழி செம்மையாயிருந்தும் நாடிச்சென்றதுறை செம்மையா யிராதபோது அத்துறையிற் படிந்து செய்கடனை முடித்துக்கொள்வது கூடாமையாலும், வழியுந் துறையுஞ் சீர்ப்பட்டிருக்க வேண்டும். இவை கெட்டிருக்கக் கண்டேயன்றோ (வழிதுறையில்லாமலிருக்கின்றது) என வொவ்வோர் காரியஸந்தர்ப்பங்களில் உலகத்தவர் வாடிக் கொள்ளுகின்றனர்? இதனால், வழியென்பதற்கும், துறையென்பதற்கும் பேதம் பிரகாசமாயிற்று. இவ்விரண்டில், துறையானது வழியினும் அதிக மேன்மை பெற்றிருக்கின்றது. வழியேற்பட்டதுந் துறையை யுத்தேசித்தேயாகையாலும், துறையை யடையாமல் வழியிலேதானே நின்றுவிட்டால் ஓர்பயனுமெய்த முடியாதாகையாலும், அவற்றி னுயர்வு தாழ்வுகள் வியக்தமாயின. இப்படியறிந்த பின்னர் வேதத்தை நெறியென்றும், சைவத்தைத் துறையென்றும் அவற்றின் பேதந்தோன்றக் கூறியநயம் இனைத்தெனவறிவது எளிதாயிற்று. வழியாகிய வேதத்தினுந் துறையாகிய சைவம் சிறப்புடைய தென்பது தொனிக்கவேயன்றோ (மிகுசைவத்துறை) என்றுஞ் சூசிப்பித்தனர்? வேதமாகிய மார்க்கத்தில் நடந்து, சைவமாகிய துறையிற்படிந்து சிவமாகிய மகோததியின மூழ்குதலேயன்றோ மெய்யன்பா துணிவு? "அங்காங்க்யாத்யநந்த மாங்கல்ய குணகணமணி ஜலதே: பரமசிவஸ்ய" என்று ஸ்ரீபாஷ்யத்தில் அந்தச் சிவமஹோததியை வர்ணித்திருத்தலு மறிந்திடுக. மகோததியின் மூழ்கியபின்னர (நலமத்திரும்பிப்பாரா

நான்குமென்னுதே-யமிழ்ந்து [illegible]
அமைவுடைத்து.

வேதமாகிய வழியில் நடக்கிறபோது இளைப்புண்டா [illegible]
ட்க முடியாமல் இளைப்பாறு மிடங்களாக அதன் மத்தியிற் [illegible]
மய மண்டபங்களுண்டாகையால், அவைகளே உலகாயத முதலா
ன்னவென் றறியவேண்டியது. தேகான்மவாதமாகிய உலகாயத
மும் வேதத்தி லுண்டென்பது (பூததேயன்னமாகி யன்னத்தாலுடம்பு
புத்தி - பேதிததேமனமுமாகிப் பிரிந்தமைதிருந்தவின்று-வேதத்தேயிடக்க)
என்னும் வாககியத்தால் விளங்கும். இப்படியே யாவுங்கொள்க. வே
தமார்க்கத்தில நடக்கிறபோது, நடக்கமுடியாம லிளைப்புண்டாமெ
ன்பது பரிபாகமபோதாமையேயாம். வழிநடக்க வலிவுகுன்றியபோ
தே இடையிலொருவன் றங்குவன். அபபடியே வேதமார்க்கப் பிரவ
ர்த்தகத்தில் ஒருவன் றன்னுடைய புண்ணியங் குறைந்த விடத்தி
லேதானே அது உள்ளவரையில் நடநது, மேல் புண்ணியமில்லாமை
யா லந்தவிடத்திலேதானே தடைபடா நிற்பன். பிருதிவிமுத லாதமீ
றாயுள்ள தத்துவங்களை யெல்லாங் கடந்து நின்ற சிவனைக் கூடுவத
ற்கு ஒருவன் முயன்று வேதவழியி னடக்கிறபோது இடையிற்போ
ந்த தத்துவ ஸமூஹங்களாகிற வெளபான மாத்திரமாயுள்ள பலசம
யங்களுண்டாகையால், அந்தந்தத் தத்துவங்களி னிலைபேறடைத
லேயன்றோ இடையிற்றங்குதலென்பதும், சமயங்களிற் றளைபட்ட
ழுங்கலென்பது மாகும்? அவற்றை யெல்லாங் கடந்தபோதுண்டா
குஞ் சைவவசித்தியநந்தரமே யொருவனுக்குச் சரியை கிரியை யோ
க ஞானங்கள் பிராப்தமாகின்றமையால், இவைகளே சைவத்துறை
யிற் படிநது செய்கடன்களாக முடியும். (புறசசமயநெறிநின்று மகச்ச
மயம்புக்கும் புகன்மிருதிவழியுழன்றும் புகலுமாசிரம - வறத்துறைகளவைய
டைந்து மருந்தவஙகள்புரிந்து மருஙகலைகளவைபயின்று மாரணநூல்படித்து
ஞ்-சிறப்புடைய புராணஙகளுணர்ந்தும்வேதசசிறப்பொருளை மிகத்தெளிந்து
ஞ்சென்றாற்சைவத்-திறத்தடைவரிதிற்சரியை கிரியாயோகஞ் செலுத்தியபி
ன் ஞானத்தாற் சிவனடியைச சேர்வர்) என்ற பிரமாணத்தானு மறிக. பு
றச்சமயமுதல் வேதச்சிரப்பொரு ளிறுதியாகப் பூர்வபட்சஞ் செய்
யப்பட்டமையால், சைவத்திறத்தடைவ ரென்பதே வசித்தாந்தமாக
முடிந்தது. இவற்றால், வேதம் வேதாந்தமும்; வேதாந்தம் ஆகமாந்த
முமென்னு மிரண்டு பகுதிகளே வெளியாயின. வேதம் பூர்வபட்ச
ம், வேதாநதம் வசித்தாந்தமும்; வேதாந்தம் பூர்வபட்சம், ஆகமாந்
தம் வசிததாந்தமுமாக வறிவதே மேலோர் துணிவு. (மோனம்வேதாந்த

முடிவு) என்ற வாக்கியத்தால்வேதமுடிவுக்கு முடிவு வெளியானதால, அதுவே ஸித்தாந்த முடிவென்பது ஸித்தம். இதனால், வேதமாகிற வழியில் அநேக சமயமண்டபடிகளும், அதனந்தத்தில் வேதாந்தநிலையும், அதனுச்சியில் ஸித்தாந்தமாகிய சைவத்துறையும் பிரகாசிப்பது வெளியாகி, யாவும் ஒன்றுக்கொன்று ஸாதகங்களும், ஸாத்யங்களுமாகிய வுண்மையும் வெளிப்பட்டது.

ஸ்ரீகுமரகுருபரசுவாமிகள் "ஞானசம்பந்தஞானதேசிக-வேதமென்னும் பாதவம் வளர்த்தனை - பாதவமதனிற் படுபயன்பலவே - அவற்று-ளிலைகொண்டுவந்தனர்பலரே யிலையொரீஇத்-தளிர்கொண்டுவந்தனர் பலரே தளிரொரீஇ - யரும்பொடு மலர்பிஞ்சருங்காயென்றிவை - விரும்பினர் கொண்டுகொண் டுவந்தனர் பலரே - யவ்வாறுறுப்பு மிவ்வாறு பயப்ப - வோரும் வேதாந்தமென்றுச்சியிற்பழுத்த - வாராவின்ப வருங்கனிபிழிந்து - சாரங்கொண்ட சைவசித்தாந்தத்-தேனமுதருந்தினர் சிலரே" என்று திருவாய்மலர்ந்தருளியிருக்கின்றனர். இதில் வேதமும், அதனாலுண்டாகும் பயனும், அந்தப்பயனி லொன்றும் பேதமும், அது முடிந்த விடமும், அவைகளைப் பெறுதற்குரியாரும் வெளிப்பட்டமை காண்க. இலைமுதல் காயீறானவை பல்வேறு சமயங்களுக்கும், கனி வேதாந்தத்துக்கும், அதனநுசாரம் சித்தாந்தத்துக்கும் உவமையாயினமையால் மேல்யாம் காட்டிய வேதம், வேதாந்தம்; வேதாந்தம், சித்தாந்தம் என்னும் விவிதமே நிலைத்தது. இவ்வுண்மை (வேதாந்த சித்தாந்தமே பிறவாவீடென்று- ஓதாமல் வேதமுணர்ந்தோன்) என்று அருளிச்செய்த கண்ணுடைய வள்ளலார் திருவாக்குக்கும் விடயமாய் நின்றது. வேதத்தினுடைய அந்தம் வேதாந்தமும், வேதாந்தத்தினுடைய அந்தம் சித்தாந்தமும் என்று இனிது போதரவே (வேதாந்தசித்தாந்தம்) என்று விளக்கினர். இவ்வுண்மை யுணர்த்தினர் ஸ்ரீஜ்ஞானஸம்பந்தரென்பது தோன்ற (ஓதாமல்வேதமுணர்ந்தோன்) எனவுந் தெரிவித்தனர். வியாஸர்முதலினோர் ஓதாமலுணரினும் அவர்க்கு விட்டுணுபரம் என்றும், அகம்பிரமமென்றும் பின்னர்மலைவு பிறந்த தாகலின், அவர் இவரைப்போலுஞ் சுதந்தரவறிவின ராகாரென்று மேலோர் கூறினமையாலும், நங்காழிவிரகர் நாட்டிய சித்தாந்தம் பிராசுரியம் பெற்றது. வள்ளலார் என்னுங் கம்பீரந் தோன்ற நம்பாலருவாயரிடம் அருட்பரிசெய்தினர் ஸ்ரீகண்ணுடையா ரென்பதே ஸித்தம். வள்ளலார் சாத்திரம் என ஓராபாசத்திரட்டு உலகில் வழங்கிவரலால், அதில் யாருமயங்காவழி அது நந்தமிழ்விரக ரருட்பரிசெய்தினரருளியதன்றென விண்டறிவித்தாம். ஒழிவிலொடுக்கம் - சிவானந்தமா

லை-பஞ்சமலக்கொத்து-மாயாப்பிரலாபம் இத்யாதிகளே நங்கண்ணுடையவுள்ள வருளிச்செய்தனவாம். இந்த வுண்மைநூல்களாலும் வேத வேதாந்த விவிதங்கள் வெளியாகும். (அத்துவிதமாகுஞ்-சிறப்பினதாய் வேதாந்தத் தெளிவாஞ் சைவசித்தாந்தம்) என்று உமாபதிசிவம் கட்டளை யிட்டிருப்பதுங் கண்டறிக. ஈண்டு யாம் பலபடியாலுரைத்த வசனங்களும், வியாக்கியானங்களும், தெளிபொருள்களுமாகிய யாவும் முதலி லெடுத்துக்கொண்ட (வேதநெறிதழைத்தோங்க மிகுசைவத்துறைவிளங்க) என்னுந் திருவாக்குண்மையையே வெளிப்படுத்தின. இந்த நலங்கள் யாவரும் பெற்றுய்யவே புனிதவாய் மலர்ந்தழுதனர் எம்பெருந்தகையா ரென்பதனை முன்னே விரித்தாமாகையா லீண்டிவ்வளவி லுபரதி யடைந்தாம

இதுகாறுஞ்செய்த பிரவசனத்தால் காழிவிரகர்பால் ஸ்வப்பிரயோஜநஸித்தி யெய்தாமை கடித்தலால், அவர் வேண்டுதலும் வேண்டாமையு மிலரென்பது நாட்டப்பட்டது. அவர் (ஓதாமல்வேதமுணர்ந்தோன்) என்று துதிக்கப்பட்டதனாலுமது கடிக்கும். அறிவிக்க வறிதலும், ஓதுவிக்க வோதுதலும் பசுவறிவிற்கண்டாம். தானே யறிதலும், தானேயோதுதலும் பதியறிவாமாகையால், நம்பெருவாழ்வைப் பரமபதி யென்றறிவதே ஸித்தம். பசுவுக்கு அறியுந்தன்மையேயன்றி அறிவிக்குந் தன்மையின்று. அறிவிக்குந்தன்மையுண்மையாலன்றோ வப்பெருந்தகையைப் பரமபதி யென்றுயாம் கூறினும்? இவ்வுண்மை கடைப்பிடித்தே (சமயாசாரியமுதன்மை) அவர்பால் யாவருங்கண்டனர். அறிவிக்கப்புகுவோன் பிறருக்கு அறிவித்தலேயன்றிப் பிறர்பாற்றுனர்வது கூடாது. அறிவிப்பதுடன் அறியவுஞ் செய்வனாகில், அவனுக்கு அறிகின்றவனென்ப தொழிய அறிவிப்பவனென்னும்பேர் நிலைக்காது. தன்னின் மேலோர் தனக்கு அறிவித்ததையே தான் பிறர்க்கு அறிவித்தலால், அவ்வறிவிக்குந் தன்மை தனக்கு ஸ்வதந்திரமாக மாட்டாது. நஞ்செல்வக் குருராயருக்கு அறிவிக்குந் தன்மையே யன்றித் தமக்கு வேறுயுள்ளவர்பால் அறியுந்தன்மை கேட்கப்படாமையால், அவரே அறிவிக்கின்ற பதியும் ஆசாரியருமாயினர். இப்படியே ஏனைச் சமயகுரவர் மூவரிடத்துங்கண்டு தெளிக. வாகீசவடிகள் சமணர்பா லறிந்தாரெனின், சமணர்க்கு அறிவித்ததேயன்றி அவர்பாலறிந்ததில்லை. தர்மஸேநரென்னும் பட்டந்தாங்கி அச்சமயாசாரிய முதன்மை யெய்தினமையால், அவரறிந்தாரென்பது அழிந்தது. அவரப் புறச்சமயத்திற் புக்கருளியது

அதனேற்றந்தாழ்க்கவேயாம். அங்கு ஆசாரியப் பிரவர்த்தக
டெழுந்தருளிய காலத்துந் தமது ஸ்வாத்மாநுபவத்தில்வேறானதி
ல்லை யென்பது (சலம்பூவொடுதூப மறந்தறியேன்- றமிழோடிசைபாடன் ம
றந்தறியே- னலந்தீங்கிலு முன்னை மறந்தறியே னுன்னாமமென்னாவின் மறந்
தறியேன்) என்று சூலை நீங்கப் பாடியருளிய திருவாக்கே நிறுத்தும்.
எமதருளாளர் சமணாசிரிய முதல்வரான காலத்துஞ் சைவநிலையிற்
பெயர்ந்திடாமையால், சமணர்பா லவர் கற்றதும், கற்றவாறு கடை
ப்பிடித்து நின்றதும் பொய்யாயின. அவர் செயல்யாவும் அச்சமண
த்தில் நாடகமாத்திரமாக வறியவேண்டியது. தேவியார் தக்ஷனுக்கு
த் திருமகளாகியும், சிவபெருமான் அவனுக்கு மருகனாகியு நாடகம்
புரிந்து அவன் குடியை வாழவைத்ததுபோல், சமணசமயாசாரிய
முதன்மைபூண்டு அப்பொய்ச்சமயம் புலர்ந்துபோகச் செய்தனரெ
ன்பதே முடிவு. இதனால், அவர் பிறர்பாலறிநதாரென லொழிந்து பி
றர்க்குத்தாமே அவரவர் பக்குவத்துக்கீடாக ஆசிரியராகி யறிவித்தா
ரென்று வெளிப்பட்டமையால், அவர்பாற்கொண்ட சந்தேகம் தொ
லைந்தது. பிறரறிவிக்க வறியாமல் தாமேயறிந்தும், பிறருக்குத் தாம
றிவித்தும், பிறர்பாற்றுமறியுந் தன்மையொழிந்து அவர்க்கு அறிவிக்
குந் தன்மையே சிறந்தும் விளங்குவாராக யாம் நால்வர் பரமாசாரி
யரையன்றி வேறுயாரையுங் கண்டிலமாகையால், இவர்களிடத்திலே
தானே அறிவிக்குந் தன்மையாலெய்தும் ஆசிரியத்தலைமை கண்டா
ம். பரமாசிரியத்தன்மை ஸ்ரீதக்ஷிணாமூர்த்தம்- நால்வராசாரிய மூர்த்
தம் இவ்விடங்களிலன்றி அன்யத்ராஸித்தியாது. அநேகம் ஆசாரி
யர்கள் புராணப்பிரஸித்தர்களெனின், சமயாசாரிய முதன்மைகடி
க்காது. அறிவிக்க வறிந்ததைப் பிறருக்கு அறிவிக்கின்றவர் அவ
ரெனவறிக. யாண்டு ஆசாரியத்தலைமை கடிக்கினும் அதையுஞ் சம
யாசாரிய முதல்வ ரதிஷ்டிப்பேயாம். ஆகையால், இவர்களே சைவ
சமயத்தலைவராவர். இன்னோர் நால்வரெனத் துதிக்கப்பட்ட காலத்
தும் இவர்களைத் தனிமுதல்களாக வேறு பிரிப்பதுங் கூடாது. நால்
வரும் ஒருவரேயாவர். ஒரு தீபமே நாலாகியொளிவிட்டு நானு தீப
ங்களென்று துதிக்கப்பட்டகாலத்தும் அவை யொரேதீபமென்று அ
றிவதே மேலுண்மையை நிறுத்தும். இவ்வதிஸூக்ஷ்ம நயங்களை யு
ணருங்கால், ஜகதாசாரிய மூர்த்தியாயெழுந்தருளிய குருநாதர் ஸ்ரீ
ஜஞானஸம்பந்த வள்ளலொருவரே யென்பது பரமரகஸ்யமறை
ந்ததாற்போல நாட்டப்பட்டது இந்தவுண்மைகளால் பிறருக்கு அறி
விக்குந் தன்மையொழிநது அவரறிவிக்கத தாம் அறியும் பசுத்வ

மெம்பிரான்மாட் டெய்தாமையால், அவர்பா னிகழும் யாவும் பரப
பிரயோசனார்த்தமே யென்று தொடுத்த விஷயம் நிலைபெயராது நி
ன்றது. இவ்வுண்மையைத் தாயுமானசுவாமிகள் (ஆரணமார்க்கத் தாக
மவாசி யற்புதமாய் நடந்தருளுங்காரணம்) என்றுரைத்தமையாலுங் கண்
டறிக. ஆரணம்=மார்க்கம், ஆகமம்=வாசி, அதாவது குதிரை. வே
தத்தை வழியென்றும், ஆகமத்தைக் குதிரையென்றுங் கூறினமை
யால் வேதமாகிற மார்க்கத்தில் ஆகமமாகிற குதிரைமேற் சவாரிகொ
ண்டு பரமகாரணமாய் விளங்குஞ் சிவம் உலவாநிற்கு மென்னும் வு
த்தியமே வெளிப்பட்டது. இதனாலும் வேதத்தின் முடிவில் ஆகம
மும், ஆகமத்தின் முடிவில் சிவமும் விளங்கு மென்னுஞ் சித்தாந்த
பட்சம் சிறப்படைந்தது. இதை விரிக்கிற் பெருகும்.

மேல் வியவஸ்தையால் காழிவிரகர்செயல்பாவும் பரப்பிரயோ
ஜனார்த்தமேயென்று வெளிப்பட்டமையால், இனிப் பின்விஷயத்
தையோசிப்பாம். பிதாவாகிய சிவபாதஹ்ருதயர் அவரைக்கோல்
கொண்டோச்சக் கைதூக்கினர். பிள்ளையார் சிவத்தை அவருக்குக்
காட்டக் கைதூக்கினர். இதனால், சிவபாதஹ்ருதயர்பால் மருளும்,
பிள்ளையார்பால் அருளும் நைஜமாயின. மருட்டன்மையால் பசு
வென்றும், அருட்டன்மையால் பதியென்றும் அன்னோர் வெளியா
யினர். பசுவுக்கு மருளைப்பாற்றியருள வெழுந்த பதியெனத் தம்
மை யறிந்துலகம் பிழைக்கவே தம்மில்வேறுகாத சிவத்தைச் சுட்டி
க் காட்டினர். சுட்டற்ற சுகாதீத நிலையிலநுபவிக்கத்தக்க சிவத்தை
ச்சுட்டிக்காட்டுதல் பசுவுக்கியலுமாறெங்ஙனம்? சுட்டியதும், சுட்ட
ப்பட்டதுஞ் சிவமே யாகையால் அது பொருந்தும். இப்படியே ய
ன்றோ வாதவூர் வள்ளலாருஞ் சுட்டிக்காட்டினர்? இவருள் பிள்ளை
யார்முதலிற் சுட்டிக்காட்டினர். வள்ளலார் முடிவிற் சுட்டிக்காட்டி
னர். ஏனையிருவராசாரியர்களுந் திருமுறைவாயிலாகச சுட்டிக்காட்
டினர். (பாலைநெய்தல் பாடியதும் பாம்பொழியப் பாடியதும், காலனையன்
றேவிக் காரங்கொண்ட, பாலன்-மரணந்தவிர்த்ததுவு மற்றவர்க்கு நந்தம்-கா
ணம்போ லல்லாமைகாண்.) என்றதிருவெண்பாவால் அன்னோர் தன்
மையும், அவர் சிவப்பேறுலகிலருளியபரிசும் வெளியாயின.

திருவிரலாற் சுட்டிக்காட்டினவர் அவ்வளவிலமையாது திருப்
பதிகமுங் கட்டளையிட்டமையால், ஏனையோர் மாட்டு முபகரித்த
தாயிற்று. அது (தோ)என்னு முபக்கிரமத்தைப் பெற்றமையால் பி

ரணவத்தை முதற் கொண்டதாயிற்று. வேதமானது பிரணவத்தை முதலாக வுடையதாகையால், அப்படியே தமிழ்வேதத்திலுங்கண்டாம். கேவலம் பிரணவமன்றித் தகரமதனோடு சேர்ந்தமையால், அந்தப் பிரணவமானது தகரவித்தியா ஸ்வரூபமென்பதும் வியக்தமாயிற்று. சாந்தோக்கிய உபநிஷத்தில் (பிரமபுரமாகிய இச்சரீரத்தில் உள்ள தகரமாகிய புண்டரீகவீட்டினுள்ளே யிருக்கும் ஆகாசம்) என்பது முதலாகத் தகரவித்தை கூறப்பட்டது. இங்கே ஆகாசம் என்றது பிரமமாகிய சிவத்தை. புறத்து மிவ்வாறே இப்பிரமாண்டம் பிரமபுரமெனவும், இப்பிரமாண்டத்தினுள்ளே யிருக்குந் தில்லைவனம் புண்டரீக வீடெனவும், இத்தில்லைவனத்தி லிருந்தருளு செய்யுஞ் சிவம் ஆகாசம் எனவுங் கூறப்படும் இந்தத் தகரோபாஸ்தியைக் கைவல்யோபநிஷத்திற் கண்டுகொள்க. வேதத்தின் ஆதியந்தங்களை முறையே தொடங்கும்போதும் முடிக்கும்போதும் பிரணவோச்சாரணை அவ்வேதத்திற்றானே கேட்கப்படு முண்மையு மித்தமிழ்வேதத்திற் கண்டாம். தொடக்கத்தில் (ஓ) என்றுதொனிப்பது போல முடிவில் எங்கேகண்டாமெனின், (பெம்மானிவனன்றே) என்பதிற்றானே கண்டாம். (அன்றே) என்பது அன்றோ எனப்பொருடந்துநிற்றலே அமைவுடைத்து. (ஓ) என்னும் வெளிப்படை (ஏ) எனமறைந்து நின்றமை அது குப்தமாயறியத்தக்க மறையென்பதையே வெளிப்படுத்தியது. இவ்வுண்மை ஆராய்ச்சியால் கீர்வாணவேதத்தைப் போலவே திராவிடவேதத்துக்கும் உபக்கிரமோப ஸம்ஹாரங்களில்பிரணவோச்சாரணை தீர்மானிக்கப்பட்டிருப்பது வியக்தமாயிற்று. தமிழ்வேதமாகிய தேவார திருவாசகங்களை உபக்ரமோபஸம்ஹாரங்களிற் பிரணவ ஸஹிதமாக அநுட்டிப்பாரின்றெனின், யாவரும் பிரணவஸஹிதமாகவே அநுட்டித்து வருகின்றனர். எங்ஙனமெனின், (திருச்சிற்றம்பலம்) என்று படித்து வருவதே அதுவாம். திரு என்பது முதலில் மங்கலத்தைக் காட்டியது. சிற்றம்பலம் என்பது சிறு அம்பலமெனப் பொருடந்து ஸூக்ஷ்மாகாசம் என்னும் உண்மையையே விளக்கியது இந்தச் சிற்றம்பலமே பேரம்பலமுமாகும். இதனை மஹதாகாசமென் றறியவேண்டும். எட்டக்கூடாமையால் ஸூக்ஷ்மாகாசமும், அகண்டமாயிருப்பதால் மஹதாகாசமுமாம். இரண்டுவிதமும் விவகாரங்களே யன்றி ஆகாசம் ஒன்றே யாகையால், இந்த ஆகாசத்தையே (ஞானவெளி) என்று பொருளுண்டாகுஞ் (சிதாகாசம்) அல்லது (சிதம்பரம்) என்றும் பெரியோர் கூறுகின்றனர். சிவ

வகையாற் கூறுவதும் ஒரு ஆகாசத்தையே யென்பது வலித்தித்தமையால், (திருச்சிற்றம்பலம்) என்னுமவ்வாகாசமே பிரணவமாக முடிந்திருக்கின்றது. (சம்புராகாசமத்யே) என்ற சுருதியால் சம்புவானவர் ஆகாசமத்தியவர்த்தியா யிருக்கின்றாரென்று போந்தமையானும், திருச்சிற்றம்பலமென்னும் பெயர்த்தாகிய தானமே ஆகாசமென்று வேதங் கூறுதலானும், அது ஓங்காரமாகிய பிரணவமே யென்பதை அவ்வாகாசத்துக்குப் பதியாகிய நடேசவள்ளல் பிரணவபீடத்திற் பிரியாதமர்ந்திருப்பதே சான்றாகூறுதலானும்(சிவோமேஅஸ்து சதாசிவோம்) என்று சிவனே பிரணவப் பொருளென்று தொனிக்கின்றமையானும், திருச்சிற்றம்பல நீங்கலான வேனைத்தானங்களிற் பெருமானுக்குப் பிரணவ பீடம் நைஜமன்றென்பதைப் பிரத்யக்ஷமாக யாவருங்காணலா மாகையானும் பிரணவமே திருச்சிற்றம்பலமும், திருச்சிற்றம்பலமே பிரணவமுமாக முடிந்திருக்கு முண்மை வெளிப்பட்டது. ஓங்காரம் பதியினுடைய தானம். திருச்சிற்றம்பலம் பதியினுடைய தானம். முன்னையது சூக்ஷ்மம், பின்னையது தூலம். ஆகவே, இரண்டும் பிரணவமேயாகி மூலமும், அதன் பொருளுமாயின. இதனை வெளிப்படையாக விவகரிக்குங்கால் சிதம்பர நீங்கலான வேனைப் பதிகளில் (பிரபை-அல்லது திருவாசி) என்னும் ஓங்காரபீடம் ஸ்வாமிக்கு வேறாகப்பிரிக்கவும் வேண்டும்போது சேர்க்கவும் மரத்தால் அமைக்கப் பட்டிருத்தலும், அச்சிதம்பரத்தின் மாத்திரம் அந்தப்பிரணவபீடம் ஸ்வாமிக்குவேறாகாமல் தாம்பிரத்திற்றானே அமைக்கப்பட்டிருத்தலும் பிரத்யக்ஷகடிதமென்பதை அறிவிப்பதே அமைவுடைத்து. இன்னும் விரிக்கிற்பெருகும்.

பிரணவத்தை மூலமாகத தொடுத்துப் பாடியசெய்யுளில் (திருச்செவியையே) முதலிற் சிறப்பித்தமையால் தம்முடையபாடல் சிவபெருமானுடைய காதுகளி லேறும்பொருட்டே காழிவீரகர் கருதினாரென்பது மேலோர்துணிவு. அன்றியும், தமது திருவாக்கு வேதமென்பதை விளக்கவே அவர் செவியைச் சிறப்பித்தாரெனலுமொன்று. எங்ஙனமெனின், வேதமானது சுரோத்திரத்துக்கு விஷயமாவது கொண்டே அதனைச் சுருதி என்று விதப்பர். அப்படியே நம் பாலறாவாயர் திருமுறையுஞ் சுரோத்திரவிஷயமாகத்தக்க சுருதியென்பது தொனிக்கவே பெருமானது திருச்செவியைத் துதித்தவாறாயிற்று. அது வேதமென்னு முண்மையைத் (தமிழ்வேதம்பாடினார் ஞானம் பெற்றார்) எனவும்,.(பொருவிறப்பவோதினர் புகலிவந்த புண்ணிய

ஞரென்னிறக்தி புனிதவேதம்) எனவும் (விருப்புடன் பாடலிசைத்தார் வேதத்தமிழால் விரித்தார்) எனவும், (எழுதுமாமறையாம் பதிகத்திசை முழுதும்பாடி) எனவும், (மிக்கசொற்றமிழினல் வேதமும் பாடினுர்) எனவும், (தூக்கின்றமிழ்விரகர் சொல்லிறந்த ஞானமறை தேக்குந் திருவாயாற் செப்பியருள்செய்தார்) எனவும்போந்த பிரமாணங்களாலுமறிக. இவ்வாறமைந்த வேதத்தில் முடிவாகத்தேர்ந்தபயனை அறிவிக்குமாறு (அ-கூகப) வது செய்யுள்களில் சிவபெருமான் தமக்குப்பிழைசெய்த ஆன்மாக்களும் பின்றம்மைவந்தடையின் அவர்களுக்கநுக்ரகஞ் செய்வாரென்பதையும், எவ்வகைப்பட்ட சிறப்பினரும் சிவபெருமானை அன்போடு வழிபடினன்றி அவரையடையார்களென்பதையும், வேதகாரணராகிய சிவபெருமானைக் காட்டுஞ் சைவநெறியைச் சாராதவர்கள் பிழைக்கமாட்டார்களென்பதையும் முறையே இனிது கூறினர். இவைகளுக்குச் சான்றாக இராவணனையும், பிரமவிஷ்ணுக்களையும், புத்தர் சமணரையும் எடுத்துக் காட்டினர். (கக)வது செய்யுளில் தமது திவ்யநாமமந்திரத்தையும், தமது திருவாக்கினேற்றத்தையும், அதனைக் கடைப்பிடித்தார் உய்வாரென்பதையும் பொருளாகக்கொண்ட திருக்கடைக்காப்புங் கூறியருளினர். பெருமானுக்குந் தமக்கும் பேதமின்மையை விளக்கவே தமது மஹாமந்திரமாகிய ஸ்ரீபஞ்சாக்ஷரத்தை ஈற்றிலமைத்தனர். ஞா-ந-ஸ0-ப0-த—(ஞானஸம்பந்த) என்பதே அதுவாம். பஞ்சாக்ஷரமென்றும், சிவமந்திரமென்றும், தாரகமந்திர மென்றும், மூலமந்திர மென்றும், முக்திமந்திர மென்றும் பலநாமங்கள் பெருமானுடைய மந்திரத்துக்கு வருவனபோலவே நம்பாலருவாயர் மந்திரத்துக்கும் பலபரியாயவமைதிகள் பதிகங்கடோறும் வரக்கூறினர். இத்தகையவமைதிகள் பதிகங்கடோறுங் கொள்ளக்கிடக்கும். இந்த நூலில் (௩௩) வது பக்கத்தில் (நெஞ்சமே! உலகத்தார் நரகமெய்தாம லின்பத்தையடையவும், ஆண்பனை பெண்பனையாகிப் பழத்தைக்கொடுக்கவும், சம்பந்தராயவதரித்துத் தேவாரத்தை யருளிச்செய்த முருகக்கடவுளைத் துதியாமலும், அவரது ஸ்ரீபஞ்சாக்ஷரத்தை யநுட்டியாமலும், தவத்தின் முயலாமலும் தீவினைத்தொடர்பால் மும்மலப்பிணிப்புண்டு யாம் அவத்தின் முயன்று அஞ்சுகின்றோம்.) என்னுங் கருத்தமைந்த ஸ்ரீமத் அருணகிரிநாதர் திருவாக்கைக் காட்டியிருக்கின்றோமாகையால், ஆண்டும் ஸ்ரீஞானஸம்பந்தரது பஞ்சாக்ஷரம் இனிது விளங்கியது. இம்மஹாமந்திராதிஷ்டான மூர்த்தியினது திருவாக்கு வேதமாதலை (௩௪) வது பக்கத்தில் (குன்று ஐயம்பேரவுரைததோன்.) என அப்பெரியாரே கூறியதை இனிது 'யாம்

காட்டியிருக்கின்றோ மாகையாலுங், கண்டுதெளிக.* ஏனையசமயங் ஷ்பிள்ளையாரில் வேறாகாதவர்களாகையாகல், அன்னோர் திருவாக்குக் ளுக்கும் இதுவே வசித்தமான மகிமையாய்ச் சிறந்தது: இன்னும்விரி க்கிற்பெருகும். வேதங்களில் சிவபெருமான் தம்மைத் துதித்திருப்ப துபோலவே, திராவிடவேதத்தினுந் தம்மை ஞானஸம்பந்த வள்ளல் பு கழ்ந்திருக்கின்றனர். அவை (ஒருநெறியமனம்வைத்துணர் ஞானஸம்பந்த னுரைசெய்த - திருநெறியதமிழ்.) எனவும், (கொச்சைக்கிறைவன் சிவஞான சம்பந்தன்.) எனவும், (மறைஞானமுனிவன்.) எனவும், (பதியான்ஞானமு னிவன்.) எனவும், (தணிகொண்டசிந்தை யவர்காழி ஞானமிகுபந்தன்.) என வும், (ஞாலத்துயர்காழி ஞானஸம்பந்தன்.) எனவும், (நான்மறைவல்ல ஞா னஸம்பந்தன்.) எனவும், (திருவார்ஸம்பந்தன்.) எனவும், (கழுமலத்திறை தமிழ்க்கிழமைஞானன்.) எனவும், (புல்லிசைகேளா நற்றமிழ் ஞானசம்பந்த ன்.) எனவும், (முத்தமிழ் நான்மறை ஞானஸம்பந்தன்.) எனவும், (பழுதி ல்ஸம்பந்தன்.) எனவும், (பார்ன்மலிகின்ற புகழ்கின்ற தமிழ் ஞானஸம்பந்த ன்.) எனவும், (தமிழ்விரகன்.) எனவும், (தண்ணார்சீர் ஞானஸம்பந்தன்.) எ னவும், (திருஞானஸம்பந்தன்.) எனவும், (மிக்கஞானஸம்பந்தன்.) எனவு ம், (தலைமகனாகின்ற தமிழ்ஞானஸம்பந்தன்.) எனவும், (நல்வித்தகததாலு னாரு ஞானஸம்பந்தன்.) எனவும், (செல்வன் ஞானஸம்பந்தன்.) எனவும், (நலந்திகழ் ஞானஸம்பந்தன்) எனவும், (தலைஞானஸம்பந்தன்) எனவும், (காழிநாதன் வேதியன் ஞானஸம்பந்தன்) எனவும், (சுற்றுமுற்றுமாயினு ன, வன்பகர்ந்தசொற்கள்) எனவும், (சீரூர்ஸம்பந்தன்) எனவும், (நல்லார்பரவ ப்படுவோன் காழிஞானஸம்பந்தன்) எனவும், (பூசுரன் ஞானஸம்பந்தன்) எ னவும், (நாவினலம் புகழ்சீர் நான்மறையான் ஞானஸம்பந்தன்) எனவும், (மெய்ஞ்ஞானஸம்பந்தன்) எனவும், (எண்ணமர்பல்கலையாளிசைஞானஸம் பந்தன்) எனவும், (நண்ணியகீர்த்தி நலங்கொள்கேள்வி நான்மறைஞானசம் பந்தன்) எனவும் வருவனவேயாம். இவ்வாறு தம்மைப்புகழ்ந்து து திக்குநலத்தை (தன்னைத் துதிக்குஞ் சொன்னலந்தானு - மத்துறையறிவா ளர்க் கறைவதொன்று) என்ற சந்தானகுரவர் திருவாக்கானே யறிந் திடுக. ஆயின், ஞானஸம்பந்தவள்ளல் கீர்வாணத்தன்றி அவைகளைத் தமிழி லருளிச்செய்த தென்னையெனின், கீர்வாணமுந் தமிழும் ஸ மமரியாதை யுடையன வாகையால் இரண்டும் ஒன்றேயாகும். கீர் வாணமே சிறந்ததெனவும், அது மாத்ருபாஷை யெனவும், அதிற் றானே மூலமாகிய வேதமுளதெனவும், அது முதல்வருணத்தவரா ற் கொள்ளத்தக்க மேம்பாடுடைய தெனவும், தமிழானது அன்ன சிறப்பின தன்றெனவும், சூத்திரராற் கவரத்தக்க தெனவும் உலகிற் சிலர் வழங்குவ தென்னையெனின்; இவ்வாறு அறியாதார் கூறுவரா

கையால் இதனை மேலோர் மதித்திடார். இது ஸர்வோத்தம மென்பதைப் பிரமாணவாயிலாகவும், யுக்தியநுபவ ஸித்தமாகவும் விளக்குகின்றாம்.

தமிழ் என்பது இனிமையென்று பொருள்தரலால், தமிழ்ப்பாஷை என்றது இனிமையான பாஷையாம். அன்றியும், "தமிழ் என்னுஞ்சொல் தனிமைப்பொருள் குறித்த தமியென்னும் வினையடியாற் பிறந்து வினைமுதற்பொருண்மை யுணர்த்திய விகுதிகுன்றித் தனக்கிணையில்லாப் பாஷையென்னும் பொருள்பயப்பது." இத்தமிழ்ப் பாஷையைத் தென்மொழியெனவும், தென்பாஷை யெனவும், தென்கலையெனவும் யாவரும் வழங்கலால், இது வடமொழி-வடபாஷை-வடகலை என்னும் பெயர்களைப் பெறமாட்டாது. இப்படியே கீர்வாணமானது வடமொழி-வடபாஷை-வடகலை என்னும் பெயர்களைப் பெறுவதன்றித் தென்மொழி-தென்பாஷை-தென்கலையென்னும் பெயர்களைப் பெறமாட்டாது. இதனால், வடக்குக் கொருபாஷையும், தெற்குக் கொருபாஷையும் அநாதிஸித்தமாகவே அமைந்திருக்கு நலம் வெளிப்பட்டது. இவ்விரண்டுமன்றி வடக்கினுந் தெற்கினும் பாஷைகள் பலவுள. அவை தனித்தனி முதல்களாகா. வடக்கிலுள்ள பாஷைகள் கீர்வாணத்தினும், தெற்கிலுள்ள பாஷைகள் தமிழினும் அந்தர்ப்பவமாம். கீர்வாணம்-தமிழ் என்னு மிரண்டுபாஷைகளே ஒன்றையொன்று விரோதியாத மூலபாஷைகளாம். இவ்விரண்டுக்கும் வக்தா சிவபெருமானாகையால். ஏனையபாஷைகள் சிவபெருமானை வக்தாவாக வுடையனவன்று. இவ்வுண்மையால், கீர்வாணம்-தமிழென்னு மிரண்டும் பதியாற் செய்யப்பட்டனவும், ஏனைய பாஷைகள் பசுக்களாற் செய்யப்பட்டனவுமென்று மேலோர் துணிவர். (ஆரியமுந் தமி ழும்முடனேசொலிக் - காரிகையார்க்குங் கருணைசெய்தானே) எனவும், (தமிழ்ச்சொல் வடசொல் லெனுமிவ்விரண்டும்-உணர்த்துமவனை யுணரலுமாமே) எனவுந் திருமந்திரத்திற் கூறியவாறுங்க. அன்றியும், (வடமொழியைப் பாணினிக்கு வகுத்தருளியதற்கிணையாத் - தொடர்புடைய தென்மொழியை யுலகமெலாந்தொழுதேத்துங்-குடமுனிக்குவலியுறுத்தார் கொல்லேற்றுப்பாகரெனிற்- கடல்வரைப்பினிதன்பெருமை யாவரேகணித்தறிவார்) எனவும், (இருமொழிக்குங்கண்ணுதலார் முதற்குரவரியல்வாய்ப்ப - விருமொழியும் வழிப்படுத்தார் முனிவேந்தரிசைபரப்பு-மிருமொழியுமான்றவரே தழீஇயினாரென்றாலிவ்-விருமொழியுநிகரென்னு மிதற்கையமுளதேயோ) எனவும் (ஆதிபிற்றமிழ்நூ லகத்தியற்கு ணர்த்திய-மாதொருபாகனைவழுத்துதும்) எனவும்போந்த பிரமாணங்களும் எமது உண்மையை நிறுத்தும். இதனை யறியாதார் அகத்தியமுனிவரே தமிழ்ப்பாஷை

யை யுண்டுபண்ணினரென்று கூறுவர். பாணினிக்கு வடமொழியை யும், அகத்தியருக்குத் தென்மொழியையுஞ் சிவபெருமான் உட தருளினமையால், அவரருட்பரிசால் அம்முனிவ ரிருவரும் அவ் ருபாஷைகளையும் உலகிற் பிரகாசப்படுத்தினரென வறிக. இதனுல் அந்தப்பாஷைகளுக்குச் சிவபெருமானே வக்தாவும், பாணினி அக த்திய ரிருவரும் பிரவக்தாக்களு மாயினர். இம்மரபறியாமல் தமிழ் ப்பாஷையைச் சூத்திரபாஷையென்பது சூத்திரப்பிராயர்கட்கே சி றக்கும். அகத்தியமுனிவரே அது செய்தாரென்றவிடத்தும் அவர் சூத்திரராயிடினன்றோ அவர் பாஷைக்குஞ் சூத்திரத்வம் ஸம்பவிக் கும்? அவரைப்போலவே முனிவராகிய பாணினியார் செய்தது சூத் திரபாஷை யாகாதபோது அகத்தியர்செய்தது மாத்திரம் ஏன் சூத் திரபாஷையாகும்? அம்முனிவர்தம்முள் அகத்தியர் பெருமையைத் தேவியே பெருமானுக்கு எடுத்திசைத்தமையானும், அதனுள், அக த்தியர் சிவனரிடந் தமிழுபதேசத்தைப் பெறுவதன்முன்னரே தமி ழ்ப்பாஷை யுண்டெனவும், அது வழங்கியிருந்தநாடு தமிழ்நாடெ ன்று பெயர்கொண்டிருந்த தெனவும் பெறப்பட்டமையானும், அக த்தியர் பெருமை வேறு எந்தமுனிவருக்கு முண்டாகாமையானும், (வடமொழியினும் ஆசிரியர் பாணினியார் தொல்லாசிரியர் சூத்திரங்களுட் சி லவற்றைத் தம்முடைய சூத்திரங்களா லெடுத்தோதி மறுத்து வேறுவிதி கூ றுவர். அவர் சூத்திரங்களுட் சிலவற்றை ஆசிரியர் வரருசியா ரெடுத்தோதி ம றுத்து வேறுவிதி கூறுவர். அவ்விருவரையு மோரோரிடங்களி லாசிரியர் பத ஞ்சலியாரெடுத்தோதி மறுத்து வேறுவிதி கூறுவர். ஆசிரியரகத்தியனர் தொ ல்காப்பியனர் பதஞ்சலியார் முதலாயினரு மொரோவழி யவ்வாறு மயங்கிக் கூறுபவாலோவெனின், அவர்தவத்தான் மனந்தூயராய் முக்குணங்களையுங்க டந்து இறைவனருள் பெற்றுடையராகலி னன்னரல்லரென வுணர்க.) என மேலோர் அகத்தியரேற்றம் புலப்படுத்துமாற்றுனும்அவர் முகமா கப் பிரகாசத்தை யடைந்த தமிழ்ப்பாஷை பாணினிமுகமாகப் பி ரகாசத்தை யடைந்த கீர்வாணத்தினுஞ் சிறந்ததாகவே யாவருங் கொண்டிடுவர். (தாழ்ந்தது வடகீழெல்லை யுயர்ந்தது தென்மேற்கெல்லை-சூ ழ்ந்ததுகண்டுவானோர் தொழுதுனைப்பரவியைப-ஆழ்ந்திடுமரவம் பூண்டோ யொருவனின் ஞெப்பானங்கே-வாழ்ந்திடவிடுத்தாலிந்த வையநேர்நிற்குமெ ன்றார்.) எனவும், (பைத்தலைபுரட்டுமுன்னீர்ப் பௌவமுண்டவனே யெம் மை-யொத்தவனனையான்வாழ்க்கைக் குரியளாகியவுலோபா - முத்திரைபிம வான்பெற்ற முகிழ்முலைக்கொடியொப்பாளென் - றத்திருமுனியைநோக்கி யாயிடைவிடுத்தாயன்றே) எனவும், (விடைகொடுபோவானுன்னறை வேண் டினனேகுந்தேயந்-தொடைபெறுதமிழ்நாடென்று சொல்லுபவந்தநாட்டி-னி

டைபயின்மணித்தரெல்லா மின்றமிழாய்ந்துகேள்வி-யுடையவரென்பகேட்டார்க் குத்தரமுரைத்தல்வேண்டும்) எனவும், (சித்தமாசகலவந்தச்செந்தமிழியனூறன்னே-யத்தனே யருளிச்செய்தி யென்றனனேயான்றேற- வைத்தனே முதனூறன்ஸே மற்றதுதெளிந்தபின்னு - நித்தனேயடியேனென்று நின்னடி காண்ப தென்றான்) எனவுந் திருவிளையாடற் புராணத்திற்போந்தவுண்மையானுமறிக. இவ்வர்த்தத்தைக் கொண்டிருக்கும் மூலமாகிய ஸ்ரீ ஹாலாஸ்ய மாஹாத்மியத்தில் "ஸ்ரீகண்டநாத பகவந் ஸ்ரீமத் கைலாஸநாயக, த்வதாஜ்ஞயா கமிஷ்யாமி மஹாந்தம் மலயாசலம், மயி தத்ர கதேஸர்வே தத்ரத்யா த்ராமிடாஜநா:, ஜ்ஞாதும் த்ராவிடசப்தாம்ஸ்ச பவிஷ்யந்தி ஸமுத்ஸுகா:, தேஷா மப்யுபதேசாய மமவிஜ்ஞாநஹேதவே, மஹ்யம் த்ராவிடஸூத்ராணி ஸஹசோபதிசப்ரபோ, இத்யகஸ்த்ய ப்ரார்த்திதேந ஸர்வஜ்ஞேந த்வயாததா, உபதிஷ்டாநி ஸூத்ராணி தஸ்மை கலசஜந்மநே, புநர்விஜ்ஞப்தி மகரோத் பவந்தம் ப்ரதிகும்பஜ:,பவத்தர்சந மஸ்மாகம் பவிஷ்யதி கதாபுந:" என்று பெறப்பட்ட வசனங்களையும் பரியாலோசித்திடுக. இவற்றால், திராவிடத்தை அகத்தியர் உண்டுபண்ணினரென்பது அடிபட்டுப் போய்விட்டது. வேதத்தைப் பிரகாசப்படுத்திய வியாஸபகவானை வேதத்தைச்செய்தவரென்று கூறுதல் கூடாவாறுபோலத் திராவிடத்தைப் பிரகாசப்படுத்திய அகஸ்தியபகவானைத் திராவிடத்தைச் செய்தவரென்று கூறுதல்கூடாது. வேதத்தைப் பிரகாசப்படுத்தியதுகொண்டு வியாசமுனிவரை வேதவியாஸர் என்றபடியே தமிழைப் பிரகாசப்படுத்தியதுகொண்டு அகத்தியமுனிவரைத் தமிழ்முனி என்று மேலோர் துதித்திடுவர். இதுவே பாணினியாரிடத்துஞ் சிறக்கும்.

இத்துணைச் சிறப்பினதாய் விளங்குந் திராவிடம் ஏனைப்பாஷைகள் போலாது அநாதிஸித்தமா யுளதென்பதற்கும், அதன் மூலவிலக்கணமே யன்றி வழிநூல் சார்புநூல்களாக வந்த தொல்காப்பிய முதலியனவுங் கேவலம் அநாதி யென்பதற்கும் (நான்கு கூறுமாய் மறைந்தபொரு ளுடைமையா னன்மறை யென்றார். அவை தைத்திரியமும், பௌடிகமும், தல்வராகமும், சாமவேதமுமாம். இனி இருக்கும்-யசுவும்-சாமமும், அதர்வணமும் என்பாருமுளர். அது பொருந்தாது. இவரிந்நூல் செய்த பின்னர் வேதவியாதர் சில்வாழ்நாட் சிற்றறிவினோ ருணர்தற்கு நான்கு கூறுகச் செய்தாராதலின்) என்று தொல்காப்பிய வுரைச்சிறப்புப் பாயிரத்தில் நச்சினார்க்கினியார் கூறியதே நிதரிசனமாகும். வியாஸர் வேதத்தைப் பிரகாசப் படுத்துவதன் முன்னரே திரணதூமாக்னி யென்னும் அகத்தியமாணக்கர் தொல்காப்பியஞ் செய்தாராயின், அவரு

க்கு மூலமாகிய அகத்தியர்செய்த முதனூல் எக்காலத்த தாகவேண்டும்? அகத்தியருக்கு அதனைச் சிவபெருமான் உபதேசித்தருளிய காலம் பார்வதியாரது திருமணஸந்தர்ப்பமே யாகையால் அதிக பிராசீனத்வமும், மங்களத்வமும் அதற்கு ஸித்திக்கின்றன. அதற்கு முன்னூந் தமிழ்நாட்டின் பிரஸம்மை அகத்தியராற் செய்யப்பட்டமையானும், சிவாகமங்களில் சிவபூஜாகாலத்தில் திராவிடஸ்தோத்திர பாராயணங் கேட்கப்படுகின்றமையானும் அருள்வடிவமாகிய தமிழ்ப்பாஷையினது தன்மைக்கு எவராலும் மஹிமைசொல்ல முடியாது. கீர்வாணமுந் திராவிடமுஞ் சிவபெருமான் அருளிச்செய்தனவே யாயினும், அவ்விரண்டும் அப்பரமபதி யருளிச்செய்த வேத சிவாகமங்களையே முறையே ஒத்திருக்கின்றன. வேதத்தினுஞ் சிவாகமந் தெளிவாயிருத்தல் போலவே கீர்வாணத்தினுந் திராவிடம் தெளிவாயிருக்கின்றது. இந்தத் தெளிபாஷையைப் புண்ணியக்குறைவுடையாரே குறைந்த பாஷையென்று குரைப்பர். சிவாகமங்களை நிந்திக்கும் பாஷண்டிகளு முளராகையால், அப்படியே திராவிடநிந்தை செய்வாருமுளர். சிவாகமத்தில் அன்புபாராட்டத் தக்கவரே திரமிடத்தினும் அன்புபாராட்டத் தகுதியினராவர். ஆகையால், திராவிடநிந்தை செய்வாரை மேலோர் ஓர் பொருளாக மதியார்! மதியார்!!

வேதத்தில் அறம்-பொருள்-இன்பம்-வீடு என்னும் புருஷார்த்தங்களைச் சொல்லினும், முடிவாகியவீடு அதிகமாகசசொல்லிய முதன்மூன்றைக்காட்டினு மற்பமாகி அவற்றின் மறைந்து கிடக்கும். சிவாகமம் வீடொன்றினையே அதிகமாக விரித்துச்சொல்லும். முதன்மூன்று தருமங்களுந் தாமஸராஜஸங்க ளதிகரித்து ஸத்வங்குறைந்து வெளியாகும். வீடு ஒன்றுங் கேவலம் ஸத்வமாய் நிற்கும். இதனால், முதன் மூனறு தருமங்களைச் சொல்லிய வேதத்தில் தாமஸராஜஸங்களோடு அற்பஸத்துவமும், முடிந்த வீட்டையுணர்த்துஞ் சிவாகமங் கேவலம் ஸத்வமயமுமாக விளங்கும். இவ்வாறே கீர்வாணம்-திராவிட மிவ்விரண்டிடங்களினுங் கொள்க. திராவிடம் ஸத்வபாஷையாதல் கொண்டே ஞானஸம்பந்த வள்ளல் கீர்வாணத்தைவிட்டுத் திராவிடத்திற் றிருவாய்மலர்ந்தருளினர். இந்த விசாரத்தால் வேதசிவாகமங்களிரண்டும் ஸமப்பிரமாணங்க ளானவிடத்தும் வேதத்தினுஞ் சிவாகமம் சிறந்திருப்பது போலக் கீர்வாணந் திராவிட மிரண்டும் ஸமமரியாதை யுடையனவேனும், கீர்வாணத்தி

னுந் திராவிடம் அதிகமரியாதை பெற்றிருப்பதெனவும், அப்படி யே கீர்வாணவேதம் திரவிடவேத மிரண்டும் ஸமமரியாதை யெய்தி னவேனுங் கீர்வாண வேதத்தினுந் திரவிடவேதமே சிறந்திருப்பதெ னவுந் தீர்மானிக்கப்பட்டது.

இன்னும், "த்வதங்கஸம்பவாவர்நா ஆதிஹாந்தாஸ்ச வாங்மயா: ஜநிஷ்யந்தி மிதோபின்னே ராகாரைஸ் ஸ்ருதியோபுவி, அகாரரூபக வாந் ஸர்வவ்யாபீ ஸதாசிவ:, தேஷாஞ்ச ஸ்ருதியாம்மத்யே பவத்யே க: கவீச்வர:, ஆஹத்யைகோந பஞ்சாசத் ஸங்கிநஸ் ஸத்கவீச்வரா:, ஸந்தஸ்த்வதங்க ஸம்பூதாஸ் தேத்ராவிட கவீச்வரா:" என்று ஸ்ரீ ஹாலாஸ்ய மாஹாத்மியத்திற்போந்த வசனங்களைக் கொஞ்சம் யோசிப்பாம். இவற்றுள், பிரஹ்மாவினது சாபத்தையடைந்து ஸரஸ்வதி யானவள் தனது கீர்வாண பாஷாரூபத்தை மாற்றிக்கொண்டு தமிழ்ப்புலவர் நாற்பத்தெண்மராகப் பிறந்து தமிழ்ப்பாஷையைக் கற்றுச்சிறந்த மான்மியம் வெளிப்படுகின்றமையானும், அப்புலவருட்டலைமை யெய்திய கீரன் தமிழிலக்கணங் கற்குமாற்றல் போதாது மயங்கி அகங்கரித்தவழி அவனுக்கு அகத்தியரவ்விலக்கண முபதேசித்தது வேறோரிடத்திற் கேட்கப்படுகின்றமையானுங் கீர்வாணபாஷையைக் காட்டினுந் திரவிடபாஷைக்கே கௌரவஞ் சிறந்திருக்கின்றது. சாபம் ஸரஸ்வதிக்கே வந்தமையால், அதைக் கீர்வாணத்துக்கு மாத்திர மேற்றுவது கூடாது. அவளுடைய அம்சமாகிய திராவிடத்துக்கு மேற்றுவது உசிதமெனின், திராவிடத்துக்கு எழுத்தெல்லாம் முப்பதே யாகையானும், சாபத்தாற் பிறந்த வெழுத்துக்கள் நாற்பத்தெட்டாகையாலும் சாபமெய்தியது கீர்வாணமென்பதே ஸித்தம். நாற்பத்தெட்டில் முப்பதும் அடங்கலால், ஆண்டமையுமெனின், எ-ஒ-ழ-ற-ன இவை அடங்காமையானும், நாற்பத்தெட்டும் முப்பதையுமே கற்றுக் காலங்கழித்தமையானும் அதுகூடாது. என்னை, கீர்வாணம் உயர்ந்த பாஷையாகையால் சாபத்தாலிழிந்து இழிந்தபாஷையைக் கற்றதெனின், சாபமடைந்த பாஷையை இழிவற்றதெனவும், சாபம் அடையாத பாஷையை இழிந்ததெனவுங் கூறுவது எங்ஙனம்? தமிழ்ப்பாஷையைக் கற்றதனானே கீர்வாணத்துக்குச் சாபம் நிவாரணமாயினமையால், கீர்வாணத்தினுந் திராவிடம் சிறந்ததென்பதே ஸித்தமாயிற்று. என்னை, திருவிளையாடற் புராணத்தில் "தொக்க வாரியமுமேனைச் சொற்பதினெட்டுமோய்ந்து" என்றதெனின், அது கலைமகள் ஸர்வபாஷாரூபிணி யென்பதைக் காட்டி

யது. ஆண்டு, "தக்கதென்கலை நுண்டேர்ச்சிப் புலமையிற் றலைமைசார்ந்தார்" என்றதே முக்கியம். இதனை வலியுறுத்துமாறு, "ஸ்ரீஹாலாஸ்யே மஹாஸ்தானே ஸுந்தரேச்வர ஸத்புரே, ஸம்பூய த்ராவிடாங்ஸர்வே கவித்வாதிசயோநச" எனவும், "சிவார்ச்சந பராநித்யம் சிவதர்ம பராயணா:, தக்ஷா த்ராமிடபாஷாயா மத்யந்தம் நிர்மலாசய:" எனவும், ஷை ஹாலாஸ்ய மாஹாத்மியத்தில் அடுத்தடுத்துவரும் பிரயோகங்களையுங் கண்டுதெளிக.

இத்துணைச்சிறப்பு வடபாஷைக்கின்று; தமிழ்ப்பாஷைக்கு ஸ்ரீ சிவபெருமானே முதலாசிரியராயினாரன்றி முருகக்கடவுளு மாசிரியத்தலைமைதோன்ற வகத்தியனார்க் கோர்காலத்திற் றமிழறிவுறுத்தினாரென்பது ஆன்றோர் மதமாதலால். (தமிழ்நாட்டிற்கு வடக்கட்பிற வெல்லையு முளவாக வேங்கடத்தை யெல்லையாகக் கூறினார். அகத்தியனார்க்குத் தமிழைச செவியறிவுறுத்த செந்தமிழ்ப்பரமாசாரியராகிய அறுமுக்கடவுள் வரைப்பென்னு மியைபுபற்றியென்பது.) எனச் சிவஞான முனிவர் கூறினர். அன்றியும, தமிழ்ச்சங்கபரிபாலனம் உலகி னடைபெற்றதன்றிக் கீர்வாணஸங்கம் நடைபெற்றதின்று. முதற்சங்கம்-இடைச்சங்கம்-கடைச்சங்கங்களில் அச்சங்கத் தலைவர்களா யெழுந்தருளியிருந்தவர்கள் ஸ்ரீசிவபெருமான் - முருகக்கடவுள் முதலினோரே யாகையா லின்ன சிறப்பெய்திலாக் கீர்வாணத்தைத் திராவிடபாஷையினுயர்ந்ததெனக்கோடல் யாண்டிசையும்? இத்தகையதமிழ் கீர்வாணத்தை மூலமாகக்கொண்டு பிறந்ததெனக்குழறலும் யாண்டுப்பொருந்தும்? இதனால், திராவிடத்துக்குங் கீர்வாணம் மாத்ருபாஷையென்றது தவறாயிற்று. (தமிழ்மொழிப் புணர்சசிக்கட்படுஞ் செய்கைகளும், குறியீடுகளும், வினைக்குறிப்பு, வினைத்தொகை முதலிய சிலசொல்லிலக்கணங்களும், உயர்திணை அஃறிணை முதலிய சொற்பாகுபாடுகளும், அகம்புறமென்னும் பொருட்பாகுபாடுகளும், குறிஞ்சி வெட்சி முதலிய திணைப்பாகுபாடுகளும், அவற்றின் பகுதிகளும், வெண்பாமுதலிய செய்யுளிலக்கணமும், இன்னோரன்னபிறவும் வடமொழியிற் பெறப்படாமையானும்.) எனத் தொல்காப்பியச் சூத்திரவிருத்தியிற் கீர்வாணத்திற் றமிழடங்காமையை விளக்கியவாற்றானுந் திராவிடத்தினது ஸ்வாதந்திரியம் வெளியாயிற்று. கீர்வாணமுந்தமிழுந் தம்மிலொத்துத் தனித்தனி விளங்கு முதல்களும், பெருக்கமுடையனவுமாதலை ஷைவிருத்தியிற்றானே (இந்திரனுக்குப் பிருகற்பதி இவைவழு அவைவழுவில்லனவென வடமொழிகளைத் தனித்தனி யெடுத்தோதலுற்றார்க்குத் தெய்வயாண்டி லாயிரம்யாண்டு சென்றது. சென்றுஞ் சொற்கண் முடிந்திலவென மாபாடியத்து ளாசிரியர் பதஞ்சலியா ரெடுத்தோதினர். தமிழ்மொழியு மவ்வாறு பெருகிக்கிடத்தலின்,

வகரமற இல்லையழு இல்லையழுவில்லனவெனத் தனித்தனி யெடுத்தோதப் படின முடிவுபெறாது.) என விளக்கியிருக்கின்றமையானுந் தெளிந்தி டுவர் மேலோர்

சிலகீர்வாண வெழுத்துக்களும், சிலகீர்வாணமொழிகளுந் தமிழில் வந்துகூடும். அவ்வாறு கீர்வாணத்தில் தமிழெழுத்துக்களும், தமிழ்மொழிகளுஞ் சென்று கூடுவதின்றெனின் இதற்கு விடைகூறுதும். அகரத்தின்முன்னர் இகரமும், யகரமெய்யுந் தம்முளொத்துப் பொருந்தினல் ஐ என்னும் எழுத்துண்டாமெனவும், அகரத்தின் முன்னர் உகரமும், வகரமெய்யுந் தம்முளொத்துப் பொருந்தினல் ஔ என்னும் எழுத்துண்டாமெனவும் வடநூலார் ஸந்தியக்கர விலக்கணங் கூறுதலானும், (மொழிந்தபொருளோடொன்ற வவ்வயின் மொழியாததனை முட்டின்று முடித்தலென்னு முத்தியான் அகரக்கூறும் இகரக் கூறுந் தம்முள்ளொத்து எகரமொலிக்கும். அகரக்கூறும், உகரக்கூறுந் தம்முளொத்து ஒகரமொலிக்குமெனவுங்கொள்க.)என நன்னூல் விருத்தியுரையிற் காண்டலானும், (எ-ஒ) என்னு மொலிகள் கீர்வாணத்தன வன்றாகலானும், இவ்விரண்டினுள் (ஒ) என்பது அகர உகரங்களாகிய பிரணவத்தின் கூறாகின்றமையானும், இந்த வியவஸ்தையால் பிரணவமானது திராவிட மாகின்றமையானும், கீர்வாணவேதமானது தமிழையே மூலமாகக்கொண்டதென யாம் சாதிக்கப்பின்னிடேம். என்னை, (ஓ) என்னு நெடில் கீர்வாணமாதலால் அதுவே அங்கமையுமெனின், அற்றேல் அகர உகர மகரங்களாலாகியது பிரணவமாகிய ஓம் என்றது பொய்யாம். "அகாரம் ப்ரஹ்மாணம் நாபௌ வுகாரம் விஷ்ணும் ஹ்ருதயே மகாரம் ருத்ரம் ப்ருமத்யே ஓங்காரம் ஸர்வேச்வரம் த்வாதசாந்தே" எனப்போந்த உபநிஷத்துக்கும் விரோதமாம். இதனால், ஒகரம் தமிழாதல் சாதிக்கப்பட்டது. (ஓ)என நீண்டதும் இந்த ஒகரமே யாகும். (ஒ) என்னுந் தமிழெழுத்தினது நெடிலைவிட்டு (ஓ) என்னும் வடவெழுத்தையே ஆண்டு ஸமர்த்திக்கமுடியாது. முடியுமெனின், பிரணவத்துக்குத் தோஷமுண்டாகாமல் சாதிக்கக் கடவர்.

என்னை, (அ-இ) என்பவும், (அ-உ) என்பவும் வடவெழுத்துக்களாகையால் அவற்றின் ஸந்தியக்கரங்களாகிய (எ-ஒ) என்பவும் வடவெழுத்துக்களேயாம். அதனால் அவை தமிழிலுள்ள (எ-ஒ) எழுத்துக்களன்றாமெனின், கீர்வாணந் தமிழொலியாகத்திரிதலால் விபசரிக்கும். விபசரியாமையை விரும்பின், அ-இ-உ என்பவை

ளைபபோல எ-ஒ என்பவைகளையும் அந்தப் பாஷையின் [illegible] சிற வாம்சரங்களாகக்காட்டி நாட்டவேண்டும். அங்ஙன மின்மையின அது விபரீத்தது ஸத்தியம். இந்தவிபசாரதோஷத்தை மாற்ற [illegible] மிங்கே யோர் பரிகாரங்கூறுகின்றாம். என்னெனின், (எ-ஒ) என்பன திராவிடத்தின் சிறப்பெழுத்துக்க ளாகலானும், எகரத்தில் அகரமு ம் இகரமும், ஒகரத்தில் அகரமும் உகரமும் நிலைபெறுகலானும், (எ-ஒ) என்னுந் தமிழெழுத்துக்களைப்போலவே அவற்றின் அந்தர்க்கதங்களாகிய (அ-இ-உ) என்பனவுந் தமிழெழுத்துக்களே யாகும் என்று கூறுவதேயாம். இதனால், (அ-இ-உ-எ-ஒ) என்னுங்குறில்களும் இவற்றி னெடில்களுங் கேவலந்தமிழேயாகி, இதினின்றுந் தானே கீர்வாணம் பிறந்து விர்த்தியடைந்தது என்று கூறுவதினுங் குற்றமுண்டாகாது. சிவனுடைய அமிசமே சக்தியானாற்போலத் தமிழினுடைய அமிசமே கீர்வாணம் ஆயினமையறிக. இவ்வுண்மையால், கீர்வாணதிராவிடங்களை முறையே மாத்ருபாஷை பித்ருபாஷைகளென்று கூறுவதுஞ் சிறக்கும். கீர்வாணத்தை மாத்ருபாஷையென்று யாவருங்கோடலானும், அங்ஙனங்கோடல் பித்ருபாஷை இல்வழி அமையாமையானும, அது மேல்வியவஸ்தையால் திராவிடமேயெனச் சிறந்தமையானுங் கீர்வாணத்தை மாத்ருபாஷையென்று புகழ்வதும், கீர்வாணம் திராவிடத்தி னுபகாரத்தை வேண்டாது என விதப்பதும், கீர்வாணம் திராவிடத்துக்கு உபகரியாநிற்கு மென வியப்பதும் அவலமாயின. கீர்வாணமானது தமிழுக்குபகரித்தல் நாயகன்மாட்டமைந்த அவனது துணைவியி னுபகாரத்தையே மானும். அவன் றுணைவியோடிருப்பினும், அவளை நீங்கியிருப்பினுங் குறைகூறபபடான். அவ்வாறே கீர்வாணத்தினுதவி இல்வழியும்,உள்வழியுந் திராவிடத்துக்குத் தாழ்வும் உயர்வும் உண்டாகா. நாயகனது பிரிவையடைந்த நாயகிக்கு ஓர் நலனுஞ் சிறவாமைபோல, திராவிடத்தினது பிரிவை யெய்தின், கீர்வாணமும் அதனாலாய வேதமும் பயனிலவாக முடியும்.

அற்றேல், வேதசிவாகமங்களைச் சிவபெருமான் திராவிடத்திற் கூறாமல் கீர்வாணத்திற் கூறியதென்னையெனின், இது மயக்கவினாவென்க. மேலிடத்தில் வேதத்துக்குப் பீஜமாகிய் பிரணவத்தைத் திராவிடமென்று காட்டினும். ஆரம்பத்திற்றானே திராவிடம் காதலாமலகமெனக் காண்டலால், இஃதறியாது கடாவுவாரை மயக்கவினாவுடையரென்றாம். வேதமானது (அநந்தாவைவேதா:) என்றவசனப

ரியாலோசனையால் அநந்தமாயுளதென்பது ஸித்தம். அவ்வநந்தம் கீ
ர்வாணம்-திராவிடமென்னு மிருபகுதியி லடங்கிவிரியும். கீர்வாணவே
தங்களைப்போலத் திராவிட வேதங்களுஞ் சிவனுடைய திருவாக்குக
ளே. கீர்வாணவேதமானது பின்னர் விஷ்ணுவாயிலாகவும், பிரமன்
வாயிலாகவும், வியாதன் வாயிலாகவும் வெளிப்பட்டு, அன்னோரை
ஆக்கியோர்களெனக் கொண்டபடியே திராவிடவேதமானது நால்வ
ராசாரியர்களை ஆக்கியோர்க ளெனக்கொண்டு விளங்கியது. இதனா
ல், திராவிடவேதம் சிவனாற் செய்யப்பட்டதின்று எனக்குறைகூறி
யது தீர்ந்துவிட்டது. வேதாரண்யத்தில் வேதங்கள் சிவார்ச்சனை
செய்து மூடிப்போனகதவை அப்பர்சுவாமிகளது தேவாரம் திறந்த
தும், அதனை மீண்டும் பிள்ளையாரது தேவாரம் மூடியதுமாகிய வுண்
மையே திராவிடவேதம் கீர்வாணவேதத்திற்கு வேறல்லாததை விள
க்கியது. வேதங்கள் யாமடைத்தகதவை யாமே மீண்டடைந்து தி
றக்கக்கடவே மென்றபடி மீண்டுமோண்டெய்தி முன்செய்த ஸங்கே
தங் கெடாவழித் தாமேதிறந்தன வென்பதே யமையும். இதனால்,
வேதமே மூடியது வேதமேதிறந்தது என வேதத்தி னுதிக்கந் தோ
ன்றக் கூறுவர் மேலோர். முன்மூடியது கீர்வாணவேதமும், பின்றிற
ந்தது திராவிடவேதமு மெனலமைவுடைத்து. வேதமானது கதவை
ப்பிணித்து ஸங்கேதஞ்செய்து போனதெல்லாந் திரமிடபாகத்தாலா
ய தனது வியாபகத்தைப பின்னர் விளக்கற் பொருட்டேயென
மேலோர் கருதாநிற்பர். அன்றியும், திரவிடவேதமே மூடியது, அ
துவே திறந்தது எனவுங் கொள்ளாநிற்பர். திரவிடவேதம் பூசித்த
காரணம் பற்றியே வேதாரண்யப் பெயர் வியக்தமாயிற்றெனவும் வி
தவாநிறபர். இவ்வமைதிகளை நோக்கின், ஏன் வேதங்களைச் சிவபெ
ருமான் திராவிடத்திற் சொல்லவில்லை யென்றெழுங்கடாக்க ளிறை
பெற்றொழியும். இன்னும் எமபெருமக்க ணால்வராசாரியர் திருவாக்
குகளின் பெரும்பகுதி அப்பிரத்யக்ஷமாயின வென்றாற்போலத் த
மிழ்ச் சங்கத்தைக் கடல்கொண்டு போனவழி, அளவிறந்த திராவி
ட நூலகள் அப்பிரத்யக்ஷமாயின வெனலும் ஸித்தமாகலான், தி
ராவிடததில் வேதசிவாகமங்கள் முன் செய்யப்படவில்லை யென்று
வாதிடல் வீணாயிற்று. "செப்புத் திரிந்த திருஞான சம்பந்தர் செய்ததமி-
ழப்பதுளபதி னாறாயிரந்தமி ழப்பர்தமி-ழொப்பற்றநாற்பத்தொன்பதினாயி
ர மூரார்தமிழ்- முப்பத்தேழாயிர மென்றே முனிவர் மொழிந்தனரே" என்ற
அபியுக்தா வசனப்படித் திருஞானஸம்பநத சுவாமிகள் பதினாறாயிர
ம பதிகமுமம, ஸ்ரீமத் அப்பர்சுவாமிகள் நாற்பத் தொன்பதினாயிரம்

பதிகமும், ஸ்ரீசுந்தரமூர்த்தி சுவாமிகள் முப்பத்தேழாயிரம் பதிகமும் அருளிச்செய்தனர்களாக மேலோர் கணிப்பர். இப்போதுள்ள மூவர் பதிகங்களின் மொத்தம் (௭௯௭) ஆம். ஆகையால், எஞ்சியவை அப்பிரத்யக்ஷமாயினமை கொண்டு அன்னோரால் அவை ஓதப்பட்டனவன்றென யாவர்கூறுவர்? அவைகள் அப்பிரத்யக்ஷமாகப் பெருமான் றிருவுள்ள மிசைந்தவாறே சங்கங்களின் மருவியிருந்த அநாதிநூல்களும் அப்பிரத்யக்ஷமாக அவர் திருவுள்ள மிசைந்தனர். கீர்வாண வேதத்திற்றானும் யாவும் பிரத்யக்ஷமன்று. அநேகவுபநிஷத்துக்க ளப்பிரத்யக்ஷமாயிருத்தலும், அப்படியே மூலாகமங்கள் மறைந்து கிடத்தலும் யாவருக்கு மொப்பாகையால், அவற்றோடு தானே சேர்ந்து அளவிறந்த திராவிட நூல்கள் மறைந்துபோயினமையால், திராவிடம் பழமை பெற்றதன்றெனவும், அதில் விசேட நூல்கள் கூறப்படவில்லையெனவும் பிரமிப்பது அறியாமையேயாம்.

கீர்வாணவேதம் வடக்கேயன்றித் தெற்கிலும் வழங்கும். திராவிடவேதம் வடக்கில் வழங்காது எனின், வேதம் எல்லாச்சமயிகட்கும் பொது. சிவாகமம் சைவர்க்கே சிறப்பு. இதனால் வேதத்தினுஞ் சிவாகமந்தாழாது. வேதம் பலருக்கும் பொதுவாதலின் விபசரிக்கும். சிவாகமம் சைவருக்கே யுரியதாகலின் விபசரியாது. கீர்வாணவேதம் திராவிடவெல்லையை யடைதலால் வடகலையென்னும் பேர் கோஷிக்கும். திராவிடவேதம் கீர்வாணவெல்லையை யடையாமையால் தென்கலையென்னும்பேர் நிலைக்கும். வடகலையானது தென்கலையினுஞ் சிறப்புடைமையால், தென்றிசைக்கு அநுக்கிரகிக்க வந்ததெனின், வடதிசைமுழுதும அநுக்கிரகித்த பின்னரன்றோ தென்றிசைக்கு வரவேண்டும்? வடதிசையில் கேவலம் மிருகபிராயர்களே அதிகமாகையால், அத்திசைப் பாலதாகிய வேதமும் வடக்கெல்லைப் பாலனவும், முதல் வருணத்தார்க்கே யுரியனவுமாகையால், அவை பிராஹ்மண பரிக்ருஹீதமாம். அதனால், கீர்வாணபாஷை பிராஹ்மண பாஷையாம். அத்தகைய பிராஹ்மணர்கள் தக்ஷிணதேசத்தை யடைந்தவநந்தரம் அன்னோர் பாஷையும், வேதமுந் திராவிடதேசத்தில் பிராசுரியமாயின. திராவிடம் பிராஹ்மணர்க்கு அவசியமன்று. அதனால், திராவிடபாஷை பிராஹ்மண பாஷையாகாது. அது சூத்திரபாஷையே என்றுசாதிப்பாரெனின், அதற்கு விடைகூறுதும். வடதிசைப்பாலாரும், கீர்வாண வேதத்துக்குரியாரும் அவ்வடதிசையைத்தாண்டித் தென்றிசைக்கு வந்தவாறென்னை? வடதிசையி

னுள்ளார் யாவரும் பிராஹ்மணரும், தென்றிசையிலுள்ளார் யாவ ருஞ் சூத்திரருமென்று எங்கே கூறப்பட்டுள்ளது? ஓர்காலத்திற்று னே பிராஹ்மணர்கள் தென்றிசையை யடைந்தாரெனின், அதற்கு முன்னர் பிராஹ்மணர் அநுக்கிரஹமின்றிச் சூத்திரர் எப்படிப் பி ழைத்தார்கள்? திராவிடத்துக்குரிய சூத்திரரு மோர்காலத்திற்று னே வடதிசையை யடைந்திருப்பாராயின், ஏவலுக்குரிய சூத்திரரி ன்றிப் பிராஹ்மணர்கள் எப்படி வாழ்ந்தார்கள்? தமிழைச் சூத்திர பாஷையென்றதனால் யாமிவ்வாறு கடாவினும். கடாவியவிடத்தும் பூர்வபட்சமதத்தை யநுசரித்தேகடாவினும். எல்லாச்சாதியும் எங் கும் அநாதியாயுண்டாகையால்,பிராஹ்மணர் வடபுலத்தாரென்றும், சூத்திரர் தென்புலத்தாரென்றும், பிராஹ்மணபாஷை கீர்வாணமெ ன்றும், சூத்திரபாஷை திராவிடமென்றுங் கூறுவது அஸப்யமாம். வடபாஷைக்கும், அதனுலாய வேதத்துக்கு மெவ்வளவு மஹிமையு ண்டோ, அவ்வளவுக்கு மேலிட்ட மஹிமை திராவிடபாஷைக்கும், அதனுலாய வேதத்துக்கு முண்டென்பதை மேல் யாம் பல்லாற்று னும் பரிஷ்கரித்தோமாகையால், வடதிசையிலுள்ள பிராஹ்மணர்க ள் கீர்வாண வேதத்தையும், தென்றிசையிலுள்ள பிராஹ்மணர்கள் கீர்வாண வேதத்துடன் திராவிடவேதத்தையும் அப்யஸித்து வந் தாரென்பதே ஸித்தம். அப்படியே உபயபாஷைகளையும் பிராஹ்ம ணுதி சாதுர்வர்ணத்தாருங் கற்றுவந்தனர். கீர்வாணவேதமானது மந்தி ரமாகையால், அவ்விலக்கணம் திரவிடவேதத்துக்கு அமையாதெ னின், திரவிடவேதந்தானே (மாந்திரம்) என்னுஞ் சொல்லுக்கு வி ஷயமாகும். ஸப்தகோடி மஹாமந்திரங்களே ஏழுதிருமுறைகளாக வகுக்கப்பட்டனவென்று திரவிடவேதத்தை ஸத்துக்க ளங்கீகரித் தமையானும், இத்திராவிட மந்திரவாயிலாகவே முதலையுண்ட பிள் ளையை யழைத்ததும், சுட்டவெலும்பைப் பெண்ணாக்கியதும், வை கையைப் பெருகச்செய்ததும், மூகையைப் பேசுவித்ததுமாகிய மகி மைகள் சிறந்தமையானும் எமது உண்மை நிலைபெற்றது (தொண்ட ர்நாதனைத் தூதிடைவிடுத்ததுமுதலை - யுண்டபாலனை யழைத்தது மெலும்பு பெண்ணுருவாக்-கண்டதும்மறைக் கதவினைத்திறந்ததுங் கன்னித்- தண்டமி ழ்ச்சொலோமறுபுலச்சொற்களோசாற்றீர்.)என்னுஞ் செய்யுளானுங் கண் டுதெளிக. கீர்வாண மந்திரங்களினுந் திராவிட மந்திரம் அதிகவஸித் தியைப் பயப்பனவும், கேவலம் ஸத்வ விசிட்டமாயினவு மாகையா ல், திராவிடமந்திரமே உசிதமாயின வெனவும், பூர்வத்தில் தக்ஷிண வாவஸிகளா யிருந்த பிராஹ்மணர்கள் கீர்வாணத்தினும் அதிகமாக

த் திராவிடமந்திரங்களையே அநுட்டித்து வந்தாரெனவும், அவை திரவிடவேதங்களே யாமெனவும், திருமந்திரம் என்னும் பெயர்த் தாகிய திருமூலர் திருவாக்கே இதற்குச் சான்றாகுமெனவும் ஸத்து க்கள் துதித்துரைப்பர்.

அன்றியும், அது வேதத்தினும் அதிக அன்பை விளைப்ப தென்னு மநுபூதியை ஸாதுக்கள் பலரும் அறிவர். அதனை (விளங்கிழை பகிர்ந்தமெய்யுடை முக்கண் - காரணனுரையெனு மாரணமொழியோ-ஆதிசீர்பரவும் வாதவூரண்ணல் - மலர்வாய்ப் பிறந்தவாசகத்தேனோ - யாதோசிறந்த தென்குவீராயின் - வேதமோதின் விழிநீர்பெருக்கி - நெஞ்சநெக்குருகி நிற்பவர்க்காணகிலேம் - திருவாசகமிங் கொருகாலோதின்-கருங்கன் மனமுங் கரைந்துகக்கண்கள் - தொடுமணற்கேணியிற் சுரந்துநீர்பாய - மெய்ம்மயிர் பொடிப்ப விதிர்விதிர்ப்பெய்தி - அன்பராகுநரன்றி - மன்பதை யுலகின்மற் றையரிலரே) எனப் பெரியாருங்கூறினர். இன்னஸஹேதுக்களால் பிராஹ்மணாதி யெல்லாவுத்தம வருணத்தவருக்கும் ஆதாரமாய் விளங்குந் திராவிடவேதம் அஸத்துக்களுக்கே அநாதரணியமாகும். திராவிடவேதநிற்க,சிவாகமங்களை எந்தப்பிராஹ்மணர்கள் ஆசரிக்கின்றார்கள் ? ஆசரியாமையால் அதற்குத் தாழ்வென்னை ? ஆசரியாதவர்க்கே யன்றோ தாழ்வுளது ? அப்படியே தமிழ் வேதபாராயணாதிகளிலுங் கொள்க. சிவாகமங்கணிற்க, கீர்வாணவேதத்தையாவது பிராஹ்மணர்கள் யாவருங் கைக்கொள்ளுகின்றனரா? அதனால், யாருக்குத் தாழ்வு ? பிரகிருதத்தில் அன்னோர் நீச்சமிலேச்ச பாஷைகளையும், அவற்றாலாய அவைதிக வித்தாந்தங்களையுமே யன்றோ கையாண்டு வருகின்றனர் ? இதற்குக்காரணம் கண்ணுவ கௌதம ததீசிதுர்வாஸாதிகளுடைய சாபமேயாம். இத்தகையோர் திராவிட வேதத்தை ஓதாதது கொண்டு அதற்குத்தாழ்வுண்டாகாது. இன்னோர் சிவனைப் பரமபதியென்று கொள்ளாமையால், அப்பதிக்கொரு தாழ்வுமுண்டாகாதவாறுபோல புண்ணிய முடையார்க்கே சிவனிடத்திலன்பும், வேதசிவாகமங்களிற் பற்றும், சைவ வைதிகாசார விசிட்டங்களு முண்டாகு மாகையால், அப்படியே திராவிடவேத பாராயண மித்யாதிகளிலும் அறியத்தக்கது. கீர்வாண வேதத்துக்குச் சாதியான்மாத்திர முயர்ந்த பேரும், திரவிட வேதத்துக்குச் சாதியோடு சமயத்தாலுயர்ந்தபேரும் அதிகாரிகளாயினமையால், கீர்வாண வேதத்துக்குப் பிராஹ்மணரும், ஏனையுத்தம வருணத்தவரும் அநுட்டாதாக்களாயினர். (மாணிக்க - வாசகன்புகன்ற மதுரவாசகம்-யாவருமோது மியற்கைத்தாதலின் - பொற்கல நிகர்க்கும் பூசுரர் நான்மறை-

மட்கலங்கர்க்கு மதுரவாசம் - ஓதின்முத்தியுறு பயன் - வேதமோதின் மெய்ப்பயனறமே) என்ற வசன பரியாலோசனையாலும் அது விளங்கும். இதில் கீர்வாண வேதத்திஞல் இம்மை மறுமைப்பயனும், திரவிட வேதத்திஞல் வீட்டின்பயனும் உண்டாமென்று வெளிப்பட்டமையால், திரவிடவேதத்தை (உபநிஷத்பாகம்) என்றறிவதே ஸித்தம். ஈ - எறும்பு - பாம்பு - குரங்கு - யானை முதலிய ஜந்துக்களெல்லாமுஞ் சிவாராதனஞ் செய்துய்ந்த விசேடங்கள் வேதங்களிற் கேட்கப்படுகையால், ஜாதியுயர்வே சிவாநுக்ரஹத்துக்குப் பாத்திரமென்று கூற விசைவில்லை. இப்படி வியவஸ்தை யுண்டாக விசாரிக்கையில், கீர்வாணபாஷையுங் கீர்வாணவேதமும் உயர்ந்தனவென்று கூறித் திராவிடபாஷையுந் திராவிடவேதமும் உயர்ந்தனவாகா வென்றுகூற ஒருவருக்கும் நாவெழ மாட்டாது.

இந்த வியவஸ்தையால் திரவிடவேதம் கேவலம் ஸத்வ விசிட்டமுடைய தெனவும், அது தக்ஷிணதிக்கில் பிராசுரியம் பெற்றதெனவும், அதனுல், தென்கலையென்னும் பெயர்த்தெனவும், அதுவே வீட்டை யெளிதிற் பயப்பதெனவும் ஏற்பட்டமையால், இத்தகைய நலங்கள் உயிர்களுக்குக் கைகூடவே ஞானஸம்பந்தவள்ளல் தென்கலையாக அருளிச்செய்தனர். (இசையனைத்தின் பெருமையெலாந் தென்றிசையேயென்றேற - மிசையுலகும் பிறவுலகு மேதினியே தனிவெல்ல - வசைவில்செழுந்தமிழ்வழக்கே யயல்வழக்கின்றுறைவெல்ல - இசைமுழுது மெய்யறிவு மிடங்கொள்ளுநிலைபெருக.) என விதந்து பிள்ளையார் புராணத்திற் கூறினமையானுந் தெளிக. தென்கலைக்கு வடகலையினும் அதிசயமுடைமை வெளிப்பட்டதனுல், நங்குருநாதர் ஏன் வடமொழியில் வேதம்விரித்திலர் என்று கடாவியது நலம்பெற்றிலது. இத்தென்கலை தென்பாலதாகிய பொதிகையிற் பொதிந்துள்ளதென முன்னே கூறினும். அவ்வாறே திருக்கயிலையினும் விரவி வளர்தலை இனிக்கொஞ்சம் விரிப்பாம். ஸ்ரீசுந்தரமூர்த்தி சுவாமிகள் நொடித்தான்மலைத் திருப்பதிகத்தை ஸ்ரீகைலாஸத்திலேதானே பிரகாசிப்பித்தமையானும், அவருடைய தோழராகிய சேரர்பெருமான் ஆதியுலாவென்னும் பிரபந்தத்தை அவரோடுசென்று அங்குத்தானே பிரகாசிப்பித்தமையானும், திருவாசகம் என்னுந் தமிழ்வேதத்தை அக்கயிலையிற்றுனே பரமசிவன் பிரஹ்மவிஷ்ணுக்கள் கேட்டுய்யப் பிரகாசிப்பித்தமையானும், ஸ்ரீகைலாஸத்தில் திராவிடபாஷை ஸஹஜமாயிற்று. அன்றியும, ஸ்ரீசிவபெருமான் பாணபத்திரர் பொருட்டுத் திருமுகப்பாசுரம சேரமோனுக்கு வரைந்தமையானும், தருமியென்னும்

அந்தணச்சிறுவனுக்குக் (கொங்குதேர்வாழ்க்கை) என்னும் பாசுரம் வரைந்து கொடுத்தமையானும், பெற்றான் சாம்பனுக்கு முத்திகொடுக்கும் பொருட்டு உமாபதிசிவத்துக்குச் சீட்டெழுதியனுப்பினமையானும், (தில்லைவாழந்தணர்) என்று ஸ்ரீசுந்தரமூர்த்தி சுவாமிகளுக்கும், (உலகெலாம்) என்று ஸ்ரீசேக்கிழார் சுவாமிகளுக்கும் முதலெடுத்துக் கொடுத்தமையானும், அகப்பொருள் என்னுமோரிலக்கணஞ் செய்துபகரித்தமையானும், அவருடைய சொந்தபாஷையாகவுந் திராவிடம் சிறந்திருக்கின்றது. ஸ்ரீகைலாஸபாஷையாகவும், சிவனுடையபாஷையாகவுந் தமிழ் சிறக்குமானால், இதற்கு முன்னர் கீர்வாணத்தைத் தேவபாஷையென்று நாம் வியப்பதிலென்ன விசேடம்? இவ்வரியபாஷையில் நம்பாலருவாயரே யன்றி ஏனையாசாரியர்களும் உபநிஷத்துக்களை வெளியிட்டாரென்பதும், அதுவே சிறப்புடைமை யென்பதும் ஸர்வஸம்பிரதிபன்னமாயிற்று. இன்னும் விரிக்கிற் பெருகும்.

இதுகாறுஞ் செய்துவந்த விசாரததால் திரவிடவேதத்தின் மஹிமை வெளிப்பட்டது. கீர்வாணவேதஞ் சிறந்தது, திரவிடவேதந தாழ்ந்தது என்னும் அஸங்கதமும் நீங்கியது. இவ்வேதங்களை யருளிச்செய்த நால்வராசாரியர்தம்முள் திருஞானஸம்பந்தசுவாமிகள்-ஸ்ரீமந்-மாணிக்கவாசகசுவாமிகள் - ஸ்ரீசுந்தரமூர்த்திசுவாமிகள் என்னும மூவரும் பிராஹ்மணகுலத்தவரும், ஸ்ரீமத்-அப்பர்சுவாமிகள் சூத்திரகுலத்தவருமாகையால் ஜாதியுயர்வுதாழ்வுகளை நோக்க, அவர் வாக்குகளுக்கும் உயர்வுதாழ் வுண்டாமெனின், இது ஸர்வாஸங்கதமாம். என்னெனின்; அப்பர்சுவாமிகளைச் சூத்திரரென்று யாவர்கூறினர்? எங்கேகூறப்பட்டுள்ளது? திருஞானஸம்பந்த சுவாமிகளை அயோநிஜரென்று மேலேயாம் விளக்கியிருக்கின்றோம். அவ்வாறே வாகீசவடிகளிடத்துங் கண்டுதெளிக. பெரியபுராணத்தில், (திலதவதியார்பிறந்து சிலமுறையாண்ட கன்றதற்பின்-அலகில் கலைத்துறைதழைப்ப வருந்தவத்தோர் நெறிவாழ-உலகின்வருமிருணீக்கி யொளிவிளங்குகதிர்போல - மலருமருணீக்கியார் வந்தவதாரஞ்செய்தார்) என்று நம்பெருவாழ்வினது அவதாரங்குறித்த பாடலில் அவருக்கு மாத்ருகர்ப்ப ஸம்பந்தங் கூறியிருக்கின்றதா? இதற்கு முன்பாடலில் (புகழனார்தமக்கு - மாதினியார் மணிவயிற்றில் - திலதவதியார் பிறந்தார்) என்று திலதவதியாரைக் கூறியிருப்பதுபோற் கூறாமையானும், திலதவதியாரைப் பிறந்தாரெனவும், ஸ்வாமிகளை அவதாரஞ்செய்தாரெனவுங் கூறின

மையானும் இருவருக்குமுள்ள தாரதம்யம் வியக்தமாயிற்று. இவ்வுண்மைதேராது அப்பர்சுவாமிகளிடத்துச் சூத்திரத்வங் கற்பித்தது நிரஸ்தமாயிற்று. ஞானஸம்பந்தவள்ளலும், வாகீசவடிகளுங் கர்ப்ப விஹீனர்களானபடியே ஏனையிருவ ராசாரியர்மாட்டு மெய்திய மகிமையையு மீண்டுப் பிரகாசப்படுத்துவாம். திருவாதவூரடிகள் புராணத்தில் (அர்நகரின் மறையோரி லருள்புனைமாத்தியர் குலத்திற்-றன்னிகரில்சைவநெறித் தலைவனவன் றனித்தேவி - மின்னனையாடிருவயிற்றின் மென்கொடிபங்கினனருளாற்-றென்னவன் செங்கோன்முதல்வர் திருவவதாரஞ் செய்தார்.) என்னும் பாடலில் (மின்னனையாடிருவயிற்றில் - திருவவதாரஞ் செய்தார்.) என்று கூறியிருப்பதால், மந்தமதிகள் பிரமியாவண்ணம் அதனுண்மையைக் கூறுதும். திருஞானஸம்பந்த சுவாமிகளுக்குச் சிவபாதஹ்ருதயர் பிதாவும, பகவதியார்மாதாவும், ஸ்ரீமத் அப்பர்சுவாமிகளுக்குப் புகழனார்பிதாவும், மாதினியார் மாதாவும், ஸ்ரீ சுந்தரமூர்த்திசுவாமிகளுக்குச் சடையனார் பிதாவும், இசைஞானியார் மாதாவு மாயினமை அன்னோர் புராணங்களிற் கூறப்பட்டவாறு வாதவூரடிகளுக்கு மாத்திரம் அவர்புராணத்தில் அவருடைய பிதாமாதாக்களை இவரெனப் பேர்குறித்துக்கூறாமல் விட்டவாறென்னை? கடவுண் மாமுனிவருக்குத் தெரியாமலாவிட்டனர்? அங்ஙனமேயெனின், அவர் தவத்தாற் றூயராதல்கெடும். அப்போது அவர்வாக்கும் நமக்குப் பிரமாணமாகாது அதனால், வாதவூரடிகளுக்கு அவர் கர்ப்பஸம்பந்தங் கூறியதும் அநாதரணியமாகும். இநதமார்க்கத்தாலும் எம்மஸித்தாந்தம் பிழைபட்டிலது. உண்மையாக நோக்கின், அம்முனிவர் மனந்தூயராகி நிர்மலமுடையாரென்பதே ஸித்தம. இத்தகைய சிவஞானச்செல்வர் நங்குருநாதர்க்குப் பிதாமாதாக்கள் இலரென்பதையும், இல்லாதவர்க்குப் பேருமில்லை யென்பதனையும் இனிது விளக்கிய வாய்மையே யாவரும அறியத்தக்கது. ஆண்டு மாத்தியர்குலங் காட்டியது மாமாத்திரபிராஹ்மண குலத்தவர்பால் ஸ்வாமி வளர்நதாரென்பதையே விளக்கியது. அவர் வளர்ந்ததையே அவ்வளர்ச்சியா லுண்டாகும் புத்திரஸம்பந்தநாடிப் பிறந்தாரென்று உலகுவழக்குப்பற்றிக் கூறியதுமறிக. அவ்வளவேயன்றிக் கர்ப்பவாஸம்பெற்றுப் பிறந்தாரென்பது கூடாது. திருவிளையாடற்புராணத்தில். "ஆயவளம்பதியதனி னமாத்தியரிலருமறையின்-றூயசிவாகமநெறியின்றுறைவிளங்கவஞ்சனையான் - மாயனிடும் புத்தவிருளுடைந்தோடவந்தொருவர்-சேயவிளம்பரிதியெனச் சிவனருளாலவதரித்தார்." என்று கூறப்பட்டிருக்கின்றது. இதில், ஸ்வாமிக்கு பிதாமாதாக்களும், அவர்

பால் ஸ்வாமி பிறந்ததுஞ் சொல்லப்படவில்லை முன்பாடலும்; அதற்கு யாம்விளக்கிய பொருளும் இதனோடு பொருந்திவிட்டது. இல்லையேல், ஒன்றிலொன்று விரோதித்தழியும். இரண்டுநூலும் ஒரே கருத்தைக் கொண்டிருப்பது அவற்றை யுய்த்துணருங்கால் விளங்கும்! விளங்கும்!! இவ்வுண்மையை ஸ்ரீ ஹாலாஸ்ய மாஹாத்மியத்தாலும் விளக்குவாம.

"அபூச்ரீமத்வாதபுரே கச்சித்பூதேவ ஸத்தம:; தஸ்யபுத்ரோ விச்ருதோபூந் நாம்நா வாதபுரேச்வர:."

என்னும் வசனத்தால் வாதவூரின்கண் பிராஹ்மணோத்தமரொருவர்பால் வாதவூரர் என்னுந் திருநாமத்தையுடையவர் புத்திரராகப் பிரஸித்தியடைந்தார் என்று பெறப்பட்டது. இதில் வாதவூரடிகளுக்கு மாதாவினது கர்ப்ப சம்பந்தமொன்றுங் காணோம். இப்படி யாவும் ஐககண்டமாகப் பொருந்துதலால் யாம்கூறியதே நிலைபெற்றது. ஆயின், மேல்சுலோகத்துக்கு முன்சுலோகமாக

"ஆதிசைவ ஸுவம்சோத்த முக்தாபல ஸுஸுந்தர:, நாம்நா ஸுந்தரநாதோதி ஸுந்தராங்கஸ் ஸுசீலவாந்."

எனவொன்று அச்சிட்டவோர்பிரதியிற் காணப்படுகின்றது. இது பிரக்ஷிப்தமென்பதை ஸ்வாமிக்கு ஆதிசைவமரபுங் கூறியதுகொண்டே யாவருமறியலாம. இந்தவசனத்தால் எமக்கொருபாதகமின்றேனும், அதை யாமங்கீகரியாமையால், மந்தமதிகளுக்குண்டாகும் பிரமை நிவிர்த்யர்த்தமே அதையும் வெருவித்தொழித்தனம. வாதவூரடிகள் மாமாத்திர பிராஹ்மணகுலச்ரேஷ்டர் எனவும், தம்பிரான் றோழர்மாத்திரமே நால்வருள் ஆதிசைவரெனவும், பண்டைக்காலந்தொட்டு யாவரும் அங்கீகரித்திருக்கின்றாராதலாலும், திருவாதவூரடிகள் புராணம் - திருவிளையாடற்புராணம் இவைகளில் வாதவூரடிகளை மாமாத்திரகுல சரேஷ்டரெனவே கூறுகின்றமையாலும், இவைகளுக்கு விருத்தமாயுள்ளதை மேலோரங்கீகரியாராதலாலும் அதையாம் பிரக்ஷிப்தமென்று கூறியது ஸாமஞ்சஸமாயிற்று. இந்த வுண்மைகளால் வாதவூரடிகள் மாதுருகர்ப்பவாஸஞ் செய்யாதலென்பது பரிஷ்கரிக்கப்பட்டமையால், அவர் அயோநிஜரென்பதே ஸித்தமாயிற்று. இனித் தம்பிரான்றோழரது அவதாரத்தையுங் கொஞ்சம் விசாரிப்பாம்.

"மாதொருபாகனுர்க்கு வழிவழியடிமை செய்யும்
வேதியர்குலத்திற்றேன்றி மேம்படுசடையனுருக்
கேதமில் கற்பின்வாழ்க்கை மனையிசைஞானியார்பாற்
றீதகன்றுலகமுய்யத் திருவவதாரஞ்செய்தார்."

எனத் தொண்டர்சீர்பரவுவார் கூறினர். இதிலுங் கர்ப்பவாஸமொன்றுங்காணேம். இவரை ஆதிசைவரென்றது ஆதிசைவராகிய சடையனுருக்குப் பிள்ளைக்கலிதீர அவர்பாற் குழந்தையாய்த் தவழ்ந்து இன்பமளித்தாரெனல் கருதியாம். சடையனுரும் இசைஞானியாரும் இவரைப் பயந்தவரென்றும், பெற்றவரென்றும் பலவிடங்களில் எமது சேக்கிழார்பெருமான் கூறியது அன்னேர்க்கு மகிமை சிறக்க வுபசாரம் பாராட்டியதாம். இதனை வலியுறுத்துமாறு சிலவீண்டுக் கூறுகின்றும். "தென்புவி - மீது தோன்றியம் மெல்லியலாருடன், காதலின்பங் கலந்தணைவாய்." எனத் திருக்கைலையில் ஆலாலசுந்தரருக்குச் சிவபெருமான் கட்டளை யிட்டமையாலும், அதில் மாதருகர்ப்ப ஸம்பந்தமொன்றுங் கூறுமையானும், சடங்கவிசிவாசாரியர் மகளாரது திருமணம அவருக்குத் தடையாயினமையானும் அவர் மாயாதேக மெய்தாதவரெனல் சிறந்தது. சடங்கவியார் சுத்த மாயாதேக மெய்திய ஆதிசைவர். தம்பிரான்றேழர் அம்மாயாதேக மெய்தினவரன்று. மாயாபந்த மெய்திய சடங்கவியாரது மகளார்க்கும் அதுவே இலக்கணமாயிற்று. அத்தகையாரை அவ்விலக்கணமொன்று மெய்தாத வன்றெண்டருக்கு மணம்புரிதல் யாங்ஙனம்? அது பற்றியே அத்திருமணத்தைப் பித்தப்பெருமான் றடுத்தருளினர். திருஞானஸம்பந்தர் திருமணத்தும் இதுவே சிறக்கும். நல்லூர்ப் பெருமணத்தில் பிராட்டியாருடன் சிற்சோதியிற் கலந்தருளியதேயன்றி அவரது திருத்தோளை எம்பிரான் கலந்ததின்று. அவ்வெம்பிராட்டியார் சடங்கவியாரது திருமகளாரைப்போல நம்பாண்டார்நம்பியார் திருமகளாராதலும், அவரைப்போலவே மாயாதேக முடையராதலும் பிரஸித்தியாகையால், அத்தன்மைகளெய்தாத பிள்ளையாரது அருண்மேனியைப் புல்லவல்லா ரல்லராயினர். அரசுகளுக்கும், அடிகளுக்கும் இவையொன்றும் முதலேயிடையாது. இத்தகைய விசாரமுடையார்க்கே நால்வராசாரியரது அவதாரவிசேடங்களும், அவர்மார்க்கங்களும் இனிது விளங்கும்! விளங்கும்!!

என்னை? வன்றொண்டப்பெருமான் உருத்திரகணிகையராகிய பரவையாரையும், வேளாண்மரபினராகிய சங்கிலியாரையும் மணம் புணர்ந்து, அன்னோர் திருத்தோள்களையுங் கலந்திருந்ததெனின், இது விபரீத வுணர்ச்சியாம். ஆதிசைவ குலமாதையே சிவபெருமான் றடுத்தருளினராக, பரஸ்பரம் விஜாதிகளும், தாழ்ந்த ஜாதிகளும் யாண்டுப்பொருந்தும்? பிராஹ்மணன் கீழிட்டஜாதிகளில் கன்னிகையைக்கோடல் சாஸ்திரவிகிதமாகையால் அவை கூடுமெனின், அதற்கு இன்றியமையாத வோராவசிகம்வேண்டும். திருவருள் கூட்டியதே ஆவசிகமெனின், கமலினி - அநிந்திதை என்பவரைத் தாழ்ந்த குலங்களில் அத்திருவருள் கூட்டியவாறென்னை? ஆலாலசுந்தரரும், அவ்விருகன்னியரும் ஏககாரணத்தானே பூமியில்வந்தவராக, அம்மூவருள் ஒருவர் ஆதிசைவகுலத்தும், ஒருவர் உருத்திரகணிகையர்குலத்தும், மற்றொருவர் வேளாளர்குலத்துந் தாரதம்யமாகவருதல் யாண்டிசையும்? இப்படி விரோதமுண்டாகி யழிதலால், ஆலாலசுந்தரர் கர்ப்பவிஹீனரானபடி அந்தக்கன்னியரிருவருங் கர்ப்பவிஹீன ராயினரென்பதே அமையும். இவ்வுண்மையையே ஸ்ரீசேக்கிழார் சுவாமிகள் கூறியிருக்கின்றனர்.

பெரியபுராணம்.

“ இதற்குமுன்னெல்லையில்லாத திருநகரிதனுள்வந்து
முதற்பெருங்கயிலையாதி முதல்வர்தம் பங்கினுட்குப்
பொதுக்கடிந்துரிமைசெய்யும் பூங்குழற்சேடிமாரிற்
கதித்தபூணேந்துகொங்கைக் கமலினியவதரித்தாள்.”

என்னும் பாடலில் கமலினியென்பவர் திருவாரூரில் அவதரித்தருளினர் என்று கூறப்பட்டது. இதில், அவருக்கு மாத்ருகர்ப்ப ஸம்பந்த மொன்றுங்காணோம்.

“ கதிர்மணிபிறந்ததென்ன வுருத்திரகணிகைமாராம்
பதியிலார்குலத்திற்றோன்றிப் பரவையாரென்னுநாமம்
விதியுளி விளக்கத்தாலே மேதகுசான்றோரான்ற
மதியணி புனிதனன்னாண் மங்கலவணியாற்சாத்தி.”

என்னும் அடுத்தபாடலில் (உருத்திரகணிகைமாராம்-பதியிலார் குலத்திற்றோன்றி) என்று கூறியிருக்கிறதெனின், உருத்திரகணிகை

யர்குலத்தில் என்றதேயன்றி உருத்திரகணிகை யொருத்திவயிற்றில் எனவாவது, இன்னபேருடையவள் வயிற்றில் எனவாவது கூறின தில்லை. தாயையும், அவள் கர்ப்பஸம்பந்தத்தையும், அவள்பேரையுங் கூறாமையானும், உருத்திரகணிகையர் குலத்தைக் கூறினவிடத்தும் (பதியிலார்குலத்திற்றோன்றி) எனவிதந்தமையானும் பரவையார் மாத்ருகர்ப்ப விஹீனராயினரென்பது ஸித்தமாயிற்று. (பதியிலார் குலம்) என்பது புருஷஸம்பாக்க மில்லாதவர்குலம என்றாகி, அதனால் அக்குலத்தவர்க்கு ஸந்ததியுண்டாகாமை வெளிப்பட்டு, அவர் கருப்பமெய்தலும, மகப்பேறடைதலுங் கூடாமை சாதிக்கப்பட்டது. அத்தகையார் வயிற்றிற் பரவையார் பிறந்தாரெனல் யாங்ஙனம்? அவர் மணவினையாற் குறித்த வோர்புருடனைச் சேராதவரென பதே (பதியிலார்) என்றதிற் கொள்ளக்கிடக்கிறதன்றி, மணங்கருதாது காமவயத்தாற்புல்லு மாடவர்பல்லாரோடு முயங்காதவரெனக் கொள்ளக்கிடைத்திலது. ஆகலான், புருடாபல்லாருடன் முயங்கி வாழுமன்னோர்க்கு மகப்பேறுண்டாகு மெனின், இது கேவலம் அஸங்கதம். எங்ஙனமெனின், உருத்திரகணிகையா உருத்திரஸம்பந்தத்தால் அவ்வுருத்திர மூர்த்தியினது நின்மாலியப பொருளாயினர். சிவநின்மாலியமாறனுள், தேவஸ்வம் - தேவத்ரவியம் - சண்டாதிக்ருதம் - பஹிஷ்ப்தம் - நைவேத்யம என்னும ஐந்தும ஸ்வீகரிக்கற்பாலன வன்றெனவும், நிவேதிதமொன்றே ஸ்வீகரிக்கற்பாலதெனவும் உண்மைநூல்கள் கூறுமாற்றானும்,

"தேவஸ்வம் க்ராமபூம்யாதி தாஸீதாஸ சதுஷ்டயம்"

என்ற வசனபரியாலோசனையால் சிவார்ப்பிதமாயுள்ள கிராமங்கள் - பூமிகள் - தாஸிகள் - தாஸர்கள் என்னுமிந்த நின்மாலியப பகுதிகள் ஸ்வீகரிக்கற்பாலன வாகாத தேவஸ்வமாகத் தெளியப்படுமாற்றானும் (பதியிலார்குலம்) என்பதற்குப் பலபுருடரைக்கூடிவாழ்கின்றவர்குலம் என்று பொருளுரைப்பது வேதபாகியர்கூற்றாம். பிரதத்தன் என்னும் பேரையுடைய காசிராஜன் ஓர்கால் அருணாசலத்தையடைந்து திருக்கோயிலுட்போனபோது அங்குப் பாடிக்கொண்டிருந்த தேவதாஸியைப்பார்த்து இச்சித்து, அவளைத் தனது நாட்டிற் கொண்டுபோக நினைத்தமாத்திரத்தில் (நினைந்தனனதற்கு-முன்னமேகுரங்குமுகமதாயிருந்தான்) என்றபடி ஆயினமையும் (பதியிலார்குலம்) என்பத னுண்மைப்பொருளை விளக்கும். இதனை வலியுறுத்துமாறு, "பன்னருமந்தப்பூசனைபுரிந்தான் - பரமனுமவற்கருள

புரிந்தான், இன்னாமொழியாள்விருப்பினுலடைந்த - இலேசவுணசமுகமொ ழிந்தான், நன்னாமுகம்பெற்றிறையு நாடணைந்தான்.' எனவிதந்தமையரு னும உண்மை தேர்ந்துய்க.

உருத்திரகணிகையர் மகப்பேறெய்தாதபோது அவர் ஸந்ததி பெருகலும், அந்த ஸந்ததியார் உருத்திரகணிகையராதலுங் கூடா தெனின், இதுவும விபரீதமாம். சிவாகமங்களில் தந்துவாயர் மரபி ற்றோன்றுங் கந்நிகையையே உருத்திரகணிகையாஞ்செய்ய விதித்த லால், அவர் சுத்தகுலமுடையராதல் பெறப்பட்டது. தந்துவாயர் (இழைநெசவு நூலினை நடுநெறிமுறை போர)வர் கைக்கோளரெ ன்று சிறந்திருக்கின்றனர். இந்த ஜாதிக் குடும்பத்தில் ஓர்பெண் ணை சிவார்ப்பிதஞ் செய்துவரும் பெருமையர் மெய்தியிருக்கின்ற னர். இவருக்கன்றி யேனையோர்க்கு அது சிறவாது. என்னெனின், வீரவாகுதேவர் முதலிய இலக்கத்தொன்பதின்மரைத் தந்த நவச க்திகள் அம்மையினது நூபுரத்திலுதிர்ந்த நவமணிகளினின்றும் பிறந்து அவ்வம்மையாருக்குச் சேடிகளாயிருந்தா ராகலின், அவர் குலத்தவரே உருத்திரகணிகையராக உண்மைநூல்கள் விதிக்கும். இதனை, பலருமுடன்சேர்ந்து விசாரிக்குமுன் வேசியரையே உரு த்திரகணிகையராக மயங்கியது அஸங்கதமாயிற்று. விபசாரஞ் செய்பவர் வேசியரேயன்றித் தாசியரன்று அவ்வேசியரைத் தாசிய ராகக்கோடல் தவறு. காலகதியால் பிரகிருததத்தில் வேசியரே தாசி யராக நேமிக்கப்படுகின்றனர் தாசியரும வேசித்தொழில் புரிகின்ற னர். இவ்வநிஷ்டாசாரம் பிரமாணமாகாது பிராஹ்மணனொருவன் ஊழ்வலியாற் கள்ளருந்தலும், இழிகுலமாதைச் சேரலுங் கொண்டி யையின், அதுவே பிராஹ்மணருடைய தருமமென்று யாவர்கொள் வார் ? இந்தநயங்களை யுய்த்துணர்வார் (பதியிலார் குலத்திற்றோன்றி) என்பதின் மயங்கார்! மயங்கார்!! இவ்வுண்மை விசாரத்தால் பர வையாரது திருவவதாரம் கர்ப்பவிஹீனமென்பது இனிது சாதிக்க ப்பட்டது. இன்னும் விரிக்கிற் பெருகும்.

இனிச் சங்கிலியாரது திருவவதாரத்தையுங் கொஞ்சம் பரியா லோசிப்பாம். பெரியபுராணத்தில், "இந்தநிலைமையாரிவரிங் கிருந்தார் முன்பேயவர்க்காக, வந்தணைகயிலையதுநீங்கி யருளாற்போந்தவரிந்திதையார், வந்து புவிமேலவதரித்து வளர்ந்து" எனவும், (ஞாயிறுகிழவர்-பாலாதரவுத ருமகளா ராகிப்பார்மேலவதரித்தார) எனவுமபோந்த பகுதிகளில், எங் காவது கர்ப்பசம்பந்தங் கூறியிருக்கின்றதா? (வந்துபுவிமேலவதரித்து)

எனவும், (ஆதரவு தருமகளாராகிப் பார்மே லவதரித்தார்) எனவுங் கூறப்பட்டமையால், அம்மையாரது தெய்வத்தன்மையே பிரகாசமாயிற்று. இவ்வுண்மை (மலையான்மடந்தை மலர்ப்பாத மறவாவன்பால் வந்தநெறி-தலையாமுணர்வுவந்தணையத் தாமேயறிந்த சங்கிலியார்) எனப்பின் விதந்தமையாலும் வெளியாகும். இவருக்கு மாத்ருகர்ப்பவாஸங் கூறுவது யாண்டுமிசையாது. (தாயாரோடு தந்தையார்பேசக்கேட்டசங்கிலியார்) என்று அம்மையாரது திருமணவிஷயமாகப் பிரஸ்தாபித்த ஸந்தர்ப்பத்தில் அவரது அவதாரத்திற் கூறாத தாயை யெடுத்துக்காட்டினர். அவதாரவிடத்திற் காட்டாமையால் அம்மையார் மாதாவுதரத்திற் றங்கிவந்தாரெனல் மாய்ந்தது. பின்னர்க் காட்டினமையால், அவர் வளர்த்த தாயென்பதே அமையும். வேறிடங்களில் (ஈன்றெடுத்தார்) எனவும், (பெற்றதாதை) எனவுங்கூறியது அவருக்குப் பெருமைதோன்ற வுபசரித்தபடியாம். அம்மையார் நின்மலதேகமுடையவரும், மாத்ருகர்ப்ப விஹீனருமாயினு ரென்பதை விளக்கவே (பந்தநீடுமிவர்குலத்துங்கிராமொருவன்பரிசறியான் - சிந்தைவிரும்பி மகட்பேசிவிடுத்தார் சிலருஞ் சென்றிசைத்தார்) எனவும், (நீதங்கிழைத்தேயிறந்தான்போற் செல்லவிடுத்தாருடன் சென்றான்) எனவுந் தொண்டர்சீர்பரவுவார் இனிது விளக்கினர். இதனுல், மலமாயா கர்மபந்தமும், அதனுன் மாத்ருகர்ப்பவாஸமும் பெற்றுடையார் அம்மையாரில விஜாதித்தமெய்துறலால் அவர்க்கு அம்மையாரை மணம்புரிதல் யாங்ஙனமிசையும்? இத்திறத்தினவாய வுண்மைகளைப் பரியாலோசிப்பார் சங்கிலியாருக்குக் கர்ப்பவாஸங் கூறுர்! கூறுர்!! இன்னும், (அன்றிரவேயா திபுரியொற்றிகொண்டார் - ஒற்றியூர்கிலவுதொண்டர்க்கு- மன்றல்வினை செய்வதற்கு மனங்கொள்ள வுணர்த்துவார்) எனவும், (எண்ணிறந்த திருத்தொண்ட ரெயிற்பதியோ ருடனீண்டி-கண்ணிறைந்த பெருஞ்சிறப்பிற் கலியாணஞ் செய்தளித்தார்) எனவுங் கூறினமையால் அம்மையாருக்கு அவருடைய தாய்தந்தையர்கள் திருமணஞ் செய்விக்கவில்லையென்றுபெறப்பட்டது. இப்படியே பரவையார் திருமணத்துமறிக. (திருவாரூர்வாழ்பெருமானடிகள் - அன்றங் கவர்மன்றலை நீர்செயுமென் - றடியாரறியும்படியாலருளி) எனவும், (கதிரோனெழுகாலையில் வந்தடியார்கூடி - தாமக்குழலாள் பரவைவதுவை தகுசீர்மையினுற்றிகழச்செய்தார்)எனவும்போந்த பிரமாணங்களால் சங்கிலியார் திருமணத்தைச் சிவனடியார்கள் பெருமானுடைய கட்டளையையேற்று நடத்தியவாறே பரவையாரது திருமணத்தையும் பெருமானுடைய கட்டளையையேற்று நடத்தினரென்று வெளிப்பட்டது. இந்த வுண்மையாலும்

பரவையாருக்கும், சங்கிலியாருக்குமுள்ள தாய்தந்தையர் ஸம்பந்தம் இத்திறத்ததென விவேகிகள் யோசியாமற் போகார். நமது வன்றொண்டப் பெருமானும் (வனப்பகைதாதை - சிங்கடியப்பன்) என்னும் உரிமை வகித்தாராகையால், அப்படியே வன்றொண்டர்-பரவையார்- சங்கிலியார் இவர்களைப் பயந்தாரிடத்துங் கண்டுகொள்க. மேல், திருஞானஸம்பந்தர் - வாதவூரடிகள் தம்பிரான்றோழர் என்னும் இவர்களை முதற்குலத்தவரெனவும், வாகீசவடிகள் - சங்கிலியார் என்னும் இவர்களை வேளாளரெனவும், பரவையாரை உருத்திரகணிகையரெனவும் உலகத்தவர் வழங்குவது வள்ளிநாச்சியாரைக் குறமாது எனவும், முருகப்பெருமானைக் குறத்திமணாளன் எனவுங் கூறும் வழக்கையே மானும். குறவரிடம் வளர்ந்ததேயன்றி வள்ளிநாச்சியார் அவரிடம் பிறந்ததின்றாகையால், அவர் தன்மையில் வேறாகாத சங்கிலியார் முதலினோர் தன்மையை இவ்வளவிலே நிறுத்தினும். யாமிதுகாறுஞ் செய்துமுடித்த விசாரத்தால் ஆசாரியர் நால்வருங் கர்ப்பவாஸஞ் செய்யாதவரென்பது ஸித்தித்தது. இவ்வளவு நியாயங்களையுங் கடந்து அவர்கள் கர்ப்பவாஸஞ் செய்தே பிறந்தாரென்று ஒருவர்கூறின், உடனே அவர்கள் இறந்தாரென்றுங் கூசாது பேசவரும். பிறப்புண்டானபோது இறப்புண்டாவது ஸித்தமாகையால், அன்னோர் புராணங்களில் அவரிடம் பெறப்படாத இறப்பை இனி அவர் நாட்டுதல்வேண்டும். நாட்டவுந் துணிவார்போலும். ஐயையோ! இங்கே யாம்பரிதவிப்பது சைவசமயிகளாக எண்ணப்படுவாரை நோக்கியேயன்றிப் புறச்சமயிகளைக் குறித்தன்று. சைவராயினுந் தங்கள் விபரீதத்தாற் றருக்குறுவரேல், அவரைப் புறச்சமயிகளோடு சேர்த்துப் புறங்கண்டோடச் செய்வதே எமது துணிவு. அன்பில்லாத சிவத்துரோகிகட்கும், ஆசாரியத் துரோகிகட்குமே அஸங்காத்மவாத முண்டாகும். அன்பிற் சிறந்தவர்களுக்கே சைவநலம் பிராப்தமாகையால், அவ்வநுபூதிப் பெருஞ்செல்வர் இவ்வுண்மைகளைக் கண்டுமகிழ்ந்து கூத்தாடா நிற்பர். அப்பெரியோரே எமக்குற்ற துணைவரும், யாம் வணங்கும் அடிகளுமாவர். இன்னும் விரிக்கிற் பெருகும்.

இந்த வியவஸ்தையால் மாத்ருகர்ப்ப விஹீனர்களாகிய நால்வராசாரியர்கள் வாய்மை வெளிப்பட்டமையால், அவரொருவரிலொருவர் உயர்ந்தவரும், தாழ்ந்தவருமாகார். அவர்களிடத்தில் பிராஹ்ம

மணத்வம்-சூத்ரத்வமித்யாதி ஜாதியாரோபணமுங் கூடாது. அவா வாக்குகளுக்கு ஏற்றத்தாழ்வு கூறுதலுங் கூடாது.

இம்மரபறிந்தபேர் திரவிடோபநிஷத்துகளாகிய அவர் திருவாக்குகளிற் பயின்று கீர்வாணோபநிஷத்துகளினும் அவற்றுட்டெளிவுண்டாமை யறிந்து, முத்திநலங் கைகூடப்பெறுவர். இதுகாறும விசாரித்துப் பரிஷ்கரித்த முடிவுகளால், நங்காழிவிரகர் திராவிடமாக உபநிஷத்துக்களை அருளிச்செய்ததனால் அபகர்ஷ முண்டாகாமையும், உத்கர்ஷமே பிராப்தமாயினமையும் ஸித்தித்தது.

நால்வராசாரியர்கள் பதியினது விபூதிகளும், அவர் முகமாக வெளிப்பட்ட தமிழ்வேதமானது அநாதிஸித்தமுமாயின், அவ்வாசாரியர்கள் வைநயிகரைப் போலத் தங்களைப் பலவிடங்களில் தாழ்வாகக் கூறிக்கொள்வதென்னை? அவ்வநாதி நூலில் நரியைப் பரியாக்கியது முதலிய பவிஷ்ய விவகாரங்கள் கேட்கப்படுவது என்னை? என்று நிகழு மாசங்கைகளைப் பரிஷ்காரப் படுத்துவாம். ஸ்ரீமந் மாணிக்கவாசக சுவாமிகள் துறவு பூண்டவர். இவர் (தையலார் மையலிலே தாழ்ந்துவிழக்கடவேனை) என்று கூறினர். ஸ்ரீ சுந்தரமூர்த்தி சுவாமிகள் நித்திய கலியாண மாப்பிள்ளையாக இருந்தவர். இவர் (கீளார் கோவணமுந் திருநீறுமெய்பூசியுன்றன் - றாளேவந்தடைந்தேன்) என்றுகூறினர். துறவியாயுள்ளவர் [illegible] கடைப்பட்டவராகத் தம்மைக் கூறிக்கொண்டனர் ஸம்ஸாரியாயுள்ளவர் துறவியினுந் தம்மை அதிகமாகக் கூறிக்கொண்டனர். இவர்களிற், ஸ்ரீமத்-அப்பர்சுவாமிகள் (சலம்பூவொடு தூபமறந்தறியேன் - தமிழோடிசை பாடன்மறந்தறியேன்) என்று கூறினர் சமணசமயத்தில் சிவத்வேஷமே யிட்டுப் பிரவர்த்தித்திருந்தவர் தம்மைச் சைவாக்ரேஸராகக் கூறிக்கொண்டனர். இவ்வாறே ஞானஸம்பந்தர் திருவாக்கினும் பலவுள. இவைகளை யோசிக்கும்போது அன்னோர் கூறிக்கொண்டவை தம்பொருட்டன்று, பிறர்பொருட்டென்றே தெளியவேண்டியது. "தன்னைக்குறிக்கு நலந்தாறு, மந்துறைவாணர்க்கறைவதொன்று" எனச் சுமதப்ரகாசத்திற் கூறிய பகுதியை யோசித்தலினானே விளங்கும். இதனால், வைநயிகரைப்போற் கூறியது வைநயிகராகிய உயிர்களுக்குக் கற்பித்தருளினமையையே நிறுத்தும்! நிறுத்தும்!! மேல், கீர்வாண வேதத்தில் திரிபுரவிஜயம் - காளகூடபக்ஷணம் - காமதஹநம் [illegible] இவைபோன்ற பவிஷ்ய விவகாரங்க

ள கேட்கப்படுவதற்கு என்ன ஸமாதானமோ அதுவே திராவிடவே தத்தில் கேட்கப்படும் பவிஷ்ய விவகாரங்களுக்குஞ் சிறக்கும்! சிறக்கும்!! பூதபவிஷ்யத் வர்த்தமானங்க ளடங்கியிராதது வேதமாகாது ஆகையால், ஆசாரியர் திருவாக்குகள் வேதமென்பது ஸித்தம். விரிக்கிற் பெருகும். எடுத்த பிரமேயத்தை இவ்வளவினிறுத்தி மேல்விஷயத்தை இனிது விசாரிப்பாம்.

எமது ஸம்பந்தநாதன் சிவபாதஹ்ருதயரது பியலின் மேற்கொண்டு யாவருங்கண்டு தொழுதுய்ய நகர்வலங் கொண்டருளியதும் அந்த நிர்மலமணியை அந்தணர்கள் பின்சூழ்ந்து மறைகளாற்றுதித்து மகிழ்ந்ததும், அப்போது அடியார்கள் முழக்கிய ஹரஹர என்னுமொலியோடு அநேகவித வாச்சியங்கண் முழங்கியதுமாகிய தலைப்பாட்டை யுய்த்துணருங்கால், அதுவே மரபாகப் பின்னும் அடியார்களாசரித்து வாழவேண்டுமென்னு முரிமையைத் தெரிவிக்கின்றது. இதனை விரித்துரைக்குங்கால், அவரைத் திருக்கோயில்களிற் பிரதிட்டித்து நித்திய நைமித்திகங்களாகிய பூசைகளும், மஹோத்சவங்களும் நடத்தி உலகம்பிழைகக வழிதேடவேண்டு மென்பதே அமையும். எமபெருமானை அவர் பவனிவருங் காலத்தில் அடியார்கள் துதித்த வாய்மை வருமாறு.

"காழியர்தவமே கவுணியர்தனமே கலைஞானத்
தாழியகடலே யதனிடையமுதே யடியார்முன்
வாழியவந்திம் மண்மிசைவானோர் தனிநாதன்
ஏழிசைமொழியா டன்றிருவருள்பெற்றனையென்பார்.

மறைவளர்திருவே வைதிகநிலையே வளர்ஞானப்
பொறையணிமுகிலே புகலியர்புகலே பொருபொன்னித
துறைபெறுமணியே சுருதியினொளியே வெளியேவந
திறையவனுமையா ளுடனருடரவெய் தினையென்பார்.

புண்ணியமுதலே புனைமணியரைநா ணொடுபோதுங்
கண்ணிறைகதிரே கலைவளர்மதியே கவின்மேவும்
பண்ணியல்கதியே பருவமதொருமூ வருடத்தே
யெண்ணியபொருளாய் நின்றவரருள்பெற் றனையென்பார்

இம்மதுர வாசகங்களை மெய்யன்பரானவர் நித்தியஞ் சிவபூஜா சமயத்தில் பாராயணம் பண்ணவேண்டியது. இவற்றுள் (திருவருள்

பெற்றனே) எனவும் (அருடரவெய்தினே) எனவும் (அருள்பெற்றனே) என வும்போந்தவைகளே(ஞாலமுய்ந்திட ஞானமுண்டவரெழுந்தருளு மங்கலங் கண்டு) எனப் பிற்போந்த பகுதிக்கேற்பத் தெளியவேண்டியது. எம் பெருந்தகையை (இருக்குமொழி யந்தணருமேனேயோரு நின்று துதிசெய் து - அவர்தாணீண்முடிக்கண்மேலேந்தி)என்ற திருவாக்கால் அந்தணர்க ள் வாழ்த்தி வழிபட்டார்களெனவும், (மங்கலதூரியந்துவைப்பார் மறை ச்சாமம்பாடுவார் மருங்குவேதிப்,பொங்குமணிவிளக்கெடுத்துப்பூரணகும்பமு நிறைப்பார் போற்றிசெய்வார்) என்ற திருவாக்கால் அவ்வந்தணர்கள் எ மது செல்வப்பிள்ளேயா ரெழுந்தருளிய காலத்து மங்கலதூரியமுழ க்கோடு சாமமறை முழக்கு முண்டாகச்செய்தார்க ளெனவும்,ஏனே மங்கலங்களே நிரப்பித் துதித்தார்களெனவும் வெளிப்பட்ட வுண்மை யையே மேலேயாம்கூறினும். இங்கே (இருக்குமொழியந்தணரும்) என் று பிராஹ்மணர்களேக் கூறியபடியே (இருக்குமொழிப்பிள்ளேயார்) என வேறோரிடத்தில் நமது ஸ்வாமியை அருண்மொழித்தேவர் கூறினர். மேலே (ருக்கு ஐயம்போகவுரைத்தோன்)என அருணகிரியார் விதந்தமை யை யாம்அறிவித்திருக்கின்றோம். இதனுல்,அந்தணரை இருக்குமொ ழியாரென்றது திரவிடருக்கை அவலம்பித்துடையார் அவரென வி ளக்கவேயாம். அந்தணர் குலதீபமாய் விளங்கிய ஸ்ரீசம்பந்தசரணுல ய ஸ்வாமிகள் (வருமுறைசொற்றிருப்பதிகமெழுதுமன்பர்) எனத் துதிக்க ப்பட்டதன்றியும், (ஆளுடையபிள்ளேயார்திருவாக்காலே-யுருமிடித்து விழ ப்புத்தனுத்தமாங்க முருண்டு வீழ்கெனப்பொரு வுரைமுன்விட்டார்) என்ற திருவாக்கால் அவர் ஞானஸம்பந்தவள்ளலாரது திருமுறையாகிய திரவிடவேதத்தை யுச்சரித்துப் புத்தனுடைய தலேயில் இடிவிழுந்து ருளும்படிச் செய்தருளினுரென்று வெளிப்பட்டது. திருமுறையை யெழுதினுரெனவும், ஓதினுரெனவும் பெறப்படலால், எழுதியது பி றர் பொருட்டும், ஓதியது தம்பொருட்டு மெனவறியவேண்டியது. பி றர்என்பது தம்மோடுசேர்ந்த பதினுறுயிரந் திருக்கூட்டத்தவரை. இ வர்பிராஹ்மணர்கள். இவர்களே தேவாரத்திருமுறைகளே யோதியு ம், ஓதும்படிச்செய்தும் பரிபாலித்துவந்தவர்கள். இத்தகைய நலப் பாடறிந்து அநுஷ்டியாமல் மூடப்பிராஹ்மணர்சிலர் தேவார திருவா சகங்களே நிந்தித்து எரிவாய் நிரயத்துக் காளாகின்றனர். இனனோர் கீர்வாணவேதத்தின் பொருளே யுள்ளபடியே யறிந்திருப்பாராயின், அதில்வேறுகாத சிவாகமங்களேயும், திரவிடவேதங்களேயு நிந்தி யார்! நிந்தியார்!! இவர்களேயே (ஆதிமறையோதி யதன்பயனென்றும் மறியா-வேதியர்சொல் மெய்யென்று மேவாதே) என்று சந்தானகுரவரு

ம், பெற்றான் சாம்பனோடு முள்ளிச் செடிக்கு முத்திகொடுத்தவரு ம், தில்லை மூவாயிரவரு ளொருவருமாகிய ஸ்ரீஉமாபதி சிவம் நிந்தித் தொதுக்கினர். இவர் பிராஹ்மண ச்ரேஷ்டராகையால், இவர்மேல் யாருடைய தூஷணமுமேறாது. இவர் திராவிடவேதத்தைத் தமது கண்ணாகவகித்து அன்பு பாராட்டினாரென்பது இவர் செய்தருளிய நூல்கடோறுங் காணலாம். அவற்றுளொன்றாகிய திருத்தொண்ட ர்புராண வரலாற்றில் (வேதத்தை - தமிழாலோதிய மூவர்திருப்பதிகத் தொலி) என்று துதித்திருக்கின்றனர். இப்பெருந்தகையார் திரவி டவேதத்தைப் போற்றியது பெரிசன்று. அந்தத்திரவிடவேத கர் த்தர்களாகிய சமயாசாரியர்களையும், அவ்வாசாரியர்களை வழிபட்டு முத்தியடைந்த பெருமிழலைக்குறும்பர் - அப்பூதியடிகள் முதலிய நாயன்மார்களையும் பிரதிபாதிக்கும் (திருத்தொண்டர் புராணம்) எ ன்னும் பெரியபுராணத்தையுமன்றோ வேதம்போலக் கொள்ளவே ண்டுமென்றும், அப்படியே முற்காலத்து வேதியர் கொண்டிருந்தா ரென்றும் இனிது பிரகாசபபடுத்தினர். "திருத்தொண்டர்புராண மெழுதியமுறையைமறையோர் - சிவமூலமந்திரத்தா லருச்சனைசெய்திறை ஞ்சி, யிருக்குமுதன்மறைநான்கி னின்றுமுதலாக - விதுவுமொரு தமிழ்வேத மைத்தாவதென்று,கருததிருத்தி" "செறிமதயானைசிரத்தில் ..திருமுறை யையிருத்தி...திருவீதிவலயாகவரும்போது" "ஆரணங்கள் விரித்தோதிமாம றையோரெதிர்கொண் டறுகெடுப்ப" என்னும் பிரயோகங்களைக் கண்டு தெளிக. ஸர்வ வைதிகோததமர்களுக்கும் பெரியபுராணமே ஆவ சிகமென்பது ஸித்தமாக, திரவிடவேதங்கள் ஆவசிகமென்பது சொல்லவும் வேண்டுமோ? இத்தனையுண்மைகளை யறிந்தும் அவர் விதண்டைபேசுவர். இந்த மூர்க்கத்தை நோக்கியே அசிக்கவாரிய ஙகளோதுமாதரை) எனத்திருவிசைப்பாவில் திரஸ்காரஞ் செய்யப்ப ட்டிருக்கின்றனர். மேல்வியவஸ்தையால் பிராஹ்மணர்கள் திரவிட வேதபாராயணஞ் செய்யவேண்டிய ஆவசிகமும், அங்ஙனஞ்செய் வது அவருக்குச் சிரேயஸ்கரமுமாகிய சீர்ப்பாடு வெளிப்பட்டது. இருக்குமொழி யந்தணர் - இருக்குமொழிப் பிள்ளையார் என்பவர் களைக் கீர்வாணவேத ருக்குகளையுடைய அந்தணர் - பிள்ளையாரெ னினும் பொருந்தும். இதனால், கீர்வாண வேதருக்குகளையும் யதா வத்தாக வுணர்ந்தாரென்னுந் தைவீகமும், அதில் வேறாகாத திர விடவேதத்தினது ஸஜாதித்வ ஸம்பந்தமும் வியக்த மாகின்றன. அந்தணர்களுக்கும், பிள்ளையாருக்கும் உபயவேத வேதாந்தங்களி லும் ஸம்பந்தங் காட்டினமையால், அந்தணரென்னும் யாவு

ரும் பிள்ளையாரருணெறியைக் கைக்கொண் டொழுகவேண்டி ப.து
கடமையாயிற்று. அங்ஙனமொழுகாதார் பிராஹ்மண ரல்லாராகி யி
ழிந்திடுவர். திரவிடவேதத்தைச் சங்கராசாரியர் துதித்திருக்கும் ப
குதியை (௫0)வது பக்கத்திற் காட்டியிருக்கின்றோ மாகையால்,
அந்தச் சங்கராசாரியரைப் பிராஹ்மணகுருவென்று கொண்டாடிம
கிழும் அந்தணர்கள் அவ்வாசாரியரை மூடராக்காது காத்துக்கொ
ள்ளவேண்டியது. அவரைப்போல் அந்தணர்யாவருந் தமிழ்வேதபா
ராயணஞ் செய்திடுதலே அவரது மானத்தைக் காத்திடுதலாம். அது
செய்யா தொழியின், அவரை நிந்தித்து மூடராக்குங் குருத்துரோ
கிகளேயாவர். இதற்கேனும் அஞ்சிநடப்பாராக. ஈண்டு யாம்பிரஸ்தா
பித்தது பிரஜ்ஞையில்லாத சிலபேரையேயாம். அநேகர் சிவதீக்ஷாவா
ன்களாய்ச் சைவநலங்கொண்டு சிறந்து உபயவேதாந்தங்களையும் பா
ராட்டிவருகின்றனர். அவர் நங்காழிப்பிரான்முதலிய சமயத்தலைவர்
களுக்கு நித்தியநைமித்திகாதி பூஜைகளையு நடத்திவருகின்றனர். ஆ
ணிமார்கழிகளில் பிரஹ்மோத்ஸவங்களும் நடத்துகின்றனர். இஃதன
றி, பஞ்சநதம் என்னும் க்ஷேத்திரத்தில் ஸ்ரீமத் அப்பர்சுவாமிகளுக்
கு ஸ்ரீகைலாஸதரிசந மஹோத்ஸவமும் ஆண்டோர் பிராசீனமாக நட
த்திவருகின்றனர். ஸ்ரீஹாலாஸ்யக்ஷேத்ர மித்யாதிகளிலும் வாதவூர்வ
ள்ளல் ஞானஸம்பந்தவள்ளல் இவர்களுக்கு அதி பிரபலோத்ஸவங்
கள் நடத்திவருகின்றனர். இவைகளை விசாரியாததோஷமே சிலமூர்
க்கபிராஹ்மணர் புலம்பவிடஞ்செய்கின்றது. உத்தம பிராஹ்மண
ர்கள் அருமையரிந்து சைவாசாரியத் தொண்டு புரிந்தும், அவரது
மஹோத்ஸவங்களைப் புரிந்தும், அந்தக்காலங்களில் வேதபாராயண
ஞ்செய்தும், திரவிடவேதத்தில் பக்திபாராட்டியுஞ் சிவபுண்ணியத்
தைப் பரிபாலித்துவருகின்றனர். அப்படியே உலகில் பிராஹ்மணர்
யாவரும் அன்புபாராட்டி. வழிபடவேண்டியது. அப்போதுதான்
அவரது பிராஹ்மணத்வம் நிலைக்கும். இல்லையேல். நிலையாது! நிலை
யாது!!

இதனை விரிப்பாம். வேதியர், பிராஹ்மணர் என்னுஞ் சொற்
கள் வேதத்தைத் தெளிபவர்கள், பிரஹ்மத்தை யறிபவர்கள் என்
னும் பொருள்களைப் பயக்கும். வேதத்தை யோதித்தெளிந்து பிர
ஹ்மத்தை அறிந்து அநுபவியாதவர்கள் வேதியரும், பிராஹ்ம
ணருமாகார். (வேதவுள்ளுறை யாவன விரிபுனல்வேணி - நாதர் தம்மை
யு மவரடியாரை புநயந்து - பாதவர்ச்சனை புரிவதும் பணிவதுமன்றே) என

வும், (உள்ளநிறைகலைத்துறைக ளொழிவின்றிப் பயின்றவற்றாற்-றெளிந்தறிந்தபொருள் சிவன்கழலிற் செறிவென்றே - கொள்ளுமுணர்வினின்) எனவும், (ஈசனடியார்க்கென்று மியல்பானபணிசெய்தே) எனவும் போந்த வாக்கியங்கள் வேதியர் தன்மையையும், பிராஹ்மணர் தன்மையையும் வியக்தமாக்கின. சிவனிடத்தும், சிவனடியாரிடத்தும் அன்பில்லாதாரை வேதியரென்றும், பிராஹ்மணரென்றுங் கூறுவது எங்ஙனம்? (அந்தணர்க்கு மடியவர்க்கு மாகமநல்விதிமுறையால்-வந்தனைசெய்தருச்சனையும் வழங்கி) என்ற விதிவழாது உலகங் கைக்கொள்ளுகின்றது. அந்தணர் - முதற்குலத்துப்பெரியோர். அடியவர் - ஏனைக்குலத்துப் பெரியோர். இருதிறத்தவருஞ் சிவனையும், அவரடியாரையுமறிந்து அன்பு பாராட்டுந் தன்மையா லொத்தனர். அந்தணர்-அடியவரென்னுஞ் சொற்கள் சிறப்புவகையானன்றிப் பொதுவகையானே க்குலத்து மேலோர்க்குங் கொள்ளவுரியனவாம். ஏனைக்குலத்தவர் சிவனிடத்தும், அவரடியாரிடத்தும் அன்பு பாராட்டாதபோது அவர்க்கு அடியா ரந்தணரென்னும் பேர்கள் சிறவா. அப்படியே முதற்குலத்தவருஞ் சிவனையும், அவரடியாரையும் வணங்கி யுய்யாதபோது அவர்க்கும் அந்தணர், வேதியர் என்னும் பேர்கள் சிறவா. (அந்தணரென்போ ரறவோர்மற் றெவ்வுயிர்க்குஞ்-செந்தண்மைபூண்டொழுகலான்) எனவும், (ஓங்கருளீசனே டொன்றியே நின்றோரு - மீங்கருணீங்காரென் றுந்தீபற - எல்லாவுயிர்க்குமென் றுந்தீபற) எனவும் போந்த வாக்கியங்களையும் பரியாலோசித்தறிக. சிவஸம்பந்த மில்லாத வேனைக்குலத்தவரை அடியவரெனக் கோடலும், அவருக்கு வழிபாடுபுரிதலுங் கூடாவாறுபோல முதல்வருணத்தவர்க்குஞ் சிவஸம்பந்த மில்லாதபோது அவரை அந்தணர், வேதியர், பிராஹ்மணரெனக் கோடலும், தக்க வழிபாடு புரிதலுங்கூடாது. முதல்வருணத்தவர்க்குப் பிறப்புமாத்திரத்தானே மகிமையுண்டெனின், பிறப்பு மாத்திரத்தானே சூத்ரத்வமே பிராப்தமாம். அநந்தரம் எய்தற்பாலனவாகிய த்விஜத்வம்-விப்ரத்வம்-பிராஹ்மணத்வ முண்டாகாதபோது அவர்க்கு என்ன மகிமை யுண்டாம்? பிராஹ்மணப் பிறப்பு என்று பாராட்டும் ஓர் மரியாதையேயன்றி வேறொன்றுங் கடிக்காது. அரசன்மரபிற் பிறந்தார்க்கு அரச வமிசத்தார் என்று ஓர்மரியாதை சிறக்குமாபோல். அரசவமிசத்திற் பிறந்து, அதற்கேற்ற திறமடையாது, ஊர்திரிந்துழலும் பேடிகளை அரசர்களெனக்கோடலும், அவர்க்கஞ்சி யேவல்புரிதலும் பிறர்க்கு யாண்டிசையும்? அரசனுக்கிருந்த வொருவன் அவ்வரசினின்று நீங்குவனேல், அவனை அரசனெனப் பின்னர் யா

வருங்கருதி மதியார். முதலவருணத்தவன் கிறிஸ்துசமயம், மகம்மதுசமயமுதலிய இழிந்த சமயங்களிற் புகுந்தபோது அவனுடைய பிராஹ்மணத்தன்மை எங்கே போயிற்று! அவனுடைய பிறப்பு ஏன் நிலைக்கவில்லை? (மறப்பினு மோத்துக்கொளலாகும் பார்ப்பான் - பிறப்பொழுக்கங்குன்றக்கெடும்) எனவும், (ஓதலினன்றே வேதியர்க்கொழுக்கம்) எனவும் போந்த வாக்கியங்களேயன்றோ அவர்க்கு உறுதியைப் பயப்பன? அவரது தன்மைகுன்றியபோது அவருக்குள்ள பூஜ்யத்வங் கூடவேகுன்றும்.

இவைகளை யோசிக்கும்போது முதல்வருணத்திற் பிறந்த மாத்திரத்தானே யாவரினும் யாஞ்சிறந்தோ மென்றிறுமாந்து கூறுதல் அறியாமையாகவே முடிந்தது. இதனால், முதல்வருணத்தவரை யாந்தூஷிப்பதாகக் கொள்ளவேண்டாம். முதல்வருணம் ஏனைவருணங்களிற் சிரேஷ்டமே! ஏனைவருணங்கள் தம்மிற்கீழிட்ட வருணங்களிற் சிரேஷ்டமும், மேலிட்டவருணங்களிற் சிரேஷ்டமின்மையு மாகும். முதல் வருணத்திற் பிறந்தவன் தனது வருணதருமத்தை யடையாதபோது அவன் ஏனைவருணத்து மஹான்களிற் சிறந்தவனாகான். அவனிலும், ஏனைவருணத்து மஹான்களே சிறந்திடாநிற்பர். அவன் தன்னை அதிகனாக மதித்து அந்த மஹான்களை யிழிவுகூறுதல் அவனுடைய அறியாமையாகவே முடியும். பிதா-புத்திரனென்னு மிருவரில் புத்திரன் ஓர்நீதிபரனாக நேமிக்கப்பட்ட காலத்தில், அவன்பக்கல் ஓர் வழக்கை முன்னிட்டடைந்த அவனுடையபிதா தனதுபுத்திரனுக்குக் கீழ்ப்படிந்து ஒழுகவேண்டுமல்லது புத்திரபாவத்தால் அவனை யதிக்கிரமிக்கக்கூடாது. அதிக்கிரமித்தால் அந்தப் புத்திரனே அவனைத் தண்டிப்பான். பிதாவுக்குத் தானடங்காமையும், தனக்கடங்காமையால் பிதாவைத் தான் தண்டித்தலும் அப்புத்திரனுக்குத் தாழ்வாகமாட்டாது. பிராஹ்மணருக்குள்ளே நேற்றுச் சமையற்காரனாயிருந்த வொருவன் இன்று ஸந்யஸித்து வெளிவருவானாயின், அவன்காலில் அவனுடைய எஜமானனாகிய பிராஹ்மணன் வீழ்ந்து நமஸ்கரிக்கப் பின்னிடான். இவைகளை யுய்த்துணருங்கால் பிராஹ்மணகுலமும், பிராஹ்ம்ணதருமமும், அவற்றின்கதியும் வெளியாகும். பிறப்பினாற் பிராஹ்மணரென்று வெளிப்பட்டு ஸஞ்சரிப்பவரில், தவத்தாற் பிராஹ்மணரென்று வெளிப்படும் ஏனைவருணத்தவரே பூஜ்யராவர். பிறப்பினாலுந் தவத்தாலும் பிராமணத்வ மெய்துதலே முதல்வருணத்துக்குச் சிறப்பாம். தவமில்லா

தபோது பிராஹ்மணரென்னும் பேர் உபசாரமேயாம். அமரர் என்னும்பேர் தேவர்களுக்கும், அஜன் என்னும்பேர் பிரஹ்மாவுக்கும், அச்சுதன் என்னும்பேர் விஷ்ணுவுக்கும் உபசாரமாக வேதங்கூறுமாபோல். பிறப்பினாலும், தவத்தாலும் பிராஹ்மணத்வ மெய்தினார் தவத்தான்மாத்திரம் பிராஹ்மணத்வ மெய்தினாரிற் சிறந்தவராமெனின், இது மூடவிசாரமாம். என்னெனின், முதல்வருணத்தவர் முதல் எந்தவருணத்தவருந் தவத்தாற் றூயரானபோது அவர் தத்தம் ஜாதிவியக்தி யில்லாதவராகின்றனர். அன்புவடிவமாய்க் கரைந்து ஒருவரையொருவர் சிவமாய்க்கண்டு வழிபாடுபுரிதலால், அவர்மாட்டுப் பிறப்பினாலாய வுயர்ச்சி பயன்செய்யாது. முதல்வருணத்து நிலைமைமாறாது அதன்மெய்ப்பயன் றுய்த்திடுவாரே ஏனைக்குலத்து மேலோரி லதிகராகாதபோது, யாம் பிரதம வருணத்தவரென்று சொன்மாத்திரத்தானே பிறப்பைமதித்துக் கொண்டுதிரியும் ஸாமானியர் வார்த்தை எங்கே கனம்பெறும்? அவரைப்போலவே ஸ்வாநுஷ்டானங்குன்றி யிறுமாந்துதிரியு மேனைக்குலத்து ஸாமானியரில் இவர் உயர்ந்தவராவதில் எமக்கு ஆக்ஷேபமின்று. இவ்வுண்மை தேராது ஜாதிமாத்திரத்தானே யாமுயர்ந்திருக்கின்றோமென்று ஏனைக்குலத்து மஹான்களைப் பண்டாரங்களென்று இழிவாகக்கூறியும், சூத்திரரெனப் பிரஸ்தாபித்தும் பிரதமவருணத்தவர் வசைகூறுவது தங்களுக்கே வசைதேடிக் கொண்டதாக முடியும். யாம் இதுகாறு முபந்யஸித்த முடிவுகளை யுற்றுநோக்குவார் நமது பரமாசாரிய மூர்த்திகள் திருவாக்குகளை அநுட்டிப்பதுஅவர்க்குப் பெருமையோ, அன்றோவென்பதை யோசிப்பாராக. மேல்வியவஸ்தையால் ஸாமாந்யஜாதி மஹான்களிடத்திலே தானே முதல்வருணத்தவர் தோஷாரோபணஞ் செய்தலும், அவர்க்குப் பூசையாதிகள் செய்யப் பின்னிடுதலுங் கூடாதபோது மாத்ருகர்ப்ப விஹீனர்களும், சிவவிபூதிகளுமாகிய பரமாசாரியர்களிடத்தில் அன்புபாராட்டினலன்றி யுய்யாரென்பதை யாம்சொல்லவும் வேண்டுமோ? அவர்களருளிச்செய்த திவ்யஸூக்திகளை யோதிமகிழ்வதும், அவர்க்குப் பூஜையாதிகள் வைதிகமாக நடத்திக்களிப்பதும், அவர்கள் திவ்யசரித்திரங்களைக் கேட்டுக் கண்ணீருங் கம்பலையுமாகி நிற்பதுமே அவ்வாசாரியநிதிகண்மாட்டு அவர் பாராட்டத்தக்க அன்பாம். சங்கராசாரியர் இயற்பகை நாயனாரையும், சிறுத்தொண்ட நாயனாரையும், சண்டேசுர நாயனாரையும், கண்ணப்ப நாயனாரையும் சிவபுஜங்கம்.

சிவானந்தலஹரிகளில் ஸ்தோத்திரம்பண்ணி யிருக்கின்றனர். இவர்களில் வணிகரொருவரும், பிராஹ்மணரிருவரும், வேடுவரொருவருமாக முடிந்தனர், மேல்கிழென்னுஞ் சாதிகளைச் சங்கராசாரியர் சிந்தித்தனரா? அவருக்கு அன்பேயன்றோ காரணமாக முடிந்தது? இப்படி அன்பு பாராட்டாதவர்களுக்குப் பிராஹ்மணத்வம் எப்படிநிலைக்கும் ? அன்புடையவரே உயர்ந்தகுலமும், அஃதில்லாதவரே தாழ்ந்தகுலமுமாம். இதனையே (சாதியிரண்டொழிய வேறில்லை) எனவும்,(இட்டார்பெரியோ ரிடாதாரிழிகுலத்தோர்) எனவும் ஔவையாருங் கூறினர். இடுதலுமிடாமையும், அன்புடைமை, அன்பின்மைகளில் அந்தர்க்கதமென்க. ஆசாரியமூர்த்திகளிடம் அன்பில்லாதபோது பிராஹ்மணத்வமாகிய உதகர்ஷஸித்தி யொருவருக்கும் பிராப்தமாகாமையால், ஜகமமாத்திரத்தானே பரமபாவனத்வம் நமக்கு உண்டாயிற்றென்று முதல்வருணத்தவர் மனப்பால்குடித்துச் சிவனடியாரை அவமதித்தழியாது சுகிப்பாராக. இவ்வரிய சுகப்பேறெய்தினோர் ஆசாரியசூக்திகளி லன்புநிறைந்து, அவரது திருத்தொண்டினுஞ் சிறந்து நீடுவாழ்வார்களென்பதை யாம் சொல்லவும் வேண்டுமோ ? (தந்தையைத்தீத்தொழின் மூட்டியகோன்சரண் சார்ந்திலரே - னிந்தையைப்பெற்றுழி யாதிரந்தே கரநீட்டுவரே.) என்னும் அற்புத வாக்கியத்தையும் யாவருஞ் சிந்தித்திடுக. தந்தை=சிவபாதஹ்ருதயர். தீத்தொழின்மூட்டல் =யாகஞ்செய்யவிடுத்தல். கோன்=திருஞானஸம்பந்தர். இவ்வாறறிந்திடுக. இவ்வுண்மையுணர்ந்து அன்பிற்சிறந்தபேர் ஜாதிஇழிவு, குலஇழிவு, பிறப்புஇழிவு, கல்விஇழிவு, செல்வஇழிவு, தொழில்இழிவு முதலிய தாழ்வுகளைச் சிவனடியாரிடம் பாராட்டிடும், எங்கள் ஸம்பந்தநாதனை வணங்கியுய்யாமலும் அவலத்தழியாரென்பது சத்தியம். இன்னும் விரிக்கிற் பெருகும்.

## பிள்ளையார் பிரபாவம்.

கூஎ - வது பக்கத்தொடர்ச்சி.

அன்றுகழிந்து மறுநாள் நமதுபிள்ளையார் தோணியப்பரைத்தரிசித்துக்கொண்டு திருக்கோலக்காவிற்சென்று கையினாலே ஒத்தறுத்துத் திருப்பதிகம்பாடினர். அப்போது ஸ்ரீ பஞ்சாக்ஷரம் எழுதப்பட்டிருக்கின்ற பொற்றாளம் அவருடைய திருக்கரத்தில் வந்திரு

ஞா. அதனைக்கண்டு யாவரும அதிசயித்தாாகள. அபபோது யாவருக்கும் அருள்புரிந்து மீண்டுஞ் சீகாழிக்கு வந்து ஸ்வாமிதரிசனஞ் செய்து திருப்பதிகம்பாடி மகிழ்ந்து தனது இளந்திருக்கோலக்காட்சியை யாவரும் அநுபவிக்கும் பொருட்டு அங்குச் சிலபோது வசித்திருந்தனர். பின்பு அங்கேநின்றுந் திருநனிபள்ளி - திருத்தலைச்சங்காடு - திருவலம்புரம் - திருப்பல்லவனீச்சரம் - திருச்சாய்க்காடு - திருவெண்காடு - திருமுல்லைவாயில் என்னுந் தலங்களுக்குப்போய், ஸ்வாமிதரிசனஞ்செய்து திருபபதிகங்களோதித் திரும்பிச் சீகாழியையடைந்தனர். பின்னருஞ் சிலபதிகளுக்குச்சென்று தரிசிதது த் திருப்பதிகமோதிச் சீகாழிக்குத் திரும்பி அங்கெழுந்தருளி யிருக்கும்போது திருநீலகண்டயாழ்ப்பாணர் தமது பத்னியாருடன் வந்து பிள்ளையாரைத் தரிசித்தனர். அவருக்கு விருந்தளித்து அவர் தம்முடனிருந்து தமது திருப்பதிகங்களை யாழிலமைத்து வாசித்துவரக் கட்டளையிட்டருளி அவருக்குத் தோழமையையும அருள்புரிந்தனர். பின்பு சிவபாதஹ்ருதயர் - திருநீலகண்டயாழ்ப்பாணர் முதலியவர்கள்சூழ ஸ்ரீசிதமபரத்தையடைந்து ஸ்வாமிதரிசனஞ்செய்து (கற்றாங்கெரியோம்பி) என்னும் பதிகமோதித்துதித்தனர். பின்னர் அங்கு வசித்தற்கஞ்சித் திருவேட்களத்தையடைந்து, அங்கிருந்துகொண்டே ஸ்ரீசபாநாதரைவந்து தரிசித்துப போவாராயினர். திருக்கழிப்பாலையினுஞ்சென்று ஸ்வாமிதரிசனஞ்செய்து திருபபதிகமோதித் துதித்தனர். இவ்வாறொருநாளில் ஸ்ரீ சபேசனது திருவருளால் தில்லைவேதியர் மூவாயிரவருஞ் சிவகணங்களாய்த தோன்றக் கண்டு களித்து, அவ்வற்புதத்தைத் தமது தோழராகிய திருநீலகண்ட யாழ்ப்பாணருக்குங்காட்டி மகிழ்வித்தனர். அபபோது தில்லைவாழந்தணர்கள் பிள்ளையாரது பாதங்களை வணங்கினார்கள். பிள்ளையாரும் அவர்களுடைய பாதங்களை வணங்கினர். இவ்வற்புதத்திலே சிறநத பிள்ளையார் (ஆடினாய்நறு நெய்யொடுபாலயிர்) என்னும் பதிகமோதி, அதில் தில்லைவாழந்தணரைத் தாங்கண்ட வருமையைக்கூறி அவர் பெருமைதோன்ற விதந்தனர். பிள்ளையார் ஓதிவருந் திருப்பதிகங்களை உடனிருந்து யாழிலிட்டு வாசித்துவரும் பெரும்பாக்கியத்தையடைந்தவராகிய யாழ்ப்பாணர் ஓர்நாள் பிள்ளையாரைவணங்கி, (நிவா) என்னு நதிக்கரையிலிருக்கும், அடியேனது ஊர்முதலானவையாகிய திருவெருக்கத்தம்புலியூர் முதலிய தலங்களுக்கெழுந்தருளவேண்டுமென்று பிரார்த்தித்தனர். அதற்கிசை— சிவபாதஹ்

ருதயர் முதலினோர்சூழத் திருவெருக்கத்தம்புலியூருக்குச் சென்று, அப்படியே திருமுதுகுன்றக்கும் போய்த் தரிசித்துத் திருப்பெண்ணாகடத்தை யடைந்து சிவதரிசனஞ்செய்துகொண்டு, திருநெல்வாயிலரத்துறைக்குப் போகவிரும்பித் தமது தந்தையாராகிய சிவபாதஹ்ருதயர் தோளினின்றுங் கீழிறங்கித் திருப்பாதங்களால நடந்து (மாறன்பாடி) என்னும் பதிவந்துசேர்ந்து, வழிநடந்தவிளைப்பால் ஸ்ரீபஞ்சாக்ஷரத்தை யுச்சரித்துக்கொண்டு அப்பதியிற்றானே அடியார்களோடு அன்றிரவு தங்கியருளினார். அஃதறிந்த கடவுள் தம்முடைய திருக்குமாரர் திருமேனி வருந்தாவண்ணம் யோசித்து திருவரத்துறையிலிருக்கும் பிராஹ்மணர்கள் யாவருக்குந் தனித்தனியே சொப்பனத்திற்றோன்றி "நமது குழந்தை ஞானசம்பந்தன் நம்மிடத்துக்குவருகின்றான், அவன் ஏறுதற்கு முத்துச்சிவிகையும், அவனுக்கு நிழற்றுதற்கு முத்துக்குடையும் அவன் புகழ்தோன்ற ஊதுதற்கு முத்துச்சின்னமும் நாங்கொடுக்கின்றோம். அவற்றை நீவிர்கொண்டு அவனை யெதிர்கொண்டுபோய்க்கொடுங்கள்" என்று கட்டளையிட்டருளி அதனைப் பிள்ளையாருக்குந் தெரிவித்தருளினர். பிராஹ்மணர்கள் விழித்தெழுந்து ஆச்சரிய மெய்தினவர்களாகித் திருக்கோயிலினுள்ளே புகுந்து, சுவாமி கட்டளையிட்ட பொருள்கள் அங்கிருக்கக்கண்டு மகிழ்ந்து அவற்றைத் தாங்கிக் கொண்டு சிவனடியார்கள் பலர்சூழ, வாச்சியங்கள் முழங்க, பிள்ளையாரை எதிர்கொண்டார்கள். பிள்ளையாரும் அவர்களை எதிர்கண்டனர். அப்போது சிவனடியார்களும், பிராஹ்மணர்களும் பிள்ளையாருடைய திருவடிகளில்வீழ்ந்து வணங்கி, எந்தையே ! யாம் தாங்கிவந்த முத்துச்சிவிகை, முத்துச்சின்ன முதலாயினவற்றை ஏற்றருளும் என்று பிரார்த்தித்தார்கள். பிள்ளையார் அதைக்கேட்டு மகிழ்ந்து, சிவபெருமானுடைய திருவருளைவியந்து (எந்தையீசனெம்பெருமான்) என்னுந் திருப்பதிகமோதித் துதித்து, அருள் வடிவமாகிய முத்துச்சிவிகையை வலம்வந்துபணிந்து, ஸ்ரீ பஞ்சாக்ஷரத்தை யுச்சரித்துக்கொண்டே உலகமெல்லாமுய்யும்படி அதில் ஏறியருளினார். எம்பெருநதகைப்பிரான் அச்சிவிகையிலேறி வீற்றிருந்தருளிய அற்புதகோலத்தைக் கண்ட சிவனடியார்கள் ஹர ஹர ஹர வென்று உச்சிமேற் கரங்கூப்பி ஆரவாரித்தார்கள். அந்தணர்கள் கண்களிகூரக்கண்டு வேதவொலியெழுத்துதித்து ஆரவாரித்தார்கள். இந்திரன் முதலாயினோர் புஷ்பமாரிபொழிந்து துதித்து ஆரவாரித்தார்கள். இவ்வதிசயகோலத்துடன் எம்பெருமானெழுந்தருளிவருகையில் மேலே முத்துக்குடைநிழற்றினார்கள். அன்றியும், வேதங்

களும், வேதியர்களும், ஏனையுலகத்தவர்களும் உய்யுமாறு திருஞானசம்பந்தப்பிள்ளையார் வந்தார், இற்சடப்பிரபஞ்சங்கள்யாவும் தாமேயாகிய உமாதேவியார் திருமுலைசுரந்தூட்ட ஞானப்பாலுண்டருளியபாலறுவாயர் வந்தார், வேதமுதலிய எல்லாக்கலைகளையும் ஓதாதுணர்ந்தருளிய முத்தமிழ்விரகர் வந்தார் என்று முத்துச்சின்னமொலித்துக்கிளர்ந்தது. இப்பெருங்காட்சிதோன்றப் பிள்ளையார் திருவரத்துறையையடைந்து சிவிகையினின்று மிறங்கித் திருக்கோயிலினுள்ளேசென்று வலஞ்செய்து, சந்நிதானத்திலே வணங்கித் திருப்பதிகம்பாடித்துதித்து அந்தப்பதியிலேதானே சிலநாள் எழுந்தருளியிருந்தனர்.

## சூசனை.

பிள்ளையாரது திருக்கரத்தில் பொற்றாளமவந்த புதுமையை நோக்கின், அவரது தெய்வத்தன்மையே வெளியாகியது. அந்தப் பொற்றாளம் ஸ்ரீபஞ்சாட்சர வடிவமாயிருந்தலால். பஞ்சாட்சரமென்பதுஐந்தெழுத்து. அது (ந - ம - சி - வா - ய) என்பது. இதனை யுச்சரிக்குங்கால் (சி - வா - ய - ந - ம) என்றமையும். இதில், சி=சிவம். வ= அருள். ய= ஆன்மா. ந= திரோதை. ம= மலம் எனவறிக. முன்னிரண்டெழுத்துக்களும் பதியும், பின்னிரண்டெழுத்துக்களும் பாசமும், இடையெழுத்தொன்றும் பசுவுமாகும். பதிக்கும் பாசத்துக்கு மிடைப்பட்டதாய்ப் பாசத்தோடுசேர்ந்து பாசமாயும், பதியோடு சேர்ந்து பதியாயும், பாசமும் பதியுமல்லாமல் வயங்குந் தன்மைத்துப்பசுவென்னும் மூண்மையு மிதனுணிலைக்கும். பதியோடுகூடிய ஸம்பந்தத்தை ஞானநடனமெனவும், பாசத்தோடுகூடிய ஸம்பந்தத்தை ஊனநடனமெனவும் பெரியோர்கூறுவர். ஊனநடனமொழிந்து ஞானநடனந்தானே ஆதரிக்கற்பாலதென வேதாகமங்கள் முழங்கலால் நகார மகாரங்களாகிய மலங்களைப் பின்றள்ளி, யகாரமாகிய ஆன்மா வகாரமாகிய அருள்கூட்டச் சிகாரமாகிய சிவத்திலதீதப்படும். இதனைப் பிரகாராந்தமாகவுங் காட்டி விரிப்பாம். எங்ஙனமெனின், நம=ஜீவான்மா. சிவ=பரமான்மா. ஆய=ஐக்கியம். “நமஃபதம் தத்கலு ஜீவவாசீ, சிவஃபதம் தத்பரமாத்மவாசீ, ஆயேதிதாதாத்ம்ய மிதம்ப்ரசித்தம், நமச்சிவாயேதி ஜகாதமந்த்ரஃ.” என்னு முபதேசத்தாலுமறிந்திடுக.

(தத்வமஸி)என்னும் ஸாமவேத மஹாவாக்யமும் இதுபோல்வதேயா ம். தத்=பரமான்மா.த்வம்=சிவான்மா. அஸி=ஆநுய் என்னும் ஐக் கியம். இத்தகைய மஹிமா வர்ணநங்களையுடைய ஸ்ரீபஞ்சாட்சரம் எம்பிரானது ஸ்ரீ ஹஸ்தத்தில் பொற்றாளவடிவமாகப் பொருந்துமா னால், அவரது தெய்வீகத்தை யாம் வியந்துமுடியுமா? இன்னும் இந்த ஸ்ரீ பஞ்சாட்சரம் இலிங்கவடிவமாகவும் அமைந்திருக்கின் றது. இலிங்கமானது பட்டிகா - கம்ஜ - கண்டா - ஆப்ஜ - பட்டிகா ஆத்யப்ரதாரிகா என்னும் பிரிவுகளை அங்கத்திலுடையதாய், அ வ்வங்கங்கள் ( ஓம் ) எனவும், ( வாய ) எனவும், ( சி ) எனவும், ( நம ) எனவும் பொருந்துமாறு விளங்கும். அவ்விலிங்கத்துக்கு ( ஓம் )வதனமாகவும், ( வா-ய ) இரண்டு புஜங்களாகவும், ( சி ) ம த்யதேகமாகவும்,(ந-ம)இரண்டுபாதங்களாகவும் அறியவேண்டியது "நமச்சிவாக்னி பீஜாய ஹராய பரமாத்மநே, ஓமர்த்தமந்த்ர ரூபாய மூ ல பஞ்சாக்ஷராத்மநே, ஓங்காரவதநாதேவீ வாயகாரபுஜத்வயீ, பஞ் சாக்ஷரீ பராவித்யாஸ் ஸதாராலிங்க ரூபிணீ, சிவமந்த்ராபிதாசைவீ ம மாங்கே சம்ப்ரதிஷ்டித." என்னு முபதேசமும் அதனைவிளக்கும். இ ன்னனபலவுள. மேல்வாக்கியத்தில், "ஓமர்த்த மந்த்ரரூபாய மூல பஞ் சாக்ஷராத்மநே" என விதந்தமையால், ஓங்காரத்தினுடைய அர்த்த ரூபமாயுள்ளது ஸ்ரீபஞ்சாட்சரமென்பதும் வியக்தம். (ஓ) என்பதி ல் வட்டவடிவும், ரேகைவடிவுங் காண்டலால், அது பிந்துநாதாத்மக மாயிருப்பதும் பிரஸித்தியடைந்தது. ஸ்ரீ பஞ்சாட்சரம் அதிற்கொ ள்ளக்கிடக்கும் பொருளாயினமையும் பிரஸித்தம். இவ்வுண்மை யையுணருங்கால், எம்பெருமானது திருக்கரத்தமைந்த பொற்று ளமும், ஸ்ரீ பஞ்சாட்சரமும் யாவை? அவற்றின் ஸம்பந்தம் யாது? எனவறிவது சுலபமாம். பொற்றாளம் வட்டவடிவினது. நாதவடிவ மானது. ஸ்ரீ பஞ்சாட்சரந் தீட்டப்பெற்றது. இவற்றால், நாதபிந்து வடிவமாகி, ஸ்ரீ பஞ்சாட்சரப் பொருளைக்கொண்டு விளங்கும் பிர ணவமே பொற்றாளமாயினமை நிச்சயிக்கப்பட்டது. பிரணவமாகிய வாசகத்துக்கு வாச்சியர்கள் சிவசக்திகளென்பதையும், அன்னோ ரி ரண்டுபொருள்களாகி வேறானவிடத்தும் அவர் கூடினவிடத்தன்றி யோரியக்கமு மின்றென்பதையுமேயன்றோ எம்பிரான் கரத்தமைந்த விரண்டுதாளங்களும், அவையிரண்டுங் கூடினவிடத்துண்டாகு நா தமும் பொருள் படுத்திவிட்டன? இவற்றை நோக்குங்கால், எங்கள் பெருந்தகையினது அங்கப்பிரத்யங்க ஸாங்கோபாங்கங்கள்யாவும்

பிரவிருத்தி பதிதமெனல பசுமரத்தாணியறைந்தாற்போல நாட்டப்பட்டது. இதுகாறும் பொற்றாளத்தின் சீர்த்தியை யொருவாறுபுகன்றும். இனி ஏனைச்சீர்த்தியையுங் கொஞ்ச மெடுத்திசைப்பாம்.

திருநீலகண்டயாழ்ப்பாணர் அறுபத்துமூன்று நாயன்மார்களிலொருவர். இவர்ஜாதியிலே பாணர். இவருக்கு எம்பிரான் விருந்தளித்ததும், தமது தோழமையைத்தந்ததும் இவரது அன்பு காரணமாகவன்றி வேறில்லை. ஜாதியிழிவை நோக்குறல் முத்தர்களிலேமையன்று. இவ்வளவு கடந்தநிலைமை இரண்டிடங்களிலும் ஸமமான அன்பு நேர்ந்தவிடத்தன்றிப் பெருமையுறாது. எமபெருமக்க ளிருவர்மாட்டு மவ்வன்புடைமைக்கு அளவுகாண முயல லபராதமாக முடியும். யாழ்ப்பாணருக்குப் பிள்ளையாரிடம் அன்புமாத்திரமும், பிள்ளையாருக்கு யாழ்ப்பாணரிடம் அன்போடு அருளும் நிறைந்திருந்தமையறிக. அருள்புரியுந் தன்மை பிள்ளையார் சமயாசாரிய முதன்மைகொண்டிருந்ததனுலென்க. அன்பினது நிறைவா லிரண்டிடங்களிலும் ஸாம்யாதிசயமே கடித்தது. இதனால், பிள்ளையார் யாழ்ப்பாணரிடம் பரிவுபாராட்டியது ஸாமஞ்சஸமேயாயிற்று. இதுவே யுலகில் யாவர்மாட்டும் பயன்படத்தக்க பண்பாம். இஃதொழிந்து,இருவரில ஒருவருக்கு அன்பில்லாதபோது அது மனஞ்செய்யாது. அவ்வளவேயன்றிக் குணஞ்செய்யாதென்பது எமதுகருத்தன்று.எங்ஙனமெனின்,ஏனாதிநாயனார்-கலிக்கம்பநாயனார்-மெய்ப்பொருளையனார் முதலினோர் தம்மைவஞ்சிக்கப் பொய்வேடந் தாங்கிவந்த பூரியர்மாட்டும் அவர் பொய்ம்மையை நாடாது மெய்ம்மையே பாராட்டினர். அது அவருக்கு நலஞ்செய்யத் தாழ்த்ததின்று. இதனால், சிவவேடத்தைக்கண்டபோது அது அன்புநிறைந்தவிடமேனும், அல்லாதவிடமேனுந தாழாதுவணங்கி அன்புபுரிதல்வேண்டும். இதுவே மேலோர் செய்கை. இச்செய்கைக்கு அன்பேகாரணம். இசசெய்கையில்லாதபோது அன்புகுறைந்த மற்றையிடத்தைப்போலவே இதுவும்முடியும். ஏகலவனென்னும் வேடன் மரப்பாவையைத் துரோணராகப் பாவித்து அன்புசெய்தமைக்கே பரிசுகிடைக்குமாயின், சிவனடியார்வேடத்தை மெய்யாகமதித்து அன்புசெய்வதில் என் தாழ்வுண்டாகும்? சேரமான்பெருமானையனார் உழமண்ணை லுடல்வெளுத்திருந்த வண்ணானைப் பேரன்போடுவழிபட்டதும் ஸத்தியமாகையால் அடியார்வேடத்தில் விசாரஞ்செய்து காலங்கழித்துப் பலனையிழப்பது பாவிகளுக்கே சிறக்கும். ஆயின், சூத்திரனிடத்திலே சிவவேடத்

தைக்கண்டு பிராஹ்மணன் அன்புமிகுதியால் அவனை வணங்குதலும், அவனிடம்புசித்தலுங் கூடுமோவெனின், அன்பிருந்தால் அவசியங்கூடும். அன்பு காரணமாகக் கூடுமென்றதனால், அன்பில்லாதபோது கூடாதென்பதே சித்தம். அன்பின்மூழ்கிச் சிறந்தபோது தன்னைமறத்தலால், அது அருட்செயலாக முடியும். அப்படியே அன்பின்மையின் மூழ்கித் தன்னை மறந்துசெய்யுஞ் செயல்யாவும் ஸ்வ்போத கல்பனமாகமுடியும். பக்திமார்க்கம் - விதிமார்க்கம் என்னுமிருவிதமார்க்கங்கள் சிவாராதனத்துக்கு ஹேதுவாகும். இவற்றுள் பக்திமார்க்கமே சிறந்தது. பக்தியென்பதும் அன்பு என்பதும் ஒன்று. அன்பு கடிக்காதபோதே விதிமார்க்கம் கனம்பெறும். அன்பு சிறந்தபோது அதன்முன்னர் விதியானது சிறக்காது. சிவகோசரியார் விதியிலே சிறந்தவர். கண்ணப்பதேவர் அன்பிலே சிறந்தவர். இருவர்தம்முள்ளுங் கண்ணப்பர் தன்மை விசேடித்தது ஸர்வஸம்பிரதிபந்நமாயிற்று. அந்தணராகிய சிவகோசரியார் படைத்தவைகளைச் சிவபெருமான் நுகர்ந்திலன். வேடுவராகிய கண்ணப்பர் படைத்தவைகளை அவ்வெம்பெருமான் நுகர்ந்தருளினர். சிவகோசரியார் படைத்தவை கனிவர்க்கங்கள். கண்ணப்பர் படைத்தவை மாம்ஸவர்க்கங்கள். இவற்றைநோக்குழி அன்புக்கு முன்னர் விதியானது எவ்வளவு கனம்பெறுமென்பதை விவேகிகள் யோசியாமற்போகார். சிவகோசரியார் வேதவேதாந்தங்கள், வேதாந்த சித்தாந்தங்களுணர்ந்தவர். கண்ணப்பதேவர் அவற்றையுணராதவர். அவருக்குச் சிவமும், அச்சிவன்மாட்டு அன்பொன்றுமே தெரியும். இந்த நிலைமையை யூகிக்கின், அந்தணன் அன்புமிகுதியால் சூத்திரன்மாட்டருந்துதல் கூடுமோவென்னு மாசங்கை பரிகாரமாம். மேற்கூறிய திருநீலகண்டரைப் பெரும்பாணரென்றும். இவரதுஜாதி இடையர் குயவர் ஜாதிகளினுந் தாழ்ந்தது. இவருக்கு நங்காழிநாதர் விருந்தளித்தாரென்று மேலேகூறினும். இவரைத் தூரவைத்து உபசரித்தாரென்று கூறலாமா? அங்ஙனங்கோடல் பேரபராதமாக முடியும். இதை யாவரேனு மறுப்பாரெனின், அப்பூதியடிகள் திருமனையில் திருநாவுக்கரசுகள் அமுதுகொண்டது எப்படியென்று சொல்லட்டும். அரசுகள் பரிசித்தபாத்திர முதலியவைகளை அப்பூதியடிகள் அலம்பித்தான் எடுத்துக்கொண்டார்போலும். இவ்வாறு நினைப்பினும் பாவம் விளையும்! விளையும்!! (முனைவரையுள் ளெழுந்தருளுவித்தவர்தாண் முன்விளக்கும்புனைமலர்சீர் தங்கண்மேற் றெளித்துள்ளும் பூசித்தார்) என்னுந் திருவாக்கால் அப்பர்சுவாமிகளுடைய ஸ்ரீபா

தீர்த்தத்தை அப்பூதியடிகளும், அவருடைய மனைவி - மக்கள், பந்து பரிஜநங்களும் ஸ்வீகரித்தார்களென்று வெளிப்பட்டது. (இருந்தவெண் ணீறுசாத்தி யில்லுடை யிருவருக்கும்-பொருந்திய நீறு நல்கிப் புதல்வர்க்கு மளிக்கும் போழ்தில்) என்னும் வாக்கியத்தில் அப்பர்சுவாமிகள் அப்பூதியடிகளார்க்கும், அவருடைய மனைவிமக்களுக்கும் விபூதிப்பிரஸாதம் அளித்தாரென்று வெளிபபட்டது. (மைந்தரு மறையோர்தாமு மருங்கிருந் தமுதுசெய்யச்-சிந்தைமிக் கில்லமாதர் திருவமுதெடுத்து நல்கக்-கொந்தவிழ் கொன்றை வேணிக் கூத்தனு ரடியா ரோடும் - அந்தமி லாளி யாரங் கமுதுசெய் தருளினுரே.) என்னும் பாடலில் அப்பர்சுவாமிகள் அப்பூதியடிகளும், அவருடைய புதல்வர்களுங் கூட விருந்துண்ண, அப்பூதியாருடைய மனைவியார் திருவமுது படைக்கத் திருவமுது கொண்டருளினுர் என்று வெளிபபட்டது. திருநாவுக்கரசுகளுடைய ஸ்ரீ பாததீர்த்த ஸ்வீகாரஞ் செய்தாரெனவும், அவரிடம் விபூதிப் பிரஸாதம் வாங்கிக்கொண்டாரெனவும், அவரோடுகூட விருந்துண்டாரெனவும், அப்பூதியடிகளைச் சிறப்பித்திருக்கும் வாய்மைக்கு என்ன ஸமாதானந் தேடுவது? இவ்வளவும் உண்மையானபோது யாழ்ப்பாணரைத் தம்மோடிருத்தி விருந்தளித்தார் காழிநாதரென்பதற்கு என்ன தடையுளது? அன்றியும், திருநீலநக்கவடிகள் பிள்ளையாருடன்வந்த யாழ்ப்பாணருக்குத் தமதில்லத்தினடுவில் வேதிகையின் பக்கத்திற் சயனிக்க இடங்கொடுத்ததும், யாழ்ப்பாணர் தமது பத்னியாருடன் அங்கு நித்திரைகொண்டதும் அதனுல், வேதிகையிலுள்ள நித்யாக்னி வலஞ்சுழித்து முன்னையிலும் ஓங்கிப் பிரகாசித்ததும் என்னை? இதனுண்மையையறிந்த ஸ்ரீ ஆறுமுகநாவலரவர்கள் பெரியபுராண வசனத்தில் "(வருணமன்று பத்தியே மகிமை தருவது) என்பதையே மேலுண்மை விளக்கியது" என்று இனிது கூறினர். யாழ்ப்பாணருக்கு விடுதிகாட்டக் காழிவிரகர் கட்டளையிட்டருளியதும், அப்படியே திருநீலநக்கர் விடுதியளித் துபசரித்ததும் யாழ்ப்பாணரிடம் இருதிறத்தவர்க்குமுண்டாயிருந்த அன்பும், இருதிறத்தவரிடமும் யாழ்ப்பாணருக்குண்டாயிருந்த அன்புமே காரணம். யாழ்ப்பாணர் பத்னியாருடன் கூடியிருநததமையால், அவருக்குத் தனிவிடுதி அவசியமாயிற்று. எவ்வாப்படியாயினும் அன்பின் பெருமையே பிரகாசமாயிற்று.

இதனை யின்னும் வலியுறுத்துவாம். "அபிவாயச்சண்டாளுச வஸிதி வாசம் வதோக்தேந ஸஹஸம் வதத்தேந ஸஹஸம் மசேஸ்தேந

ஸஹறபுஞ்சீத " என்னுஞ் சுருதியில் (சிவ) என்று ஒருவனுச்சரிப்பானுயின், அவன் சண்டாளனுயிருந்தாலும் அவனோடு வசனிக்கலாம், அவனோடுகூடி வாழலாம், அவனோடிருந்து உண்ணலாம் என்று கூறப்பட்டிருக்கின்றது. இதை யிப்படியே பொருள்கொண்டால் தத்தஞ் சாதியுயர்வு கெடுமென்று இங்ஙனங்கூறியது ஒளபசாரிகமென்பர் அறியாதார். உபசாரமென்று கூறுகையால், உண்மையன்றென்பது அவர்கருத்து. உபசாரத்துக்கும், உண்மைக்கும் இலக்கணம் யாதெனின், இல்லாத யோக்யதையை யுள்ளதாகக் கௌரவித்த லுபசாரமும், உள்ள யோக்யதையை யுள்ளவாறு கௌரவித்தலுண்மையுமாகும். இதனால், (சிவ) என்னும் அக்ஷரத்வய பதத்துக்கு இல்லாதயோக்யதையை வேதம் உள்ளதாக வுபசரித்துக்கூறியது என்பதையே பூர்வபட்சிகள் தீர்மானிக்கவேண்டியது. பிரகிருதவிசாரத்தில், அதற்கில்லாத யோக்யதை யாதெனை விசாரிக்குமிடத்தில், சண்டாளன் அதை யுச்சரிப்பானுயின் அவனுக்கு அவனிடத்துள்ள சண்டாளத்தன்மையை அது நிவிர்த்திக்க முடியாதென்பதேயாம். சபாஷ நன்று! நன்று!! ஒரு தேகத்தை ஆச்ரயித்திருக்குஞ் சண்டாளத்தன்மையை நீக்கமுடியாத சிவமந்திரமா ஓரான்மாவை ஆச்ரயித்திருக்கும் ஆணவத்தை நீக்கப்போகின்றது? இத்தகைய அவலமந்திரத்தையா மோக்ஷமந்திரமென்று வேதங்கூறியது? இனி, அதை மோக்ஷமந்திரமென்று வேதங்கூறியதும் ஒளபசாரிகமென்பார்போலும். அந்த மந்திரத்துக்குள்ள எல்லாவாதிக்யமும் உபசாரமாக முடிந்தால், அதற்கு உண்மையாகமுடிந்த வாதிக்யந்தான் யாது? ஐயோ கலிகாலப்பண்பே! ஜாதியுயர்வைப் பிரதிபாதிப்பது மாத்திரமே அவருக்கு உண்மையும், ஏனையுயர்வுகளைப் பிரதிபாதிப்பது அவருக்கு உபசாரமுமாக முடிந்தது ஆச்சரியம்! ஆச்சரியம்!! உண்மையில், அது ஒருவனுடைய சண்டாளத்தன்மையை நீக்குவது சத்தியமென்பதே ஆன்றோர் துணிவு.

நாராயணமந்திரம் சிறந்தது என்று கொள்ளுமொருவன் சிவமந்திரத்துக்குள்ள வாதிக்யத்தை உபசாரமென்று கூறுவன். உண்மையென்று கொண்டால், தனது நாராயணமந்திரம் மகிமைகுன்றுவதால். நாராயணமந்திரத்துக்கு வேதத்திலாதிக்யம் பெறப்படாவழி, அது சத்தியமென்றுகொண்டு கூறுவன். அது தனது அபிமானரூபமா யிருத்தலால். அப்படியேயன்றோ ஜாதியபிமானத்தாற் பிடிக்கப்பட்டபோர் அந்தச் சாதியைநோக்க ஏனையவற்றைக் குறை

ளாகவெண்ணியும், அப்படியே அநுட்டித்துங் காலங்கழித்து வருகின்றனர்? எதனிடத்துத் தமக்கதிக வபிமானமோ, அதையே பெரிசென்று அவிவேகிகள் கொள்வர். ஜாதி - சமயம் என்னுமிரண்டு ஸம்பந்தங்களை யொருவன் பெற்றவிடத்திலும், சமயத்தைக்காட்டிலுஞ் சாதி அவனுக்கு முக்கியமாகவிருப்பின், சமயமகிமைகளை உபசாரமென்று கூறிச் சாதிமகிமைகளை ண்மையென்று பேசி மகிழ்வன். அபிமானமொழிந்து தான்பற்றிய பொருள்களில் யாது முக்கியம் என்று நியாயமனங் கமழ்ந்திட விசாரிப்பானாயின், அப்போதன்றோ உண்மை அவனுக்கு வியக்தமாகும்? அப்படி விசாரிக்கின், ஜாதிசமயங்களில் ஜாதி அமுக்யமும், சமயம் முக்கியமுமாகமுடியும். சமயத்தைக் கெடுக்கத்தக்க ஜாதியேற்றங்க ளத்தனையும் அவனுக்கு ஔபசாரிக மாவதிலுந் தட்டில்லை. (சாத்திரம்பல பேசுஞ்சழக்கர்காள் - கோத்திரமுங் குலமுங் கொண்டென்செய்வீர்) என்பது பிரமாணம். இந்த விசாரத்தால், சிவமந்திரத்துக்கு வேதங்கூறிய ஆதிக்யம் ஸத்தியம் என்று யாம்காட்டியது ஸபலமாயிற்று. இந்த மந்திரோபமானத்தால், சிவனடியாரது ஜாதியிழிவு தக்கபட நியாயவத்தாக யாம் நிரூபித்ததும் ஸாமஞ்சஸமாயிற்று. இவ்வுண்மை யுணராதார் கூறுஞ் சாதியேற்றம் நிரஸ்தம்.

இன்னுங் கொஞ்சம் யோசிப்பாம். ஒரு வேளாளன் தான்சிவதீக்ஷா விசேஷத்தால் சைவனென்று வெளியாகிறான். நீயென்ன ஜாதியென்று அவனைக்கேட்டால் நான் சைவன் என்று பதில் சொல்லுவதொழிய நான் வேளாளன் என்று பதில் சொல்லான். அப்படியே சடைமுடித்து அல்லது முண்டித்துக் காவிபூண்ட வோர் வேளாளனும் பிரவர்த்திக்கின்றான். இவ்விருதிறத்தவருந் தங்கள் ஜாதியை மறந்துஞ் சொல்லார். எத்தனைதரம் புரட்டிக் கேட்டாலுஞ் சைவரென்றே பதில் சொல்வர். தங்கள் ஜாதியை யேன் சொல்லாரெனின், தங்களுடைய சமயசமஸ்காரத்தால் ஜாதி நலம் நசித்ததென்பதே அவர் துணிவு. தங்களுக்குச் சாதி நசிக்கின்றமையால், நசித்துச் சொரூபஹானியடையும் ஜாதியைவிட்டு ஸதாஜீவித்து நிற்குஞ் சமயத்தையே தாரகமாகக்கொண்டு கூறுகின்றனர். இது சாஸ்திர ஸித்தமும், ஸத்துக்களுடைய அநுபவ ஸித்தமும் ஆகும். எப்போது வேளாளனுக்கு வேளாளஜாதி நசித்ததோ, அப்போதே பிராஹ்மணாதிகளுக்கு அவரவர் ஜாதிகளும், அநுலோம பிரதிலோமர்களுக்கு அவரவர் ஜாதிகளுஞ் சமய ஸம்ஸ்காரத்தா

ஏ நாசமெய்தினமை வஸித்தம். வேளாளனின் மேலிட்ட பிராஹ்மணனுக்கும் வேளாளனைப்போலவே ஜாதி நசித்தலால் அவன் பிராஹ்மணனென்ப தொழிந்து சைவனென்றே வெளியாகிறான். இப்படியே வேளாளனிற் கீழிட்ட அநுலோமனுக்கும் வேளாளனைப்போலவே ஜாதி நசித்தலால் அவன் அநுலோமனென்பதொழிந்து சைவனென்றே வெளியாகிறான். இந்த வியவஸ்தையால் யாவருஞ் சைவராயினமை வியக்தம். இதனால், யாவரும் ஏரேஜாதி யென்பதும் வஸித்தம். இங்ஙனமாக, வேளாள சைவன் பிராஹ்மண சைவனை மாத்திரமே சைவனெனக் கொண்டு அவனிடமுண்டு களிக்கிறான். அநுலோம சைவனைக் கனவினும் மதியான். அநுலோம சைவனை வேளாளசைவன் எவ்வளவாக மதிக்கிறானோ, அவ்வளவாகவே வேளாளசைவனைப் பிராஹ்மண சைவன் மதிக்கிறான். இதனை நோக்குமிடத்து இருதிறத்தவர்க்குஞ் சொல்லுஞ் செயலும் வேறுபட்டு உண்மைக்கு ஹானி யுண்டாகின்றது. அன்றியும், வேளாளசைவன் பிராஹ்மண சைவனைவிட்டுப் பிராஹ்மண அசைவனிடமு முண்டு களிக்கிறான். பிராஹ்மண அசைவனென்றது சிவதீக்ஷையடையாத ஸாமானிய துவிஜனை. சிவதீக்ஷை யில்லாதவனும், சைவபாஹ்யமாகிய பாஞ்சராத்திர தீக்ஷையுள்ளவனும், இவற்றால், பஸ்மத்வேஷம், சிவத்வேஷம், வெள்ளைமண் யோர்த்வபுண்டர தாரணம், விஷ்ணுபரத்வம் இத்யாதி ஹேயாவலம்பந முடையவனுமாகிய ஸாமானிய விப்பிரனை மதித்து அவன்பா லுண்டுகளிக்கின்ற வேளாளன் யான் சைவனென்று வாய் கூசாது பேசுவது ஆச்சரியம்! ஆச்சரியம்!! வேளாளரிற் சிலர் யோர்த்வபுண்டரந் தாங்கியுந் திரிகையால், அவரிடஞ் சைவராகிய வேளாளரும், தங்களிடம் அவரும் ஸமபந்தியாக வுண்டுவாழும் அழகுஞ் சிரிப்பைத்தருகின்றது. இந்த மண்பூசிய வேளாளர்களையும் நீங்கள் யாவர் என்றுகேட்டால், அவர்களும் நாங்கள் சைவர்கள் என்று கூறுகின்றார்கள். பூசுவது மண்ணும், பேசுவது சைவமுமென்றால் எவ்வளவு பேராச்சரியம்! இதனால், இன்னோர் சைவரென்று பேர்பூண்டு திரிவது தங்கள் வேளாள ஜாதிக்கு (மேல்மொலாம்) பூசுவதாக ஏற்படுகிறதேயன்றி வேறில்லை. இந்த விவகாரத்தால் நீறுபூசிய வேளாளர் கதியையும் இப்படியேயன்றோ கொள்ளவேண்டி யிருக்கின்றது? மண்பூசியவன் தன்னைச் சைவனென்று சொல்லிக்கொள்வ தொழிய, அவனுக்கு எப்படிச் சைவத்தில் அன்புகிடையாதோ, அப்படியேயன்றோ நீறுபூசியவனுந் தன்னைச் சைவனென்று சொல்லிக்கொண்

டு சைவத்தில் அன்பு வகியாதவனாகத் திரிகின்றான்? இதனால், வேளாளர் யாம் சைவரென்று கௌரவம் வகித்துத்திரிவது பெரும் பாவமேயாகும். இங்ஙனநிற்க, வேளாளசைவர்தாம் எதனை யுண்ணுமிடத்துஞ் சிவார்ப்பித மின்றியுண்ண வேதசிவாகமங்கள் உடன்படா. அங்ஙனமாக, தங்கண்முகத்தின் மண்பூசியும், கரிதடவியுஞ் சிவார்ப்பிதஞ் செய்யாது எதனையுமுட்கொள்ளும் ஸாமானியத்விஜர்கள்பால் அவர்களுண்டுசேஷித்த அன்னபானீயங்களைப் போக்யமாகத் திருப்தியுடன் வாங்கி யுண்ணுதல் என்ன சைவமோ? யாம் அறியோம். அநுலோமருள் சிலர் சைவரானவிடத்து அன்னோர் சைவாசாரங்களை வகித்து மெய்யன்புடன் பரமசிவனை வழிபட்டுச் சுத்த சைவராயிருக்குமிடத்தும் அவர்பால் வேளாளசைவர் அருந்தார். தம்பக்க லவரருந்தநேரின், ஸமபந்திகொள்ளார். அவ்வநுலோமசைவரோ, விதிப்படி யாவுஞ் சிவார்ப்பிதஞ்செய்து உண்பவர்கள். இத்தகையோர் தூரமாகவும், அசைவம் பழுத்தொழுகும் விப்பிரர் ஸமீபமாகவும் வேளாளசைவருக்கு நேர்ந்த மகிமை அதிசயம்! அதிசயம்!! இதனால், சைவநலம் பெற்றுவாழும் விப்பிரர் முதல் எல்லா வருணத்தவரையும் ஸமீபமாகவும், அசைவம் பழுத்தொழுகும் விப்பிரர்முதல் எல்லாவருணத்தவரையுந் தூரமாகவுங் கொண்டு வர்த்திக்கும் உண்மையான வேளாளசைவர் எம்மை விரோதிக்க விடமில்லை. அயதார்த்த நடை கூடாதென்று யதார்த்தத்தை இங்கே யாம் பிரதிபாதிப்பது நடுவு நிலைமையுடைய யாவர்க்கும் ஸந்தோஷத்தையே யுண்டுபண்ணும். இவர்களைப்பார்த்து, இவர்கள்பேரை யிரவலாகத் தாங்கித்திரியும் (கள்ளுஞ்சுள்ளும்) கலந்துண்ணும் வேளாளப் போலிகளுந் தங்களை யுயர்வாக மதித்துக்கொண்டு அன்னியஜாதி நிந்தை புரிந்தும், அவரோடுண்ணப் பின்னிடைந்துஞ் சிலம்பாராட்டுகின்றனர். இவர்களுக்குஞ் சுத்த வேளாளருக்கும் பேதமென்னை? இதனை நமது சைவவேளாளர் கூர்ந்து யோசிக்க வேண்டியது.

இவர்கணிற்க, ஆதிசைவர் என்று பிரஸித்தி யடைந்திருக்குஞ் சிவபிராஹ்மணர் தன்மையைக் கொஞ்சம் பரியாலோசிப்பாம். இவர்கள் சிவனுடைய முகத்தி லுதித்தவர்கள் என்று சொல்லப்படுகின்றனர். சிவபிரானது ஸம்பந்த விசேஷத்தால் இவர்களுடைய ஜன்மமே பரம பாவனத்வ மெய்தியிருக்கின்றது. இன்னோர் பிரமனது முகத்திலுதித்த ஸாமானிய பிராஹ்மணர் தன்மையை யெய்

தார்கள். சிவன் எப்படி மலமில்லாதவராயிருந்து, மலபத்தராகிய பசுக்களுக்கு அந்த மலத்தை உயிருக்குயிரா யிருந்து பாகப்படுத்தி மோசிப்பாரோ, அப்படியே ஜந்மத்தினாலேதானே பரிசுத்தமெய்தி வேறு ஸம்ஸ்காரம்வேண்டாது ஸ்வயம் ஆசாரிய பிரவர்த்தகம் வகித்து ஜீவர்களை ரக்ஷிக்கின்ற யோக்யதை யுடையாரென்பதே துணிவு. ஆயின், இவர்களைப் பிராஹ்மண ரென்பதும், வைதிகசைவஸித்தமான ஸம்ஸ்காரங்களை இவர்களுக்குச் செய்வதும் என்னையெனின், சிவனைப் பிராஹ்மணரென்பதும், அவருக்குச் சாஸ்திரஸித்தமான கிருத்யங்களை நடத்திப் பூசிப்பதும் எப்படியோ, அப்படியே யென்றறியவேண்டியது. சிவன் யாவருக்குந் தெய்வமாயிருப்பதுபோல் இவர்கள் யாவருக்கும் ஆசாரியர்களா யிருப்பதறிக. சிவனுக்கு வேறுதெய்வங் கேட்கப்படாதவாறு இவர்களுக்கு வேறு ஆசாரியர்கள் கேட்கப்படாரென்றறிக. ஆகையாற்றானன்றோ இவர்கள் ஜாதிக்கே குருக்கள்ஜாதி என்னும்பேர் நிலைத்தது ? இவர்கள் யாவருமே குருக்களாகின்ற நியாயத்தால், இவர்களில் சிஷ்யர்கள் என்று வெளிவரத் தக்கவர்கள் இல்லாமற்போயினர். இவர்களில் யாரும் சிஷ்யர்களாகாமையும், யாவரும் குருக்களாகச் சிறந்தமையும் நோக்கின், இவர்களைக்காட்டிலும் வேறாயுள்ளவர்களே இவர்களுக்குச் சிஷ்யராகவேண்டி யிருக்கின்றது. அவர்களேயன்றோ பிராஹ்மணர் - க்ஷத்திரியர்-வைசியர்-சூத்திரர் என்னும் அதிகாரிகளாயுள்ளபேர் ? இந்நால்வருக்குமே சிவபிராஹ்மணர் குருக்களாதல் சிறந்தமையின், இவர்களை ஏனைச்சாதிகளோடு ஸாம்யமாகக்கோடலும், அவர்களைக் காட்டிலுந் தாழ்வாகநினைத்தலும் பெரும்பாவத்தையே விளைக்கும். இவர்கள்மகிமையை ஆதிசைவப்பிரபாவம், சிவத்விஜோத்கர்ஷமாஹாத்மியம் என்னும் நூல்களில் விஸ்தரித்திருக்கின்றோம். ஆண்டுக் கண்டுணர்க.

இவர்கள்பெருமை தெரிந்து குணப்படாமல் ஸாமானியராகிய பிராஹ்மணருட்சிலர் இவர்களைத் தங்களுக்குத் தாழ்ந்தவராக எண்ணி இறுமாந் துரைக்கின்றார்கள். இது கேவலம் அஸங்கதம். எங்ஙனமெனின், பிராஹ்மணாதி சாதுர்வருணத்தவருந் திருக்கோயில்களிற்சென்று சிவதரிசனஞ்செய்து வழிபடுகின்றார்கள். அங்ஙனஞ்செய்கையில், கர்ப்பகிரகம் - அந்தராளம் - மஹாமண்டபம் அர்த்தமண்டபம் என்னும் பாகுபாடுகளமைந்த இடங்களில், கர்ப்பகிரகத்திற்போக அதிகாரம்பெறாமல் அந்தராளம் என்னும் இரண்

டாம் ஆவரணத்திலிருந்தே பிராஹ்மணர்கள் தரிசிக்கின்றார்கள் முதலாவரணமாகிய கர்ப்பகிரகத்திலிருக்கத்தக்கவர்கள் சிவபிராஹ்மணராகிய ஆதிசைவரொருவரே. இவற்றை முறையே திருபிக்ஷையில், கர்ப்பகிரகம் சுத்தபுவனம் எனவும், அந்தராளம் சுத்தாசுத்தபுவனம் எனவும், மஹாமண்டபம் அசுத்தபுவனமெனவும், அர்த்தமண்டபம் அசுத்தபுவனத்தின்கீழ் எனவும் வெளிப்படும். இப்படியே அநுலோம பிரதிலோமர்களுக்கு உபகாரார்த்தம் காரியகோடியான ஸ்தானங்கள் இன்னுமுள. இவை ஆகமவிசாரத்தால் விளங்கும். சுத்தாசுத்த புவனவாசிகளென்று யாம் விப்பிரகோடிகளைப் பிரஸ்தாபித்ததும் தீக்ஷையால் ஸம்ஸ்காரப்பட்டபேரை. இதனால், தீக்ஷாஹீனர்களாகிய விப்பிரர்கள் அந்தச் சுத்தாசுத்த புவனப்பிரவேசத்துக்கு அதிகாரிகளாகார்களென்பது திண்ணம். ஓர்கால் அன்னோரதிக்கிரமித்துப் பிரவேசிக்கின், அந்தஸ்தானம் பிராயச்சித்தத்தை அபேக்ஷிக்கும். அதீக்ஷித ஸாமாந்ய பிராஹ்மணர்கள் எப்படிச் சுத்தாசுத்த புவனத்துக்கு அநதிகாரிகளோ, அப்படியே தீக்ஷிதஸாமாந்ய பிராஹ்மணர்கள் சுத்தபுவனத்துக்கு அநதிகாரிகளாவார்கள். தீக்ஷிதவிப்பிரர்களே சுத்தபுவனத்துக்கு அதிகாரிகளாகாதபோது அதீக்ஷிதவிப்ரர் அதற்கு எவ்வளவுதூரத்திலிருக்கத்தக்கவர்களென்பதை யாம் சொல்லவும் வேண்டுமோ? இவ்விதஸ்தான பேதங்களையுடைய திருக்கோயில்களில் சிவபிராஹ்மணராகிய ஆதிசைவர் சிவதரிசனஞ் செய்விக்கவும், விபூதிபிரஸாதங் கொடுக்கவும், ஆசீர்வாதங்கள் புரியவும், ஏனைப்பிராஹ்மணாதியர் சிவதரிசனஞ்செய்யவும், விபூதிபிரஸாதம் வாங்கித்தரிக்கவும், ஆசீர்வாதத்தைப்பெற்று வாழவும் யோக்யராய் விளங்குகின்றார்கள். இது ஸநாதனமான தர்மமென்பதை ஸ்ரீமந் மாணிக்கவாசகசுவாமிகள் பூர்வாச்சிரமத்தில் சிவத்விஜரிடம் விபூதி வாங்கித்தரித்துக்கொண்டார் என்றுகூறும் ஸ்ரீ ஹாலாஸ்ய மாஹாத்மியத்தாலறியலாம். இவ்வுண்மைதேராது விப்ரகோடிகளாயுள்ளபேர் சிவத்விஜர் விபூதி கொடுக்கவாங்கவும், அவர்காட்டச் சிவதரிசனஞ்செய்யவும் பின்னிட்டு, ஸ்வயம்பிரவர்த்தகத்துக்கு முத்துலைபோட்டு வருந்துகிறார்கள். "சிவாக்ரே சிவநிர்மால்யமக்ருஹீத்வா சிவத்விஜாத், ஸ்வயமே வாததாநச்சேந் நரகம் ப்ரதிபத்யதே" என்னும் வசனபரியாலோசனையால் அது நிரஸ்தம். சுருதிகுரு சுவாநுபவங்களால் சிவபிராஹ்மணர் தன்மை இனிதுவெளிப்படு நட்பந்தேராமல் ஸாமா

ந்யவிப்பிரர் இன்னுஞ் சில அஸங்கதங்கள் கூறுகின்றனர். என்னெனின், சிவத்விஜராயுள்ளபேர் தங்களிற் குறைந்த ஜாதியெனவும், அவர்கள் சிவசந்நிதானத்தின் மாத்திரமே பூஜ்யரெனவும், அந்தஸ்தானத்தில் அவர்கள்கையில் தீர்த்தபிரஸாதம்-விபூதிபிரஸாதம் இவைகளை ஸ்வீகரிக்கலாமெனவும், அஃதொழிந்த ஏனையிடங்களில் அவர்கள் அபூஜ்யர்களெனவும், அவர்களிடத்தில் அவ்விடங்களிலொன்றும் ஸ்வீகரிக்கலாகாதெனவும் பொங்கிவழிந்திடுவதேயாம். இதனைம்மட்டி லங்கீகரிக்கப்படு மென்பதைக் கொஞ்சம் யோசிப்பாம். தங்களிற் குறைந்த ஜாதியினராகிய சிவத்விஜர் சிவஸந்நிதானங்களில் தங்களைக்காட்டிலும் பூஜ்யராயிடுதல் எங்ஙனம்? குறைந்த ஜாதியினர் பூஜ்யரும், உயர்ந்தஜாதியினர் அபூஜ்யரும் ஆகுமுறைமை சாலச் சிரிப்புடைத்தே! பூஜ்யரல்லாத சிவத்விஜர் ஸந்நிதான விசேஷத்தால் பூஜ்யராகிறபோது பூஜ்யராகவேயிருக்கும் விப்பிரகோடிகள் ஸந்நிதானவிசேஷத்தால் அதிகபூஜ்யராகவன்றோ ஆகவேண்டும்? அங்ஙனமின்றித் தலைகீழாயிடுதல் யாங்ஙனம்? சிவபிராஹ்மணர் இயற்கையில் பூஜ்யராகையால், அவர்கள் சிவாலயபூஜைக்கு அதிகாரிகளாயினரெனவும், ஏனையபிராஹ்மணர் செயற்கையில் பூஜ்யராகையால் அவர்கள் சிவாலய ஸேவைக்கு அநதிகாரிகளாயினரெனவும் அறிவதேமுடிவு. ஈரவிறகு அக்னியினது ஸம்பந்தத்தால் பற்றியெரிகிறபோது உலர்ந்தவிறகு எவ்வளவு அதிகமாகப் பற்றியெரியவேண்டும்? அக்னியினது ஸம்பந்தமானது ஈரத்தைப் பதமாகவும், ரமற்றதைப் பதமற்றதாகவுங் கொண்டு முறையே உயர்வுதாழ்வாகப் பிரகாசப்படுத்தியது என்றுகூறு மநுபவத்தையே நமது பூர்வபட்சிகள் முடிவுக்கு ஒப்பிடவேண்டியது. மேல், அவர்களைநோக்கி பூஜ்யராகிய நீங்கள் ஆலயபூசைக்கு அயோக்யராகவும், அபூஜ்யராகிய சிவத்விஜர் ஆலயபூசைக்குயோக்யராகவும் விளங்குவதென்னையென யாம் வினவின், அவர்கள்கூறும் பதிலை வெளிப்படுத்துகிறோம். சிவாலயபூசை என்னும் பரார்த்தபூசை (கூலிவேலை) ஆக முடிகின்றமையால், அது எமக்கு அஸாமஞ்சஸம் என்பார்கள். அதனால் எமக்குத் தாழ்வில்லையென்றுங் கூறுவார்கள். இதுவும் அஸங்கதமென்பதை நிரூபிப்பாம். எங்ஙனமெனின், சிவாலயபூஜை கூலிவேலையாகாது. அது கூலிவேலையாகுமானால், உபதேசஞ்செய்யுந் தொழிலும் கூலித்தொழிலாகும். அவ்வுபதேசஞ் செய்பவனுங் கூலியாளாவன். ஆசாரியன் உபதேசிக்குந் தொழிலன்றி வேறுதொ

றியற்ற யோக்யனாகாதபோது அவன் ஜீவிப்பதெங்ஙனம்? அவனிடம் உபதேசத்தைப் பெறுஞ் சற்சீடர்கள் அவனுடைய ஜீவனத்தை நடத்தவேண்டியது கடமையல்லவா? அங்ஙனம் நடத்துங்கால் அவர்களிடம் ஆசாரியன் பெறுவது கூலியாகுமா? "சரீரமர்த்தம் ப்ராணஞ்ச ஆசார்யாய நிவேதயேத்" என்கிற பிரமாணப்படி ஆசாரியனுக்கு உடல் - பொருள் - ஆவி என்பவைகளைச் சீடன் தத்தஞ்செய்ய வுரியவனாகின்றான். இவ்வுண்மை தேராது பிரலாபித்தால் சைவஸ்மார்த்த மாத்வவைஷ்ணவ மடபதிகளுங் கூலிக்காரரேயாவர். இவர்களைக் கௌரவமாகக் கூறிவிட்டுச் சிவாலயபூசைசெய்யுங் குருக்கண்மாரை மாத்திரங் கூலியாள்கள் என்று புலம்புவது கேவலம் மூடததனமேயாம். இம்மடபதிகளுக்கும் ஆலயசேவை முக்கியமாகையால், இவர்களுக்குமன்றோ ஆதிசைவர் குருக்களாக விளங்குகின்றனர்? யாவருக்குங் குருக்களாகவிளங்கும் ஆதிசைவரைக் கூலியாள்கள் என்று குரைப்பது பொறாமையும், கலிகாலப் புதுமையுமேயாம். இவ்வாதிசைவர் சிவாலய பூசைமாத்திரமேகொண்டு குருக்களானதில்லை. பிராஹ்மணாதி சாதுர்வர்ணத்தவருக்குஞ் சிவனைத் தரிசிப்பித்தலன்றியும், அன்னோர்க்குச் சமயவிசேஷ நிர்வாணமுதலிய தீக்ஷைகள்செய்து அநுக்ரஹமுஞ் செய்கின்றனர். இவர்களால் பிராஹ்மணாதியர் தீக்ஷிக்கப் பெறுதலேயன்றி அவர்கள்பால் இவர்கள் தீக்ஷையடைந்து சிஷ்யராதற்கு விதியில்லை. இதுகாறும் அநுபவமுமில்லை. மெய்கண்டாராகிய வேளாளருக்கு அருணந்திசிவம் மாணாக்கராயினரெனின், அது விதியன்று அன்பின் மிகுதியாம். ஈண்டு விவகரிப்பது விதிமார்க்கத்தைத் தழுவியாகையால், இந்த விசாரணையில் எல்லாப்படியாலுஞ் சிவபிராஹ்மணர்தன்மையே சிறந்தது. இவ்வளவு நியாயங்களையுங்கடந்து சிவபிராஹ்மணர்மேல் வைத்தபொறாமையால், அவர்களைக் கூலியாள்களென்று மீண்டுங் கூறுவாரெனின், அப்போதும் ஒருபதில் சொல்லுகிறோம். ஓர் கந்நிகையை ஓர்வரன் மணந்து அவளை அன்னவஸ்திரங்களா லுபசரிக்கின்றான். அவளும் அவனை யுபசரிக்கின்றாள். இனி அவன் செய்யு முபசாரத்துக்கு அவள்செய்யும் பணிவிடையை அவனுக்குக் கொடுக்குங் கூலியென்றே பூர்வபட்சிகள் கூறவேண்டியது. அன்றியும், சிவன் ஆன்மாக்களுடைய மலத்தைமோசித்து அருள்செய்கின்றார். ஆன்மாக்கள் அவரை ஆலயப்பணிமுதலிய திருத்தொண்டுகளால் வழிபடுகின்றார்கள். அங்ஙனமவர்கள் வழிபடுவது அவர் தங்க

ருக்குச்செய்யும் அநுக்ரஹத்துக்குப் பிரதி, வியென்றே பூர்வபட்சிகள் இனிக் கூறவேண்டியது. இப்படிப பூர்வபட்சிகளுடைய மதம் நசித்தலால், சிவனோடு ஸமமாகப் பாவிக்கப்படுதலால் சிவன் எனவும், பிராஹ்மணாதி ஸர்வஜநங்களுக்கும் ஆசிரியராகி விளங்கலால் சிவாசாரியர் எனவும், தாம் ஒருவருக்குஞ் சீடராதலின்றி யாவருக்குந் தாமே தீக்ஷையாதிகள்செய்து சிவனைத் தரிசிப்பித்து அநுக்ரஹம்புரிதலால் குருக்கள் எனவும் பெருமைபெற்று விளங்குஞ் சிவபிராஹ்மணர் தன்மை ஒருவராலும் அசைக்கப்படுதலின்றி நிலைத்தது.

இவ்வளவேயன்றி இன்னுங்கொஞ்சஞ் சொல்லுகிறோம். சிவபிராஹ்மணர் ஒருவருக்குஞ் சீடராதலின்றி யாவரையுந் தமது சீடராகக்கொண்டு ஸ்வயம ஆசாரியர்களாகப் பிரவர்த்திக்கின்றமையால், அவர்களுடைய ஆசிரியத்தன்மை யாண்டும் விபசரித்திலது. பிராஹ்மணாதியர் தாமேசீடரும், தாமே ஆசிரியருமாகின்றமையால் அன்னோரது ஆசிரியத்தன்மை காலவேறுபாட்டால் விபசரிக்கின்றது. ஓர்போது சீவித்தும், மற்றோர்போது அழிந்தும் விபசரிக்கும் விப்பிரகோடிகளுடைய ஆசிரியத்தன்மை அகௌரவத்தை யடைதலை யறியாமல் அவர்கள் வீண்கௌரவம் பேசிக்கொள்வது பரிபவமேயென்க. சிவபிராஹ்மணர்களே ஆசாரியர்களென்பதை நாட்டுதற்கு வேறு நியாயமுமுண்டு. என்னெனின், காமிகத்தில், "ததாமந்தனகாளீச மபிதச்ச சதுர்மடா:, ஆமர்த்தகீ கோளகீதி ததாபுஷ்பகிரீதிச, ரண்பத்ரஞ்ச சத்வாரோ மடாநா மதிநாயகா:" என்று பெறப்பட்ட வசனத்தால் மந்தனகாளீசம என்னும க்ஷேத்திரத்தில் நான்குதிக்குகளிலும நான்குமடங்கள் ஆமர்த்தகி-கோளகி-புஷ்பகிரி-ரணபத்ரம் என்னும் பெயர்களால் விளங்குகின்றனவெனவும், அவற்றை ஆண்டு சிவாசாரியர்கள் அதிகாரஞ் செலுத்திவருகின்றனரெனவும் வெளிப்படுகின்றது. இப்படி எந்த ஸ்மார்த்தமடங்களாவது மூலப்பிரமாணம் அல்லது உபபிராஹ்மணங்களில் சொல்லப்பட்டிருக்கின்றனவா? ஆசாரியர்களுக்கே மடாலயங்கள் சிறப்பெனல் பற்றியன்றோ சிவபிராஹ்மணர்களுக்கே மூலாகமங்கள் அவைகளைக்கூறி, ஆசிரியராகக் கூறாத ஸ்மார்த்தர் முதலியோர்க்கு மடாலயங்களைக் கூறாமல் அவர்களைத் தெருவில் விட்டன. சங்கராசாரியர் மடங்கள் எந்தப்புராணத்திலாவது வேறு எந்தப் பிரபந்தங்களிலாவது சொல்லப்பட்டிருந்தால் வெளிவரட்டும் பார்ப்போம்? சிவாகம[illegible]

தைச்சிவாகம வசனந்தான் என்று யாவரும் ஒப்புவதுபோலப் பூர்வ பட்சிகள் அதவா ஒருவசனத்தைக் காட்டும்பட்சத்தில் அதையும் யாவரும் ஒப்பவேண்டியது. (மடாம்னாயஸ்தவம்) என்று சிருங்ககிரிமடத்தார் வெளியிட்ட சுவடியில் கும்பகோணமடத்தைக் கல்பிதமடம் என்று கூறியிருக்கின்றார்கள். கும்பகோணமடத்தார் வெளியிட்ட (சுவடியொன்றில்) சிருங்ககிரிமடத்தைக் கல்பிதமடம் என்று கூறியிருக்கின்றார்கள். இப்படி இருதிறத்தவர் எழுதிக்கொண்டதும் அவரவர்கள் கற்பித்துக்கொண்ட சங்கராசாரியரது கதைகளிலன்றிப் பொதுவாகிய வோர் ஸப்பிரமாணமான நூலிலல்ல. அப்படிக் கற்பித்துக்கொண்டும் அவை ஒன்றிலொன்று விரோதித்து இரண்டும் அஸாமஞ்சஸமென்பதை வெளிப்படுத்திவிட்டன. இவ்வளவு பெருமையுடையவைகள் மடங்களாகிறபோது கிறிஸ்துவர்களுடைய கந்யாமடங்களும் ஏன் மடங்களாகமாட்டா? இப்படிப் பரிஹஸிப்பதற்கேதுவாகிய மடங்களும் மடபதிகளுங் கௌரவத்தைப் பெறுவதெங்ஙனம்? சைவமடங்களிலொன்றாகிய புஷ்பகிரியின் பேரையேயன்றோ ஸ்மார்த்தர்கள் தங்களுடைய மடங்களிலொன்றுக்குப் பேராக இட்டு வழங்கிவருகின்றனர்? இன்ன பிரபலநியாயங்கள் ஆதிசைவரது ஆதிக்கத்தை ஸித்தாந்தப் படுத்துகின்றமையால் பூர்வபட்சிகளுடைய வாதம் இனி ஒருநலத்தையுஞ் செய்யாதென்க.

சிவபிராஹ்மணரைக் கூலியாள்கள் என்று நிந்திக்கும் விப்பிரகோடிகள் அந்தச் சிவத்விஜர்க்குரிய சிவாலயபூஜையைச் சிலவிடங்களில் தாங்களபகரித்தும், அபகரிக்க வழிதேடியும் விவகரிக்கின்றார்கள். அதிகாரிகளல்லாதவர்கள் அதிகாரிகளாக வெளிவந்து விவகரிப்பதேயன்றோ கேவலம் அஸங்கதமாகும்? இவ்வநதிகாரிகளையேயன்றோ "பேர்கொண்டபார்ப்பான் பிரான்றன்னையர்ச்சிக்கிற், போர்கொண்ட வேந்தர்க்குப் பொல்லா வியாதியாம், பார்கொண்ட நாட்டுக்குப் பஞ்சமுமா மென்றேயேர்கொண்ட நந்தி யெனக் குரைத்தானே" என்று திருமந்திரத்தில் நிஷேதித்திருக்கின்றது? இவ்வுண்மை தேராமல் பூர்வபட்சிகள் கூறும் சிவத்விஜநிந்தை நிஸ்புருஹமென்க. சிவத்விஜர்கள் சிவாலயங்களிற் பரார்த்தபூஜை செய்கிறபோது அவர்களுக்குப் பாத்திரசாமான் தேய்த்துச் சலஞ்சேந்திக்கொடுக்கிற வேலையும், மடப்பள்ளியிற் பொங்குகிறவேலையுங்கொண்டு பரிசாரகர் - சுயம்பாகிகள் என்னுங் கூலிக்காரராக வெளிப்பட்டும், அவ்வாதிசைவர்நஜ்

ஞைபெற்று மந்திரபுஷ்பங்கூறுதல் - வேதபாராயணஞ் செய்தல் என்னுமுபகரணக் கூலியாள்களாக வெளிப்பட்டும் விப்பிரகோடிகள் பிரவர்த்திக்கின்ற விஷயம் யாவரும் அறிவார்கள். இப்படிக் கூலியாள்களாகச் சிவாலயங்களில் உத்தியோகஞ் செய்யத்தக்கவர்களும் ஆதிசைவரால் தீக்ஷிக்கப்பட்டாலன்றி அதிகாரிக ளாகமாட்டார்கள். தீக்ஷையில்லாதபோது அவர்களுடைய கையில் ஜலத்தைத் தொடவுஞ் சிவாகமங்கள் இடங்கொடுக்கமாட்டா? பிராஹ்மணர்களுக்கு ஓதல் - ஓதுவித்தல் முதலிய கர்மங்கள் பிராப்தமாகாவிடினுஞ் சிவாலயங்களிற் பொங்கலாண்டி வேலையொன்று கிடைப்பதானாலும் அவர்கள் புனிதமாகத் தடையில்லை. அப்படிக்குமின்றிக் (குப்பைவண்டி மேஸ்திரி, ஜட்காவண்டி மேஸ்திரி, பில்லைக்கார மேஸ்திரி, தோல்ஷாப்புமேஸ்திரி, சோற்றுக்கிடங்கு மேஸ்திரி, எழுத்துக்கூலிமேஸ்திரி)முதலிய பெரிய பெரிய பட்டங்களைத்தாங்கி ஸ்நானம், தோய்த்துலர்த்தியவஸ்திரம், அநுஷ்டானம், பூசைமுதலிய ஸத்கர்மங்களொழிந்து அவர்கள்கெடுவதை அறியாதாரில்லை. இவர்களுக்கும் ஓருவாயா? இவர்களா சிவாலயபூசை, சிஷ்யபரிக்ரஹம் இவைகளையன்றி வேறு அஸத்வழியில் ஜீவிக்கத்தெரியாத ஆதிசைவர்களை நிந்திக்கத்தக்கவர்கள்? ஸ்மார்த்தர்கள் ஆதிசைவர்களை நிந்திப்பது கம்மாளன் பார்ப்பானை நிந்திப்பதுபோலாம். ஸ்மார்த்தர் யாவரையும் அஸத்துக்களாகக் கூறலாமா? அநேகர் அவர்களில் சிஷ்டராகக் காணப்படுதலினெனின், ஏகதேசநியாயம் எநதச்சாதியிலுமுண்டாகையால் விப்பிரர்களுடைய ஆதிக்கம் வீணாகமுடிநதது. குப்பைவண்டிமேஸ்திரியும், தோல்ஷாப்பு சாஸ்திரியும், சோமயாஜிஸ்வாமியும் கொள்ளல்-கொடுத்தல்களால் ஸம்பந்தஞ் செய்வதுண்டாகையாலும் பூர்வபட்சிகள் கூறும் ஏற்றம் நிலைக்காது. சிவத்விஜர்களை ஸாமானியதுவிஜர்கள் தூஷிப்பது அவர்களுக்குத் தக்ஷயாகம் கௌதமர் ஆசிரமம் இத்யாதிஸ்தலங்களில் நேரிட்டசாபத்தின் பிரயோசனமேயன்றி வேறில்லை. பூர்வயுகங்களில் ஆதிசைவர்பால விபரீதபுத்தி பண்ணியபேர் கிடையார்கள். சிவத்விஜர் - ஸாமாந்யத்விஜர் என்றும் நாமவிசேஷ ஸாமாந்யங்களையாவது யோசிக்கலாகாதா? சிவத்விஜரைக் குறைவுகூறுந் தோஷந்தானன்றோ ஸ்மார்த்தர்களுக்குக் கம்மாளர்கள் பங்காளிகளாகத் தோன்றியது? இத்தகைய அஸங்கதங்கள் பலவுளவாதலைச் சிந்தித்து நமது பூர்வபட்சிகள் சிவபிராஹ்மணரை ஆசரித்துய்வாராக.

சிவாலயங்களில் சிவபிராஹ்மணர்கள் பூஜாதிகாரிகளாயிருக்க, மந்திரபுஷ்பத்துக்கும அவர்களே அதிகாரிகளாகாமல் வைதிகர் அதிகாரிகளாயினவாறென்னே? ஆகமப்படியே செய்யும் அவ்வாலயபூசையில் வேதமந்திரம்படிப்பது யாதுக்கு? இதனால், ஆகமத்தைக்காட்டிலும் வேதம் ஆதிக்யமுடையதும், அவ்வேதத்துக்கு வைதிகர்களே அதிகாரிகளாவதும் பெறப்பட்டு வைதிகரை நோக்கச் சிவபிராஹ்மணர்க்கு ஆதிக்யம் குறைவுபடுகிறதெனின், இதுசுத்தமூடர்கூற்றும். எங்ஙனமெனின், ஆகமவேதங்களி னுயர்வுதாழ்வுகளை விசாரிப்பது பிரகிருதோப யுக்தமாகாது. "வயந்து வேத சிவாகமயோர்ப் பேதம் ந பச்யாமః வேதோபி சிவாகமః" என்று ஸ்ரீபாஷ்யகாரர் சித்தாந்தப்படுத்தியதே எமதுகொள்கை. ஆயினும் பூர்வபட்சிகள் ஸந்தோஷிக்கும்படி ஒருஸமாதானஞ் சொல்லுகிறோம. ஆகமத்தின்படிசெய்யும் ஆலயபூசையில் அவ்வாகமமேயன்றோ வேதமந்திரத்தை யபேக்ஷித்துக் கூறியது? வேதத்தை ஆகமம அபேக்ஷித்தமையால் ஆகமத்தினும் வேதந்தானன்றோ ஆதிக்கம அதிகரித்து விளங்குகின்றது? எனப் பொங்கிவழங்கும் பூசுரர்கள் பின்கேள்விகளுக்குப் பதில்சொல்லட்டும். வேதமந்திரத்தை யபேக்ஷித்த சிவாகமம் அஃதொன்றினையே அபேக்ஷியாமல் (டமாமேள நாகசுரங்களையும்) அபேக்ஷித்தவாறென்னே? இவைகளேயன்றித் தாசிகளுடைய பாடலாடல்களையும் அபேக்ஷித்தவாறென்னே? அபேக்ஷித்தது, தாழ்ந்ததும், அபேக்ஷிக்கப்பட்டது உயர்ந்ததும் என்று கொண்டாடும் ஸித்தாந்தம் இனி உசிதமோ? அநுசிதமோ? என்பதைப் பூர்வபட்சிகள் சிந்தித்து வேதத்தைப் பூஷித்தும், சிவாகமங்களைத தூஷித்துங்கெடாது சுகிப்பாராக. சிவாகமம் வேதத்தைத் தழுவுகிறபடியே வேதம் சிவாகமத்தைத் தழுவாமையும் சிவாகமத்துக்கு ஒரு குறைவென்று நம்ம பூர்வபட்சிகள் கொண்டிருக்கின்றார்கள். எங்ஙனமெனின், வேதம் ஆகமத்தினும உயர்ந்தது. ஆகமம் வேதத்தினுந் தாழ்ந்தது. ஆகையால் தாழ்ந்ததாகிய ஆகமம் தனக்கு மேலிட்ட வேதத்தைத் தழுவியது எனவும், உயர்ந்ததாகிய வேதம் தனக்குக் கீழிட்ட ஆகமத்தைத் தழுவினதில்லையெனவும் நியாயங்கூறுவதே யாம். இதற்கும் பதில்சொல்லுகிறோம். உயர்ந்ததாகிய வேதம் தாழ்ந்தகருத்தால் சிவாகமத்தைத் தழுவினதின்றெனின், உயர்ந்ததாகிய அவ்வேதம் ஸ்மிருதிகளையும் புராணங்களையும் எந்தக்கருத்தால் தழுவியதரிதரித்தன? தன்னோடு ஸமானமாயினவை யெனவா? தனக்கு அதி

சமாயினவையெனவா ? இரண்டில் எதுசொன்னாலும் வேதத்துக்கு நேத்திரபங்கம் வருகிறது. இதனை யோசிக்கிறபோது தனக்குத் தாழ்ந்தவைகளென்னுங் கருத்தால் அவைகளுக்கு அநுக்ரஹங்கூறிய படியறிக. கீழிட்டவைகளுக்கு மேலிட்டவை அநுக்ரகிப்பது மரபென்பதனையும் அறிக. இப்படியே ஆகமவேதங்களின் யோக்யதையை விசாரித்தறிக. வேதம் சிவாகமத்துக்கு அநுக்ரகிக்கும் அதிகாரத்தைப்பெறாமையால், வேதத்தில் சிவாகம பிரஸ்தாப மில்லாமற் போச்சுது. சிவாகமம் வேதத்துக்கு அநுக்ரகிக்கும் அதிகாரத்தைப்பெற்றமையால் சிவாகமத்தில் வேதத்தின் பிரஸ்தாபம் உசிதமாயிற்று. இவைகளை யோசிக்கிறபோது வேதம் சிவாகமத்தினுந் தாழ்ந்தது எனவும், அதனால் வைதிகரைநோக்க ஆகமிகாள் தாழ்ந்தவர்களெனவும் நம்மவர் கூறுவது யுக்தமோ, அயுக்தமோ விவேகிகள் யோசியாமற்போகார். ஆசாரியாபிஷேகத்துக் குரியவர்கள் சிவாசாரியர்களேயாகையால் அவர்கள்வேதம்-சிவாகமம்-புராணம்ஸ்மிருதி-இதிகாசமுதலிய ஸர்வபிரமாணங்களையுந் தாமாசரித்தும், ஏனையரை ஆசரிக்கச்செய்தும் பிரவர்த்திக்கின்றவராயினர். ஆகையால், அவர்களே வைதிகரும், ஆகமிகரும், பௌராணிகரும், ஸ்மார்த்தரும், இதிஹாஸப் பிரவர்த்தகருமாவர். வேதம் ஸாமாந்ய விப்பிரர்க்கே உரித்து என்பது ஸர்வாபத்தம். வேதத்துக்கு அபார்த்தம் பண்ணித்திரிதலாகிய ஸம்பந்தத்தால் வைதிகர் என்னும்பட்டம் அவர்க்கும், அதற்கு ஸத்யார்த்தத்தை ஆகமத்துணையாற் கண்டறிந்துகூறும் ஸம்பந்தத்தால் வைதிகர் என்னும்பட்டம் சிவபிராஹ்மணர்க்குஞ்சிறக்கும். ஸ்ரீமத்வேதமூர்த்திகளாகிய உமாபதிசிவம் "ஆதிமறையோதியதன்பயனொன்றும்மறியா, வேதியர்சொல் மெய்யென்று மேவாதே" என்று கட்டளையிட்டிருக்கின்றதுமறிக. இதனால் வேதமந்திரம் போலிவைதிகர்க்கே சிறப்பு என்று பூர்வபட்சிகள் கூறுவது சிறக்காது. ஆயின், மந்திரபுஷ்பத்துக்கு ஸாமானியவிப்பிரரை ஆலயத்தில் நேமித்ததென்னையெனின், அவர்களே யிருக்கவேண்டுமென்னு நியமமில்லை. ஆதிசைவரும் அநேக இடங்களி லிருக்கின்றார்கள். இதுநிற்க, ஆதிசைவர் மந்திரஞ்சொல்லாமல் வாயைமூடிக்கொண்டா பூசைசெய்கின்றனர் ? மந்திரங்களை அவர்கள் உச்சரித்துக்கொண்டேயன்றோ பூசையைச்செய்கின்றனர் ! ஆகமத்தில் வேதம் அடக்கமாகியும் வேறாகியுமிருக்கின்ற பெற்றியினாலேயே ஆதிசைவர் ஆகமத்துடன் வேதமந்திரத்தைச் சேர்த்துச்சொல்வதும்; விப்பிர

கோடிகள் அதனைத் தனித்துச்சொல்வதுமாகும். சிவத்தில் சத்தி யடங்கி ஒன்றாகியும், வேறாகித்தனித்தும் விளங்குமறுபவமே சண்டே திதரிசனம். இவற்றை யுய்த்துணராமல் கூறுமன்னோர் சற்சூத்திரர்கள் அவ்வாலயங்களில் தாங்கள் கீர்வாணமந்திரத்தை யோதுவது போலத் திராவிடமந்திரத்தை யுச்சரித்தலைப் பார்த்தேனும் நாணுவாராக. சற்சூத்திரர்கள் சிவதீக்ஷாவான்களா யிருப்பதுபோல் விப்பிர கோடிகளுஞ் சிவதீக்ஷாவான்களாயிருப்பது ஆகமத்தினெண்ணமாகையால், அவ்வாகமம் இருதிறத்தவரையும் ஆதிசைவரது சிஷ்யர்களாகவொப்பி அவர்களுக்கும் அவ்வாதிசைவரோடு திருக்கோயில்களில் பணிகளை விதித்தன. மந்திரபுஷ்பத்துக்குரிய பிராஹ்மணர் தீக்ஷைபெறுவதின்றெனின், பெருமையால் அது ஒரு கௌரவமாகமாட்டாது. ஒரு ஜடாவல்லபருடைய புத்திரன் நான் நித்தியவைந்திசெய்கிறேனா? செய்யாமையால் நான் குறைந்துவிட்டேனா? அப்படி நான்குறைந்ததுண்டானால் என்பிதா என்னோடிருந்து புஜிப்பாரா? என்று தன் செய்கையைவியந்து மகிழுஞ்சிறப்பையே அதற்கு நாம் ஒப்பிடவேண்டியது. ஏதோ அபிமானத்தினால் தள்ளிக்கொண்டுபோகுங் காரியத்தைத் தம்முடைய ஆதிக்யமாக நம்மவர் தேடுவது பரிபவத்தையேதரும்.

இதுநிற்க, ஆகமிகாள் வேதத்தைத் தழுவவேண்டியதெனவும், தழுவாவிடின் அவர்க்குப் பெருமையில்லையெனவும், வைதிகர்களாகிய தாங்கள் ஆகமத்தைத் தழுவவேண்டிய தில்லையெனவும், அதனால் தங்களுக்குச் சிவதீக்ஷையாதிகள் அவசியமில்லையெனவும், அப்படியவர்க ளாசரியாததுகொண்டு அவர்களுக்கொரு குறைவு முண்டாகாதெனவும் பூர்வபட்சிகள் புகலுகின்றனர். இதற்கும் பதில் கூறுகின்றோம். ஆகமிகாள் வேதத்தைத் தழுவவேண்டியது என்று பூர்வபட்சிகள்சொல்ல என்ன அதிகாரமுண்டு? வேதம் சிவனுடைய வாக்கு. சிவாகமமும் அவருடையவாக்கு. இரண்டுக்கும் அவர் வக்தாவாயினமையால், அச்சிவபெருமானை ஸம்பந்தித்தவர்களே அவ்விரண்டுக்கும் பாத்யதை, அல்லது சொந்தம் பாராட்டத் தக்கவர்கள். சைவரல்லாதவர்கள் சிவனுடைய வாக்காகிய வேதத்தில் ஸொந்தம் பாராட்டுவது கூடாது. "வேதைச்ச ஸர்வை ரஹமேவ வேத்யோ வேதாந்த க்ருத்வேத விதேவசாஹம்" எனவும், "ஈசானஸ் ஸர்வவித்யாநாம்" எனவும், "யோப்ரஹ்மணம் விததாதி பூர்வம், யோர்வை வேதாம்ச்ச ப்ரஹிணோதி தஸ்மை" எனவும்

பெறப்பட்ட சுருதிகளை யூன்றிப் பாராமல் வேதம் பிரஹ்மத்தினு டைய சுவாசம், வேதம் சுயம்பு என்று சமயத்துக்குத் தக்கவா று பேசிக் காலங்கழிப்பது இனிச்செல்லாது. பிரஹ்மத்தின் சு வாசம் என்றபோது பிரஹ்மம் வைதிகர் சித்தாந்தப்படி நாமரூபம ற்ற தொன்றாகையால், அது சுவாசம் விடுதற்கு அதற்கு நாசியேயி ல்லை. நாசியுள்ள பிரஹ்மம் சைவசித்தாந்திகளுடைய சிவமேயாகை யால், வேதம் பிரஹ்மத்தின் சுவாசம் என்றபோதிலும், அதுவுஞ் சைவர்க்கே யுரித்தாகுமன்றிப் பூர்வபட்சிகளுக்கு உரித்தாகமாட் டாது. சுயம்புவாயுள்ளது வேதம என்றால், அது காரியமாகாமல் காரணமாகும். காரணமானால் என்னகாரணம்? சிவனுடைய டம ருகத்தில் அக்ஷரங்கள் பிறந்தனவெனவும், எழுத்துக்களின் சேர்க் கை வேதம் எனவும், வேதம் ஒலிவடிவமெனவும், ஒலியானது ஜ டமெனவும், ஜடம் யுக்தாயுக்தங்களை அறியவாவது, சொல்லவாவ து, செய்யவாவது யோக்யதையற்றதெனவும் பெறப்படு முண்மை களுக்குக் கதியென்னை? இதனால், ஸர்வஜ்ஞராகிய சிவனால் காரிய ப்பட்டு வெளிப்பட்டதோர் முக்கியப் பொருளென அதனையறிவதே சத்துக்கள் துணிவு. இவ்வுண்மையால் சுயம்புவாகிய சிவன் செய் தநூலாகிய வேதத்துக்கு ஆக்கியோன்பெயர் வந்தமையறிக. இந்த விசாரத்தால் வேதம் சைவர்களுக்கே ஆகமத்தைப்போலச் சொந்த ஸொத்தாகத் தீர்மானிக்கப்பட்டது. அன்றியும், சைவம் என்னும் ஓர்மகாபுருஷனுக்கு வேதசிவாகமங்களிரண்டும் இரண்டுகண்களா கவும் நிச்சயிக்கப்பட்டன. இதனையறியாமல் வேதமாகிய ஒருகண் ணே எங்களுக்குப்போதும், ஆகமமாகிய மற்றொருகண்ணை நாங்க ளடையாமையால், எங்களுக்குத் தாழ்வில்லையென்று நம்மவர் கூறு வது விந்தையேயன்றி வேறில்லை. ஆகமம் கண்ணைப்போல்வதன்று எனக்கொண்டு அதனைத் தாழ்வுகூறின், அவ்வாகம நிர்மிதமாகிய சிவாலயங்களில் நம்மவர்களுக்கு வேலையென்னை? வேதவேதாந்தங் களையெல்லாந் தங்கள் களஞ்சியமெனக் கொண்டிருப்பவர்கள் அவ ற்றிற் றாழ்ந்திருக்குஞ் சிவாகமவிதித்தமான திருக்கோயில்களை எப்ப டிமதித்து வழிபடலாம்? அத்தகைய ஆலயங்களை வேதங்களும், புராணங்களுந் துதித்திருப்பதென்னை? அவ்வாலய பூஜகர்கள்கை யில் விபூதிவாங்கிக்கொண்டு அவர்கள்ஸந்நிதியில் தங்கள்கௌரவத் தைப் போக்கிக்கொள்வதும் என்னை? சிவாலயங்களுக்கு ஏன் போ காமலிருக்கக்கூடாது? சிவாலயங்களுக்குப்போய், ஆகமவிதித்தமா

ன அக்கோயில்களை வழிபட்டுக் கதிபெறமுயலும் நம்மவர்கள் தாங்களை ஆசரித்துவரும் காரியத்தை யோசியாமலும், அதற்கு ஒரு ஸமாதானந் தேடிக்கொள்ளாமலுங் காலங்கழித்துக்கொண்டே யாம் சிவதீக்ஷையை விரும்போம், அதனை விரும்பாமையால் பிரத்யவாயமில்லை என்று வீண்பிரஸங்கஞ்செய்வது வெறிகொண்டவர் செயலாகமுடிந்தது. "ஆகமம்வேண்டாத பாவிகள்கோயிலிற், போகவொட்டோமினியுந்தீபற, புகலவாம்விதி யெடுத்துந்தீபற" என்னுஞ் சித்தாந்தவுந்தியாரையும் பார்த்திடுக. யாம் சிவாலயங்களுக்கேயன்றி விஷ்ணுவாலயங்களுக்கும் போய், அவ்வாலய பூஜகர்களிடத்துந் தீர்த்தபிரஸாத ஸ்வீகாரஞ் செய்கின்றோம் அதனால் அப்பூஜகர்கள் எம்மினுயர்ந்திடினன்றோ அப்படியே சிவாலயபூஜகர்களும் எம்மினுயர்ந்திடுவாரென்று பூர்வபட்சிகள் கூறின், விஷ்ணுவாலய பூஜகர்கள் நமது பூர்வபட்சிகளைத் தங்களுக்கு அதிகமாகவும், அவர்களுக்குத் தாங்கள் குறைவாகவும் எண்ணியிருந்தாலன்றி நம்மவரது ஸமாதானம் குணஞ்செய்யாது. அவர்கள் சூத்திர ரொப்பந்தமாகவே நம்மவரையெண்ணி யொதுக்கி யிருத்தலால் இவர்கள் அவர்களிற் குறைந்தவர்களென்பதே நிச்சயமாயிற்று இவர்களுடைய வாக்குமூல விசாரணையால் யாம் இந்தத் தீர்ப்புச்செய்ததேயன்றி வேறில்லை. சைவர்களுக்குத் தாழ்ந்திருக்கச் சகியாததோஷமே பாஞ்சராத்திரிகளுக்கும் இவர்கள் தாழ்ந்த நிலையை வியக்தமாக்கியது. பாஞ்சராத்திரிகளுக்கு இவர்கள் தாழ்ந்தவர்கட்டாமோ வெனின், இவர்கள் அவர்களுக்குத் தாழ்ந்தால் எமக்கென்னை? அல்லது உயர்ந்தால் எமக்கென்னை? இரண்டு விதங்களில் எப்படி யாவதினும் எமக்குத் துக்கமில்லை. எம் கடமையையாம் சாதிப்பதே எமது கடமையாகையால், பூர்வபட்சிகள் செய்துவரும் ஜாலவித்தைகளைக்கண்டு யாம் பிரமியோம்.

சிவாகமங்களிலும் பாஞ்சராத்திரத்திலும் வேதாவிரோத பாகங்களை யாம் தழுவுவோமாகையால், அவ்விரண்டுவித ஆகமஸித்தமான கோயில்களை ஆசரித்தோமெனின், பைபில் குரான் என்பவைகளிலும் வேதாவிரோத பாகங்களிருக்கத் தடையில்லையாகையால் அவைகளை ஆதாரமாகக்கொண்ட கோயில்களிலும் நம்மவர் வழிபடாததென்னை? ஸ்மிருதிகளில் பாஞ்சராத்திரத்தின்படிச் சூடுண்டவர்களைத் தொட்டுக்கொண்டால், கட்டியவஸ்திரத்துடன் ஸ்நான

ஞ்செய்து சுத்தமாகவேண்டியது என்று கூறியிருப்பது பிரஸித்தம். இவர்களுடைய ஆராதனைதானோ வேதாவிரோதமா யுள்ளது? ஸ்மிருதி விருத்தமாகிற பாஞ்சராத்திரம் வேதாவிரோத மாகிறபோது லைபில்முதலியவை ஏன் வேதவிரோதமாகும்? விரோதமில்லையென்றுகொண்டே அம்மதத்தைக் கௌரவப்படுத்துதற்கு ஒயின்-பிராண்டி முதலியனவும், காப், கோட், டிரௌஸர்ஸ், பூட்ஸ்முதலியனவுங்கொண்டு ஸந்தியாவந்தனம் -விபூதிதாரணம், ஆலயசேவைமுதலியவைகளை நமது வைதிகபுமான்கள் விட்டிருக்கின்றார்கள்போலும். இப்படிப்பட்ட கேடுகளும், இவைகளுக்குக் காரணமாகிய நீச்சமிலேச்சருறவும் ஆதிசைவருக் கில்லாமலிருக்கும் பரிசுத்தத்தை இனியேனும் பூர்வபட்சிகள் சிந்தித்து நாணுவாராக. சிவனைத்தொட்டுப் பூசித்தலையன்றி வேறு ஈனத்தொழில்களைச் செய்யவும், ஈனத்தொழில்களால் சீவிக்கவும் இடஞ்செய்யாமல் அவர்மாட்டுக் கருணைசுரந்திருக்கும் பரனதுபேரருளை வியந்து துதியாதார்யாவர்? இப்படிப் பலபடியாலும் நிரூபிக்கத்தக்க பெரும்புகழினையுடைய சிவபிராஹ்மணர்களைப் பூர்வபட்சிகள் தூஷிப்பது அழுக்காறும், அறியாமையுமாக முடிந்தது. இன்னும் விரிக்கிற் பெருகும்.

ஆதிசைவர் மஹிமை இவ்வாறிருத்தலை அவ்வாதிசைவருமறியாமல் மயங்குகின்றனர். எங்ஙனமெனின், அவர்கள் பிராஹ்மணாதி ஸர்வமானபேரையும் ஒருகண்ணாகப் பார்க்கவேண்டும். ஜாதியுயர்வுதாழ்வுகளை அவர்கள் கவனிப்பது கூடாது. யாவராயிருப்பினுந் தீக்ஷாஸம்ஸ்கார மில்லாதபோது அவர்களையே தாழ்ந்தவராகவும் யாவராயிருப்பினுந் தீக்ஷாஸம்ஸ்கார முள்ளபோது அவர்களையே உயர்ந்தவராகவும் எண்ணவேண்டியது. சிவன் அனாதிசைவரென்று கூறப்பட்டபடியே தாம் ஆதிசைவர் என்று கூறப்பட்டு, சிவன் தம்மைத் தீக்ஷித்து வெளிப்படுத்தியவாறே தாம் பிராஹ்மணாதி சாதுர்வர்ணத்தாரையுந் தீக்ஷித்து உபகரித்தலாகிய ஆதிக்யத்தைவகித்தும், அவ்வாதிசைவமூர்த்திகள் தம்பெருமையறியாத தன்மையராகி மாழ்கின்றனர். சிவன் எப்படி உயர்வுதாழ்வுகளைநாடாமல் யாவரிடத்தும் ஸமதிருஷ்டியால் யாவருடைய பூசைகளையுமங்கீகரித்து அருள்புரிவாரோ. அப்படியே நமது சிவாசாரியர்களும் பாராட்டுதல் அவசியம். சிவனுக்குப் பிராஹ்மணன்-சூத்திரன் என்று பேதமில்லாததுபோல் நமது ஆசாரியர்களுக்கும் பேதங்கூடாது. சிவனுக்கு எப்படி அன்புபிரதானமோ, அப்படியே

சிவாசாரியர்களுக்கும் அன்பு பிரதானமாகவேண்டும். சிவாசாரியர்களோவெனின், அங்ஙனமின்றித் தமிழ்ப்பாடம் படித்து வருகின்றார்கள். எங்ஙனமெனின், அவர்களில் சிலபேர் பிராஹ்மணர்களைத் தங்களுக்குத் தாழ்ந்தவர்களாகவும், சிலபேர் தங்களுக்குச் சமானர்களாகவும், சிலபேர் தங்களுக்கு உயர்ந்தவர்களாகவும் எண்ணி ஆசாரத்திற் கொண்டுவந்திருக்கின்றார்கள். இந்தமூன்றில் முந்தியது மாத்திரமே முதன்மைபெறும். ஏனையவிரண்டும் இழிவெய்தியழியும். இனிச் சிவாசாரியர்கள் வேதசிவாகமங்களிரண்டையுந் தழுவத்தக்கவரான விடத்தும், அவர்க்கு வேதம்பொதுவும், சிவாகமம் சிறப்பும் ஆகும். சிறப்பைநோக்கப் பொதுவானது பூர்வபட்சமுமாம். இவ்வாறுகுகையில் வேதவிகிதமாகிய ஜாதியை அவர்கள் தழுவியும், கழித்தும் பிரவர்த்திக்கவேண்டும. அங்ஙனஞ்செய்தலின்றி வேதத்தையே சிறப்பாகக்கொண்டும், ஆகமத்தை வீட்டுவழக்கமாகக் கொண்டும், ஜாதியேற்றத்தை அதிகமாகக்கொண்டும் பிரவர்த்திக்கின்றனர். வேதத்தைச் சிறப்பாகக் கொள்ளாதபோது தங்களைப் பிராஹ்மணர்களாக ஏனைய பிராஹ்மணர்கள் மதியார்களென்றே அவர்கள் மருண்டு விவகரிக்கின்றார்கள். அங்ஙனம் விவகரித்தும் ஏனையபிராஹ்மணர்கள் அவர்களைக் கூடவைத்துண்ணுகிறார்களா? இல்லை. தங்கள் பாத்திரங்களைப் பரிசிக்கவாவது செய்கிறார்களா? இல்லை. அவர்கள் தொட்டபாத்திரமே தோஷமாகிறபோது அவர்களுடைய அந்நபாநீயங்களைம்மட்டில் பூர்வபட்சிகளா லங்கீகரிக்கப் படுமென்பதை யாம் சொல்லவேண்டியதில்லை. சிவாலயங்களில் குருக்கள் திருஷ்டியும், பரிசமு முண்டாகிறதென்னுங் கருததுப்பற்றியேயன்றோ ஸ்வாமிக்கு நிவேதித்த அந்நாதிகளையும் பூர்வபட்சிகள் வர்ஜித்திருக்கின்றனர்? இவ்வளவு கொடுமையாக எதிரிகள் நடத்திவருவதறிந்தும் நம்மவர்கள் தமது பெருமையை யிழப்பது பெருந்துக்கத்தையே விளைக்கின்றது. எதிரிகளுக்கிருக்குங் கண்டிப்பு நம்மவர்களுக்கு இல்லாதது பெருங்குறைவு. நம்மவர்களுக்கு எதிரிகள் தயவை அபேக்ஷிக்கவேண்டிய அவசியமில்லாதபடி ஸ்வாமி ஸ்வகுமாரமான வழிகாட்டியிருக்க, அதைக்கவனியாமல், அபரிசுத்தமாகிய பராநநத்தை யுண்ணத்துணிவது கொடுமை! கொடுமை!! அவர்களோடு தாங்களும் பிராஹ்மணர்களென்று உறவாடப்போய்க் குறைவடைவதும் வெறுப்பைத் தருகின்றது. ஆதிசைவர் பிராஹ்மணர்வீட்டில் புசிப்பதும், தீக்ஷையில்லாத சூத்திரர் வீட்டில் பு

சிப்பதும் ஒன்றேயாகும். ஆசாரியன் தீக்ஷித்தபிறகு தீக்ஷையடைந்த மாணாக்கனை யுடன்வைத்துக்கொண் டுண்ணும்படிச் சிவாகமம் விதித்தலால், சிவாசிரியர்கள் ஜாதி வியவஸ்தை வைக்கலாமோ வைக்கக்கூடாதோ வென்பது யாவருக்கும் விளங்கும். பிராஹ்மணன் - சூத்திரன் என்னும் ஜாதி வியவஸ்தையை நாடாமல் பிராஹ்மணனாயிருந்தாலும், சூத்திரனாயிருந்தாலும் தீக்ஷாஸம்ஸ்காரமெய்திய சைவமாணாக்கர்களையே அநுஸரித்தும், அவர்கள்பாலுண்டும், அவர்களுண்ணும்படிச் செய்தும் அன்பை முக்கியமாகநாடி நம்மவர்கள் நடந்துகொள்ளவேண்டியது. சூத்திரனென்று யாம்சொன்னது சிவதீக்ஷையும், மெய்யன்பும் நிறைந்து விளங்கும் மெய்கண்டசிவம் போல்வாரை. இருதிறத்தவர்களுக்குந் தன்மை யொத்தபோதன்றி யாம் ஈண்டுணர்த்தியது ஸாமஞ்சஸமாகாது. யாம் இந்த நூலிற்றொடங்கிய தொடக்கமுதல் யாவும் முற்றப்பார்த்துத் தெளிந்தவர்க்கன்றி முரணற்று வாய்மையுந்தோன்றாது. யாம்கூறிய நியாயங்களை அநுஸரிப்பதே நம்மவர்க்குப் பெருமையும், ஸர்வஸம்பிரதிபந்நமு மாகும்.

ஆதிசைவர்களாகிய குருக்கண்மாரே இவ்வளவு தெளிவெய்தியிருந்தால், இவர்கள்பால் தீக்ஷிக்கப்பெற்ற மாணாக்கர்கள் எவ்வளவுயோக்யதை யெய்தியிருக்கப் போகிறார்கள்? இவர்களுடைய ஆசாரியர்களைப்போலவே நிஷ்காபட்ய முடையவர்களாய் இவர்களும பிரவர்த்திக்கின்றார்கள். எங்ஙனமெனின், (படிக்கிறது திருவாசகம் இடிக்கிறது சிவன்கோயில்) என்றபடித் தீக்ஷைபெறுவது குருக்கண்மாராகிய சிவாசாரியரிடத்தும், வழிபாடுபுரிவது விப்பிரராகிய அநாசாரிய ரிடத்துமாக முடிந்திருக்கின்றது. சங்கராசாரியருக்குக் குருக்கள் விபூதிமடல் காட்டாவிட்டால் பெருந்துக்கம். சிவபெருமானுக்கு வதபோஜந மஹோத்ஸவம் நடத்தினால் குருக்கண்மாருக்குப் பிண்டம் பெருங்காயம். ஏனையோர்க்கு விலாப்புடைக்கத் திவ்யபோஜநம். சிவனுக்கு நிவேதித்த அந்நத்தை விப்பிரர்க ளுண்ணார்கள். அவர்களுக்கூட்டு மந்நம் சிவார்ப்பிதமாகாத அசுத்தாந்நம். இப்படி விப்பிரர்களுக்குச் சோறுபோடுவதிலும், கஞ்சித்தொட்டியில் ஏழைகளுக்குக் கஞ்சிவார்ப்பதிலும் ஒரு பேதமுமில்லை. சிவார்ப்பிதமாகாத வந்நபாநீய கிரஹணம் அமேத்யஸ்வீகாரம் என்று வேதங்கூறுகின்றது. இப்படிப்பட்ட அரிய தர்மத்தையேயன்றோ சைவமாணாக்கர்கள் புரிந்துவருகின்றனர்? சபாஷ நன்று

நன்று !! இன்னும் இந்தச் சைவமாணாக்கர்கள் அந்தஸ்திரம் ஸதாவர்த்தி-பலவிததானங்கள் இவைகளை அவ்வசைவ பிராஹ்மணருக்கே செய்துவருவதும் பாவம் ! பாவம் !! இப்படியிவர்கள் கெடுவதற்குச் சைவாசாரியர்கள் மாணாக்கர்களுக்கு நல்லறிவுச்சுடர் கொளுத்தாமையும், ஏனையர்கள மேல்விழுந்து உறவுகொண்டாடித் துர்ப்போதனை செய்வதுமே காரணமாகமுடிந்தது. சிவனிடத்தும், சிவவேதியரிடத்தும், சிவனடியாரிடத்தும் அன்பில்லாதபோது அவர்கள் சிவபக்தர்களும், பிராஹ்மணர்களுமாகாராகையால், அத்திறத்து விப்பிரர்க்குத் திலமளவுஞ் சைவர்கள் உபகரிப்பது கூடாது. அங்ஙனமுபகரிப்பின், அவரடைவது நிரயத்துன்பமன்றி வேறில்லை. சைவராயுள்ளவர்கள் சிவஸம்பந்திகளுக்கன்றி வேறாயுள்ளவர்களுக்கு ஒருவிததானமுஞ் செய்யக்கூடாதென்பதே வேதத்தின் றுணிபு. இன்னும் விரிக்கிற்பெருகும்.

பிராஹ்மணர்கள் இவ்வாறொதுக்கப்படுதலை நமது சிவத்விஜரறிந்தும், அவருட்சிலர் தங்கள் பெருமையையும், அவர்கள் சிறுமையையுஞ் சீர்தூக்காமல் அவர்களிடத்தில் தாட்சணியபுத்தியே வைத்திருக்கின்றார்கள். அவர்களிடத்தில் கௌரவபுத்தி வைத்திருப்பதுபோல், ஏனையசைவர்பால் அகௌரவபுத்தி வைத்திருக்கின்றார்கள். இது ஸர்வாஸங்கதம். ஏனையசைவர்கள் ஆதிசைவர்பால் பக்தி பாராட்டுகின்றவர்கள். விப்பிரரீகோடிகளைச் சிவநேசமில்வழி மதியாதவர்கள். இவர்களுக்கு ஆதிசைவர் தங்களை யவமதிப்பதும், விரோதிகளாகிய விப்பிரர்களைக் கௌரவிப்பதுந் தெரிந்தால், இவர்களும் ஆதிசைவர்பால் விரோதங்கொள்ளத் தடையில்லை. பிராஹ்மணர்களாலும், ஏனையர்களாலும் விரோதிக்கப்பட்ட பின்னர் ஆதிசைவர்கதி என்னுமென்பதை அவர்களே யோசிக்கவேண்டியது. இப்படி யாவர் கெடுவதற்கும் அறியாமையும், அன்பின்மையுமே காரண மாகின்றமையால், ஆதிசைவரா யிருப்பினும், மஹாசைவரா யிருப்பினும், வேறு எந்தச் சைவராயிருப்பினும் அன்புடைமையையே முக்கியபூஷணமாகக் கொள்ளவேண்டியது. அங்ஙனங் கொள்ளாதபோதே ஜாதி யிழிவு அவர்களை வாதிக்கின்றது. அதனால், அவர்களும் இழிந்தவராகின்றனர். உத்தமர்கள்பால் இவ்வஸங்கதங்க ளொன்றுங் கேட்கப் படாமையால், திருநீலகண்ட யாழ்ப்பாணரிடம் ஸ்ரீ ஜ்ஞாநஸம்பந்தாதிகள் பாராட்டிய அன்புடைமையும், அருளுடைமையும் ஸாமஞ்சஸமாயின. இவ்வு

ண்மை தெளிந்தபின்னரும் விவேகிகள் மயங்குவார்களென்று யோசிக்க இடமில்லை. குணமேயுண்டாம். இவ்வருணலம் யாவர்க்குங் கைகூடுமாறு திருவருளைச் சிந்தித்துப் பின் விஷயங்களைப் பரிஷ்கரிபபாம்

ஆளுடையபிள்ளையார் ஸ்ரீ சிதம்பர முதலிய தலங்களுக்குச் சென்றாரெனவும், அங்குத் தீக்ஷிதர் மூவாயிரவர்களைச் சிவகணங்களாகக் கண்டாரெனவும், திருவறத்துறையில், சொப்பனத்திற்கண்டவாறு முத்துச்சிவிகையை அந்தணர்கள் திருக்கோயிலினின்றுமெடுத்துக்கொண்டுபோய் அவருக்குக் கொடுத்தார்களெனவும், அதனை யவ்வருளாளரேற்று மகிழ்ந்தாரெனவும் பெறப்பட்ட வுண்மைகளை முறையே விசாரிக்கையில் ஆன்மாக்களுக்கு நற்பெருமிதமே யுண்டாகின்றது. எங்ஙனமெனின், "வையந்தோறுந் தெய்வந்தொழு" என்பதனை ஆன்மாக்களுக் குணர்த்தியுய்விக்கவே எமது சிறியபெருந்தகையார் தலயாத்திரை கொண்டனர். தலங்கடோறுந் திருக்கோயில்க ளிருக்கவேண்டிய அவசியத்தையும் அது வெளியாக்கியது. திருக்கோயி லில்லாதபோது "திருக்கோயிலில்லாத திருவிலூருந் - திருவெண்ணீறணியாத திருவிலூரும்" எனப்பிரஸ்தாபித்து "அவையெல்லாமூரல்லவடவிகாடே" என்று திரவிடஸூக்தியில் நிஷேதித்தவாய்மையே வந்துசேரும். இவ்வுண்மையை "திக்பஸ்மரஹிதம் பாலம் திக்ராம மசிவாலயம்" என்னும் உபநிஷத்து வாயிலாகவும் அறியலாம். திருக்கோயிலில்லாதவூர் திருவிலூராகிறபடியே திருக்கோயிலை வணங்காதோருந் திருவிலாதவ ராகின்றனர். திருவுடையமேலோர் "செம்மலர்நோன்றாள்சேரலொட்டா, வம்மலங்கழீஇயன்பரொடுமரீஇ, மாலறநேயமலிந்தவர்வேடமு, மாலயந்தானுமரனெனத்தொழுமே" என்னுஞ் சிவஞானபோதத்தி னுண்மையைச் சேர்ந்தின்புறுவர். ஞானிகள் திருக்கோயிலை வழிபடவேண்டு மென்பதனையும் அந்த யாத்திராவைபவம் பிரகாசப்படுத்தியது. அன்றியும், அத்திருக்கோயில்கள் சிதம்பர முதலியனவாகக் காண்டலின், அவற்றின் பெருமையும் வியக்தம். சிவம் எங்கும் நிறைந்திருப்பினும், திருக்கோயில்களில் அதிகமாகச் சிறந்தும், திருக்கோயில்க ளெங்குஞ் சிறக்கினும் சிதம்பரமுதலிய தலங்களில் அதிகமாகவிளங்கியும் அடியார்களுக் கருளுமென்பதும் வெளிப்படை. அன்பர் திருவேடமாகிய சங்கமவழிபாடு சிறந்திடல் போல ஆலயமாகிய இது தாவரவழிபாடாகச் சிறக்கும். இவ்விருவித வழிபாட்டையுமன்றி வேறு பூசைனவழிபடுவது நற்குமார்க்கமின்றெ

ன்பதுமறிக. தாவரசங்கமங்களென்றிரண்டுருவினின்றும், மாபரன்பூசை
கொண்டுமண்ணுயிர்க்கருளைவைப்பன்" என்பது ஒத்து. இவ்வழிபாடு சு
த்த வைதிகமென்பது "அர்ச்சாதீப" வாயிலாக அறிக.

இனித் தில்லைமூவாயிரவரை எமது குருநாதர் சிவகணங்க
ளாகக் கண்டாரென்றது அவர் மானிடத்தன்மையெய்தாதவரென்
பதை அறிவித்தது. மேலிடத்தில் ஆதிசைவர் தன்மை பிரஸங்கித்
ததே இவர்களுக்குமாகும். இவர்கள் ஏனைய விப்பிரவர்க்கத்திற்
சேராதவர்கள். தில்லையெல்லையினின்றி வேறு எல்லையி லின்னோர்
ஸம்பந்தங் கிடையாது. சிவனுக்கும் இவர்க்கும் பேதமின்று. இவ
ர்களைவழிபடுதலும், ஆதிசைவரை வழிபடுதலும், சிவனை வழிபடு
தலும் ஒன்று. ஆதிசைவர் தங்கள் பெருமையை யறியாது மயங்
குதல்போல, இவர்களுந் தங்கள் பெருமையை யறியாமல் தியங்கு
கின்றார்கள். சைவராயுள்ளவர்கள் இவ்விருதிறத்துச் சைவவேதி
யர்களுக்கே எல்லாச்சிருஞ் சிறப்புஞ் செய்யவேண்டியது. இவர்க
ளிடத்தில் ஓரபராதமுஞ் செய்யக்கூடாது. இவர்களிடங் குற்ற
மிருக்கக்காணினும், அதனைக் குணமாகப்பாராட்டி யொதுங்கிவிட
வேண்டியது. தன்னுடைய கணவனிடத்து மனைவியும், பிதாவி
னிடத்துப் புத்திரனும், எஜமானிடத்தி லடிமையுங் குற்றங்காணு
மிடத்து, அவைகளெவ்வாறுகின்றன? அவைகளை அதிகாரிகள்
யோசித்துக் குணப்படவேண்டியது. அவ்வாறின்றி மீறுதல் நிரயத்
துன்பத்துக்கே இடஞ்செய்யும். இன்னோர் பெருமை விளங்கி நிலை
பெறவே இவர்களை நமதுபிள்ளையார் வழிபட்டனர். இன்னும் விரிக்
கிற் பெருகும்.

மேல், முத்துச்சிவிகையில் ஆரோகணித்துக்கொண்டனர் எம்
பெருமானென்றது, இனி உலகத்தவர் அவரைத் திருக்கோயில்க
ளிலாராதிக்கவருங்கால், அவ்வாறு எழுந்தருளச்செய்து மகிழவே
ண்டிய நலத்தையே அறிவித்தது. சிவனுக்கு இடபமும், தேவி
க்கு யாளியும், மூத்த பிள்ளையாருக்கு மூஷிகமும், இளைய பிள்ளை
யாருக்கு மயூரமும் முக்கிய வாகனங்களாயிடுதல்போல நமது பர
மாசாரியருக்கு முத்துச்சிவிகை முக்கியமாகச் சிறந்தது. முத்துக்
குடை, முத்துப்பந்தர், முத்துச்சின்னங்களும் அவருக்குரிய விசே
டங்களாம். முத்துச்சிவிகையைச் சிவனார் தமது குமாரரென்னும்
பரிவுதோன்ற அவருக்கு அளித்தனர் அவ்வாறளிக்கையில், அந்

தணர்களுக்கும் அடியார்களுக்குங் கனவிற்றோன்றித் தாம் தமது திருக்குமாரருக்குச் சிவிகையளிக்கும் பெற்றியைக்கூறி, அவர்களதனை யெடுத்துக்கொண்டுபோய்க் கொடுக்கக் கட்டளையிட்டது, பின்னும் அடியார்க ளவ்வித திருத்தொண்டுகளா லுய்ந்திட வழிகாட்டிய படியாம் பிள்ளையாருக்குச் சிவபெருமான் கனவிற்றோன்றி, அந்தணர்கடாங்கிவருஞ் சிவிகையை யேற்றிடுகவென்றது, அந்தணர்க ணேரேகொடுப்பி னதனைப் பிள்ளையார் தாமதனுக் கருகமன்றென வொதுங்குவா ரென்பதறிந்து. சிவனுணர்த்துதலால் அருளைமேற் கொண்டிருந்த நிலைமை வெளியாயிற்று. இதனால், சிவனடியார்கள் ஆத்மபோகார்த்தமாக வொன்றினையுந் தாமேவிரும்பாமையும், வலிந்தொருவர் கொடுப்பினு மேற்காமையும், திருவருணடத்து நிலையினின்று யாவுந்துகர்கின்றமையு மாகியவுண்மையும் வியக்தமாயிற்று. அடியார்களுக்கும், பிள்ளையாருக்குஞ் சிவபெருமான் கனவிற்றோன்றியுரைத்தும், அது அவ்வாறே முடிந்தும் அநுபவங் கைகூடியது பிரஸித்தம. அங்ஙனமேல், யாவர்மாட்டுங் கனவின்கண்ணிகழும் யாவும் பயன்படல்வேண்டும. அங்ஙனமின்று. அதனால் கனவுமெய்யாத விழுக்கும. அதுபொய்யாகவே, முத்துச்சிவிகை மாநமியம் இழுக்கும் எனின், அதனைமறுத்து உண்மையை விளக்குவாம். "கனவின்பயனும நனவின்பயனும், வினையின்பயனவை பொய்யெனவேண்டா" என்றவுரையால் கனவினுடைய பிரயோசனமும் நனவினுடைய பிரயோசனமும் வினையினுடைய பிரயோசனமாகத் துணியப்பட்டன. வினைஸத்தியமாகையால், அதன் போகவேறுபாட்டில் ஒன்றுமெய்யும், மற்றொன்று பொய்யுமாதல் யாங்ஙனம? ஜாக்ரஸ்வப்நஸுஷுப்திகள் அவஸ்தாத்திரயங்களெனச் சீவனுக்கு அமைந்த பின்னரவற்றுள், பொய்மெய் விவகாரங்கள் கூறுதல் அஸங்கதம். யாவும் மெய்யேயாம். எங்ஙனமெனின், ஜாக்ரஸுஷுப்திகளைப்பற்றி ஆக்ஷேபமில்லை யாகையால், ஸ்வப்நத்தையே யீண்டுவிசாரித்துப பரிஷ்கரித்திடுவாம்.

ஸ்வப்நமானது மூன்றுவிதமாக விளங்கும். அவை இறந்தகாலத்தது, நிகழ்காலத்தது, எதிர்காலத்தது என்பனவாம. இறந்தகாலத்தது என்பது சொப்பனத்துக்குப பூர்வம தன்னுடைய ஜாக்கிரகாலங்களிற் கண்ட பொருள்களையும், அவற்றி னநுபவங்களையும் அந்தச் சொப்பனத்திற் காண்பது. நிகழ்காலத்தது என்பது இறந்தகால வெதிர்காலங்களை யபேட்சியாமல், சொப்பனமென்னும

தவொருகாலத்திற்றானே தனக்கு விஷயமாகும் பொருளையும், அதனநுபவத்தையுங் கண்டுகூறுதல். எதிர்காலத்தது என்பது தூங்கிவிழித்தபிற்பாடு ஜாக்கிரத்தில் தான் அநுபவிக்கப்போகிற பொருளையும், அதனநுபவத்தையும் முன்னதாக வறிந்துகொள்ளுதல். இவற்றுள் இறந்தகால ஸ்வப்நத்தை வாஸனாஸ்வப்நமெனவும், நிகழ்காலஸ்வப்நத்தை அநுபூதிஸ்வப்நமென்வும், எதிர்காலஸ்வப்நத்தை அதிர்ஷ்டஸ்வப்நமெனவும் அறியவேண்டியது. முன்கண்டபொருள்களைப் பின் வாசனையாற் காண்பது பொய்யாகாது. பின்னர்க்கண்டநுபவிக்கப்போகிற பொருள்களைச் சிவாநுக்ரஹத்தால் முன்னர்க்கண்டு மகிழ்வதும பொய்யாகாது. இடைக்காலத்திற் காணும்பொருளிறந்தகால வெதிர்காலங்களிலன்றி யவ்விடைக்காலத்தி லழியாது நிலைத்தலால், அதுவும்பொய்யாகாது. மூன்றுசொப்பனங்களும் மெய்யாக முடிந்தமையால், கனவுபொய்யென்று கூறுதல் கண்மூடிஞானமாகமுடிந்தது. இவ்வாறு வியவஸ்தையுண்டாக விசாரியாமல் இடைக்காலத்து அநுபவத்தை எதிர்காலத்துவிரும்புவது அஸங்கதம். எதிர்காலத்தில் அநுபவமாகாமையால் அதனைப் பொய்யென்னில், எதிர்காலத்தது இறநதகால நிகழ்காலங்களிலும், இறந்தகாலத்தது நிகழ்கால வெதிர்காலங்களிலும் அநுபவமாகாமையால், அவையும் பொய்யாகும். ஒருவன் தனது ஜாக்கிரகாலத்திற்றானே ஆயிரம் பொன்கொண்ட வோர்கிழியை வைத்தவிடந்தெரியாமல் தேடி, அது கிடைக்காமலே வருந்துகிறான். முன் வைத்தது பின்கிடைக்காமையால், அதனைப் பொய்யென்று கூறுதல் யாங்ஙனம்? முதலிற் பொற்கிழி கிடைத்து, அது கிடைத்ததென்னும் ஸந்தோஷத்தை யவனுக்கூட்டிப் போகத்தை நுகர்வித்தலும், உடனே அது ஒழிந்ததென்னுந்துக்கத்தை யவனுக்கூட்டிப் போகத்தை நுகர்வித்தலும் அவனுடைய வினையின்சேட்டையாக முடிந்தமையால், இரண்டும் ஸமஞ்சஸமாயின. இப்படியே இடைக்காலத்து ஸ்வப்நத்தையுங் கொள்ளவேண்டியது. எங்ஙனமெனின், ஒருவன் தனதுஸ்வப்நத்தில் ஆயிரம்பொன்கொண்ட வோர்பொற்கிழியைக் கண்டெடுத்தான். அதனைக் கொண்டுபோய்ப் பெட்டியில்வைத்துப் பத்திரபடுத்தினான். அதுவரையில் அவனுக்கு அதிகஸந்தோஷந்தான். அவ்வளவே அவனுக்கு நுகர்விக்கத்தக்க ஸந்தோஷபோகம். அவன் விடிந்தெழுந்து தனது பெட்டியில் பார்த்தால், அது இல்லை. யாதுகாரணம் எனின், தான் முன்வைத்ததைப் பின்னு மநுபவிக்கத்தக்க வினைப்

போகக்கூடாமையால். இதனால் முன்கிடைத்ததும், அப்போது ஸந்தோஷித்ததும் பொய்யாகாது. பின்கிடைக்காதபோது ஸந்தோஷங்கெட்டதாகிய துக்காநுபவங் கைகூடினமையால், இதனையே அந்த வினையானது ஊட்டி நிலைபெறச்செய்தது. மூன்றவஸ்தைகளிலும், அவற்றின் வேறுபாடுகளிலும் எதிரிட்டபொருள்களைக் காண்பதும், அவற்றையநுபவித்துச் சுகதுக்கங்களி லுழன்றலைவதும் ஆத்மாவேயாகையால், அதனுடைய சுகதுக்கங்களாகிய வினைப்போகம் யாவும் ஸத்தியமென்பது காட்டப்பட்டது. இப்படிப் பகுத்தறிந்திடாமல் ஸ்வப்னம் பொய்யென்பார்மதம் சோர்ந்துவிட்டது. இனி முன்சொல்லிய விஷயங்களை இனிது விளக்கிக்காட்டுவோம். ஜாக்கிரத்தில் அநுபவமாயிருந்த பொருள்கள் ஸ்வப்நத்தில் முன்வாசனையாலுண்டாகி நுகர்தல் அநுபவம். தன்னுடையவீடு- பிள்ளை-சொத்து இவைகளைக் காண்பதுதான் அது. இதுதான் இறந்தகாலஸ்வப்நம். தனக்கு நாளைக்கு ஓர்புதையல் ஓர்குப்பைமேட்டில் கிடைக்கப்போகிறது. அந்தப்படிக்கு ஒருவன் சொப்பனங்காண்கிறான். விடிந்துபோய்ப் பார்த்தால், அது அப்படியே கிடைக்கின்றது. அன்றியும் ஓர்கந்நிகையை ஓர்பிரபு தனக்குப் பலாத்காரமாகக் கொண்டுவந்துகொடுத்துக் கலியாணஞ்செய்ததாக ஒருவன் சொப்பனங்காண்கிறான். அந்தப்படியே விடிந்து, அல்லதுசிலதினத்தில் அது கைகூடுகின்றது. இப்படிப்பட்ட பலவநுபவங்கள் பலரிடத்திலும் விசாரித்தால் விளங்கும். பிரத்யக்ஷதமாகிய இதுதான் எதிர்காலஸ்வப்நம் நிகழ்காலஸ்வப்நத்தை மேலேவிளக்கிக்காட்டினோம். இந்த விசாரத்தால் அந்தணர்களுக்கும், பிள்ளையாருக்கும் பரமன்கனவிற்றோன்றி முத்துச்சிவிகையைத் தாங்கிக்கொண்டுபோய்க் கொடுக்கவும், அதனையேற்று அதன்மேலாரோகணித்துக்கொண்டு அடியார்களுக்குத் தரிசனந்தந் துய்விக்கவுங் கட்டளையிட்டருளிய சொப்பனம் ஸத்தியமெனவும், அது எதிர்காலஸ்வப்நமெனவும் ஸித்தாந்தஞ்செய்யப்பட்டது. இன்னும் விரிக்கிற் பெருகும்.

## பிள்ளையார் பிரபாவம்.

### கககக-வது பக்கதொடர்ச்சி.

அங்கிருந்தபடியே திருநெல்வெண்ணெய்முதலிய தலங்களுக்குப்போய்த் தரிசித்து மீண்டுந் திருவரத்துறைக்குவந்து வசித்துப்

பின்பு திருப்பழூர் முதலியவற்றைக் கடந்துகொண்டு சண்டேசுர நாயனாரது க்ஷேத்திரமாகிய திருச்சேய்ஞலூரை யடைந்து அங்கே நின்றுஞ் சீகாழிக்கு எழுந்தருளி, அங்கு உபநயனஞ் செய்துகொண்டார். அப்போது பிராஹ்மணர்கள் பிள்ளையாருக்கு மந்திரோபதேசஞ் செய்யத்தொடங்கினார்கள். அவர்கள் உபதேசஞ்செய்வதன் முன்னர் வேதங்களையும், பலகலைகளையுந் தாமேயெடுத்தோதி, ஐயந்திரிபற யாவும் அவர்கள் தெளியும்படி யுணர்த்தி மந்திரநாயகமாகிய ஸ்ரீபஞ்சாட்சரத்தின் மகிமை இனிது விளங்கும்பொருட்டு ஸ்ரீபஞ்சாட்சரப்பதிகத்தைப் பாடியருளினார். இவ்வாறு உலகமுய்ய வருள் புரிந்து அப்பதியிலேதானே சிலநாள் வசித்துக்கொண்டிருந்தார். அப்போது திருநாவுக்கரசுசுவாமிகள் அங்குவந்து அவரைத்தரிசித்தனர். அவருக்கு விருந்தூட்டி யுபசரித்து அவரோடளவளாவி மகிழ்ந்தனர் பின்னர், திருநாவுக்கரசுசுவாமிகள் விடைபெற்றுக்கொண்டுசெல்ல, திருஞானஸம்பந்தசுவாமிகள் அங்கேநின்றும் பிதாமுதலியவர்கள் சூழப்புறப்பட்டுத் திருக்கண்ணார்கோயில் முதலிய தலங்களுக்குப்போய்ச் சுவாமிதரிசனஞ்செய்து திருப்பதிகம்பாடினார். பின்பு திருப்பாச்சிலாச்சிராமம் என்னும்பதிக்கு எழுந்தருளி அங்குக் கொல்லிமழவன் என்னும் அரசனுடைய மகளுக்குக்கண்டிருந்த முயலகன், அல்லது குமாரகண்டவலி என்னுநோயைத் திருப்பதிகமோதித் தீர்த்தருளினார். அங்கேநின்றுந் திருப்பைஞ்ஞீலி முதலிய தலங்களுக்குப்போய்த் திருச்செங்கோடு எனவழங்குங் கொடிமாடச்செங்குன்றூரை யடைந்து அங்கு எழுந்தருளியிருந்தனர். அப்போது பனிக்காலமாகி ஊரெங்குஞ் சுரம்வியாபித்து வருத்திக்கொண்டிருந்தது. அது சுவாமிகளது அடியவர் திருக்கூட்டத்துள்ளும வந்து மெல்லநுழைந்தது. அஃதறிந்த இளநம்பூரணறலார் (திருநீலகண்டப்பதிகம்) பாடி அந்தச்சுரம் ஊரைவிட்டே போய்விடும்படிச் செய்தருளினர். அங்கிருந்து திருப்பாண்டிககொடுமுடி முதலிய தலங்களைத் தரிசித்துக்கொண்டு திருப்பராய்த்துறை முதலியவற்றைக்கடந்து திருப்பட்டீச்சரத்துக் கெழுந்தருளினார். அப்போது வெய்யில்வெப்பம் அவருக்குண்டாகாதிருக்கச் சிவாஜ்ஞையால் சிவபூதம முத்துப்பந்தரைத் தாங்கிவந்து மேலேபிடித்தது. அங்கு ஸ்வாமிதரிசனஞ்செய்துகொண்டு திருவாறைவடதளி முதலிய தலங்களைத் தரிசித்துக்கொண்டு திருவாவடுதுறை என்னும் பதியில் வந்துசேர்ந்தார். அங்குத்தமது பிதாவாகிய சிவபாதஹ்ருதயர் வேண்டுகோளின்மேல்

அவர் யாகஞ்செய்வதற்குச் சிவபெருமானைப்பாடி ஓர்சிவபூதம் சிவாஜ்ஞையால் ஓர்பொற்கிழிகொண்டுவந்து பீடத்தின்மேல்வைக்க வாங்கி அவருக்குக் கொடுத்தருளினர். அங்கிருந்து திருக்கோழம்பமுதலிய பதிகளைத் தரிசித்துக்கொண்டு திருநீலகண்டயாழ்ப்பாணரது தாயார்பிறந்த க்ஷேத்திரமாகிய திருத்தருமபுரம் என்னும்பதிக்கு எழுந்தருளினர். அங்குள்ள யாழ்ப்பாணரது சுற்றத்தார்கள் யாழ்ப்பாணரைப்பார்த்து "அடாகுழந்தாய்! நீ உன்னுடைய யாழிலே அமைத்துப் பண்ணமையப் பாடுவதனாலன்றோ ஞானஸம்பந்தரது பதிகங்கள் இசைபெற்று விளங்குகின்றன?" என்று கூறினர்கள். அதனைக்கேட்டு அஞ்சி ஞானமணியை வணங்கி, அடியேனுடைய யாழில் இசையடங்காமலதிகரிக்கத்தக்க மேலோர்திருப்பதிகங் கட்டளையிட்டு, இவர்களகந்தையையடக்கி அடியேனது அபராதத்தைப் போக்கிவிடவேண்டுமென்று பாணர்பெருமான் விண்ணப்பஞ்செய்துகொண்டனர். அப்படியே (யாழ்மூரிப்பதிகம்) பாடியருளினர். அத்திருப்பதிகவிசை யாழிலடங்காமற் போயிற்று. அப்போது யாழ்ப்பாணர் பயந்து இந்தயாழ் கையிலிருந்தமையாலன்றோ ஸ்வாமியினது பதிகத்தை யாழிலமைத்துப் பாடலாமென்று அடியேன் எழுந்தேன்? இதனை முரித்துவிடுவதே சரியென்று அந்தயாழைக் கையிலேதாங்கி ஓங்கி நிலத்திலடிக்கப்போனர். அப்போது பிள்ளையார் அவரைத்தடுத்து, அந்தயாழைத் தமது திருக்கரத்தில்வாங்கி, அருள்வடிவமாகிய பதிகவிசை நமது யாழிலடங்குமோ? என்றுகூறி, இயன்றமட்டும் இதிலமைத்துவாசியும் என்று அந்தயாழை அவர்கையிற்கொடுத்துக் கட்டளையிட்டனர். அந்தக் கட்டளையையும், யாழையும் பாணர்பெருமான் சிரமேற்கொண்டு அருளாற்பாடினர். அங்கேநின்றுந் திருநள்ளாறு முதலிய பதிகளைத் தரிசித்துக்கொண்டு திருச்சாத்தமங்கை என்னும் க்ஷேத்திரத்தை யடைந்தருளினர். அங்குத் திருநீலநக்கவடிகள் எதிர்கொண்டழைக்கச்சென்று அவர் திருமனையில் திருநீலகண்டயாழ்ப்பாணர்முதலிய நண்பர்களோடு திருவமுதுகொண்டருளி மகிழ்ந்து மற்றநாள் அயவந்தி என்னுந் திருக்கோயிலிற்சென்று ஸ்வாமிதரிசனஞ்செய்து திருப்பதிகம்பாடி, அதில திருநீலநக்கநாயனரைச் சிறப்பித்தருளினர். அப்பாற்போந்து திருநாகைக்காரோணமுதலிய க்ஷேத்திரங்களைத் தரிசித்துக்கொண்டு திருச்செங்காட்டங்குடிக்கு எழுந்தருளினர். அங்குச் சிறுத்தொண்டதேவர் எதிர்கொண்டழைக்கச்சென்று கணபதீச்சரம் என்னுந்தி

ருக்கோயிலில் ஸ்வாமியைவணங்கித் திருப்பதிகம்பாடி, அதில் அந்நாயனாரைச் சிறப்பித்தருளினார். பின்பு அவர் திருமலைக்கெழுந்தருளி, அங்கு அடியார்களோடு திருவமுதுகொண்டருளி யாவருக்கும் அருள்புரிந்து அங்கேநின்றுந் திருமருகல் என்னுந் தலத்துக்கெழுந்தருளினார்.

அவ்விடத்தில் சிவதரிசனஞ் செய்துகொண்டிருக்கையில் ஓ பெண்ணினுடைய அழுதுலோசை கேட்டது. அது சிவநாமங்களைக்கூறி ஸ்வாமியை நொந்துகொள்வதாகவு மிருந்தது. பரமசிவனுடைய திருநாமங்களை ஸ்மரிக்கின்றவர்களுக்குந் துன்பமுண்டாகலாமா? என்று மனம்பதைத்து அந்தப்பெண்ணழுகும் அழுதுகொண்டிருக்கின்றவிடத்தில் அடியார்களோடுவந்து சேர்ந்தனர். அப்போது அந்தப்பெண்கொடியெழுந்து அழுகைதவிர்ந்து அவருடைய திருப்பாதங்களில் வணங்கித் தன்னுடைய குறையைத் தவிர்த்தருளும்படி வேண்டினாள். அவ்வருளாளர் உன்னுடையகுறை யாது என்று கேட்டனர் அதற்கு அவள் சொல்லுகின்றாள். ஹேஸ்வாமிந்! வைப்பூர் என்னும்பதியில் தாமன் என்னுஞ்செட்டி யொருவனுளன் அவனுக்கு ஏழுபெண்கள். அவர்களில் நான் ஏழாவதுபெண். இதோ பிணமாகி யுருண்டுகிடக்கிற இவர் அவருடைய மருமகன். என்னுடையபிதா தன்னுடைய மூத்தபெண்ணை இவருக்குக்கொடுத்துக் கலியாணஞ்செய்வதாக வாக்குக்கொடுத்திருந்தான். அங்ஙனஞ்செய்யாது அவளை யோர்செல்வனுடைய மகனுக்குக் கொடுத்துவிட்டான். அப்போது இவர் தடுத்துக்கேட்டார். இரண்டாவது பெண்ணைக்காட்டி இவளை உனக்குக் கொடுக்கிறேனென்றுசொன்னான். அங்ஙனஞ் செய்யாது அவளையும் முற்படியே செய்தான். அப்போதும் இவர் தடுத்தார். மூன்றாவது பெண்ணைக்காட்டித் திருப்திசெய்வித்தான். இந்தப்பிரகாரமே மற்றப்பெண்களையும் வெளியில் தொலைத்துவிட்டான். ஏழாவது பெண்ணாகிய என்னையு மப்படிச்செய்வதற்கு எட்டாவதொரு பெண்ணில்லாமையால் இவர் என்னை அதிகமாக நம்பியிருந்தார். நானும் இவரை அதிகமாக நம்பியிருந்தேன். முடிவில் என்னையும் அப்படிச்செய்யப்பார்த்தான். அதற்குநான் இசையாது சத்தியத்திற்குக் கட்டுண்டு இவரையன்றி வேறு ஒருவரையும் மணம்புரியேன் என்று என்பிதாவுடன் உறுதிமொழி கூறினேன். அவன் அதிககோபங்கொண்டு என்சொல்வழிநில்லாத நீ வீட்டைவிட்டுப் போதியென்று என்னை அடித்துத்துரத்தினான். நான்

இவரை யழைத்துக்கொண்டு அயலூருக்குச்சென்று பலரறிய இவரை மணம்புணர்ந்து வாழலாமென்று சத்தியந் தலைமேற்கொண்டு புறப்பட்டுவந்து இராத்திரி இங்குவந்து சேர்ந்தேன். வந்தவிடத்தில் இவர் பாம்பின்விடத்தா லிறந்தார். என்வரலாறு இதுவென்று முறையிட்டு ஸ்ரீபாதத்தில் வீழ்ந்திறைஞ்சினள். அதனைக்கேட்டுக் கருணாஸிந்துவாகிய குருநாதர் ஓர்திருப்பதிகங் கட்டளையிட்டு அவன் உயிர்த்தெழும்படித் திருவுள்ளமிசைந்தனர். அப்படியே அவனெழுந்து அவருடைய ஸ்ரீபாதங்களில் வீழ்ந்திறைஞ்சினன். தேவர்கள் பூமாரிபொழிந்தார்கள். யாவர்களு மதிசயித்து வாழ்த்தித்துதித்தார்கள். அப்போது அந்தவணிகனையும் அந்தக்கன்னிகையையுந் திருமணம் புணரும்படிச்செய்து அவர்களுக்கு விடைகொடுத்து எம்பெருமான் அங்கிருந்து மெழுந்தருளிச் சிறுத்தொண்டதேவரை ஸந்தித்துத் திருப்புகலூருக்குச் சென்றருளினர். அங்கே முருகநாயனார் வந்து வணங்கினர். அவரது திருமடத்திலிறங்கி அவரா லுபசரிக்கப்பெற்று மகிழ்ந்து சுவாமிதரிசனஞ்செய்து திருப்பதிகம்பாடி, அதில் அவர்மகிமையைச் சிறப்பித்தருளினர். அப்போது திருநாவுக்கரசுகளும் அங்குவந்து சேர்ந்தனர். பிள்ளையார் அவரையெதிர்கொண்டு, அவர் திருவாரூர்மகிமையை வியந்துசொல்ல மகிழ்ந்து அப்படியே அவரிடம் விடைபெற்றுக்கொண்டு திருவாரூருக்குச்சென்று புற்றிடங்கொண்டாரை வணங்கித்துதித்து அங்கேநின்றுந் திரும்பி மீண்டுந் திருப்புகலூரை யடைந்தார். முன்னரெழுந்தருளிய திருநாவுக்கரசு சுவாமிகளும், திருஞானஸம்பந்த மூர்த்திகளும், முருகநாயனாரும் ஒன்றாகூடி மகிழ்ந்திருக்கையில், திருநீலநக்கநாயனாரும், சிறுத்தொண்டநாயனாரும் அங்குவந்து சேர்ந்தார்கள். எம்பெருமக்களைவரும் திருநீலகண்ட யாழ்ப்பாணரோடு சிலநாளங்கிருந்து பின்னர் இச்சையின்வழி யொழுகினார்கள். பின்பு திருநாவுக்கரசுகளும், பிள்ளையாரும் புறப்பட்டுப் பல தலங்களைத் தரிசித்துக்கொண்டு திருவம்பர் என்னும் பதிக்குச்சென்றார்கள். அங்குப்பிள்ளையார்

கோச்செங்கட்சோழநாயனார் செய்தருளிய திருக்கோயிலை வணங்கிப் பதிகம்பாடி, அதில் அப்பெருந்திருவாளரைச் சிறப்பித்தருளினர். அங்கே நின்றும் புறப்பட்டுக் குங்கிலியக்கலயநாயனார் எதிர்கொள்ள, அவரோடுஞ்சென்று திருக்கடவூர் மயானத்தைவணங்கித் துதித்துத் திருப்பதிகம்பாடி மகிழ்ந்து, கலயர்பெருமான் திருமனையி லவரழைக்க வெழுந்தருளித் திருவமுதுகொண்டருளினர். அ

ங்குச் சிலபோது வசித்துப் பின்னர்த் திருவாக்கூரையடைந்து, அங்கேநின்றுந் திருவீழிமிழலைக்குப்போய்ப் பரமசிவனைப்பாடிப் படிக்காசுபெற்று, பஞ்சத்தா லுணவருகியிருந்த குறைவை அடியார்களுக்கொழித்து, அதினின்றுந் திருவாஞ்சியம், திருத்தலையாலங்காடு முதலிய தலங்களைத் தரிசித்துக்கொண்டு வேதாரண்யத்தை யடைந்து அவ்விடத்தில் வேதங்கண்மூடிப்போன கதவை அப்பர்சுவாமிகளால் திறப்பித்து, அதனைமீண்டுந் தாமே மூடும்படிப் பதிகமோதி, அன்றுமுதல் அதை மூடவுந்திறக்கவுஞ் செய்தருளினர். அங்கேநின்றும், வாய்மூருக்குச்சென்று சிவபெருமான் பார்வதியாரோடு ஆடல்காட்டத் தரிசித்து, அதனை அரசுகளுக்குங்காட்டி மீண்டும் வேதாரண்யம்வந்து சேர்ந்து அங்கு வாழ்ந்தருளியிருந்தனர்.

## ௫௰.

ஆளுடையபிள்ளையார் திருச்சேய்ஞலூருக்குச் சென்றபோது அது சண்டேசரது அவதாரக்ஷேத்திரமா யிருந்தமையால், அங்குச் சிவிகையினின்று மிறங்கிநடந்தனர். சண்டேசர் என்பது சண்டேசபதம் என்னுமாதிக்கம் வகித்தடைந்தபெயர். இவருக்குப் பூர்வநாமம் விசாரசர்மர் என்பது. இவர் சிவனைமதித்த செருக்கால், சிவத்ரோகஞ்செய்த பிதாவைத் தண்டித்தனர். அதனால், இவருக்குச் சிவபெருமான் தாமே பிதாவென்னு முரிமையைத் தந்தருளினர். அதனால், சிவனுக்கு இவர் ஸ்வீகாரபுத்திரராயினர். இது பற்றியே சிவனுடைய மக்களாகிய மூத்தபிள்ளையார், இளையபிள்ளையாரிவர்களோடு சேய்ஞலூர்ப்பிள்ளையார் என்னு முபசாரநாமம் வகித்திருக்கின்றனர். இவர்சேர்ந்தே சிவாலயங்களில பஞ்சமூர்த்தி பிரஸங்கமுண்டாயிருக்கின்றது. இத்தகைய பெரியோரது மகிமை விளங்கவே உடையபிள்ளையா ரங்ஙனஞ்செய்தருளினர். மற்றுத்தகைய வுயர்ந்தோராயினுஞ் சிவன்மாட்டன்புடையார் சிறியரானவிடத்தும் அவரை வணங்குதலவசியமென்பது மதனானிலைபேறாயிற்று ஏனையிடங்களில், நங்காழித்தலைவர் பணியும் பணிவுகள்யாவையு மிப்படியே கொள்ளவேண்டியது. மேல், பிள்ளையாருக்கு யஜ்ஞோபவீததாரணைக் கேட்கப்பட்டது. இது வேதமார்க்கத்தைப் பிரதிஷ்டாபநஞ்செய்தபடியாம். உபநயனமாகிய விதன்மாந்மியம் சைவசூளாமணி, சூரேசவிஜயபங்க மிவைகளில் செவ்வனே விளக்கப்பட்டிருக்கின்றது.

அந்தணர்கள் அவருக்கு மந்திரோபதேசஞ் செய்யப்புகும்பொழுது எண்ணிறந்த வேதங்களையும், கலைகளையுமெடுத்தோதி, அவர்களுடைய ஐயந்திரிவுகளை யறமாற்றினாராகையால், அந்தணர்களுடைய மகுட சூளாமணியும், அவர்க்குப் பரமாசிரியருமாயினர். அவர்கள் தமக்குச் செய்யப்போந்த வுபதேசத்தைத் தடுத்துத் தாமவருக்குச்செய்து, முடிவில் ஸ்ரீபஞ்சாக்ஷரப்பதிகமோதி அதில் "வேதியர்க்கந்தியுண் மந்திரமஞ்செழுத்துமே" என அவருய்யும்விதத்தை யவர் பெருமைதோன்ற விதந்தமையு மவர்மாட்டிரங்கி யருள்புரிந்தாட்கொள்ளு மாசிரியவுரிமையை வெளிப்படுத்தியது. ஐந்தெழுத்தின்மகிமையை மேல்விரிந்துள்ள பொற்றாள வைபவப்பிரஸங்கத்தில் விசதமாக்கினோம். அநந்தரம உடைய பிள்ளையாரும், உடையவரசுகளுமொருவரையொருவர் ஸந்தித்து மகிழ்ந்தார்களென்பதனை யாம் விதந்துரைக்க வஞ்சுகின்றோம். அவரன்பின்மாட்சி யெம்மிலளவுபடாமையால. மேல், கொல்லிமழவனது திருமகளாருக்கு நிகழ்ந்த குமரகண்டவலியைப் பதிகமபாடித் தொலைவித்தாரென்பது அவரது பேரருட்டிறத்தையும, தெய்வத்தன்மையையும் விபத்தமாக்கியது. இதனைபபெரியோர்கள் அவரது இரக்ஷககிருத்யங்களிலொன்றெனக் கூறுகின்றனர். இஃது ஸ்திதியாகவே ஸ்ருஷ்டியும், ஸம்ஹாரமும் முறையே எலும்பைப் பெண்ணுருவாக்கியதும், புத்தன்றலையையிடறச்செய்ததுமாகிய பலவாக வறிந்துரைப்பர். இவற்றைவிரிக்கிற் பெருகும். இனித் திருச்செங்கோடு என்னும்பதியில் (திருநீலகண்டம்) என்னும் ஆணையிட்டுத் திருப்பதிகவாயிலாக வங்குப்பரவியிருந்த சுரத்தை யூரைவிட்டேகும்படிச் செய்தருளியது அவர் ஸ்வதந்திரரென்பதை யறிவித்தது. வினைக்கீடாக வந்துபற்றும் பீடைகள் வினையொழிந்தாலல்லது ஒழியமாட்டா. "வினைப்போகமேயொரு தேகங்கண்டாய் வினைதானொழிந்தாற்றினைப்போதளவு நில்லாதுகண்டாய்" மென்றார் பெரியோரும். இங்ஙனமாக, "முன்செய்வினைவந்தெம்மைத் தீண்டப்பெறா" என்று உறுதிகூறியது என்னையெனின், வினைகள் ஜடம். அவை தாமேயியங்கா. இயங்கப்பண்ணினாலியங்கும். இயங்கப்பண்ணு முதல்வனையன்றி யவைகட் கியக்கமின்று. அவைவாவென்றால் வரும், போவென்றாற் போகும். இருவென்றாலிருக்கும் ஆகையால், முன்செய்வினைகள் வந்து தீண்டப்பெறாவெனறார். அங்ஙனமேயவை தீண்டிற்றில. தீண்டுகவென்றால் தீண்டும் பதியால் விதிக்கப்பட்டனவெல்லாம் புண்ணியமும், அவரால் விலக்கபபட்டனவெல்லாம் பா

வழுமாம். அவற்றுள் வேறு மாகாமியங்களை ஸத்கிரியை, துஷ்கிரியை யெனப்பிரிந்து இருவினைகளாகும. இவற்றை அப்பரமகருணாசாலி யாவா ரெப்படிச்செய்யினுஞ் செய்யலாம். வினைப்போகங்களை யூட்டியொழிக்காது அவ்வினைமுதல்களை யப்படியே யொழித்தானுமொழிக்கலாம். அரசன் குற்றஞ்செய்த வொருவனைக் கொலைபுரிந்திடத் தீர்மானித்து, அக்கொலை நிகழப்போகும் ஸந்தர்ப்பத்தில் அங்கு அவ்வரசன்போக நேர்ந்துவிடின், முன்விதித்த கொலையைத்தவிர்த்து விடுகிறான். பிரபுவினுடைய ஸந்நிதியில் அது நிகழ்தல் அஸங்கதமெனக்கொண்டு. முன்விதித்தது நீதி. பின்விதித்தது அருள். இத்தகைய தடஸ்தங்க ளுலகிலநுபவம். இதுவே நங்குருநாதரது ஸ்வதந்திரத்தையும், அருண்மாட்சிமையையும் விளக்கும். இவ்வுண்மைகளெல்லாம அவரது பரமபதித்வமாகிய ஈசுவரத்தன்மையையே வியக்தமாக்கின. அன்றியும், அவர்கூறிய திருவாணை (திருநீலகண்டம்) என்றது. அதுவே அதனது வடிவமாயிருத்தலால், "தீண்டுவீராயினெம்மைத் திருநீலகண்டம்' எனத் திருநீலகண்ட நாயனரது புராணத்திலும். "ஸ்ரீமதோநீலகண்டஸ்ய" என உத்தரராமாயணத்திலும் போந்தவுண்மைகளும் (திருநீலகண்டம்) என்னுந் திருமந்திரத்தி னதிக்யத்தை நிலைபெறச்செய்யும். திருநீலகண்டம் என்பதற்கும் தமது திருநாமமந்திரத்திற்கும் பேதமின்மையை நாட்டுதற்கு மறறோரிடத்தில் (வினைகெடுதலாணை நமதே) எனவும பிரகாசம பண்ணியிருக்கின்றனர். இதுநிற்க.

முத்துப்பந்தர்விஷயத்தை முத்துச்சிவிகை முதலியவற்றோடு சேர்த்து முன்னரே முடிவுசெய்தோம். அநந்தரம், யாகஞ்செய்யச் சிவபெருமானிடம் பொன்வாங்கிக்கொடுத்தார் எனபது வேதத்தில் அக்னிமுகமாக வந்தணர் சிவார்ச்சனை செய்யவேண்டுமென்பதை நிலைப்பித்தற் பொருட்டு "தங்கையைத் தீத்தொழின் மூட்டியகோன்" என்பதும் பிரமாணம். பின்னர், திருநீலகண்ட யாழ்ப்பாணர் கையிலிருந்த யாழைவாங்கி, மீண்டும் அவர்கையிற்கொடுத்து வாசியுமென்று கட்டளை யிட்டாரென்றது, உதாத்தாதி ஸ்வரபேதங்கள் தாமேயாய் விளங்கும் பிள்ளையார் வாசித்துக்காட்டித் தெரிவித்தாரென்பதையே அறிவித்தது. "கானத்தினெழுபிறப்பைக் கண்களிப்பக்கண்டார்கள்' என்பதுவே இதனை நிறுத்தும். இதனால், நமதுகுருநாதர் ஸர்வகலாஸ்வரூபரென்பது வெளியாயிற்று. செத்தபிணத்தை யுயிர்ப்பிக்கு மாற்றலுடையார் யாழொலியை யிசைப்படுத்திப் பாடினாரெனல்

அதிசயமன்று. செத்தபிணத்தை யுயிர்ப்பித்தலாவது விஷந்தீண்டி
யிறந்த செட்டிமகனை யுயிர்த்தெழச்செய்ததே. இச்செயல் பேரரு
ளும், பேராற்றலுமுடையார் பிள்ளையாரென்பதைத் தெரிவித்தது.
பின்பு சிறுத்தொண்டதேவரையும், முருகநாயனாரையும், திருநாவு
க்கரசுகளையும் புகலூரிலொரேகாலத்திற்கண்டளவளாவினரென்ப
து அத்தகைய பெருமக்களை யெம்பெருமானை வணங்கத்தக்கவ
ரென்பதை யறிவித்தது. அன்றி, திருநீலநக்கவடிகளு மங்குவந்து
சேர்ந்தனர். திருநீலகண்டயாழ்ப்பாணர் ஸ்வாமியோடுகூடவே யிரு
ந்தனர். இவ்வருந்தவரைவருஞ்சூழ வெண்ணிறந்த வன்பர்சூழ்ந்தெ
ருந்த விற்றிருந்த பெரும்பெருந்தகையின தற்புதக்காட்சியை யா
வரிது சொல்லவல்லவரே? அங்கேநின்று திருவம்பரிற் கோச்செங்க
ட்சோழநாயனார் செய்து முடித்த திருக்கோயிலைவணங்கி அவரைச்
சிறப்பித்தருளினரென்பது அவர் ஸ்வாமிகாலத்திலிராமலவர் திரு
பபணிமாத்திரமக்காலத்திலிருந்த வருமையறிந்து. அன்றியுமவர்
பெருமை யுலகறியத் தெரிவிப்பதிசைந்து. அவர்பெருமை சிலந்தியு
ருவத்திற் சிவாராதனைசெய்து கோச்செங்கணாராக வவதரித்தன் மு
தலியன. சிலந்தியைக்கூறவே யானையையும் வருவித்துக் கூறுதல
மையும். இவற்றின்பெருமை ஜம்புகேசுவர மாஹாத்மியத்திற் பெறப்ப
ட்டவாறறிக. இம்மட்டோ, திருக்கடவூரிற் குங்குலியக்கலயர் எம்
பெருந்தகையைத் தரிசித்தாரென்பது அவர் கடவூர்ப்பெருமானிய
மனையுதைத்து மார்க்கண்டரைக்காத்த காதையைக்கேட்டுக் காதல்
கூர்ந்திருந்த வாசைமுற்றிப்படி யமைந்தது. பிள்ளையாரைச் சிவமா
க வணங்கினரெனினும்; அல்லது பிள்ளையாராகவே வணங்கினரெனி
னும் அமையும். எப்படிவணங்கினும் விரோதமில்லையென்றறிக. மே
ல், திருவீழிமிழலையிற் பிள்ளையார் படிக்காசுபெற்றாரென்பது தம்
மைவேண்டினார்க்கு அதனையுங்கொடுக்க வல்லாரென்பதை யறிவித்
தது. தாமசிவனிடம் அதுபெற்றது தம்பொருட்டன்று, அடியார்
களை ஆதரித்தற்பொருட்டு. அடியார்கள் பசியினால் வருந்தினமை
யால், அதை நிவிர்த்திக்கும் வழிதேடினர். பசிவருத்தமன்றி வேறு
வருத்தத்தாற் காசுவேண்டுவாராயினதனையு மவரவர்க்குத் தக்கபடி
யுபகரிக்கத் தட்டில்லை. வேண்டுவார் வேண்டுவனவற்றைத் தருதலே
யவரது கருணையின் றிறமென்க. சிவபாதஹ்ருதயருக்கு அவர்வே
ண்டியவாறு பொன்வாங்கித்தந்தனர். அடியார்களுக்குத் திருவமு
தளித்துக் காத்தருளினர். அடியார்களுண்டு களித்தவிடம் ஆண்
டார்பந்தியென விப்போதும் பேர்பெற்று விளங்குகின்றது. இவற்

றால் அவரது பரமபதித்வம் நிலைபெறுயிற்று. அற்றேல், அவர் தாமேயாவுஞ் செய்யாமல் சிவனைவேண்டிச் சிவன் கொடுக்கவாங்கி யுபகரித்தலென்னையெனின், அவர் சிவனுரது திருமகனுராதலும், அடியவராதலுமாகிய கோலங்கொண்டதற்கேற்பச் செய்தபடியாம். சிவன் பார்வதியாரைத் திருமணம்புணர்ந்தபோது உலகியனடைபெறுமாறு அம்மிமிதித்தன் முதலிய தருமங்களை யெல்லாமாசரித்துக்காட்டினர். இதனுல், சிவனுரது கடவுட்டன்மை குன்றுது. இப்படிக்கன்றி வேறுவிதத்தில் யோசிப்பது அஸங்கதம். ஆசாரியர் நால்வர் பரமாக வித்தகைய பிரமேயங்கள் வநதவிடங்களிலெல்லா மிதுவேமாபாகக்கொள்ள வேண்டியது. இனி வேதாரணியத்திற் றிருக்கதவினை அப்பர்சுவாமிகள்திறக்க, அதனைப்பிள்ளையார் மீண்டும் மூடியது தமது வைதிகசுதந்தரத்தைக் காட்டியது. எங்ஙனமெனின், ஓர் வீட்டின்கதவை யவ்வீட்டிற்குத்தலைவன் வேண்டியபோது திறந்தும் மூடியும் ஆண்டுவருகிறுன். திறந்திராதபோது வெளியேபோகவும், உள்ளேவரவும் அநுகூலமிராது. நாயும் நரியும், கள்ளருங் கழுதையும் உலாவ விடமாய்விடும். திறந்துவைப்பது க்ஷேமத்திற்கும், மூடிவைப்பது க்ஷீணநிவிர்த்திக்குமென வேறுபட்டமையால், இரண்டும் உபகாரார்த்தமென்பதே ஸித்தம். இதனுல், வீட்டிற்குச் சொந்தக்காரனையன்றித் தன்வீட்டுக்கதவைத் திறக்கவும் மூடவும் வேறியாருக்கும் பாத்யதையுண்டாகாதென்பதே யேற்பட்டது. இதனையிப்படியே யுவமித்துப் பார்க்கிறபோது வேதவனத்துக்கதவை அப்பர் சுவாமிகள் திறந்ததும், பிள்ளையார் மூடியதுமாகிய நலம் வெளியாகும். ஒருவீட்டிற்கு இரண்டு ஸொந்தக்காரருண்டாவதெங்ஙனமெனின், பிதா-பிள்ளை புருடன்-மனைவி யென்பவர்களுடைய ஸம்பந்தங்களை யூகித்தறிக. இப்படியறிகிறபோது வேதநிலையும், அது யாவர் பக்கல் ஸ்வதந்திரப் பொருளாயிருக்கின்றது என்பதும் வியக்தம். வேதங்கள் சிவனைப் பூசித்துப் பந்தித்துப்போனகதவை ஆசாரியர்கள் திறந்ததும், மூடியதுமாகிய நலங்களினேற்றத்தைச் சிவாதித்யரத்நாவளி 2-வது பாகம் (உச) வது பக்கத்திற் செவ்வனே விரித்திருக்கின்றேம். ஆண்டுக் கண்டுகொள்க. நமது பிள்ளையார் பின்பு கதவைமூடினு ரென்பது போலவேயன்றே வேதமானது ஆதியிற்கதவைமூடியது என்னும் விஷயம் நிலைத்தது. வேதம் கதவைமூடியதற்கும், பிள்ளையார் கதவைமூடியதற்கும் பேதத்தைக்கூறுவாம். ஒருவன் தன்வீட்டின்கதவை மூடிக்கொண்டு வெளியில்யாத்திரை போ

யிருந்தானவன் வருகிறவரையிற் கதவமப்படியே மூடப்பட்டிருந்தது. அவன் மீண்டும் வந்தபோது முன்மூடியகதவு திறக்கப்பட்டது. ஒருவன் றன்வீட்டின்கதவை மூடிக்கொண்டு சயனித்து விடிந்து கதவைத்திறந்தான். மறுபடியுமிரவில் மூடிக்கொண்டான். இவ்வாறு நிகழுமநுபவத்தையும், முதற்கட்கூறிய வநுபவத்தையுமே வேதம், ஞானஸம்பந்தர் என்னுமிவ்விடங்களில் ஸமாதிக்கவேண்டியது. ஒருவன் றனதுவீட்டின்கதவை மூடினன் றிறந்தான், மீண்டும் மூடினனென்பதுபோல வேதவனம் வேதத்தான் மூடப்பட்டது, பின்னராசாரியர்களால் திறந்துமூடப்பட்டதுமாகிய காரணங்கள் வெளிப்பாயின. இதனை யிவ்வளவினிறுத்தி மேல் விருத்தாந்தத்தைக்கூறி யினிது முடிவுசெய்வாம்.

## பிள்ளையாரது பிரபாவம்.

(கசரு) வது-பக்கத்தொடர்ச்சி.

பிள்ளையார் வேதாரணியத்தி லெழுந்தருளி யிருக்கும்போது பாண்டிநாட்டிலே சமணிருள்மூடிச் சைவநிலைமாறி அரசன்முதல யாவரும் பாவப்படுகுழியில் வீழ்ந்து தலைதடுமாறி வருந்தினர்கள். அவருள், அரசனது மனைவியாராகிய மங்கையர்க்கரசியாரும், அவனது மந்திரியாராகிய குலச்சிறையாருஞ் சிவநேசமாறாமல் உள்ளன்பு பெருகச் சிவத்தியானபரவசரா யொழுகிவந்தார்கள். அவர்களவ்வாறொழுகிவந்தது அயலறியாதபடியேயன்றி வெளிப்படையாகவன்று. ஏனெனின், சமணசமயத்தில் விபூதி ருத்திராக்ஷங்களைத் தரித்த சிவனடியாரது திருவேடத்தைக்கண்டால் "கண்டுமுட்டு" என்னும் பெருந்தீட்டை யநுஸரிப்பது வழக்கம். அந்தக் கண்டுமுட்டானவன் தான் கண்டுமுட்டு என்று மற்றொருவனிடஞ் சொன்னால், அவன் தான் "கேட்டுமுட்டு" என்று வருந்துவான். இப்படி யொழுகத்தக்கசமத்தை அரசனபிமானித்திருக்கும்போது அரசனது மனைவியாரும், மந்திரியாரும் வெளிப்படையிற் சைவராகத்திரிவது கூடாமையால், தக்கவாறு ஒழுகிவந்தார்கள். அரசனது சமணநிலைக்கஞ்சிக் காலங்கடத்திவந்த இவ்விருவரும் ஞானசம்பந்தர் வேதாரணியத்தி லெழுந்தருளியிருப்பதும், அவரது மகிமையுங் கேள்விப்பட்டு அப்பெருந்திருவாளர் இங்கெழுந்தருளின் நமது துன்பநீங்குமெனத் துணிந்து அவரைப் பாண்டிநாட்டுக் கழைக்கும்படித் தம்மவருட்சிலரை வே

தாரணியத்திற் கனுப்பினார்கள். அவர்கள் சுவாமியைக்கண்டு வணங்கிப் பாண்டிநாட்டில் அமண்மாசு மூடியிருப்பதும், மங்கையர்க்கரசியார் குலச்சிறையா ரிவர்கடன்மையுங்கூறி, அங்கெழுந்தருளி ரக்ஷிக்கவேண்டுமென்று பிரார்த்தித்தார்கள். அதற்கிசைந்து பிள்ளையார் புறப்பட்டனர். அப்போது அவரோடங் கெழுந்தருளியிருந்த அப்பர்சுவாமிகள் பிள்ளையாரைப்பார்த்து ஸ்வாமிந்! தேவரீர் சிறுகுழந்தையாகவிருக்கின்றீர். சமணர்கள்கொடுமை சொல்லிமுடியாது. அது அடியேனுக்கநுபவம். அன்றியும், தேவரீருக்குக் கிரகங்களிப்போது வலியில்லாமலிருக்கின்றன. ஆகையால், தேவரீரங்குப்போவது கூடாதென்று தடுத்தனர். அதற்குப் பிள்ளையார் அவரைப்பார்த்துச் சிவபெருமான் நமது உள்ளத்திற் குடிகொண்டிருக்கின்றா ராகையால் நமக்கொருதீங்கும் வரமாட்டாதென்று உறுதிகூறி "வேயுறுதோளிபங்கன்" என்னுங் கோளறுபதிகத்தைப் பாடியருளினார். இதனைக்கேட்ட அரசுகள் மிகமகிழ்ந்து அப்படியே செய்திடுகவென்று இசைந்தனர். பிள்ளையார் விடைபெற்றுக்கொண்டு மார்க்கத்திலுள்ள பதிகளையெல்லாந் தரிசித்துக்கொண்டு பாண்டிநாட்டையுடைந்து திருக்கொடுங்குன்றத்திற் சென்று சிவதரிசனஞ்செய்துகொண்டு, மதுரைக்கெழுந்தருளினார். அப்போது மங்கையர்க்கரசியாரேவுதலினால், குலச்சிறையார் சுவாமியையெதிர்கொண்டு அழைத்து வந்தனர். அப்போது அம்மையார் ஸ்ரீ சொக்கலிங்கப்பெருமான் ஸந்நிதியையணைந்து, அவ்விடம் பிள்ளையா ரெழுந்தருளு வாராகையால், அவரை யங்குத்தரிசிக்கலாமென்று எதிர்பார்த்துக் கொண்டிருந்தனர். அன்போ வடிவமாகக்கரைந்து பிள்ளையாரது திருவடிக்கணுக்கராகி யுடனுறைந்துசெல்லும் பெருஞ்செல்வமெய்திய மந்திரியார் ஸ்வாமியையழைத்துக்கொண்டு திருக்கோயிலுக்குச்சென்று அங்கு ஆகவேண்டிய வுபசாரங்களை யெல்லாம்நடத்தினார். ஸ்ரீமீனாட்சிஸமேதராய்விளங்குஞ் சொக்கலிங்கப்பெருமானைத் தரிசித்துக்கொண்டு திரும்பினார். அப்போது கோபுரவாயிலில் ஸ்வாமியினது வரவை யெதிர்பார்த்துக்கொண்டு, அச்சிறிய பெருந்தகையினது ஞானத்திருவுருவைச் சிந்தித்துக்கொண் டோர்புறமொதுங்கி நின்றுகொண்டிருந்த வம்மையார் நமது ஞானமணியைத் தமதுகண்கள் செய்த தவமெனக்கண்டு மகிழ்ந்து அடியற்றபனைபோல் பூமியில் வீழ்ந்து வணங்கினார். எம்பெருந்தகையார் அவருக்கு நல்லருள்பாலித்து அங்கேநின்றும் புறப்பட்டுப்போய் மந்திரியார் முன்னமே அமைத்திருந்த திருமடத்தைக்காட்ட வதிலிறங்கிப் பதினாறுயிரந் திருக்கூட்டத்

தவரும், ஏனையடியவர்களுஞ்சூழ வினிது எழுந்தருளியிருந்தனர். பாண்டிமாதேவியார் கட்டளையிட்டவாறு மந்திரியார் ஸ்வாமிக்கும் அவரதுபரிஜநங்களுக்கும் விருந்தளித்து மகிழ்ந்து தமக்குக்கிடைத்த பெரும்பாக்கியத்தைச் சிந்தித்துக்கொண்டிருந்தனர்.

## சூசனை.

பிள்ளையார் வேதாரண்யத்தில் மூடியிருந்தகதவைத் திறப்பித்தும், தாமே மூடியுஞ்செய்த வுபகாரத்தை மேலேகூறினும். அங்கே நின்றும் அமணிருளைத்துரத்த மதுரைக் கெழுந்தருளினமையால், அவ்வேதந்தானேசென்று அமணிருளைக் கடிந்தவாய்மை வெளிப்பட்டது. வேதஞ்சென்றகாலத்தும் அது ஒலிமயமாகி ஜடமாகுந்தன்மையால் அது நமதுஞானத்தலைவ ரியக்கப்பாட்டின்வண்ண மியைந்தொங்கிய தென்க. இவ்வுண்மையையே ஸ்ரீ சேக்கிழார்பெருமான் "ஞானத்தின்றிருவுருவை நான்மறையின்றனித்துணையை" என விதந்தருளினர். அன்றியும், வேதவனத்தில் ஸ்வாமியினது அபிமுகவாயில் மூடப்பட்டும், வேறுவாயில் திறக்கப்பட்டு மெம்பெருந்தகை யங்கெழுந்தருள்வதற்குப் பூர்வநிகழ்ந்த விருத்தாந்தமானது வைதிகமார்க்கம் அருகியும், அவைதிகமார்க்கம் பெருகியும் விளைந்தஸம்பவத்தையே வியக்தமாக்கியது. இதனைச் சைவமுதலிய ஸன்மார்க்கங்களொங்கியும், சமணமுதலிய துன்மார்க்கங்களோங்கியு மிருந்தவாய்மையாக அறிய வேண்டியது. இப்பெருங்கேடிரியத் திருவருள்சுரக்கும் பெற்றியுடையாரென்பது போதரவே "அவம்பெருக்கும்புல்லறிவி னமண்முதலாம்பரசமயப், பவம்பெருக்கும்புரைநெறிகள பாழ்படநல்லூழிதொறுந், தவம்பெருக்குஞ் சண்பையிலே தாவில்சராசரங்களெல்லாஞ், சிவம்பெருக்கும்பிள்ளையார் திருவவதாரஞ்செய்தார்" எனவும், "மறைவளர்திருவே வைதிகநிலையே" எனவும் அருண்மொழித்தேவர் பிரகாசப்படுத்தினர். இவ்வரியநலங்கள் தொண்டர்சீர்பரவுவார் திருவாக்கிற் கொள்ளக்கிடக்கும் வாய்மையை அறியாது அமண்வேடங்கரந்து சைவவேடநிறைந்து வஞ்சங்குடிகொண்ட நஞ்சனைய நெஞ்சுபடைத்த சிலர் எங்காழிப்பிரானரது பெருமையைக் கருத்துறவையாது உய்யாதுபோகின்றனர். அந்தோ பாவம்! பாவம்!! சராசரங்கட்குச் சிவத்வாபிவியக்தியை யுண்டுபண்ணுமாற்றல் பதியிலக்கணமாகையால், பிள்ளையார் பதியினதவதாரமா யுள்ளவரெனல் வெளிப்படை. இங்கே சைவப்போலிக

ளது போலிவாதம் பயன்படாதென்க. பசுவாகிய சம்பந்தரிடத்திற் பதியாகிய பரசிவதர்மத்தை யாரோபணஞ்செய்ததாகக் கொண்டா லோவெனின், அதற்கோரேதுவேண்டும். திருநீலகண்டர், திருநீலந க்கர் முதலியோர்பாற் கூறாத பரசிவதர்மத்தை ஞானசம்பந்தரிட மாத்திர மாரோபித்தற் கேதுவென்னை ? அத்தகைய வாரோபணநிரூ பணத்தாற் பூர்வபட்சிகளாகிய வப்பெரியாள்களும் பிரஹ்மமாகலா மாகையா லவரி லெம்பெருந்தலைக் குண்டாமேற்றம் யாது ? "தா வில்சராசரங்க ளெல்லாஞ்-சிவம்பெருக்கும் பிள்ளையார் திருவவதாரஞ்செய் தார்" என்றவிடத்தில் அந்தவிசேஷணம் அவதாரத்திற்கு மூலமூர்த் தியைப் பிரதிபாதிக்கிறதேயன்றி அவதரித்த ஸம்பந்தமூர்த்தியைப் பிரதிபாதிக்க வில்லை. மூலமூர்த்திக்கும், அவதாரமூர்த்திக்கும் பே தமில்லையாகையால், மூலமூர்த்திக்குரிய சராசரங்களை யியக்குந் தன்மை அவதார மூர்த்தியிடத்துந தானேபோதரும். இதனால், ஞா நஸம்பந்தர் பதிப்பொருளாயினமை வலித்தம். இவ்வாறு விசாரித்து த் தெளியாமல் ஞாநஸம்பந்தருக்குரிய பரமகாரணத்வத்தை அவரி டத்தில் ஆரோபணமாக ஸமர்த்திக்க வாசைகொள்ளுதல் பெரும்பா விகளுக்கே சிறக்கும். நம்மவரது நியாயவாஞ்சையா லினிச்சிவனைப் ப ரமகாரணரென்று வேதங்கூறுமிடங்களிலும் பிரஹ்மத்வாத்யாரோ பணநியாயமே ஸமர்த்திக்கவேண்டியது. என்னை, அவருக்குமேல் பி ரஹ்மம் வேறொன்றில்லாமையால் அது கூடாதெனின், பாஞ்சராத் திரிகளும், மாயாவாதிகளும் சிவனைப் பிரஹ்மமாக வொப்பாமையால் அவர்களுடைய ஸதஸில் நம்மவர்கள் தலைகுனியத் தடையிராது. இனிப் பூர்வபட்சிகள் சிந்திக்கத்தக்க விஷயமொன்று ஈண்டு வரை கிற்பாம்.

சிவம் பிறந்திறவாதபொருள். அப்படியே அவரது அமிசமாகி ய முருகக்கடவுளும் பிறந்திறவாதவர். அப்படியே அவரது அவதா ரமாகிய ஞாநஸம்பந்தரும் பிறந்திறவாதவர் என யாம் கூறுகின்றே ம். இவருள், ஒருவர் பிறந்திறந்தவரும், ஒருவர் பிறந்திறவாதவரு மாக யாம கூறும்பட்சத்தில் விரோதமுண்டாகலாம். அப்படிக்கி ன்றி யாவருமொரேதன்மையினராக யாம் கூறுகையில் விரோதமு ண்டாவது யாங்ஙனம்? ஞானசம்பந்தரைச் சேக்கிழார் பிறந்தவரா கக்கூறினரெனின், அங்ஙனங்கூறியதின்று. அவர்கூறாத நலத்தை மே ல்(உஉ) வது பக்கத்தில் யாம் பரிஷ்கரித்திருக்கின்றோம். அவரங்ஙன ங்கூறினரென்பது கெரியாதவர் கூற்றாம். அன்றோர் சம்பந்தர் பிற

ந்தாரென்று புலம்புவதற் காதரவு தேடுமாபோல், அவரிறந்தாரென்று சேக்கிழார் திருவாக்கிலோராதரவு தேடிக்கொண்டுவரட்டும். இறந்தாரென்று ஞானஸம்பந்தரைக் கூறத்துணியாதவர் பிறந்தார் என்று எங்ஙனங்கூறுவார்? இறவாதபொருள் பிறத்தல்யாங்ஙனம்? பிறவாதபொருள் இறத்தல் யாங்ஙனம்? "பிறந்தன விறக்கும் இறந்தன பிறக்கும்" என்பதோத்து. இதற்குமாறாகச் சேக்கிழார் கூறினாரென்பது அவரைத் தெளிவில்லாதவரென நிந்திப்பதாகிய அபராதமாகவே முடியும். இதனால், பூர்வபட்சிகள் அவர் திருவாக்கிற்கொண்டது திரிபுணர்ச்சியேயென்று பெறப்பட்டு, யாம் அவர்களைத் தெரியாதவர் என்று பிரஸ்தாபித்தது ஸர்வஸம்பிரதிபந்நமாயிற்று. அதவா அவர்கூறிய விஷயங்களொன்றோடொன்று விரோதித்தனவாகக் காணுமெனின், அவரெடுத்துக்கொண்ட பிரமேயத்தினுயர்வுதாழ்வுகளை நோக்கி உயர்ந்தபிரமேயமாயின், அதற்குவிரோதமின்றி யாவுமவ்வுயர்விலடங்க வந்வயித்துப் பொருள்கூறவேண்டும். தாழ்ந்த பிரமேயமாயின், அதற்குவிரோதமின்றி யாவுமத்தாழ்விலடங்க வந்வயித்துப் பொருள்கூறவேண்டும். ஞாநஸம்பந்தர்மகிமை யுயர்ந்த பிரமேயமென்பது நிராக்ஷேபமானவிஷயம். இந்தவுயர்ந்த பிரமேயத்தைச்சிதைத்து ஆபாஸமாக்கி விடுவதுதானோ ஞாநஸம்பந்தரிடத்தும், சேக்கிழார் பெருமானிடத்தும் பாராட்டும் அன்பினுக்கழகு? சேக்கிழார் பெருமான் ஞானஸம்பந்தரைப் பலஸந்தர்ப்பங்களிலும் சிவஸூநுவென்று பிரஸ்தாபித்தல் அவர்திருவாக்கிற் கண்டாகோஷமாக முழங்கலால், அது உயர்ந்த பிரமேயமேயென்பது தெற்றெனவிளங்கியது. அதிலஸூயைகொண்டு அவரிங்ஙனங்கூறியது உபசாரமென்று அந்தப்பிரமேயத்தைச் சிதைத்துத் தாழ்வுபடுத்த முத்துலைபோட்டு வருந்தியூளையிடுவதும் அவர்களுக்குத் தலையெழுத்தாகமுடிந்தால், யார் என்னசெய்யலாம்? திருச்சிற்றம்பலநாடிகண் முதலிய சிவாநுபூதிமான்களெல்லா மாணையிட்டுக்கூறிய வெங்கள் ஸம்பந்தக்கடவுளைக் குறம்பாடிக் கவிராயர்களெல்லாங் கும்புகூடி-யழுது தாழ்வாகக்கூறுவது நிஸ்புருஹமென்க. அன்றியும், தத்துவவிளக்கத்தில் "அறிந்தவாதீர்ந்த துகளினர்தீராத் துகளர்முன்னர்ச, செறிந்தவர்விஞ்ஞைக்கு நாயகரெண்மரெனச்சிறந்தோர், பிறிந்தவர்மந்திரராமெழுகோடியர் பேரொலியான்-மறிந்த திரைப்புனல்வையங்குருவாணர்வகுத்தவரே" எனவும், "பெற்றதவப்பய னுற்ப்ரளயாகல ரிற்சிலரைக்-குற்றமின்மந்திரநாயகராக்குமெங் கொசஸைசயர்கோன்-மற்றையர்மண்டலர் க்ரோதாதிபர்வீரர்ஸ்ரீகண்டசி - ருத்ரவருத்திரரெட்டெட்டொன்றென்று நூற்றெணிணவ

ர்க்கே" எனவும், "எண்ணும்வினைப்பயனுற்புவனந்தொறும்போகமென்று-நண்ணிவருஞ்சகலர்க் கொருகாலநயந்தங்ஙனே-பண்ணியகன்மந்துலையொத்துச்சத்திநிபாதமுறக்-கண்ணியலுஙகுருவாய்க் காழிவேந்தன் கதிதருமே" எனவும் போந்தவுண்மைகளும் பிள்ளையார் சராசரங்களை யியக்கும் பேருளாளரென்பதை யினிதுவிளக்கியது. இதனை யிம்மட்டினிறுத்தி மேல்விஷயத்தைக் கூறுவாம்.

எமதுபிள்ளையார் மதுரைக்கு எழுந்தருளியது மங்கையர்க்கரசியாரும், குலச்சிறையாரு மிரந்துவணங்கியதற் கிரங்கியேயாகையால், இஃது தமது பரமாசிரியத் தன்மையேயன்றித் தமது பதிநிலையும் போதர விளக்கியவாறாயிற்று. எங்ஙனமெனின், மங்கையர்க்கரசியாரும், குலச்சிறையாரும் அறுபத்துமூன்று நாயன்மார்களிற் சேர்ந்தவர்கள். அறுபத்துமூவருள் ஞானஸம்பந்தருமொருவர். இவருள் ஞானஸம்பந்தரை மங்கையர்க்கரசியாரும், குலச்சிறையாரும் ஆசாரிய மூர்த்தியாகக்கொண்டு மகிழ்ந்தனர். மங்கையர்க்கரசியாரையும், குலச்சிறையாரையும் ஞானஸம்பந்தர் அடியவர்களாகக்கொண்டுமகிழ்ந்தனர். இனி, அறுபத்துமூவரு ளிவ்விருவரேயன்றி பெமது பிள்ளையாரைப் பரமாசாரியராகக்கொண்டு மகிழ்ந்தவர்கள் திருநீலகண்டயாழ்ப்பாணர், திருநீலநக்கர், முருகநாயனார், நின்றசீர்நெடுமாறனார் முதலாயினாரும் ஆம். ஏனையோர் ஞானஸம்பந்தரை ஆசிரியராகக் கொண்டிருந்ததன்றி ஞானஸம்பந்த ரேனையோரை யங்ஙனங் கொண்டிருந்ததின்று. இதனால் எமது பெருந்திருவாளரது ஆசிரியத்தன்மை பிறங்கியவாறாயிற்று. இந்தநலமே யேனைய சமயாசாரியர்களிடத்துஞ் சிறக்கும். எங்ஙனமெனின், திருநாவுக்கரசுகளை அப்பூதியடிகளும், ஸ்ரீசுந்தரமூர்த்திகளைப் பெருமிழலைக்குறும்பர், கழறிற்றறிவார் முதலாயினாருந் தெய்வங்களாகவும், ஆசிரியர்களாகவும் வழிபட்டனர். அவ்வாசிரியர்களேனையோரை யங்ஙனம் வழிபடவில்லை. இவைகளை யிவ்வாறு முற்றும் நோக்கும்வழிப் பரமாசாரியர்கடன்மையும், அவருண் ஞானஸம்பந்தரது பெருமையும் விளங்காமற்போகா. அறுபத்துமூவருள் ஆசாரியர்களாகிய வின்னோர் பிறரால்வழிபடப் பெற்றதுபோல வேறுநாயன்மார்கள் வழிபடப் பெற்றபுதுமை யாண்டும்பெறப்பட்டிலது. திருத்தொண்டத்தொகையால் ஸ்ரீசுந்தரமூர்த்திகள் ஏனையநாயன்மார்களை வழிபட்டாரெனின், (அப்பாலுமடிச்சார்ந்தாரடியார்க்குமடியேன்) என்ற பகுதியைவிசாரிக்கின், அதன் வாய்மை வெளியாகும். அன்புடைமாந்தர்க்கன்றி

யிவ்வுண்மைநயமும், நலமும் பயன்படுதலரிது. இனிப்பிள்ளையாரது செயல் (இமைப்பளவுமுபகாரமல்லாலொன்றை யியக்காநிர்க்குணக்கடலே) என்றபடி பலமவதொன்று. எம்பெருந்தகையார் மதுரைக்குச் சென்றதும், சமணையழித்ததும், மங்கையர்க்கரசியார் முதலினோரது வேண்டுகோளுக் கிரங்கியேயாகலின், அவை பரப்பிரயோஜனமாகி அவரது கடவுட்டன்மையையே நிலைபெறுக்கின. விரிக்கிற் பெருகும்.

இதுநிற்க, மறைவனத்திலிருந்து அமணையழித்தற்பொருட்டுப் பிள்ளையார் மதுரைக்குப் பிரயாணமாகுகையில் அரசுகளவரை நோக்கி அவருக்குக் கிரகங்கள் வலியின்மையைக்கூறித் தடுத்ததும் அதற்குக் கோளறுபதிகமோதி அரசுகளையவர் தடுத்ததும் அன்னோருலகத்தை யுய்விக்கவந்த அருளாளர்களென்பதையேயறிவித்தன. எங்ஙனமெனின், அரசுகளவ்வாறுகூறியது நால்வரம்பு முலகவரம்பும் நிலைத்தற்பொருட்டு. பிள்ளையாரங்ஙனங் கூறியது அருளினது வரம்பை யாதரித்தற்பொருட்டு. இருதிறத்தவர்முடிவுகளு மதிகாரிகளளவிற் பயன்படுதலுடைமையி னவையொன்றியொன்று முரணிக்கெடா. இரண்டும் ஸாமஞ்சஸமேயாம். மேல், மதுரைக்கு எழுந்தருளியபிள்ளையாரை ஸ்ரீசொக்கலிங்கப்பெருமானது திருக்கோயிலின்கண் மங்கையர்க்கரசியார்கண்டதும், அவருக்கங்குநிகழ்ந்த வுள்ளநிகழ்ச்சியும் "இலைபடர்ந்தபொய்கை யிடத்தழுதல்கண்டு, முலைசுரந்த வன்னையோமுன்னின், னிலைவிளம்பக், கொங்கைசுரந்தவருட் கோமகளோ சம்பந்தா, விங்குயர்ந்தாரார்சொல்லெனக்கு" என்னுந் திருவாக்கைப் பரியாலோசித்தலினானே விளங்கும். (இல்லாமுலைப்பாலுங் கண்ணீருமேந்திழைபா - னல்லாயுளவாமா னீர்நிழல்போல்" எனவும், "அன்பிற்குமுண்டோவடைக்குந்தாழார்வலர் - புன்கணீர்பூசறரும்" எனவும்போந்த திருவாக்குகளு மீண்டமைதிபெறும். விரிக்கிற்பெருகும்.

## பிள்ளையாரதுபிரபாவம்.

(கருஉ - வது பக்கத்தொடர்ச்சி.)

பிள்ளையார் மதுரைக்கு எழுந்தருளும்போது பகலிலேகண்ட சமணர்கள் அன்றிரவிலோரிடத்திற் சபைகூடியோசித்து அப்போதேசென்று பிள்ளையாரதுவரவைப் பாண்டியனுக்கு அறிவித்தார்

கள். கண்டுமுட்டான குருக்கண்மார்சொல்ல அரசனுங் கேட்டுமுட்டானான். பின்பு அரசன் சமணர்களால் பிள்ளையாரது விருத்தாந்தமுழுதுங்கேட்டு மனங்கொதித்து இனிநாம் யாதுசெய்வது என்று கேட்டான். அதற்கு அப்பெரும்பாவிகள் எங்களுடைய மந்திரவலியால் அம்மறைச்சிறுவனிறங்கியிருக்கும் மடத்தைத் தீப்பற்றும்படிச்செய்து விடுகின்றோம் என்றுகூற, அதற்கு அரசனிசைந்து அப்படியே விரைந்து செய்யக்கடவீர்களென்று கட்டளையிட்டனுப்பினான். அவர்கள் விடைகொண்டு போனபின்னர் அரசன் அந்தப்புரஞ்சென்று சிந்தாக்ராந்தனாய்ப் பலவாறு சிந்தித்துக்கொண்டிருந்தான். அப்போது மங்கையர்க்கரசியார் அங்குவந்து அரசனுடைய துன்பத்தையறிந்து உபசரித்தார். அதற்கு அவன் தன்னுடைய தேவியைப் பார்த்து நடந்த விருத்தாந்தங்களைக்கூறி நமது அடிகண்மார் கண்டு முட்டு, யான்கேட்டுமுட்டு என்றான். அப்போது தேவியார் திருவருளைச் சிந்தித்து அரசனைப்பார்த்துத் தேவரீரிப்படி வருந்துவது தக்கதன்று. நாம் உண்மையிற் கட்டுண்டொழுகுவதே நமக்குநலமும் பெருமையுமாகும். ஆகையால், இருதிறத்தவர்களும் வாதுபுரியச்செய்வோம். யாவர்பக்கல் வெற்றியுண்டாகிறதோ அவர்பக்கல் நாம் சேர்ந்து நன்மையடைந்தும், உலகம் நன்மையடையச்செய்தும் சுகிப்போம் என்று கூறினார். பின்பு பாண்டிமாதேவியார் தம்மைவந்துகண்ட மந்திரியாரிடம் தாம் அரசவள்ளலுக்குக்கூறிய க்ஷேமத்தைத் தெரிவித்து மகிழ்ந்திருந்தார். இதுநிற்க, அரசனிடத்தில் விடைபெற்றுக் கொண்டுபோன சமணர்கள் பிள்ளையார் எழுந்தருளியிருந்த திருமடத்திலே அக்கினிபற்றும்படி மந்திரஞ்செபித்தார்கள். அது அவலமாகியது. அதனால் அவர்கள் மனந்தளர்ந்து யாதுசெய்வதென்று யோசித்து இரவாகையால் யாருமறியாதவகை திருமடத்தைச்சூழ அக்கினியைக் கொண்டுபோய்வைத்துக் கொளுத்தினார்கள். அதுவும் பயன்படாதொழிந்தது. அஃதறிந்த காழிப்பெருமானார் இத்தீங்கிற்கு அரசனே காரணமெனத்துணிந்து "செய்யனே திருவாலவாய்" என்னுந் திருப்பதிகமோதி, அதில் "அமணர்கொளுவுஞ்சுடர், பையவேசென்று பாண்டியற்காகவே" என்று அமைத்தருளினார். உடனே அந்த அக்கினிபானதுபோய்ப் பாண்டியனை யடைந்தது. சூரியனுதித்தபின்னர் இரவில் சமணர்கள்செய்த தீங்கையும், அது பிள்ளையாரிடம் பயன்படாமையையும் பாண்டிமாதேவியாரறிந்து மாபாவிகள் செய்கைக்கஞ்சி இது எவ்வாறுமுடியுமோவென்று சிந்தித்துக் கொண்டிருக்கையில், அரசன் பக்கல்

அது சுரரோகமாகவந்தடைந்தது என்று ஏவலாளர்வந்து சொல்லக் கேட்டு மனந்தளர்வுற்று விரைந்துநடந்து அரசவள்ள லிருக்கு மிடத்திற்போயினர். மந்திரியு மங்குவந்துசேர்ந்தனர். அப்போது பல வைத்தியர்களும் அங்குவந்து பார்த்துத் தங்கள்செயல் பயன்படாமல் மயங்கினர். அன்றியுஞ் சமணர்கள் கும்புகூடிவந்து தங்களுடைய ஆருகதமந்திரத்தைக்கூறிக் கையிலேதூங்குங் குண்டிகையிலுள்ள சலத்தை மேலேசொரிந்து அவர்கள தாங்கியிருந்த பீலியினால் மேலேதடவினார்கள். சுரமாகிய அக்கினியில், பீலியானது சமித்தும், சலமானது நெய்யுமாகச்சேர்ந்து அரசனைவதைக்கத் தலைப்பட்டன. அரசன் சகிக்கமுடியாமல் சமணர்களைப்பார்த்து உங்கள் செய்கை இயமனுடைய கிங்கரர்செய்யும் வதையாகவிருக்கின்றமையால், நீங்களென்முன் னிற்கவேண்டாம், போய்விடுங்கள் என்று சொல்லி அறிவுசோர்ந்தான். அப்போது பாண்டிமாதேவியாரும், மந்திரியாரும் இதுதான் சமயமென்று அரசனையணுகி ஸ்ரீஜ்ஞானஸம்பந்தர் மாஹாத்மியத்தை யெடுத்துக்கூறி, அவர்வந்தாலன்றி இந்தச்சுரநோய் நீங்காதென்று இதமாக வுரைத்தார்கள். ஸ்ரீஜ்ஞானஸம்பந்தர் என்னுந் திருமந்திரவொலி அரசன்காதிற் புக்கமாத்திரத்தில் அவனுடையவயர்ச்சி சிறிதுநீங்கியது. உடனே அவன்மகிழ்ந்து ஸ்ரீஜ்ஞானஸம்பந்தவள்ளலை அழையுங்களென்று தேவியாருக்கும், மந்திரியாருக்குங் கட்டளையிட்டான். அதனைக்கேட்ட பாண்டிமாதேவியாரும், மந்திரியாரும் அதிகஸந்தோஷத்தை யடைந்து பரிஜனங்கள்சூழ உடனே ஸ்வாமியினிடஞ்சென்று வணங்கிப் பாண்டியனது சுரத்தைத்தவிர்த்து எங்களைரக்ஷிக்கவேண்டும் எம்பெருந்தகையே! என்று இரந்து வணங்கினார்கள். அதற்குப் பிள்ளையார் நீங்கள் சிறிதும் அஞ்சவேண்டாம். சமணர்களை இன்று நீங்கள் மகிழும்படிவென்று பாண்டியனது சுரத்தைத்தவிர்த்து அவனை விபூதி தரிக்கச்செய்து உங்களைச் சந்தோஷிக்கும்படிச் செய்வோம் என்று உறுதிமொழிகூறித் திருமடத்தினின்று நீங்கிச் சமணர்களை வாது செய்து வெல்லுதற்குச் சொக்கலிங்கப் பெருமானுடைய திருவுள்ளத்தை யறிவோம் என்று ஸ்வாமிஸந்நிதியை யணைந்து "காட்டுமாவதுரித்து" என்னுந் திருப்பதிகம்பாடிப் பெருமானது திருவுள்ளத்தையறிந்து, பின்னுஞ் சமணர்களை வாதில்வென்று அழிக்கும்பொருட்டும், சிவாகமத்தையே பரப்பும் பொருட்டும், "வேதவேள்வியை" என்னுந் திருப்பதிகத்தைப்பாடித் திருவருள்பெற்றுத் திருவுள்ளமகிழ்ந்து விடைகொண்டு கோபுரவாயிலைக்கடந்து முத்துச்சிவிகையி

ன்மேலேறி, முத்துக்குடைநிழற்ற, பலவகைப்பட்ட வாத்தியங்கண் முழங்க, முத்துச்சின்னங்களூத, மங்கையர்க்கரசியார் சிவிகைமேலே றிக்கொண்டு பின்னுகவர, குலச்சிறையடிகள் முன்னே அடியார்கூட்டத்திற் சேர்ந்துசெல்லப் பாண்டியனுடைய அரண்மனைக்குள் எழுந்தருளினர்.

அப்போது மந்திரியார் பாண்டியனிடத்திற்சென்று பிள்ளையாரது வரவைத்தெரிவித்தனர். அதற்கு அவன் மந்திரியைநோக்கி அவருக்கோ ராசனமிடுகவென்று தான்படுத்திருந்த சிரசின்பக்கத்தைச் சுட்டிககாட்டினன். அரசன்றன்மையறிந்த சமணர்கள்கலங்கி அரசனைப்பார்த்து எங்களிடத்தில் உமது அபிமானம் நீங்காதிருத்தல் வேண்டுமென்று கூறினார்கள். பாண்டியன் அவர்களைநோக்கி எனக்குப் பக்ஷபாதமின்று. அவரேனும், நீவிரேனும் அவரவர் சமயவுண்மையை வெளிப்படுத்தி எமதுநோயைத் தவிர்த்தல்வேண்டும், தவிர்த்தவர்பக்கல் யான் சாருவதல்லது என்மனச்சான்றுக்கு நான் விரோதமாக நடவேன் என்று தனதுபுண்ணியம் ஸமீபித்துவிட்டமையாற் கூறியுரைபபினன். அஃதறிந்த சமணர்கள் கலங்கினர்கள். அப்போது பிள்ளையார் அங்கு இளஞ்சூரியன் குதித்தோடி யுள்ளேறுமைழவதுபோல வந்தணைந்தனர். பாண்டியன் தன்னிருகண்களுஞ்செய்த தவமாமெனக்களிகூர்ந்து அஞ்சலிசெய்து அங்கு அமைததிருக்கும் இரத்நாஸநத்தி லிருக்கும்படி வேண்டினன். அப்படியே அருளோடு அங்கே யெழுந்தருளினர். இவைகளை யதிசயமாய்ப் பார்த்திருந்த சமணர்கள் ஒன்றுந்தோன்றுமல் தியங்கினர். ஸ்வாமியைத் தரிசித்த விசேடத்தால் சிறிதுநோய்நீங்கிப் பாண்டியன் அப்பெருந்திருவாளரைப்பார்த்துத் தேவரீருடைய ஊர்யாது என்றுகேட்டான். அதற்கு "கழுமலநாம்பரவுமூரே" என வதற்குரியவேனை நாமங்களையுமெடுத்துக்கூறிப் பதிகவாயிலாகப் பதிலுரைத்தனர். இவ்வரிய காட்சியாற் சமணர்கள்வயிறெரிந்து சில்லிவாயர்களாகிய அவர்கள் யாவருமொருங்கேகிளம்பி வெறிகொண்டபலநாய்கள் குரைத்துமேலேவிழுந்தாலென்ன வெம்பெருமானர்மீது வந்துவிழத தலைப்பட்டார்கள். ஸ்வாமிசிரித்து உங்கள் சமயவாய்மையையெடுத்து நிதானமாய்ப் பேசுங்கள், யாம் பதில்கூறுகின்றோம் என்று உரைத்தருளினர். பாண்டிமாதேவியார் அஞ்சி அரசனைநோக்கி எமதுபிரானுரதரே! இவரோ சிறுகுழந்தையாயிருக்கின்றார், சமணர்கள் பலராயும் பெரிய முரட்டாளகளாயு மிருக்கின்றார்கள், இவர்களை மேல் வி

பூரதிருக்கத் தடுக்கக்கடவீர். தேவரீருடையநோயை முன்னர் இச்சிறிய பெருந்தகையார் நீக்கியருளட்டும், பின்னர்வேண்டுமானால் சமணர்கள் இவரோடு வாதுபுரியலாம் என்றுகூறினார். பாண்டியன் தேவியாரைப்பார்த்து நீ ஒன்றுக்கும் அஞ்சாதே! நான் தவறுபுரியேன் என்று உறுதிகூறிச் சமணர்களைப்பார்த்து இச்சிவஞானபோதகரும் நீங்களும் உங்கள் தெய்வமகிமையால் என்னுடையநோயை நீக்கவேண்டியதேயன்றி வீண்பூசலிட்டுக்கதறுவது கூடாதென்று சொன்னான். அப்போது ஸ்ரீ ஞானஸம்பந்தப்பெருமான் பாண்டிமாதேவியாரைப்பார்த்து, மாதே! பய்யேல் என்னைப்பாலனென்று அஞ்சவேண்டாம், நான் "ஈனருக்கெளியேனலேன்திருவாலவாயரனிற்கவே" என்று அவரதுள்ளங் குதுகலிக்கப் பதிகவாயிலாகத் தமதுண்மையையெடுத்துக் கூறினார். அதுகேட்ட அரசன் சந்தோஷித்துச் சமணர்களைப்பார்த்து இனித்தாமசிக்கவேண்டாம், உங்கள் குறைப்பொழிந்து உங்கள் தெய்வத்தன்மையால் என்னுடைய நோயைத் தவிர்க்கக்கடவீர்களென்று கட்டளையிட்டான். அதற்குச்சமணர்கள் எங்கள் பிரபுவே! நாங்கள் உம்முடைய இடதுபக்கநோயைத் தவிர்க்கின்றோம், அந்தச்சைவப்பிள்ளை வலதுபக்கநோயைத் தவிர்க்கக் கடவர் என்று பாகமேற்படுத்திக்கொண்டு தங்கள் கையிலிருக்கும் பீலியை அரசனதுமேனிமீது இடதுபக்கமாகத் தடவினார்கள். அதனால், அந்தநோய் முன்னிலு மதிகரித்து முறுகிவளர்ந்தது. அரசவள்ள லதுபொறாராய்வருந்திச் சமணர்களைத்தடுத்துப் பிள்ளையாரை நமஸ்கரித்துத் தேவரீர் எனதுநோயை நீக்கியருளவேண்டும் என்று பிரார்த்தித்தனர். அதற்கிசைந்து "மந்திரமாவதுநீறு" என்னுந் திருப்பதிகமோதித் தாமேற்றுக்கொண்ட வலதுபக்கத்தில் விபூதிகொண்டு தமது திருக்கையினாலே தடவியருளினார். உடனே அவ்வலதுபக்கம் நோய்நீங்கிக் குளிர்ந்துவிட்டது. ஆயினும், மற்றப் பாகத்துநோய் சமணர்களால் நீங்காமையாலும், வலதுபக்கத்திலிருந்து நீங்கியநோய் இடதுபக்கத்திலேயே வந்து அடைந்தமையாலும், அரசன் மிகவிளைத்துச் சுவாமியைவணங்கி, எம்பெருமானே! இடதுபக்கநோயையுந் தேவரீரே தீர்த்தருளவேண்டும் என்று பிரார்த்தித்தான். சுவாமி அதற்கிசைந்து அவ்விடது பக்கத்திலும் விபூதிகொண்டு திருக்கையினாற்றடவி நோய்முற்றும் நீக்கியருளினார். அரசன் உடன்முழுதுங் குளிர்ந்து உள்ளமகிழ்ந்து படுக்கையினின்றுமெழுந்துவந்து இரண்டு கைகளையுஞ் சிரசிற்கூப்பிக்கொண்டு அடியற்ற பனைபோல் பிள்ளையாரது திருவடிகளில் வீழ்ந்து வணங்கினு

ன். பாண்டிமாதேவியாரும், மந்திரியாருங்கூட வணங்கித் துதித்தார்கள். யாவும்நேரிற்கண்டு பொறுமைதூண்டியுந்த வருந்திநின்ற சமணர்கண் இச்சிறுவனைத் தர்க்கத்தினால் வெல்லுவது கூடாது, வேறுசூழ்ச்சியால் வெல்லவேண்டுமென யோசித்து ஸ்வாமியைப்பார்த்து நாமிருபட்சத்தாரும் நமது சமயவுண்மையை யுள்ளபடி பிரத்யக்ஷமாகக் காட்டி யொருவரையொருவர் வெல்லுவோம் என்று கூறினார்கள். பாண்டியர்பெருமான் என்னுடைய சுரநோயை நீங்களொழித்திலீர்கள், உங்களுக்கென்னவாது என்று நிந்தித்துக்கூறினார். அந்தநட்பமுணராமல் உங்களுக்கென்னவாது என்றதையே வினாவாகக்கொண்டு, இச்சிறுவரும் யாமும் எங்கள் சமயவுண்மைகளை யேட்டிலெழுதி நெருப்பிலே யிடக்கடவோம், எங்களுடைய ஏடுகளில் எது வேகாதுநிலைக்குமோ, அதுவே வெற்றியுடையதாகும் என்று கூறினார்கள். உடனேபிள்ளையார் அவர்களைப்பார்த்து "நீங்கள் சொல்லியது நன்று, அப்படியே செய்வோம் என்று பதில் கூறினர். அதற்குப் பாண்டியர்பெருமானு மிசைந்து தன்னுடைய சபைக்குமுன்னே அக்கினியமைக்கும்படிச் செய்தனர். பிள்ளையார் அவ்வக்கினிக்கு முன்னரெழுந்தருளித் தாமோதிவருந் திருப்பதிகங்க ளடங்கியிருக்குந் திருமுறையைத் திருக்கையிலெடுத்துத் திருக்காப்பிட்ட கயிற்றையவிழ்த்து, அத்திருமுறையைத் தமதுதிருக்கரத்தினின்மறிக்கப் "போகமார்த்தபூண்முலையாள்" என்னுந்திருநள்ளாற்றுப் பதிகம்நேர்ந்தது. அந்தப்பதிகத் திருவேட்டைத் திருமுறையினின்றுங்கழற்றித் திருக்கரத்திலேகொண்டு இது அக்னியிலிடப்படுமாயிற் பழுதில்லை, இதுசத்தியம் என்னுங் கருத்தையுடைய "தளிரிளவளரொளி" என்னுந் திருப்பதிகமொன்றோதி அவ்வக்கினியிலே யாவருங்காண இட்டருளினர். அப்போது அந்த ஏடு, "இட்ட வேட்டினி லெய்தியசெந்தமிழ்ப்பதிக, மட்டலாங்குழல்வனமுலை மலைமகள்பாகத், தட்டமூர்த்தியைப்பொருளென வுடைமையாலமர்ந்து, பட்டதீயிடைப் பச்சையாய்விளங்கியதன்றே" எனவமைந்தது. ஈதிங்ஙனமாக, சமணர்கள் தங்கள் சமயவுண்மையெழுதிய ஏட்டை அவ்வக்கினியிலே யிட்டார்கள். உடனே அது எரிந்துகரிந்து சாம்பராய்விட்டது. ஸ்ரீஜ்ஞாநஸம்பந்தப்பெருமான் தாம்நெருப்பிலே இட்டவேட்டை வேகாமலும், முன்னினும் பசுமைகொண்டு மிருக்கவெடுத்து யாவருங் கண்டு களிகூரச் செய்தருளினர். அப்போது சமணர்களைப்பார்த்து அரசன் உங்களுடைய ஏடு எங்கே எடுங்கள் பார்ப்போமென்றான். அக்கினியைச் சலங்கொட்டித் தணிவித்துச் சமணர்கள் யாவருமங்

தக் கருங்குழியிலிறங்கிக் கைகளாற்றடவிப்பார்த்து ஏடுகிடைக்காமல் முதலற்றுப்போயினமையால் வெறுஞ்சாம்பரைப்பிசைந்து வருந்திநின்றார்கள். அதனைக்கண்ட அரசன் சமணர்களைப்பார்த்து நீங்கள் இப்போதும் தோற்றீர்கள்போலும் என்று பரிகாசமாகக்கூறினார். அதன்பொருளை யறியாராகி முன்னே இரண்டுதரம்வாதுசெய்தோம், இன்னும் ஒருதரம் வாதுசெய்வோம், இந்த மூன்றாவது வாதில் நாங்களே ஜயங்கொள்வோம் என்று சமணர்கள் கூறினார்கள். அதற்கு அரசவள்ளல் இசையாராயினர். பிள்ளையார் அதற்கிசைந்து இனிநாம் என்னவாதுசெய்வது என்று கேட்டனர். அதற்குச் சமணர்கள் நாமிருதிறத்தவரும் அவரவரது சமயவுண்மைகளெழுதியவேடுகளை வைகையாற்றிலே இடுவோம், எதிர்ந்து செல்லும் ஏடே மெய்ப்பொருளையுடையது என்றார்கள். பிள்ளையாரும் அப்படியேசெய்வோம் என்று அருளிச்செய்தனர். அப்பொழுது குலச்சிறையார் என்னும் மந்திரியார் சமணர்களைப்பார்த்து நீங்கள் இதிலுந்தோற்றால் என்னசெய்வது என்றார். சமணர்கள் நாணமுங்கோபமும் அதிகரித்து வாய்தவறி நாங்கள் கழுவேறுவோமென்றார்கள். இந்த ஏற்பாட்டினை யிருபட்சத்தாருமேற்று யாவரும் வைகையை அடைந்தார்கள். அப்போது சமணர்கள் "அத்திநாத்தி" என்று எழுதியவேட்டை அதிவேகத்துடன் பாய்ந்துகொண்டிருக்கும் வைகையிலிட்டார்கள். அது அவர்களிடப்போதே கடலைநோக்கி யோடிமறையக்கண்டு பயந்து தியங்கினார்கள். அப்போது பிள்ளையார் "வாழ்கவந்தணர்" என்னுந் திருப்பதிகம் ஓதி, அதனையேட்டிலெழுதித் தாமும் வைகையிலிட்டருளினார். அத்திருவேடு நதியிலேயெதிர்ந்து, ஜலத்தைக்கிழித்துக் கொண்டு சென்றது. அந்தத்திருவேட்டில், "வேந்தனுமோங்குக" என்று அருளினமையால் பாண்டியனுடையகூனும் நிமிர்ந்தது. ஏடுவிரைந்து எதிரேறியோடும்போது மந்திரியார் குதிரையின்மேலேறிக்கொண்டு அந்தவேட்டினைப் பின்றொடர்ந்தோடினார். அப்படியோடியும், அத்திருவேட்டினது ஓட்டத்தைப் பிடிக்கமாட்டாமல் வருந்தினர். அதுகண்டபிள்ளையார் "வன்னியுமத்தமும்" என்னுந் திருப்பதிகம்பாடி அத்திருவேடு ஓடாது நிற்கும்படிச் செய்தருளினர். அதுதங்கிய இடம் திருவேடகம் என்னும் பிரவிசித்தியடைந்தது. குலச்சிறையார் நதியிலிறங்கி, அங்குத்தங்கியிருந்த ஏட்டினைக் கையிலெடுத்துச் சிரமேற்கொண்டு மகிழ்வெய்திக்கரையிலேறி, அங்குச் சிவதரிசனஞ்செய்து திரும்பி, பிள்ளையாரையணைந்து அவரது திருவடிகளில் வணங்கித் தாம் எடுத்துக்கொண்டு

வந்த ஏட்டினைப் பாண்டியன் முதலாயினோருக்குக்காட்ட, அடியார்கள் யாவருங்களித்து (ஹர ஹர) என்று ஆரவாரித்தார்கள். பாண்டியர்பெருமான் அது கண்டு மந்திரியாரை நோக்கி நமதுபரமகுருநாதரிடத்தில் அபராதப்பட்டிருந்த விப்பதிதர்களை இப்போதே கழுவிலேற்றிடுக என்று உறுதியானகட்டளையிட்டனர். அது சிவனருள் என்று பிள்ளையார் அதனைத்தடுக்காது வாளாவிருந்தனர். உடனே மந்திரியார் அவர்களைப்பிடித்து ஒருவரையும் விடாது கழுவிலேற்றினர். அரசர்கோன் மகிழ்ந்து பிள்ளையாரது திருவடிகளிற்பணிந்து விபூதிவாங்கித் தரித்துக்கொண்டனர். அப்படியே அந்நாட்டிலுள்ளயாவருந் திருநீற்றுப்பெருஞ்செல்வத்துக் குரியவர்களாகிச்சிறந்தார்கள். அப்போது பிள்ளையார் ஸ்ரீசொக்கலிங்கப்பெருமானது திருக்கோயிலையணைந்து பாண்டியர்முதலினோர் சூழ்ந்து துதிக்கநின்று "வீடலாலவாய்" என்னுந திருப்பதிகமோதிப் பணிந்தனர். பாண்டியர்பெருமான் ஸ்ரீசொக்கநாதரைவணங்கித் "திருவாலவாயிலெழுந்தருளியிருக்கு மெம்பெருந்தகையே! சமணர்களுடைய மாயையாலே தேவரீரையறியாதிருந்த சிறியேனைப் பிணிநீக்கி ஆட்கொள்ளும்பொருட்டுத் திருஞானஸம்பந்தப்பெருமானைத் தந்தருளிய பெருங்கருணையை என்னென்று துதிப்பேன்" என்று துதித்து வாழ்த்தினர். இவ்வாறு பாண்டியர்கோன் சிவதரிசனஞ் செய்துகொண்டு பிள்ளையாரது திருமடத்தையடைந்து, அங்குப்பிள்ளையார் திருவருள்புரியப்பெற்று விடைகொண்டு அரண்மனைக்குச்சென்று தமக்குக்கிடைத்த பெருவாழ்வினைச் சிந்தித்து மங்கையர்க்கரசியார், மந்திரியார் முதலாயினோரோடு களித்துவாழ்ந்தனர்.

## கு ச னை.

மாபாவிகளாகிய சமணர்கள் எங்கள் காழிநாதர்பாலிழைத்த வபராதம் அத்திருவாளரையும், அவரது அடியவர்திருக்கூட்டத்தவரையும் நெருப்பினு னீருக்கிவிடலா மென்பதேயன்றோ? இத்தீயவெண்ணத்தின்பயனே பின்னரவர்கழுவேறத் திருவருள்கூட்டியது. தானொன்றுநினைக்கத் தெய்வமொன்றுநினைத்தது) என்பது அவர்பாலே கூடியது. அப்பாவிகள்செய்த தீமையைத் தடுக்காமலும், அதற்குடன்பட்டும் அரசனுர்ஜித்த பாவத்தின்பயனுகவே சமணரிட்டநெருப்

அப்படியே திரும்பி யவ்வரசன்பக்கல் சுரமாகவந்து சூழ்ந்தது. திருமடத்தை நீறுக்கவைத்த நெருப்பைத்தனையு மொருதேகத்தைச் சூழுமெனி னதுயாதுதான் செய்யாது? அதனாற்றல் எமது பிரானாரது திருவாணையி லடங்கியதென்க. அவரது திருவாணை "பையவேசென்று பாண்டியற்காகவே" என்றது "பாண்டியற்காக" என்றதனாலந்தவ்வாறு சூழ்ந்தது. அங்ஙனமின்றி இது அவலமாகக் கடவது என்றவிடத்து மந்தவ்வாறுதற் கிழுக்கின்மையறிக. அது வாளா போதலும், அல்லது பாண்டியனைக் கொல்லுதலுமாகிய சங்கற்பங்களைச் செய்யாமல் பாண்டியனைச் சேர்ந்து வருத்தக்கடவது என்று எம்பெருந்தகை கூறினமையால், அந்து அவரது கட்டளையின்படி இயங்கியதென்க. எமபெருந்தகையார் சராசரங்களை யியக்குகின்றவராகலின், அது ஜடமேனும் அவர் திருவாணையின்படி யியங்கியவாறறிக. குற்றஞ்செய்தபேரைத் தண்டித்து அவர் பாவத்தைப்போக்கிக் குணப்படுத்துவது அருளாகையானும், அவ்வாறு தண்டிப்பது குற்றத்தினதிக மற்பமென்னு மளவறிந்தாகலானும் பாண்டியன்செய்த தீமையின்மிகுதி யச்சுரபீடையாலன்றி யகலாதென்றறிந்தே யந்தவர்பாணிகழ வெம்பிரான் றிருவருள்சுரந்தபடியாம். சிவநிந்தையிற் றலைப்பட்டோரும் அதற்குத் துணையாயிருந்தோரும், அதனைத்தடுக்காது வாளாவிருந்தோருந் தண்டிக்கப்படுவர் என்று தருமநூல்கள் கூறுதலானும், அவ்வாறே தக்ஷனுந்தேவர்களும் பட்டதபாடுபட்டார்களாகலானும், அதுவே சமணர்களுக்கும், பாண்டியனுக்குஞ் சிறந்தபயனாய் விளங்கியதென்க. மாந்திரிகனொருவன் மற்றொருவனுக்கு ஏறியவிஷத்தை இறங்கு என்றாலிறங்கியும், ஏறு என்றாலேறியு மியக்கப்பாடுண்டாதலா லவனும் ஜடத்தை யியங்கப் பண்ணுகின்றவனா மெனின், அவன் பரதந்திரனாயிருந்து செய்வதான்றித் தானே யியங்கப்பண்ணுமாற்றல் பெறாமையின், அது நமது காழிப்பிரானாரது ஸ்வதந்திரத்தோடொன்றி நிலையாது. "வினைகெடுதலாணைநமதே" என்றது முதலிய திருவாக்குகளாலறிக. அரசர்கோனைச் சுரத்தால் வெதுப்பி அவனதுபாவத்தை நீக்கியருளியதுபோலவே சமணர்களைக் கழுவேற்றி, அவர்களதுபாவத்தையு நீக்கியருளினாரென்க. சமணர்களைக் கழுவேற்றியது சீவகாருண்யமாகாதெனின், அத்தருமம் சீவர்களிடத்தன்றிப் பதியினிடத்திலமையாது.

சகலமதங்களையெல்லாமுணர்ந்த தவமுனிவோர் - புகலுமிலக்கமெண்ணா
யிரம்பேரைப் பொருகழுவி - லிகலுறவைத்தும் வருமேதமொன்றின்றி யே
யிருந்தான் - றிகழுறும்போரியன் சம்பந்தநாமஞ் சிறந்துகொண்டே என்

னும் பிரமாணத்தைப் பரியாலோசித்திடுக. பதியினது பஞ்சகிருத்ய ங்களில், அநுக்கிரஹத்தைப்போல நிக்ரஹமுங் கருணையாதலிழுக் காமையின், பதியாகிய பிள்ளையாரது நிக்ரஹம் அருளேயாயிற்று. "ஓடியாதேரின்கீ ழுயிர்போனகன்றுலே, நீடுபெரும்பாவமின்றே நீங்குமென, நாடித்தன் - மைந்தனையூர்ந்தோன் வழக்கேவழக்காக, நஞ்சனையசிந்தை நமன்றூதர், வெஞ்சினத்தா - லல்லலுறுத்து மருநரகங்கண்டிநிற்க, வல்லக ருணைமறம்போற்றி" என்னும் பிரமாணமும் எமதுவாய்மையை நிறு த்தும். சீவர்கள்செய்யு நிக்ரஹத்திற்கும், சிவன்செய்யு நிக்ரஹத் திற்கும் பேதம் என்னையெனின், சீவர்களது நிக்ரஹம் மருளையபே க்ஷித்ததும், சிவனாரது நிக்ரஹம் அருளையபேக்ஷித்ததுமாம். இப்ப டியே யீரிடத்தநுக்ரஹங்களையுங் கொண்டிடுக. பதிக்குண்டாகிய வுருவாதிமூன்றும், பசுவுக்குண்டாகிய வுருவாதிமூன்றும் முறையே பரனது தாதான்மியமாகிய அருட்சத்தியாலும், பரிக்ரஹமாகிய மாயாசத்தியாலு மமையுநலமே இதனை நிறுத்தும். பசுவினது நிக் ரஹாநுக்ரஹங்கள் பரதந்திரமும், பதியினது நிக்ரஹாநுக்ரஹங் கள் ஸ்வதந்திரமுமாம். ஞானஸம்பந்தரது நிக்ரஹாநுக்ரஹங்கள் பரதந்திரமாகாது ஸ்வதந்திரமாதலே ஸ்ரீ சொக்கலிங்கப்பெருமானது திருவிளையாடல்களாகவே பாண்டியனது சுரந்தீர்த்ததிருவிளை யாடலும், சமணரைக் கழுவேற்றிய திருவிளையாடலும் படிக்கப்பட் டிருத்தலாற்கண்டறிக. ஸ்ரீஜ்ஞானஸம்பந்தர் சிவனாரது அவதாரமா காதபோது அவரதுசெயலைச் சிவனாரது திருவிளையாடலாக உண் மைநூல்கள் கூறியது யாங்ஙனம்?

இதுநிற்க, சமணர்கள் எமது பிள்ளையாரெழுந்தருளியிருந்த திருமடத்தை அக்கினிபற்றும்படி மந்திரத்தைச் செபித்தார்களன் றே? அந்தமந்திரம் ஏன் அவலமாகியது? எல்லாமந்திரங்களுஞ் சீவிக்குந் தாரகமாகவிளங்கும் ஸ்ரீபஞ்சாட்சரிக்குமுன்ன ரெந்தம ந்திரந்தான் நிலைக்கும்? ஸ்ரீபஞ்சாக்ஷரந் தாமேயாய்விளங்கும் பிள்ளை யாரைச் சமணரதுமந்திரம் அசைக்காதது அதிசயமன்று. இஃ தொன்றேயன்றி எந்தமந்திரமு மசைக்காதென்க. எனவே, சமண சமயத்தான் மாத்திரமேயன்றி எல்லாச்சமயங்களாலும் அவ்வச்ச மயமந்திரங்களைக்கூறி மெய்பெருந்தகையை யொன்றுஞ்செய்ய மு டியாதென்பது வலித்தம். சிவாக்ரயோகிக ளென்னுஞ் சிவயோகி யொருவ ரெழுந்தருளியிருந்த திருமடத்திலோர்காலத்தில் மணவா ளமுனி என்னும் பாஞ்சராத்திரி நெருப்பிட்டபோது அது பயன்

பட்டதா ? அதுவே பயன்படாதபோது சமணரிட்ட நெருப்பு ஏங்களது ஞானப்பெருந்தகையை என்செய்யும்? ஸ்ரீ பஞ்சாட்சரத்தின் பெருமையையும், அது ஸ்ரீஜ்ஞாநஸம்பந்தரது திருமேனியென்பதையும், ஸ்ரீஜ்ஞாநஸம்பந்தருக்கும், சிவபெருமானுக்கும் பேதமில்லையென்பதையும் இந்நூலினும், வேறு நூல்களிலும் யாம் பலவிடங்களிலெழுதியிருக்கின்றோமாகையாலீண்டதிகமாய் வரையாது விடுத்தாம். இனி யசசமணர்களிட்ட நெருப்பு அப்படியேசென்று பாண்டியனைச் சுரமாகப்பற்றும்படிப் பிள்ளையார் திருவுள்ளமிசைந்தது கருணைகாரணமன்றிக் கொடுமைகாரணமன்று. சமணர்கள் பிள்ளையாரிடஞ்செய்தது கொடுமைகாரணம். சமணர்களது கொடுமை பயன்செய்திலது. பிள்ளையாரது கருணை பயன்செய்தது. எனவே, பாண்டியனைத் திருந்தப்பண்ணித் திருவடிக்காட்படுத்திய தெனலமைந்தது. "பையவேசென்று பாண்டியற்காகவே" என்ற திருவாக்கினேற்றத்தைச் சேக்கிழார்பெருமானே யினிதுபிரகாசப்படுத்தினர். பிள்ளையாரது பேராற்றலைப் பாண்டிமாதேவியா ரறிந்தவராயினும் அப்பேரருளாளர்மாட்டுத் தமக்குண்டாயிருந்த வன்பின்மிகுதிபற்றிச் சமணர்கள் அவ்பாவிபற்றிய தீமைக்கஞ்சினரெனத் தொண்டர்சீர்பரவுவார் பின்னர் விதந்தனரென்க. அன்றியும், பெண்கடன்மையாய பேதைமையு மொருவாறு பொருந்தும். எம்பிரானுமேவிய சுரநோயைச் சமணர்கள் நீக்கற்பாலரோ? எல்லாம்வல்ல கடவுளது சங்கற்பத்தையொன்றுக்கும் பற்றாத ஸாமானிய கிடம்போல்வாரோ கடந்திடற்பாலார்? பிள்ளையாரது சங்கற்பத்தை அப்பெருந்தகையாரேயன்றி வேறு ஒருவரும் மாற்றும் வலிபெறாரென்க. சமணர்கள் பாண்டியனது சுரத்தை நீக்கப் பலவாறு முயன்றும், பயன்படாதொழிந்ததேயன்றி அவர்பாலரசனுக் கருவருப்புமன்றோ விளைந்தது? சுரநோயாகிய வநுக்ரஹத்தை எம்பிரான் பாண்டியன்பக்கல்செய்த நலாரனன்றோ பாவிகளாகிய சமணர்களை அவன்வெறுக்க ஹேதுவாகியது? அதனைத் தக்கஸமயமாகவறிந்தே பாண்டியனது செவியிற் பிள்ளையாரது திருநாமமந்திரமாகிய ஸ்ரீஜ்ஞாநஸம்பந்தோச்சாரணையை அவனதுபத்தினியாரும், மந்திரியாரு மெடுத்திசைத்தார்கள் கோடைவெப்பத்தில் வெதும்பினவனுடலிற் றென்றல் வீசியதுபோலன்றோ பாண்டியனது சுரவெப்பினைப் பிள்ளையாரது பஞ்சாக்ஷர மந்திரோச்சாரணை சிறிதுநீக்கிக் குளிர்வித்தது? அந்தஸாதோஷத்தால் பிள்ளையாரது தரிசனத்தைப் பாண்டியர்பெருமான்

விரும்பியது ஸஹஜமாயிற்று. அன்றியும், பிள்ளையாரது திருமேனிக்காட்சியா லுயிர்களுக் கிம்மைமறுமை வீட்டின்பங்க ளெளிதிலுண்டாமென்னு மேலோர்துணிவுரையின் படியேயன்றோ பாண்டியர்கோமானுக்கு எல்லாவாழ்வு மெளிதிலுண்டாயின? மேல்பிள்ளையார்தாமே யாவுந்தந்து ரக்ஷிக்கின்றவராயின், அப்பெருந்தகையார் சொக்கலிங்கப்பெருமானது ஸந்நிதியையணைந்து திருப்பதிகம்பாடிச் சமணர்களை வாதில்வென்று அழிக்கும்பொருட்டுச் சிவபெருமானது திருவுள்ளத்தையறிந்து, பின்பு அவ்வாறேசெய்து முடித்தாரெனல் யாங்ஙனமெனின், அதனைவிளக்குதும். பிள்ளையார் சிவனாருக்குப் பிள்ளையாராதலும், அடியவராதலுமாகிய கோலங்கொண்டதற்கேற்பவே யாவுஞ்செய்த லமைவுடைத்தெனவும், யாண்டுமிதுவே நியாயமாகக் கொள்ளற்பாலதெனவும் மேலே யோரிடத்தில் யாம் கூறினேமாதலால், அதனையே மீண்டு ஞாபகத்திலூட்டி விசிராந்தியடைந்தாம். அன்றியும், சோமசுந்தர பாண்டியனாக ஸ்ரீசிவபெருமான் திருவிளையாடல் புரிந்தகாலத்தில், அவர் ஸ்ரீசொக்கலிங்கப்பெருமானைப் பூசித்து வழிபட்டதும், மாமனாகவந்து வழக்குரைத்தகாலத்தில் அவ்வாறே வழிபட்டதும், இன்னும் பலஸந்தாபங்களில் வழிபட்டதுமாகிய வருட்கோலங்களை பிள்ளையாரது திருவிளையாடலை ஸமர்த்திக்கும்வாய்மையிற் சிறந்து விளங்குமென்க. எமதுபிள்ளையார் சுதந்தரரென்பதும், அவர் சிவனாரது திருவுள்ளத்தையறியப்பாடியது மெய்படியார்க்கு நடைகற்பிக்கவே யென்பதும் ஸ்ரீசேக்கிழார்சுவாமிகள் திருவாக்கானே வெளிப்படுத்துதும். "என்றவருரைத்தபோதி லெழில்கொள்பூம்புகலிவேந்த - ரொன்றுநீரஞ்சவேண்டா வுணர்விலாவமணர்தம்மை - யின்றுநீருவகையெய்த யாவருங்காணவாதில் - வென்றுமீனவனைவெண்ணீ றணிவிப்பன்விதியாலென்றார்" என்னும்பாடலை எப்போதுபாடியருளினர்? ஸ்ரீசொக்கலிங்கப்பெருமானது திருவுள்ளத்தை எம்பிரான் அறிவதன்முன்னரா? அதற்குப் ன்னரா? பிள்ளையார் சிவனாரது திருவுள்ளத்தை யறிந்து, அவரது திருவருளைப்பெற்றே சமணைவாதில்வெல்லு மாற்றலுடையவராயின், மேற்போந்தபாடல் அஸங்கதமாகும். என்னை? சிவனார் தமக்குப் பின்னரருள்செய்வாரென்னுந் திடத்தால் பிள்ளையாரங்ஙனந் துணிந்து கூறினரெனின், அங்ஙனமேல், "யாவருங்காணவாதில்வென்று" என்பதனோடு (சிவனருளால் எனத) தமது அஸ்வதந்திரம் போதர விளக்குதல்வேண்டும். அங்ஙனமின்மையின், அவர்சுதந்தரரென்ப

தே பெறப்பட்டு, அவரது திருப்பதிகத்தின்பயன் பரப்பிரயோஜனமாக முடிந்தது வலித்தம். இன்னும் விரிக்கிற் பெருகும்.

இதுநிற்க, பிள்ளையார் பாண்டியனிடத்திற் சென்றருளியகாலத்தில் அவன் ஆஸநமிடுகவெனப்பணித்தது அவனுடைய பாவங்களருகிப் புண்ணியமோங்கிவளரும் பெற்றிமையாலென்க. பிள்ளையாரது பெருமையைக்கேட்டும், அவரது திருநாம மந்திரத்தைப்பலகாலுச்சரித்தும், அவரது திருமேனியின்பொலிவை நேரிற்பார்த்தும், இவ்வநுபவங்களிகழ மனத்தாற் பன்முறைச்சிந்தித்து மியங்க அவனது தவமதிகரித்திருந்தமையால் எம்பெருமான் தனக்குப் பரமாசிரியருந் தெய்வமுமாகிய வுண்மைபோதரவே அவரை இருந்த திருக்கோலமாகத் தரிசித்தின்புறுமாறு நேர்ந்ததென்க. பிள்ளையாருக்கு ஆஸநமிட்டதேயன்றி அவரைத் தரிசித்தமாத்திரத்தி லிருகரங்களையுங்குவித்து அஞ்சலியால் வணங்கினனென்பதுமேயன்றோ வவனது தவவாய்மையை விளக்கியது? இவ்வருமைப்பாடுளரசன்பக்க னிகழ்ந்தமையேயன்றி, அவன் ஸ்வாமியைப்பார்த்துத் தேவரீருடைய ஊர்யாது என்று குசலப்பிரசினஞ் செய்தானென்கையால், அவன் சமணசமயப்பற்று விடப்பெற்றுக் கண்டுமுட்டு, கேட்டுமுட்டு என்னும் பெருமுட்டுகளினின் றும்விலகி நிர்மலநிலையெய்தினனென்பதே நிலைக்கும். காண்பதுங்கேட்பதுமே முட்டாகுமாயின், சைவவேடத்தவரோடு பேசுவது எவ்வளவு பெருமுட்டாகவேண்டும்? அப்பீடைகள் யாவுந்தொலைந்த பெருஞ்சீரெய்தவெம்பெருமான் அவருக்குப்பேரருள்புரிந்த வருட்டிறஞ் சாலப்பெரிது! பெரிது!! பாண்டியன் ஸ்வாமியைக்கேட்டதற்கு விடையாகக் (கழுமலமாம் பரவுமூரே) என்று ஸ்வாமிபதிலுரைத்தது ஆன்மாக்களுடைய ஆணவாதிபாசங்களைக் கழுவுமியல்பினேம் யாமெனவும், அதனால் யாமிருக்குமூர் கழுமலமாகுமெனவும், உன்னையும் மும்மலச்சேற்றினின்றுமெடுத்துக் கழுவித் திருவடிக்காட்படுத்திக்கொள்ளவே யீண்டெழுந்தருளினமெனவுந் தெரிவித்தவாறாயிற்று. சீர்காழிக்குப் பலநாமங்களிருக்கவும், அவைகளில் யாதேனுமொன்றை முடிவாகக்கூறாமல், அவை ளை முன்வைத்துக் கழுமலம் என்பதை முடிவில்வைத்து அப்படியே பதிகமுற்றிலுநிரப்பி விளக்கினமையால், அரசன் நமது சுரநோய் நீங்குமென்பதற்கு இதுவே சுபசூசனையென்று மகிழ்ந்தா னென்பதும் போதரலாயிற்று. இவ்வாறு நிகழுமதிசயங்களில், சமணர்களுக்கு விபரீதஞ்சநிப்பது ஸகஜந்தா

ஞகையால், அவர்கள் யாவரும் எமது ஞானமணியாகிய அருட்சோமனைப்பார்த்துப் பலவாறு புலம்பினர்கள். சந்திரனைப்பார்த்து நாய்கள் குரைப்பது ஸகஜமாகையால், அச்சமணர்களை யாம் நாயென்றுகுறைகூறியது குற்றமாகாது. சமணர்களேயன்றி வேறு எத்திறத்துப் போலிப்பெரியோரேனு மச்சமணரைப்போ லெம்பிரான்மாட்டு அபராதமிழைத்துப் புலம்புவாரெனின், அவரையும் யாம் வெறிகொண்ட நாய்களெனக் கூசாதுபேசப் பின்னிடேம்! பின்னிடேம்!! சமணர்களது துன்மார்க்கத்தைக்கண்ட மங்கையர்க்கரசியார் முன்போலப்பயந்து அரசனையிரந்து அச்சமணர்களைத்தடுக்கக் கேட்டுக்கொண்டாரென்பது அவரது அன்பின்மிகுதியென்றே பலதரமு மறைந்திடவுரித்தென்க. அதற்கு எமது பிள்ளையார் "ஈனருக்கெளியேனலேன்றிரு வாலவாயரனிற்கவே" என வுறுதிகூறினரெனபது ஸாதுக்களாகியமெய்யன்பர்க ளெப்போதுந் திருவருட்டாரகத்தினிலேபெறெய்தி யிருப்பர்களென்னு நிலைமையை யறிவித்தவாறாயிற்று. எவ்வளவுவெற்றிகள் தம்பக்கனிரம்பினு மத்தனை யுந் திருவருணடத்து முறைமையாகக் கண்டுநிற்றலே யமைவுடைத்தன்றி, அவைகளைத் தம்மவாகநினைப்பதுங் கூடாதென்பதையே அவ்வருள்வாக்கியம் நிலைப்பித்தவாறாயிற்று. இவ்வுண்மை யுபதேசங்களையுணர்ந்து குணப்படுவதொழிந்து ஞானஸம்பந்தர் பதியா? பசுவா? என்று விசாரித்திடுதல் தன்னுடையதாயை ஸம்ஸாரியா? விபசாரியா? என்று விசாரிக்கும் பெரும்பாவிக்கே சிறக்கும்.

இனிசசமணர்கள் எம்பிரானுேராடு வாதுசெய்தவன்மையைச் சற்றுப்பரியாலோசிப்பாம். அவர்பானிகழ்ந்தவாது சுரவாது, அனல்வாது,புனல்வாது எனவிரிந்தது. அவற்றுள், சுரவாதில்எம்பிரானு திருநீற்றுமாந்மியத்தை விளக்கினர். அனல்வாதில், சிவபெருமான் அக்கினிவடிவினரென்பதை விளக்கினர். "ருத்ரோவா ஏஷயதக்நி:" என்பது ஒத்து. அக்கினியைக்கூறவே சிவனுரது அட்டமூர்த்தமும் போதரலாயிற்று. சிவபெருமான் பிருதிவியிற்பவராயும், அப்புவிற் சர்வராயும், தேயுவிலுருத்திரராயும், வாயுவிற்பீமராயும், ஆகாயத்தில் மகாதேவராயும், சூரியனிலுக்ரராயும், சந்திரனிற் சோமராயும், ஆத்மாவிற்பசுபதியாயும் விளங்குகின்ருரென வேதங்கூறுகின்ற வாய்மையும் வியக்தமாயிற்று. இதனுல், அஷ்டமூர்த்தியாயுள்ள பரனதியல்பு பிரகாசப்படுத்தினுராயிற்று. மேற்கூறிய வெட்டுப்பொருளை

றிச் சிற்சடபேதமாகிய பிரபஞ்சம் வேறில்லாமையால், அவற்றுள் சித்துக்களை அடிமைகளாகவும், அசித்துக்களை யுடைமைகளாவுங் கொண்டு, அவையியங்கவியக்கு ஞானக்கிரியாஸ்வரூபராயுள்ள கருணாசாலித்வமே ஆண்டுக்கருதப் போந்ததென்க. இவ்வுண்மை விளங்கவே ஸ்ரீ சேக்கிழார்பெருமான் "அட்டமூர்த்தியைப் பொருளெனவுடைமையாலமர்ந்து - பட்டதீயிடைப் பச்சையாய்விளங்கியதன்றே" என விதந்தருளினர். இனிப் புனல்வாதில் உலகமுய்தற்கான ஸம்பவங்களை "வாழ்கவந்தணர்" என்னுந் திருவாக்கால் விளக்கினர். அந்தணர், வானவர், ஆனினமென்னு மிவை வாழ்தலாற் புனல்வீழ்தலும், இவற்றால் வேந்தனோங்குதலும், வேந்தனோங்குதலாற் றீமைபாறலும், தீமைபாறலாற் சிவனாரது பெரும்புகழோங்குதலும், சிவனாரது பெரும்புகழோங்குதலா னுயிர்களுக்குப் பிறவித்துயர் நீங்குதலுமாகிய நலங்கள் வெளிபாயினமையால் எமது பிள்ளையார் திருநீற்றின் சார்பையும், அச்சார்பாலடையத்தக்க பெரும்பேறாகிய சிவப்பேற்றையும், அச்சிவப்பேற்றினை யடையத்தக்க வேதாவின் ஸம்பவங்களையும் வெளிப்படுத்தினாரென்பதே ஸித்தம். திருநீறு முத்திஸாதனமென்பதும், சிவபெருமான் முத்திநாதரென்பதும், முத்தியைவேண்டுபவர் சிவனையடைந்து துன்பநிவிர்த்தியைத் தேடுவரென்பதும் (சிவாதிக்யரத்நாவளி முதற்பாகம், இரண்டாவது பாகங்களில்) சுருதிப்பிரமாணங்களால் நிரூபிக்கப்பட்டிருத்தல் கண்டுதெளிக. அன்றியும், "அரனாமமேசூழ்க" என்றதை ஸ்ரீ பஞ்சாக்ஷரத்தை விளக்கியருளினாரெனக்கொண்டு முத்திஸாதனமாகிய திருநீற்றையும் ஸ்ரீ பஞ்சாக்ஷரத்தையுமே கிரகித்துச் சிவத்தை யடையத்தெரிவித்த நலமுணர்ந்து ஸாதுக்கள் குணப்படுவரென்க. இவ்வளவிலமையாது "ஆழ்கதீயதெல்லாம்" என்றதை உலகாயதந்தொடங்கிப் பாஞ்சராத்திரமீறாயுள்ள பாசஞான பசுஞான ஸித்தாந்தங்களை யெனத்தெளிந்து அவைகளையொதுக்கிவாழு நலத்தைநாடியுய்வர் பெரியோரென்க. இதனை வேறுவிதமாகவும் பிரகாசப்படுத்துவாம். எங்ஙனமெனின், திருநீறு முதற்கண் விளங்கியது. அத்திருநீறு அக்கினியாலன்றி யமையாதென்பதே பின்னர் விளங்கியது. அவ்வக்னிகாரியம் நிகழ்வது அந்தணரும், வானவரும், ஆனினமும் வாழ்ந்தவிடத்தென்று அநந்தரம் விளங்கியது. இப்பரமதருமம் நடைபெறுவது புனல்வீழ்ந்து, அரையனோங்கினல்லதமையாதென்பது அதன்பின்னர் விளங்கியது. இவ்வளவுங் கூடி

னாலன்றிப் பாபக்ஷயமும், புண்ணியவிர்த்தியும், சிவப்பேறுமுண்டாகாவென்பது முடிவில் விளங்கியது. இதனால், திருநீற்றினை விளைக்கவே அக்னிகாரியம் அந்தணருக்கவசியமும், அந்தணர் தமது அக்னிகாரியத்தால் திருநீற்றினை யோம்பாதபோது அவரந்தணராகாமையும், அவ்வக்கினியைச் சிவமாகத்தெளிந்து ஆஜ்யாபிஷேகத்தா லப்பரஞ்சுடர்ப்பிரானை வழிபடாதபோது துக்கநிவிர்த்தியுஞ் சுகப்பேறு மவர்க்குண்டாகாமையும் பெறப்பட்டன. இவ்வுண்மை தேர்ந்தவந்தணர் திருநீற்றினைத்தரித்தலும், சிவனை வழிபடுதலுமாகிய வுபர்நலங்களை யடைதலன்றி அவைதிகமாகிய இதரபுண்டரங்களையும், க்ஷுத்ரதேவதோபாஸனைகளையுங் கைக்கொண்டு அவலத்தழியாரென்க. இன்னும் விரிக்கிற் பெருகும்.

இனிப்பிள்ளையார் தமது திருமுறை திருக்காப்பிட்ட கயிற்றை யவிழ்த்து, அத்திருமுறையைத் தமது திருக்கரத்தினான் மறித்த போது திருநள்ளாற்றுப்பதிகம் நேர்ந்தமையா லதனையே நெருப்பிலிட்டனர். வேறு எந்தப்பதிகநேரினு மதனையே நெருப்பிலிடத் தட்டின்று. தாம் திருவாலவாயின்கண் ணடத்தியவாதி லத்திருவாலவாய்ப்பதிகமே நேராது வேறுதலப்பதிக நேர்ந்தவிதம் யாதென்பாருக்கிதனை விறைதந்தவாறாயிற்று. திருவாலவாய்த் திருப்பதிகத் ானே யவ்வாது நடைபெறுமாயி னத்திருவாலவாயொழிந்த ஏனைப்பதிகளுக் கமுக்யமுந் தெய்வீகக்குறைவு முண்டாகுமென்பது போதரவே திருநள்ளாற்றுப்பதிக நேர்ந்ததெனவறிக. இதனாற் றிருநள்ளாற்றுத் திருப்பதிகமே யேற்றமுடைத்தென்பார்மதமும் அமுக்யமாயிற்று. அத்திருநள்ளாற்றுப் பதிகம், “போகமார்த்த பூண்முலையாள்” என்பதாகையால் அதனையுங்கொஞ்சம் பரியாலோசிப்பாம். அதில், உமாஸஹாயர் - விருஷபாரூடர் - சர்மாம்பரதாரி - கோவணவுடையர் - நாகபூஷணர் என்னும் ஸ்ரீபரமேசுவரரது ஸ்வரூபலக்ஷணங் கேட் ப்படுகின்றது. இதில் பதியினது அடையாளங்களையே யினிது போதருவித்தமையால், (சுரவாதிற்) போந்தவஸ்துவைச் சிவேதரமான வேறு ஒருபொருளாகமயங்குதல் கூடாதென்பதும், இதரசமயங்களாற்போந்த வேறு எந்தப்பொருளும் பரதத்வமாகாதென்பதுமே நிலைபேறாயின. இதனால், சைவஸித்தாந்திகள் பரமசிவத்தினுண்மையை இந்தத் திவ்யஸூக்தியின்வண்ணமே அறிந்தனுபவிக்கவேண்டியது. “உமாஸஹாயம் பரமேச்வரம் ப்ரபும் த்ரிலோசநம் நீலகண்டம் ப்ரசாந்தம், த்யாத்வாமுநிர்க்கச்சதி பூதயோநிம், ஸமஸ்த

சாக்ஷிம் தமஸ: பரஸ்தாத்" என்னுமுபநிஷத்து மிதனைநிறுத்தும். இவ்வுண்மை தேர்ந்திடாத சைவப்போலிகள் தத்தமக்கியைந்தவாறேகூறிமயங்குப. இதுநிற்க.

பிள்ளையார் நெருப்பிலிட்ட ஏடு நீறாகாமலிருந்தது யாங்ஙனம்? இது பூததத்வசாத்திரத்திற்கு விரோதமெனின், பச்சிலைமூலிகையா னெருப்பைநிறுத்துத லுலகி லுண்மையநுபவமாகலின் விரோதமின்றென்க. ஆயிற்பிள்ளையார் பச்சிலையினாற்றான் அனல்வாதத்தை முடித்தனரோவெனின், அப்பச்சிலை அதுபோல்வதாகிய வேறுபொருளொன்றினாற் றன்மைகெடுமியல்பினதாகலி னஃதஸப்பியமென்க. திருவருளே நெருப்பினீறாகாது ஏடுநின்றதற்குக் காரணம். இத்திருவருள்போல்வ தொன்றும், இதற்குமேலிட்டதொன்றும் இதனாலாகாததொன்று மில்லாமையால் பூர்வபட்சிகளது மதம் நிரஸ்தம். இவ்வாறே இந்தப்பிள்ளையாரிடத்தும், ஏனையாசாரியர்களிடத்தும் நிகழு மற்றமாந்மியங்களையுங்கொண்டு குணப்படுக. விரிக்கிற் பெருகும்.

இனி எம்பெருந்தகையார் செய்தருளிய புனல்வாதில் அவர் வைகையிலிட்டவேடு எதிரேறி நில்லாதோடுகையிலேடுநிற்கப் பாடியருளினதும், அது நின்றகாட்சியும் போதாவேயன்றோ (திருவேடம்) என்னுந் தலமொன்று ஸாக்ஷிகூறிக்கொண்டிருக்கின்றது? இதுபோன்ற பலஸாக்ஷிகள் நால்வராசாரியர் விஷயமாக நிலைபெறுகின்றன. அவை "ஆண்டார்பந்தி-நல்லூர்ப்பெருமணம்-மணம்வந்தபுத்தூர்" என்பனவாதியாம். இவற்றுள், ஆண்டார்பந்தி திருவீழிமிழலையில் பிள்ளையாரும், அரசுகளும் அடியார்களுக்கு அன்னமருத்திய தலம். அடியவர்பந்தி எனவழங்காமல் ஆண்டார்பந்தி எனவழங்குமதிசயம் எம்பெருமக்க ளடியவராகாமையும், ஆண்டவராகின்றமையுமாகிய வுயர்வையே விளக்கியது. இவ்வுண்மை தெரியாதார் ஆளுடைய பிள்ளையார், ஆளுடையவரசுகள்-ஆளுடையநம்பிகள்-ஆளுடைய வடிகள் என்ற பிரயோகங்களை அந்யதாகொண்டு மயங்குகின்றனர். சிவனால் ஆட்கொள்ளப்பட்டமையாலன்றோ ஆளுடையாராயினரெனல் மரபறியார் மதமென மறுத்திடுக. உலகுயிர்களை உடைமையும் அடிமையுமாகக் கொண்டாளுந் தன்மையரெனலே யமைவுடைத்து இனி, நல்லூர்ப்பெருமணம் பிள்ளையார் திருமணமுடித்ததலம். மணம்வந்தபுத்தூர் வன்றொண்டப்பெருமான் திருமணக்கோலம்

கொண்டருளியதலம். இவைகளேயன்றி, "கண்ணைக்கெடுத்ததெய்வம் கோலைக்கொடுத்தது" எனவும், "ஆற்றிலேபோட்டுக் குளத்திலேதடவுதல்" எனவும்போந்த பழமொழிகளில், கண்ணைக்கெடுத்தது திருவொற்றியூரிலும், கோலைக்கொடுத்தது திருவெண்பாக்கத்திலுமென்று ஸ்ரீ ஸுந்தரமூர்த்திகள் விஷயமாக அறியவேண்டியது. இவரிடத்திலேதானே பிந்திய பழமொழியும் ஸமர்த்தனமாம். ஆற்றிலேபோட்டது மணிமுத்தாநதியிற் சிவனார்கொடுத்த பொன்னைப்போட்டதும், குளத்திலே தடவியது திருவாரூர்த்திருக்குளத்தி லதனை யெடுத்ததுமாமென்றறிக. இவ்வாறு பலவுளவற்றை மெய்யன்ப ராங்காங்கறிந் தின்புறுவாராக. பிள்ளையார் ஆற்றிலிட்ட திருவேட்டில் "வேந்தனுமோங்குக" என்றமைந்தநலத்தாற் கூனுயிருந்தபாண்டியன் அது நிமிர்ந்தோங்கப் பெற்றானுகலின், அத்தகைய வருணாலஞ்செறிந்த திருப்பதிகம் அதுளழுதியிருந்த வேட்டினை யோங்கச்செய்ததெனலதிசயமன்று. அத்திருப்பதிகத்திற் போந்த "வேந்தனுமோங்குக" என்னும்பகுதி பாண்டியனது கூனை நிமிர்த்தினமையால், அத்திருப்பதிகத்திற்போந்த வேனைப்பகுதிகளு மவர்திருவாக்கிற்போந்த நலமெய்துதலினுலே நிலைபெறுயினவெனல் சரதமாயிற்று. அவர் திருவாக்கில் அவை விஷயமாகாதபோது அவை நிலைபெறுவென்பதே திண்ணம். ஆகலினுற்றானன்றோ யாமிந்நூலின் முதற்கண்ணெடுத்துக்கொண்ட "சொற்கோவும்" என்னுந் திருவெண்பாவில் "முற்கோலி-வந்திலரேனீறெங்கே மாமறைநூலுனெங்கே-யெந்தைபிரானைங்தெழுத்தெங்கே" எனப் பூர்வீகர்க ளறுதியிட்டுரைத்திருக்கின்றனர்? பிள்ளையாரில் வேறுகாத வேனையாசாரியர்களு மீண்டுப் படிக்கப்பட்டிருத்தல் பாதகமாகாதென்க. இனிச் சமணரைக்கழுவேற்றிய பகுதியை மேல் விசாரித்து முடிவுசெய்தோமாகையா லாண்டுக் கண்டுதெளிக. அநந்தரம் பிள்ளையார் சொக்கலிங்கப்பெருமானை வணங்கி "வீடலாலவாயிலாய்" என்னுந் திருப்பதிகத்தில், "பாலனுயதொண்டுசெய்து பண்டுமின்று முன்னையே" எனத் தமதுசுதந்தரத்தைதயே விளக்கினர். ஞானஸம்பந்தராயுள்ளபோதும், தத்பூர்வமுந் தாஞ்சிவனார்க்குப் பாலரென்பதையே யாண்டறிவித்தாராயிற்று. பிதா பிள்ளைக்குத் தேடும் பெருமையைத்தனையும் அப்பிள்ளைக்கே யுரிமையாவது நைஜதர்மமாகையால், சிவனாரது தொண்டாகச் சைவஸ்தாபனஞ்செயது பிள்ளையார் உலகமுய்யவழிதேடியது தமது பெருமையையே நிலைபெறுவித்ததாயிற்று. பிள்ளையார் வினைக்கீடாகப்பிறந்த வோருயிராகாமையுமா; அதனுல் வினைப்போகத்தை நுகர்ந்தொழிக்குஞ் சுயப்

பிரயோசனமெய்தாது, அவ்வினைப்போகத்தை யுயிர்களுக்கு நுகர்வித்தொழிந்தலாகிய பரப்பிரயோசனத்தைச்செய்யும் பதியாயினமையும் போதரவே ஸ்ரீசேக்கிழார்சுவாமிகளது திருவாக்குகள் பல விளங்குகின்றன. அவை "சராசரங்களெல்லாஞ் சிவம்பெருக்கும் பிள்ளையார்" எனவும், "பரசமயநிராகரித்து நீறாக்கும்- புனைமணிப்பூணகாதலன்" எனவும், "பேறுலகினுக்கெனவரும்பெரியவர்" எனவும் "அருமறைகடலையெடுப்ப வாண்டதிருமுடியெடுத்து" எனவும், "எழிசையும் பலகலையு மெய்வலத்த தனித்தனியே - வாழவருமவர்" எனவும் போந்தனவேயாம். இவ்வாறன்றி (வினையொழியப்பிறந்துசிவம் வேண்டிமிகத்தவஞ்செய்து) எனவும் (எண்ணிறந்தசிவன்பாத மிருவினைகட்டறநின்றார்) எனவும் வருவன போல்வதொரு பிரயோசனமும் பிள்ளையார் விஷயமாக ஸ்ரீசேக்கிழார் திருவாக்கிற் பெறப்படாமையால், அப்பெரியோனது அருமைத்திருவாக்குகளிற் போந்த கௌரவப்பிரயோகங்களைக் கிலுஷ்டகல்பனை வழியிற்றிருப்பித் தாழ்ந்த பொருள்களைக் கற்பித்து வீணுக்கு முகத்தலைப்போட்டு வருந்தும் போலிகளது போதத்தை ஸாதுக்கள் சாற்கடைக்கொண்டொழிக்க ஜசமொசமெருந்தக்கிக் குறைப்படுவாராக. இன்னும் விரிக்கிற் பெருகும்.

## பிள்ளையார் திருப்பிரயாணம்.

(கசுரு-வது பக்கத்தொடர்ச்சி)

பிள்ளையார் சமணர்களைவென்று மதுரையிலெழுந்தருளியிருக்கையில் சீகாழியினின்று சிவபாதஇருதயர் மதுரைக்குவந்து பிள்ளையாரைக்கண்டு தொழுதார் பிள்ளையாரு மவரை யெதிர்தொழுது உபசரித்தனர். அங்கேநின்றும் பாண்டியர்பெருமான் - மங்கையர்க்கரசியார் - குலச்சிறையா ரிவர்களிடத்தி லரிதில விடைபெற்றுக்கொண்டு புறப்பட்டுத் திருப்பரங்குன்றம் - திருவாப்பனூர் - திருப்பூவணம் - திருக்குற்றாலமுதலிய தலங்களுக்கெழுந்தருளி பதிகங்களோதிமகிழ்ந்து இராமேச்சுரஞ்சென்று அங்குச் சிலபோது தங்கி, அங்கிருந்தபடியே ஈழமண்டலத்திலுள்ள திருக்கோணமலை-திருக்கேதீச்சரம் என்பவைகளைப் பாடித்துதித்தார். சிலநாள்கழிந்தபின்னர் அங்கேநின்று திரும்பித் திருவாடானை முதலிய தலங்களைத் தரிசித்துக்கொண்டு குலச்சிறையாரது பதியாகிய மணமேற்குடியை

வந்தடைந்தருளினார். அங்கிருந்துகொண்டே பலபதிகளுக்குச் சென்று பதிகம்பாடித்துதித்தார். பின்பு சோழநாட்டுக்கெழுந்தருளினார். அப்போது பாண்டியர்பெருமானும், ஏனையோரும் வருந்தித் தாமுங்கூட வருவதாகக் கேட்டார்கள். சுவாமி அவர்களுக்குத் திருப்தியுரைத்துத்தேற்றி விடைபெற்றுக்கொண்டு அவர்களை நிற்கச்செய்து திரும்பிவிட்டார். பாண்டிநாட்டைக் கடந்தவராகிய பிள்ளையார் திருக்களர் - திருப்பாதாளீச்சரமுதலிய தலங்களை வணங்கிக்கொண்டு முள்ளிவாய்க்கரையை யணைந்தருளினார். அங்கே ஆறு பிரவாகங்கொண்டு ஓடங்களினாலேகொள்ளாமையால், அவைகளைக் கரையிலே நிறுத்திவிட்டு ஓடக்காரர்கள் போய்விட்டார்கள். பிள்ளையார் அடியார்களோடு கரையிலேநின்று எப்படி ஆறுகடப்பதென்று யோசித்தனர். அப்போது ஆற்றுக்கு அந்தக்கரையிலுள்ள திருக்கொள்ளம்பூதூர் என்னுந்தலந் தோன்றியது. உடனே அந்தத் தலத்துக்கெழுந்தருளி அங்கு ஸ்வாமிதரிசனஞ் செய்யவேண்டுமென்னுமாசை யுள்ளத்திற் பொங்கியெழுந்தது. அதனால், கரையிலே கட்டப்பட்டிருந்த ஓடங்களை யவிழ்த்து ஆற்றிலேதள்ளி அவைகளில் அடியவர்களை யேறும்படிச்செய்து தாமுங்கூடவேறி "கொட்டமேகமழும்" என்னுந் திருப்பதிகம் அருளிச்செய்தனர். திருவோடம் ஒருதடையுமின்றி அக்கரையை யடைந்தமையால், அடியார்கள் கீழேயிறங்கி மகிழ்ந்தார்கள். உடனே பிள்ளையார் திருக்கோயிலினுட்சென்று வணங்கித்துதித்துச் சிலநாளங்கெழுந்தருளியிருந்தனர். பின்பு திருநள்ளாறு என்னும் பதியை அடைந்தனர். சமணர்களை நெருப்பிலேநின்றுவென்ற பதிகத்தையுடைய தலமாகிய வந்தத்தலத்தை யடைந்தபோது "பாடகமெல்லடி" என்னும் வினாவுரைத் திருப்பதிகம்பாடி மகிழ்ந்து சிலபோதுவைகினார். பின்பு திருத்தெளிச்சேரியை அடைந்து சிவதரிசனஞ்செய்துகொண்டு செல்லும்போது பௌத்தர்களூராகிய போதிமங்கைசமீபித்தது அதனையறிந்த மெய்யடியார்கள்யாவரும் சங்கு-தாரைமுதலிய சின்னவொலிகளையும், பலவாச்சியமுழக்கங்களையும், விருதுகள் கூறுமாரவாரங்களையும் எழுப்பி அங்குள்ள புத்தர்களைக் கலக்கினார்கள். அதனால், புத்தர்கள் வெகுண்டு தங்கள் சமயத்தலைவனாகிய புத்தநந்தியோடுவந்து அடியவர் திருக்கூட்டத்தவர்களோடு பிள்ளையார் தங்களுடைய மடத்து வீதியிலேபோவதுகூடாதென்று தடுத்தார்கள். அதுகண்டு பொறாராகிய சம்பந்தசரணாலயர் எமது ஆண்டவனையுந் தடுப்பவருள

பிள்ளையார், சிலநாளாயினபின் அந்தத்தலத்தைநீங்கித் திருமாகறல், திருக்குரங்கணின்முட்டம் என்னுந்தலங்களைத் தரிசித்துக்கொண்டு ஸ்ரீகாஞ்சிபையடைந்தார். அங்கே திருவேகம்பம் - திருக்கச்சிநெறிக்காரைக்காடு - திருவனேகதங்காவதம் - திருக்கச்சிமேற்றளி யென்பனவைகளைத் தரிசித்துக்கொண்டு, திருமாற்பேறு - திருவல்லம் - திருவிலம்பயங்கோட்டூர் - திருவூறல் முதலாகிய பதிகளுக்குச்சென்று பதிகங்களோதிவணங்கிப் பழையனூர் திருவாலங்காடடை நோக்கிநடந்தார். அது காரைக்காலம்மையார் தலையாலேநடந்த திருப்பதியாதலால் அதனைமிதிப்பது கூடாதென்று அதற்கு ஸமீபத்திலுள்ள வேளூரிலே அன்றிரவு தங்கியருளி, அங்கிருந்தபடியே சிவனார் வேண்டுகோளால் "துஞ்சவருவாரும்" என்னுந் திருப்பதிகம் பாடியருளினார். அங்கேநின்றுந் திருப்பாசூர்-திருவெண்பாக்கம், திருக்காரிகரை முதலியதலங்களை வணங்கிக்கொண்டு திருக்காளத்தியையடைந்து ஸ்ரீ கண்ணப்பதேவருடைய திருத்தொண்டினைச் சிறப்பித்து "வானவர்கடானவர்கள்" என்னுந் திருப்பதிகம்பாடித் திருமலைமேற்சென்று ஸ்வாமியைவணங்கினார். பின்புமலையினின்றுமிறங்கி பொரு திருமடத்திலெழுந்தருளியிருந்து காலந்தோறுந் தப்பாமல் ஸ்வாமிதரிசனஞ்செய்துகொண்டு சிலபோது அங்குவசித்தார். அந்தக்காலத்தில் அங்கிருந்தபடியே உத்தரகைலாசம் - திருக்கேதாரம் - திருக்கோகர்ணம் - திருப்பருப்பதம் - இந்திரநீலப்பருப்பதமுதலிய தலங்களைவணங்கித் திருப்பதிகங்கள் பாடியருளினார். சிலநாள்கழிந்தபின் ஸ்ரீகாளத்தியைவணங்கித் திருவேற்காடு-திருவலிதாயமுதலிய தலங்களைவணங்கிக்கொண்டு திருவொற்றியூரையடைந்து ஸ்ரீ சிவபெருமானை வணங்கித் துதித்து அங்கெழுந்தருளியிருந்தார். அப்போது திருமயிலாப்பூரில் வைசியகுலதிலகராயெழுந்தருளியிருந்த சிவநேசர் என்பவர் பிள்ளையாரைத் திருவொற்றியூரிற்சென்று தரிசிக்குமாறு திருமயிலையிலிருந்து திருவொற்றியூர் வரைக்கும் நடைப்பந்தலிட்டு, வஸ்திரங்களால் விதானமமைத்து கமுகுகளும் வாழைகளுநாட்டி, தோரணங்கணிறைத்து, கொடிகள்கட்டி, மாலைகள்தூக்கி அலங்காரஞ்செய்வித்து அடியார்கள் உடன்செல்ல ஸ்வாமிஸந்நிதியை நோக்கிவந்தார். அப்போது ஸ்வாமியும் திருவொற்றியூரைநீங்கித் திருமயிலையைநோக்கி யெழுந்தருளினார். சிவநேசரும், சிவனடியார்களும் எண்ணிறந்த அடியார்கள் சூழப் பிள்ளையாரெழுந்தருளிவரு மற்புதக்காட்சியைத் தூரத்தி

லேகண்டு அளவில்லாத மகிழ்ச்சிகொண்டு பூமியிலேவீழ்ந்து நமஸ்
கரித்தார்கள். பிள்ளையார் சிவிகையினின்று மிறங்கி அவர்களை யெ
திர்தொழுதனர். அப்போது அவ்வடியார்கள் ஸ்வாமியைநோக்கி
எமதுபெருந்தகையே! அன்பராகிய சிவநேசருக்கு அரியதவத்தா
லொரு பெண்மகவுண்டாகி ஸ்ரீமஹாலட்சுமியாரைப்போல அழகு
சிறந்துவிளங்கியது. அதற்குப பூம்பாவையென்றுபேரிட்டு, அதனை
த் தேவரீருக்குக்கொடுத்துக் கலியாணஞ்செய்வித்தலே தகுதியெ
னத் துணிந்து ஓர்நாள் தமதுசுற்றத்தார் முதலிய பலருங்கேட்க
"அடியேன் என்னுடைய புத்திரியாகிய பூம்பாவையையும், என்னுடைய
பொருள்களையும், என்னையும் திருஞானசம்பந்தமூர்த்திகளுக்குக் கொடுத்து
விட்டேன்" என்றுசொல்லிப் பேரானந்தமடைந்தார். இவவாறு மகிழ்
ந்திருக்கையில், அந்தப்பெண்ணமுதம் ஓர்நாள் சேடியரோடு மல்லி
கைப்பந்தரில் பூக்கொய்தது. அப்போது அங்கொருஸர்ப்பமிருந்து
கையிற்றீண்டியது. அதனாற் சிவநேசர்வருந்திப் பலவிதஸாதகங்களை
த்தேடி முயன்றும ஓராற்றானும் அவ்விஷந்திரும்பாமல அக்குழந்தை
இறந்தது. அதுகண்ட அனபர் "இந்தப்பெண்ணைப் பிள்ளையாருக்கெ
ன்று நான் அர்ப்பணம்பண்ணினமையால் நான் இப்போது துன்புறவே
ண்டியதில்லை. இவுடலைத்தகனஞ்செய்து பிள்ளையார்வருமளவும் எலும்பை
யும், சாம்பரையுஞ் சேமித்துவைப்பேன்" என்று துணிந்து அப்படியே
தகனஞ்செய்து, எலும்பையுஞ் சாம்பரையுமோர்குடத்திலிட்டு, க
ன்னிமாடத்திலே ஸர்வோபசாரங்களுடன் வைத்திருக்கின்றார். இ
வருடையவிருத்தாந்தம் இது என்று விண்ணப்பஞ்செய்து பணி
ந்தார்கள். இவ்வருமையைக் கேட்டருளிய பிள்ளையார் மகிழ்ந்து
சிவநேசரைநோக்கி உமது திருமகளாரது என்புநிறைந்தகுடத்தை
த் திருமதிலின்புறத்தே கொண்டுவாரும் என்று கட்டளையிட்டன
ர். அவரவ்வாறே கொண்டுவந்து ஸ்ரீகபாலீசரது அபிமுகத்திலே
வைத்தனர். அதனைப பிள்ளையார்கண்டு பரமசிவனது திருவருளின்
பெருமையைச் சிந்தித்துத் திருவருணோக்கினாலே (பூம்பாவாய்) எ
ன்று அழைத்து "பூமியிலே மானிடஜநமமெடுத்தவர்கள் பெறும்பயன் சி
வனடியார்களுக்குத் திருவமுதூட்டுதலும், அவர்க்குச்செய்யுந் திருவிழாச்சிற
ப்புகளைக் கண்களினாற்கண்டு இன்புறுதலுமேயென்பது ஸத்தியமாயின், நீ
இவ்வுலகர்முன்வருவாய்" என்று "மட்டிட்டபுன்னை" என்னுந் திருப்ப
திகத்தை எடுத்தருளினார். அதில் அருளிச்செய்த (போதியோ) எ
ன்னுந் திருவாக்காகிய அமிர்தம் அவ்வங்கத்திலேபொருந்த, அது
குடத்தினுள்ளே சரீரமாய்ப்பரிணமித்தது. பூம்பாவை முதற்பாடலி

ல்வடிவுபெற்று, இரண்டுமுதல் எட்டாவது பாடல்வரையில் பன்னிரண்டுவயசடைந்து அக்குடத்திற்றானே அடங்கியிருந்தனள். அப்போது பிள்ளையார் பூம்பாவையைக்குறித்து நீ குடத்திலுள்ளடங்கி வெளிப்படாதிருப்பது தக்கதன்று, சமணர்களும் புத்தர்களும் பரிகசிப்பார்கள் என்னுங்கருத்தினைப் பத்தாந்திருப்பாட்டை அருளிச்செய்தார். அதுபொழுது பூம்பாவை தன்னைவெளியேதோன்றக் குடமுடைத்து எழுந்தாள். அதுகண்டு பிள்ளையார் திருக்கடைக்காப்புச் சாத்தியருளினார். பூம்பாவையைக் கண்டவர்களெல்லாம் அன்பும் அதிசயமுமதிகரித்துப் பலவாறுதுதித்து வியந்தார்கள். தேவர்கள் பூமாரிபொழிந்தார்கள். சிவனடியார்கள் (ஹரஹர) என்று ஒலித்தார்கள். சமணர்களும், புத்தர்களுங்கலங்கித் தள்ளாடிவீழ்ந்தார்கள். பூம்பாவையைக்கண்ட தந்தையாராகிய சிவநேசர் உள்ளம்பூரித்து, பிள்ளையாரது திருவடிகளின்மேல்விழுந்து நமஸ்கரித்தார். பூம்பாவையார் சிவபெருமானையும், பிள்ளையாரையும் நமஸ்கரித்துக்கொண்டார். அப்போது பிள்ளையார் சிவநேசரைநோக்கி இனி உமது புத்திரியை வீட்டிற்கு அழைத்துக்கொண்டுபோமென்று கட்டளையிட்டனர். அதற்கு அவர் பிள்ளையாரது திருவடிகளில் வணங்கியெழுந்துநின்று, எந்தையே! அடியேனது அரியபுத்திரியாகிய இப்பெண்கொடியைத் தேவரீர் திருமணம் புரிதல்வேண்டும் என்று பிரார்த்திக்க, பிள்ளையார் அவரைநோக்கி நீர்பெற்றபெண் விஷத்தினாலிறந்தாள், இவளை எல்லாவுயிர்களும் பிழைக்கும்பொருட்டுச் சிவபெருமானது திருவருட்பிரகாசம் உலகிலினிதோங்க யாமுதிப்பித்தமையால் நீர்சொன்னவார்த்தை தகாது என்று மறுத்தருளினார். அதுகேட்டசிவநேசர் கலங்கிப் பின்புதெளிந்து பிள்ளையாரிடம் விடைபெற்றகன்று பூம்பாவையை வேறொருவருக்கும் விவாகஞ்செய்துகொடுப்பதில்லையென்று துணிவுற்று அழைத்துக்கொண்டுபோய்ப் பழையபடிக் கன்னிமாடத்தில்வைத்தனர். அப்பூம்பாவையார் அப்படியேயிருந்து சிவத்தைமேவினர். திருக்கோயிலினுள்ளே யெழுந்தருளிய பிள்ளையார் சுவாமியைவணங்கித்துதித்து, திருப்பதிகம்பாடிக்கொண்டு புறம்போந்து எழுந்தருளியிருந்தார். சில நாளாயின பின், பிள்ளையார் திருமயிலாப்பூரையகன்று திருவான்மியூர், திருவிடைச்சுரமுதலிய தலங்களைத்தரிசித்துக்கொண்டுசிதம்பரத்தையடைந்து சிலபோது அங்கெழுந்தருளியிருந்தார். அதனையறிந்த சிவபாதஹ்ருதயரும், சீர்காழியிலுள்ள மற்றைப்பிராஹ்மணர்களும், சிவ

ணடியார்களும் அங்குச்சென்று பிள்ளையாரைவணங்கிச் சீர்காழிக்குவரும்படி அழைத்தார்கள். பிள்ளையார் அதற்கிசைந்து அவர்களோடு ஸ்ரீசபேசரைவணங்கி அருள்பெற்றுச் சிதம்பரத்தையகன்று, சீர்காழியை யடைந்து காலந்தோறுந் தோணியப்பரை வணங்கிக்கொண்டு எழுந்தருளியிருந்தார். அப்போது முருகநாயனுர்-திருநீலநக்கநாயனுர் முதலிய மெய்யன்பர்கள் சுவாமியையடைந்து அவரை ஸேவித்துக்கொண்டு இனிது மகிழ்ந்திருந்தார்கள்.

## கூ ச லை.

பிள்ளையார் மதுரையிலெழுந்தருளியிருந்தபோது அவரைச் சிவபாதவிருதயர் அங்குவந்து தொழுதனரென்கையால், அவரது தெய்வத்தன்மையே அதற்குக்காரணமாயிற்று. பிதா பிள்ளையைவணங்குதல் கூடாதன்றோ? இதற்குமாறாக அவர் வணங்கினமையின், பிள்ளையாரைச் சிவபாதவிருதயருக்குத் திருமகனுரென்பது அவருக்குப் பெருமையுண்டாகவேண்டி யுபசரித்தபடியாம். அவர் பிள்ளையாரை வளர்த்தபிதாவென்பது பிரஸித்தம். இதுவே பிள்ளையாரை அவர் எதிர்தொழுதாரென்றதற்குங் காரணமென்க. சிவபாதவிருதயர் தவமிக்குடையராகலின், அவரெம்பிரானுருக்குத் தந்தையென்றுபசரிக்கப்பெற்றும், அவராலெதிர்தொழப்பெற்றும் புகழெய்தினுரென்க. அவர்மதுரையினின்றும் புறப்பட்டுப் பாண்டியர்பெருமான்-மங்கையர்க்கரசியார்-குலச்சிறையாரிவர்களிடம் விடைபெற்றுப்பிரிந்தனரென்னுங்கால், பாண்டியர்பெருமான் முதலினேரெவ்வாருயினரென்பது யாம் கணிக்குந்தரமன்று. இன்பஃடினராகிய பிள்ளையாரைப்பிரிந்தபோது அன்னேரவசமுற்றழிந்தநிலைமை பரிதாபமென்க. அம்முழுமுதற்பிரானை நட்டவன்பின்றிறமும், அவர் தாமடைந்தவன்பினுரமு மதிகமாகையால் அவைமாறுதல்யாங்ஙனம்? அஃது அவரது பெரும்பாக்யமென்க. இனிப்பிள்ளையார் திருக்கொள்ளம்பூதூர்ப்பதிகமோதி ஓடத்தைத் தமதுதிருவாக்கிலேயின்றும் பிறந்தவாணையாலடத்தினர். ஓடக்காரரின்றி யோடத்தை நடத்தினரென்கையால், அவ்வோடக்காரர் தாமேயாயினர். இந்நிதரிசனம் "துயரக்கடல்கடத்துந் தோணியேதோணி, யியலுந்திருநெறிக்கோலென்றும்-அயனன், றடையுமருட்காழியநீயம்பூதூர்வானுயின், சடையனேற்கென்குறையாங்காண்" என்னுநலத்தைப் பயப்பதொன்ருயிற்று இதனுல்

'பிறவிப்பெருங்கடனீந்துவர் நீந்தா-ரிறைவனடிசேராதார்' என்னுந் திருக்குறளிற்படித்த தெய்வமாவார் பிள்ளையாரெனலே அமைவுடைத்து. இதற்கு "இரும்புண்டநீரிற் றிரும்பாதவீடுதரு மினியகவுணியர் விளக்கே" என்னு மாத்தருரையுஞ்சான்றென்க. இவ்வுண்மையுணர்ந்தபேர் பிள்ளையாரைவழிபட்டுப் பிறவித்துயர்கடத்தலும், அங்ஙனம் வழிபடுங்கால் (தெப்பவிழா) முதலிய திருவிழாப்பொலிவு கண்டார்தலுமாகிய செயற்கரியகாரியங்கள் செய்துய்வரென்க. இதுநிற்க. எமது சிறிய பெருந்தகையார் திருத்தெளிச்சேரியையடைந்து போதிமங்கை என்னும் புத்தரூரையணைந்தபோது அங்குப் பிள்ளையாரது விருதுகளாகிய சங்கு-தாரைமுதலிய சின்னங்களும், பலவாச்சியங்களும், பரசமயகோளரியார்வந்தார் என்பதுமுதலிய கட்டியங்களுமுழங்கின. புறச்சமயக்களை பிடுங்கியெறிவார் அப்புறச்சமயிகளைத் தட்டியெழுப்பி வாதுக்கழைத்தல் மரபென்பதனை யிப்ப ஈதறிவித்தது. அன்றியும், எமதுபிள்ளையார் பூர்வர் சமணமதத்தைத் தொலைத்தாராகையால், புத்தமுந்தொலைக்கத் திருவுள்ளமிசைந்தாரெனல் அமைந்தது. புத்தர்கள்வெகுண்டு பிள்ளையார் தமதுமடத்தின்வழி விருதுகளோடு போதல்பொறாராய்க் கடுத்தனரென்பது சூரியனை மேகங்கள்மறைத்ததையேயமானும் சூரியனுக்குமே தாலிடையூறின்றி அச்சூரியனொளியை அநுபவிக்குமுலகினர்க் கிடையூறுண்டாயினவாறு பிள்ளையாருக்குப் புத்தர்கடுத்தலா லிடையூறுண்டாகாமல் அப்பிள்ளையாரை யணைந்துள்ள அடியார்களுக்கே இடையூறுண்டாயினமையறிக. சூரியனுக்கும், மேகத்துக்குமிடையே ஏற்றொன்றுண்டாகி அம்மேகத்தை நீக்குதல்போலப் பிள்ளையாருக்கும், புத்தருக்குமிடையி லெழுந்து சம்பந்தசரணாலயரென்னு மெய்யன்ப ரப்புத்தவிருளுடைந்தேகச் செய்தனரென்க. திருப்பதிகமெழுதுமன்பராகிய வப்பெரியோன் புத்தர்களுக்குத்தலையாய புத்தநந்தியின் றலையி லிடிவிழுமாறு பிள்ளையார்கொடுத்தருளிய (அத்திரமாவனவஞ்செழுத்துமே) என்னும் படையைத்தாங்கிச்செலுத்தி வெற்றிபுனைந்தது அப்பிள்ளையாரது திருவுள்ளப் பாங்கிருந்தபடியாம். ஸ்ரீமத் அப்பயதீக்ஷிதஸ்வாமிகளும் இப்படியேயன்றோ (தாத்தாசாரி) என்பவன் இடிவிழுந்திறந்தொழியத் திருவுள்ளமிசைந்தனர்? சிவத்துரோகிகட் கிவ்வாறான கெடுதிகளுண்டாதல் ஸாமஞ்சஸமென்க. இது நல்லுய் முடிந்தமையினன்றோ அன்னோர் மீண்டுஞ் சாரிபுத்தனைக்கொண்டு வாக்குவாத முடிப்பித்துத் தோற்றுப் பின்னர்த்தெ

ளிந்து யாவருஞ் சைவத்திற்புக்குப் பிள்ளையாருக்குத் தொண்டர்களாயினர்? இதனால், பிள்ளையார் அமண்வாதமே யன்றிப் புத்தவாதமுமுடித்தது உலகை யுய்வித்தனரென்பது வியக்தமாயிற்று.

இனிப்பிள்ளையார் அப்பர்சுவாமிகளைநோக்கித் திருப்பூந்துருத்திக் கெழுந்தருளிய அருமையைக்கூறுதும். இத்தலம் "பூந்துருத்தி பூந்துருத்தியென்பீராகிற்-பொல்லாதபுலாற்றுருத்தி போக்கலாமே" என்னும விளக்கமுடையது. இத்தலத்தைநோக்கிப் பிள்ளையார் அப்பர்சுவாமிகளைத் தேடிவருகையில் அப்பர்சுவாமிகள் பிள்ளையாரும், மற்றையோருமறியாதபடிப் பிள்ளையாரது அடியவர் திருக்கூட்டத்தினுட்புகுந்து அவரேறிவருஞ் சிவிகையைச் சுமந்து அரியபேறு தமக்கு கிடைத்ததென்று பாதந்தமேலிட்டா விறுமாந்து நடந்தனரன்றோ? அப்பர்சுவாமிகளுக்கும் பிள்ளையாருக்கும் பேதமின்றாயினும் பிள்ளையாரை அப்பர்சுவாமிகள் சுமந்து அன்புபாராட்டியது தமமிலவேறுபாடின்றி விளங்குஞ் சிவசத்திகளிற் சிவத்தைச் சத்தியாகிய வுமையம்மை காஞ்சியிலவழிபட்ட வன்புடைமையோடு தலைகூடிச் சிறக்குமெனக. பிள்ளையார் அருளைவிளக்கவும், அரசுகள் அன்பை விளக்கவுமேபோந்த பதியினமூர்த்தங்களாம். அமலமூர்த்திகளிருவருமொருவரிலொருவருயர்வுதாழ்வுகளெய்தாத முடிவறிந்தேயன்றோ "அடிகளாறிது வெனவேண்டாசிவிகை, பொறுத்தானேரேர்ந்தானிடையை, மறுத்தார்சம்-பந்தன்சிவிகைபரித்தார்திரிகுவர்மற், றந்துஞ்சிவிகையினையூர்ந்து." என்னுந்திருவெண்பாவில் வாய்மையை நிறுத்தினர் மேலோர்? நல்வினையாற் சிவிகையேறுதலும், தீவினையா லதனைச்சுமத்தலுமுயிர்களுக்கநுபவம். ஞானஸம்பந்தரை வாகீசர் சுமந்தமையாலன்னோர்பா லுயர்வுதாழ்வுகள் கற்பித்தலகூடாது. கூடாதபோது அத்திருக்குறளிழுக்குமன்றோ? அன்பின்மிகுதியால் வாகீசர்செய்தது அத்திருக்குறளுக்கு விஷயமாகாதெனின், அன்புடைமையால் வாகீசர்செய்ததுபோல் பிள்ளையாரும் என்செய்திலர்? இதனால், பிள்ளையார் போக்யதை விசேடித்தமையே அவரைவாகீசர் சுமந்ததற்குக்காரணமெனலமையும். அங்ஙனங்கொள்ளினும், (மறுத்தார்சம்பந்தன்சிவிகை பரித்தார்) என்பது அவலமாம். இனிமுடிவுத்தான் யாதெனின், இருமுதல்களும் பதியினது விபூதிகளாகையால் விரோதமில்லையென்றறிக. இந்தவிபவஸ்தையால் திருக்குறளுக்கும், அதனையடுத்துவந்த மற்றத்திருவாக்குக்கும் மிழுக்குண்டாயினதில்லையறிக. இன்னும் விரிக்கிற்பெருகும். மேல், எமதுகாழிவிரகர் திருவோத்தூ

ரில் ஆண்பனையைப் பெண்பனையாக்கியது அவர் யாவுஞ்செய்யவல்லாரென்பதை விளக்கியது. சுட்டவெலும்பினைப் பெண்ணாக்கியதும் அவரது வல்லபமாகையால், பரமபதியாகிய அவரதுசெயல் ஆன்மாக்கள் அவர்பதியாந்தன்மையறிந்து பிழைத்தற்கேயாம். இத்தகைய வரியசெயல்கள் எல்லாம் வில்லவிந்தராயெழுந்தருளிய ஸ்ரீ சொக்கலிங்கப் பெருமானது திருவிளையாடல்களாகவன்றோ உண்மைநூல்களில் படிக்கப்பட்டிருக்கின்றன? சிவனொருவனேயன்றி இவ்வரியசெய்கைகள் சீவர்க்கள் செய்யமுடியாமைசாண்க. சிவனடியார் சிவனது அநுக்ரகத்தாற் செய்வாரெனின், அப்போதும் ஓரிடத்தையதிட்டித்துச் சிவனேசெய்கின்றானென்பது நிலைபெறுமேயன்றிவேறில்லை. சிவனோரிடத்தையதிட்டித்துச் செய்வதற்குந் தாமேசெய்வதற்கும் பேதங்களுள. தாமேசெய்யுமத்தனை கனமானகாரியம் ஓரிடத்தையதிட்டித்துச் செய்தலின்று. அதிட்டிக்குமிடத்திற்குத் தக்ககாரியங்களாங்காங்கு நடைபெறுமென்க. அரசனொருகாரியத்தைச்செய்தலும் அவன் தனது அதிகாரத்தை மந்திரிமுதலாயினோரிடஞ்செலுத்தி யொருகாரியத்தைச் செய்வித்தலு மொன்றுதல் யாங்ஙனம்? ஆண்டவன்செயலுக்கும், அடியாரதுசெயலுக்கும் பேதம் வியக்தமாயினமையால், நமதுபிள்ளையாரதுசெயலை அடியவரது செயலாகநினைப்பது பேரபராதமாம். "தவந்தவென்பினைப் பெண்ணெனப் படைத்துஞ்சார்மழவ, னுவந்தபெண்ணுயிரளித்து மொட்டாதெதிர்புத்த, னிவந்தசென்னியையுருட்டியு முத்தொழினிறுவிப், பவந்துடைத்துயிர்க்கருளுஞ் சொற்பனவனைப்பணிவாம்" என்னுமான்றோருரையை யினிதுகவனித்துப் பிள்ளையாரது பதிநிலைமையைத் தெளிதலே யமைவுடைத்து. இதனை முன்னொரு ஸந்தர்ப்பத்தினும் பிரகாசப்படுத்தியுள்ளேம். ஆண்டுக்கண்டுணர்க. இங்ஙனநிற்க.

பிள்ளையார் ஸ்ரீகாஞ்சிக்கு எழுந்தருளித் திருவேகம்பம் - திருமேற்றளி-திருமாற்பேறு முதலியவைகளைத் தரிசித்துக்கொண்டுவேறுபதிகளுக்குஞ் சென்றுவைகிப் பின்னர்த் திருவாலங்காட்டை யடைந்தாரென்று நாம்வியந்து துதிப்பதன்முன்னர், அப்பிள்ளையார் திருமேற்றளியில் விஷ்ணுவுக்குச் சிவசாரூப்பியமளித்த மகிமையை விசாரித்து அப்புறஞ்செல்லுவோம். இவ்விஷயத்தை இந்த நூலில் (ருக) வது பக்கத்தில் சூசித்திருக்கின்றோம். விஷ்ணுவானவர் சிவசாரூப்பியம்வேண்டிச் சிவனைநோக்கித் தவஞ்செய்கையில், சிவன் அவருக்குவெளிப்பட்டு நீவேண்டிய ஸாரூப்பியம் எமது திருக்கு

மாரனாகிய சுப்பிரமணியன் ஸ்ரீஜ்ஞாநஸம்பந்தனாக அவதரித்து உன க்குப்பிரஸாதிப்பான் என்று அருளிச்செய்து மறைந்தருளினார். அப்படியே அது விஷ்ணுவுக்குக் கைகூடியது என்று ஸநற்குமாரஸம்ஹிதையிற் போந்தவாய்மையே மீண்டு விசாரிக்கத்தக்கது. விஷ்ணுவானவர் வேதங்களில் "ஏகோஹவை நாராயண ஆஸீத்" எனவும், "நாராயண பரப்ரஹ்மா தத்வம் நாராயணः பரः" எனவும் பிரதிபாதிக்கப்பட்ட பரமமூர்த்தியாயுள்ளவர். இத்தகைய மகிமைசிறந்த நாராயணருக்குப் பிரஸாதிக்கும் அருணலஞ்செறிந்து விளங்குமாற்றலுடையவராக எமதுபிள்ளையார் சிறந்திடுவாரெனின், அவரைப் பரமபதியென்னாது வேறியாவரென யாம்துணியவல்லேம்? இவர் பரமபதியென்பதை வேதப்பிரமாணத்தைக்கொண்டே நிரூபிப்பாம். உபநிஷத்துக்கள் நூற்றெட்டனுளொன்றாகிய கிருஷ்ணோபநிஷத்தில், "அஷ்டாபஷ்ட ஸஹஸ்ரேத்வே சதாதிக்யாঃ ஸ்த்ரியஸ்ததா" என்றது முதலிய பகுதிகளால் பதினாறாயிரம் இருடிகளது பிரஸ்தாபம் கேட்கப்படுகின்றது. இவ்விருடியர் பதினாறாயிரவரும் விஷ்ணுவை இராமாவதாரத்தில் தமக்கின்பம்வேண்டி ஆலிங்கனஞ் செய்துகொண்டார்களெனவும், அப்போது இன்பமுண்டாகாமையால், அவர் கிருஷ்ணவதாரஞ்செய்தபோது கோபிகைகளாகப்பிறந்து ஆலிங்கனஞ் செய்துகொண்டார்களெனவும், அப்போதும் இன்பம் பெருகவில்லையெனவும் வெளிப்படுகின்றது. இதனால், எமது பிள்ளையாராகிய ஸ்ரீஸம்பந்தநாதரை அவ்விருடியா பதினாறாயிரவருமடைந்து அவரது பாதஸேவையால் இன்புற்றாரெனப் பெரியோர் கூறுகின்றனர். பதினாறாயிரம் இருடியர் என்னும் ஸங்கேதம் இந்தவுபநிஷத்திலும், எமது பிள்ளையாரது புராணத்திலுமேயன்றி வேறெங்குங்கிடையாது. உபநிஷத்தில் அவர்களைப் பிரஸ்தாபித்ததேயன்றி, அவர்களது அபீஷ்டஸித்திக்கு ஓர் முடிவுகூறவில்லை. அதற்குமுடிவு பிள்ளையாரது புராணத்தில் வியக்தம். இதனால், அவ்விருடியர்க்கு இன்பத்தைத்தருமாறு பிரவர்த்தித்த வுபநிஷத்து பிள்ளையாரது சரிததிரத்திற் பரிவஸாநமுறலால் அதனது ஹ்ருதயம் இனிது வெளிப்பட்டது. பிள்ளையாரால் அவர்க்கின்பமுண்டாயினமையை இவ்வுபநிஷத்து ஏன்கூறவில்லையெனின், கிருஷ்ணர்பரமாகவெழுந்த அது வேறொருவர் பரத்துவத்தை அந்தக்கிருஷ்ணருக்குத் தாழ்வுண்டாக விளக்குவது யாங்ஙனம்? அதனால், அது வாளாவிட்டதென்க. என்னை? வேறு உபநிஷத்தாற் பிள்ளையாரது

பரத்துவத்தை நாட்டாததெனின், பிள்ளையார் அடியவர்கோலங் கொண்டமர்ந்த பரிசுகண்டென்க. இந்தரஹஸ்யங்களை யுணர்ந்த பேர் ஸ்ரீஜ்ஞாநஸம்பந்தர் பதியினது அருட்கோலமூர்த்தமா யுள்ளவரெனவறிநதின்புறுவர். இதனையொப்பாதபட்சத்தில் அவ்விருடியர் தாம்விரும்பியபேறு எய்தாது அவலராயினரெனலமையும். இவ்வளவு ஸாமானியர்களை உபநிஷத்துப் பிரஸ்தாபித்ததும் அபவமாம். நூற்றெட்டுக்குமேலும் உபநிஷத்துக்க ளுளவாகையால், அவற்றுள்யாதானுமொன்றிற் கதியுண்டாகலாமெனின், அந்தக்கதி யடைது பிள்ளையார்விஷயமாக வனமையாது? பூர்வபட்சிகள் இனிகண்டுபிடிக்கு முபநிஷத்தே எமக்கும் ஆதரவாயிடத் தட்டில்லையாகையால், அவ்விருடியர்க் கின்பநலங்கைகூடிய பெருமையையுணர்த்துந திவ்யசரிதையை ஆச்சிரயிததின்புறுது அவலத்தழுங்கல் புண்ணியக்குறைவுடையார்க்கே சிறக்கும். இதனால், பதினாறுயிரம் இருடியர்க்குச் சிவப்பேறுதவிய நமது குருநாதர்மான்மியம் கிருஷ்ணோபநிஷத்தினது ஹ்ருதயமாக முடிந்தமையால், அவ்வருளாளர் ஸ்ரீவிஷ்ணுமூர்த்திக்கு ஸாரூப்யத்தைப் பிரஸாதித்தாரென்பதும், அதனால், அவர் பரமபதியாயினரென்பதும் சாஸ்திரமறிந்த ஸத்துககள் துணிந்து கூறும் பரமஸித்தாநதமாயிற்று. இன்னும் விரிக்கிற் பெருகும்.

இனிப் பிள்ளையார் திருவாலங்காடு அம்மையார் தலையானடந்த பதியாதலுணக்கி அதனைமிதிப்பதுகூடாதென அங்குத் தமதுதிருப்பாதத்தைவையாமல் அகன்றது அம்மையாரது அன்புடைமையும், அருமையும், உலகம் அவரைமிகமதித்து வழிபடுதற்குரியபெருமையும் நிலைத்தற்பொருட்டு. சிவபெருமானே அவரை (அம்மையே) என்று அழைத்தாராகையால், அவரதுபெருமை அளவிடற்கரியதென்க. இதுவே கண்ணப்பதேவர்பாற் பிள்ளையார்கனிந்தநலத்தை விசாரிக்குமிடத்துஞ்சிறக்கும். பிதாவானவன் தன்னுடைய அரிய குழந்தையினது காலையெடுத்துத் தனதுசிரசிலும், முகத்திலும், மார்பிலும், தோளிலும்வைத்து ஸந்தோஷிக்குமநுபவ முலகினிகழ்கின்றமையால், அன்பிற்சிறந்த கண்ணப்பரை எமது பிள்ளையார் பரிந்து வியந்து மகிழ்ந்தனரென்க. ஞானசம்பந்தர் அம்மையாரையும், கண்ணப்பரையும் அருமைபாராட்டியதனாற்றானன்றோ அவர்களதுபெருமை யுலகினிலைபெற்று, அவர்களை யுலகம்வழிபட வேதுவாயிற்று? பாணபத்திரருக்காகச் சிவபெருமான் விறகுவிற்றது தா

ழ்வாகுமோ? அவரது அன்புமருமையும் வெளிப்படவேயன்றோ ஸ்வாமி அத்திருவிளையாடல் புரிந்தருளியது? இவைகளையோசித்து ஸாதுக்களாவார் பிள்ளையாரது பெருமையைவியந்து கொண்டாடுவாரென்க. இவ்வமலதேசிகர் திருமயிலையின்கண், சுட்டவெலும்பைப் பெண்ணாக்கியது அருட்சீர்த்தியாதலை மேலேவிரித்தாம். அன்றியும், படுநெருப்பினீறுகாது நிலைக்குமா என்று நமதுகவிநண்பர் முன்னே கடாயினவாறு பசுமையொழிந்து நெருப்பாலழிந்தவெலும்புசாரமெய்தித்தழைத்தலும், இயமன்கைப்பற்றியவுயிர் மீண்டுமெதிற்புகுந்து விளையாடலும் யாங்ஙனமெனக்கடாவுங்கால், அதற்கு யாமளிக்குமிறையைத் தமக்குக்கடைத்த இறையாகக்கொண்டு அன்னேரொதுங்குவாராக. என்னெனின், மஞ்சளுநீலமுஞ்சேர்ந்தால் பச்சையுண்டாகும். மஞ்சளுங் கரியுஞ்சேர்ந்தால் பசசையுண்டாகுமா? அப்படியே மஞ்சளுஞ் சுண்ணமுஞ்சேர்ந்தால் செகப்புண்டாகும் மஞ்சளுங்கொட்டையுஞ் சேர்ந்தால் செகப்புண்டாகுமா? எது எதனோடுசேர்ந்தால் எது உண்டாகுமோ அதுவேயன்றோ உண்டாகும்? அதனால், சுட்டவெலும்பும், ஞானஸம்பந்தரது திருவாக்குஞ்சேர்ந்து ஓர் பெண்ணாகியதென்க. அச்சுட்டவெலும்பு வேறு பொருளோடுசேர்ந்தால் பெண்ணாகுமா? செம்பைப் பொன்னாக்குமாற்றல ரஸகுளிகைக்கேயன்றி வேறு பொருளுக்கில்லாமைபோலச் சுட்டவெலும்பைப் பெண்ணாக்குமாற்றல் பிள்ளையாரது திருவாக்குக்கேயன்றி வேறு எதற்குமுண்டாகாதென்க. பிள்ளையார் திருவருள்வடிவினராகலின், அவரது திருவாக்கு யாவுஞ்செய்யவல்லதென்க. அவரது திருவாக்குக்கு மகிமையுண்டென்பது நிஜமாயின், அதனையெடுத்து நாமோதுங்கால் அது பயன்றராததென்னையெனின், அவரது திருவருளையெய்தியோதிற் பயன்றருமென்க. அரசனது அருள்பெறாது அரசனது முத்திரையைத்தாங்கியொருவன்வெளிவருவதனானே யாதுபயன்? அவனது அருள்பெற்றபோதன்றோ அவ்வரசனது முத்திரை பயன்படும்? அருள்பெறுதலாவது அரசன் றனதுள்ளத்திலவனைத் தன்னவனெனக்கோடல். அப்படியே பிள்ளையார் தமதுதிருவுள்ளத்தில் இவன் நமதடியவனெனக் கோடலே அவரது திருவருளைப்பெறுதலாம். அன்புமுறுகிவளர்ந்தபேர்க்கன்றி அவரது அருள்வெள்ளத்திற்படிதல்கூடாது. இவ்வுண்மைதேர்ந்து (பிள்ளையார் திருவாக்கையோதி) புத்தநந்தியின் றலையிடறிப்போகத் திருவுள்ளமிசைந்தருளியஸம்ப

ந்தசரணாலயர் மாகாத்மியத்தை யுணர்ந்தடங்குக. விரிக்கிற்பெருகும். என்பு பெண்ணுருக்கொள விசைந்தோதிய வத்திருவாக்கில் சிவபெருமானுடைய அடியார்களைத் திருவமுதுசெய்வித்தலும், அவருடைய திருவிழாவைத் தரிசித்தின்புறுதலுமாகிய நலங்களே செறிந்தமையால, முதற்கட்போந்தது சங்கமவழிபாடும், பின்னர்ப்போந்தது தாவரவழிபாடுமாயின (தாவரசங்கமங்களென்றிரண்டுருவினின்று மாபரன்பூசைகொண்டு மன்னுயிர்க்கருளைவைப்பன்) என்னும் பிரமாணமும இதிலேபெருகியது. இதனால், உயிர்களுக்கின்றியமையாத பெருஞ்சிறப்புக ளிவையே யென்பது திண்ணம். இவற்றின மேலாயதொரு பேறுமின்றென வறிந்தின்புறுதலே செ தெண்ணம். இவ்வருணலம் யாமெய்துமாறுகூட்டிய பிள்ளையாரது பதசேவையை விடாது பற்றி யிறுமாந்திடுமே யாம மற்றப்பகுதிகளையும் விசாரிந்துரைப்பாம்.

## பிள்ளையாரது பிரபாவம

### (கஅந) பந்தத்தொடர்ச்சி.

பிள்ளையார் சீகாழியி லெழுந்தருளி யிருக்கையில், சிவபாதிருதயரும், ஏனையருங்கூடி யாளையாயணைந்து, தேவரீர் எங்கள் பொருட்டு வைதிகந்தழைத்தோங்குமாறு திருக்கலியாணஞ்செய்து கொள்ளவேண்டுமென்று பலதரம் வணங்கி இரந்துகேட்டுக் கொண்டார்கள். அதற்குப் பிள்ளையா ரிசைந்தருளினர். உடனே திருநல்லூரில அந்தணர்குலதீபமாய்விளங்கிய நம்பாண்டார்நம்பி என்பவரது திருமகளாரை மணம்பேசி முடிவுகொண்டு பிள்ளைவீட்டார், பெண்வீட்டாரிருவரும் ஸ்வாமியினது திருக்கலியாண விஷயமான முயற்சியையும், மற்றுமாகவேண்டிய காரியங்களையுஞ் செய்துவருவாராயினர். சுபகாரியங் குறித்தபின்னர் முகூர்த்தம வைத்து ஸமாவர்த்தநம்-இரக்ஷாபந்தனம்-நித்திய நியம முதலியவைகளை நடத்தினார்கள். பின்பு ஸ்வாமி திருமணக்கோலம்பொலியத் திருப்பல்லக்கின்மீது ஆரோகணித்துச் சகபரிவாரம் திருநல்லூருக்குச்சென்று அங்குள்ள (திருப்பெருமணம்) என்னும் ஆலயத்திற்க்கு வணங்கித் திருப்பதிகம்பாடிக்கொண்டு வெளிவந்து அங்கமைந்திருந்த விடுதியாகிய திருமடத்திற் சென்றிருந்தனர். பின்னர் அந்தணர்கள் அவரைத் திருமஞ்சனநீராட்டி வஸ்திராபரண

ங்களாலே திருக்கோலஞ்செய்வித்தார்கள். பின்பு பிள்ளையார் உருத்திராக்ஷமாலையையும், திருநீற்றினையுந் தாமேயெடுத்துத்தரித்துத் திருவைந்தெழுத்தினை யுச்சரித்து மகிழ்ந்து அழகுபெறவிளங்கித் திருவீதியிலேவந்து முத்துச்சிவிகையின்மேலேறியருளினார். அப்பொழுது பலவாச்சியங்கள் முழங்கின. தேவர்கள் பூமழைபொழிந்தார்கள். பிராமணர்கள் வேதகோஷஞ் செய்தார்கள். பிள்ளையார் முத்துக்குடைநிழற்ற முத்துச்சின்னங்களெல்லாம் தமது திருநாமங்களை யெடுத்தூத எழுந்தருளிவந்தார். பூம்பந்தருக்குள் வந்தவுடனே சிவிகையினின்றுமிறங்கித் திருக்கல்யாண மண்டபத்துட்சென்று இரத்நாஸனத்தின்மேல் வீற்றிருந்தருளினார். அப்போது நம்பாண்டார்நம்பி தம்முடைய மனைவியார் பசுவின்பாலும் சுத்தோதகமுமேந்திப் பின்வரவந்து பிள்ளையாரைச்சிவமாகப் பாவித்து, மனைவியார் கமண்டலுவிலுள்ள நீரைவிட அவருடைய ஸ்ரீபாதங்களைவிளக்கி, அந்தத்தீர்த்தத்தைத் தம்முடைய சிரசிலே புரோக்ஷித்து, உள்ளும்பூரித்து, சுற்றத்தார்கள்மேலுந் தெளித்தார். பிள்ளையாருடைய திருக்கரத்திலே நீரைவார்த்துத் தமது கோத்திரத்தைச்சொல்லி என்னுடைய புத்திரியை ஸ்ரீஜ்ஞாநஸம்பந்தப்பெருமானுக்குக் கொடுத்தேன்) என்று விவாகமுகூர்த்தம்வர மணமகளைக் கொண்டுவந்து பிள்ளையாருக்குப் பக்கத்திலே யிருத்தினார். அப்போது திருநீலநக்கநாயனார் வேதவிதிவழாது சடங்குகளைத்தொடங்கினார். வேதவொலியெழ வாச்சியங்கள் முழங்கத் திருமாங்கலியத்தைச்சாத்திப் பாணிக்கிரகணம்பண்ணிப் பொரியை அக்கினியிலிட்டுப் பரமசிவனைத்துதித்து (அக்கினியாவார் பரமசிவனே) என்று திருவுள்ளங்கொண்டு வேதவிதிப்படி வளர்க்கப்பட்ட அக்கினியை வலஞ்செய்து யாவருஞ்சூழ மனைவியாருடன் திருக்கோயிலுட்சென்று தமது திருமணத்தைத் தரிசிக்கவந்தவர்களுடைய பாசத்தை நீக்கத் திருவுளங்கொண்டு (கல்லூர்ப் பெருமணம்) என்னுந் திருப்பதிகம் பாடியருளினார். அப்பொழுது சிவபெருமான் பிள்ளையாரைப்பார்த்து நீயும், உன்து காதலியும், உன்னுடைய திருக்கல்யாணத்தைத் தரிசிக்கவந்தவர்கள் யாவரும் இந்தச்சோதியினுள்ளே புகுந்து நன்மையடையுங்கள் என்று அருளிச்செய்து திருக்கோயிலுட்பட மேலோங்கிய சோதிவடிவமாகி, அச்சோதியில் ஓர்வாயிலை வகுத்துக்காட்டினார். அதனைக்கண்டபிள்ளையார் (காதலாகிக்கசிந்து) என்னு நமச்சிவாயத்திருப்பதிகத்தைப் பாடியருளி, அங்குவந்துள்ள யாவரையுநோ

க்கி, இச்சோதியினுள்ளே பிரவேசியுங்கள் என்று திருவாய்மலர்ந்தருளினர். பிள்ளையாரது திருமணத்தைச் சேவிக்கப்பெற்றமையால், யாவரும் பாக்யசாலிகளாய் அந்தச்சோதியினுள்ளே புகுந்தார்கள். திருநீலநக்கர், முருகநாயனர், சிவபாதவிருதயர், நம்பாண்டார் நம்பி, திருநீலகண்டப் பெரும்பாணர் முதலிய அடியார்கள் தங்கடங்கண் மனைவியாரோடும், சுற்றத்தாரோடும் அப்பெருஞ் சோதியினுட்புகுந்தார்கள். முத்துச்சிவிகையைத் தாங்கிச்சென்றவர்களும், மற்றைப்பரிசனங்களுந் தொழுது புகுந்தார்கள். உட்சமயிகளறுவரும், சைவசித்தாந்திகளுமாகிய யாவரும் அந்தச்சோதியினுள்ளே புகுந்தார்கள். யாவரும் புகுந்தபின் பிள்ளையார் தமதுகாதலியாரது திருக்கரத்தைத் தமதுதிருக்கரத்திற் பற்றிக்கொண்டு அந்தச்சோதியைவலம்வந்துபுகுந்துமறைந்தருளினர். அதன்பின்னர் அந்தச்சோதியானது மறைந்துவிட, திருப்பெருமணமாகிய திருக்கோயில் தோன்றியது. பிள்ளையார் யாவரையுஞ் சோதியுட்புகச்செய்து தாமும் புக்கருளிய அதிசயத்தைத் தூரத்தேகண்டு நணுகப்பெறாத விஷ்ணுபிரஹ்மேந்திராதி தேவர்களும், முனிவர்களும், ஏனையர்களும் வருந்தித்துதித்து வாழ்த்தினர்கள். பிள்ளையாரதுபெருமை எங்கும்பரவியது. அவரது திருவருள்வாழ்ந்திடுக.

## சூசனை.

பிள்ளையார் திருக்கல்யாணகோலங் கொண்டருளியது வைதிகமார்க்கந் தழைத்திடவென்க. (மலையரையன் பொற்பாவை வாணுதலாள் பெண்டிருவை, யுலகறியத் தீவேட்டா னென்னுமதுவென்னேடீ, யுலகறியத் தீவேளாதொழிந்தனனே லுலகனைத்துங், கலேவின்றவான்பொருள்கள் கலங்கிடுங்காண்சாழலோ)என்னும் பிரமாணபரியாலோசனையால் பார்வதியாரைச் சிவபெருமான் திருமணம்புணர்ந்தருளிய நலம்வெளிப்பட்டது. இவ்வுண்மையே பிள்ளையாரிடத்தும் அமையும். சிவனார் செயலே அமையுமாக, பிள்ளையாரும் அதுசெய்த லற்றுக்கெனின், சிவனாரதுசெயலுக்குக் காரணங்கண்டமாகையால், பிள்ளையாரது செயலுக்கே இனிக்காரணங்காணுவாம். பிள்ளையார் அடியவர்திருக்கோலங் கொண்டருளினமையால். அடியவராவார் துறவேபெரும் பயனுக் கொள்வதன்றி, இல்லறத்தி லினிதமர்ந்தின்புறுதல் குற்றமாகா தென்பதனையே அவரது திருமணம் வியக்தமாக்கியதென்க.

யுடியவராவர் துறவெய்தலுந் தகுதியெனல்போதரவே வாதவூரடிகள் துறவெய்தி மகிழ்வெய்தினர். இவ்விருவரேயன்றி ஸ்ரீசுந்தரமூர்த்திகள் நித்தியகலியாணமாப்பிள்ளையாயும், திருநாவுக்கரசுகள் ஜந்த்துறவாயுமியங்கி, உலகம்நடைபெறுமாறு திருவுள்ளமிசைந்தாராகையால், அவர்களது செயல் உலகமுய்தற்கான அருள்விலாசமாக முடிந்தது. ஸ்ரீஜ்ஞானஸம்பந்தரும், ஸ்ரீஸுந்தரருங் கலியாணசுந்தரமூர்த்திகளாயும், ஸ்ரீமணிவாசகரும், ஸ்ரீவாகீசரும் துறவுக்கோலந்தாங்கினோராயும் வர்த்தித்தலால் இருவிதகோலங்களும் சிவனைவழிபடுவார்க்கியல்பினவமைந்த நலங்களேயாமென வறியத்தக்கது. துறந்தவர்க்கன்றி வீடுபேறெய்தல் கூடாதென்பது சிலரதுமதமாகலின், அது அமையாதென்பதையும், இல்வாழ்வார்க்கே வீடுபேறெய்தல் கூடுமென்பது சிலரதுமதமாகலின், அதுவும் அமையாதென்பதையும், இருவிதநெறியும் வீடுபேற்றிற்கிணங்குமென்பதையுமே ஆசாரியர்களது செயல்கள் நிலைபெறுவித்தன. இவ்வுண்மையுணர்ந்தபேர் ஒன்றிலும் மயங்காரென்க. அன்றியும், சிவபெருமான் போகவுருவமேயன்றி யோகவுருவமுங்கொண்டிருத்தலால், ஆசாரியர்கள்கொண்ட இருவிதகோலங்களு மமைவுபெறும். சிவபெருமான் கொண்டருளிய போககோலங்கள் அவருடைய பிரயோசனமாகாமல் பரப்பிரயோஜனமாயின துண்மையாகலின், ஆசாரியர்கள்கொண்ட விருவிதகோலங்களும் ஸ்வப்பிரயோஜனமாகாது பரப்பிரயோஜனமாயினமையே அமைவுடைத்து. எமது பிள்ளையார் திருமணக்கோலங்கொண்டு ஆச்சாபுரத்திற்கெழுந்தருளித் திருக்கல்யாணஞ்செய்துகொண்டதேயன்றி அந்தக்கலியாணப்பெண்ணோடுகூடி அநந்தரம் வாழ்ந்ததில்லை. அதற்குக்காரணம் அவர் பசுவர்க்கத்திற் சேராமையேயென (கூ) பக்கத்தில் விதந்துள்ளோம். பூர்வம் ஸ்ரீசுந்தரமூர்த்திகளது திருமணத்தைச் சிவபெருமான் தடுத்தருளியதும் இந்தக்காரணம் நிலைபெறவேயென்க. அநந்தரம் பரவையார் சங்கிலியார் என்னும்இவர்களை அவருக்குமணப்பித்ததும் அவர் பதிவர்க்கத்திற் சேர்ந்தபரிசு வெளிப்படுதற்கென்க. எமது பிள்ளையாரது திருக்கல்யாணத்தைத் தரிசிக்கவந்தவர்கள் எண்ணில்கோடியர். அவரது நிழல்போல அவரைப்பிரியாதுசூழ்ந்து எப்போதும் அவரது திருவடித்தொண்டுசெய்துகொண்டிருந்த திருக்கூட்டத்தவர் பதினறுயிரவர். இந்தப்பதினறுயிரவருஞ் சூழப் பிள்ளையார் பூப்பிரதக்ஷிணம்வந்து ஆங்காங்கு எண்ணில்மகிமைகள்விளங்க வியங்கி அடியார்களுக் கருள்புரிந்து, உலகமுழுதும் வழிபட்டுவாழ்

த்துந் தெய்வமாகவமர்ந்து இனிதெழுந்தருளுவராயின், அவ்வமல தேசிகரது திருக்கல்யாணமஹோத்ஸவத்தை எண்ணில்கோடியர்வ ந்து தரிசித்தார்களென்பது ஓரதிசயமோ? (வனைதமிழ்க்காழிமேவி யெட்டுணையு மறிவரு மாந்தசிவரைவதுவை யென்றுபேரிட்டழைத்தவ்-திரும் புண்டரீகத் திரும்பாதவீடுதரு மினிய கவுணியர் விளக்கே) எனவும், (காழ யிலேவந்து கணக்கிலாச் சிவரைநீ-ழியின்பத்துய்த்தவொருவனே) எனவும் போந்த பிரமாணங்களை யூகிக்கின், எமதுகாழிவள்ளல் முத்திய டைதற்குப் பக்குவராயிருந்த முத்தாத்மாக்களை யோரிடத்திற்சேர் த்து அவர்களுக்குத் தமது திருவடியின்பத்தைப் பிரஸாதிக்கத் தி ருவுள்ளமிசைந்தே தமது திருக்கலியாணத்தை அதற்கொரு வியா ஜமாக்கொண்டாரென வெளிப்படுகின்றது. திருக்கலியாணத்தை க்காட்டினுங் கும்புகூடுதற்கு வேறுபெரும்பிரயோஜன முலகிலில்லை யாகலானும் அதுசிறக்கும். அவரது திருக்கலியாணத்தைத்தரிசித் த புண்ணியந்தடித்து, அதனால் அப்போதே அன்னோர் முத்தராயி னரெனனும் ஓர் முடிவென்றறிக. இத்தகையமுடிவுகளால் பிள்ளை யாரது திருக்கலியாணம் அவரது போகார்த்தமான பிரயோஜன மாகாமல் உயிர்களுய்தற்கான பரப்பிரயோஜநமாகவே முடிந்தது. அன்றியும், எமதருள்வள்ளல் (கல்லையூர்தலாகிய அம்மிமிதித்தல் எ ன்னும் கலியாணம்வேண்டாம்) என்னுங்கருத்தமைந்த "கல்லூர்ப்பெ ருமணம்வேண்டா" என்னுந் திருவாக்கருளிச்செய்தமையானும் அத் திருமணம் அவரது இஷ்டாபத்தியாய ஸ்வப்பிரயோஜனமாகா தெ ரிந்தது. இம்மட்டோ, அவர் அக்கினியை வலம்வருதலாகிய ஜடாரா தனைசெய்யத்தாழ்த்துச் சிதக்கினியாகிய சிவனையேயன்றோ சோதிப் பிழம்பாகக்கண்டு பூசித்து மகிழ்ந்தனர்? ஜடாக்னியாகிய அக்னிப கவான் சேதனர்களிற்படிக்கப்பட்டுத் தேவஸமூஹத்தி லொருவனா கின்றமையால், அவனையாராதித்தல் பதியாகிய பிள்ளையார்மாட்டுச் செல்லாதென்க. சிவனாரதுவழிபாடுமாத்திரமே தமக்குச்சிறந்ததெ ன்க. அவ்வழிபாடு தம்மைத்தாமேவழிப்பட்டு உலகுக்குபகரித்தலா மென்றறிக. சிவபெருமானைச் சோதிவடிவினர் என்றது அவரது ஞானத்திருவுருவத்தினையேயன்றி வேறில்லை. எமது பிள்ளையாரை (ஞானத்தின்றிருவுருவை) எனச் சேக்கிழார்பெருமான் விதந்தனர். அதனால் சிவனாரும், அவருடைய பிள்ளையாராகிய எமது தமிழ்வி ரகரு மொரேபொருளாகி எம்மனோரது மயக்கவிருளைத் தொலைவி த்தவராயினர். இதனால், திருக்கோயிலுட்பட மேலோங்கிய தமது சோதிவடிவத்தில் ஓர் வாயிலைவகுத்துக்காட்டி, அதனுள் யாவரையு

ம்புகுவித்துப் பின்னுமதிற்புக ஒருவருமில்லாமையால், சிலநேரந்தா ழ்த்துப் பின்பு காதலியாரோடு தாமுமதிற்புக்கு ஒன்றுயினர். அதிற்புக ஆளில்லையென்றது அங்கிருந்தவர்யாவரும், வந்தவர்யாவரும், வந்துகொண்டிருந்தவர்யாவரும், அதிற்புகுந்து இன்னும் வரத்தக்கவர்களுக்குப்போய்த் தெரிவிக்க ஆள்கிடையாமற் போயினமையாலென்றறிக. அந்தத்திருக்கலியாணத்தில் வந்தடைந்தவர்கள் (இரும்புண்டநீரிற் றிரும்பாத வீடுபெற்றூர்கள்) ஆகலானும், அது (புலிபார்க்கப்போன கதைபோல் முடிந்தது) ஆகலானும் போனவர்கள்போக இருந்தவர்களுக்குப்போய்த் திருமணத்தின் முத்திவைபவத்தை யறிவித்துபகரிக்க வொருவருக்குங் கூடாமற்போயிற்று. ஙகளது பிரயோஜனத்தைப் பெரிசாகநாடாமல், அத்திருக்கல்யாணப் பேரொளியில் யாவரும்புக்கு முத்தியடையுமாறு அங்குச்சென்றிருந்தவர்களப்படியேதிரும்பி, அங்கு நிகழுமற்புதத்தைப் பிறருக்கறிவித்துக் கொண்டிருப்பாரெனின், உலகமுழுதும் அன்றே முத்தியடைந்திருக்கும். இப்போதுள்ள சீவர்க்கள் பரிபாகக்குறைவா லப்போதங்குவரத் தடைப்பட்டார்கள். ஆகையால், இன்று உலகப்பிரஸக்திக்கிடஞ்செய்தது. "எங்கோவேயான்புகலி யெம்பெருமான்றன்மணத்தி, னங்கோர்பொருட்சுவையா ளானேனேல், இஙகேகின், றுள்வருந்தவேண்டேன் றடைப்பட்டேனுதலினிந், நாள்வருந்த வேண்டுகின்றேனுன்" என்னு மரியவாக்கியத்தை யூகித்தவர்க்கு உண்மை விளங்குமென்க. அடையாதவர்கணிற்க, அடைந்தவர்கள் (கணக்கிலாச்சீவர்) என்றுபடிக்கப்பட்டனர். அன்றியும், (கொள்ளைகொள்ளவீடுதெவிக் கூற்றைப்பிடர்பிடித்துத் - தள்ளுந்திருஞானசம்பந்தா) என்று மேலோர் வியந்திருக்கின்றமையால், எம்பிரானுரது திருக்கலியாணவைபவ மெத்தன்மையினது என்னுமருமையை யாம்வியக்குந்தரமன்று. இச்சிறியபெருந்தகையாரது அருள்விலாசத்தை ஒருவாறு ஈண்டறுவாத முகத்தானே யாமெடுத்திசைத்தேம். இவரோடு சமயாசாரியர்கள் என்று எண்ணப்பட்ட ஏனையமூவரது அவதாரஸந்தர்ப்பங்களையும் அவர்களைப்பற்றிய சில முக்கியபிரமேயங்களையும் ஆங்காங்கு யாம் பிரஸ்தாபித்து, இந்நால்வரும் பரமபதியாகிய சிவாவதார மூர்த்திகளெனவே நியாயவாயிலாக நிரூபணஞ்செய்தோம். இவர்களைப் பதியினது விபூதிகளெனக்கேட்டு உள்ளம்பொறுது புலம்பியபடிறர் நாணித் தலைகுனியுமாறு (ஞானபேதவிளக்கம் - ஞானபேதத்தெளிவு - ஞானபேதத்துணிவு - ஞானபேதவிளக்க நியாயரக்ஷாமணி) முதலிய

சிறு நூல்களை எமதுபேராலும், எம்மவர்பேராலும் வெளியிட்டுப் பிரகாசப்படுத்தினோம். அன்றியும், சிலபத்திரிகைகள் வாயிலாகவும், பல பிரஸங்கங்களின் வழியாகவும், வேறுபலபல ஸாதகங்களின் மூலமாகவும் அன்பர்மனங்களிதூங்க அவ்வாசாரியர்களது அருட்பணிதாங்கி, அவர்பெருமை யாவருள்ளு நிலைபெற்றோங்குமாறு உரம்படச்செய்தோம். பிள்ளையாரது பெருமை வேதபடிதமாயுள்ளதெனை மேலே நிரூபித்தோம். இனி ஸ்ரீ சுந்தரமூர்த்திகளது பெருமையும் வேதபடிதமாயுள்ளதென இனிது விளக்குதும். வேதத்தில், "கேசீ விஷஸ்ய பாத்ரேண யத்ருத்ரேண பிபத்ஸஹ" என்னும்வசனம் பிரகாசிக்கின்றது. இதற்குக் கேசிபாகியசிவன் உருத்திரனுகிற பாத்திரத்தால் விஷத்தைப் பானம்பண்ணினார் என்று பொருளுண்டாகிறது. சிவபெருமானை வியோமகேசர் எனவும், இரணியகேசர் எனவும் வேதங்கள் கூறுகின்றன. அதனால், சிவனைக் கேசியென்றது அமையும். அவர் உருத்திரனுகிற பாத்திரத்தால் விஷத்தையுண்டார் என்றது உருத்திரன் விஷத்தைக் கையிலேந்திநிற்க, அதனை வாங்கியுண்டருளினார் என்று பொருள்பயக்கும். விஷமானது தேவர்களைத்துரத்தி ஹிம்ஸித்துக்கொண்டிருந்தகாலையில் அந்தவிஷத்தை யெடுத்துக்கொண்டுவரும்படி நிலைக்கண்ணாடியில் வெளியாகிய தமது திருவழகின் வடிவினராகிய சுந்தரமூர்த்திகள் என்னும் உருத்திரரைச் சிவபெருமான் அனுப்பியருளினார். அவர் அப்படியேசென்று அதனைக் கொண்டுவந்து சிவனுக்களித்தார். சுந்தரமூர்த்திகள் விஷத்தைத் தாங்கிவந்து கொடுத்தமையால், அவர் ஆலாலசுந்தரராயினர். இதனால், சுந்தரமூர்த்தியே உருத்திரர் என்று வேதத்திற் படிக்கப்பட்டவராயினர். சிவனாகிய உருத்திரருக்கும் இவருக்கும் பேதமில்லையாகையால், இவரை உருத்திரன் என்றது அமையும். இவ்வாலாலசுந்தரரே சுந்தரமூர்த்திகள் என அவதரித்தமையால், சைவசமயாசாரியராகப்போந்த அப்பெருந்தகையாரைப் பரமபதியெனல் அமைவுடைத்து.

உரிமைசவுந்தரியளித்தசடையர் சிகாமணிசூடாமணியென்றோது, மரிய சுதர்மூவர்களிற்சடையனுரெனும்பெயரோனூர்ந்தசீலன், பிரியமுடனில்லறத்தினியற்கைவழுவா தியற்றும்பெற்றியாளன், றருமகவின்மையினுன்மெய்தளர்ந்துசிவனைக்கருதித்தவஞ்செய்கின்றேன்.

மனைவியிசைஞானியொடுமணங்கமழ் மென்மலரணையில்வதிந்துநெஞ்சம், கனிவினொடுமகப்பேறிலாமையினைக்குறித்துருகிக்கழறுங்காலைப், பனியிரு

ளோடகற்றிடுவெம்பகலவன்றன்கிரணமதிற்பட்டபைங்கூழ், நனிதழைப்பமு
கில்பொழிந்ததெனவொளிர்சோதியிலிருவர்நாப்பண்மாதோ.

ஆன்றரவிமதியிரவிவாரமுத்திரத்தினிசியடர்சேவோரை,மூன்றுவயதொ
டுமதலைபற்பலபூடணமிலங்கமுக்கட்டேவன்,றேன்றினனென்றுளமகிழ்ந்துச
டையனார்கரத்தெடுத்துத்தோளிற்சேர்த்தார்,வானறுமென்மலர்சொரிந்துவ
ளவார்துந்துமிமுழக்குவானோரார்த்தார்.

என்பன திருநாவலூர்ப்புராணச் செய்யுட்கள். இப்படியே, வா
கீசவடிகள் வாதவூரடிகள் என்னும் அமல மூர்த்திகளும் வேதப
டிதராயுள்ள ஸந்தர்ப்பங்களை ஆங்காங்குக்கண்டுணர்க. இவர்கள்
சமயகுரவர் எனச்சிறந்தபடிச் சமயசீடர் எனச் சிறந்தவர்களே அ
றுபத்துமூன்று நாயன்மார்களாம். இந்நாயன்மார்கள் அடியவர்கள்
எனவுஞ் சிறந்திருக்கின்றார்கள். சைவசமயம நிலைபெறுமாறு ஆசா
ரியத்தன்மையை விளக்கவந்தவர்கள் நால்வரும, சீடத்தன்மையை,
அல்லது அடியவர்தன்மையை விளக்கவந்தவர்கள் அறுபத்து மூவ
ருமாம். அறுபத்துமூவராகிய திருக்கூட்டத்தில் ஆசாரியர் நால்வ
ருள், மூவர் அடங்கியிருக்கின்றனர். அவர் ஆளுடைய பிள்ளையார்
ஆளுடையவரசுகள், ஆளுடையநம்பிகள் என்னும் மூவருமாம். ஆ
ளுடையவடிகள் அத்திருக்கூட்டத்தில் அடங்காது நின்றனர். ஆ
சாரிய வகுப்பிலடங்கிய நால்வருள் அடியவர்வகுப்பில் மூவரே அ
டங்கினர். ஒருவர் ஆசாரியவகுப்பிலேயேயன்றி அடியவர்வகுப்பில்
வந்து சேராராயினர். நாயன்மார்களாகிய அடியவர்வகுப்பில் இவர்
ஏன்சேரவில்லையெனின், ஸ்ரீ சுந்தரமூர்த்திசுவாமிகள் திருத்தொண்
டத்தொகையில் இவரை யெடுத்தோதாமையினாலென்று சிலர் கூறு
வர். அவர் ஏன் ஓதவில்லையெனின், அவரதுகாலத்திற்கு இவர் பின்
னிட்டவராகலாம், ஆகையால் ஓதுதல் யாங்ஙனமெனப் பதில்விடுப்
பர். அதுகூடாது. சுந்தரமூர்த்திகளினும் முற்பட்டவரும், அவரா
லோதப்பெற்ற திருத்தொண்டத்தொகையி லெண்ணப்பட்டவருமா
கிய ஸ்ரீ வாகீசவடிகள் நரிபரியாகிய திருவிளையாடலையும் அவர் நந்தி
கணத்தலைவர் திருவவதாரமென்பதையும், "நரியைப் பரிசெய்குவானும்"
என்றும், "குடமுழநந் தீசனைவாசகனுக்கொண்டார்" என்றும் தமது தே
வாரத்திருப்பதிகத்தில் துதித்திருக்கின்றனர். வாதவூரடிகள் சுந்தர
மூர்த்திகளுக்குப் பிற்பட்டவராயின், அவ்வாதவூரடிகளது மகிமை
யாகிய நரிபரியானவிஷயத்தை அப்பர்சுவாமிகள் கூறியது யாங்ங
னம்? இதனால், சுந்தரமூர்த்திகளினும் வாதவூரடிகள் முற்பட்டவ
ரென்பதே துணிவு. ஆயின், அவ்வாதவூரடிகளைச் சுந்தரமூர்த்திக

ளோதாததென்னையெனின், ஓதாமைகொண்டொரு தாழ்வுமின்ெ
ன்க. எங்ஙனமெனின், ஸ்ரீசுந்தரமூர்த்திகள் தமது தாயுந்தந்தை
மாகிய இசைஞானியாரையும், சடையனாரையுந் திருத்தொண்ட
தொகையில் எடுத்தோதினர். அவர்களையெடுத்தோதியதற்கு அவ
கள்பானிகழ்ந்த திருத்தொண்டின்பெருமை யாது? அச்சுந்தரமூ
த்திகளுக்குத் தாயுந்தந்தையுமாக அவர்கள் சிறந்தமையேயாம். இ
ங்ஙனமாக, ஸ்ரீ ஸம்பந்தப்பெருமானுக்குத் தாயுந்தந்தையுமாகச் சி
றந்த பகவதியாரையும், சிவபாதவிருதயரையும் அத்திருத்தொண்
டத் தொகையில் அவரெடுத்தோதாமை யென்னை? அவர்களோதப்
படாமையால், அவர்களைத் தாழ்ந்தவர்களெனல் கூடுமோ? அவர்
கள் தாழ்ந்தவர்களாயின், பிள்ளையாரது திருமணத்தில் (இரும்பு
ண்டநீரிற் றிரும்பாதவீடுபெறுதல்) சேருமோ? இவர்களேயன்றி,
அத்திருமணத்தில் வீடுபெற்றவர்கள் எண்ணிறந்தவர்களன்றோ?
அவ்வெண்ணிறந்தவர்களோடுதா னன்றோ திருநீலநக்கர், திருநீலக
ண்டயாழ்ப்பாணர் முதலிய நாயன்மார்களும் வீடுபெற்றார்கள்? தி
ருத்தொண்டத் தொகையிலோதப்பெற்ற திருநீலநக்கர் முதலினோ
ரும், ஆண்டோதப்பெறாத ஏனையோரும் பிள்ளையாரது திருமணத்
தி லொரேகாலத்திற் சமமுத்தி யடைந்தாராகவும், இருதிறத்தவரு
ள் யாம் தாரதம்யங் காணுமாறெங்ஙனம்? எண்ணில்கோடிபே ரு
ண்மை முத்தியடைந்தாராகவும், அவர்களையெல்லாந் திருத்தொ
ண்டத் தொகையில் எடுத்தோதாததென்னை? அன்றி, சம்பந்தசர
ணாலயரு மத்திருத்தொண்டத்தொகையி லெடுத்தோதப்பெறாததெ
ன்னை? இவர்கள் யாவரும் சுந்தரமூர்த்திசுவாமிகளுக்கு முற்பட்ட
வர்களேயன்றோ? அவருக்கு முற்பட்டவர்களும், முதல்வன் றிரு
வடியின்ப மெய்தினவர்களுமாகிய அன்னோர் திருத்தொண்டத்தொ
கையிற் பெறப்படாமையாலுண்டாகுந் தீர்மானமே ஸ்ரீமாணிக்கவா
சகசுவாமிகளைத் திருத்தொண்டத்தொகையில் எடுத்துத் துதிக்கா
மைக்குண்டாகும் முடிவாயினதறிக.

பிள்ளையாரது திருமணத்திற் றிருவடிப்பேறெய்திய அடியவர்
களோடு வாதவூரடிகளையும் ஸமமாக்குதல் யாங்ஙனம்? வாதவூரடி
களது பிரஸித்தி அவர்க்கில்லாமையாலெனின், அறுபத்துமூன்று
நாயன்மார்களில் யாவரும் ஒரேவிதமான பிரஸித்தி அடைந்திருக்
கின்றார்களா? உள்ளநிலைமாத்திரமேயன்றோ யாவருக்கு மொத்திரு
ந்தது? அஃதொன்றினைநோக்கியே அவர்களை யோரினமாக்கினர்

நமது பெருமானெனவறிக. இவ்வுண்மையை யூகிக்கின், வாதவூரடிகளை ஏனையடியவரோடு ஸமம்பாராட்டுதல் யாங்ஙனமென்னு மாசங்கை நசிக்கும். சிவபெருமானுடைய திருவடியின்பமெய்துதல் சிந்தையொருமைப்பட்ட செந்நெறியினர்க்கேயென வேதாதிகண் முழங்கலால், முத்தாத்மாக்களிடத்தில் மகிமையை எதிர்பார்ப்பது கூடாது. முருகநாயனார்-உருத்திரபசுபதிநாயனார் என்பவர்களடைந்த பிரஸித்திகள் யாவை? சித்தைகாக்ரமே அவர்கள்பாற் சிறந்த மகிமையாயினமையால், அவர்களிடத்தி லொருமகிமையுஞ் சிறக்கவில்லையென வுள்ளத்தமுங்குதல்கூடாது. அவர்பால் மகிமைகள் சிறந்திடமாட்டாவென்பதும் முடிவன்று. ஆவசியகம்நேரின், அவர்பால் எல்லாமகிமையும் நிகழுமென்க. இந்தவுண்மை நோக்கங்கண்டவர்கள் திருத்தொண்டத் தொகையில், வாதவூரடிகளை மாத்திரமேயன்றி அநேகம் சிவனடியார்களையுந் தம்பிரானாரூரரெடுத்தோதவில்லையெனத் தெளிவார்களாகையால், அவர்கள் திருத்தொண்டத்தொகையில் வாதவூரடிகளை ஏனெடுத்தோதிலர் வன்றொண்டப்பெருமானென்றெழும்வினாவின் மயங்காரென்க. எமதன்னையாகிய [illegible]வதியாரை அவரெடுத்தோதினரா? மாதினியாரையும், புக[illegible]மெடுத்து வாழ்த்தினரா? சிவகோசரியாரை எடுத்துப்புக[illegible] இவ்வாறு எண்ணியெழுதுவதென்றால் கணக்கிட்டுமுடியாதே. பூசராய்ப்பணிவார், பரமனையேபாடுவார், சித்தத்தைச்சிவன்பா[illegible]தார் முதலியபகுதிகளில் எண்ணிறந்த அடியார்களடங்கினராகலின், வாதவூரடிகளைத் திருத்தொண்டத்தொகையிற் சேர்க்காமைகொண்டே நாம் கவலுறுதல் அஸங்கதமென்க.

வாதவூரடிகளை ஆசாரியமூர்த்திகளென்று நாம் அங்கீகரித்தமையால், அவர் அதிகபிரஸித்தராயிடுதல் ஸித்தம். இப்பெருஞ்சீராளரைத் திருத்தொண்டத்தொகையிற் சேர்க்காதது குறையெனின், குறைவாகாது. அதனை விளக்குதும். திருத்தொண்டர்க ளறுபத்துமூவருள் ஞானஸம்பந்தர் முதலியமூவரும் பதியினது விபூதிகளும், ஏனையோர் சிவசரணமெய்தியவர்களுமாம். இவ்வுண்மை போதரவே இவர்களோடு நாலாவது புருடராகப் படிக்கப்பட்ட வாதவூர்வள்ளல் அறுபத்துமூவரு ளடங்காராயினர். அடங்கிவிடுவாரெனின், நால்வராசாரியர்கள் பதியினது மூர்த்தங்களென்பது கெடும். இவ்வாசாரியர் நால்வர்தம்முள் ஒருவர் பசுவர்க்கமாகிய ஏனைநாயன்மார்குழுவிற் சேராதொதுங்கினமையால், அது ஏனையாசார்

யர்களையும் பசுவர்க்கத்தினின்று வேறுபடுத்திவிட்டது. திருவிளையாடற் புராணத்தில் தேவியாருக்கும், இளையபிள்ளையாருக்கும், நந்தியடிகளுக்குஞ் சிவபெருமான் சாபமிட்டருளி மூத்தபிள்ளையாருக்கு அச்சாபத்தை யிடாராயினரெனத் தெரிவித்திருக்கின்றது. என் அவருக்குச்சாபங் கொடுத்திலரெனின், அவருக்குச் சாபந்தரின், அது தம்மையேதொடருமென வாளாவிடுத்தனரெனவும் விளக்கியிருக்கின்றது. கணபதிக்குச் சாபம்பலியாமையும், தேவி—ஸ்கந்தர் முதலினோர்க்குச் சாபம் பலித்தமையுமாகிய பிரமேயத்தையோசிக்குங்கால் கணபதிமாத்திரமே சிவனாருக் கபேதமும், தேவிமுதலினோர் பேதமுமாயுள்ளவரெனக்கொள்ள இடஞ்செய்கின்றது. இது ஸர்வாஸங்கதமாகையால், இதற்கு வேறுஹேதுவிருப்பதே யோசிக்கத்தக்கது. தேவிஸ்கந்தர்களைப்போல விநாயகருஞ் சாபமேற்பாரெனின், அவர்பால் பசுத்வமே நிலைக்கும். அப்போது அவர் பதியினது அவதாரமென்பது கெடும். அதனால், தேவிஸ்கந்தவிநாயகர்கள் மூவரும் பசுவர்க்கத்திற்றானே எண்ணப்படுவர். இவர்களுக் கதிஷ்டானமாகிய சிவமும் பசுவாயிடத்தட்டில்லை. இத்தகையவஸங்கதம் நிகழாமைப்பொருட்டே விநாயகர்பால் சாபமேறாமையாகிய வாய்மை வெளியாகியது. விநாயகரும், தாமுமொன்றென்பதைச் சிவபெருமான் வியக்தமாக்கி விட்டனர். இதனால் சிவனாருக்குச் சாபமேறாமையும், அவரில் வேறாகாதவிநாயகருக்குச் சாபமேறாமையும், அவர்களோடு வேறுபடாத ஸ்கந்தர் முதலினோருக்குச் சாபமேறாமையுமாகிய நலமே அறியத்தக்கது. தேவிஸ்கந்தர்கள் சாபமேற்றாரென்பது சொன்மாத்திரமேயாம். அன்னோர் சாபமேற்றாரென்பது நாடகமன்றி வேறு என்னாவது? சிவசாத்திரோபதேசத்தின் பெருமையை யுயிர்களுக்கு விளக்குதற்குப்போந்த பதியினது திருவிளையாடல் அது என்பது ஸித்தமாகையால், பசுதர்மாரோபணம் தேவிஸ்கந்தர்களிடம் படிக்கப்பட்டது குற்றமாகாது. இவ்வுபமானமே பிள்ளையார் முதலிய மூவரும் அறுபத்துமூன்று நாயன்மாருளெடுத்தோதப் பெற்றமைக்குக் காட்சியாய்நின்ற ஸாட்சியாயிற்று. விநாயகப்பெருமான் சாபமேற்காமைபோலன்றோ மணிவாசகப்பெருமான் திருத்தொண்டத் தொகையிற் சேராராயினர்? சாபமேற்காதுநின்ற விநாயகரதுஸ்தாநத்தில் ஸ்ரீவாசகப்பெருமான் நின்றமையால், ஆசாரியர்களது தெய்வத்தன்மைபோதரவே திருத்தொண்டத்தொகையில் அவ்வாதவூரடிகளைத் தம்பிரான்றோழ ரெடுத்

தோதிலரென்க. சீவர்களைப்போலச் சாபமேற்றருளிய தேவிமுதலினோர் சீவர்க்களாகாவாறு நாயன்மார்களிலெண்ணப்பட்ட பிள்ளையார்முதலினோர் நாயன்மார்களாகிய அடியவராயினதில்லை. அன்னோர் அடியார்போன்று நடித்தாரென்பதேதுணிவு. பிள்ளையார்முதலிய மூவரையும் பதிவர்க்கத்திற் படிப்பதற்காதாரமாகவே வாதவூரடிகள் திருத்தொண்டத்தொகையிற் சேராமை யுணர்ந்தவர்கள் இனிமயங்காரென்க. விரிக்கிற்பெருகும். இதுநிற்க.

விஷ்ணுவானவர் பிருகுவினது சாபத்தால் பிறந்துழன்றது நாடகமாமோவெனின், அது கூடாது. ஏனெனின், பிருகு ஓர்பசு. விஷ்ணு ஓர்பசு. பசுக்கள் கர்மாதீனமானவர்கள் கர்மவசப்பட்டவர்களது செயல்கள நாடகமாகமாட்டா. விஷ்ணு பசுவன்று பதியெனின், பதிக்குப் பசுவினது சாபம் ஏறமாட்டாதாகையால், பிருகுவாகிய பசுவினது சாபமேற்றுழன்ற விஷ்ணுவைப் பதியென்று கூறுவது பரியாசமென்க. நிராலம்போபநிஷத்து விஷ்ணுவைப் பசுவென்றே கூறுகின்றது. விஷ்ணுவைப் பதியென்று மயங்குவார்கோளிரிய "இராமதத்வ தீபிகையினது ஆபாசவிளக்கம்" என்பதொன்று இரண்டுபாகங்களாக யாமவெளியிடுவித்ததில், அவர் பசு என்பது இனிது பரிஷ்கரிக்கப்பட்டிருக்கின்றது. இவற்றை ஸாதுக்கள் கண்டு ஸந்தோஷியாமற்போகார். இனித் தேவிமுதலினோர்க்குச் சிவன் கொடுத்தசாபத்தை யோசிப்பாம். சிவன் பதி. தேவி அப்பதியில் வேறாகாத அதனது சக்தி. சிவனுந்தேவியும் அபேதமாயினமையாலும், சாபங்கொடுக்கவுமேற்கவுமிரண்டுபொருள்கள் வேட்கப்படாமையாலும், சிவன் சாபங் கொடுத்ததும், தேவி அதனையேற்றதும் நாடகமென்றது நிராக்ஷேபம். ஸத்துச்சித்தானந்த வடிவினராகச் சிவசக்தி ஸ்கந்தர்களை விசாரித்தவர்க்கு எமதுபோதம் இன்பத்தைத் தருமென்க. இங்ஙனநிற்க.

இனி நாயனார் என்னுஞ்சொல் 'நாயனுமடிமையு நாட்டியதாகும்" என்னுமாதரவின்படித் தலைவன் என்னும் பொருளையேதரலால் (நாயன்மார்களாகிய அடியவர்) என்று மேலெழுதியதிழுக்காமெனின், அங்ஙனமாகாது. அறுபத்துமூவரும் அவரைவழிபடும் எமக்கு நாயன்மாராயினதன்றிச் சிவஸந்நிதியில நாயனாராயினதில்லை. உலகத்தவர் தம்மை வழிபடுதலால் நாயன்மாரும், தாம் சிவனைவழிபடுதலால் அடியவருமாகவப்பெரியோர் துதிக்கப்படுகின்றனர். இதனை

ல், எமதுபட்சம் வேறுன்றிப் பொலிவெய்தியது. அற்றேல், திரு ஞானஸம்பந்த மூர்த்திநாயனார்-திருநாவுக்கரசு நாயனார் - ஸ்ரீ சுந்தர மூர்த்திநாயனார் என்றுவழங்குவது தவறெனச் சிலர்கூறுவதென்னெனின், அதனை விளக்குதும். பிள்ளையார் முதலியமூவரையும் நாயனார் என்று கூறுவார் ஸ்ரீமாணிக்கவாசகரை நாயனார் எனக்கூறும் வழக்கின்று. அஃது என்னை? அவரை மாணிக்கவாசக சுவாமிகள் என்றே கூறிவருகின்றனர். இதற்குக் காரணம் சொற்றிலர். அறுபத்துமூன்று நாயன்மாருள் மாணிக்கவாசகர் சேராமையால், அவரை நாயனார் என்பது கூடாதெனின், அவ்வறுபத்துமூன்றுநாயன்மாருட்சேர்ந்த காரைக்காலம்மையார் - மங்கையர்க்கரசியார் - இசைஞானியார் என்னுமிவர்களைத் தனியே பிரஸ்தாபிக்குங்காலங்களில் நாயனார் என்னும் பட்டஞ் சிறவாமையால் அது நிரஸ்தம். மாணிக்கவாசகநாயனார்என்பது செவிக்குச்சுவைப்படாமையால்,அவரைச் சுவாமிகள் என்றதெனின், திருஞானஸம்பந்த மூர்த்திநாயனார் முதலியன எமது செவிக்கும், ஏனையோரது செவிக்குஞ் சுவைப்படாமையால், இவர்களை நாயனார்என்றே கூறவேண்டுமென்பது அடிபட்டுப் போய்விட்டது. ஒருவருக்குச்சுவைப்படுவதும், மற்றொருவருக்குச் சுவைப்படாததும் சபையில் முன்னுக்குவரா. நியாயத்திலடங்கி நிற்பதே முனைத்தெழும். அவரவருக்குச் சுவைப்பட்டவாறு கூறிமகிழ்வதுங் குற்றமாகாது. தன்னைப்போலவே மற்றையருங் கூறவேண்டுமென வாதிப்பதுமாத்திரமே கூடாது. அநாதிவழக்குக்கு விரோதமாக ஆன்றோரையெதிர்ப்பதுங் குணமாகாது. ஸ்ரீஜ்ஞாநஸம்பந்தப்பெருமானது திவ்வியநாமாங்கிதத்தோடு திருவாலவாய் என்னும் மதுரையின்கண்ணினிதுவிளங்குந் திருமடத்தில் அநாதிதொட்டுவழங்கிவரும் பிருதாவளியை இதனடியில் எழுதுகிறோம்.

"ஸ்ரீகைலாஸோர்ந்த துவாதசாந்தசியாமளா பீடாரூட ஸ்ரீ மீனாக்ஷிசுந்தரேசுவராபிந்நஸ்வரூப பரசிவபுத்ரரத்ந குமாரகுருமண்யதுலாவதார ஸ்ரீ பார்வதீஸ்தந்யபாநலப்ததிவ்வியஞாந நிசுருதசகலநிகமாகமசாரபூத திரமிடவேதப்ரவக்திரு ஸ்ரீமத்பரமசிவகருணைசமதிகதமுக்தாமய சதுரந்தகாயமானசத்ரசாமர ஸ்ரீசிந்ந காகளாதிசமஸ்த பிருதாவள்ளியலங்கிருத ஞாநவிஞ்ஞாந சக்ரவர்த்தி சர்வஜனசங்க சத்யோநிர்வாண தீக்ஷாவ்யயாபவர்க்கவருஷ விசிராணநஜீமூத பரமதகளபகேசரி ஷண்மதப்ரதிஷ்டாப காசாரிய ராஜாதிராஜபாண்டியமஹாராஜகுரு க்ஷபணசாக்கியாதி மஹாந்தகார நிவாரணஞானபானு வீக்ஷணாருகாருகதுவஜோச்சேதநபூர்வ 'ஸ்ரீ யத்விருஷபத்துவஜஸ்தாபகஸ்ரீசைவசமயகர்த்திரு சர்வஞ்ஞபீடாரூட ஸ்ரீ லோகத்குரு ஸ்ரீஞானசம்பந்ததேசிக சுவாமிகள் கிருபாகடாக்ஷத்தினாலே."

என்று படிக்கப்பட்டுவரு மநாதிஸம்பிரதாயத்தை விலக்குவத ற்குநாம் ஆர்? "ஸ்ரீஜகத்குரு ஸ்ரீஞான சம்பந்த தேசிக சுவாமிகள் திரு பாதகடாக்ஷத்தினாலே" என்றதைமாற்றி "ஞானஸம்பந்த நாயனார் திரு பாதகடாக்ஷத்தினாலே" என்று நாட்டி வழங்குவிக்க முடியுமோ? அதற் குஆவசியகந்தான் என்னை? மூவர் முதலிகளை நாயனார் என்று வழங் கவேண்டுமென்பது ஈழநாட்டா ரிப்போதெடுத்துக்கொண்ட புதுவ ழக்காய் முடிதலின், அது ஏனை யெல்லாநாட்டாரது பழையவழக்கா கிய ஆன்றோரது அபிமதத்தைக்கடந்து ஜீவிக்க வலிபெறுதொழுங் கியதென்க. இவற்றைத் தெளியாதார் சிவபெருமானை நாயனார் என ப்பல விடங்களிற் சேக்கிழார் பெருமான் பெரியபுராணத்திற் கூறி யிருப்பதாக ஸந்தோஷிக்கின்றார்கள். அது செய்யுள்வழக்கின் மாத் திரமே சிறந்திடும். செய்யுட்களில் அவன் இவன் என்று வரும் வழ க்குகளிருப்பதால், சம்பந்தன்சொன்னான், சுந்தரன்போனான் என்று நாம் வழங்குதல்கூடுமோ ? சிவபெருமானைச் சேக்கிழார் நாயனார் என்று வழங்கியிருக்குமாதரவால் இனி நாம் சிவபெருமானைப் பிர ஸ்தாபிக்குங் காலங்களில் திரிநேத்திரநாயனார் வந்தார், சிவநாயனார் போனார், சம்புநாயனார் அருளினார் என்றுவழங்குதலும் கூடுமோ ? இப்படி விபரீதம்பட வந்நாயனார்வழக்குச்சிதைந்திடுதலால் அப்பு து வழக்கை ஆதரித்தல் அஸங்கதமே. அறுபத்துமூவர் எமக்குத்த லைவர்களும், சிவபெருமானுக்கு அடியவர்களுமானவர்கள். சிவன் த லைவரேயன்றி அடியவரன்று. ஆசாரியர்கள், தலைவர்களும், அடியவ ர்போன்று நடித்தவர்களுமாம். அடிமைத்திறஞ்செய் துய்ந்தவர்களு க்கும், அடிமைத்திறத்தை யினிதுகாட்டி யுலகையுய்வித்தவர்களுக் கும் பேதந்தோன்றவே அறுபத்துமூவரைச் செய்யுள்வழக்கோடு ஏனைவழக்கினும் நாயனார்என்று வழங்குதலும்,ஆசாரியர்களைச் செய் யுள்வழக்கின்மாத்திரமே நாயனார் என்றுவழங்குதலும் சிஷ்டர்களு க்கு ஒப்பாயிற்று. இதனால், சமயாசாரியர்களைத் தனித்தனியெடுத் துப பிரஸ்தாபிக்கையில் நாயனார் என்று கூறுவது நவீனவஸித்தாந்த மென்றொதுங்குவர் மேலோர். இவ்வுண்மை தெளிந்தபேர் ஆசாரிய ர் நால்வர்களையும் சுவாமிகள் என்றே வழங்குவரென்க. திருஞான ஸம்பந்த சுவாமிகள், திருநாவுக்கரசு சுவாமிகள், சுந்தரமூர்த்தி சு வாமிகள், மாணிக்கவாசக சுவாமிகள் என்று துதிப்பதே சிஷ்டர்க ளொப்பத்தக்கது. தாயுமானசுவாமிகள், சிவப்பிரகாசசுவாமிகள் எ ன்று பின்வந்த அடியவர்களையுஞ் சுவாமிகள் என்று கூறுவதுண்டே.

யெனின், 'சொக்கநாதஸ்வாமி, ஏகாம்பரநாதஸ்வாமி முதலிய ஸ்ரீப ரமேசுவரனது திருநாமங்களையும் சுவாமி என்னும் விசேடம் அடுத் துவருகின்றமையால் குற்றமில்லை யென்க. சுவாமியாகிய சிவனை வே றறக்கலந்து சிவாநுபவவசித்தராயிருப்பவருஞ் சுவாமியென்றுபச ரிக்கப்படுதல் சுருதிஸம்மதமாகையால் பெரியோர்களும் சுவாமிக ளாயினர். ஆசாரியர்கள் சுவாமியேயாகையாலும், அவருள் ஸ்ரீஜ ஞானஸம்பந்தர் சுவாமியென்னு மியற்பெயருடைய முருகக்கடவு ளாகையாலும் சமயகுரவர்களாகிய எமது அருளாளர்களை நாயனு ர் என்றழைப்பது கனம்பெறுதென்க. நாயனுர் என்னுஞ்சொல் தலை மைப்பொருளை விளக்கினும், அதுசெவிக்குப் புலனுனதும் அடிமை ப்பொருளிலேயே பரிவஸாநத்தையடைதலால் சம்பந்தமூர்த்தி, வா கீசமூர்த்தி, சுந்தரமூர்த்தி, மணிவாசகமூர்த்தி என்று அன்பர்கள் கொண்டாடித்துதிக்கும் அமலமூர்த்திகளை நாயனுர் என்று வழங் குவது மனஸுக்கு ஸந்தோஷத்தை யுண்டுபண்ணிலது. இவ்வுண் மை நியாயங்களைச் சித்தஸமாதானத்துடன் நமதன்பர்கள் கவனி ப்பாராக.

இனித் திருத்தொண்டத்தொகையில் நாயன்மார்வர்க்கத்திற் ப டிக்கப்படாத வாதவூரரை வாதவூரடிகள் புராணத்தில் "நாயனுரவுடன் னைநீ யொல்லையிங் கழையென்ன" என்னும் ஸந்தர்ப்பத்தில் நாயனுர் என்று படித்திருப்பதென்னையெனின், அத்திருத்தொண்டத்தொ கையிற் படிக்கப்படாத ஸ்ரீ சிவபெருமானைச் சேக்கிழார்பெருமான் பல ஸந்தர்ப்பங்களில் நாயனுர் என்று பிரஸ்தாபித்ததனேடு சேர்ந் து கனம்பெறுமென்க. இது எமதுபட்சத்தைச் சிதைவுபடுத்த வ லியற்றது. எதிரிபட்சத்தையே பேர்த்தெறியும் வச்சிரத்தம்பமாய் நின்றது. எங்ஙனமெனின், வாதவூரடிகள் அறுபத்துமூன்றுநாயன் மாரிற் சேராமையால், அவர்சுவாமிகளாகலாம் என்று வாதிப்பவர் க்கே அவ்வாதவூரடிகளைக் கடவுண்மாமுனிவர் நாயனுர் என்றது த லையிடியாயிற்று. இதனையோசிக்குமஸாதுக்கள் வாதவூரடிகள் நாய னுராகாமையும், அவரோடுசேர்ந்த ஏனையாசாரியர்கள் நாயன்மாரா காமையுமாகிய வாய்மையையறிந்து வந்தியாநிற்பர். சமயகுரவர் நாயன்மாராகாமையும், சமயசீடர் நாயன்மாராயினமையுமே ஈண்டு ச்சிறந்து நிலைபெற்றன.

இம்மட்டோ, சுந்தரமூர்த்திகள் திருத்தொண்டத்தொகையி ல் நாயன்மார்களைத் துதித்தமையாலும், ஞானசம்பந்தரும் அய

பர்சுவாமிகளுங் காளத்திமலையில் கண்ணப்பரை வணங்கினமையா லும் ஏனைநாயன்மாரைச் சம்பந்தர்முதலியோரிற் றாழ்ந்தவர்களாக க்கோடல் தவறுஎன்று நம்மனோர் கூறுகின்றனர். இதுவும் அஸங்க தமேயாம். உழமண்ணா லுடல்வெளுத்தவண்ணானைச்சேரர்பெருமா ன் யானைமேனின்றுமிறங்கி வணங்கினர். ஏநாதிநாதரும், மெய்ப் பொருளாரும் புறச்சமயிகளிடஞ் சைவவேடங்கண்டு வணங்கினார் கள். சமயாசாரியர்கள் திருவீதிகளை வீழ்ந்து வணங்கினார்கள். வண ங்கினவர்களைக் காட்டிலும் வணங்கப்பெற்ற ஸ்தானங்கள் விசேட ம்பெறுமோ ? விசேடம்பெறுதலும், தாழ்ந்திருத்தலுமாகிய விருவி த வேறு பாடுகளும் ஸந்தர்ப்பத்துக்கேற்பக் கேட்கப்படும். கையால், சுந்தரமூர்த்திகள் துதித்தருளிய அடியார்களையும், அச சுந்தரமூர்த்தியையும் ஸமம் என்று கூறியிழுக்குவது கூடாது. சுந் தரமூர்த்திகள் சமயாசாரியர். நாயன்மார்கள் சமயசீடர்கள். சமய குரவருஞ் சமயசீடர்களுமொன்றுதல் யாங்ஙனம்? இப்படியேசம்பந் தப்பெருமானும், அப்பர்சுவாமிகளுஞ் சமயாசாரியர்கள். கண்ணப் பர் சமயாசாரியரன்று. அவர் சமயசீடர். சமயாசாரியர்களும், சமய சீடருமொன்றுதல் யாங்ஙனம்? இவற்றை யினிதுநோக்குவார்க்கு உ ள்ளந் தெளியுமென்க. இந்நூலில் ௩அ-௩௯-௬0-௬௧-௬உவது பக் கங்களிலு மிவ்விஷயத்தை விரிவாயெழுதியிருக்கின்றோம். ஆண்டுங் கண்டுதெளிக.

இதுகாறும் விளக்கிக்காட்டிய வுண்மையால், எம்பெருமக்க ளாகிய ஞாநஸம்பந்தாதிகளது வைபவம் இனிது வியக்தமாயிற்று. அவருள், ஸ்ரீஜ்ஞாநஸம்பந்தர் முருகக்கடவுளது திருவவதாரமென் றதைமேலே யாம்பதிப்பித்த ஸ்ரீமதுரைமடத்தின் பிருதாவளியி லும் நன்கு பிரகாசம்பண்ணியிருக்கின்றது. "தாவில் ராசரங்களெல் லாஞ்சிவம்பெருக்கும் பிள்ளையார்" என்று இளையபிள்ளையாரைப் பிரஸ் தாபித்து, "திருவவதாரஞ்செய்தார்" என்று சேக்கிழார்பெருமானுஞ் சூ சித்திருக்கின்றனர். அவர் பிள்ளையார்என்றதேயன்றி இளையபிள்ளை யார் என்று விளக்கியதெங்கேயெனின், வேறு பிரமாணங்களாற் றெளிந்துரைத்தாமென்க. சேக்கிழார் பலவிடங்களில் சிவகுமாரர் என்று கூறினமையால் அப்பிள்ளையார் மூத்த பிள்ளையாராகவாவது இளைய பிள்ளையாராகவாவது இருக்கட்டும். எந்தப்பிள்ளையார் என் னும் வினாவெழுங்கால் "மதலையாய் வந்தனன் கந்தன்" என்றது முதலி ய பிரமாணங்களெழுந்து அவ்வினாவை விடுக்கும். தொண்டர்சீர்பர

அவார் வியக்தமாகக்கூறாத காரணத்தை மேல் (24) வது பக்கத்தில் விதந்திருக்கின்றோம். இவ்வாறு தெளிந்தவர்கள் சமயத்தலைவர்க ளது பரத்துவநிலையின் மயங்கார்! மயங்கார்!! இன்னோர் சமயகுர வர்கள் எனவும், சைவசமயாசாரியர்கள் எனவும் வழங்கப்படும் வா ய்மையேயன்றோ இவர்களுக்குரிய ஆளுடையபிள்ளையார், ஆளுடை யவரசுகள், ஆளுடையநம்பிகள், ஆளுடையவடிகள் என்னுந் திருநா மங்கள் இனிதுவிசிதப்படுத்திவிட்டன? இவற்றின் றுண்மையையும் உண் மையையுந் தெளிந்திடாதார் ஆளுடையார் என்பதற்குச் சிவனுலாட் கொள்ளப்பெற்றவர் என்றுபொருள்கூறி மயங்குகின்றனர். அறுபத் துமூவருஞ் சிவனுலாட்கொள்ளப்பெற்றவரேயாக இந்நால்வருக்கு மாத்திரம் அவ்விசேடம்வந்து பொருந்துமாறென்னை? விஷ்ணுமுத லிய சராசரங்களையும் ஆளுந்தன்மைநோக்கியே அவ்வெம்பெருமக்க ளை ஆளுடையார் என்று உண்மைநூல்கள் துதித்தனவென்க. "யாவ ருக்குந்தந்தைதா யெனுமவரிப்படியளித்தா, ராவதினாலாளுடையபிள்ளையாரா ய்" எனச்சேக்கிழார் கூறியதில், பிள்ளையாருக்குச் சிவனாருள்புரி ந்தமையே அவரை ஆளுடையபிள்ளையார் என்றதற்கு ஏதுவாக வி ளக்கியிருக்கின்றதெனச் சிலர் கூறுகின்றனர். சிவபெருமானால் பிள் ளையார் ஆட்கொள்ளப்பட்டாரென்பது எமக்குமொப்பே. இது பி ள்ளையார் உலகத்தை யாண்டாரென்பதை எங்ஙனே மறுக்கும்? பிள் ளையார் உலகத்தையாளுதற்கு அவர் சிவனு லாட்கொள்ளப்பெற்ற மையே காரணமென்றது எமது பட்சம். சிவனார் பிள்ளையாரை ஆ ட்கொண்டமுறைமையால், பிள்ளையாருக்கு உலகத்தையாளுந்தன் மை யுண்டாகாது எனமறுப்பது யாங்ஙனம்? ஆளுடையார் என்ப து ஆளுகின்றவர் என்னுஞ் செம்பொருளையே தாலால், ஆட்கொ ள்ளப்பெற்றவர் என்னுங் கரும்பொருளிற் கலங்குவது கயவர்மாட் டே சிறக்கும். ஆட்கொள்ளப்பெற்றவரையெல்லாம் ஆளுடையார் என்று சேக்கிழார் கூறாமையானும் பூர்வபட்சிகளதுமதம் நிலைதளர் ந்திடும். இவ்விஷயம் " ஞானபேதவிளக்கநியாயரக்ஷாமணி " யினு ம், இந்நூலில் (165)வது பக்கத்திலும் இனிது பரிஷ்கரிக்கப்பட்டி ருக்கின்றது.

இனி ஆளுடையார் என்பதற்கு விஷ்ணுமுதலினோரை ஆளு கின்றவர் எனப் பொருள்கொள்ளின், ஆளுடையபிள்ளையார் விஷ்ணு வுக்குச் சிவசாரூப்பியந்தந்தமையால் அவர்பான்மாத்திரமே அதுகூ டும். ஏனையர்பாற் சிறந்திடுவதெங்ஙனமெனின், அதனை விளக்குதும்

இத்திரன்மால்பிரமன் மெழி லார்மிகுதேவரெல்லாம்
வந்தெதிர்கொள்ளவென்னை மத்த யானையருள்புரிந்து"

என்று ஆளுடையநம்பிக ளருளிய திருநொடித்தான்மலைத் திருப்ப கத்தில் விஷ்ணு முதலினோர் நம்பிகளை எதிர்கொண்டு வழிபட் வாய்மை வியக்தமாயிற்று.

வாதவூரடிகள் புராணத்தில்,

"*செந்தமிழ்க்கன்புமிக்கார் சென்றுதம்மன்றிலெய்தி
யந்தரத்தவரைமாலை யயனைநன்முகத்துநாடி
நந்தமக்கடியைபூண்டு நயந்தவனொருவன்சொன்ன
விந்தநற்பாடல்கேண்மி னென்றவர்க்கருளிச்செய்தார்."

என்னுமுண்மை பிறங்குவதால் ஆளுடையவடிகள்பெருமையுஞ் சிறந்துவிட்டது. ஆளுடையவரசுகள் விடயமோவெனின், திட்டை என்னும் விஷ்ணுக்ஷேத்திரத்தை நதிகொண்டுபோய்ச் சமுத்திரத்திற் சேர்க்காதவகை நிலைபெறுவித்தமையானும், அவ்விஷ்ணுவாலாகாத வநேக காரியங்களைச் செய்து முடித்தமையானும் ஸாபஞ் சஸம் பெறும். இவ்வருளாளர்களது பெருமை"யாமிருந்து சொன்ன பொழுதே தொலையுமோ?" என்னுந் திருவாக்கால் கொண்டாடத்தக்கதென்க. இவ்வமலதேசிகர்களது வைபவங்களை யாவருமெளிதினுணர்ந் தின்புறுமாறு அவர்களது புராண ஸாரங்களை ஈண்டு வெளிப் படுத்துவாம்.

---

ஆளுடையபிள்ளையார்புராணசாரம்

"காழிநகர்ச்சிவபாதவிதயர்தந்தகவுணியர்கோனமுதுமைபாள்கருதியூட்டு
மேழிசையினமுதுண்டுதாளம்வாங்கியிலங்கியசித்திலச்சிவிகையிசையவேறி
வாழுமுபலகனகற்றிப்பந்தரேய்ந்துவளர்கிழிபெற்றரவின்விடமருகற்றீர்த்து
வீழிநகர்க்காசெய்திமறைக்கதவம்பிணித்துமீனவன்மேனியின்வெப்புவிடுவித்

(க)

[தாரே

ஆரெரியிட்டெடுத்தவேடவைமுன்னேற்றியாற்றிலிடுமேடெதிர்போயணையவே
காருதவும்டிபுத்தன்றலையிலேற்றிக்காயாதபனையின்முதுகனிகளேற்றி [ற்றிக்
வோரமணரொழியாமேகழுவிலேற்றியோதுதிருப்பதிகத்தாலோடமேற்றி
ஈரமிலாவங்கமுயிரெய்தவேற்றியிலங்குபெருமணத்தரனையெய்தினரே."

* சிவபெருமான்

## ஆளுடையவரசுகள்புராணசாரம்.

[புகழனார்பால்
"போற்றுதிருவாமூரில்வேளாண்டொன்மைப்பொருவில்கொறுக்கையரதிபர்
மாற்றருமன்பினிற்றிலதவதியாமாதுவந்துதித்தபின்புமருணீக்கியாருந்
தோற்றியமண்சமயமுறுதுயரநீங்கத்துணைவரருடரவந்தசூலைநோயாற்
பாற்றருநீளிடரெய்திப்பாடலிபுத்திரத்திற்பாழியொழித்தரனதிகைப்பதியில்
(க) [வந்தார்
வந்துதமக்கையரருளானீறுசாத்தி வண்டமிழாலேனோய்நீங்கிவாக்கின்மன்னா
யெந்தபொடிவிடம்வேழம்வேலைநீந்திவியன்சூலங்கொடியிடபம்விளங்கசசா
யந்தரிலப்பூதிமகனரவமாற்றியருட்காசுபெற்றுமறையடைப்புநீக்கிப் [த்தி
புந்திமகிழ்நதையாற்றிற்கயிலைகண்டுபூம்புகலூரரன்பாதம்பொருந்தினாரே."

---

## ஆளுடையநம்பிகள்புராணசாரம்.

தண்கயிலையதுநீங்கிநாவலூர்வாழ்சடையனார்தனயனாராய் [ர்ந்து
மண்புகழவருட்டுறையானோலைகாட்டிமணம்விலக்கவன்றொண்டாயதிகைசே
நண்பினுடனருள்புரியவாரூர்மேவிநலங்கிளரும்பரவைதோணயந்துவைகித்
திண்குலவும்விறன்மிண்டர்திறல்கண்டேத்துந்திருத்தொண்டத்தொகையரு
(க) [ளாற்செப்பினாரே.
[னாச்செய்து
செப்பலருங்குண்டையூர்நெல்லழைத்துத்திருப்புகலூர்ச்செங்கல்செழும்பொன்
தப்பின்முதுகுன்றர்தரும்பொருளாற்றிட்டுத்தடத்தெடுத்துச்சங்கிலிதோள்சா
னைப்பிறனித்தூதுவந்தாறூடுகீறியுறுமுதலைசிறுமதலையுமிழநல்கி [ர்ந்துநாத
மெய்ப்பெரியகளிறேறியருளாற்சேரவேந்தருடன்வடகயிலைமேவினாரே." (உ)

இவை கொற்றங்குடியார் கூறியவை.

---

## ஆளுடையவடிகள்புராணசாரம்.

"செய்யதிருவாதவூர்வந்தருளியமைச்சரெனச்சிறந்துநீடு
வையமிசைவழுதிநிதிகொண்டரனைக்குருந்தடியில்வணங்கிஞால
முய்யவருட்பணியாற்றிநரிபரியாச்செய்துநதியுடைப்பிலெங்க
ளையன்முடிமிசையுவந்துமண்சுமக்கவன்பினுருவாயினாரே.
(க)
எங்குமாகியவழகன்மேனிபிரம்படிதாங்கவேங்கிப்புத்தர்
மங்கவாரருள்செய்துமூகைபேசிடவழங்கிமணிமன்றூடு
மெங்கணாயகன்கரத்தாலேடுமெழுத்தாணியுங்கொண்டெழுதப்பாடி
யங்கண்மேவியசோதிதன்னிலிரண்டறக்கூடியமர்ந்திட்டாரே."

இஃது அபியுக்தரொருவர் கூறியது.

இந்தப்புராணசாரங்கள் நித்தியாநுஸந்தானத்திற் குபயோக மாயினவென்க. பிள்ளையாரது சரித்திரத்திற்குமாத்திர மீண்டுச்சூ சந மொருவாறு எழுதினேம். ஏனையாசாரியர்களது சரித்திரங்களி ல் அவர்களது அவதாரஸநதர்ப்பங்களைமாத்திரம் இனிது பிரகாசி ப்பித்து அவர்கள் பிள்ளையாரில் வேறுகாதவரென்னு மருணலம் போதர அவர்களது பரத்துவத்தை ஸ்தாபித்தோம். அவர்களது ச ரித்திரமுழுதுமெடுத்தநுவாதம்புரிந்து சூசநமெழுதப்புகின் விரியு மாகையால், இம்மட்டிலுபரதியடைநதாம். மத்யஸ்தபுத்தியுடைய ஸாதுக்களிதுகொண்டே யெல்லாவுண்மைகளையு மினிதாய்ந்து தெ ளிந்தின்புறுமறபோகார். இவ்வரியநலங்களை நேரேதரிசித்தும், மா ச்சரியமுதிர்ந்து நிந்தையிலிறங்கி நொநதயருங்கீழ்களுக்கு யாம் திருப்தியுண்டுபண்ணுவது கூடுமோ? ஆகையால், எம்பெருமக்களா கிய ஆசாரியர்களது கால்களில்வீழ்நது எமதுகுறைகளை அவர்கள் ஸந்நிதியில் எடுத்து விண்ணப்பஞ் செய்து திருவரு ளுேக்கத்திற் கிடந்து வாழ்வோமாக.

## ஆளுடையபிள்ளையார் வாழ்த்து.

### முதற்பதிகம்.

அருட்பெருங் குருவா மற்புத மணியின் னடிமலர்க் கன்பிலாச் சிதட
ரரிப்பரித் தெய்த்தாங் கிடருழந் திறுமாந் தறிவிலா திருட்குழி வீழ்ந்தே
பொருட்பயன் காணுர் புன்மையே பேணிப் புலம்புவா ருரைப்பினுங்கேளார்
பொய்கொளு † மபர சுப்பிர மணியர் புதுமையே பேசிநா ணிழப்பர்
தெருட்பதி வில்லார் தீமையே பதிந்த திருவினர் பாசவீக் கத்தார்
சீயென யாரும் வெறுக்கவே திரியுஞ் சென்மமே யென்றுமேற் றுடையார்
மருட்பதி வஞ்சம் விஞ்சுநெஞ் சத்தார் வாய்மைசேர் மானமொன் றில்லார்
மாநிலந் தனக்குப் பாரமே கணடாய் வள்ளலே காழிமா தவமே. (௪)

† அபரசுப்பிரமணியர் என்னும் பிரயோகம் ஆகமத்திற் கிடை யாது. ஆயினும், மூலமூர்த்தியும் அவதாரமூர்த்தியுமா யுள்ளவர்க ளை முறையே பரம் அபரம் என்பது கூடும். இதனுல், சுப்பிரமணிய க்கடவுள் பரமும், அவதாரமாயுள்ள ஸம்பந்தக்கடவுள் அபரமுமா கலாம். இவ்வுண்மையால் ஸ்ரீசுப்பிரமணியரே சம்பந்தராக அவதரி த்தாரெனல் சால்புடைத்தன்றி வேறுவிதத்தாற் சாதிப்பதுகூடாது. இந்த விசாரத்தால் பரசுப்பிரமணியர் முருகக்கடவுளும் அபரச

பிரமணியர் ஸம்பந்தக்கடவுளுமாகலாம். இப்படிவிவகரிப்பதால்சுப்பிரமணியக்கடவுளுக்காவது, ஸம்பந்தக்கடவுளுக்காவது தாழ்வுண்டாகமாட்டாது. சிவபெருமானுக்கும், சுப்பிரமணியக்கடவுளுக்கும் எவ்வளவுபேதமுண்டோ அவ்வளவுபேதமே முருகக்கடவுளுக்கும், ஸ்ரீஜ்ஞானஸம்பந்தவள்ளலுக்குமுண்டெனவறிக. சிவபெருமானைப் பரசிவமெனவும், சுப்பிரமணியப்பெருமானை அபரசிவமெனவுங் கூறலாம். இங்ஙனங்கூறுதலு மவ்விருமூர்த்தங்களினது ஸ்வரூபவேறுபாடுகளை நோக்கியேயன்றி வஸ்துபேதத்தை நோக்கியன்று. கண்டஸரமுங் கடகமும் உருவத்தால் வேறுபட்டு வேறு வேறு ஸ்தானங்களிலுபயோகமாயினும், பொன்னென்றேயாகியொன்றிலொன்றுயர்வு தாழ்வுகளை யடையாமைபோல நடராஜமூர்த்தம ஸோமாஸ்கந்தமூர்த்தமுதலியன விளங்கும். நடராஜமூர்த்தத்தில் சிவமுஞ் சக்தியும் வியக்தம். ஸோமாஸ்கந்தமூர்த்தத்தில்சிவசக்திகளும் ஸ்கந்தரும் வியக்தம். சிவமுஞ் சக்தியுமொன்ருனபடிச் சிவசக்திஸ்கந்தர்களுமொன்றேயாதல் திண்ணம். இந்த நுட்பங்களையாய்ந்தபேர் சுப்பிரமணியக்கடவுளைச் சிவந்திற்குழ்ந்த பொருளாகக்கூறார். சிவமும் சுப்பிரமணியரும் ஒன்றேயெனக்கூறுவர். இப்படியேயன்றோ சுப்பிரமணியரையும், ஸம்பந்தரையுமொன்றென விசாரித்துத் தெளிந்திடுவர் மேலோர்? இந்த வியவஸ்தையால் பரசுப்பிரமணியர் - அபரசுப்பிரமணியரென்று உயர்வுதாழ்வுகளாகிய விபரீதார்த்தங்களைக் கற்பித்துப் புலம்புத லஸப்யமெனவறிக. இவ்வுண்மையறியாமல் பரசுப்பிரமணியருயர்ந்தவர், அபரசுப்பிரமணியர் தாழ்ந்தவர் என்னும் பேதஞானப்பிரலபிதர்களாயும், பரசுப்பிரமணியர் ஒருவர், அபரசுப்பிரமணியர் பலர் என்னும அஞ்ஞானபோதகாசிரியர்களாயும், பரசுப்பிரமணியர் கடவுள், அபரசுப்பிரமணியர்கள் சீவர்கள் என்னும் விபரீதஞானவலம்பகர்களாயும், சுப்பிரமணியர் ஞானஸ்வரூபர், அபரசுப்பிரமணியர்கள் அஞ்ஞானஸ்வரூபர்கள் என்னும் அவிவேகபோத பிரவர்த்தகர்களாயும், பரசுப்பிரமணியர் தெய்வமாயுள்ளவர், அபரசுப்பிரமணியர்கள் அவரது சாரூப்யத்தையடைந்திருப்பவர்கள் என்னும் அபஸித்தாந்த பிரஸங்கிகளாயும், பரசுப்பிரமணியராகிய முருகக்கடவுள் ஸம்பந்தராகப் பிறந்திலர், அபரசுப்பிரமணியர்களாகிய சீவகோடிகளிலொருவரே ஸம்பந்தராகப் பிறந்தார் என்னுஞ் சண்டாளஞானஸம்பந்தர்களாயுஞ் சைவப்பதடிகள் சிலர் திரிகின்றார்கள். அன்னோர் இவ்வாபாஸங்களை வாய்ப்

பிதற்றுதற் குளறுவதன்றிப்பிரமாணம், நியாயமிவைகளாற் சாதிப்பதின்று. அங்ஙனஞ் சாதியாதவரையில் அவர்களுடைய வாதம் கனம்பெற மாட்டாது. ஆகையால், அவரது கலிகல்மஷாந்தகார போதம் எமது காற்கடையினின்றொதுங்கியதென்க.

ஏழைநா வலர்கள் பேசுவர் ஞான மிரண்டென நான்கவை யென்றே
யிசைத்தனர் சேக்கி ழாரதற் கியம்ப வெண்ணில வாம்பிர மாணம்
மூநா வலர்க ளறிவரோ வறியாரெழில் கொளுஞ் சித்தியார் தீப
மென்னுமெய்ந் நூலு முரைக்குமே ஞான மீரிரண் டேயென விதற்கப்
பேழைநா வலர்கள் பேசுவ தென்கொல் பிதற்றுவார் பொருள்கெட வதனால்
பிசசரா மவர்தம் பேச்சுகளங் கொண்டு பேதுறு வேமலே மெந்தாய்
கோழைநா வலர்கள் காணரு ஞானக் குன்றமே மன்றில்வாழ் வுடையான்
குருவென வந்த ஞானஸம் பந்தக் கோமள மேயருட் குணமே. (௨)

சிவஞான சித்தியாரில் "கேட்டலுடன் சிந்தித்த றெளிதனிட்டை கிளத்தலென வீரிரண்டாங் கிளக்கின் ஞானம்" எனவும் சிவஞானதீபத்தில் "தெரிவரியஞானமுநாலாகுப கேட்டல், சிந்தித்தறெளிதலுயர்நிட்டையென்றே" எனவும் போந்தவாறறிக. சேக்கிழார் திருவாக்கில ஞானப்பிரஸங்கம நான்குமுறை வந்தமையும், அதற்கு ஆன்றோர் திருவாக்குகள் பிரமாணங்களாகப் போந்தமையுமாகிய வுண்மையைச் சிதைத்து இருஞானமாக்குவது ஏழைநானமேயாம். தொகையை வகையாக்குதலும், வகையை விரியாக்குதலுஞ் சால்புடைத்தன்றி விரியை வகையும், வகையைத் தொகையுமாக்குத லஸங்கதமென்க. பூர்வபட்சிகள் சித்தாந்தப்படிச் சேக்கிழார் ஞானம் விரிஞானமாகவே நான்குமுறைதொனித்தலா லதற்குப்பிரமாணங்களாக நின்ற சித்தியார் முதலியவைகளைத் தழுவி நான்கு ஞானமாகவே கூறுவதன்றி நான்காயுள்ள விரியை இரண்டாகிய வகையாகவாவது, ஒன்றாகிய தொகையாகவாவது, கூறுவது பண்டிதர் கூற்றன்று. இவ்வுண்மைக்குமாறாக இரண்டேஞானமே சேக்கிழார் கூறினரென்பது அபண்டிதர் கூற்றாயினமையறிக.

சேக்கிழார் கருத்தமைச் செப்பினர் தனக்கெசீர்புரா ணத்திலென் றிசைத்துச
சிரிகக்வே யெடுத்தா ருடம்பினை யந்தோ செப்பியே யிரண்டையு மொன்றா
யாக்குமா றெங்ங னிரண்டுமோர் விடய மறையதற் கெழுந்தில வதனா
லாகுமோ வொன்றற் கொன்றிட மாக வன்றியுஞ் சேக்கிழார் கருத்தை
நோக்கியே யுரைத்து மென்றிறை யேனு நுவன்றன ரோவெனி லில்லை
நூலறிவுடைய † தம்பிரானிந்த நட்பமோர்ந் தயர்தமக் கென்னே

† ஸ்ரீகசசியபபததயபிரானசுவாமிகள்

வீக்கியபாச வினைவயப்பட்டு மெய்யறி விழந்தநா வலர்தாம்
விடைபகர் வாரெம் வினையெலா மாற்றும் வெங்குரு மேயவிண் ணவனே.

அகத்தியன் றனக்கோத் தன்பொடு முருக னறைந்தவா கூறுமந் தணிகை
யம்பதிக்கான மெய்ப்புரா ணத்தி லதன்பினுண் டாகுமோர் சரிதை
யகத்துள தொன்றைப் பொருத்துதலெங்ங னுகுமோ வீறுமதி யிழந்தோர்க்
காவதொன் றல்லால் வேறிலை யதனு லம்மைஞா னத்திரு மூலைப்பான்
மிகுத்துற வயின்ற ஞானமா மணியே வியக்குநின் சரிதையிற் போந்து
விளங்குமோர் விடயந் தன்னையே யெடுத்து விளக்கினர் முற்புராணத்திற்
செகத்தினிற்பெரியோ ரென்றிட றகுமோ தெய்வகுஞ் சரியொடு குறப்பெண்
சேர்ந்துவாழ் தணிகைச செம்மலே யெங்கள் செல்வமே சின்மயவொளியே.

மூலமு மதற்கா மொழிபெயர்ப் பொன்று முரணுத லின்றியே விளங்கல்
முக்கியமாகு முதல்கெட வாங்கு முரணுதன் முக்கிய மன்றுஞ்
சாலவீங் கிதனைத் தெளிந்தபேர் ஞான சம்பந்தர் காதையைக் கொடுபோய்ச்
சாற்றிடும்ப முனிக்கிசைத் திடுத றக்கதென் றேற்றிலர் தணிகை
மூலநூ லதனிற் பிள்ளையார் ஞான மொழிந்துள தோவிலை யதனுன்
மொழிபெயர்ப் பதனிற் கூறுத லெவனே மூடர்கூற் றீதென மொழிந்தாய்
ஞாலமீ தினில்வந் தெமக்கருள் பூத்த நாயக மேதிருத் தணிகை
நற்பதி மேவும் வள்ளலே காழி ஞானனே மோனதே சிகனே. (ரு)

திருப்புகழ் தன்னிற் கந்தவேள் காழிச் செம்மலு மொன்றெனத் துதிக்குந்
திறமுண ராது முடைகொள்வாய் திறந்து செப்பியே பற்பல நிந்தை
தருக்கியே திரியு மூடருக் கொன்று சாற்றுது மெந்தையாஞ் சிவனைத்
தற்பர மாக நிறுவும்வே தத்தைத் தலைதடு மாறவே புரட்டி
யருத்தபே தத்தா விழிவுரை யாடி யௌபசா ரிகமுதலாக
வறைந்திடுந் † தீயர் தம்மிலென் புதுமை யானதோ சிவசிவ சிவவென்
றுத்தெலா நடுங்கும் பாவிக ளவரைக் காணவு மஞ்சுமென் கண்கள்
கவுணியர் காளை யெனவுவந் தன்பர் கண்டுவாழ்த் திடுமணி விளக்கே. (சு)

† பாஞ்சராத்திரிகள்

சேக்கிழார் வாக்கின் முன்சிற வாது திருப்புக ழாதிநூ லென்று
செப்புவ ரிரண்டு முரண்பெறி னன்றிச் சிறந்திடா தவ்வுரை யந்தோ
சேக்கிழார் மிக்கார் திருப்புகழ் செய்தார் சிறியவ ரென்னலுந் தீதாம்
சிவசிவ சிவயா மென்செய்வோ மந்தோ சிவனருள் படைத்தினி தோங்கும்
வாக்குடை யருண கிரிமொழி யிழிந்து மாறுமே லருண்மொழித்தேவர்
வாக்குமேனிழிந்து மாறிடா திரண்டு வாக்குமொன்றேயென மொழிந்தாய்
ஈக்கமி லிரண்டு நூல்களுந் தம்மினிலைகெடா வுண்மையைக் காட்டி
நிறுவிய காழிப் பதிவரு ஞான நீதியே சோதிவா னவனே. (எ)

செத்துழல் பிணங்க டம்மையே பரமாச் செப்பிவாழ்ந் தின்புறுந் தீயர்
செத்திலா நின்னை வாழ்த்தியின் புறுதல் சேர்ந்தில ரென்செய்வார் பாவம்
பெத்தமேதங்கள் வாழ்வெனக்கொண்டார் பேயர்தாம்பிணங்கலா லென்னே
பெற்றன ரந்தோ கிரியமே யன்றிப் பேறிதன் மேலினி யுண்டோ
சதமெனு வேதஞ் சாற்றியே துதிக்குந் தாணுவே * மான்முத லாகுஞ்
சரவச ரங்கள் சிவம்பெற வளிக்குஞ் சைவனே தெய்வமா மணியே
பிதற்றமோ வெறியோ தலைதடு மாறிப் பேசுகின் றுரவர் தம்பாற்
பேசவென் றுலுங் கூசுமென் னுளமென் பேறெனவந்தவாழ்முதலே. (அ)

* "தாவில் சராசரங்களெல்லாஞ், சிவம்பெருக்கும் பிள்ளையார்" என்று ஸ்ரீ சேக்கிழார் கூறினமையானும், சேதனருள் விசிட்டபுருடராகிய விஷ்ணுவுக்குப பிள்ளையார் சிவம் பெருகச்செய்தமையானும் பூர்வபட்சிகளது வாதம் அவலமென்க. இதனையறியாது "தாவில் சராசரங்களெல்லாஞ், சிவம்பெருக்கும் பிள்ளையார்" என்னு மரிய வுயர் நலத்தை ஏனோ நமதுதோழர்கள் கீழ்ப்படுத்தி இழிவுகூறித் திரிகின்றார்களா ?

செய்வள மிகுசீர் மயிலையம் பதியிற் சிறந்திடு மங்கையாவெலும்பைச்
செய்தனை வணிக னுயிரொடு மணமுஞ் செறிந்திட வருளினை வேறு
செய்வகை தவிர்ந்து பிணமெனக் கிடந்த சேயிழை முயலகன் றவிர்த்தாய்
தெய்வநல் லருளாற் பாண்டியன் சுரத்தைத் தீர்த்தனை கூனொடு சுத்த
சைவமோங் கிடவெங் கனலிடையோடு சலத்திடை யேடுக ணின்று
சத்தென விளங்க வைத்தனை புத்தர் சமணர்கள் வலிதப வுலக
முய்வதே நாடி யுவந்தருள் புரிந்தா யொப்பிலா வனமுலை யம்மை
யொண்கரத தேந்தி முலைகொடுத் திருகண் ணெற்றியே பருகுமா ரமுதே

சைவநூல் வரம்பு கடந்துரை யாடுஞ் சண்டிகள் கூட்டற வகன்று
சசிதா நந்தப் பிழம்பெனத் துலங்குஞ் சதுரனிற் பணியும்வாழ்வொன்றே
செய்வகை யறியாச் சிறியனேற் கருளாய் செல்வமே கவுணியர் தனமே
சிவனருள் குமர சற்குரு வேயென் சிந்தையி லூறுசெந் தேனே
உய்வகை யுலகி லுண்டுகொ லுன்னை யுளத்தவி சிருத்திலாப் பதகர்க்
கொப்பிலா ஞான சம்பந்த நிதியே வோவிய மேயெமை யாளுந்
தெய்வமே யம்மைத் திருமுலை யமுதத் தேறலுண் டொளிர்குண மலையே
தேசிக ராய மோனநன் னிலையே சிற்பர வ்யோமமாஞ் சிவமே. (கo)

இலக்கண மறியா ரிலக்கியத் தேர்ச்சி யெய்திலா ரெட்டுணை யேனு
மெண்ணுவர் தாமே முற்றுணர்ந் தவரா யேழைநா வலர்கடா மென்னே
அலக்கணுற் றிடர்பட் டழிவதல் லான்மற் றுவதுண் டோவினி யந்தோ
அரகர சிவவென் செய்குவோம் பாவத்தழுந்தியே யெழும்புத லின்றிக்

கலக்கமுற் றழியுங் கன்மனே வந்து கலத்தலாற் சிவமணி யேநின்
கான்மலர் வழுத்தும் பேறிழந் தனரக் கயவர்வாய் மதமடக் குதலே
விலக்கறும் விரத மாகவே கொண்டு விளங்குகின் றேனெனை யுடையாய்
வேதமும் விந்துநாதமுங் கடந்து மெய்யொளி பரப்பும்வே தியனே.

திருச்சிற்றம்பலம்.

## இரண்டாவது பதிகம்.

சிவனடியே யெனும்பனுவற் பொருள்சிதைய விருஞானஞ் செப்பி யெங்க
டவமுதல்வர் சம்பந்தர் தமைச்சமு சித்தரெனச் சாற்றி நீடு
பவம்பெருக்கி ஞாயமொரு சிறிதுமுண ரார்சிந்தை படிப்பார் தீமை
யுவந்தெரிவாய் நிரயமுமி ழாதவரை யென்ஞான்று முண்மைதானே. (க)

காழிநகர் வந்தருளுங் கண்மணியைப் பசுவாகக் கழறு வாரைப்
பாழியுடைச் சமண்குண்டப் பதிதரெனக் கூறுதலே பான்மை யாமால்
ஆழிபுடை சூழுலகி லவர்தாங்கும் பொய்வேட மந்தோ வந்தோ
ஊழிதொறு மொழியாத கொடுந்துயராய் விளையுமெனி னுறுதியுண்டோ. (உ)

எம்பெருமான் சம்பந்த னிலகுசரா சரப்பகுதிக் கெல்லாந் தானே
செம்பொருளா தலுமுணரார் சிவன்மகனா தலுமுணரார் சிவனு ஞான
மும்பர்வழுத் தொருநான்கா தலுமுணரா ருரைத்திடவுங் கேளார் நாளுந்
தம்பெருமை யேபேசித் தருக்குறுவா ரவர்பாவஞ் சாற்றொ ணாதே. (ங)

அவஞானந் தெறக்காழி வருமமல வாழ்வினையெம் மரசை யன்று
சிவஞானங் குழைத்தம்மை தாஞானப் பாலுண்ட தெய்வ வாழ்வைத்
தவஞானப் படிவத்தெந் தனிமுதலைத் துறைசைவளர் தம்பி ரானுஞ்
சிவஞான முனியோடு சேர்த்துரைப்பா ரவர்பாவஞ் செப்பொ ணாதே. (ச)

பவம்பெருக்கும் படிற்றமணப்பாவிகள்போ லிஞ்ஞான்றும்படிற்றுளங்கொண்
டவம்பெருக்குந்தொழில்காட்டி யன்புடனே பொறைகாட்டா தழுதுசில்லோர்
சிவம்பெருக்கும் பிள்ளையினை யோனிவாய்ப் பட்டயர்ந்து செனித்தா ரென்று
சவம்பெருக்கு முகத்தினராய் நிந்தைபகர்ந் தழிவரவர் தன்மை யென்னே (ரு)

பாலனுந் தொண்டியற்றிப் பண்டுமின்று முன்னையெனப் பணித்த வாக்கின்
சீலமுண ராதந்தோ மாறுகொளக் கூறியொரு சிறிதும் வாய்மை
யேலவுண ராதிறுமாந் திழிவேயின் பெனமாந்தி யிருக்கு மூடர்
பாலனுகா திருந்திடலே பண்ணியநற் புண்ணியத்தின் பயனா மன்றே. (சு)

வடியேறு மயிற்கரத்து மாமணியைக் கவுணியர்தம் வாழ்வை யெம்முட்
குடியேறு பெருந்தவத்தைக் கோமளத்தைச் சிரபுரத்துக் கொழுந்தை யன்று
மிடியேறு கொடுஞ்சாரிப் புத்தனிகல் கூறவவன் வெந்து வீழ
இடியேறு வீழ்ந்தபடி யென்றுவிழு மோவிடிதா னேதி லார்க்கே. (எ)

மழுவேறு கரத்தமல னிடத்துமைப்பான் மணங்கமழும் வாயி னின்றுந்
தொழுவீறு மழநமொழிக் கெனைத்துணையும் வாதினிடத் தோற்ற பேயர்
கழுவேறி னாரிந்தக் காதையுல கறியுமருட் காழி நாதன்
குழுவேறும் வகைகாணார் கழுவேற லன்றியெது கூடுவாரே. (அ)

மண்முகத்தி லெழிற்சிற்றம் பலநாடி யருணகிரி வள்ள லாதி
பண்முகத்த மொழிப்புலவர் சம்பந்தப் பெருமானைப் பாடி யெங்கள்
சண்முகநதுப் பெருந்தகையே யென்றுதுதி கூறியருள் சார்ந்தா ரின்று
கண்முகத்தில் லாக்குருடர் போன்றுசிலர் வாதாடிக் கலங்கி னாரே. (கூ)

உதுவைநான் பேரிட்டு வரிந்துயிர்க டமைமுத்தி வளநா டெய்தக்
கதுமென்ச்சிற் சோதியினிற் கலந்தொன்று மிடசசெய்த கருணை வாழ்வைப்
பதியெனக்கொண் டின்புறுதல் பாங்காமப் பாங்கொருவிப் பாவ நீடு
மதியுடையா ரிவருமொரு சிவனடியா ரென்பரிது மருளா மன்றே. (கO)

திருச்சிற்றம்பலம்.

ஞானவதுபதிகம்.

சீர்பூத்த மறைவாழச் செய்யசிவா கமம்வாழச் சிறந்து நாளு
பேர்பூத்த வேதாந்த சித்தாந்த நெறிவாழப் பெரியோர் வாழக்
கார்பூத்த பொழிலுடுத்த காழிநகர் வாழவருங் கருணை வாழ்வே
சேர்பூத்த நின்னடிப்போ தென்னுளம்பூத் திடவிரங்கா யெம்பி ரானே. (க)

எம்பிரா னின்னடிக்கீழ் பேரன்பு வாய்த்திடுமென் றெண்ணி யெண்ணி
வெம்புமெனைக் கண்பார்த்துக் கருணைபுரிந் திலையெனமுன் வேத நான்கு
மும்பர்முனி வோரெவரும் வாழ்த்தியடி பணிந்தேத்து மொளிர்மெய் யென்னை
நம்பியபின் கைவிடுதன் ஞாயமோ காழிவளர் ஞானமூர்த்தி. (உ)

மூர்த்திகளி னுலாவ தாகவுனை வேதங்கண் முழங்க லாலே
கீர்த்திபெறு முனையன்றி வாழ்த்தலெவ ருயேனென் கிறிகள் யாவும்
பேர்த்தெறியுஞ் சம்பந்தப் பெருமானே மெய்ஞ்ஞானப் பெரியர் சூழ்ந்து
நாத்துதிகள் கூறிமகிழ்ந் தேத்திவழி படுமெங்கள் ஞான வாழ்வே. (ங)

ஞானநிலை யாவர்க்கு மரிதரிதென் றருமறைக ணவிலு முண்மை
தானறியார் மெய்ஞ்ஞானந் தாமெய்தி னாரெனப்பான்றே சாற்றி நாளு
மூனமே புரிந்தழியா ருன்னருமை யெங்கேகண் டேப்பா ருள்ளே
தேனெனச்சேர்ந் தினிக்குமருட் காழியென் னாடலவுந் தேவ தேவே. (ச)

உலகமெலாந் தொழமன்று ளொப்பினடங் குயிற்றுமுமை கேள்வ னுண்மை
யிலகவெமக் கருண்மாரி பொழிமுகிலே யின்பநிலை யேழை யேனுக்
கலகில்பெருங் கருணையினு ளளித்தாய்நின் னருட்பெருமை யாரே கண்டு
சொலத்தெரியார் வணிகனுயிர் மருகலிலன் றழைத்தருளுஞ் சுருதி வாழ்வே.

வாழ்வுதரு முனைவாழ்த்தி வழிபடாக் கொடியவினை வழங்க லாலே
யாழ்பிறவிக் கடலழுந்தி யழுகின்றே னிம்மாய மகற்றா யென்னை
யூழ்வலியே லென்செய்வே னுடையாயுன் பொன்னருளை யுதவு கண்டாய்
தாழ்வகலப் பாண்டியனைச் சுரத்தினின்மீட் டாண்டருளுஞ் சாந்தத்தேவே.

தேவேசெங் கனகவரைச் சிலையான்பா லூட்டவுளந் திகழுநின்பான்
மாவேத வாய்மைதவழ் சிவஞான மணமொன்றே மணக்குங் கண்டாய்
பூவேறி மால்காணாப் புண்ணியனார்க் குபதேசம் புகலு மெங்கள்
கோவேசெந் நின்றாயுன் குணப்பெருமை யெவரறிந்து கூறுவாரே. (௭)

கூறுவர்பல் லாறெங்கள் கோமளமே வினைதிரளாங் குழியில் வீழ்ந்தே
யேறவறி யாதந்தோ கண்டெறியார் பலர்தாமங் கிடருழந்தே
நாறுமுடன் மெய்யென்று நம்பியுழல் பேயேனை நாடி நின்பா
லேறவுய ரன்பருளிச செய்தருளாய் காழிவள ரெந்தா யெந்தாய். (௮)

எந்தையே திருஞான சம்பந்த நிதியேயென் றேத்து மன்பர்
தந்தையே காழிமுதற் றலத்துறையுஞ் சிவனார்க்குத் தக்க வாறே
சந்தமார் பதிகங்கள் சமைத்துலக முய்தரவே சாரச செய்தாய்
சிந்தவே மலம்போக்கிச செம்பொருளோற் கருளாயெஞ் செல்வத் தேவே (௯)

செல்வமுனை யன்றியுள தாகவுளத் தொருபோதுஞ் சிந்தியே னென்
கல்விதரும் பயனாகக் கண்டமணிக் குன்றேயென் கண்ணே பாழ்த்த
தொல்வினைமாய் தரநாளுந் தொழுகின்றேன் பாண்டியனைத் துரிசு மாற்றி
யல்லல்கெட வாண்டாயுன் னருளிருந்த பரிசென்னே யன்பர்கோவே. (௧௦)

அன்பர்மனங் களிதூங்க வமர்ந்தருளு மணிக்குன்றே யரசே யென்னைத்
துன்பமெனும் பவக்கடலின் றெடுத்தாள விசைந்திலையோ சுருதி நான்கு
மின்பநிலை யேகருணை வாழ்வேயென் றினிதேத்து மேந்தலேநின்
பொன்புரையுந் திருமேனி யெழில்காட்டாய் புகலிவளர் பொருவில்சீரே. ( )

திருச்சிற்றம்பலம்.

## ஆளுடைய அரசுகள் வாழ்த்து.

### நான்காவது பதிகம்.

திருத்தகுமெய்ஞ்ஞானியர்தஞ் சிந்தைதுளிர்த் தொழுகுநறுந் தேனேயன்பர்
கருத்தெனுநற் கற்பகப்பூங் காவனத்திற் பூத்தவருட் கனியே செய்ய
வருத்தமட வார்புவியி லாசையகன் றவாருந்து மமுதே யென்றன்
வருத்தமொழி தரவருளா யதிகைநகர் மேவியருள் வாய்ந்த தேவே. (௧)

தேவேயென் திருநாவுக் கரசேயெஞ் செல்வமே திகழு ஞானக்
கோவேமெய்ச் சிவசமயத் தவர்தேடி வைத்தகுண மலையே செம்மைப்

பூவேறு மம்மைபொரு வுந்திலத வதியார்பின் போந்த வாய்மைக்
**காவேயென் கண்ணொளியே கருணைபுரிந் தாளுதியென் கருத்தினானே.** (௨)

ஆனேறுங் கொடியுடையா னிடமாடுங் கொடியுடையா னன்புநீடு
வானேயென் றனக்கருளா யமணழியக் கடன்மிதப்பில் வந்த வெஞ்சி
மானேபொப் பிகந்துயருந் திருச்சத்தி முற்றத்து மணிமிடற்றன்
றானேநல் லூர்க்குவா வெனவருளி யடிசூட்டத் தழைத்துளானே. (௩)

துள்ளுமனப் பேயொழிய நின்னடிமா மலர்ப்பத்தி தோய்ந்து மாவை
கெள்ளளித்தத தனிபிருக்கு மேகாந்த வாழ்வினர்ந மேயல் செய்யு
முளமுடையேனெம்மை யுடையாயென் கோவணமே யுடையாய் வேதத்
தெள்ளயரா மப்பூதி பாரக்கருளிச சிவம்பெருக்குந் திறத்தினென்றே. (௪)

ஒன்றாகிப் பலவாகி யுயிராகி யுயிர்க்குயிரா யுலவு கின்ற
னென்றுனை யென்றுரைத்த மாமுனியே யருள்புரியா யின்பம் வேண்டிக்
கன்றாப்பூர் கீழ்வேளூர் கலந்தவொரு தனிப்பதிகங் கனிந்து பாடிச்
சென்றனை பலபதிப மப்பனெனுந் திருநாமஞ் சிறந்த கோனே. (௫)

கோனேயெங் கோமானே திருவீழி மிழலைநகர் குறுகிப் பாடுந்
தேனேயின் பூறியுளந் தித்திக்குஞ் செயகரும்பே திகழு மாமூ
ரானேயென் றனையாளு மசேசின் றனையடைந்தே னழிவில் சீர்த்தி
யானேனைஞ் ஞீலியா னளித்தபொதி சோறுண்டிற் கன்பிலேனே. (௬)

இலதாகு மாமாயை யென்பர்சில ரதனுண்மை யெண்ணிப் பாரார்
பலகாலுந் தாம்பிரம மெனறுபொருட் டெணிபுளமே பற்றி யந்தோ
சலமேவு நிரயமுமி ழார்தமைமெய்ஞ் ஞானியர்தா மென்று சார்ந்தே
நலமேது மில்லாவென் றனையருளாய் வாகீச ஞானக்குன்றே. (௭)

குன்றனைய யாறதனிற் குலவுமொரு கபிலைவளர் கோலங் கண்டு
நின்றேநற் றேமொழியி னிலவுபதி கங்கள்பல நிகழ்த்தி யுள்ள
மொன்றேசெந் நெறிநிற்ப வொழுகுமருட் டலைமையுடை யொருவ னேநா
னென்றேநின் னடிமலர்ப்போ தணிகுவனென் முடிக்கணியா யெம்பிரானே.

எம்பெருமான் சம்பந்த மாமுனிவ னுளமகிழ வினங்கி யன்றேன்
செம்பதுமத் துணைப்பதமே முத்திநலஞ் சேர்க்குமருட்செவ்வி வாய்ப்ப
வும்பர்களுந் துதிபரவ வுயரடிமைத் திறமுலகுக் கொழுகிக் காட்டும்
அம்பொன்மணி யேயருளாய் தாண்டகவே ரிசைகணவின் றமர்ந்தபேறே. ()

பேறேபெற் றவர்க்கடியேன் பெறவருளாய் மெய்ஞ்ஞானப் பெரியர் சூழு
மாறேயந் தண்புகலூ ரடைந்தனைகொ ளுழவார மருங்கை தாங்கிக்
கூறேயு மம்மையிடத் தானிடமே கூடுமருள் குறுகு மப்போ
தீறேயா னந்தமயத் தெண்ணுமேக னெனும்பதிக மியம்பினோனே. 0)

நானெனதென் றுழன்றலையு நாயினேன் றனையாள நயந்த சீல
மோனகுரு மெய்யன்பர் முழுமுதலே முடியில்லருண் மூர்த்தியேமெய்

ஞானமணி யேசைவ மணியேசிந் தாமணியே நலிந்து நாளுந்
தீனனென வாடுற்றேன் கண்கலக்கந் தீர்த்தருளொந் திருவினானே. (௧௧)

திருச்சிற்றம்பலம்.

---

## ஆளுடைய நம்பிகள் வாழ்த்து.

### ஐந்தாவது பதிகம்.

---

பொன்னுருஞ் செஞ்சடிலப் புண்ணியனு ரருட்டுறையிற் போந்து பித்த
வென்னுமெய்ம் மொழிகூடுந் திருப்பதிக மியம்பியரு ளெந்தா யுன்னை
யெந்நாளு முவந்தேத்துந் தவம்பலிக்கப் பெற்றேனிங் கேழையே னுன்
முன்னாளிற் செய்ததவ முடிந்தபடி யன்றியிது மொழிவ துண்டோ. (௧)

உண்டோவிவ் வுலகிலொரு தெய்வமுனை யன்றியெனை யுடையா யுன்னை
கண்டோமெய் யன்புநிறைந் திடுமெனக்கு நின்புகழைக் கனிந்து கேட்ட
துண்டோத நீபகர்ந்த மறையுளந்தா னுருகுமென துரைகள் சோரும்
பண்டோநான் செய்ததவ மளப்பரிது பாவலர்கள் பரவுந் தேவே. (௨)

தேவேசங் கிலியென்னுந் தேவிமகிழ்ந் திடுமெங்கள் சிவமே யுன்னை
நாவேறு நலத்தாலிந் நாள்வேண்டிப் பாடியரு ணயந்தேன் ஞானக்
கோவேயென் குணக்கடலே கோமளமே பரவைமண கொண்டாய் செய்ய
காவேயென் கற்பகமே கருணைவழிந் தொழுகுமருட் கண்ணினானே. (௩)

நாவொன்று மகந்தையிரிந் தோடவருள் கண்டாயெந் நாளு முன்னைக்
கோனென்னுந் தலைமைவகிந் தன்புசெயு மருணெறிதான் கூடலாலே
யேனென்று வருஞ்சித்தி பலவுமீ தற்கிலக்கியமா யிசைப்பர் மேலோர்
மானென்னும் பெருமிழலைக் குறும்பர்தமை யன்பருள மன்னினானே. (௪)

மன்னுபதி மறைவல்லோர் ஞானமொரு நான்கென்ன வழுத்தக்கேட்டுந்
துன்னுமிரு ஞானமுரைத் தலமந்து வினைப்போகந் துய்ப்பர் மேலோர்
சொன்னபடி யுங்கேளா ரவர்பாவ முரைப்பரிது சுருதி நான்கும்
பன்னுபுகழ் படைத்தவிசை ஞானியெனுந் தாய்மகிழும் பரவினானே. (௫)

பரிவகல வேயர்கோன் சூலைதவிர்த் தாண்டருளும் பரமே வேதச்
சிரமிலகு முழுமுதலே நாயடியேன் பவந்தொலைக்குஞ் செல்வமேயென்
குருவெனவந் தொளிர்ஞான விளக்கேமெய் யின்பநிலைக் கோலமேநின்
பரமடியே னல்லதுவே றில்லையிது சரதமருட் பாங்கினானே. (௬)

பாங்கினிலோங் கியஞானங் கடந்தொளிரு மெய்ஞ்ஞான பானுவே நின்
பாங்கினில்வந் தடைந்தேனென் றுயர்களையா யென்றுருகிப் பாடி யாடி
யீங்குனருள் பருகியிறு மாந்திருக்கும் வாழ்வருளா யென்று மோனந்
தாங்குசிவன் றனைத்தூது விடுத்தாடல்கண்டருளுஞ் சகச வாழ்வே. (௭)

வாழ்வனைத்துந் தருஞான வள்ளலே வன்றொண்ட மணியே யென்னை
சூழ்வினைக ளகலவருள் பாலிக்குந் தனித்துணையே தூரிய மேயென்
னூழ்வலியோ மிகப்பெரிது கலங்குகின்றே னதலினு லுடையாய் நான்முப்
பாழ்கடந்த பரவெளியி னடமிடுநின் பாதமலர் பரவு வேனே (௮)

பரவைமகிழ்ந் திடவாற்றி லிட்டபசும் பொன்னதனைப் பரிந்து தேடி
யுரவுமிகு திருக்குளத்தி லெடுத்தளித்த வாய்மையளத் தோர்ந்து மோனம்
விரவுசிவ ஞானியர்தஞ் சிந்தைகவர்ந் திடுநின்னை வேணடி நாயே
னிரவுபக லகலாது வழுத்துகின்றே னுயிர்க்குயிரா மின்ப வாழ்வே. (௯)

இன்பமொடு துன்பமொரு வினர்வாழ்ந்தும் பரவெளியே யேந்த லேமெய்
யன்பர்தயப் பயனுகு மாரமுதே யருட்கடலே யரசே சேரர்
நின்பெருமை சிவன்கூறக் கேட்டன்றோ வந்தடைந்து நேய ரானார்
என்பதுவே பலகாலு மெண்ணியுள முருகுமெனக் கினிய தேவே. (௰)

இனியபொரு ணீயலதிங் கில்லையிது திண்ணமிதற் கெதிர் மாற்றந்தா
னினியுமில்லை முன்னுமில்லை யிப்போத தில்லையென மெண்ண மேலிட்
டுனைவழுத்தும் பெருவாழ்வுற் றலப்பிறவம் பெருக்கியுள முருகு கின்றேன்
புனிதனமர் கயிலையிப மூர்ந்துசெலுந் தனிவாழ்வாம் பொறபி னேனே. (௧௧)

திருச்சிற்றம்பலம்.

---

## ஆளுடைய வடிகள் வாழ்த்து.

ஆ று வ ரு ।। தி க ம்.

உலகவியல் டந்தபா முத்தருளத் தகலாத வொளிர்ப ஞான
நிலையுதவி நாயேன்றன் புன்மைதவிர்த் தருண்மோன நெறியே பாசங்
கலையவடி யாரிதயங் கலந்தினிக்குந் தேனேயென் கண்ணே முதநிக
கெலையெனுநின் பாதமல ரெண்ணுகின்றேன் வாதவூ ரெந்தா யெந்தாய். (௧)

என்றாயுந் தந்தையுநீ யென்றிறுமாந் தெருஞான்று மேழையே நான்
குன்றாத வாய்மைதருஞ் சைவமணங் கொண்டிருகை கூப்பி யெங்கு
நின்றாலுங் கிடந்தாலு நடந்தாலும் புணர்ந்தாலு நீங்கி னாலுஞ்
சென்றாலும் பலதுறையில் வாதவூர் மணியுன்னைச் சிந்திப் பேனே (௨)

சிந்தமலந் திருவுள்ளஞ் செய்தருளுந் திருவேயென் செல்வ மேமுன்
வந்துகுருந் தடியிலருள் வள்ளலுப தேசமொழி வழங்கத் தென்னன்
றந்தநிதி யாவுமரன் றனக்காக்கிப் பாமாலை சாற்று நின்பாற்
சிந்தைகுடி கொள்ளுமயல் செல்லாது பெருந்துறையிற் செழிக்குந் தேவே.

தேவேபாண் டியன்காண நரிகளெலாம் பரிசெய்து திரட்டிவந்த
கோவேபின் பரியாவும் பழையபடி நரிசெய்து கூவியோட
மாவேதம் புகழவிளை யாடலபுரிந் திடுமெய்கண் மருந்தே மன்று
ணீவேறு சிவன்வேறு காணுத வகைகண்டேன் நிகம வாழ்வே. (௪)

நிகமநிலை யாகமநன் னிலைகடந்த † வாசகமெய்ந் நிலையை நாடி
யகமகிழு மன்பர்தமக் கன்புசெயு மருநிலைநா யடியேன் பெற்றிங்
கிகபரங்க ளிகந்துநினை யேததுபெரு வாழ்வெய்து மின்ப மேலிட்
டுகங்கள்பல கடந்தாலு மழிவில்பெருந் துறையாயென் றுன்னு வேனே. (௫)

---

† திருவாசகம்.

உன்னுவதொன் றுளறுவதொன றுஞற்றுவதொன் றாயுலக ருறுதி தேடி
மன்னுபல வழிநாடி மாய்வரவ ரெய்விதநின் மகிமை காண்பார்
சொன்னமறை யாகமத்தின் றுணிவறியார் சிவனருளிற் றோயா ரென்னே
பன்னுவர்வீண் வார்த்தையொரு பெண்ணமுதம் வார்த்தைசொலப் பண்ணி
[ஞேனே. (சு)

பண்ணுமொலி யும்போலப் பழமதுவும் போலவருட் பரனீ தானு
நண்ணுசிறி யேன்றானு நிற்குரிலை யாகுமென நவிலும் வாய்மை
யெண்ணுமதல லாலுண்மை யெப்படியோ கண்டுசுக மெய்துவேனென்
கண்ணின்மணி யேவாத வூர்மணியே மனவெளியிற் கலந்த வாழ்வே. (எ)

கலங்குமெனை யருளாத கருணையிருந் தென்செயவென் கருத்தில் வைகு
நலம்பெருகு நாயகமே புதநவிரு ளுடைந்தோட நாடு மொன்றே
குலங்குணமா திகள்கடந்த குறியிறந்த பரம்பொருளே சோதிஞ் ஞானந்
துலங்குபெரு வடிவேநான் மறைமுடிவே யன்பருளந் துன்னி னோனே. (அ)

நான்கெட்ட வாபாடி யென்றருணன் போதமுள னணைவ லாமோ
வான்கெட்டு மாருதமாய் தென்றுமுயர் வாக்கியத்தின் வாய்மை கண்டேன்
தேன்கட்டுஞ் சோலைதிகழ் வாதவூர் வந்தருளுஞ் சிவமே யுன்னை
நான்கட்டும் வகையருளி னுய்ந்திடுவேன் சையாவொழும் ஞான மூர்த்தி. (கூ)

ஞானமோ ஞானத்தால் வழிபடுதலினையோக நாடி யுள்ள
மானகர ணத்தன்னால் வழிபடுதல் கிரியையோ வைய முண்டா
மூனமிலத் திரியத்தால் வழிபடுதல் சரியையென வுயிர்தான் வைகு
மீனமறு தேகத்தால வழிபடுதல் வாதவூ ரெம்பி ரானே. (௧0)

எம்பிரா னெனக்காகச் சிவபிரா னடிதாங்கி யெங்கு மேவித்
தம்பிரான் றானென்னுந் தலைமைவிளக் கினனெங்கள் தானுமே தின்
செம்பவள வாய்மலர்ந்த வாசகத்தே னுண்டன்றோ திருமா லாதி
யும்பர்களும் பெரும்பேறு பெற்றபெரு முடையவுல குடைய தேவே. (௧௧)

திருச்சிற்றம்பலம்.

---

இனையபதிகங்களை மெய்யன்போடு அநுஸந்தித்து வருவார்க்கு எவ்விதவிடரும் தொடராதென்க. ஆசாரியமணிகளைப் பதிவக்கமாகத் துணிந்து கூறும் துதிகளிவையாகையால், இவைகளுக்கு ஏற்ற மதிகமென்றறிக. சிற்றம்பலநாடிகள், அருணகிரிநாதர் சிவப்பிரகாச சுவாமிகள், சிதம்பரசுவாமிகள் முதலிய சிவாநுபூதிமான்களது செந்நெறியையே யாம் தழுவியுரைத்தேம். இந்த நன்னெறியினில்லாப் பொல்லார் எமக்குப் புலலாரென்க. சைவத்திருமுறைகள் பன்னிரண்டனுள், பதினோராந்திருமுறையிலடங்கிய சம்பந்தர்திருவந்தாதி, சம்பந்தர் சண்பைவிருத்தம், சம்பந்தர் மும்மணிக்கோவை, சம்பந்தர்திருவுலா, சம்பந்தர்கலம்பகம், சம்பந்தர்திருத்தொகை, திருநாவுக்கரசுசுவாமிகள் ஏகாதசமாலை முதலிய சமயாசாரியர்களது ஸ்தோத்திரவைபவங்களை இனிதாய்ந்தவர்க்கே யாம்கூறியவுண்மை விளங்கும்.

இவ்வருட்பாக்கள் வெகு புண்ணிய முடையார்க்கே வைப்பாயுள்ளன. இவற்றுள், மும்மணிக்கோவையில் "காழிநாடன் கவுணியர்தலைவன் - மாமழைநோக்கி மலைமகள்புதல்வன்" எனவும், "மலைமகள்புதல்வ—லையிறைவ" எனவும் நம்பியாண்டார் நம்பிகள் நவின்றருளியவாய்மைமை நாடினர்க்கே கேடில்வாழ்வுண்டாமென்க. இவ்வரியநலங்கண்டே "ஆளுடையபிள்ளையார் வெண்பாவந்தாதி" எனவோர் பிரபந்தஞ் செய்து யாமுங் களிகூர்ந்தேம். இங்ஙனமிற்க.

சைவபத்ததிகளுட் சிறந்துவிளங்குவது அகோரசிவாசாரியது பத்ததி. இந்தப்பத்ததிகாரர் சைவர்கள கற்கவேண்டிப் பலகாவியங்களும், நாடகாலங்கார சாஸ்திரங்களுஞ் செய்திருக்கின்றனர். இவைகளில், ஞானஸம்பந்தரையே தலைவனாகவைத்துப பாடியிருக்கின்றனர். இவை வடநூல்கள். வடநூலாரும், தென்னூலாரும், ஏனநூலாரும் ஞானஸம்பந்தன் பெரும்புகழையே கற்றுப பிழைத்தற்குரியாரென்பது கூர்ந்தமதியினர் கொண்டுகுணமெய்துவரென்க. "உறவம்பொருளுமொண் போகமுநல்லியுங கல்வியுற்ற-துறவுந்துறவின் பயனுமெனக்குச சுழிந்தபுனற்-புறவும்பொழிலுங பொழில்சூழ்பொதும்புந் ததும்புவண்டி-னறவும்பொழிலெழிற் காழியர்கோன்றிரு நாமங்களே" என்று ஸ்ரீநம்பியாண்டார்நம்பிகள் தமது திருவந்தாதியில் அருளிச்செய்தனர். இவ்வாறு எண்ணியெழுதுவதென்று லெம்பெருமக்கள்புகழ் ஏட்டிலடங்குமோ? திருவருளே கண்ணாகக்காணுநர்க்கே அது கைகூடுமென்க.

இதுகாறும் விளக்கிய வாய்மைநலத்தால் ஸ்ரீஜ்ஞானஸம்பந்தக் கடவுண்முதலிய பரமாசாரியர்களது பிரபாவம் இனிது விபக்தமாகியது. ஆசாரியர், பரமாசாரியர்கள் என்றபிரயோகங்க ளிவர்க்கே சொந்தமென்க, ஈசுவரன், பரமேசுவரன் என்னுந் திருநாமங்கள் போல்வனவிவை. ஈசுவர - பரமேசுவர - மஹேசுவராதிநாமங்கள் சிவனுருக்கன்றி ஏனையோருக்குச் சொந்தமாகாதவாறு ஆசாரிய-பரமாசாரியத் திருநாமங்கள் எம்பெருமக்கள் நால்வருக்கன்றி ஏனையோருக்குச் சொந்தமாகாவென்க. இவ்வாசாரிய மூர்த்தங்கள் சிவனாது தக்ஷிணாமூர்த்தம்போல்வனவாம். ஸ்ரீதக்ஷிணாமூர்த்தியாவார் விஷ்ணுவாதி தேவர்களாலும், வஸிஷ்டாதிமுனிவர்களாலும், ஏனையாவராலும் வழிபடத்தக்க முதலாசிரியராயினவாறன்றே பரமாசிரியர் நால்வர்களும் அந்த ஸ்ரீதக்ஷிணாமூர்த்தியினது அவதார விக்ரஹங்களாக இனிது விளங்கி யாவராலும் வழிபடத்தக்க தனிமுதல்களாக வெழுந்தருளி யிருக்கின்றனர்? இவருள், எங்கள் காழிப்பிரான் பெரும்புகழை யெடுத்தோதின், அவரது திருவடியர்ச்சனைக்கு உபயுக்தமாகிய அஷ்டோத்தரவிம்சதிநாமாவளியே போதுமாம் அது வருமாறு:—

ஸ்ரீ

## சிவோ ரக்ஷது.

ஓம் ஜ்ஞாநஸம்பந்தகுருப்யோநமஃ
உ. ஓம் ப்ரஹ்மபுராபிருடாயநமஃ
ங. ஓம் பார்வதீஸ்தந்யபாயிநேநமஃ
ச. ஓம் ஸௌப்ரஹ்மண்யாபரமூர்த்தயேநமஃ
ரு. ஓம் சிவபாதஹ்ருதயமுநிபுங்கவஸூநாயநமஃ
சு. ஓம் கௌண்டிந்யதிலகாயநம
எ. ஓம் அயோநிஸம்பவாயநமஃ
அ. ஓம் ஸ்வப்ரப்ரகாசாயநமஃ
கூ. ஓம் ஸ்வயமேவாதிகதஸகலவித்யாகலாபாயநமஃ
க0. ஓம் த்ரவிடவேதப்ரவக்த்ரேநமஃ
கக. ஓம் ஜ்ஞாத்விஜ்ஞாநசக்ரவர்த்திநேநமஃ
கஉ. ஓம் பாமதகலாபகேஸரிணேநமஃ
கங. ஓம் சிவதத்ததாலஹஸ்தாயநமஃ
கச. ஓம் முக்தாமயசதுராந்தயாநாதிரூடாயநமஃ
கரு. ஓம் சிந்ஹகாஹளாதிபிருதாவளியலங்க்ருதாயநமஃ
கசு. ஓம் பாண்ட்யராஜதேசிகாயநமஃ
கஎ. ஓம் பாண்ட்யஜ்வராபஹர்த்ரேநமஃ
கஅ. ஓம் க்ஷபணசாக்யாந்தகாரதபநாயநமஃ
ககூ. ஓம் ராஜகந்யகாரோகநிவர்த்தகாயநமஃ
உ0. ஓம் வைச்யகுமாரகரளநிர்ஹரணாயநமஃ
உக. ஓம் நிஷ்பலதாலபலதத்வகாரிணேநமஃ
உஉ. ஓம் வாக்ஸந்தாரிததரணயேநமஃ
உங. ஓம் வேதவநக்ஷேத்ரகவாடச்சாதககாரிணேநமஃ
உச. ஓம் அஸ்திஸாதிதகந்யகாயநமஃ
உரு. ஓம் விஷ்ணோச்சிவஸாரூப்யதாயிநேநமஃ
உசு. ஓம் சிவகுமாராயநமஃ
உஎ. ஓம் ஸத்யோநிர்வாணதீக்ஷாகர்த்ருணேநமஃ
உஅ. ஓம் ஸர்வமோக்ஷப்ரதகல்யாணஸுந்தராயநமஃ

திருச்சிற்றம்பலம்.

இப்படியே ஏனையாசாரியர்களுக்கும் அஷ்டோத்தரவிம்சதி
நாமாவளிகளுள. அவை எமக்குக் கிடையாமையால் அவற்றையும்
ஈண்டு வெளிப்படுத்தநேர்கிலாத் துயரத்திலாழ்ந்துவருந்துகின்றோம்.
திருவருள்கூட்டிமுடிக்குமாறு சிந்திக்கும் பெருந்தவமுனுற்று மெ
ம்பக்கலிரங்கி அவை கிடைக்க, ஸாதுக்களவற்றைத்தந்து ஈயக
ங்க்கக் கேட்டுக்கொள்ளுகின்றோம். இவ்வமலதேசிகப்பெருமானே
நித்திய நைமித்திய காமியபூசைகளால் வழிபடத்தக்க உபாஸ்யர்
என்று சிகாழிமான்மியத்தில் விசதப்படுத்தியிருக்கின்றது. அது வ
ருமாறு.

"செம்மைக்கருணைக் கடலனையான் றிருமுன்னின்றோர் தமைநோக்கி
யெம்மைத்தலங்க டொறும்பதிகத் தேத்துஞானக் கவுணியனை
யம்மைப்பொலஞ்செய் விம்பத்தி லாவாகநஞ்செய் தெந்நாளு
மும்மைப்பயன்பெற் றுலகுய்ய முதபூசனை நித் தியமியற்றி."

"கெழ்சித்திரைபங் குனிமாத சிறையா திரையும் வைகாசிப்
பகர்மூலத்து மாவணியைப் பசிமாதஞ்சேர் சதயத்து
மகரமதியிற் கதிரமதிய மருவுநாளு மிதுனமதி
திகழவருமோர கணியுமென்றேழ தினத்துநைமித் தியமியற்றி.'

"புரையில்கேள்வி யிமையோர்காள் புகல்பங்குனியிற் சதயத்தி
னிறைசெய்மணிப்பூங் கொடியேற்றி நெடியோன்றேர்நா டோர்நடத்தித்
திறைசெய்தீர்த்த மாதிரைநா டினைத்தாடுதிரென் றருள்செய்ய
வறைவிலமர ராண்டுதொறு மகிழ்ந்திவ்வாறு வணங்கினரால்."

என்னும் இந்த வாக்கியங்களால் நித்யோத்ஸவம், பக்ஷோத்ஸவம்,
மாஸோத்ஸவம், வருஷோத்ஸவமுதலிய யாவுஞ்செய்தும், செய்வி
த்தும் வழிபடத்தக்க தனிமுதல்எமதுபிள்ளையாரென்பது தெற்றெ
ன விளங்கியது. இந்த விபவங்களை நடத்தியுய்ந்தவர்கள் அன்னவூர்
தி,புள்ளூர்தி,யானையூர்தி முதலாயினோரெனவும் அதிற்கேட்கப்படுகி
ன்றது. இப்பெருந்தேவர்கள் வணங்கும் பெரியபெருமான் எமது
ழிப்பெருமான் என்பதை யாம் பிரஸ்தாபிப்பது அதிசயமோ? இத
னுண்மையை மெய்ப்படுத்தவேயன்றோ திருப்பெருந்துறை என்னு
ஞ் சைவக்ஷேத்திரத்தில் ஸ்ரீமணிவாசகப்பெருமானை ஆனிமார்கழிக
ளில் மஹோத்ஸவங்கள் கொண்டருளித் தரிசனந்தந்து மெய்யடி
யார்களுக்கு இகபரஸாம்பிராஜ்யங்களைப் பிரஸாதிக்கின்றனர்? இவ
ருக்கே விருஷபோத்ஸவம், இரதோத்ஸவமுதலியன நடந்துவருமதி

சயம் பிரத்யக்ஷமானசு ஆசாரியர்நால்வர்களு மொரே
னராதலும், இந்நால்வரும் [illegible]ரது அபராவதாரங்களாக
வர்களே யாவரும் வழிபட்டேத்தும் பெருந்தகையாராதலு.
பேறுயின. இவாமாட்டன்பிழையாதார் "வெவ்வாய்கிரயத்திலை
ர்'' எனவும், அன்புபுரிவார் "கோதின்ஞானப்பிள்ளைதனைக் கு
ண்ணிந்தோர் மறலிநகர், போதலறியார்'' எனவும்போந்த பிரமாண
கிலக்காகிய பயனெய்துவரென்க. விரிக்கிற்பெருகும். வேதட
கமம் - புராணம் - இதிகாசம் - ஆன்றோர்வாக்கியங்கள் - காட
மாநங்கள் ஆகிய மூன்றிதபிரமாணங்களாலும் இவ்வமலதேசிக
ளனையாசாரியநிதிகளையும்பிரகாசிப்பித்த ஆசாரியபிரபாவம் எ
இந்த ஸத்கிரந்தம் ஸாதுக்களுடைய க்ஷேமார்த்தம
னிடுவாழ்க சுபம! சுபம்!! சுபம்!!!

வாழ்த்து.

---

ஏகமென மறைபேசுஞ் சிவன்வாழி யெந்தையவற் கிசைந்தாள்
மோகமறு மவர்களிக்க முன்னின்று விளையாடு முருகன் வாழி
மாகர்தொழும் வேற்கரதது வள்ளலவ தாரமென வந்து சைவ
யோகநெறி பரப்புமவன் வாழியிணை யறுமேனை யோரும் வாழி.

பொன்னவிருஞ் சடைமௌலிப் புண்ணியனைந் தெழுத்துண்மை
மெய்ந்நெறியாஞ் சைவநெறி வாழவரு மெய்ஞ்ஞான வேந்தாயன்
தந்நிலைமை யுலகறியத் தம்பிரான் முதலெடுத்துத் தரவேற் றுண்ண
துன்னுமவர் புராணநவின் றிடுமுனியாஞ் சேக்கிழார் துணைத்தாள்

## ஆசார்யப்பிரபாவம்.

முற்றுப்பெற்றது

ஸ்ரீ ஜ்ஞாநஸமபந்தஸத் குருபாதாரவிந்தார்ப்பணமஸ்து

திருச்சிற்றம்பலம்.